
அமுதசுரபி

விலை
ரூ. 50
(இரு மலர்களும்
சேர்த்து)

தீபாவளி மலர் '96




அமுதசுரபி

தீபாவளி மலர் '96

மலர் 2

இரு மலர்களும் சேர்ந்து விலை ரூ. 50



அமுதசுரபி 49ஆவது தீபாவளி மலர்

மேலட்டை வண்ண ஓவியம்: கோபுலு

ஆசிரியர்: கலைமாமணி விக்கிரமன்


பதிப்பாளர்: ஏ.வி.எஸ். ராஜா

கௌரவ ஆலோசகர்: என்.வி. சுப்பிரமணியன்


மலர் ஆப்செட் அமைப்பு: சிவகுமார்

மலரை அலங்கரித்த ஓவியர்கள்: அமரர் சில்பி, அமரர் உமாபதி, கோபுலு, ஸுபா, வினு, ஜி.கே. மூர்த்தி, ஜெயராஜ், மாயா, ராமு, மணியம் செல்வன், செல்லம், அரஸ், கலைமதி, ஸி.ஏ. இராமச்சந்திரன், கரோ, ஸ்யாம், ரமா, சிவா, வேதா, சசி, ஸ்கார்பியோ, பிரபுராம், பி.எம். ரோஸ், ஜீவி, கே. பாண்டியன், முத்துக்குமார், தாமரை

மலரில் வெளிவந்துள்ள கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் கற்பனையே யாரையும் சுட்டுவன அல்ல!







மதுரைக் கூடலழகர்

ஓவியர்: அமரர் சிற்பி



'தினமலர்' டி.வி.ஆர்

சான்றோர்களையும் சாதனையாளர்களையும் நினைவு கூர்தல் தமிழ்ப் பண்பு. அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள், தமிழ்ச் சமூகத்தின் பூர்வீக ஆஸ்தி. அவர்களின் லட்சியப்பிடிப்பும் கடுமையான உழைப்பும் இன்றைய இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கு.

படித்தவர், பாமரர் என்ற பாகுபாடின்றி, பட்டணம், பட்டிக்காடு என்ற இடமாறுபாடின்றி, காலை நேரத்தில் மக்களுடன் நேசபாவத்துடன் உறவாட, 'தினமலர்' நாளேடு அன்றாடம் வெளிவந்து கொண்டிருக்கிறது. தேசப் பற்றும் தேசிய உணர்வும் உள்ள லட்சோப லட்சம் தமிழ் நெஞ்சங்களின் இதயங்களில் இடம் பெற்றுவிட்ட இந்த நாளேட்டை 6.9.1951 அன்று உயர்திரு. டி.வி ராமசுப்பையர் அவர்கள் திருவனந்தபுரத்தில் தொடங்கினார்.

1950 வாக்கில் தமிழகப் பத்திரிகைகளின் போக்கு, இந்திய ஒருமைப்பாட்டிற்கும் இறையாண்மைக்கும் எதிராக இருந்தது என்பது ஒரு கசப்பான உண்மை. தமிழ் வாசகர்களின் அரசியல் அறிவை உயர்த்தி, உண்மையான செய்திகளை நடுநிலையுடன் வெளியிடும் தார்மீக உணர்வின்றி தமிழில் செய்தி நாளேடுகள் வலம் வந்து கொண்டிருந்த காலம், அது.

இத்தகைய சூழ்நிலையில் தமிழகத்தின் தென் கோடியிலிருந்து தேசிய சிந்தனையை மூலதனமாகக் கொண்டு, 'தினமலர்' நாளேட்டை உயர்திரு. டி.வி.ஆர் அவர்கள் தொடங்கினார்.

மக்களுக்குத் தேவையான செய்திகளையும், அவசியமான செய்திகளையும் எளிய தமிழில், பழகு தமிழில் வெளியிட வேண்டும் என்பது அவரது நோக்கம். இதன் மூலம் வாசகர்களுடன்

ஜனகன்

நேசபாவத்துடன் கூடிய ஒரு நெருக்கமான உறவிற்கு அவர் வித்திட்டார்.

குமரி மாவட்ட மக்களின் பிரச்னைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து 'தினமலர்' செய்திகளை வெளியிட்டது. குமரி மாவட்டத்திற்குக் கிடைக்கவேண்டிய பெருமையும் சிறப்பும் உரிய முறையில் கிடைக்காத நிலையில் கவனிப்பாரின்றி இருந்த நிலை, தினமலரின் வருகையால் மாறியது.

திருவனந்தபுரத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'தினமலர்' 16.4.1957 அன்று திருநெல்வேலிக்கு மாறியது. குமரி மாவட்ட மக்களால் எழுச்சியுடன் வரவேற்கப்பட்டு, பாராட்டப் பெற்ற 'தினமலர்', நெல்லைக்குள் நுழைந்தபோது, தேசிய உணர்வுமிகுந்த தமிழக மக்களால் கொட்டுமேளத்துடன் வரவேற்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து திருச்சி, சென்னை, மதுரை என நிதானமாக, தனது விரிவாக்கப் பணியைச் செயல்படுத்தினார், திருமிகு. டி.வி.ஆர்.

தமிழ்ப் பத்திரிகை உலகில் நவீன ஆப்செட் முறையில் வெளிவந்த முதல் நாளிதழ் தினமலர் தான். தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை, அரசு செய்வதற்கு முன்பே நடைமுறைப்படுத்தியது 'தினமலர்' தான். புகைப்பட அச்சுக்கோக்கும் முறையை 1984 ஆம் ஆண்டிலேயே அறிமுகம் செய்ததும் 'தினமலர்' தான். எழுத்து சீர்திருத்தத்தில் மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் கொண்டிருந்த பத்திரிகையாளர் டி.வி.ஆர் அவர்கள்.

புத்தக இணைப்புகளை இலவசமாக வெளியிட்ட வகையில் தினமலர் நாளிதழை ஒரு முன்னோடி எனக்குறிப்பிட வேண்டும். ஞாயிறுதோறும் வார மலரும், வெள்ளி தோறும் சிறுவர் மலரும் வெளியிடுகிறது, 'தினமலர்'.

'தினமலர்' நாளேட்டில் தலையங்கம் வெளியிடுவதில்லையே எனப் பல வாசகர்கள் கூற நான் கேட்டிருக்கிறேன். ஆனால், திருமிகு டி.வி.ஆர். அவர்கள் 'தினமலர்' இதழில் முதல் தலையங்கத்தை (7.9.51) வெளியிட்ட செய்தி பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

அந்தத் தலையங்கத்திலிருந்து சில பகுதிகள்:-

"ஜனசமூகம் இன்னல்கள் நீங்கி, இன்ப நிலை அடைவதற்கு எமது சக்திக்கு இயன்ற அளவு தொண்டாற்றும் ஒரே நோக்கத்துடன் 'தினமலர்' பத்திரிகையைத் தொடங்கியிருக்கிறோம்.... மக்கள் முன்னேற்றத்திற்காக உழைப்போம் என்ற சபதத்தை மனத்தில் நிறுத்தி இப்புது முயற்சியில் இறங்கியிருக்கிறோம்.

எல்லாக் கட்சியினரும் தத்தமது அபிப்பிராயங்களை கண்ணியமான முறையில் தெரிவிக்க 'தினமலர்' இதழில் எப்பொழுதும் இடம் உண்டு. ஜனசமூகத்திற்குத் தீங்கிழைப்போர் யாராக இருந்தாலும் சரி, அவர்களை வன்மையாகக் கண்டிப்பதில் 'தினமலர்' சற்றும் தயங்காது.

தமிழர் பிரச்னைகள், இந்திய உள்நாட்டுப் பிரச்னைகள், சர்வதேசப் பிரச்னைகள் முதலிய சகல துறைகளிலும் நீதியின் பீடத்தில் நின்று ஜனசமூகத்திற்குச் சேவை செய்ய முன் வந்திருக்கும். 'தினமலர்' பத்திரிகையை உள்ளன்புடன் ஆசீர்வதித்து எம்மை ஆதரிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்."

......இந்த ஒரு தலையங்கம் தினமலரின் லட்சியப் பயணத்தை நமக்குக் கோடிட்டுக் காட்டுகிறது.

'தினமலர்', 1952ஆம் ஆண்டு அக்டோபர் 6ஆம் தேதி, முதல் ஆண்டு மலரை வெளியிட்டது. அந்த 'மலர்' தலையங்கத்தில் டி.வி.ஆர். குறிப்பிட்டிருந்த வரிகள்:

" .... தினமலர் நாளிதழுக்கு எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட முடியுமோ அவ்வளவும் ஏற்பட்டுவிட்டன.... "

இத்தகைய சோதனைகளும் வேதனைகளும் அடுக்கடுக்காகத் தொடர்ந்து வந்த போதிலும், மக்களுக்கு செய்திச் சேவை புரிய வேண்டும் என்ற அவரது ஆசை குறையவில்லை. வெற்றி பெற்றே தீர வேண்டும் என்ற உறுதியிலிருந்து பிறழாமல் துன்பங்களையும் துயரங்களையும் சந்தித்தார். தன் பத்திரிகைப் பணியை நிறுத்தாமல் தொடர்ந்தார்.

காந்தியடிகள் பிறந்த அதே அக்டோபர், இரண்டாம் தேதி. வருடம் 1908. டி.வி.ஆர். அவர்கள் பிறந்த நாள். தனது நாற்பத்தி மூன்றாவது வயதில் பத்திரிகைத்துறையைத் தேர்வு செய்து 'தினமலர்' நாளிதழைத் தொடங்கினார். தினமலரைப் பேணிப் பாதுகாத்து வளர்க்கும் பணியில், தனது கடைசி மூச்சு (21.7.1984) வரை தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட, பெருந்தகை, திரு. டி.வி.ஆர். அவர்கள்.

அவர், தன் வாழ்நாள் முடிவதற்குள், 'தினமலர்' நாளேட்டை, நெல்லை, திருச்சி, சென்னை, மதுரை, ஈரோடு ஆகிய ஐந்து நகரங்களிலிருந்து வெளிவரும் நிலைக்கு வளர்த்தார். அவர் அமரரான பிறகு, அவருடைய அடுத்த தலைமுறையினர், பாண்டி, வேலூர், கோவை ஆகிய மேலும் மூன்று மையங்களிலிருந்து வெளியிட ஏற்பாடு செய்து, இன்றைய நாளில் வெற்றி நடை பயிலச் செய்திருக்கிறார்கள்.

இன்று தமிழக மக்களின் உணர்வோடும் உள்ளத்தோடும் இரண்டறக் கலந்து விட்ட தினமலர் நாளேடு, 'ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரோடி' மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என்பது தமிழ் நெஞ்சங்களின் ஆவல்.

அமரர் டி.வி.ஆர். பற்றியும் தினமலர் நாளேடு குறித்தும் எழுதுவதற்கு நிறைய இருக்கிறது.

நிறைய எழுதப்படவும் வேண்டும். ஆனால் இந்த மலரில் பக்கங்கள் போதா என்பதால், பண்பாடுமிக்க, மொழி ஆர்வம் மிக்க அந்தப் பழம்பெரும் பத்திரிகையாளரை நினைவு கூர்வோம். ●

அனுபவப் பூக்கள்

சீனி. வீரப்பன்



இயக்கம் அனைத்தும்
இறைவ னுடையது
கிடைக்கும் எதுவும்
அவனால் அடைவது!

மன்னிக்கும் குணமும்
மறக்கும் தன்மையும்
என்றைக்கும் இருந்தால்
எதிரிகள் இல்லை!

எண்ணமும் செயலும்
நன்மையைத் தரும்
எப்போதும் ஒழுங்கைத்
தப்பாது இருந்தால்!

கடல் கொள்ளா ஆசைகள்
கனவாய்ப் போனாலும்
உடல் நலம் ஒன்று போதும்
உள்ளத்திற்கு நிம்மதி!

இரும்புக் கதவையும்
திறக்கும் திறவுகோல்
கரும்பாய் இனிக்கும்
கனிவுச் சொற்களே!

இருப்பது இருந்தால்
எல்லாரும் உறவு
இல்லாது போனால்
பகலிலும் இரவு!



எனது குருநாதர்

இருபதாம் நூற்றாண்டின் அப்பரடிகளாய், தமிழ் மக்கள் இதயமெல்லாம் நிறைந்திருக்கும் நமது குருமகா சந்நிதானம், மக்கள் அனைவராலும் தவத்திரு 'குன்றக்குடி அடிகளார்' என அன்பொழுக அழைக்கப் பெற்றவர்கள். சராசரி வாழ்வில் சாதாரணமாய் உலகியல் வாழ்க்கையில் இயல்பான எண்ணங்களோடு வாழ்ந்து கொண்டிருந்த மனிதனாகிய நம்மை, எப்படி துறவு வாழ்க்கைக்கு மடைமாற்றம் செய்ய முடிந்தது? அதுதான் மகத்தான மனிதநேய மகாமேருவின் அற்புத ஆற்றல்!

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் திருக் கயிலாய பரம்பரையின் 45-ஆவது ஞானபீடத்தில் எழுந் தருளியவர்கள் - உலகம் போற்றும் உன்னத பீடத்தில் அமர்ந்தவர்கள். அதற்கு முன்புவரை குன்றக்குடியை உலகம் அறிந்ததில்லை! ஏழாம் நூற்றாண்டின் எழுஞாயிறாம் அப்பரடிகளின் அடிச்சுவட்டில் அருள் நெறித் தந்தையின் பயணம் அமைந்திருந்தது.

''மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே!''

இது திருநாவுக்கரசு சுவாமிகளின் திருப்பாட்டு. ''குற்ற மற்ற வீணையின் இனிய நாதத்தை எல்லாராலும் கேட்க இயலும் - செவிகள் மட்டும் செவிடின்றி இருத்தல் வேண்டும்! மாலைக் காலத்தில் தண்ணொளி வீசும் மதி நிலவினை எல்லாராலும் பார்க்க முடியும் - பார்வை மட்டும் பழுதின்றி இருக்க வேண்டும்! வீசும் தென்றல் காற்றை எல்லாரும் நுகரலாம்! அது ஆண்டவனுக்கும் பொதுவானது; அடிமைக்கும் பொதுவானது. இள வேனில் இன்பம் எல்லாருக்கும் பொதுவானது. அது போல இறையின்பம் எல்லாருக்கும் பொதுவானது'' என்று புதிய விளக்கம் தந்து, அந்த விளக்கமாகவே எல்லாருக்கும் பொதுவாய் வாழ்ந்து காட்டியவர்கள் அருள்நெறித் தந்தையவர்கள்.

திருமடத்தின் அருளாட்சி என்பது அரசு ஆட்சியைப் போன்றது! திருவள்ளுவர் இரண்டுவகை அரசுகளைக் காட்டுவார்.

''குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு'' என்பது ஓர் அரசு.

''கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு''

இது மக்களை அடிமைகளாய் நடத்தும் மனித நேயமில்லாத மன்னர் ஆட்சி. ''உயிரெலாம் ஓம்புவோர் உடம்பு மாயினான்'' என்ற கம்பனின் வைர வரிக்கிணங்க, ஆதீனக் குடிமக்களைத் தம் உயிராகப் பாவித்து அருளாட்சி புரிந்தவர்கள் நம் அருள்நெறித் தந்தை.

சமய உலகில் சிம்ம சொப்பனமாய் விளங்கினார்கள். திருக்கோட்டியூர்த் திருக்கோயில் திருமதில் மேல் ஏறிநின்று திருமந்திரத்தை எல்லா மக்களுக்கும் வாரி வழங்கிய புரட்சிபூத்த இராமானுஜராய் இருபதாம் நூற்றாண்டில் விளங்கினார்கள். திருமடத்தின் கதவுகள் திறக்கப்பட்டன. எல்லாருக்கும் திறந்துவிடப்பட்டன. ஏழை - பணக்காரர், இன்னார் - இனியார், உயர்ந்தோர் - தாழ்ந்தோர் என்ற பேதம் இன்றி எல்லாருக்கும் திறந்து விடப்பட்டன. சாத்திரம் பல பேசும் சழக்கர்களும், கோத்திரமும் குலமும் கொண்டு உலகைக் கூறுபோடுவோரும் மனமாற்றம் பெறும் வகையில் சமுதாய மாற்றத்திற்கு வித்திடப் பட்டது! கடைகோடி மனிதரையும் கடைத்தேற்றம் செய்யும் மறுமலர்ச்சிக்கு வித்திடப்பெற்றது.

ஒருமுறை ''அன்னம் பாலிப்பு'' என அழைக்கப் பெறும் மகேசுவர பூசை, சாதி வேறுபாட்டுக்கு இடம் அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது. அந்த உணவுப் பந்தியைப் புறக்கணித்தார்கள்; புதிய புரட்சி செய்தார்கள். விரிந்து பரந்த உலகில் அருள்நெறித் தந்தை

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

வளர்த்த உறவுப் பாலங்கள் ஏராளம். ''கோயிலைத் தழுவிய குடிகள்; குடிகளைத் தழுவிய கோயில்'' என்று புதிய தாரக மந்திரத்தைத் தமிழ் மண்ணில் வைத்தார்கள். சொத்துகளை மட்டும் ஆண்டு கொண்டிருந்த திருக் கோயில்களை, மக்கள் கூடிக் கலந்து வாழ்கின்ற மானுட சமுதாய மையங்களாக மாற்றிக் காட்டினார்கள்.

''நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்!'' என்று வீறு கொண்டெழுந்த அப்பரடிகளின் அடிச் சுவட்டில், தமிழகத் திருக்கோயில்களில் பெரும்பாலான வற்றில் திட்டமிட்டு உழவாரப் பணிசெய்தார்கள்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினராய், ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கிய திருத்தொண்டராய், சமய உலகில் விளங்கினார்கள். பண் சுமந்த தீந்தமிழ், திருக் கோயிலில் ஓத இயலாதிருந்த நிலையை மாற்றி தேனினும் இனிய தெய்வத் தீந்தமிழ், திருக்கோயில்களில் ஒலிக்கச் செய்தார்கள்; எந்த இனிய தீந்தமிழ்ப் பாக்களுக்காக இறைவன் மண் சுமந்தானோ, அவன் பொன்மேனி புண்

சுமந்ததோ அந்தத் தெய்வத் தீந்தமிழ் அருச்சனை திருக்கோயிலில் நடைபெற முடியாத காலம். எந்தத் தீந்தமிழ் கேட்க விரும்பி கழுகு உறக்கம் எடுக்கும் நள்ளிரவில் இறைவன் தூது சென்றானோ, அந்தத் தீந்தமிழ் ஒதத் தடை இருந்த காலம். அந்தத் தடைக்கு விடை கொடுத்துத் தமிழகத் திருக்கோயில்களில் தாய் மொழி அருச்சனையை - தமிழ் மொழி வழிபாட்டை நடைபெறச் செய்த பெருமை அருள்நெறித் தந்தையையே சாரும். மண்மேல் சொற்றமிழ் பாடச் சொல்லி நற்றமிழ்ச் சுந்தரருக்கு மகேசன் இட்ட ஆணையை மறந்த தமிழகத்தைத் துயில் எழுப்பிய பெருமை அடிகள் பெருமானையே சாரும்.

1982ஆம் ஆண்டு! வரலாறு ரத்தக் கறைகள் படிந்து கோர தாண்டவமாடிய கொடூர ஆண்டு! குமரி முனையில் மண்டைக்காடு மயானக் காடாய்ப் பரிதவித்தது. சொந்தச் சகோதரர்கள் மதத்தால் - மதத்தின் மதத்தால் அந்நியமாகிப் போனார்கள். குருதி கொப்பளிக்கும் கொடூரக் காட்டில் இதயம் இங்கே சிலருக்கு இரும்பாய்ப் போயிற்று. விளைவு? கபாலக் குவியலும் கணக்கில்லா உயிர்ச் சேதமும் உடைமைகள் அழிவும்! இந்த மதவெறி கோரதாண்டவமாடிய மயானக் காட்டை - மண்டைக் காட்டை அமைதிப் பூங்காவாக மாற்றிய பெருமை அருள்நெறித் தந்தைக்கே உண்டு. சமாதானம் தழுவும் அமைதிப் பூங்காவைச் சமைக்கத் தோள் கொடுத்த தோழமைக் கரங்கள் பேராயர் ஆரோக்கியசாமி அவர்களுடையவை. இந்திய வரலாறு தம் பக்கங்களில் எப்பொழுதும் இட்டு நிரப்ப வேண்டிய வரலாற்று நிகழ்வு இது! உலக அமைதிக்கு உழைத்த அந்த உத்தமருக்கு உலகம் நன்றிக் கடன் பட்டிருக்கிறது.

கடவுள், பிணியாளனுக்கு மருந்தாய், பசியாளனுக்கு உணவாய் உள்ளார் என்பார்கள். இதைத் தான் திருமந்திரம் மிகச் சிறப்பாகக் கூறும்.

"படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா;
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அதாமே!"

என்பது திருமந்திரம். ஊன் உடம்பை ஆலயமாகக் கொண்டிருந்த மானுட சமூகத்திற்குச் செய்கின்ற தொண்டே, இறைவனுக்குச் செய்கின்ற தொண்டு என்ற திருமந்திரத்தின் திருவாக்குக்கு ஏற்ப மானுட சமூகத்திற்குத் தொண்டாற்றினார்கள். திருக்கோயிலிலிருந்து உலா வரும் உற்சவர் விலை உயர்ந்த ஆபரணங்களைப் பூண்டிருக்க, உடன் அருகே ஏழைமையோடும் இயலாமையோடும் வாழும் மனிதர்களின் இழிநிலையைக் கண்டு குருதிக் கண்ணீர் வடித்து, சமூக நல மேம்பாட்டுக்குப் பல நற்பணிகளை ஆற்றினார். எல்லாரையும் உயரச் செய்யும், எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கும் பொருளாதார நிலை நோக்கிச் சமூக வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றினார்கள். குன்றக்குடியைக் குன்றாக்குடியாய் உலக அரங்கின் உயர்ந்த பீடத்தில் ஏற்றிய பெருமை அருள்நெறித் தந்தையையே சாரும்.

உலகில் பல்வேறு நிலைகளால், பல்வேறு கொள்கைகளோடு வாழும் மானிடரும் போற்றும் வகையில் வேற்றுமையில் ஒற்றுமை பேணி வாழ்ந்து காட்டியவர்கள். தவம் என்பது, வெறுமனே உண்ணாமலும் உறங்காமலும் உடல் வருந்திச் செய்வதன்று. இவை உடலாற் செய்யும் செயல்கள்; பழக்கத்தால் வருபவை. பிறர் நலத்தின் பொருட்டு வாழும் வாழ்வே தவம்; நோன்பு! அத்தகு வாழ்வே தவ வாழ்வு! என்று புதிய இலக்கணம் படைத்தார்கள். துறவு என்பது உறவுகளின் முறிவன்று! உறவுகளைப் பேணிப் பிறர் நலத்தின் பொருட்டுத் தன்னலம் துறக்கும் தியாக வாழ்வே தூய துறவு வாழ்வு என்ற புதிய இலக்கணம் பதித்தவர்கள். இருபதாம் நூற்றாண்டின் மாமுனிவராய், முத்திரை பதித்த வித்தகராய், சமய மறுமலர்ச்சிக்கும் சமுதாய மறுமலர்ச்சிக்கும் வித்திட்டு, சமய, சமுதாய இணைப்புப் பாலமாய் விளங்கிய இன்தமிழ் ஞானி! காவி உடுத்திய காரல்மார்க்ஸ் என்றும், இருபதாம் நூற்றாண்டின் அப்பர் அடிகள் என்றும், புரட்சி பூத்த இராமானுஜர் என்றும் போற்றப்படும் பெருந்தகையின் அடிச்சுவட்டில் நடப்பதே நம் வழியாகும்.

ஏமாற்றங்களில் வாழ்ந்து கொண்டிருந்த மக்களின் வாழ்க்கையில் மாற்றங்களை நிகழ்த்திய மாமேதையின் வழிநடப்பதே நம் கடமையாகும்.

வாழ்க, அருள்நெறித் தந்தையின் திருவடி!
வளர்க, அவர்தம் திருத்தொண்டு!

இல்லை என்பது இல்லை


சி. உமாராசன்

பூக்கின்ற பூக்களெல்லாம் மாலையாவதில்லை
பிறக்கின்ற அனைவருமே புகழ்பெறுவதில்லை
பார்க்கின்ற பார்வையெல்லாம் நலமாவதில்லை
கேட்கின்ற கேள்வியெல்லாம் பதிலாவதில்லை

சிலிர்க்கின்ற சிந்தையெல்லாம் செயலாவதில்லை
கரிக்கின்ற உப்பெல்லாம் கடலாவதில்லை
பொரிக்கின்ற கருவெல்லாம் உருவமாவதில்லை
விரிக்கின்ற தோகையெல்லாம் மயிலாவதில்லை

விதைக்கின்ற விதையெல்லாம் மரமாவதில்லை
கதைக்கின்ற மாந்தரெல்லாம் கருத்திலிருப்பதில்லை
உடைக்கின்ற கற்களெல்லாம் தெய்வமாவதில்லை
படைக்கின்ற ஆக்கமெல்லாம் செயலாவதில்லை

'கோகுலக் கண்ணனும் கோபியரும்



ஸத்குரு தியாகராஜருக்கு மிகச்சிறு வயதிலேயே தந்தை இராமப்ரும்மம் ஸ்ரீமத் இராமாயணம், பாகவதம், பகவத்கீதை முதலான அரிய நூல்களைக் கற்றுக் கொடுத்தார். மைந்தனுக்கு எட்டாவது வயதில் உபநயனம் செய்து, அச்சிறுவனுக்கு ஜயதேவருடைய அஷ்டபதி, நாராயண தீர்த்தரின் தரங்கங்கள், புரந்தரருடைய பதங்கள், அன்னமாச்சார்யார் கீர்த்தனங்கள், பத்ராஜல இராமதாஸரின் கிருதிகள் ஆகிய சிறந்த காவியங்களையும் கற்றுக் கொடுத்தார். நாரத மஹரிஷி அவருக்கு இசை ஞானத்தைப் பொழிந்தார். அவரது பதினெட்டாவது வயதில், காஞ்சி இராமகிருஷ்ண யதீந்திரரிடம் ஸ்ரீ ராம தாரக மந்த்ரத்தையும் உபதேசம் பெற்றார்.

"நௌகா" என்பது ஓடம். விநாயகர், ஸரஸ்வதி, குரு (ராமகிருஷ்ணேந்திரர் – தாரக நாமம் உபதேசித்தவர்), "இவர்களை வணங்கி விட்டு மகா கவிகளையும் வணங்கி, எனது சிற்றறிவைக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணன் பேரில் பாடல் இயற்றியுள்ளேன்" என்று பணிவுடன் சமர்ப்பிக்கிறார் கவி தியாகராஜர்.

யமுனைக் கரையில் மாலை வேளை. ஸ்ரீ கிருஷ்ணன் புல்லாங்குழல் இசை ஸகல ஜீவராசிகளையும் மெய்மறக்கச் செய்கிறது. கோபிகள் அவ்விசையைப் பருகி, விரகதாபத்தால் கிருஷ்ணனைத் தேடுகிறார்கள். மேகங்களால் சூழ்ந்த சந்திரன் போல் கிருஷ்ணனைக் கண்டு, ஆனந்தம் பொங்குகிறது. கண்ணனை அழைத்து வருகிறார்கள்.

ஓடம் யமுனையில் போகும்போது, இருகரைகளிலுள்ள இயற்கை அழகையும், கோபியர் கிருஷ்ணனைப் பாடி, ஆனந்தக் கடலில் மூழ்கியிருப்பதை, தியாகராஜர் தனது கவித்வத்தினால் விளக்கிக் காட்டுகிறார். ஒவ்வொரு கோபியும் கிருஷ்ணன் லீலைகளில் மயங்கி, கர்வம் மேலிட்டு, சவால் கூட விடுகிறார்கள்: "இந்தக் கிருஷ்ணனுக்கு ஸ்திரீகளை மயக்கத்தான் தெரியும். ஓடத்தைச் செலுத்தத் தெரியாது" என்றெல்லாம் அலட்சியம் செய்ய, பகவான் அவர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேணும் என்றெண்ணி பயங்கரமான சுழல் காற்றையும், மழையையும் உண்டாக்கி, ஓடத்தின் உள்ளே தண்ணீர் புகச்செய்து கோபிகளைத் தவிக்கச் செய்கிறார். அவர்கள் யமுனா தேவியைப் பிரார்த்திக்கிறார்கள் "நாங்கள் கிருஷ்ணனை ஏமாற்றி அழைத்து வந்தோம், கிருஷ்ணனைக் காக்கவேண்டும்" என ஓலமிடுகிறார்கள்.

பகவானாகிய கண்ணன் இதெல்லாம் கண்டு, சிரித்தான். படகில் தண்ணீர் வருவதைத் தடுக்க, கிருஷ்ணன் கோபிகளிடம் ஒரு யோசனை கூறுகிறான்: "நீங்கள் உங்கள் ரவிக்கைகளைத் திணித்து, படகில் துவாரத்தை அடையுங்கள்" என்கிறான். கோபிகள் அவ்வாறே செய்ய, அந்தத் துணிகளைத் தண்ணீர் அடித்துக் கொண்டு நீங்கிவிட்டது. கோபிகைகள் கிருஷ்ணனைச் சரணம் அடைகிறார்கள். "எங்கள் கர்வமெல்லாம், போய்விட்டது, அருள் பாலிக்கும்படி உன்னைப் பணிவுடன் கேட்கிறோம்" என்கிறார்கள். ஆனால் கிருஷ்ணன் அவர்களைப் பங்கப்படுத்த எண்ணி "உங்கள் உடைகளையே களைந்து, ஓடத்தின் துவாரத்தை அடையுங்கள்" என்கிறான். அவர்கள் நாணப்பட்டு தங்களுக்கு மானம் பெரிதென்றார்கள். அந்த ஸ்திரீகளுக்கும், கிருஷ்ணனுக்கும் நடந்த உரையாடலை தியாகராஜர் அற்புதமாகக் கையாளுகிறார், முடிவில் கண்ணன் 'விலைக்கு வாங்கின பிரேமை நிலைக்காது. ஸ்திரீகளை நம்பக்கூடாது' என்கிறான்.

இறுதியாக, கோபிகள் கிருஷ்ணன் சொன்னபடி செய்கிறார்கள். வேறென்ன புகல்? தங்கள் வஸ்திரங்களை முழுவதும் களைந்து, தண்ணீர் வெள்ளமாகப் புகும் துவாரத்தில் புகுத்தினார்கள்.

"ஹரி ஹரி நீ யொக்க திவ்யபாதாவிந்த மிய்யவே" என்று கண்ணனை முழுமனத்துடன் பிரார்த்திக்கிறார்கள். காற்றும், மழையும் நின்று விட்டன. ஓடமும் கரை சேர்ந்தது.

மாசற்ற இசை ஞானத்தையும், பக்தியையும் உபாஸனா பலத்தையும் ஒருங்கே பெற்ற தியாகராஜர், பற்பல இராகங்களில் கிருதிகளை இயற்றி, கர்நாடக இசையைப் பின்பற்றுபவர்களுக்குப் பொக்கிஷத்தை அளித்ததுடன் நிற்கவில்லை. கற்பனைத்திறன் மேவிட்டு, தனது முன்னோருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி அளவற்ற கற்பனா சக்தியையும் கொண்டு, "ப்ரஹ்லாதபக்தி' "நௌகா சரித்ரம்" என்று இரண்டு இசை நாடகங்களையும் இயற்றியுள்ளார். இவையிரண்டும் 'நாடகம்' என்றே தியாகராஜர் குறிப்பிடுகிறார். 'நௌகா சரித்திரம்', ஸ்ரீமத் பாகவதத்தில் வர்ணிக்கப்பட்ட கோபிகா வஸ்திராபஹரணம், ராஸலீலையைத் தழுவியது.

இவையனைத்தும், கிருதிவடிவமாய் அமைத்தார், தியாகராஜர். பல்லவி, அனுபல்லவி, சரணம், ரக்தி ராகங்களில், தாளக்கட்டுடன் மிக ஆனந்தம் தரும் உருப்படிகள் அவை. கச்சேரிகளில் சில கிருதிகளே பாடப்பட்டு வருகின்றன: "ஞானமொஸக ராதா" "ஒருஜூபு" "நாத தனுமநிசம்" "கானமூர்த்தே" ஆகியவை. "நௌகா" சரித்திரத்தில் தியாகராஜர் இயற்றியவை என்பது கூட பல ரசிகர்களுக்குத் தெரியாமல் இருந்தால், ஆச்சரியமில்லை. நௌகா சரித்திரத்தில் இடம் பெற்றுள்ள கருத்தைக் கவரும் எழில் மிக்க காட்சி ஒன்றை, ஓவியர் கோபுலு கண்ணைக் கவரும் வண்ண ஓவியமாக வரைந்து 'அமுதசுரபி' தீபாவளி மலரின் மேலட்டையை அழகுபடுத்தியுள்ளார்.

– கே.எஸ். மகாதேவன்

கம்பன் - ஒரு புதிய நோக்கு
(சட்டத்தின் கண்கள் மூலம்)
நீதியரசர் ஏ.ஆர். லட்சுமணன்

புகழ்க் கம்பன் பிறந்த பொன்னாடு தமிழ்நாடு என்பது பாரதியின் தீர்ப்பு.

"யாம் அறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல், இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை"

என்பது அந்த புரட்சிப் புலவனின் பூரிப்பு.

"கம்பநாடன் கவிதையைப் போல் கற்றோர்க்கு இதயம் களியாதே" என்று பழந்தமிழ்ப் புலவர் ஒருவர் பாரதி பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பே பாடி மகிழ்ந்தார்.

"கம்பர் வீட்டுள் ஒரு சிறுபுன்
கட்டுத் தறியும் கவிசெய்யும் என்று
இம்பர் நாட்டு மன்பதை கூறும்
இரும் சொல், புலவீர் கேட்டு உவந்தாம்"

எனப் பழந்தமிழ்ச் செய்யுள் ஒன்று பறைசாற்றுகின்றது.

இராமாயணம் பாட வந்தது மற்றவர் கட்டளைக்குட்பட்டோ, அன்றி பொருளுக்கோ புகழுக்கோ ஆசைப்பட்டன்று.

"ஆசைபற்றி அறையல் உற்றேன் மற்றுஇக்
காசுஇல் கொற்றத்து இராமன் கதை அரோ"

என்று கம்பனே சொல்லிவிட்டான் எனக் காண்கிறோம். செய்நன்றி மறவாச் செம்மல் கம்பன் என்பதனை அவனது பாட்டினில் காண்கின்றோம்.

"தோமறு மாக்கதை சடையன் வெண்ணெய் நல்லூர் வயின் தந்தே" என்பது கம்பன் வாக்கு.

சடையப்ப வள்ளல் வாழ்ந்த வெண்ணெய் நல்லூரில் உறைந்து, குற்றமற்ற இப்பெருங் காவியத்தைப் பாடி முடித்தேன் என்பது இதன் பொருள். கம்பன் பாடிய கம்ப இராமாயணம் ஏழு காண்டங்கள் 12097 பாடல்கள் கொண்டது என ஆய்வாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

எக்காலத்திலும் கதை என்று சொன்னாலே மக்களின் காதுகள் திறந்திருக்கும். நகை, அழுகை, இழிவு, வியப்பு, அச்சம், வீரம், வெகுளி, உவகை, கருணை முதலியன பொருந்திய கதைகளைக் கேட்பதிலே அனைவருக்கும் ஆசை உண்டு. கட்டுப்பாட்டை மீறி நடப்பவர்கள் தண்டனைக்கு ஆளாவார்கள். நீதிமுறை தவறாதவர்கள் நிலைத்த புகழுடன் விளங்குவார்கள். கல்வி, செல்வம், செல்வாக்கு முதலியவற்றில் எவ்வளவுதான் சிறந்திருப்பினும் அடாதனவற்றைச் செய்பவர்கள் அழிந்து போவார்கள். நீதியிலும் ஒழுக்கத்திலும் நிற்பவர்கள் எவ்வளவு தொல்லைக்கு ஆளானாலும் இறுதியில் இன்பமும் புகழும் பெறுவார்கள். சமுதாயக் கட்டுப்பாட்டைச் சிதைப்பவன் சமூக நீதியின் எதிரி ஆகின்றான். சமுதாய நீதியைக் காப்பவன் ஒரு சிறந்த நீதிமானாக வலம் வருகிறான். அறநூல் கொள்கைக்குப் புறம்பாக நடப்பவன் தண்டிக்கப்படுகிறான். இவற்றின் அடிப்படையிலே வனையப்பட்ட கதைகள் பல உண்டு. அவற்றில் தலையாயது தான் இராமாயண காவியம். நீதியின் அடிப்படையில், சட்டத்தினைச் சார்ந்து சொல்லப்பட்ட இக்காவியத்திலுள்ள ஏதேனும் ஒரு கதையைக் கேட்டாலும் கூட நன்மை உண்டு என்று கம்பன் காலத்து மக்கள் நம்பி வந்தனர். இதனை விளக்க வந்த ஒரு பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

"வென்றிசேர் இலங்கை யானை
வென்றமால் வீரம் ஓத.
நின்ற ரா மாயணத்தில்,
நிகழ்ந்திடு கதைகள் தம்மில்
ஒன்றினைப் படித்தோர் தாமும்
உரைத்திடக் கேட்டோர் தாமும்
நன்றிது என்றோர் தாமும்
நரகம் அது எய்தி டாரே."

தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்பது சான்றோர் மொழி. அந்தத் தந்தையின் சொல் கேட்டு, அடர்காடு சென்ற இராமனைப் பற்றிச் சிலப்பதிகாரம் சிறப்பாகச் செப்புகின்றது.

"தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடும்துயர் உழந்தோன்
வேத முதல்வன் பயந்தோன் என்பது
நீ அறிந்திலையோ? நெடுமொழி அன்றோ!"

தந்தையின் கட்டளைப்படி தன் மனைவியுடன் காட்டுக்குச் சென்று கடும் துன்பமுற்ற இராமன் வேதங்களின் முதல்வனான நான்முகனைப் பெற்றவன் என இளங்கோவடிகள் பாடுகின்ற பொழுது பைபிளின் - "பிராடிகல் சன்" என்ற கதையும், சட்டத்தில் உள்ள "PIOUS OBLIGATION THEORY" என்ற கதையும் மதிப்பும் (IMPACT) நமது நினைவுக்கு வருகின்றன. அதன்படி தந்தையின் சொற்கேட்டு காட்டுக்குச் சென்றான் இராமன், என்ற அடிப்படையில் தான் தந்தை பட்ட கடனை மகன் தீர்க்க வேண்டும் என்கின்ற இந்து சட்டம் ஏற்பட்டது, என எண்ணுவது சரி என நான் கருதுகிறேன்.

பெண் உரிமைகள் பற்றிய சட்டம் இந்த நூற்றாண்டிலே இயற்றினோம். அந்த உரிமை பற்றிக் கம்பன் அன்றே சிந்தித்தான். கம்பன் காலத்தில் தமிழகத்தில் ஆண் பெண் சமத்துவம் இல்லை பெண்கள், வீட்டுப் பிராணிகளாகவே நடத்தப்பட்டு வந்தனர் ஆண்கள் மட்டும் தங்கள் மனம்போன போக்கில் நடக்கும் உரிமையுடன் உறைந்தனர் பெண்கள் கல்வி கற்பது கூடத் தவறு என்ற கொள்கை தமிழ் மக்கள் பலரிடம் குடிகொண்டிருந்தது. இதனைக் கண்ட கம்பன் தமிழர்க்கு அறிவுறுத்தும் முறையில் பெண் கல்வி இன்றியமையாதது என்று பாடினான். இல்லறம் இனிது நடைபெற வேண்டுமானால் இல்லாள் அறிவும், குணமும் அமைந்தவளாயிருக்க வேண்டும். அறிவுக்கும் குணத்திற்கும் அடிப்படை, கல்வியாகும். கல்வி கற்ற பெண்கள் இல்லற தர்மத்தை உணர்ந்து, அவற்றை நடத்தி வைக்க முடியும். இவ்வுண்மையைத் தமிழர்களுக்குக் கவிதையின் வாயிலாக நினைவூட்டினான்.

கம்பராமாயணத்தில் நாட்டுப் படலத்தில் உள்ள ஒரு பாடல் கம்பனுடைய இக் கருத்தை நமக்குக் காட்டுகின்றது:

"பெரும் தடங் கண் பிறைநுதலார்க் கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்,
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி, விளைவன யாவையே." (நாட்டுப் படலம்)

"பெண்கள் பணம் படைத்திருந்தால் மட்டும் போதாது; கல்வியும் கற்றிருக்க வேண்டும்; அப்பொழுது தான் இல்லறம் இனிது நடக்கும்" என்று கம்பன் கருதினான். அக்கருத்தையே கோசலநாட்டுப் பெண்களுடன் இணைத்துப் பாடினான்.

நமது அரசியல் சாசன சட்டத்தின் அடிப்படை, மத, இன, மொழி வேறுபாடே எங்கும் இருக்கக்கூடாது என்பது தான். கம்பன் காலத்திலேயே உயர்ந்த குடி, தாழ்ந்தகுடி என்ற பிரிவுகள் இருந்ததாகக் காண்கிறோம். கம்பனுக்கு முன் இருந்த அறிஞர்களும் பிறப்பினால் உயர்வு தாழ்வு பாராட்டும் கொள்கையை எதிர்த்து வந்தனர். கல்வி கற்றவர் எக்குடியிலே பிறந்தாலும் எல்லாராலும் உயர்வாக எண்ணப்பட்டு வந்தனர். கல்வி கற்றவனை மேற்குடியானவன் என்ற கருத்தினைப் புறநானூறு கூட வலியுறுத்துகின்றது.

"ஒரு குடிப் பிறந்த பல்லோர் உள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன் கண்படுமே"

ஒரு குடியிலே பிறந்த பலருள்ளே வயதால் மூத்தவன் என்பதற்காக, மூத்தவனை வருக என்று அழைக்கமாட்டான் அரசன், அவருள் இளையவனாக இருந்தாலும் கற்று அறிவுள்ளவனாயிருந்தால் அவனை அழைப்பான், அவனுடைய ஆலோசனையைக் கேட்பான். அவன் கூறும் அறிவுரையின்படி நடப்பான். உயர்வு தாழ்வு என்னும் வேற்றுமை காணப்பட்ட அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நான்கு குடியினரிலும் கீழ்க்குடியிலே பிறந்த ஒருவன் கல்வி கற்றிருப்பானாயின், அவன் உயர்ந்தவனாக மதிக்கப்படுவான். மேற்குடியிலே பிறந்த ஒருவனும் அவன் கீழ் அடங்கி நடப்பான். இது புறநானூற்றுப் பாட்டு சங்ககாலத்து அறிஞர்கள் கல்வியைப் பரப்புவதன் மூலம் குடிப்பிறப்பின் உயர்வு தாழ்வுகளை ஒழித்து விடலாம் என்று எண்ணினர். இதற்கு இப்பாடல் ஒன்றே போதுமானது.

கம்பன், சங்க காலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னே இருந்தவன். உயர்வு தாழ்வுகள் ஒழிவதற்கு வழிகாட்டுவதிலே இன்னும் ஒருபடி முன்னே சென்றான். உண்மையில் உயர்வு தாழ்வற்ற சமுதாயம் அமைய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தன் சிந்தனையால் - ஆராய்ச்சியால் - பகுத்தறிவால் - கண்டறிந்து கூறினான்.

"வண்மையில்லை ஓர் வறுமை யின்மையால்
திண்மையில்லை, நேர் செறுநர் இன்மையால்;
உண்மையில்லை, பொய்யுரை இலாமையால்;
வெண்மையில்லை, பலகேள்வி மேவலால்"

எல்லா மக்களுக்கும் செல்வமும் கல்வியும் இருந்தால் அம்மக்கள் வாழும் நாட்டிலே சண்டை இருக்காது. சமாதானம் நிலவும். கோசல நாட்டைப் பற்றி இவ்வாறு கூற வந்த கம்பன், அந்நாட்டின் தலைநகராகிய அயோத்தி நகரைப் பற்றிப் பாடும்போது,

"கள்வார் இலாமைப் பொருள் காவலும் இல்லை, யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லை மாதோ"

என்று பாடினான்.

எனவே அந்த நகரத்திலே குற்றவியல் சட்டத்திற்கும், சொத்துரிமைச் சட்டத்திற்கும், இடமில்லை என்று கம்பன் கூறுகின்றான். அந்த நகரத்திலே கல்வி கற்காமல் மரம் போல வளர்ந்து நிற்பவர்கள் யாருமே இல்லை. எல்லாருமே கல்வியிலே வல்லவர். எனவே கல்வியில் பாகுபாடு காணமுடியவில்லை. எல்லா மக்களும் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப் பெரும் செல்வங்களையும் எய்தியிருக்கின்றனர்; ஆதலால் செல்வமற்ற வறியவர்களும் இல்லை. ஏறக்குறைய தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே கம்பன் கண்ட இக்கனவு, இக்காலப் புரட்சிக் கவிஞன் பாரதி பாட்டிலே எதிரொலிக்கிறது.

"ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனும் இல்லை சாதியில்
இழிவு கொண்ட மனிதர் என்பது
இந்தியாவில் இல்லையே;
வாழி கல்வி செல்வம் எய்தி
வாழ்வம் இந்த நாட்டிலே;
மனிதர்யாரும் ஒரு நிகர்
சமானமாக வாழ்வமே"

இப்பாடல் கம்பன் கருத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதாகும். "மனிதர் யாரும் ஒரு நிகர் சமானமாக வாழ்வமே" என்ற கூற்று, இன்றைய அரசியல் சாசன சட்டத்தின் ஆணிவேர் என்று காண்கையிலே **"Poets are uncrowned Legislators"** என்கின்ற பழமொழி நிருபணமாகிறது.

இன்றைக்குச் செயலில் இருக்கின்ற மதுவிலக்குச் சட்டத்தை முன்னோடியாக அன்றே கம்பன் பல இடங்களில் கூறியிருக்கின்றான். இராமன் காட்டுக்குப் புறப்படும் போது பரதன் ஊரில் இல்லை. தன் பாட்டன் வீட்டுக்குப் போயிருந்தான். இராமன் காட்டுக்குப் போன பின்புதான் அவன் அயோத்திக்கு வந்தான். தன் தாய் கைகேயியால் நிகழ்ந்த விளைவை அறிந்து வருந்தினான், இராமனுடைய அன்னை கோசலையின் அடிகளை வணங்கினான். அவள் பரதன் உள்ளத்தைப் பரிசோதிக்கும் பொருட்டு "கைகேயி செய்த வஞ்சனை உனக்குத் தெரியாதா?" என்று கேட்டாள்.

"அவள் ஆற்றிய வஞ்சனையை நான் அறிந்திருப்பேனாயின்; நானும் அவ்வஞ்சனைக்கு உடந்தையாக இருந்திருப்பேனாயின் நான் மகா பாதகன்; பெரும் பெரும் பாவங்களைப் புரிந்தவர்கள் அடையும் நரகத்தையடைவேன்" என்று ஆத்திரத்துடன் கூறினான். அப்போது அவன் தொகுத்துரைத்த பாவங்களிலே மதுபானத்தையும் ஒரு பாவமாகக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

"கன்னியை அழிக்கக் கருதினோன்; குரு
பன்னியை நோக்கினோன்: பருகினோன் நறை;
பொன் இகழ் களவினில் பொருந்தினோன் என
இன்னவர் உறுகதி என்னது ஆகவே"

"கன்னியை - மணமாகாத பெண்ணைக் கற்பழிக்க முனைந்தவன்; குருவின் மனைவியைக் கெட்ட எண்ணத்துடன் நோக்கியவன்; மதுவை அருந்தியவன்; பொன்னைத் திருடிச் சேர்க்கும் இழிதொழிலிலே ஈடுபட்டவன்; ஆகியோர் அடையும் கதியை நானும் அடைவேன்." என்றான். இதனால் மதுவுண்டல் மகா பாவம் என்பது விளங்கும்.

இராமன், மது, மாமிசம் உண்ணாதவன் என்பதைக் காட்டிய கம்பன் விபீஷணனைப் பற்றி அனுமன் வாயிலாகக் கூறுகின்ற பொழுது

"நிந்தனை நறவமும் நெறியில் ஊன்களும் தந்தன கண்டிலேன்."

பழிக்கு ஆளாக்கும் மதுவும் நன்னெறிக்கு மாறான புலால் போன்ற உணவுகளையும் சேர்த்து வைத்திருப்பதை நான் காணவில்லை என்கின்றான்.

மலர்களிலிருந்து எடுக்கப்பட்ட தேனை, அதாவது மதுவை அருந்துவதால் அறிவு மழுங்கும், அந்நிலை வஞ்சகம், களவு செய்யத் தூண்டும். பொய்யுரைக்கத் தூண்டும் என்று வாலியின் வாயிலாக மதுவின் தீமையைக் கூறுகிறான்.

இந்து திருமணச் சட்டத்திற்குக் கூட முன்னோடியாக கம்பன் தமது கவியை இயற்றினான் என்று சொன்னால் அது மிகையாகாது. பண்டைத்தமிழர் சமுதாயத்திலே பலதார மணம் வேரூன்றியிருந்தது. இத்தகைய போக்கைப் பெண்கள் விரும்பவில்லை. 'காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்டதே இன்பம்' என்பது நாகரிகம், நன்றாக வேரூன்றிய காலத்தில் தோன்றிய அறம். ஒருவனுக்கு ஒருத்தி என்ற இந்த நல்லறம் தமிழ் நாட்டிலே உயர்ந்து ஓங்க வேண்டுமென்பதே கம்பன் கருத்து. இலங்கையிலே சீதை சிறை வைக்கப்பட்டிருந்த பொழுது அனுமன் சீதையிடம் விடை பெற்றுத் திரும்பும்போது அவள் சில செய்திகளைக் கூறினாள். இராமனுடைய ஏகபத்தினி விரதத்தைப் போற்றுகின்ற விதமாக வருகின்ற பாடலிது.

"வந்து எனைக் கரம் பற்றிய வைகல் வாய்

இந்த இப்பிறவிக்கு இருமாதரைச்

சிந்தையாலும் தொடேன்' என்ற செவ்வரம்

தந்த வார்த்தை, திருச்செவி சாற்றுவாய்.

"இராமன் மிதிலைக்கு வந்து என்னை மணந்து என் கரத்தைப் பிடித்த போது ஓர் உறுதிமொழியைக் கூறினான். இந்தப் பிறப்பிலே நான் என் உள்ளத்தால் கூட இரண்டு பெண்களைத் தொட மாட்டேன். உன்னை மட்டும் தான் என் உள்ளத்தாலும் தொட்டு வாழ்வேன் என்று வரம் தந்தான். இந்தகைய வரந்தந்த அவன் சொற்களை அவனுடைய திருச்செவியிலே கூறுவாயாக" என்று அனுமனிடம் கூறியதை எண்ணுவோமாக. இதனால் தற்போது இந்தியக் குற்றவியல் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட **Bigamy** என்றும் தடை செய்யப்பட வேண்டும் என்றும் கம்பன் கனவு கண்டான் என்பதையும், இந்து திருமணச் சட்டத்தின்படி ஒருவன் ஒருத்தியை மட்டுமே திருமணம் செய்ய முடியும் என்பதையும் காண்கின்றோம். இன்றைய சட்டத்தின் முன்னோடியாக கம்பராமாயணம் திகழ்வதைக் காண்கின்றோம். மணமான ஒருவன் மற்றொரு திருமணமான பெண்ணை மணந்து கொள்ளல் இன்றைய சட்டத்தின்படி குற்றமாகும். இந்தக் குற்றம் செய்தவன் வாலி என்று காண்கிறான் கம்பன். வாலி பிறர் மனைவியைக் கவர்ந்தவன். அதுவும் தன் தம்பியின் மனைவியைத் தன் மனைவியாக வைத்துக் கொண்டவன். இதுதான் வாலியின் மீது இராமன் வாயுரையால் கம்பன் சுமத்தும் பெருங்குற்றம்.

"ஈரம் ஆவதும், இற்பிறப்பாவதும்

வீரமாவதும், கல்வியின் மெய்ந்நெறி

வாரமாவதும், மற்றோரு வன்புணர்

தாரம் ஆவதைத் தாங்கும் தருக்கரோ"

(கிட்கிந்தா - வாலிவதை 99)

இராவணன் சீதையின் மீது தான் கொண்ட காதலை மாரீசனிடம் சொல்லிய போது, மாரீசன் பிறன் மனை கவருதல் தீங்காகும் என்று கூறுகின்றான்.

"நாரம் கொண்டார், நாடு கவர்ந்தார், நடையல்லா

வாரம் கொண்டார், மற்றொரு வற்காய் மனைவாழும்

தாரம் கொண்டார், என்றிவர் தம்மைத் தருமந்தான்

ஈரும் கண்டாய்! கண்டகர் உய்ந்தார் எவர் ஐயா!"

(ஆரண்ய - மாரீசன் 180)

நடுநிலைமை தவறிய அன்பு கொண்டவர்கள்; பிறர் நாட்டைப் பலவந்தமாகக் கவர்ந்தவர்கள்; ஒழுக்கமற்ற செயல்களிலே ஆசை கொண்டவர்கள்; மற்றொருவர்க்குரியவளாய் அவர் மனையிலே வாழும் தாரத்தைக் கவர்ந்தவர்கள்; ஆகியோரையெல்லாம் தருமமே அழித்து விடும். இது இராவணன் மீது மாரீசன் அன்புகொண்டு கூறிய அறிவுரை. கும்பகர்ணன் கூட இராவணனைப் பார்த்து

"வேறொரு குலத்தோன் தேவியை நயந்து சிறைவைத்த செயல் நன்றோ?"

எனக்கேட்கிறான். இவ்வாறு ஒருவனுக்கு ஒருத்தி என்ற அறத்தை வலியுறுத்துமாறு இன்றைய சட்டங்களைப் பற்றிய ஆதாரங்களை அன்றே பாடி நின்றான் கம்பன்.

'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்பது முன்னோர் கொள்கை. மன்னன் எல்லா அதிகாரங்களையும் பெற்றிருந்ததாக புறநானூற்றின் பாட்டு கூறுகிறது கம்பன் காலத்தில் இக்கருத்து மாறிவிட்டது. குடிகள் தான் உயிர், மன்னன் தான் உடம்பு; உயிர் இல்லாவிட்டால் உடம்பு இயங்க முடியாது. குடிகள் இல்லாவிட்டால், குடிகளின் ஆதரவு ஒத்துழைப்பு இல்லாவிட்டால் அரசாட்சி இயங்க முடியாது என்ற கருத்து கம்பன் காலத்திலேயே தோன்றி விட்டது.

"வையம் மன்னுயிராக அம்மன்னுயிர்

உய்யத் தாங்கும் உடல் அன்ன மன்னனுக்கு

அய்யம் இன்றி அறம்கடவாது; அருள்

மெய்யின் நின்றபின் வேள்வியும் வேண்டுமோ"

(அயோத்தியா - மந்திர 17)

எனவே, மக்களாட்சி மலர வேண்டும், என்று அன்றே கம்பன் வேண்டினான் என்பது வெளிப்படை, ஆளுகின்ற மன்னன் எப்படி இருக்க வேண்டும். அவர்களுக்கு என்னென்ன பண்புகள் இருக்க வேண்டும் எனக் கூறவந்த கம்பன், "இனியமொழி, ஈகைக் குணம், ஆழ்ந்த சித்தனை, வினை செய்யும் வல்லமை, குற்றமற்ற பண்பு, சிறந்த குணம், செயலிலே வெற்றி பெறும் தன்மை நீதிநெறி கடவாமை", அத்தனையும் பெற்றிருந்தால் அவனுக்கு என்றும் அழிவில்லை எனப் பாடுகின்றான்.

"இனிய சொல்லினன், ஈகையன், எண்ணினன்,

வினையன், தூயன், விழுமியன், வென்றியன்

நினையும் நீதி நெறி கடவான் எனின்

அனைய மன்னர்க்கு அழிவும் உண்டாம் கொலோ"

(அயோத்தியா - மந்திர 18)

அது போல அமைச்சர் பெருமக்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் விளக்கமாகச் சொல்லியிருக்கின்றான்.

"உற்றது கொண்டு மேல்வந்து

உறுபொருள் உணரும் கோளார்,

மற்றது வினையின் வந்தது ஆயினும்

மாற்றல் ஆற்றம்

பெற்றியர்; பிறப்பின் மேன்மைப்

பெரியவர்; அரிய நூலும்

கற்றவர்; மானம் நோக்கின்

கவரிமா னனைய நீரார்"

(அயோத்தியா - மந்திர 7)

நடந்த நிகழ்ச்சியைக் கொண்டு, இனி நடக்கப் போகும் நிகழ்ச்சியைத் தெரிந்து கொள்ளும் அறிவும் ஆற்றலும் உள்ளவர்கள், முன் வினையினால் மூண்ட தீமையாயினும் அதை மாற்றும் வல்லமையுள்ளவர்கள்; நல்லொழுக்கமுள்ள குடியிலே பிறந்தவர்கள்; சிறந்த நூல்களையெல்லாம் கற்றறிந்தவர்கள்; மானத்திலே தன் முடி போனாலும் உயிர் வாழ விரும்பாத கவரிமானைப் போன்றவர்கள்.

இவ்வகையிலே கம்பராமாயணத்தை நாம் பார்க்கின்ற ஒவ்வொரு கோணத்திலும் புதிய கருத்துகள் புலப்படுவதைப் பார்க்கின்றோம். நீதிபதியின் கண்களின் மூலமாகப் பார்க்கின்றபொழுது இன்றைக்கு நாட்டில் நிலவுகின்ற பல்வேறு சட்டங்களுக்கும், குறிப்பாக அரசியல் சாசன சட்டத்திற்கும் முன்னோடியாக கம்பராமாயணம் நிகழ்கின்றது என்பதை நாம் உணர்கின்றோம்.

●●●



புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தாம் படைத்துள்ள "தமிழியக்கம்" எனும் நூலில்,

"தமிழ்க் கல்வி தமிழ் நாட்டில்
கட்டாயம் என்பதொரு
சட்டம் செய்க"

என்று பாடியிருக்கிறார்.

நமது அண்டை மாநிலங்களான கர்நாடகத்தில் கன்னடமும், ஆந்திரத்தில் தெலுங்கு மொழியும், கேரளத்தில் மலையாள மொழியும், மற்றும் மேற்கு வங்காளத்தில் வங்காள மொழியும், மற்ற வட மாநிலங்களில் அவர்களின் தாய் மொழியான இந்தியும் பிற மொழிகளும் மாணவர்களுக்குக் கட்டாயமாகப் படிக்க வகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், "தமிழ், தமிழ்" என்று தமிழ் முழக்கம் ஓங்கி ஒலிக்கின்ற நம் தமிழ் மாநிலத்தில்தான் தமிழ் படித்தாக வேண்டும் என்ற நிலையினை இன்று வரை பெறமுடியவில்லை.

தமிழகத்தில் இப்போதுள்ள இருமொழி பாடத் திட்டத்தை தமிழக அரசு கல்வித்துறை அரசாணை எண். 1189 நாள் 24.01.1968 வாயிலாக நடைமுறைப் படுத்தியுள்ளது.

அவ்வரசாணையின் பிரிவு ஒன்றில் மாநில மொழி அல்லது மாநில மொழியிலிருந்து வேறுபடுமானால் அவரவர் தாய் மொழி கட்டாய பாடமாக முதல் வகுப்பிலிருந்து கற்றுத்தரப்படும் என்று தெரிவிக்கப் பட்டிருக்கின்றது.

பிரிவு இரண்டில் ஆங்கிலம் அல்லது இந்திய மொழி அல்லாத வேறோர் அந்நிய மொழி கட்டாய பாடமாக மூன்றாம் வகுப்பு முதல் கற்றுத்தரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது

நம்முடைய தமிழ் நாட்டில் தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி முதலானபல்வேறு மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட பலரும் வசித்து வரும் காரணத்தால், அச்சிறுபான்மை மக்களின் உரிமைக்கும் பாதுகாப்பினைத் தரும் பொறுப்பில் மாநில அரசு இருப்பதால், மாநில மொழியான தமிழ் கட்டாய பாடமென இவ்வரசாணையில் அறிவிக்கப் படவில்லை. மேலும், இந்திய அரசியல் சட்டப்படி ஒரு மொழியை, மற்ற மொழிக்காரர்கள் மீது கட்டாயமாகத் திணிக்க முடியாது. இதனால் தான் தமிழ் நாட்டில் தமிழ் மொழியைப் பயிலாமலேயே பட்டம் பெறவும் பணி பெறவுமான சூழ்நிலை இருந்து வருகின்றது. மேலும் இத்தகைய ஓர் அரசாணை காரணமாகவே தமிழ் மொழிக் கல்வியும், தமிழ் பயிற்று மொழித் திட்டமும் புறக்கணிக்கப்பட்டு தனியார்

கல்வி நிலையங்களும் மத்திய அரசின் பாடத் திட்டத்திற்குட்பட்ட கல்வி நிறுவனங்களும் தமிழகத்தில் இயங்கி வருகின்றன.

இந்த நிலையை 25 ஆண்டுகளுக்கு மேலாக வளர விட்டதால் இளைய தலைமுறையினரிடம் தமிழ் படிக்கும் ஆர்வம் குறைந்ததோடு தமிழ் படித்தால் சோறு போடுமா என்ற கேள்வியையும் கேட்க வைத்துள்ளது.

இத்தகைய ஓர் அவல நிலை, தாய் மொழியாம் தமிழைப் புறக்கணிக்கும் இழிநிலை, தமிழகத்தைத் தவிர வேறெந்த மாநிலத்திலும் காண இயலாது.

ஒரு நாட்டில் அல்லது ஒரு மாநிலத்தில் வாழுகிற பிற மொழி பேசுகிற மக்கள் யாராயினும் அந்தப்பகுதியின் தாய் மொழியை மதித்து, கற்றாக வேண்டும் என்பது உலக நியதி. துரதிர்ஷ்டமாக தமிழ் நாட்டில் தான் தமிழ் படியுங்கள் என்று சொல்வதையே எதிர்க்கும் கேவலம் இருக்கிறது.

தாய் மொழியாம் தமிழைப் படிக்க வேண்டும் என்பதை அமரர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் சென்ற நூற்றாண்டிலேயே வற்புறுத்திச் சென்றிருக்கிறார்.

"தமிழ் படிக்காதவர்கள் தமிழ் நாட்டில் வசிக்க யோக்கியதை உடையவர்கள் அல்லர். அவர்கள் எந்த ஊர் பாஷைகளைப் படிக்கிறார்களோ, அந்த ஊரே அவர்களுக்கும் தகுந்த இடமாகையால் சுயபாஷையைப் படிக்காமல் இங்கிலீஷ் மட்டும் படிக்கிறவர்களை இங்கிலீஷ் தேசத்திற்கு அனுப்புவோம். பிரஞ்ச் மட்டும் படிக்கிறவர்களைப் பாரிஸ் பட்டணத்துக்கு அனுப்புவோம். இலத்தீனுக்கும், சமஸ்கிருதத்துக்கும், சொந்த ஊர் இல்லாத படியால் அந்த பாஷை படிக்கிறவர்களை அநாமகரணத் தீவுக்கு அனுப்புவோம்."

என்று தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டு தமிழ் படிக்க விரும்பாதவர்களை மிகக் கடுமையாகவே அவர் சாடியிருப்பதைக் காணுகின்றோம்.

மகாகவி பாரதியாரும்

"வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ"

என்று தாய்மொழியைப் புறக்கணித்து விட்டுப் பிற மொழிகள் பயில்வோரைச் சாடியிருக்கின்றார்.

மகாகவி பாரதியாருக்குப் பிரஞ்சு மொழி தெரியும், கன்னடமும் களிதெலுங்கும் தெரியும், வட மொழியையும் இந்தி மொழியையும் கூட அவர் கற்றிருந்தார்.

ஆங்கில மொழியிலும் மிகச் சிறந்த அறிவினை அவர் பெற்றிருந்தார். தாய் மொழியாம் தமிழை முதலில் கற்றுத் தேர்ச்சி பெற்றதற்குப் பிறகு தான் அவர் பிற மொழிகளையும் பயின்று தேர்ச்சி பெற்றார். "சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்று முரசறைந்த பாரதி தான், தாய் மொழியைப் படியுங்கள் என்று வற்புறுத்துகிறார்.

பற்பல மொழிகளைக் கற்றுத் தேர்ந்திருந்த மகாகவி பாரதியார் தான், 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்றும் பாடினார்.

வேற்று மொழியில் பயிலும் அறிவு கற்பவரின் ஊனோடும், உயிரோடும் ஒன்றாகக் கலப்பதில்லை. தாய் மொழியில் பயிலும் போது தான், மாணவன் பெற்ற அறிவு பசுமரத்தாணி போல அவன் உள்ளத்திலும் பதிந்து, அவன் ஊனுடன் உயிராய்க் கலந்து அவனை உயர்த்துகின்றது. ஆகவே தொடக்கக் கல்வி முதல் உயர்கல்வி வரை தாய் மொழி மூலம் தான் கல்வி கற்றுத்தரப்பட வேண்டும். மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட அனைத்துக் கல்வியும் தாய் மொழி மூலமே கற்றுத்தரப்பட வேண்டும் என்பதுதான் உலகம் முழுவதும் கல்வியாளர்கள் கொண்டுள்ள கல்விக் கோட்பாடாகும்.

அண்ணல் காந்தியடிகளும் அவரவர் தாய் மொழியே பயிற்று மொழியாக அமைய வேண்டும் என்பதைத் தம்முடைய நூல்கள் பலவற்றிலும் வற்புறுத்தியிருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

"எனக்கு ஒரு சர்வாதிகாரியின் அதிகாரம் இருக்குமானால், நான் இன்றே நம் மாணவர்கள் அந்நிய மொழி மூலம் கல்வி கற்பதை நிறுத்தி விடுவேன். எல்லா ஆசிரியர்களையும் விரிவுரையாளர்களையும் உடனே தாய் மொழியின் மூலம் கற்றுத்தரும்படி கட்டளையிடுவேன். இம்மாற்றத்தை எதிர்ப்பவர்களை வேலையி லிருந்து விலக்கி விடுவேன். பாடப் புத்தகங்கள் தயாராகும் வரை காத்திருக்க மாட்டேன். பயிற்சி மொழி மாறிய பின் அவை தாமாகவே வந்துவிடும். அந்நிய மொழி மூலம் கல்வி கற்றுத்தரும் இக்கேட்டிற்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும்" என்று அவர் கூறியிருக்கிறார்.

மொழி வழி மாநிலம் அமைய வேண்டும் என்று காந்தியடிகள் வற்புறுத்தியமைக்குக் காரணமும் அவரவர் தாய் மொழி வழிக்கல்வி கற்றுத்தரப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவே ஆகும்.

ஆனால் இன்றைக்குக் காந்தியடிகளின் கல்விக் கொள்கைக்கு நேர் மாறாக நம் தமிழ் நாட்டில் தமிழ் மொழியை அறவே புறக்கணித்து ஆங்கில மொழி மற்றும் பிற மொழிகளுக்கே நம்மில் பலர் இடம் கொடுத்துக் கொண்டிருக்கிறோமே! இது இனியும் தொடர வேண்டுமா? என்பது தான் இன்று கல்வியாளர்கள் முன்னுள்ள கேள்வியாகும்.

பிரிவு ஒன்றில் மாநில மொழி அல்லது அவரவர் தாய் மொழி கட்டாய பாடம் என்று இருப்பதை ஆதாரமாகக் கொண்டு, மாநில மொழியான தமிழ் மொழியைப் பலர் புறக்கணித்து விடுகிறார்கள். தமிழ் மொழி அல்லாத இந்திய மொழிகளில் ஒன்றை - குறிப்பாக இந்தி மொழியைப் - பயில்கிறார்கள். பிரிவு இரண்டில் ஆங்கில மொழியைப் பயில்கிறார்கள். தமிழ் மொழியை அறவே புறக்கணிப்பது மட்டுமன்றி, தமிழ் பயில்வோரையும் சிறுமைப் படுத்துகிறார்கள். "தமிழ் பயின்றால் அவர்கள் அறிவில் குறைந்தவர்கள்" என்று தமிழ் படித்தவர்களையே தாழ்வு படுத்துகிறார்கள்.

தமிழைப் படிக்காமல் பட்டம் பெறுகிறவர்கள் எண்ணிக்கையில் குறைவு தான் என்ற ஒரு விவாதமும் வைக்கப்படுகின்றது. அந்தப் புள்ளி விவரம் அரசுப் பள்ளிகளில் மட்டுமா அல்லது தமிழகத்தில் உள்ள தனியார் பள்ளிகளையும் சேர்ந்ததா என்பதும் விளக்கப்படவில்லை.

என்னுடைய கேள்வியும், என்னைப் போன்றவர்கட்கு ஏற்படும் கவலையும், எவ்வளவு பேர் தமிழைப் புறக்கணிக்கிறார்கள் என்பதன்று. இந்த முறையினால், இத்தகைய கல்விக் கொள்கையால் தமிழ் சிறுமைப்படுத்தப் படுகிறது. தமிழ் படித்தவன் இரண்டாந்தரமாக எண்ணப்படுகிறான். வளரும் தலைமுறையிடம், ஏன் மழலைக் குழந்தைகளிடம் கூட, தமிழ் உணர்வு அழிக்கப்பட்டு வருகிறது... "ஆங்கிலோ தமிழர்கள்" என்று ஒரு பிரிவை வருகிற நூற்றாண்டில் உருவாக்கி விடுவோமோ என்ற கவலையும் அச்சமும் ஏற்படுகிறது.

எனவே தான், தாய் மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டியது நம்முடைய கடமை. தமிழைக் கற்றுக் கொண்டால் தான் வாழையடி வாழையென வந்து கொண்டிருக்கும் தமிழ்ப் பண்பாடும் நாகரிகமும் நிலைபெறும். "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன்பிறந்த மூத்த தமிழ்க்குடி" என்று பெருமைப்பட்டுக் கொள்கிறோமே, அத்தகைய மூத்த தமிழ்க் குடியின் பெருமை நிலைக்கும்.

→

"தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அவர்க்கோர் குணமுண்டு" என்று நாமக்கல் கவிஞர் பாடினாரே, அத்தகைய தமிழ் இனம் நிலைக்கும்.

தமிழ் என்ற அஸ்திவாரத்தின் மீது கட்டப்படும் கல்வியெனும் கோபுரம் தான் நிலை பெற்று நிற்கும், நீடித்து நிற்கக் கூடிய வாழ்வையும், வளத்தினையும் நல்கும்.

மிகச் சிறந்த கல்வியாளராய்த் திகழ்ந்த டாக்டர் மு.வ.அவர்கள் தமிழ் மொழி வழிக் கல்வியைப் பற்றிக் கூறியுள்ள ஒரு கருத்தும் இங்கு நாம் எண்ணுதற்குரியது.

"தமிழ் மொழியில் கற்பது இயற்கைக் கால்களைக் கொண்டு நடப்பது போன்றது. அயல் மொழியின் வாயிலாக நம் நாட்டு மாணவர்கள் கற்பது பொய்க்கால் கட்டிக் கொண்டு நடப்பதைப் போன்றது. இதன் காரணமாக பிற நாட்டுப் பல்கலைக் கழக மாணவர்களை இந்நாட்டு மாணவர்கள் எட்டிப் பிடிக்க முடியாமல் இருப்பதில் வியப்பொன்றுமில்லை".

என்று டாக்டர் மு-வ. அவர்கள் மேலை நாட்டிற்கு நிகரான அறிவு வளர்ச்சி அமைய வேண்டுமானால் அது தமிழ் மொழி வழிக் கல்வியால் மட்டுமே சாத்தியமாகக் கூடும் எனத்தெளிவு படுத்தியிருக்கக் காண்கிறோம்.

தமிழைப் பாட மொழியாகக்கொள்வது இருக்கட்டும், தமிழ் நாட்டில் தமிழை ஒரு மொழியாகக் கூட, கற்றுக் கொள்ளத் தேவையில்லை என்ற நிலை இருப்பது நமக்கே இழிவல்லவா? தமிழைத் தலை குனிய வைக்கும் செயலல்லவா?

ஆகவே, தமிழகத்தில் உள்ள எல்லாப் பள்ளிகளிலும் அவை மத்திய பாடத்திட்டத்தைப் பின்பற்றுகின்ற பள்ளிகளே ஆனாலும், அவை அனைத்திலும் தமிழை ஒரு மொழியாகப் படித்தாக வேண்டும் என்ற நிலை அவசியம் ஏற்பட வேண்டும். மேலும் தமிழ் மொழி வழிக் கல்வி, ஆங்கில மொழி வழிக் கல்வி என்று இரண்டாக உள்ள மீடியங்களையும் ஒரே மீடியமாக - தமிழ் வழிக் கல்வியாக மாற்றி - கல்வியைச் செம்மைப் படுத்துவதற்கும் கூட, அடிப்படையாக தமிழைக் கட்டாயமாக அனைவரும் கற்றிடச் செய்தல் வேண்டும்.

முத்தமிழ்க் காவலர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள், தம்முடைய உயிர் பிரிவதற்கு இரண்டொரு நாள்கள் முன்னதாக, தமிழகத்தில் 'தமிழைக் கட்டாய பாடம் ஆக்குங்கள்' என்று விடுத்த இறுதி வேண்டுகோளை இங்கு நான் தமிழ் மக்கள் அனைவருக்கும் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அவருடைய இறுதி அறிக்கையின் முக்கிய வாசகங்கள் பின்வருமாறு:-

"தமிழகத்தில் இப்போதுள்ள இருமொழித் திட்டத்தை நாம் தான் கொண்டு வந்தோம். அப்போது இந்தத் திட்டத்தினால் தமிழக மக்கள் தமிழும் ஆங்கிலமும் தான் கட்டாயமாகப் படிப்பார்கள் என்று தோன்றியது. அப்படியே நம்பினோம்.

இப்போது நடப்பது என்னவென்றால் இருமொழித் திட்டத்தில் ஒரு மொழியாக ஆங்கிலம் கட்டாயமாகவும், இன்னொரு மொழியாக தமிழைத் தவிர வேறேதோ ஒரு மொழியும் கெட்டியாக இடத்தைப் பிடித்துக் கொண்டதென்றாலும் இப்போதுள்ள அந்த இரு மொழித் திட்டத்திலேயே தமிழ் மொழியைக் கட்டாய பாட மொழியாக ஆக்க முடியுமானால் நான் மகிழ்ச்சியோடு சாவேன். எனவே இதிலிருந்து, நான் இப்போதுள்ள இரு மொழித் திட்டத்தை எதிர்க்கவில்லை என்பது நன்கு விளங்கும்.

இப்போதுள்ள இருமொழித் திட்டத்தையே தொடர்ந்து ஆதரிக்க வேண்டும் என்று எண்ணுபவர்கள் இன்று வரை தமிழைக் கட்டாயமாக ஆக்க முடியவில்லையே அது ஏன்? இதை இப்போதாவது நாம் சிந்தித்து முடிவு செய்ய வேண்டாமா?

இப்போதுள்ள இரு மொழித் திட்ட அரசு ஆணையில் இருப்பது பிரதேச மொழியோ அல்லது அவரவர் தாய் மொழியோ படிக்க வேண்டும் என்றுள்ளதே தவிர, தமிழைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்றில்லை. இதனால் தான் அண்ணாவுக்குப் பின்வந்த அரசுகள் அனைத்தும் தமிழைக் கட்டாய மொழியாக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றன.

ஆட்சி மொழித் திட்டம் என்பது வேறு, கல்வி மொழித் திட்டம் என்பது வேறு. ஆட்சிக்குத் தமிழ், ஆங்கிலம் இரண்டு மொழிகள்.

கல்விக்குத் தமிழும் ஆங்கிலமும் கட்டாயம் வேண்டும். இப்படி தமிழைக் கட்டாயமாக்க வேண்டுமானால் தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள் தங்களது தாய் மொழியை அவரவர் விருப்பப்படி விருப்ப பாடமாக அனுமதிப்பது தான் புதிய 3 ஆ வது மொழித் திட்டம். இதில் எங்கே இரு மொழித் திட்டத்திற்குப் பாதகம் இருக்கிறது?

தமிழைக் கட்டாயமாக்குவதற்குச் செய்யும் ஏற்பாடுகள் தான் இந்த 3 ஆ வது மொழியைக் கல்வியில் மட்டும் விருப்பப்பாடம் ஆக்குவதாகும்.

மேற்சொன்னபடி இல்லாமல் இப்போதுள்ள இருமொழித் திட்டத்திலேயே தமிழைக் கட்டாய பாட மொழியாக்க முடியுமானால் நான் மனநிறைவோடும் மகிழ்ச்சியோடும் சாவேன்".

- இப்படி ஓர் இறுதி அறிக்கையைத் தந்து தமிழைப் படிக்க வையுங்கள் என்று அறைகூவல் விட்டுவிட்டுத் தம் வாழ்க்கைப் பயணத்தை நிறைவு செய்து கொண்டு விட்டார், முத்தமிழ்க் காவலர் டாக்டர். கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள்.

அவருடைய இறுதி சாசனத்தின் படி தமிழ் மொழியைத் தமிழ் நாட்டில் கட்டாய பாடமாக்க வேண்டுவது நம் தமிழ் மக்களின் தலையாய கடமை அல்லவா!

பேரறிஞர் அண்ணா அவர்கள் இன்று உயிரோடிருப்பாரே யானால், தாம் வகுத்தளித்துச் சென்ற இருமொழித் திட்டத்தில் வேண்டிய திருத்தம் செய்து தமிழைக் கட்டாயபாடமாக்குவார் என்பது திண்ணம்.

தமிழ் மட்டுமன்றி, ஆங்கிலமும் கட்டாயமாகப் படித்தாக வேண்டும். ஆனால், ஆங்கிலமோ, இந்தியோ - எந்த மொழியும் தமிழை அழிக்க இடமளிக்கக்கூடாது, எனவே, தமிழகத்தில் தமிழ்மொழி கட்டாய பாடம் ஆதல் வேண்டும். இதற்குத் தமிழாய்ந்த தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் வழிவகை காண்பார்கள் என்று நம்புகிறேன்.

இன்றைய அரசியல் அமைப்புச் சட்டத்தின் படி தாய் மொழியாம் தமிழையும், வழி காட்டும் ஆங்கிலத்தையும் மட்டும் கட்டாயப் படுத்த இயலாதென்றால், மற்றவர்கள் தங்கள் தாய் மொழியை விருப்பப்படி படித்துக் கொள்ள வழிவகை காணும் கல்விக் கொள்கையை உருவாக்க வேண்டும். தமிழ் நாட்டிற்கு மட்டுமன்றி... இந்தியத்துணைக் கண்டத்திற்கே அவரவர் தாய் மொழியும், ஆங்கிலமும் இரண்டு கண்கள் போல, இரண்டுதண்டவாளங்களைப் போல பிரிக்க இயலாத வழிகள். இதை நிறைவேற்றும் கல்விக் கொள்கை வகுக்க வேண்டும். தமிழ்நாட்டில் தமிழைப் படிப்போம், தமிழர்களாக வாழ்வோம்.

"இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால்
துன்பங்கள் நீங்கும், சுகம் வரும் நெஞ்சினில்
தூய்மை உண்டாகிடும் வீரம் வரும்"

- பாவேந்தர் பாரதிதாசன்.

□□□

ஞானம் பொலிந்த நாடு

டாக்டர் ஆ. பத்மநாபன், இ.ஆ.ப. (ஓய்வு)

‘புத்தர்பிரானருள் பொங்கிய நாடு’ என்றார் பாரதியார். இந்தப் புகழுரைக்கு உரிய கௌதமபுத்தரே உலகில் முதன் முதலாகப் பகுத்தறிவு ஒளியைப் பரப்பி அறியாமையையும், மூடத்தனத்தையும் அகற்றவல்ல நன்னெறிகளைப் போதித்தவரானவர். இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே, மனித சமுதாயத்தைத் துன்பங்களிலிருந்து விடுவிக்க வேண்டும் என்னும் உன்னத உணர்வுடன் அன்பினால், அறத்தால், கருணையால் மெய்யறிவால் மக்களையும் மன்னர்களையும் கவர்ந்தார் புத்தர். மக்கள் எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்னும் நன்னோக்கத்தோடு பல ஆண்டுகள் தம் சீடர்களுடன் ஊர் ஊராகச் சென்று நன்னெறிகளைப் போதித்தார். அவருடைய கொள்கைகளான ‘தர்மம்’ பௌத்த மதமாகப் பரவி, சீனா, ஜப்பான், பர்மா முதலிய தெற்காசிய நாடுகளிலும், இலங்கையிலும் இன்றளவும் நிலவி வருகிறது. ஆயினும், அவர் பிறந்த இந்திய நாட்டில் பல்லாண்டு காலம் தழைத்தோங்கியிருந்த பௌத்த நெறி, இடைக் காலத்தில் சிதைக்கப்பட்டுப் பொது நெறியான போதிலும் புகுந்த நாடுகளில் பொலிவுற்று விளங்குகின்றது.

தமிழகத்தில் பௌத்த நெறி சங்ககாலத்திலேயே பரவியிருந்தது என்பதற்குரிய சான்றுகள் உள்ளன. கி.பி. முதல், இரண்டாம் நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்தைச் சேர்ந்த இளம்போதியார் தமிழ் இலக்கியங்களில் நாம் அறியும் முதல் பௌத்தப் புலவராக விளங்குகின்றார். இளம்போதியார் என்னும் பெயரே அவர் பௌத்தர் என்பதைக் குறிக்கிறது. போதி மரத்தை வழிபட்ட காரணத்தால் சைவ, சமண நூல்கள் பௌத்தர்களைப் போதியார் எனக் குறிப்பிடுவது வழக்கில் இருந்துள்ளது. கடைச் சங்க காலத்தைச் சார்ந்த நற்றிணையில் இளம் போதியார் இயற்றிய பாடல் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

‘இரட்டைக் காப்பியங்கள்’ எனப் போற்றப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றுள் மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச்சாத்தனார் தமிழகத்தில் பெரும்புகழீட்டிய பௌத்தப் புலவராவார். ‘மதுரைக் கூலவாணிகன் மகனார்’ என்னும் அடைமொழி இவருக்கு வழங்குவதால் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு கால அளவில் மதுரையில் வாழ்ந்த இந்தப் புலவர் வணிகராக விளங்கிய சிறப்புக்குரியவர் எனலாம். பௌத்த தர்மத்தைப் பரப்பும் நோக்கத்தோடு இவர் இயற்றிய மணிமேகலை வரலாற்று அடிப்படையில் அமைந்துள்ளது. புகார் எனப் புகழோங்கிய காவிரிப் பூம்பட்டினத்துச் செல்வ வணிகனான கோவலன் கண்ணகியை மறந்து, மாதவி என்னும் நாட்டிய மங்கையை நாடி வாழ்ந்து, பின்னர் மனம் திருந்தி மீண்டும் கண்ணகியோடு வாழ எண்ணி மதுரைக்கு வந்தபோது, கள்வன் எனக் குற்றம் சாட்டப்பெற்று, கொலையுண்ட துயரக் கதையைச் சேரன் செங்குட்டுவனின்



தம்பியும், சமணத் துறவியுமான இளங்கோ வடிகள் முத்தமிழ்க் காப்பியமாக அளித்த நூலே சிலப்பதிகாரமாகும்.

கோவலன் கொலையுண்ட செய்தியை அறிந்த மாதவி ஆறாத் துயரமடைந்து, வாழ்வை வெறுத்துத் துறவியானாள். தன் மகள் மணிமேகலையைப் பௌத்த துறவியாக்கி அவள் மூலம் புத்தரின் தர்மத்தை உல கோர்க்குப் போதித்து வாழ்வதில் ஆறுதல் பெற்றாள். புத்தனின் கருணையும் அன்பும் கனிந்த போதனை களை விரும்பியேற்றுப் பல வகைத் துன்பங்களையும் பொருட்படுத்தாது, தர்மத்தைப் பரப்பினாள் மணி மேகலை. மணிமேகலையின் கதையைச் சொல்லும் போக்கில், நூலாசிரியர் சீத்தலைச் சாத்தனார், தம் காலத்தில்—வழங்கிய இந்து, சமண சமயத் தத்துவங் களைவிட பௌத்த தத்துவம் உயர்ந்தது என்பதைக் காட்டுவதற்குப் பெரிதும் முயன்றுள்ளார். இதன் வழியே சாத்தனாரின் புலமையும், தத்துவப் பேரறிவும் புலப்படுவதைக் காணலாம். சீத்தலைச் சாத்தனார் இயற்றிய பாடல்கள் சங்க இலக்கியங்களான நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, அகநானூறு ஆகிய நூல் களிலும் இடம்பெற்றுள்ளன.

அறவண அடிகள், பண்டைய தமிழரசர்கள் ஆண்ட சேர, சோழ, பாண்டிய நாடுகளில் புத்தமதத்தைப் பரப்பிய முதல் தமிழ்ப் பௌத்த துறவியாவார். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் புகார் என்னும் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து பௌத்த விகாரத்தின் தலைவராக விளங்கிய அறவண அடிகளிடம், தர்ம விளக்கம் கேட்டு மணிமேகலை துறவுக்கோலம் பூண்டாள். காவிரிப்பூம் பட்டினம் கடல் அலைகளால் அழிந்தபோது, அறவண அடிகள் சேரன் தலைநகர் வஞ்சிக்குச் சென்றார். மணிமேகலை காஞ்சிக்குச் சென்று வாழ்ந்தாள். மணிமேகலை காப்பியத்தின் முப்பதாவது காதையில், பன்னிரு நிதானங்களை அறவணர் மொழிந்து மணி மேகலையின் மன இருள் நீக்கி, அறிவொளி ஏற்றி யதைக் காண்கின்றோம்.

சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணிமேகலை காப்பியத்தின் தலைவியே மணிமேகலை. கோவலனுக் கும், மாதவிக்கும் மகளாகப் பிறந்து, தன் தந்தையின் மரணத்தைக் கேட்டு தன் குலத் தொழிலை விடுத்து அறவண அடிகளிடம் அறத்தைக் கேட்டு, துறவறம் பூண்டு நாடெங்கும் சுற்றி அறநெறியைப் பரப்பி யதையும், தனக்குக் கிடைத்த அமுதசுரபி என்னும் அட்சய பாத்திரத்தின் துணை கொண்டு பசித்தவர்க் கெல்லாம் உணவளித்துப் பசிப் பிணி போக்கியதை யும், சோழ நாட்டரசி இழைத்த கொடுமைகளைத் தாங்கிக் கொண்டு, முடிவில் விடுதலை பெற்றுக் காஞ்சி பௌத்த விகாரத்தில் தங்கியிருந்து அறப்பணி புரிந் ததையும் மணிமேகலை காப்பியம் விளக்குகிறது. காஞ்சியில் இப்போது திரௌபதியம்மன் கோயிலிருந்த இடமே அன்றைய மணிமேகலையின் விகாரம் எனக் கூறப்படுகிறது.

தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான குண்டலகேசியின் ஆசிரியர் நாககுத்தனார் பௌத்தப் பெரும் புலவராக விளங்கியவர். கி.பி. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த இப்புலவர், தம்மபத உரை களிலும், தேரிகதையிலும் கூறப்பட்டுள்ள குண்டலகேசி என்னும் பிக்குணியின் கதையைக் காவியமாக்கி யுள்ளார். கதைப் போக்கிலேயே வைதீக, சமண சமயக் கொள்கைகளை மறுத்துத் தம் கருத்தை நிலை நாட்ட முற்படுகின்றார். சமணத் துறவியாக இருந்த குண்டலகேசி, சாரிபுத்தர் என்னும் பௌத்த பிக்கு விடம் சொற்போரில் தோற்றுப் பௌத்த துறவியாகி, பௌத்த தர்மத்தைப் பரப்பியதாக நீலகேசி என்னும் சமண காப்பியம் குறிப்பிடுகிறது. குண்டலகேசியில் கூறப்பட்டுள்ள பௌத்தக் கோட்பாடுகளை மறுக்கப் பிறந்த நூலான நீலகேசியின் மூலமே குண்டல கேசியைப் பற்றி அறிகிறோம்.

புத்த தத்தர் தமிழ்நாட்டில் வாழ்ந்த முதல் பாலி மொழி அறிஞர் எனலாம். இவர், தற்போது உறையூர் என வழங்கும் ஊரகப்புரத்தில் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார். இலங்கையிலுள்ள அனுராதபுர மகாவிகாரத்தில் பாலி மொழியும், பௌத்த மும் பயின்றவர். இவர் தம் படிப்பை முடித்துவிட்டு, படகு ஒன்றில் இந்தியாவுக்குத் திரும்பி வரும் வழியில் எதிரில் வந்த படகில் புத்த கோஷரைக் கண்டு வணங்கி அவருடைய உரை நூல்களை அனுப்பும்படிக் கேட்டுப் பெற்றார் எனப்படுகிறது.

காஞ்சிபுரம் வந்து சேர்ந்த புத்ததத்தர், அங்கு கிருஷ்ணதாசர் கட்டியிருந்த விகாரத்திலிருந்து புத்த வம்சத்தின் உரை விளக்கமான 'மதுரத்த விலாசினி' என்னும் நூலை இயற்றினார். மேலும் புத்த கோஷர் 'அபிதம்ம பீடகம்' என்னும் நூலுக்கு எழுதிய உரையைச் சுருக்கி, 'அபிதம்மவத்தரம்' என்னும் நூலை இயற்றினார். அவ்வாறே புத்தகோஷர் 'வினயபீடகம்' நூலுக்கு எழுதிய உரையைச் சுருக்கி 'வினிச்சியம்' என்னும் நூலை இயற்றினார். களப்பிர குலத்தைச் சேர்ந்த அச்சுதவிக்ரந்தன் காலத்தில் காவிரிக் கரையி லிருந்த நகரில் வாழ்ந்தபோது இந்த நூலை எழுதிய தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவரே அனுராத புரத்தில் இருந்தபோது 'உத்தர வினிச்சியம்' என்னும் நூலை இயற்றினார் எனவும் அறிகின்றோம்.

பாலிமொழி அறிஞரும், உரையாசிரியருமான புத்த கோஷரும் ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார். புத்த கோஷர், புத்தகயாவில் பிறந்தவர் என்கிறது மகாவம்சம். எனினும் இவர் தென்னிந்தியாவில் பிறந் தவர் என்றும் கூறுவர். கே.ஆர்.சீனிவாசன், புத்த கோஷர் தற்போது காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள மோரணம் என வழங்கும் 'மோரணந்தசேக்தத்தில்' பிறந்தவர் எனக் கருதுகின்றார்.

புத்த கோஷர் காலத்தில், பௌத்த தம்மத்தைப் பாலி மொழியில் பயிலும் வழக்கம் குறைந்து சம்ஸ் கிருதத்தில் பயின்ற அறிஞர்கள் பெருகினர். புத்த கயாவில் இருந்தவர்கள் பாலி மொழியில் பயிலும் வழக்கத்தையே மேற்கொண்டனர். புத்தகோஷர் அவர்களின் வழியைப் பின்பற்றி 'ஞானோதயம்' என்னும் நூலை இயற்றினார். தமது ஆசிரியர் மகாதேரரேவத்திரின் அறிவுரையை ஏற்றுப் புத்த கோஷர், இலங்கைக்குச் சென்று அபிதம்மத்திற்கும் உரை எழுதினார். இலங்கையில் வாழ்ந்த சிங்கள அறிஞர்களின் நட்பைப் பெற்று சிங்கள உரைகளைக்

கற்று 'விசுத்த மார்க்கம்' என்னும் திரிபீடக உரையை எழுதினார். தம்மபதம், ஜாதகக் கதைகள் ஆகியவற்றிற்கும் இவர் உரை எழுதினார் எனப்படுகிறது. புத்த தத்துவத்திற்குச் சிறந்த விளக்க நூல்களாக அமைந்த இவரது உரைகள், திரிபீடகத்திற்குத் தக்க திறவுகோல் எனப் போற்றப்படுவதாகும். புத்த கோஷர் காஞ்சி புரத்திலும், மயூரப்பட்டணம் (தற்போதைய மாயூரம்) ஆகிய இடங்களிலும் வாழ்ந்தவர்; நாகப்பட்டினத்திற்குச் சென்று வந்தவர் என அறிகின்றோம்.


தம்மபாலர், தமிழகம் தந்த மற்றுமொரு பாலிமொழி அறிஞராவர். ஆறாம் நூற்றாண்டில் 'தஞ்சா' என வழங்கிய (தற்போதைய தஞ்சை) நகரத்தவரான தம்மபாலர், காஞ்சிபுரத்தில் பிறந்தவர் எனக் குறித்துள்ளார், வெளிநாட்டு யாத்திரிகரான யுவான் சுவாங். தம்மபாலர் நாகப்பட்டினத்திலிருந்த தம்ம சோக விகாரத்திலும் சில காலம் இருந்துள்ளார். இந்த விகாரம் அசோகர் கட்டியதென இவரது 'நெட்டி பகர்நா' என்னும் நூலின் உரையால் அறிகின்றோம். இலங்கை அனுராதபுரத்தில் பயின்றவர் என்பதும் இவருடைய நூலால் அறிகின்றோம். புத்தகோஷர் உரை எழுதாது விட்ட 'குத்தக நிகாயம்' என்னும் நூலுக்கும், பாரமித்த மன்சூசா முதலிய நூல்களுக்கும் உரை எழுதியவர்.

தின்னாகர் என்னும் திக்கநாகர் ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த பௌத்த அறிஞராவர். 'இடைக்காலப் பௌத்த நியாய தத்துவத்தின் தந்தை' என இவர் குறிப்பிடப்படுவதால் பௌத்த நியாயத்தை உருவாக்கியவர் இவர் என அறியலாம். தின்னாகர் கி.பி. 450 இல் காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள சிம்மா வாக்கத்திரம் என்னும் ஊரில் பிறந்தவர். இந்திய நாடெங்கும் பயணம் சென்று பௌத்த சொற்போர்களில் பங்கு கொண்ட தின்னாகர், நாளந்தாவில் நடந்ததொரு சமயவாதப் போரில் சதுர்ஜெயா என்னும் பிராமணரை வாதிட்டு வென்றார். தின்னாகர் நூற்றுக்கு மேற்பட்ட பௌத்த தருக்க நூல்களை எழுதியவர். இவரது நூல்கள் சீன, திபேத்திய மொழிகளில் மொழிபெயர்த்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

காஞ்சியிலிருந்ததோர் அரச குடும்பத்தில் பிறந்து, தத்துவஞானியாக மாறிய போதி தம்மர், சீனநாடுவரை சென்று சமயப் பணியாற்றிய சிறப்புக்குரியவர். பௌத்தத்தில் தியான முறையைப் புகுத்தியவரும் இவரே. கி.பி. 526 இல் தமது தத்துவ நெறியைப் பரப்ப சீன நாடு சென்ற இவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. சாவ்லின் ஆலயத்தில் அமர்ந்து தமது தியான முறையைக் கற்றுத் தந்தார். அதுவே சியான் பௌத்தம் என வழங்கத் தொடங்கியது. பின்னர் ஜென் பௌத்தமெனவும் மாறியது.

தருமபாலர் என்னும் யோகாசார பௌத்தச் சான்றோரும் காஞ்சிபுரத்தில் வாழ்ந்தவரே. கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த தருமபாலர், திருமண வாழ்வை வெறுத்து பௌத்த சங்கத்தில் சேர்ந்த விவரங்களை யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார். நாளந்தா பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பயின்று, அதன் தலைவராகும் சிறப்பும் பெற்றார். நாடு முழுவதும் பயணம் செய்து,

புதிய தீர்ப்புகள்



விடுதலைப் போராட்ட
வரலாறு படைத்தோம்
ஆங்கில விலங்கை
அஹிம்சையால் உடைத்தோம்!

இன்றைய நிலையோ
மிகப்பரி தாபம்!
காந்தியைக் குண்டினால்
கொன்றதன் சாபம்!

நம்மை நாமே
சுரண்டி விற்கிறோம்
நம்மிடமே நாம்
கையேந்தி நிற்கிறோம்.

பொய்ம்மை ஊழல்
கயமை திருட்டு
வன்முறை கொலைகள்
தினமும் நடக்குது!

'இம்'மென்றால் அடிதடிதான்!
'உம்'மென்றால் உயிர்ப்பலிதான்!
சமயங்கள் கூட இங்கே
சதிகாரர் மயமாச்சு!

சேவை தியாகம்
பொதுநலத் தொண்டு
யாவும் இங்கே
பொய்யாய்ப் போயின!

இனிவரும் வாழ்வே
இப்படித் தொடர்ந்தால்
மனிதத் தீவெல்லாம்
ஒன்றாய்ச் சேருவோம்!

விடுதலைப் போராட்ட
வரலாற்றைத் தொடங்குவோம்!
கொள்ளையனே! வெளியேறு!
கோஷத்தை முழக்குவோம்!

ஆண்டாள் பிரியதர்சினி

பௌத்த தருமத்தை நிலைநாட்டிப் பலரை வாதில் வென்று புகழீட்டினார். சொல்லாற்றலும் ஆழ்ந்தகன்ற அறிவாற்றலும் மிகுந்த தருமபாலர், தமது முப்பத் திரண்டாம் ஆண்டில் மறைந்தார். அவருடைய மாணவர் சிலபதாரர் இவருக்குப் பின் நாளந்தா பல்கலைக்கழகத்தில் தலைவரானபோது யுவான் சுவாங் மாணவராக அமர்ந்து பௌத்தம் பயின்றார்.

தருமகீர்த்தி ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பௌத்த தருக்கவாதப் பெரும் புலவராவார். திருமலையா என்பவரின் மகனாகப் பிறந்த தருமகீர்த்தி, இளமை யில் வேதங்களைப் பயின்று, பின்னர் நாளந்தாவில் பௌத்த தத்துவங்களைக் கற்றார். அங்கு தின்னாகரின் மாணவராக இருந்த ஐஸ்வரசேனர் என்பவரிடம் தருக்கம் கற்று 'நியாய பிந்து' முதலிய ஏழுநூல்களை இயற்றியளித்தார். தம்காலத்தில் வீழ்ச்சியுறத் தொடங்கி யிருந்த பௌத்தத்தை நிலைநிறுத்த நாடெங்கும் சுற்றிச் சமயப் பணி புரிந்தார்.

பிற்காலத்தில் போதிருசி என வழங்கிய தருமருசி தமிழ்நாட்டில் பிறந்தவர். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் சீன நாட்டிற்குச் சென்று யாசகோசர் என்னும் மகா யான தேரரிடம் பௌத்த நெறியைக் கற்றுத் தேர்ந் தார். பௌத்த நூல்களைச் சம்ஸ்கிருத மொழியில் மொழிபெயர்க்கத் தொடங்கினார். இவரது நூல்கள் சீனமொழியில் நூற்றுப் பதினோரு தொகுதிகளாக உள்ளன.

கி.பி. 661-730 ஆகிய ஆண்டுகளில் வாழ்ந்த வஜிர போதி, பாண்டிய நாட்டில் பிறந்து நாளந்தாவில் பயின்று மகாயான பிக்குவாகத் திரும்பி வந்து தொண் டாற்றியதோடு சீனநாட்டிற்குச் சென்று சீனமொழி யில் பௌத்த நூல்கள் பல்வற்றை மொழிபெயர்த்தார்.

போதிசேனர் மதுரையைச் சேர்ந்த துறவியாவார். கி.பி.723 இல் நம் நாட்டிற்கு வந்த தாஜி-ஹி-மரிட்டோ என்னும் ஜப்பானியத் துறவி, போதிசேனரின் பௌத்த நெறிப் புலமையையும் வாதத்திறனையும் கண்டு அவருடன் நட்பு கொண்டார். பின்னர் ஜப்பான் நாட்டு அரசரின் அழைப்பை ஏற்று கி.பி. 736 இல் கடல் வழியாக ஜப்பான் சென்று மகா விரோச்சன புத்தரின் ஆலய நிறுவனப் பணியை முன்னின்று நடத்தி வைத்த சிறப்புக்குரியவர். கி.பி. 760 இல் தமது ஐம்பத் தேழாவது வயதில் ஜப்பான் நாட்டிலேயே மறைந்தார்.

புத்தமித்திரர் தஞ்சை மாவட்டம் அறந்தாங்கி வட்டத்தி லுள்ள பொன்பரப்பி என்னும் கிராமத்தில் பிறந்தவர். கி.பி. 1063-1070 ஆகிய ஆண்டுகளில் சோழ நாட்டை ஆண்டு வந்த வீரராஜேந்திரனின் காலத்தவரான புத்தமித்திரர், புகழ்மிக்க ஆசிரியராகவும், போதகராக வும் பணிபுரிந்தவர். சோழ மன்னனின் வேண்டுகோளுக் கிணங்கி 'வீரசோழியம்' என்னும் இலக்கண நூலை எழுதியளித்தார். வீரசோழியப் பாடல்களின் இறுதி வரிகள் பௌத்த தர்மத்தைக் கொண்டிருப்பதோடு உரை மேற்கோள் பகுதிகளிலும் புத்தரின் அருட் செயல்கள் போற்றப்படும் வகையில் அமைந்துள்ளன.

அனுராததேரர் பாலி மொழி மற்றும் பௌத்தப் பேரறிஞ ராக விளங்கியவர். காஞ்சி மூல சோம விகாரத்தின் தலைவராகவும் இருந்தவர். தம் காலத்தில் திருநெல் வேலி, தஞ்சாவூர் ஆகிய பௌத்த தலங்களுக்குச் சென்று தம்ம விளக்கம் செய்தவர். கி.பி. 1065-1120 ஆகிய ஆண்டுகளில் இலங்கையை ஆண்டுவந்த இரண் டாம் விஜயபாகு காலத்தில் இலங்கைக்குச் சென்று சமயப் பணி புரிந்தவர். 'அபிதம்மத்தசங்கா' என்னும் இவரது நூல் அபிதம்ம தத்துவத்திற்கு முன்னுரையாக அமைந்துள்ளது. இலங்கை, பர்மா முதலிய நாடுகளில் இன்றளவும் இந்த நூல் வழக்கில் உள்ளது.

தீபங்கர புத்தப்பிய தேரர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாலி பெரும் புலவராவார். இலங்கைக்குச் சென்று அங்கு ஆனந்த வனரத்தினா விடம் பாலியும் பௌத்தமும் பயின்று, 'ரூபசித்தி' என்னும் இலக்கண நூலை எழுதியவர். பௌத்த மடத்துக் கல்லூரிகளில் இந்த நூல் பயன்படுகிறது. இந்த நூலின் இறுதியில் தாம் சோழ நாட்டில் பிறந்ததாகவும் குறித் துள்ளார். பின்னர் சோழநாடு திரும்பிப் பாலாத்திய குரு மடத்தின் தலைவரானார்.

கஸப்பதேரர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பாலி மொழியிலும் பௌத்தத்திலும் வல்லவர். இலங்கைக்குச் சென்று பயின்றவர். அபிதம்ம தத்திற்கும், விநயபீடகத்திற்கும் உரை எழுதியவர். தாம் சோழநாட்டைச் சார்ந்த நாகபட்டினத்தைச் சேர்ந்தவர் என்பதையும் நூலில் குறித்துள்ளார்.

இப்பெரியார்களும் அறிஞர்களும் புத்தநெறியைப் பரப்புவதற்காகவும், சமூக மேம்பாட்டிற்காகவும் பல ஆண்டுகள் பெரிதும் உழைத்துள்ளனர். தமது நோக் கத்தில் வெற்றியும் கண்டனர். இவர்களின் உழைப்பு வீணாகிப் போகாமல் இருக்கவும் மீண்டும் பௌத்த நெறி மக்களிடையே பரவவேண்டுமெனவும் சமீப காலத்தில் சிறந்த அறிஞரும் சீர்திருத்தவாதியும், தன்னிக ரில்லாத் தலைவருமாகத் திகழ்ந்த பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்கள், முழு ஆர்வத்தோடு பாடுபட்டார். பௌத்த நெறியைப் பரப்பியதோடு பின்னர் இலட்சக்கணக்கான மக்களுடன் தாமும் பௌத்தராக மாற்றம் பெற்றார்.

பௌத்தத்தில் எல்லாரும் சமம், எல்லார்க்கும் ஒரு நீதி, சாதிகள் முதலியவற்றால் வந்த வேற்றுமைகள் இல்லை என்னும் கொள்கைகள் அவரைக் கவர்ந்தவை என்பதையும் விளக்கியுரைத்துள்ளார். நம் நாட்டின் இன்றைய நிலை யாவருக்கும் அச்சத்தையும், கவலையை யும் அளிப்பதாக உள்ளது. அரசும், சிந்தனையாளர் களும், எழுத்தாளர்களும், ஆன்மிகவாதிகளும், அறிஞர் களும், அரசு சார்பில்லா நிறுவனங்களும் நாட்டில் சமய வேற்றுமைகள், சாதிவெறி, தீண்டாமை, அறியாமை ஆகிய தீய சக்திகளைப் போக்கி, சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் நிலவும் சமுதாயத்தைப் படைப்பதில் முழுக் கவனம் செலுத்த வேண்டியவர் களாக உள்ளனர். இந்தத் தருணத்தில் புத்தருடைய நெறியும், போதனைகளும் பெரிதும் பயனுள்ளதாக இருப்பதைக் கருத்தில் கொண்டு தொண்டாற்றுவது நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் நன்றாகும். நம்நாடு மீண்டும் ஞானம் பொலிந்த நாடாக விளங்கிட யாவரும் பாடுபடுவோமாக! ●

ஊழவர்

பிரபஞ்சன்

கிள்ளிக்குப் பிறந்தநாள் வந்தது. அவன் தந்தை அவனுக்கு, ஒரு மவுத் ஆர்கன் பரிசளித்தார். பற்றிக் கொண்டு எரிவது மாதிரி, பளபளப்பு. அதன் இரண்டு பக்கமும் இருந்த பிளேட், காக்காய்ப்பொன் மாதிரி மின்னியது. கிள்ளி அதைக் கையில் வைத்துக் கொள்ளும்போது, ஒரு புறாக் குஞ்சைக் கையில் வைத்துக் கொள்வது போல அவன் மென்மையாக உணர்ந்தான்.

ஒழுங்கான பல்வரிசை மாதிரி, மவுத் ஆர்கனின் பள்ளம், அழகான அடுக்காகக் காணப்பட்டன. திருப்பிப் பார்த்தான். மீண்டும் மீண்டும், திருப்பித் திருப்பிப் பார்த்தான். என்ன அற்புதம் இது? சும்மா வெறும் காற்றை, வாய் வழியே ஊதினால், கீழே இருந்து பாட்டு வருகிறது; அது எப்படி? எங்கே ஒளிந்திருக்கிறது, பாட்டு?

கிள்ளி, மவுத் ஆர்கனை தன் சட்டைப் பையில் வைத்தான். அவன் சட்டைப் பையை விடவும், நீளமாகத் துருத்திக் கொண்டிருந்தது, அது. குனிந்தால் தாடையிலும் இடித்தது. அவன், கைவிரல் சாணில், இரண்டு சாண் நீளம் இருந்தது, இடிக்காமல் இருக்குமா? கால்சட்டைப் பையில் வைத்துக் கொண்டான். என்றாலும் முயல்குட்டி மாதிரி எட்டிப் பார்த்தது, அது. அப்படித் தெரிந்தது, பெருமையாக இருந்தது, அவனுக்கு.

எதிரில் இருந்தது, தோட்டம். பெரிய தோட்டம். பெரியவர்கள் எல்லாம் கூட, உலாவவும், காற்றுவாங்கவும் அங்கு வருவார்கள். அவன் அங்கு போய், காலியாக இருந்த ஒரு பெஞ்ச்சில் அமர்ந்து கொண்டான். அப்போது, மிகப் பிரபலமாக, எல்லா இடத்திலும் ஒலித்துக் கொண்டிருந்த, இந்திப் பாட்டை மவுத் ஆர்கனில் பாடிவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். அந்த இந்திப்பாட்டு, ஒ.பி. நய்யார் இசை அமைத்த பாடல். அவனுக்கு இந்தி தெரியாதே. என்றாலும் என்ன? இந்திக்குப் பதிலாகத் தமிழ் வார்த்தைகளைப் போட்டு ஏன் பாடக்கூடாது? வார்த்தைகள் கூடத் தேவைப்படாதே. வெறும் லலல என்று கூடப் பாடலாம் தான். வாய்ப்பாட்டா, என்ன? மவுத் ஆர்கன் தானே என்றவாறு, மனசுக்குள் அந்தப் பாட்டை வருவித்துக் கொண் டான்.

பட்டாம்பூச்சி ஒன்று செடிகளைச் சுற்றிக் கொண்டிருந்தது. ஒரு செடியில் அமர்வதும், அப்புறம் மற்ற ஒன்றின் மேல் உட்கார்வதுமாக இருந்தது, அது. சிவப்பு, மஞ்சள், கறுப்பு என்று கண்ணைக் கட்டிப்போடுகிற நிறங்களில் இருந்தது, அது. அதை வேடிக்கை பார்த்துக் கொண்டே இருந்தான். மனசுக்குள் பாட்டைக் கட்டினான்.

'ஆங் தே தே தி, த தா வா... த

நா நா நா, தத நா நா நா...' என்பதாக இருந்தது அது.

இசைக்கு வார்த்தைகளைப் போட்டுப் பார்த்தான்.

'நீ வா வா வா.. வராவிட்டால் லா

நானே தான் வரு வே னே..' என்று சிரமப்பட்டு, வார்த்தைகளைப் போட்டுக் கொண்டு வாசிக்கத் தொடங்கினான்.

பாதையில் போகிறவர்கள், திரும்பிப் பார்த்தார்கள். இரண்டு பேர், அவன் இருந்த பெஞ்ச் பக்கம் வந்து நின்றார்கள். தோட்டத்துச் சருகுகளைச் சேகரித்துக் கொண்டிருந்த தோட்டக்காரர் கூட, அவனை ஆச்சர்யமாகப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, பிறகு வேலையைத் தொடங்கினார். அவனுக்குப் பெருமையாக இருந்தது. அந்தப் பாட்டு வந்துவிட்டதாகவே அவன் நினைத்தான். அந்தப் பாட்டை ஒ.பி. நய்யார் மாதிரியே தான் வாசிக்கிறதாக அவன் நினைத்தான். அந்தப் பெருமித உணர்வுடன் வாசித்து முடித்துவிட்டு, அவன் மவுத் ஆர்கனை வாயிலிருந்து எடுத்தான். இரண்டு பேரில் ஒருவர் கேட்டார்.

''என்ன பாட்டு, தம்பி அது?''

அவன் சொன்னான்.

அவர், 'ஓகோ' என்றார். மற்றவர், ''அந்தப் பாட்டை அப்படியும் வாசிக் கலாம் போல'' என்றார்.

அவன் தந்தை, தெருத் திண் ணையில் அமர்ந்து புகை பிடித்துக் கொண்டிருந்தார். அவருக்கு, இரவு சாப்பிட்டானதும் புகை பிடிக்க வேண்டும். ரம்மியமான புகையால் திண்ணையை மெழுகிக் கொண்டிருந் தார், அவர். அவன் தாயார், வாசலில், பாத்திரங்களைத் துலக்கிக் கொண்டிருந் தாள். தம்பி தூங்கிக் கொண்டிருந்தான்.

தாயின் எதிரில் அமர்ந்து, அவள் வேலை செய்வதைப் பார்த்துக் கொண் டிருந்தான், கிள்ளி. திரும்பிப் பார்த்தாள் அம்மா.

''என்ன பத்து வரைக்கும் முழிச்சுக் கிட்டு, தூங்கப் போகலையா?'' என்று கிள்ளியிடம் கேட்டாள் அம்மா.

''தூக்கம் வரலை.''

அவள் சிரித்தாள்.

''தூக்கம் வரலையா? ஏதாவது புத்தகத்தை எடுத்துப்படி. உடனே தூக்கம் வருமே.''

''போம்மா.''

கிள்ளி எழுந்து, அறைக்குள் சென்று, மவுத் ஆர்கனை எடுத்துக் கொண்டு வந்து, அதே பாட்டை வாசிக்கத் தொடங்கினான்.

''ராத்திரியில ஊதாதடா, கிள்ளி.''

''ஏம்மா?''

''ஊதக்கூடாதுன்னு பெரியவங்க சொல்லுவாங்க..''

''அதுதான் ஏனாம்?''

''பூச்சி பொட்டு வரும்னு சொல்லு வாங்க.''

''பூச்சின்னா?''

''பாம்பு கூட வரும்.''

சட்டென்று வாயில் இருந்த மவுத் ஆர்கனை எடுத்து விட்டான், கிள்ளி.

''பாம்பா?''

அவனுக்குத் 'திக்' கென்றது. தாயாரின் வெகு அருகில் வந்து அமர்ந்து கொண்டான். சுற்று முற்றும் பார்த்துக் கொண்டான். தம் வீட்டுக்குள், பாம்பு வர முடியாது என்று நினைத்துக் கொண் டான்.

''நம்ம வீட்டுக்குள்ளே பாம்பு வருமாம்மா?''

''ஊகூம். வராது. அதெல்லாம் காடு, பூங்கா மாதிரி இருக்கப்பட்ட இடங்கள்லேதான் வரும்.''

சாயங்காலம், தான் தோட்டத்துக்குப் போய் வாசித்தது நினைவுக்கு வந்தது.

''அம்மா! இன்னைக்கு தோட்டத்துக் குள்ளே போய் மவுத் ஆர்கன் வாசிச்சேனே..''

''ஐயையோ.. இனிமே அப்படிச் செய்யாதே.''

'நாம் எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டோம்.' அவன் உறங்கப் போனான். தம்பிக்குப் பக்கத்திலே, அவனுக்குப் பாய் விரிக்கப்பட்டிருந்தது. படுத்துக் கொண்டான்.

கிள்ளி, தோட்டத்துக்குள் நடந்து போய்க் கொண்டிருந்தான். சங்கரைப் பார்க்க வேண்டியிருந்தது. அவனுக்கு. மண்பாதைக்கு இரு புறமும் செடிகளும், மரங்களும் செழித்துக் கிடந்தன. நேரமோ, இருட்டிக் கொண்டிருந்தது. திடுக் திடுக்கென்று அடித்துக் கொண் டது அவன் இருதயம். செடிகளிலோ, புல்லிலோ கொஞ்சம் அசைவு தெரிந் தாலும், அவன் பயந்தான். சுவர்க் கோழிகள் போல, இனம் தெரியாத பூச்சிகள் பேசிக் கொண்டிருந்தன. அவன், பயத்தை விரட்டிக் கொள்ள, பாடத் தொடங்கினான்.

'தேன் உண்ணும் வண்டு

மாமலரைக் கண்டு, திரிந்தலைந்து

பாடுவதேன், ரீங்காரம் கொண்டு...' -

அவன் குரல், அவனுக்கே மோசமாக ஒலித்தது. திடுமென, அவனுக்கு முன் ஒரு பெரிய புற்று தோன்றியது. அது கரும்பச்சை நிறத்தில், விளக்கில் பிடித்த மோதிரக் கல் மாதிரி பளபளப்பாக இருந்தது. நட்சத்திரங்களைப் பக்கத்தில் வைத்துப் பார்ப்பது போல இருந்தது. பச்சைப் புல் எல்லாம் பற்றி எரிவது போல இருந்தது. அவனுக்குக் கண் கூசியது. அவன் பார்த்துக்கொண்டிருக்கும் போதே, புற்றுக்குள்ளே இருந்து அதன் பொந்துகளில் ஒன்றில் இருந்து, கத்தியை உருவி எடுக்கிற வேகத்தில், ஒரு பாம்பு வெளிப்பட்டது. உரித்த வாழைப்பழம் போல், அதன் உடம்பு இருந்தது. தன் பிளந்த நாக்கை நீட்டி நீட்டி, இரு புறமும் பார்த்தது அது. முதுகுத் தண்டு சில்லிட, அடுத்த அடி எடுத்து வைக்கச் சக்தியின்றி அவன் நின்றான்.

அந்தப் பாம்பு, திடுமென, கனிவாக மாறியது. அதன் முகம், சிரித்தது. சிநேகிதன் பார்ப்பது மாதிரி பார்த்தது அது.

''கிள்ளி, எங்கே போகிறாய்?'' என்றது. அந்தப் பாம்பு.

தன் உணர்வு அற்று அவன் பதில் சொன்னான்.

''சங்கர் வீட்டுக்கு.''

''6-வது ஏ சங்கர் வீட்டுக்கா?''

''ம்..''

''மவுத் ஆர்கன் வைத்திருக்கிறாயா?''

''ம்..''

''எடுத்து, அந்தப் பாட்டை வாசி''

''எந்தப் பாட்டை?''

''அதாண்டா. 'நீ வா வா வா' என்கிற பாட்டை''

அவன், மவுத் ஆர்கனை எடுத்து வாசித்தான். என்ன அற்புதம்! மிகப் பிரமாதமாக அவன்அந்தப் பாட்டை வாசித்தான். சுற்றி இருந்த அந்த மரங்கள், செடிகள் ஆகியவற்றின் இலைகள் எல்லாம் பொன் என்றவாறு இருந்தன. புல்லின் நுனிகள் தோறும் ஒரு வைரக் கல்லை ஒட்ட வைத்த மாதிரி, ஒளிர்ந்து கிடந்தது. அது. காக்காய்ப் பொன் துகளை வானம் எங்கும் பறக்கவிட்டது மாதிரி, எங்கு நோக்கிலும் ஜாஜ்வல்யம். வெளிச்சப் பிரவாகம்.

''நன்றாக வாசிக்கிறாய்'' என்று பாராட்டியது அந்தப் பொன் தலைப் பாம்பு.

பிறகு பாம்பு அவனிடம் சொல்லியது.

''சரி, போய்வா. பாட்டை நன்றாகக் கற்றுக் கொள். பாட்டு, எங்கும் பரவிக் கிடக்கிறது.''

திடுமென பாம்பின் வாயில் ஒரு மகுடி வந்திருந்தது. அது வாசித்தது. மிகவும் அழகாக இருந்தது பாட்டு.

''பிரமாதம்'' என்றான், அவன். மீண்டும் மீண்டும் சொன்னான்.

''கிள்ளி, கிள்ளி '' என்று அவனைத் தட்டி எழுப்பினாள் அவன் தாய்.

''என்ன உளறல்? என்ன பிரமாதம், பிரமாதம்னு சொன்னியே, என்ன அது பிரமாதம்?'' என்றாள்.

'ஓ! நாம் இதுவரை கண்டது கனவோ?'

கிள்ளிக்கு அதற்குப் பிறகு உறக்கம் பிடிக்கவில்லை.

மவுத் ஆர்கனை, கிள்ளி எப்போதும், தன்னுடனே வைத்திருந்தான். பள்ளிக் கூடம் போகும்போது அதைப் பைக்குள் வைத்துக் கொண்டு போனான். விளையாட்டு 'பீரியடில்', அதை எடுத்துச் சக பையன்களிடம் காட்டுவான்.

''ஹை.. ஏதுடா..'' என்று கேட்டான் கோவிந்து.

''எங்க மாமா ஒருத்தர் ஜப்பானிலே இருக்கார். அவர் வாங்கி அனுப்பி வைச்சார். என் பிறந்த நாள் பரிசு.''

''ஜப்பான்லேந்தா?'' என்று கோவிந் துவின் கண்கள் விரிந்தன. மகிழ்ச்சியாக இருந்தது, கிள்ளிக்கு.

''கொஞ்சிக் கொஞ்சிப் பேசி மதிமயக்கும்' வாசிக்க முடியுமா, உன்னால?'' என்றான் ஆல்பர்ட்.

''இப்போதான் கத்துக்கிட்டு இருக் கேன்'' என்றான். மேலும், கிள்ளி, சொன்னான்.

''ஜப்பான்லேந்து எங்க மாமா, ஆர்மோனியப் பெட்டி அனுப்பி வைக்கப் போறார்''.

''என்னது, ஜப்பான் ஆர்மோனியமா!''

''ஆங்..''

பையன்கள் முகம், லேசாக இருண்டன. கிள்ளிக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

கிள்ளியின் தம்பி, கண்ணன். அவன் மவுத் ஆர்கனைக் கேட்டான்.

''தரமாட்டேன், போடா. நீ உடைச்சுப் போடுவே.''

அம்மா, பஞ்சாயத்துக்கு வந்தாள்.

''தம்பிக்குக் கொடுடா.. சும்மா ஊதிப் பார்க்கட்டும்.''

''முடியாது. மவுத் ஆர்கன் கெட்டுடும்.''

''கெடாது. கொடு.''

''மாட்டேன்''

கண்ணன் அழத் தொடங்கினான்.

''குழந்தை! உனக்கு புதுசா ஒண்ணு வாங்கித் தர்றேன். அண்ணன் மவுத் ஆர்கனை விடவும் பெரிசா..''

கிள்ளி திடுக்கிட்டான். அம்மா, சொல்வதைச் செய்பவள் என்று அவனுக்குத் தெரியும். தம்பிக்கு, தன் பொருளை விடவும் பெரிசாக ஒரு மவுத் ஆர்கனா? இந்த யோசனையே அவனுக்குப் பிடிக்கவில்லை.

''இந்தாடா'' என்றபடி, மவுத் ஆர்கனைக் கொடுத்தான். சீக்கிரமாகவே வாங்கிக் கொண்டான்.

கிள்ளி, படுக்கப்போகும்போது, படுக்கைக்குப் பக்கத்தில் அதுவும் படுத்திருக்கும். மற்றபடி அவன் பையில் இருக்கும். கையில் முளைத்த ஆறாவது விரல் மாதிரி, அந்த மவுத் ஆர்கன் கிள்ளியுடன் ஒட்டிக் கிடந்தது.

சங்கருடன் கடற்கரைக்குச் சென் றான், கிள்ளி. கடற்கரையில், அலைகள் வந்து காலைச் சுற்ற, கிளுகிளுப்பான ஈரச் சுகத்தை ரசித்தபடி நடந்தார்கள். கிள்ளி, மவுத் ஆர்கனில் எதையோ நினைத்துக் கொண்டு வேறு ஏதோ பாட்டை வாசித்துக் கொண்டிருந்தான்.

''எனக்கு மவுத் ஆர்கனைக் கொடுடா, கிள்ளி. கொஞ்சம் வாசிக்கிறேன்''

கிள்ளி கொடுத்தான்.

சங்கர், ஒரு பாட்டை வாசித்தான்.

''என்ன பாட்டு?''

''கல்யாண சமையல் சாதம்''


''ஓகோ.. சொல்லிட்டு வாசி''

''கிண்டல் செய்யறியா? உனக்கு மட்டும் 'கொஞ்சிக் கொஞ்சி' வாசிக்க வந்துடுச்சா!''

''கட்டாயம், இன்னும் இரண்டு நாளைக்குள்ளே வருதா இல்லையான்னு பார்.''

கிள்ளி, கீழே இருந்த ஒரு சிறு கல்லை எடுத்து எறிந்தான். சங்கர் லாகவமாகக் குனிந்துகொண்டான். சங்கர் ஒரு பெரிய கல்லை எடுத்துக் கொண்டு, ''யோடட்டுமா'' என்றான்.

''போடு''



போட்டான். கிள்ளி சாமர்த்தியமாக விலகிக் கொண்டான்.

அலைகள், கரைக்கு வந்து திரும்புகையில், நண்டுகளைக் கொண்டு வந்து சேர்த்தன. நண்டுகள், ஈரத்தரையில் புரண்டு புரண்டு ஓடுவது அவர்களுக்கு விளையாட்டாயிருந்தது. வளைக்குள் புகும் நண்டுகளை மறித்து, அவற்றைத் தூக்கிக் கடலுக்குள் எறியும் விளையாட்டைத் தொடங்கினார்கள்.

கிள்ளி, நண்டை ஓடிப்பிடித்து மண்ணோடும் சேர்த்துக் கடலுள் எறிந்தான். சங்கரும் அப்படியே செய்தான். நண்டுகள் கிடைக்காத போது, குப்பை, கண்டல் காகிதம், என்று கையில் கிடைத்ததையெல்லாம் எடுத்து எறிந்தார்கள். சங்கர், கிள்ளியிடம் கடைசியாகச் சொன்னான்.

''என் செருப்பைக் கடாசப் போறேன்.''

''செய்வியா?''

''ஏன் செய்யக்கூடாது? செருப்பைத் தொலைச்சுட்டேன்னா, எங்கப்பா புதுசா வாங்கிக் கொடுப்பார்.''

''அப்போ கடாசு''.

சங்கர், தன் செருப்புகளை ஒவ்வொன்றாகக் கடலில் கடாசினான்.

''கிள்ளி! உன் செருப்பையும் விட்டு எறிடா.''

''ஐயோ... என் செருப்பு புதுச்செருப்புப்பா.''

''அப்படின்னா, உன் மவுத் ஆர்கனை எறியப் போறேன்.''

கிள்ளி கோபம் அடைந்தான்.

''எறி பார்ப்போம்''

''எறிந்துடுவேன்''

''எறிடா பார்ப்போம்''.

''சத்தியமா?''

''எறி''

அந்தக் கணம் எப்படி நடந்ததோ? சங்கர், மவுத் ஆர்கனை பலம் கொண்டமட்டும் கடலில் வீசி எறிந்தான்.

கிள்ளியின் தந்தை, இரவு உணவு முடித்து, சுருட்டு புகைத்துக் கொண்டிருந்தார். இது அவருக்கே மிக இனிமையான நேரம். அவர் சிரிப்பதும், பாடங்களை, மார்க்கைப் பற்றிப் பேசாத நேரமும் கூட இதுதான். கிள்ளி, அவருக்கு அருகில் போய் நின்றான்.

''என்னப்பா கிள்ளி?''

பொத்தல் பையில் போட்டுக் கொண்டு போனதால், மவுத் ஆர்கன் தொலைந்து போய்விட்டது என்று சொல்ல விரும்பினான், கிள்ளி. அவர், பேசிய தொனியில் அவனுக்கு ஏனோ அழுகை வந்தது. நடந்ததை முழுதும் சொன்னான். அவர் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்துவிட்டுச் சொன்னார்.

''போவுது போ. இதுக்காகவா அழறே?'' என்றபடி, அவர், அவனைப் பக்கத்தில் இழுத்து இருத்திக் கொண்டார். சொன்னார்:

''உனக்குப் புதுசா ஒன்று வாங்கித் தர்றேன்''

''என்னைக்கு? நாளைக்கே''

''சரி: நாளைக்கே.''

கிள்ளி யோசித்து இருந்துவிட்டுச் சொன்னான்.

''மூணு வேணும்பா''

''மூணு என்னத்துக்கு?''

''ஒன்று தம்பிக்கு. ஒன்று சங்கருக்கு. ஒன்று எனக்கு.''

அப்பா, கிள்ளியை அழுத்தமாக அணைத்துக்கொண்டார்.

கஸ்தூரி திலகம்!

பல்லவி :

வண்டுகள் கானம் பாட - கிளையில்
கிளிகள் ஊஞ்சலாட!
எழுவாய்; ஸ்ரீ ரெங்க நாதா! (வண்டுகள்)


அநுபல்லவி :

ரவி குல நாயகா - இனி
வருமோ; இருவினைகள்?
கதிரும் வந்ததம்மா - கமலப்பூ
சௌந்தர்யா துயில் நீக்கு! (வண்டுகள்)

சரணம்:

சுற்றும் புனுகுத் தைலம் மணக்கும்;
புற்றரவு கொஞ்சும் பூ மஞ்சம்!
கற்றைக் குழல் நாச்சிமார்;
சுற்றிவந்து தொழும் சடகோபர்! (வண்டுகள்)

கஸ்தூரித் திலகப் பெருமை;
கௌஸ்துப மணியின் மகிமை!
இமையாத் தேவரும் மூவரும்;
'விஸ்வரூபம்' காண லாகாதோ!
''ஸ்ரீரெங்கா''! ''ஸ்ரீரெங்கா''! எனக் கூறாரோ! (வண்டுகள்)



போட்டோ : வி. ராஜாராம்

நாவன்னா கந்தசுவாமி

மாலை நேரங்கள் வரும்

மகரிஷி

தன் பணி முடிந்து மருத்துவ மனையை விட்டு வெளியே வந்தாள் நர்ஸ் விஜி.

இரவு மணி எட்டு.

இனிமேல் போய்த்தான் வீட்டில் எல்லாம் செய்தாக வேண்டும். இரண்டு நாள் முன்பே அரிசி தீர்ந்து போகிற மாதிரி இருந்தது. இரண்டு நாளாக வீட்டில் சமைக்காமல் ஓட்டல் டிபன், ரொட்டி, பால் என்று ஓட்டியாகிவிட்டது. காலையில் டியூட்டிக்குப் புறப்படும் போதே பார்த்திருக்கவேண்டும். என்றும் இல்லாமல் இன்று என்னமோ அகோரப் பசி.... அறைக்குப் போய் சமைத்து சாதம் வைத்து குழம்பு ரஸம் ஏதாவது செய்து.....

தனி அறைக்குச் சென்று நர்ஸ் உடையை மாற்றிக் கொள்ளக் கூட நேரமில்லை. ஆனால் இதில் மறறொரு சௌகரியம். இந்த உடைக்கு சேலைக்கு உள்ள பயம் தேவையில்லை. சேலையுடன் வெளியே வந்தால் வேகமாக நடந்து வீடு போய்ச் சேர்ந்தால் போறும் போல மனதில் ஒரு விதப் பரபரப்பு இருக்கும். இந்த நர்ஸ் உடைக்கு அந்த பயம் கொஞ்சம் குறைவு.

அழகை எந்த உடையில் இருந்தாலும் ஊடுருவி ரசிக்கிற "கலா ரசனை" மிகுந்து விட்ட சமூகத்தில் வாழ்கிறோம். எனவே உடம்பை மறைப்பது என்பதும், அழகின் வெளிப்பாடுகளை மறைப்பது என்பதும் இந்தக் காலத்து கண்ணியமான பெண்களுக்குக் கொஞ்சம் பிரச்னை தான்.

விஜிக்கு இந்தப் பிரச்னை அதிகமாகவே உண்டு. காரணம் அவள் அழகு. பகல் ஷிப்ட் முடிந்து வீடு திரும்பும் போது கூடுமான வரையில் நர்ஸ் யூனிபாரத்தில் வரவேமாட்டாள்.

ஆனால் இன்று! பகல் ஷிப்ட் முடிந்து வீடு திரும்புவதால் உடைப் பிரச்னை அவ்வளவாக இல்லை. மனம் முழுதும் இரவு சாப்பாட்டுப் பிரச்னை தான்.

எட்டு மணிக்குமேல் சமைத்து சாப்பிட்டு பாத்திரம் தேய்த்து.....

"ஹலோ.... விஜி......"

விஜியின் காதுக்கு அருகில் குரல் கேட்டபோது திரும்பிப் பார்த்தாள்......

ராம் தனக்கு மிக அருகில் வந்து கொண்டிருந்தான்.

"நீ என்னைத் தாண்டிப் போகும் போதே கூப்பிட்டேன். நான் கூப்பிட்டது உன் காதில் விழலையா? அல்லது விழாத மாதிரி......"

"நோ... நோ.... அப்படிப்பட்ட விஷமத்தனங்கள் எல்லாம் என்னிடம் எப்பொழுதுமே இருந்ததில்லை..... ஏதேனும் ஞாபகத்தில் உங்க அழைப்பு சரியாக எனக்குக் கேட்காமல் போயிருக்கலாம்...."

"அப்படியென்ன ஞாபகம் அழைப்பது கூட காதில் விழாமல்....? ஊரில் உள்ள அம்மா அப்பா.... ஞாபகமா.... தங்கைகள் ஞாபகமா....?"

அவர்கள் பேசிக் கொண்டே மிக நிதானமாக நடந்தார்கள்.

"என்னாலும் அவர்களை மறக்க முடியாது. அவர்களாலும் என்னை மறக்க முடியாது. பரஸ்பரம் அவ்வளவு பாசம்."

"இருக்கட்டுமே.. இல்லாவிட்டால் கூட இருப்பதுபோல நினைப்பதில் கூட ஒரு சுகம்தான்."

"நோ பிலாஸபி... நாம இப்போ சேர்ந்து டிபன் சாப்பிடுகிறோம்... நீ இந்த நேரத்தில் வீட்டிற்குப் போய் டிபன் அல்லது சாப்பாடு ஏதாவது தயார் செய்துதான் சாப்பிடுவாய் என்று எனக்குத் தெரியும்."

அவள் ஏதோ சொல்லவந்தாள்... அவள் பேசவருவதை அவன் தடுத்து விட்டான்.

"நோ... இப்ப நீ என்னோடு டிபன் சாப்பிடவர்றே. அவ்வளவுதான்..."

அவள் மறுப்பேதும் பேசாமல் அந்த மாலை நேர ஹோட்டலுக்குள் நுழைந்து திறந்த வெளி தோட்டப்பகுதியில் உட்கார்ந்தார்கள்.

விஜி வயது இருபத்தைந்தைத் தாண்டி முப்பதை நெருங்கிக் கொண்டிருந்தாள். ராம் வயதில் அவளுக்கு முன்னால் பத்து ஆண்டுகளைத் தாண்டி ஓடிக் கொண்டிருந்தான்.

கார் விபத்தொன்றில் சிக்கி இரண்டாண்டுகளுக்கு முன்பு விஜி வேலை செய்யும் மருத்துவமனையில் சிகிச்சை பெற வந்தான். கிட்டத்தட்ட ஒரு மாதகாலம் அங்கே அவன் தங்க நேரிட்டபோது ஏற்பட்ட தொடர்பு. அதற்குப் பின் வெளியேயும் தொடர்ந்தது.

நோயாளிகளாக அங்கே இருக்கும் வரையில் இம்மாதிரி நெருக்கமான பல சந்திப்புகள் அவளுக்கு ஏற்பட்டதுண்டு. சிகிச்சை பெற்று வெளியேறியவுடன் அவை கிழிபடும் தினசரி காலண்டர் ஏடுபோல மறைந்துவிடும். அவளும் அதற்காக மனவருத்தப்படுவதில்லை நோயாளியின் மனநிலை உணர்ந்து அவள் அவர்களிடம் கனிவாகவும் நேய பூர்வமாகவும் நடந்து கொள்வாள். இது அவளது வெளியுலக நட்பை அதிகமாக்கிக் கொள்ள உதவியுமிருக்கிறது. ராமின் நட்பும் அம்மாதிரி தான் ஆரம்பத்தில் பட்டும் படாமலும் தொடர்ந்தது. பிற்பட்டு அந்த நட்புக்குள் ஓர் உள் அர்த்தம் தானாக வந்து சேர்ந்துவிட்டது.

சற்றே ஒல்லியான உயரமான உருவம். எப்பொழுதும் பேண்ட்டும், உள்ளேவிட்டு அணிந்த முழுக்கைச் சட்டையும்தான் உடை. சில நேரங்களில் பியட் காரில் பார்க்கலாம். சில நாள்கள் டூவீலர். ஏதோ ஆட்டோமொபைல் கம்பெனியில் வேலை செய்வதாக நினைத்தாள். ஆனால் பிறகுதான் தெரிந்தது அந்த ஆட்டோமொபைல் கம்பெனியின் சொந்தக்காரன் அவன்தான் என்று.

மனைவி, குழந்தை, குட்டி, பெற்றோர் என்று அவனாகவே சொல்வான் என்று எதிர்பார்த்தாள். அவன் சொல்லவில்லை.

அவன் தன்னைப் பற்றி ஏதும் சொல்லாதபோது அவளைப்பற்றி சொல்ல விஜியும் விரும்பவில்லை.

இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டும் கொஞ்ச நாளைக்குத்தான் நீடித்தது. ஆனால் இந்த கண்ணாமூச்சி விளையாட்டு முடிவுக்கு வந்து அவனைப் பற்றின தகவல் வரும்போது அவளுக்கு மனசுக்குள் ஒரு சிறு ஏமாற்றம் ஏறி உட்கார்ந்துவிட்டது. அந்த உணர்வே கூட அவளுக்கு வேடிக்கையாக இருந்தது.

அவருக்கு விவாகமாகியிருந்தால் நமக்கென்ன? விவாகரத்தாகியிருந்தால் நமக்கென்ன? இதில் எனக்காக வேண்டியது ஒன்றுமேயில்லை. எனது நிலையில் இதைப்பற்றியெல்லாம் எண்ணிப் பார்க்கிற தகுதி எனக்கென்ன இருக்கிறது? அவர் விவாகரத்தின் மூலம் மனைவியைப் பிரிந்தவர். ஆனால் நான், விபத்தொன்றில் கணவனைப் பறி கொடுத்துவிட்டு.....

ஓட்டலில் உட்கார்ந்தார்கள். அவன்தான் ஏதோ ஆர்டர் கொடுத்தான்.

சமீப காலமாக அவனுடனான நட்பும் தொடர்பும் சற்று இறுக்கமானதுபோலவே தோன்றியது அவளுக்கு. மனசுக்குள் இந்தத் தொடர்பினால் உற்சாகம் கரை புரண்டோடியது என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. இருவர் மனத்திலும் அது ஓர் எல்லை வகுத்துக்கொண்டு அடங்கியே இருந்தது. அதற்கு அவர்களுடைய கடந்த கால வாழ்க்கைச் சம்பவங்களே காரணம்...

மௌனத்தை ராம்தான் கலைத்தான்.

''வாரத்தில் இரண்டு முறை தூரமாக நின்று புன்னகை. எப்போழுதாவது அபூர்வமாக சாலையோர மரநிழலில் இரண்டு நிமிஷப்பேச்சு. அதிசயமாக எப்பொழுதாவது இம்மாதிரி சேர்ந்து டிபன் சாப்பிடும் நிமிஷங்கள்... உனக்கு இதுவே போதும் என்று நினைக்கிறாயா விஜி....?''

''இதுதான் வேண்டும் என்று நினைத்தால்தானே இதுவேபோதும் என்று நினைக்க?''

''அப்படின்னா?''

''இம்மாதிரி சந்திப்பு இதுமாதிரி பப்ளிக்கா உட்கார்ந்து டிபன் சாப்பிடறது, பேசறது, தூரமா நின்னு சிரிக்கறது எதுவுமே கூடாது என்றுதான் நினைக்கிறேன். இது எல்லாத்துக்குமே ஏதேனும் உள்ளர்த்தம் இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை. இவையெல்லாம் வெறும் சம்பவங்கள்தான். இதற்குமேல் இதில் எதுவுமே வேண்டாம். இருக்கக் கூடாது. இதுதான் என் முடிவு...''

அவர்கள் டிபன் சாப்பிட்டுவிட்டு ஓட்டல் காம்பௌண்டை விட்டு வெளியே வந்தார்கள்.

சீக்கிரமாக வீட்டுக்குப் போக வேண்டும் என்ற அவசரம் இப்பொழுது அவளுக்கு இல்லை. நிதானமாகவே போகலாம்....

அவர்கள் பேசிக் கொண்டே இராம கிருஷ்ணா சாலையில் நடந்தார்கள்.

விஜியின் அவுட்ஹவுஸ் டாக்டர் கிருஷ்ணமூர்த்திராவ் பங்களாவுக்குப் பின்புறமிருந்தது.

''இந்த சந்திப்பு, இந்த சிரிப்பு, பேச்சு மறுப்பேதும் கூற முடியாமல் உங்ககூட டிபன் சாப்பிட வருவது எல்லாமே ஒரு மரியாதை நிமித்தமாகவும் பரஸ்பரம் தெரிந்தவர் கொஞ்சம் நெருக்கமாகத் தெரிந்தவர் என்கிற அர்த்தத்திலும் தானேயன்றி இதற்குள் இதுவரை புதிய அர்த்தங்கள் எதற்கும் நான் இடங் கொடுத்துக் கொண்டதில்லை ராம்...''

''அதுதான் ஏன் என்று கேட்கிறேன். நம் இருவருடைய நிலையும் நம் இருவருக்கும் தெரியும். இதில் ஒளிவு மறைவும் ஏதும் இல்லை. நான் சில ஆண்டுகளுக்கு முன்பு மனைவியை சென்னையில் விவாகரத்து செய்தவன். அவள் குணம் எனக்குப் பிடிக்கவில்லை. எனது கட்டுப்பாடுகளை அவள் விரும்பவில்லை. அவள் ஒரு முன்னாள் சினிமா நடிகையின் தங்கை. பெண்களுக்குச் சுதந்த ரம் என்பதை நான் ஏற்பவன்தான். ஏன் – மதிப்பவன் கூட. ஆனால் கணவனை உதாசீனப்படுத்தும் அளவுக்குப் போகும் பெண் சுதந்தரத்தை என்னால் ஏற்கமுடியவில்லை. புகழ் பெற்ற ஒரு நடிகையின் தங்கை என்பதால் அவளுடைய எல்லாச் செய்கைகளையும் நான் ஏற்க வேண்டும், எதிலும் நான் குறுக்கிடக்கூடாது என்று எதிர் பார்த்தாள். இதை என்னால் ஏற்க முடியவில்லை. அவர்கள் குடும்பங்களிலும் சரி. அவர்கள் தொழில் சம்பந்தப்பட்ட விஷயங்களிலும் சரி. விவாகரத்து என்பதுகூட சர்வசாதாரண விஷயம் என்பது பிறகுதான் தெரிந்தது. அவளைநான் விவாகரத்து செய்த பிறகு நான் மனவேதனைப்பட்ட அளவு கூட அவள் படவில்லை என்பதை நான் புரிந்து கொண்டேன். விவாகரத்தான அன்று கூட கோர்ட்டிலிருந்து வெளியேறும்போது வேறு ஓர் ஆடவனுடன்தான் காரில் வந்தாள். அவனுடனேயே ரொம்பவும் அலட்சியமாக அதே காரில் போய்விட்டாள்... இதுதான் உண்மை.... உன்னைப்பற்றி ஓரளவு எனக்குத் தெரியும்... நான் நமது பழைய வாழ்க்கை முறைகளையும், சமூக அமைப்புகளையும் மதிப்பவன். எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டோ தூக்கி எறிந்து விட்டோ ஒரே தாவலாக சூரியனை எட்டிப்பிடித்துவிடவேண்டும் என்று ஆசைப்படுகிறவனல்லன். அப்படித் தாவினால் முகம் கருகி சாம்பலாகி கீழே விழ வேண்டியதுதான். ஆனால் காலத்தின் வேகம் அதன் வேகமான மாறுதல்கள். சம்பிரதாயங்கள் என்பது ஒரு சுமையாக நம்மை அமுத்திக் கொண்டிருக்கும் போதும் நாம் சுலபமான சில விஷயங்களை விட்டுக் கொடுத்து விட்டு மாறுதல்களை அங்கீகரிக்கலாம் என்பதுதான்...''

அவர்கள் பேசிக்கொண்டே இராம கிருஷ்ணா பார்க் வரை வந்தார்கள்... அவள் அங்கே நின்றாள். இரண்டு பங்களாக்களைத் தாண்டினால் அவள் குடியிருக்கும் பங்களாவின் காம்பௌண்ட் வந்துவிடும்....

''யோசித்து பதில் சொல். என் மனத்திலுள்ளதைக் கொட்டிவிட்டேன். இனிமேல் நீ தான் முடிவெடுக்க வேண்டும்.... ''

அவள் மௌனமாகத் தலையை ஆட்டிவிட்டு அவனிடமிருந்து விடை பெற்றாள்.

தான் குடியிருக்கும் இராம கிருஷ்ணாரோடு டாக்டர் கிருஷ்ண மூர்த்திராவ் பங்களாவுக்குப் பின் புறமுள்ள அவுட் ஹவுசுக்குச் செல்லும் புறவழிசந்தில் திரும்பியபோது அங்கே பாதி வெளிச்சமும் பாதி இருளுமாக உள்ள இடத்தில் சங்கீதா நின்று கொண்டிருந்தாள்.

சங்கீதாவுக்கும் கிட்டத்தட்ட அவள் வயதுதான். சற்றே உப்பலான சிவந்த உடம்பு. தலையில் அதிகம் கேசமில்லாததால் கேசத்தைக் குறைத்து ''பாப்'' செய்து கொண்டிருந்தாள். விஜி வேலை செய்யும் மருத்துவமனையில் தான் மருந்துப் பிரிவில் வேலை செய்தாள். ஒரு பட்டதாரி. என்ன காரணத்தாலோ ஒரு நாள் சொல்லாமல் கொள்ளாமல் வேலையைவிட்டு நின்று விட்டாள். அவருடன் அவளைப் பார்த்தேன். அந்த ஆளுடன் ஹோட்டலில் டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். ஏர்க் காட்டில் யாருடனோ போவதை நான் பார்த்தேன் என்று அவளைப்பற்றி அடிக்கடி இப்படி சுவாரஸ்யமான கிசு கிசு வருவதுண்டு. அந்த மருத்துவமனையில் ஏற்பட்ட சாதாரணப் பழக்கம்தான் பின்பு விஜியாக அதை வெட்டிக் கொள்ள வேண்டும் என்று முயன்றால்கூட முடியாமல் அப்படி ஒட்டிக் கொண்டு விட்டாள். அவளைப் பற்றிக் காதில் விழும் செய்திகள், அவளைப் பற்றின குணாதிசயங்கள் எதுவுமே ரசிக்கும்





படியாக இல்லாததால் பெருவாரியான சந்தர்ப்பங்களில் அவளைத் தவிர்த்துக் கொள்ளவே முயற்சி செய்தாள். ஆனால் சங்கீதாவின் நட்பும், தொடர்பும் அவளை நேரங்காலம் தெரியாமல் துரத்தின....

யாரோ இருட்டில் நிற்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டு மேலே போய்விடவே விஜி நினைத்தாள். ஆனால் சங்கீதா அவளை விடவில்லை. வலுக்கட்டாய மாக வழிமறித்துப் பேசினாள்.

''மிஸ்டர் ராமோடு ஜாலியா டிபன் சாப்பிட்டே போல இருக்கு? நடக்கட்டும். ஆனா ஒண்ணு முன் கூட்டியே சொல்லி வைக்கறேன்... அந்த ஆளோட அதிகம் பழக்கம் வச்சுக்காதே. ஏற்கெனவே கல்யாணமாகி இவனோட குணம் பிடிக்காம விவாகரத்து வாங்கிப் போயிட்டா ஒருத்தி. அழகான ஒரு பெண்ணோட சிநேகம் கிடைத்தால் போதும் நான் உன்னை விரும்பறேன். 'நாம கல்யாணம் பண்ணிப்போம்' என்று சொல்வான். அப்படிச் சொன்ன யாரையும் அவன் இதுவரையில் கல்யாணமே செஞ்சுக்கல... இப்ப உன் பின்னால சுத்திக்கிட்டு இருக்கான்... ஜாக்கிரதையாப் பழகம்மா... இதுக்கு முன்னால இரண்டு மூணுதரம் உங்க இரண்டுபேரையும் சேர்த்து வச்சுப் பார்த்தேன். அப்போதும் சொன்னேன், இப்போதும் சொல்றேன். இத சொல்லிட்டுப் போகத்தான் இங்கே நின்னேன். வரட்டுமா?.:...''

படபடவென்று சொல்லிவிட்டு அவள் சீரங்கபாளையம் சாலையில் இருளில் மறைந்தாள். கழுகுக்கு மூக்கில் வியர்க்கும் என்பார்களே அதைப் போலத் தான். ராமுடன் பேசிவிட்டு வரும ஒவ்வொரு தடவையும் இவள் இப்படித் தான் ஏதாவது வந்து சொல்லிவிட்டுப் போவாள். அடுத்த முறை ராமைச் சந்திக்கும்போது சங்கீதாவைச் சந்தித்த விஷயத்தைச் சொன்னாள்.

''சங்கீதா சொல்வதை நம்பாதே. அவள் ஒரு மாதிரியானவள்... அவளிடம் கொஞ்சம் எச்சரிக்கையாகவே இரு...'' என்பான். இந்த ஆறுமாதகாலத்தில் இப்படி நிறையத் தரம் நடந்திருக்கிறது. ராமைச் சந்தித்துவிட்டுத் திரும்பும் போது எங்கிருந்து வருகிறாள் என்று கண்டு பிடிக்கமுடியாதபடி எதிரே வந்து நிற்பாள். 'அவனை நம்பாதே. அவனுடன் பழக்கம் வச்சுக்காதே' என்பாள். பிறகு போய் விடுவாள். இப்பொழுதும் அதே கதைதான்.

இதுவரை அவன் பழக்கத்தில் எவ்வித வரம்பு மீறலும் ஏற்பட்டதில்லை. கண்ணியமான முறையில் தூரத்தைப் பாதுகாத்துக் கொண்டு தான் பழகுகிறார். அவரைப் பற்றியொரு நல்ல முடி வெடுக்கலாம் என்றால், சங்கீதா அடிக்கடி வந்து இப்படி எச்சரிக்கை செய்துவிட்டுப் போகிறாளே! இவள் யார்? இவளுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? நான் யாருடன் எப்படிப் பழகுகிறேன் என்று கவனிப்பதுதான் இவள் வேலையா?''

சங்கீதா சொல்வதிலும் உண்மை யிருக்குமோ! அப்படியென்ன இவரைப் பற்றி நான் எல்லா விஷயங்களையும் தெரிந்து கொண்டுவிட்டேனா? இந்த

நான் யோசித்தவை

எஸ். வசந்த குமார்



போட்டோ : எம். நடராஜ

வாழ்க்கை எளிதில்லை...
கடினமும் இல்லை...

மனிதர்கள் நல்லவர்களல்லர்...;
தீயவர்களும் அல்லர்...;

விலங்குகள் விரோதிகளில்லை...
துணையுமில்லை...

கடவுள் உண்மையில்லை...
பொய்யுமில்லை...

இன்று நிலையானதன்று...
நிலையற்றதுமன்று...

இவையனைத்தும் உண்மைகளன்று!
பொய்யுமன்று!

அறிமுகங்கள், பழக்கங்கள் சங்கீதாவின், எச்சரிக்கை இவையெல்லாம் இருக்கட்டும். என் மனம் இந்த மாறுதலுக்கு எப்படித் தயாரானது என்று புரியவில்லையே! நவீன வாழ்க்கையின் நாகரிகங்களைப் பற்றிப்பலர்பலவிதமாகப் பேசினாலும் கூட, பெருவாரியான குடும்பங்களில் காணப்படும் சனாதனமான சமூகக் கட்டுப்பாடுகள், அதன் ஆழமான பழக்கவழக்கங்களின் அடிச்சுவடுகள் இன்னும் அப்படியேதானே இருக்கின்றன? அடிப்படை சனாதன தர்மங்களை மீறுகிற சம்பவங்கள் கூட இலை மறைவு காய் மறைவாக அங்கொன்றும் இங்கொன்றுமாக நடப்பதாகத் தெரிகிறதே தவிர, மாறுதலை முழுமையாக அங்கீகரித்துக் கொண்டு விட்ட அடையாளங்கள் பளிச்செனக் கண்ணுக்குப் புலப்படவில்லையே!.....

அறைக்கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தாள். விளக்கைப் போட்டுவிட்டு நர்ஸ் உடையைக் களைந்து புடைவைக்குள் புகுந்தாள். இரவு முழுதும் குழப்பமான நினைவுகள் அவளை விட்டு அகலவில்லை.

ராமைச் சந்தித்து இருபது நாள்களுக்குமேல் ஆகிவிட்டன.

சொந்த விருப்பங்கள் என்பவை சமூக, பொருளாதார, என் சனாதன மரபுகளுக்கும் கூட அப்பாற்பட்டவை.

விருப்பங்கள் என்பவை எப்பொழுதும் தன்னிச்சையாக இயங்கக் கூடியது. பிறகட்டுப்பாடுகள் என்பது இதற்கு அநுசரணையாக இருக்காது... எனவே அடுத்த முறை ராமைச் சந்தித்தால் அவர் விருப்பத்திற்கு சம்மதம் தந்துவிட வேண்டியதுதான். மனத்தை ஆற்றில் ஒருகாலும், சேற்றிலொருகாலுமாக வைத்துக் கொண்டு அவதிப்படக்கூடாது. அவரை மணந்து கொள்ளும் விருப்பத்தை அவரிடம் சொல்லி விட வேண்டும்... இனி தாமதிக்கக்கூடாது.

படுக்கையில் படுத்திருந்த ஒரு நோயாளியின் "கேஸ் ஷீட்டை"ப் பார்த்துவிட்டுத் திரும்பினாள் விஜி.

அழகான உயரமான ஒரு பெண் அருகில் ஒட்டி உரசினாற் போல் இருக்க ராம் கையில் ஒரு கல்யாணப் பத்திரிகையுடன் விஜியைப் பார்த்துச் சிரித்தபடி நின்றான்..

"வருகிற பத்தாம் தேதி எங்க கல்யாணம் டி.ஆர்.எஸ். கல்யாண மண்டபத்திலே நடக்கிறது. அவசியம் வரணும்...."

கல்யாணப் பத்திரிகை கைமாறியது. ராம் விஜியை ஊடுருவிப் பார்த்தான்.

அந்த முகத்தில் ஏமாற்றத்தின் சாயல் ஒரு துளிகூட இல்லை!

கூட வந்தவள் சற்று விலகி நோயாளிகளின் பக்கம் கவனம் செலுத்திக் கொண்டிருந்தாள்.

ராம் விஜியிடம் பேசினான்.

"என்னை நீ திருமணம் செய்து கொண்டுவிடுவாயோ என்ற பொறாமையில் என்னைப் பற்றி சங்கீதா உன்னிடம் கூறியவற்றை வைத்துக் கொண்டு நீ குழம்பிப்போய்விட்டாய். தன்னைத் திருமணம் செய்து கொள்ளும் படி ஒரு வருஷமாக அவள் என்னைத் தொந்தரவு செய்து கொண்டிருக்கிறாள் என்கிற விஷயம் உனக்குத் தெரிய நியாயமில்லை. ஆனால் அதுதான் உண்மை. நாம் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்திலாவது மனம் விட்டுப் பேசியிருந்தால் இந்த உண்மைகளை நான் உன்னிடம் கூறியிருப்பேன். ஆனால் அதற்கு நீ எனக்கு சந்தர்ப்பமே தரவில்லை. சங்கீதாவின் பொய்களுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை என் விருப்பங்களுக்கு நீ கொடுத்திருக்கலாம்... பரவாயில்லை. இப்பொழுதும் உன் மேல் எனக்குக் கோபமில்லை..... எப்பொழுதும் போல நாம் நல்ல நண்பர்களாக இருப்போம்."

தூரமாக நின்ற தன் வருங்கால மனைவியின் தோளைத் தொட்டுத் திருப்பி, அவளுடன் மருத்துமனையை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தான் ராம்.

இத்தனை நேரம் இத்தனை நாள் இல்லாத ஓர் ஏமாற்ற உணர்வு திடீரென்று பாரமாக அவள் நெஞ்சில் சுமையாக ஏறி உட்கார்ந்தது.

என் விருப்பத்தை இன்னும் கொஞ்சம் முன்கூட்டியே சொல்லியிருக்கலாமோ!

விஜியின் கண்களில் லேசாக நீர்கட்டின.

நிறைய இனி மாலை நேரங்கள் வரும்... ஆனால்.... ராம்.....?

●

தன் முனைப்பு

ஜோதிர்லதா கிரிஜா

கருணாவுக்கு அவஸ்தையாக இருந்தது. சின்ன வயதிலிருந்து பெரியவர்கள் பேசிக் கொண்டிருந்த உறவு இன்றைய பொருளாதார நிலையால் பாதிப்பு அடைந்து கொண்டிருந்தது. இந்தப் பெரியவர்களுக்கு வேறு வேலை இல்லை என்று தோன்றியது. ஐந்தாறு வயதுச் சிறுவன் உறவினனாக இருக்கிற வீட்டில் ஒரு பெண் குழந்தை பிறந்து விடக் கூடாதே! அப்படிப் பிறந்து விட்டால் தொலைந்தது. 'உனக்குப் பொண்டாட்டி பிறந்திருக்காடா' என்ற அறிவிப்புடன் தான் அந்தப் புதிய பெண்ணினத்து உயிரை அந்தக் குடும்பத்தில் எதிர் கொள்ளுவார்கள்.

இப்படிச் சொல்லி சொல்லித்தான் அவளுக்கு ஆறு, ஏழு வயதாகிக் கொண்டிருந்த நாளிலிருந்து அவள் அத்தான் பாஸ்கரன் மீது அவளுக்கு ஒரு வெட்கம் கலந்த அன்பு ஏற்படும்படி இந்தப் பெரியவர்கள் எல்லாருமாய்ச் சேர்ந்துகொண்டு பண்ணிவிட்டார்கள். காதல், கல்யாணம் ஆகியவற்றின் அர்த்தங்கள் புரிவதற்கு முன்னாலேயே இதனால்தான் தன் வருங்காலக் கணவன் பாஸ்கரனே என்ற நினைப்புடனேயே அவள் வாழத் தொடங்க வேண்டியதாயிற்று. கொஞ்சம் பெரியவளாக ஆக, மண வாழ்க்கையின் அர்த்தங்கள் புரியப்புரிய, அத்தான் பாஸ்கரனின் மீது அவளுக்கிருந்த அரைகுறை உறவு அதன் பரிமாணங்களை நோக்கி விரியலாயிற்று.

இவையெல்லாம் உண்மையே யானாலும் கூட, அத்தான் இல்லை என்ற நிலை ஏற்பட்டால் பயங்கரமான காதல் தோல்வி தன்னைத் தாக்கி வீழ்த்திவிடும் என்ற அச்சமோ, தனது வருங்காலமே இருண்டுவிட்டது போன்ற வெறுமை தன்னைப் பிடித்துவிடும் என்ற கவலையோ அவளுக்கு அறவே இல்லை.

ஏனெனில் பாஸ்கரன் மீது அவளுக்கு இருந்த பற்றுதல் பெரியவர்களின் கேலிப் பேச்சுகளால் அவள் மீது திணிக்கப் பட்ட உணர்வுகளின் எதிரொலியே யாகும்.

'ஒரு வேளை அத்தானின் மீது எனக்கு உள்ள - அல்லது இருப்பதாக நான் நினைக்கும் - பற்றுதலை விட்டு விடவேண்டிய நிர்ப்பந்தம் விளைந்து விட்டிருப்பதால் என் மனம் தனது புதிய நிலையை நியாயப்படுத்தும் பொருட்டு இப்படியெல்லாம் எதிர்மறையாகச் சிந்திக்கிறதோ' என்ற கேள்வியையும் அவள் தனக்குள் கேட்டுப் பார்த்துக் கொண்டாகிவிட்டது.

அவளுக்குக் கிடைத்த பதில் - பாஸ்கரனின் மீது உனக்குப் பெரிதாய்க் காதல் ஊதல் எதுவும் இல்லை. சின்ன வயதிலிருந்து வீட்டுப் பெரியவர்கள் அத்தானுடனான உனது திருமணம் பற்றி அடிக்கடி உனக்கு முன் பேசிப் பேசி உன் மனத்தில் அவன்பால் ஒரு கவர்ச்சியை உண்டாக்கி வைத்து விட்டார்கள் என்பது உண்மையே யானாலும், அது இயல்பாக உன்னிடம் ஏற்பட்ட மனநிலை யன்று. காளைக்காதல் கூடத் தானாக வருவது.

ஒரு பெண்ணுக்குப் பருவம் வந்ததன் பிறகு இனக்கவர்ச்சியின் விளைவாக ஓர் ஆணின் மீது தானாக வருவது. அப்படிப் பட்ட கவர்ச்சி கூட அசட்டுத்தனமானது என்று சொல்லப்படுகிறது. அது காதல் இல்லை, வெறும் கவர்ச்சி மயக்கமே என்று விமர்சிக்கப்படுகிறது. அப்படி இருக்க, சின்னஞ்சிறு வயதிலிருந்து பேசப்பட்டது என்று ஒன்றின் விளைவாக மட்டுமே அவள் மனத்தில் பாஸ்கரன் பால் தோன்றிய கவர்ச்சியைக் காதல் என்று எப்படி அழைக்க முடியும்?

மிக ஆழ்ந்த சுய விமர்சனத்துக்குப் பிறகு அவள் மனம் அவளுக்குத் தெளிவாயிற்று. பாஸ்கரனை இழக்கப் போவது தன்னைப் பெரிய அளவில் உடைந்துபோகச் செய்யப்போவதில்லை என்பதில் அவளுக்கு ஐயமே எழ வில்லை. அவனுக்கு எப்படியோ அதைப் பற்றி அவளுக்குத் தெரியாது. கடந்த ஓராண்டுக்காலமாக இருவரும் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தாலும் அவை காதலர் எண்ணப்பரிமாற்றங்களாய் இருந்ததே இல்லை. இருந்தாலும், மன உளைச்சல் இருக்கத்தான் செய்யும்...

''என்னடி, யோசனை கருணா? காப்பி சாப்பிட அம்மா கூப்பிடறாங்க பாரு.'' என்று தங்கை தன் தோளில் தட்டியதும் தான் அவளது சிந்தனை நின்றது.

அவள் எழுந்தாள்...

''.... என்னடி, கருணா. உன் சேலை துணிமணிகளையெல்லாம் பெட்டியில அடுக்கி வெச்சிண்டாச்சா?''

''ஆச்சும்மா.''

''என்னமோடியம்மா. எனக்குப் பயமா இருக்கு. உங்க அத்தையை ஒரு வார்த்தை கேக்காம நீ இப்படி வேலைக்கு அப்ளிகேஷன் போட்டதும், திடுதிப்னு மதுரையில வேலை கிடைச்சிருக்குன்னு சொல்றதும், ஏதோ சொப்பனத்தில நடக்கிற மாதிரி இருக்கு. உங்கப்பாவா யாருக்கு வந்த விருந்தோன்னு நான் சொல்றதையெல்லாம் காதிலயே வாங்காம இருக்கார். கமலிக்குக் கல்யாணம் ஆனதும் உன் விஷயமா உங்க அத்தையை மரியாதைக்குக் கல்யாண விஷயமாப் போய்ப் பார்த்துப் பேசணும்னு இருக்கோம். நீ என்னடான்னா வேலைக்குப் போறேன்னு கிளம்பி இருக்கே. படிக்க வெச்சாலே பொண்ணுகளுக்கு அதிகப் பிரசங்கித் தனம் வந்துடறது. யாரையானும் ஒரு வார்த்தை கேட்டுட்டுச் செய்யணும்னு தோணித்தோ உனக்கு? எங்களுக்குத் தெரியாம வேலைக்கு அப்ளிகேஷன் போட்டுட்டா கருணான்னு நாளைக்கு நாங்க சொன்னா உங்க அத்தை நம்புவாளோ?''

கமலி என்பது பாஸ்கரனின் கடைசித் தங்கை. அவள் திருமணத்தை முடித்த பிறகுதான் அவனுடையது பற்றி அவர்கள் வீட்டில் யோசிப்பார்கள் என்ற நிலை இருந்தது. செவ்வாய்க் குற்றத்தின் விளைவாக அவளது திருமணம் தள்ளிப் போய்க் கொண்டே இருந்தது.

'வருஷக்கணக்காத் . தள்ளிப் போயிண்டே இருக்கட்டும்' என்று கருணா நினைத்துச் சிரித்துக் கொண்டாள்.

''அம்மா, இத பாரு. இப்ப நம்ம குடும்பம் தாங்க முடியாத கஷ்டத்துல இருக்கு. நிறைய நஷ்டம் ஏற்பட்டு நம்ம ஒட்டலை மூடும்படி ஆயிடுத்து.

அப்பாவுக்குப் படிப்பு இல்லாத தனாலதான் ஒட்டல் வெச்சு நடத்தினார். ஊர்ல புதுசா பெரிய ஒட்டல் வந்ததும் நம்ம தொழில் படுத்துடுத்து. அதுக்குன்னு எல்லாரும் வயித்தில ஈரத்துணியைப் போட்டுண்டு வாழ்ந்துட முடியுமா? அப்பாவுக்கு உதவியா வேலை பார்த்துச் சம்பாதிக்கனும்னு தோணித்து. மனுப்போட்டேன். என்னோட அதிருஷ்டம் கிடைச்சுடுத்து. மதுரையில என் ஃப்ரண்ட் அனு. நான் ஒரு ஹாஸ்டல்ல தங்கறதுக்கு ஏற்பாடு பண்றேன்னிருக்கா. அது வரைக்கும் அவ வீட்டில பத்திரமா இருந்துப்பேன். நீ கவலையே படாதே. நான் வேலைக்குப் போறதுக்கு அத்தைகிட்ட எதுக்கு பெர்மிஷன் வாங்கனும்? நாம என்ன எழுதியா கொடுத்திருக்கோம்?"

"அப்படி இல்லேடி. ஏற்கெனவே நாம நொடிச்சுப் போயிட்ட குடும்பம். உன் கல்யாணத்துக்குன்னு சேர்த்து வெச்சி ருந்த பணமெல்லாம் அப்பா ஒட்டலை மூடிட்ட இந்த நாலு வருஷத்துல கரைஞ்சு போயிடுத்து. ஆச்சு. என்னோட நகைகளும் ஒன்னு ஒண்ணா மார்வாடி கடைக்குப் போயிண்டிருக்கு. உங்க அத்தை ஒரு மாதிரி. நாம ஏழைகளா யிட்டோம்கிறதுக்காக வேண்டாம்னு சொல்லிடுவாளோன்னு இராத்தூக்க மில்லாம நான் தவியாத் தவிச் சிண்டிருக்கேன். நீ என்னடான்னா வேலைக்குக் கிளம்பிட்டே. கல்யாணம் நிச்சயம் பண்ணினதும் வேலையை விட்டுட்டு வந்துடனும். என்ன?"

கருணா பதில் சொல்லவில்லை. தங்கை சோபிதா பக்கத்து டவுனுக்குப் போய்ப் படித்துக் கொண்டிருந்தாள். எட்டாவதில் இருந்தாள். தம்பி மகாதேவன் ஆறாவதில் இருந்தான். அப்பாவின் வருவாய் அறவே நின்று போன நிலையில் அவள் வேலைக்குப் போனாலன்றி அந்தக் குடும்பம் இனி தலை தூக்காது. அம்மா புரியாமல் கல்யாணம் கல்யாணம் என்று அடித்துக் கொள்ளுகிறாளே என்று அவளுள் சினம் பெருகியது. கல்யாணம் என்ற ஒன்றை வெறும் தாலியோடும் கட்டிய சேலை யோடும் மாத்திரமே நடத்த அத்தை ஒப்புக் கொள்ளக்கூடியவளாக இருந் தாலும், அம்மாவின் குதிப்புக்கு அர்த்தம் இருந்ததாக நினைக்கலாம்...

சுமார் நிலைக்கும் கீழே தள்ளப் பட்டுவிட்ட பொருளாதார நிலையில் உள்ள குடும்பத்துப் பெண்ணை அத்தை ஏற்கவே போவதில்லை என்பது அவள் காட்டில் பெய்த மழையாக இருக்கப் போகிறது என்று அவள் கணக்குப் போட்டிருக்க, இந்த அம்மா என்னடா வென்றால், கல்யாணத்தைப் பற்றி அர்த்தமற்றுக் கவலைப்படுகிறாளே...... அத்தையைப் பற்றி அம்மா தெரிந்து வைத்திருந்ததாலேயே இராத்தூக்க மில்லாமல் இருக்கிறாள் என்பது உண்மை யானாலும் கூட, அடிமனத்தில் கொஞ்சம் நைப்பாசை இருப்பதால் தானே தன்னை வேலைக்குப் போகவேண்டாமென் கிறாள் என்ற கேள்வி அவளுள் எழுந்தது.

தனது முடிவைப் பற்றி தற்போதைக்கு யாரிடமும் எதுவும் சொல்லக்கூடாது என்று அவள் நினைத்தாள்....

தந்தையை நினைத்தபோது அவளுக்குப் பாவமாக இருந்தது. நிறையக் கடன் பட்டிருப்பதை அம்மாவுக்குத் தெரியாமல் ஓர் இணக்க மான மனநிலையில் அவர் அவளிடம் சொன்ன அந்தக் கணத்தில்தான், வேலைக்குப் போய்ச் சம்பாதித்து அப்பாவின் சுமையை முடிந்த அளவுக்குக் குறைப்பது என்ற முடிவுக்கு அவள் வந்தாள்.

'நான் வேலைக்கு அப்ளிகேஷன் போட்டுடறேம்ப்பா. நீங்க என்னைப் படிக்க வெச்சது வீணாகாம இருக்கும். அம்மாகிட்ட இப்ப எதுவும் சொல்ல வேண்டாம் ' என்று அவள் சொன்ன போது அப்பா மளமளவென்று அழுதது இப்போது அவளுக்கு ஞாபகம் வந்தது. தான் படிக்காவிட்டாலும், பெண் குழந்தைகள்தானே என்று உதாசீனம் செய்யாமல் தன்னைப் படிக்க வைத்து விட்டு, தங்கை சோபிதாவை அந்த ஏழைமையிலும் படிக்க வைத்துக் கொண்டிருக்கும் அப்பாவின் மீது அவளுக்கு அந்த நேரத்தில் பொங்கிய அன்புக்கு எல்லையே இராது போயிற்று.

...மதுரையில் வேலையில் சேர்ந்த மறுநாளே அவள் பாஸ்கரனுக்குத் தன் முடிவைத் தெரிவித்தாள். திருமணம் செய்து கொள்ளும் நிலையில் தான் இல்லை என்பதால், அவன் வேறு யாரையேனும் மணந்து கொள்ள வேண்டும் என்று திட்டவட்டமாய் அவனுக்கு எழுதினாள். மறு அஞ்சலில் அவனிடமிருந்து ஓர் ஒப்பாரிக்கடிதம் அவளுக்கு வந்தது. தன்னால் அவளைத் தவிர வேறு யாரையும் மனத்தாலும் நினைத்துப் பார்க்க முடியாது என்று ஒரு பாட்டம் அழுது தீர்த்திருந்தான். தன்னை உதற அவளுக்கு எப்படி மனம் வந்தது என்று சாடி இருந்தான். 'அப்படியானால் திருமணத்துக்குப் பிறகு வேலையில் தொடர்ந்து இருக்கவும், சம்பளத்தை அப்பாவுக்கு அனுப்பவும் அவன் சம்மதிக்க வேண்டும்' என்ற நிபந்தனையை அவள் அவனுக்கு எழுதினாள். இதற்கு உடனே பதில் வரவில்லை. சற்றுத் தாமதமாக வந்தது. ஆனால், சம்மதம் என்று தெரிவித்தான். சம்மதிக்கமாட்டான், திருமணத்தி லிருந்து தப்பிவிடலாம் என்று நினைத் திருந்த கருணாவுக்கு இது அதிர்ச்சியைக் கொடுத்தது. தம்பி படித்து முடிக்கிற வரையில் தான் வேலையில் இருக்க வேண்டியது இன்றியமையாதது என்று அவள் நினைத்ததால், அத்தை குறுக்கே நின்று பாஸ்கரனைத் தடுத்தாலும் பரவாயில்லையே என்று தோன்றியது. அத்தையிடம் விஷயத்தைச் சொல்லி விடுமாறு அவள் தனது அடுத்த கடிதத்தில் எழுதினாள். 'தக்க நேரத்தில்' சொல்லுவதாக அவன் பதில் எழுதினான்.

தங்களது இந்தக் கடிதப் பரிமாற் றத்தைப் பற்றி அவள் தன் பெற் றோருக்குத் தெரிவிக்காதிருந்தாள். நிபந்தனை விதிக்கும் பெண்ணை அவர்கள் ஏற்காவிட்டால் என்ன செய்வது என்று அம்மா பயப்படுவாள் என்று அவளுக்குத்தான் தெரியுமே.

நாள்கள் ஓட்டமாய் ஓடின. ஆறு மாதங்களுக்கு ஒருமுறை என்று கருணா விடுப்பில் ஊருக்குப் போய்வந்தாள்...

இதற்கிடையில் அவள் தந்தை சங்கரலிங்கம் நோய்வாய்ப்பட்டார். அவள் சம்பாத்தியத்தின் கணிசமான பகுதி மருந்துக்கும் மாயத்துக்கும் சரியாய்ப் போய்க்கொண்டிருந்தது. அந்தக் குடும்பம் சத்தற்ற உணவைச் சாப்பிட்டு உயிர் வாழ்ந்து கொண்டிருந்தது...

'அத்தை பாஸ்கரனுக்கு வேறு இடம் பார்ப்பதாய்க் கேள்விப் பட்டேன். நீ வேலையை விட்டு விட்டு வந்துவிடு' என்று அம்மா கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள். அவளுக்கு எரிச்சல் எரிச்சலாய் வந்தது. 'வெறுங்கையை வைத்து முழம் போட அம்மாவால் முடியுமா? யோசிக்காமல் கைக்கு வந்ததை எழுதுகிறாளே' என்றுதான்.


நாள்கள் செல்லச் செல்ல, பாஸ்கரனுடனான பந்தத்திலிருந்து தப்பி ஒரு மூத்த மகனுக்குரிய கடமையை அப்பாவுக்குச் செய்தலே நியாயமாகும் என்பதில் அவளது பிடிவாதம் வளர்ந்து கொண்டே போயிற்று. நிறைய யோசித்ததற்குப் பிறகு அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது...

.....

மதுரை,
12.12.1987.

அன்புள்ள அத்தான் அவர்களுக்கு,

வணக்கம். நலம். நீங்களும் நலமென்று நம்புகிறேன். பம்பாய்க்கு



மாற்றம் கேட்டு நான் கொடுத்த மனுவுக்கு ஆதரவான நிலை இன்னும் ஆறு ஆண்டுகளுக்கு ஏற்படாதாம். ஏற்கெனவே நிறையப் பேருடைய மனுக்கள் பரிசீலனையில் உள்ளனவாம். ஆனால், பம்பாயில் நீங்கள் பணிபுரியும் அலுவலகத்தின் மதுரைக் கிளையில் உள்ள ஒருவர் பம்பாய்க்கு டிரான்ஸ்பர் பெற அலையாய் அலைந்து கொண்டிருக்கிறார். அவரது இடத்துக்கு நீங்கள் வரலாமே? நீங்கள் இருவரும் பரஸ்பரம் இடம் மாறிக் கொண்டால், நாம் இருவரும் மதுரையில் இருக்கமுடியும். எனக்கு பம்பாய்க்கு டிரான்ஸ்பர் கிடைக்க வாய்ப்பில்லாத நிலையில், நீங்கள் மதுரைக்கு டிரான்ஸ்பர் கேட்டுக் கொண்டு வந்தாலன்றி நம் பிரச்னை தீர வழி இல்லை. உடனே மனுச் செய்யவும். தவறாக எண்ண வேண்டாம். அன்புள்ள

கருணா.

தனது அந்தக் கடிதம் பாஸ்கரனின் புருவங்களை உயர்த்தி அவள்பால் அவனை ஆத்திரமுறச் செய்யும் என்பதில் அவளுக்கு ஐயமே இல்லை.

... அவள் எதிர்பார்த்ததே நடந்தது...

பம்பாய்
17.12.87

கருணாவுக்கு, (அன்புள்ள, டார்லிங் போன்றவை காணமற்போயிருந்தன.)

உன் கடிதம், ஆரம்பத்திலிருந்தே நான் ஒன்றைக் கவனித்து வந்துள்ளேன். அதை மனம் விட்டும் இன்று உன்னிடம் சொல்லும் நேரம் வந்துவிட்டது. திருமணத்துக்குப் பிறகு வேலைக்குப் போக வேண்டுமென்றாய். அதுதான் தொலைகிறது என்றால் முழுச் சம்பளத்தையும் உன் தந்தையிடம் கொடுப்பேன் என்றாய்.

எப்படியும் உன் அத்தை இதற்கு இணங்கவே மாட்டாள். நீ என்னடா என்றால், என்னை மதுரைக்கு வரச் சொல்லுகிறாய். கணவனின் இடத்துக்கு மனைவிதான் டிரான்ஸ்பர் வாங்கிக் கொண்டு வரவேண்டுமேயல்லாது மனைவியின் இடத்துக்கு கணவன் வரமுடியாது. படித்த பெண்ணுக்குரிய ஈகோ உன்னிடம் நிறைய இருக்கிறது. இது எனக்குப் பிடிக்காத விஷயம். நான் இந்த உறவுக்கு இத்துடன் ஒரு முற்றுப்புள்ளி வைக்கிறேன். இப்படிக்கு,

பாஸ்கரன்.

'அம்மாடி. காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் விட்டது' என்று கருணா தன் திட்டம் பலித்தது குறித்துத் தனக்குள் அகமகிழ்ந்து போனாள். தன் மீதுள்ள வெறுப்பு வெறுந்தற்காலிகமான ஒன்றாக இருந்து தன் முடிவை இவன் மறு பரிசீலனை செய்துவிட்டால் என்ன செய்வது என்ற பயமும் அதைத் தொடர்ந்து ஏற்பட, அவள் உடனே தன் இறுதிக் கடிதத்தை எழுத உட்கார்ந்தாள்.

மதுரை,
20.12.87

திரு. பாஸ்கரன் அவர்களுக்கு,

உங்கள் கடிதம், எனது நிலை பற்றி ஆரம்பத்திலிருந்தே தெளிவாய்ச் சொல்லி உங்களிடமிருந்து விலக நான் நினைத்ததை வெளிப்படையாய்த் தெரிவித்த பிறகும் நீங்கள்தான், ''நீ இல்லாவிட்டால் எனக்கு மணவாழ்க்கையே இல்லையாக்கும், அப்படியாக்கும், இப்படியாக்கும் 'என்றெல்லாம் எழுதினீர்கள். நீங்கள் சொல்வது உண்மை என்று நான் நினைத்த தவற்றின் விளைவாகவே நமது கடிதங்கள் தொடர்ந்தன. இந்தத் தவற்றைச் செய்ததற்கு மிக மிக வருந்துகிறேன். உங்களிடமிருந்து விலகியதில் உங்களைவிட எனக்கே அதிக மகிழ்ச்சி என்பதையறியவும்.

இப்படிக்கு,
கருணா.

'குடும்பத்துக்கு கடமைகளை ஆற்ற ஒரு நாடகம் ஆடியாகிவிட்டது. இனி அம்மாவைச் சமாளித்தாக வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்?' என்று கருணா யோசிக்கத் தொடங்கினாள்.........

இதுதான் கவிதை!

நாதக் கனலெரியும்
நெஞ்சக் கருவறையில்
சீதப் புனலாய்ச்
செழிக்கின்ற தேனருவி!

கவலையெனும் கோடைக்
கருவெயில் வெந்து
தவிக்கு மனக்கொடியின்
தாகம் அகற்றும் மழை!


நெஞ்சகத்துப் பாழ்வெளியில்
நின்றாட்டம் போடுகின்ற
வஞ்சகப் பேய் ஆவியினை
வாங்கும் அறத்தின்வாள்!

சத்தியத்தின் காட்சிதனைச்
சத்தான சொற்குழம்பால்
உத்தமர்கள் தீட்டும்
உரையாடும் ஓவியங்கள்!

முத்துநிலாத் தண்ணொளியின்
மோனக் 'கிறுகிறு'ப்பில்
பித்துப் பிடித்தமனப்
பேதைப் பிதற்றல்கள்!

பொன்மனத்தின் வாசலிலே
போட்ட எழிற்கோலம்!
என்றுமுள்ள உண்மைக்கே
இட்ட தனிப்பாலம்!

தங்கவயல் லோகிதாசனார்



பாரங்கள்

வாளேந்திப் போரிட்ட காலந் தன்னில்
வாழ்ந்தவர்கள் வீரத்தில் வஞ்சம் இல்லை
தோளேந்தும் வலிமையினால் நேரில் நின்று
துணிந்தன்று கண்டிட்டார் வெற்றி தோல்வி!
தாளேந்தும் புகழுக்காய் ஆசை கொண்டு
தாள் பணிந்து தன்மானம் விற்றார் அல்லர்!
நாளேந்தும் வெளிச்சத்தில் நெஞ்சி ருட்டை
நயமாக மறைக்கின்றார் வஞ்சம் கற்றார்!

உடலுழைப்பே அறிவியலால் குறைந்த தாலே
உடற்பயிற்சி தனியாகச் செய்யும் வேலை!
திடமுடலில் இருந்தாலும் திறமை காட்ட
தெளிவுமனம் இல்லாத வறியர் ஆகிக்
கிடந்தழியும் காலத்தைத் திரும்பத் தேடின்
கிடைக்காதே எனத்தெரிந்தும்தினமும் ஏக்கம்!
தடந்தோளில் சுமையில்லை,யெனினும் நெஞ்சில்
தாங்கவொணாப் பாரங்கள் பாசம்சேர்ந்தே!

பூவை அமுதன்

ஆன்மிகம்

ஆன்மாவின் தெளிவே"ஆன் மிக" மாகும்
அன்பென்னும் சங்கிலியே உலக மக்கள்
மேன்மையுறப் பிணைக்கின்ற கருவி யாகும்
மேன்மக்கள் என்போரே அன்பின் ஊற்றாம்
ஊன்என்னும் உடலுக்குள் இருக்கும் ஆன்மா
ஓராயி ரங்கோடி ஆண்டு வாழத்
"தான்" என்னும் அகங்காரம் அழிய வேண்டும்
தானாக அன்பங்கே வளரும் யாண்டும்.

கண்ணெதிரே பிறர்துன்பம் அடைதல் கண்டும்
காணாமல் வைதிக முறைகள் பூண்டே
பண்பாடி, சேவித்துப் பரம னுக்குப்
பல்வகையான் நைவேத்யம் படைத்த
லிங்கே
உண்மையிலே "ஆன்மிகம்" என்று ரைத்தால்
உலகத்தார் கைகொட்டி நகைப்பா ரன்றோ?
எண்ணத்தில், இதயத்தில், அன்பு பூண்டே
இயங்குவதே உண்மையில்'ஆன் மிகம்"
ஆகும்

கோவூர் இசைதாசன்

பாடம் படிப்போமே!

காலை வானம் கிழிகிறது - வெள்ளிக்
கதிரும் விண்ணில் எழுகிறது
காலை எழுவீர் பணிசெய்வீர் - உங்கள்
கடமை புரிவீர் என்கிறது.

பறவைக் கூட்டம் பறக்கிறது - கூட்டாய்ப்
பாரை யளக்கப் போகிறது
உறவைக் கூட்டி உயர்ந்திடுவீர் - உலகம்
உங்கள் கையில் என்கிறது.

அலைதான் வந்து மீள்கிறது - நந்தம்
அடியை யளந்து செல்கிறது
களைப்பை மறப்பீர் தொடர்ந்திடுவீர் - வெற்றி
காலின் அடியில் என்கிறது.


சின்னச் சிட்டுப் பறக்கிறது - எங்கும்
துள்ளித் துள்ளித் திரிகிறது.
எண்ணம் செயலில் சுறுசுறுப்பே - என்றும்
ஈட்டும் நலங்கள் என்கிறது.

இயற்கை விலங்கு எல்லாமும் - நமக்கே
ஏதோ பாடம் தருகிறது.
மயக்கம் நிறைந்த மனிதர்தாம் - அதை
மனத்தில் கொள்ள மறுக்கின்றோம்.

ச. சவகர்லால்


ஸ்ரீ கமலாத்மிகா


ஸ்ரீ திரிபுரசுந்தரி


ஸ்ரீ மாதங்கி


ஸ்ரீ தாரா


ஸ்ரீ புவனேசுவரி


ஸ்ரீ திரிபுரபைரவி

மகா வித்யா

அடியார்க்கு நல்லான்

இந்து மதம் இறைவனை அடைய எண்ணற்ற வழிகளை வகுத்துத் தந்திருக்கிறது. அவற்றில் மரபுக்கேற்ற ஒரு மந்திரத்தைப் பெரியவர்களிடம் பெற்று, உபாசித்து இறையருளைப் பெறுவது ஒரு வழி. குருமுகமாக மந்திரத்தைப் பெற்று அதை உபாசிக்கிற முறையை - கலையை வித்யா என்பார்கள். உதாரணமாக, காயத்ரி மந்திர வழிமுறைகளைப் பிரம்ம வித்யா என்றும், வனதுர்க்கா மந்திர முறைகளை மகாவித்யா என்றும், பஞ்சாட்ரமாகிய திருஐந்தெழுத்தைச் சிவ வித்யா என்றும், முனிவர்கள் பலரும் போற்றி வணங்கிய பராசக்தியாகிய சோடச மந்திரத்தை ஸ்ரீ வித்யா என்றும், ஏழு கோடி மந்திரங்களின் மூச்சுக் காற்றாய் - ஜீவ அக்ஷரமாய் விளங்கும் திருவாரூர் ஸ்ரீ தியாகேசனின் மந்திர முறையை (அன்ன மந்திரம்) ஹம்ச வித்யா என்றும் அழைக்கிறார்கள்.

இவ்வகையில் காளி என்பது தசமகா வித்யா என்று சிறப்பித்து அழைக்கப் படுகிற ஓர் அரிய கலை. மூல முழுமுதல் அணுவில் தன்னுணர்வாகிய பராசக்தி வெளிப்பட்டுப் பிரபஞ்சம் உண்டாக்கப் பட்டு மீண்டும், தோன்றிய பிரபஞ்சம் மூல அணுவில் ஒடுங்குகிறது அல்லவா? இந்தப் பேரண்ட நிகழ்வுகள் காலத்துக்கு உட்பட்டனவாக இருப்பதை உணர்ந்த நம் முனிவர்கள் காலத்தைச் சிந்தித்துத் தியானிக்க மகாகாளியின் தோற்றம் கண்டனர்.

எனவே கால தத்துவமே காளிகா. மந்திர சாஸ்திரங்கள் மட்டுமல்லாமல் தந்திர சாஸ்திரங்களும் இவளைப் பெரிதும் வியந்து கூறுகின்றன.

இவளை உபாசிக்க நெறி வேண்டும். ஜாதகத்தில் மந்திர பாவத்தில் இராகு சிறப்பாக அமையப் பெற்றவர்கள் இவளது அருள் பெறுவது திண்ணம். காளியின் பத்து வடிவங்களை வாசகர்கள் புரிந்து கொள்ள ஏற்ற வகையில் எளிதாக இந்தக் கட்டுரை விளக்கும். மூலமந்திரம், தியானம் - ஆகியவை குருமுகமாக அறிதல் வேண்டும் என்கிற விதிக்கேற்ப இங்கே அவை சொல்லப்படவில்லை.

1. கமலாத்மிகா

அலைமகளே கமலாத்மிகா. பரம் பொருளின் வனப்பும் களிப்பும் வெளிப்படையாவதே கமலாத்மிகாவின் வடிவம். பாற்கடலில் அலைகள் இடையே அமுதத்தோடு அவதரித்த அமுத மனத்தாள். வாழ்வுக் கடலில் அலர்ந்த இன்பக் கமலம் கமலாத்மிகா. அழகு, தூய்மை ஆகிய இரு கமலங்களை இரு கரங்களிலும் ஏந்திக்கொண்டு அபயம், வரதம் - ஆகிய கமலங்கள் மற்ற இரு கரங்களில் காட்டுகிற வரதன் பத்தினி. இந்தப் பொன்னிறப் பொன்னியை நான்கு யானைகள் எப்போதும் நீராட்டி இவளது தண்ணளி மனத்தை வெளிக்காட்டுகின்றன. சந்திரனின் அன்புச் சகோதரியாம் இந்திரையாகிய இவள், குளிர்ச்சியாக அல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்? கலைமகளையும் உள்ளடக்கிய இலக்குமி போன்றவளே கமலாத்மிகா.

நீரிடை மலர்ந்த - இந்த நிமலையே மீனமாக வந்த பரந்தாமனின் முதல் அவதாரத்துக்கு எழுச்சி தந்தவள்.

2. திரிபுர சுந்தரி

காமமாகிய மன்மதன் எரிந்தான். எரிந்த காமத்தின் விளைவே குரோதம் என்று காட்டுவதற்காக அந்தச் சாம்பலிலிருந்து உற்பவித்தான் பண்டாசுரன். அவனை வதைத்தவள் இவள்.

ஸ்ரீ வித்யா என்று முனிவர்களால் பூஜிக்கப்பட்டவள். லலிதை என்றும், ராஜராஜேஸ்வரி என்றும், காமாட்சி என்றும், காமகோடி என்றும் போற்றப்படுபவள். திரிபுரசுந்தரி என்றால் மூவுலகிலும் அழகி என்பது வெளிப் பொருள். இதன் உட்பொருள், ஸ்தூலம், சூட்சுமம், காரணம் - ஆகியவற்றைக் கடந்த மகாகாரணமாகிய பிரம்மத்தின் அருட்சக்தியாகிய இவளே முப்புரங்களின் உள் அழகாகத் திகழ்கிறாள். பிரம்மத்தின் புறஅழகு கமலாத்மிகா எனில், அக அழகு திரிபுரை. இவள் உள்ளிருந்து உபாசகனின் ஆசை, காமம், குரோதம் முதலானவற்றைத் தன்வயப் படுத்துகிறாள். ஆசையை அடக்கப் பாசமும், துவேஷத்தை அடக்க அங்குசமும், ஐம்புலன்களைக் கவர ஐந்து மலர்ப் பாணங்களும், மனத்தை இழுக்கக் கரும்பு வில்லும் தரித்திருக்கிறாள். பரப்பிரம்மத்தின் சக்தியாக நினைக்கிறபோது, இவளே ஸ்ரீ வித்யா. அப்போது ஸ்ரீ சக்கரத்தின் மத்தியில் எண்ணற்ற தேவதைகள் சூழ விளங்கும் மகாபட்டாரிகா (பேரரசி) இவளே. மகா வித்யைகளில் வரும் மாதங்கியும், பகளாமுகியும் முறையே இவளுக்கு மந்திரிணியும் சேனா நாயகியும் ஆகிறார்கள். இவள் ஐந்தொழில் (ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்) களை ஏற்பதால் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மாயைக்கு அதிபனான மகேசுவரன் ஆகியோர் இவளது மஞ்சத்தின் நான்கு கால்களாகவும், மாயையை நீக்கும் சதாசிவனே இவள் அமரும் பீடமாகவும் இருக்கிறார்கள். பிரம்மத்தின் எண்ணம் அற்ற சாந்த வெள்ளையில் தோன்றி, முதல் எண்ணமாகிய தன்னுணர்வு என்ற சிவப்பாகிய இந்த அம்மை மாதுளை நிறத்தவள். செவ்வாடையும் செவ்வா பரணமும் தரித்திருப்பவள். காளி குலத்தில் இவளே திரிபுரை. சக்தி குலத்தில் இவள்தான் ஸ்ரீ வித்யா. திருவாரூர் கமலை பீடத்தில் யோகவடிவாய் விளங்கும் ஞானவல்லி இவள்தான்.

3. மாதங்கி

காஞ்சி காமாட்சியை அரசி எனில் அவளது மந்திரிணியாக உள்ளவளே மாதங்கி . ஆனால் இவளே மகாசக்தியாக -சக்கரவர்த்தினியாக - மதுரையில் மீனாட்சியாக அருளாட்சி செய்கிறாள். மரகத மின்னலாய்ப் பிரகாசிக்கிறாள்.

பசுமையின் உருவான இவளே உபாசகன் உள்ளத்தில் பசுமையை, குளிர்ச்சியைப் பெருக்கெடுக்கச் செய்கிறாள். ஒரு நிலையில் (ஸ்ரீசக்ரத்தில்) மந்திரிணி என்றாலும், ஒரு நிலையில் (மதுரையில்) ராணி என்பதால் ராஜ மாதங்கி, ராஜசியாமளா எனப்படுகிறாள். மதங்கரின் மாதவம் கண்டு, அவரது தவத்தை ஏற்று, அவருக்கு மகளாய்த் தோன்றியதால் மாதங்கி ஆனாள். மதங்கர் சண்டாளர். அதனால் இவள் சண்டாளி. இவள் உயர்வினில் உயர்வானவள். அதனால் உத்-திஷ்ட என்ற அடைமொழியும் கொண்டாள்.

கோமளவல்லியான இவளுடன் கிளிப்பிள்ளை காணப்படுகிறது. இது ஏன்?

உபாசகனின் மூலாதாரத்தில் குண்டலினி சக்தி உறங்கிக்கிடக்கிறது. இது யோக சாதனையில் மேலெழும்பும். குண்டலினியைப் பாம்பாக உருவகம் செய்து சித்தர்கள் பாடியிருக்கிறார்கள். கிளியைக் கண்டதும் பாம்பு சிலிர்த்தெழும். இவளது அருள் பெற்ற உபாசகன் உடலத்தில், உறங்கிக் கிடக்கும் குண்டலினியாகிய பாம்பு மேலெழும் என்பது உட்பொருள்.

4. தாரா

பத்து விதமான வித்யா தேவதைகளில் ஒருத்தியான தாராவுக்கு ஐந்து வகையான வடிவங்கள் இருப்பதாகத் தெரிய வருகிறது. நீல சரஸ்வதி, உக்ர தாரா, சுக்ல தாரா, நீல தாரா, சித்ர தாரா என்பன அவை. தாரணம் என்றால் கடத்துவிப்பது - அதாவது தாண்டுவிப்பது என்று பொருள். சம்சார யாத்திரையை நடத்தி வைத்து, சம்சார சாகரத்தைத் தாண்டுவிப்பவள் தாரா. யாத்திரைகள், கடல் பயணங்கள் ஆகியவற்றை இனிதே முடித்துத் தரும் தெய்வம் இவளே. எனவே கடற்கரையிலும், நாற்சந்தி கூடுமிடங்களிலும் இவளை வழிபடுவது வழக்கம். ஸ்ரீ இராமபிரான் தாராவின் சக்தியிலிருந்து தோன்றியதாக ஒரு தந்திரம் கூறுகிறது. உணர்வுகள் நசிக்கிற பேருணர்வைத் தருபவள் என்பதால் ஒரு காலால் சடலத்தை மிதித்துக் கொண்டிருக்கிறாள். வாழ்க்கை முடிச்சை வெட்டுவதற்காகக் கத்திரிக்கோலும், அகங்கார நீக்கத்தைக் காட்ட மண்டை ஓடும் வைத்துள்ள இவளது இன்னொரு கரத்தில் ஞான வாளும், இந்தப் பயங்கரங்களுக்கு ஈடு செய்வதைப் போல எஞ்சிய கையில் குண்டலினி யோக சித்தையைக் காட்டும் குளிர்ச்சியான நீலத்தாமரையும் (நீலோத்பவம்) தரித்திருக்கிறாள்.

புத்த மதத்திலிருந்துதான் இந்து மதத்திற்கு தாரா வழிபாடு வந்ததாகச் சொல்வாரும் உண்டு. பிற நாடுகளில் புத்த மதம் பரவக் காரணமாக இந்தத் தாரா வழிபாடு அமைந்திருக்குமோ என்றும் சிலர் கருதுகிறார்கள். மாரனைக் கண்டு கலங்காத புத்தருக்கும், ஆலகால விஷத்தை உண்டும் அயராத சிவபெருமானுக்கும் இவளே உட்சக்தி. அக்ஷோப்பியரின் சக்தியே தாரா. சிவனை நஞ்சுண்ணத் தூண்டி நெஞ்சுரம் தந்தவள் இவளே.

தந்திர சாஸ்திரங்கள் இவளது உபாசனைக்கான மந்திர தீட்சையைப் பெண்கள் வழியாகப் பெறவேண்டும் என்று சொல்கின்றன.

குழந்தை பிறந்த மூன்றாவது நாள் காஷ்மீரத்துத் தாய்மார்கள் எழுது குச்சியில் தேனைத் தோய்த்து, குழந்தையின் உதடுகளில் நீல சரஸ்வதியாகிய இவளது மந்திரத்தை எழுதியதாகத் தெரிய வருகிறது.



ஸ்ரீ காளி

5. காளி

தந்திர சாஸ்திரங்கள் முடிமேல் வைத்துக் கொண்டாடும் மந்திர சாஸ்திர நாயகி இவளே.

காலம் என்கிற விந்தைத் தத்துவத்தின் தெய்வ வடிவமே காளி. காலம் என்றால் கருநிறம் என்பதாகும். இவள் கரு நிறத்தவள். காலத்தில் மாற்றம் மட்டுமே மாறாத உண்மை. அதாவது ஒவ்வோர் உருவமும் அழிந்துகொண்டே இருக்கிறது. புத்துருவம் பிறக்க ஏதுவாகிறது. எனவே அழிவின் வடிவமாய் இருக்கிறாள் காளி அவள் அழிப்பதால் புதிய உருவங்கள் பிறக்கின்றன. உலகையே மகா மயானமாக்கி மகா காளரின் இதயத்தின்

மீது நின்று ஆடுகிறாள் காளி. காளியன்னை கூரிய நகங்களும், கொடூர ஏளன நகையும், தொங்கும் நாவும் படைத்திருப்பாள். இவள் ஒன்று நிர்வாணமாயிருப்பாள் அல்லது சடலங்களைப் பின்னிய ஆடை, முண்ட மாலை, கபாலத் தலையணி ஆகியவற்றை அணிந்திருப்பாள். ஒருபுறம் கரத்தில் கத்தியையும் வெட்டிய தலையையும் பிடித்திருப்பாள். மறுபுறம் இரு கரங்கள் அபயமும், வரதமும் ஆக இருக்கக் காட்சி தருவாள்.

போர், கிளர்ச்சி, புயல், வெள்ளம் சூறாவளி. தொற்றுநோய் முதலியன இவளுடைய அநுக்கிரகங்கள். இவற்றை ஏற்கும் பக்குவம் இல்லாதவர் பொருட்டுத் தாராவாகி இந்த உற்பாதங்களைக் களைவாள்.


அன்பு - வெறுப்பு, அறம் - அநீதி, இன்பம் -துன்பம், அழகு - கோரம் ஆகிய நிலைகளைச் சமமாகக் காண்கிறான் இவளுடைய உபாசகன். அதனால் அவற்றின் மேம்பட்ட பிரம்மத்தை உணர்த்துகிறாள் காளி.

இந்த மாகாளியின் அருளைப் பெற்றவன் கண்ணன். அழகும் அன்பும் வடிவமாகக் கொண்ட ஸ்ரீ கண்ணன் உண்மையிலேயே அழிக்க வந்தவன். பல அரக்கர்களைக் கொன்று, பிறகு பாண்டவர்களும், கௌரவர்களும், தனது யது வம்சமும் அழிந்து போகும்படி செய்தவன். காலோஸ்மி என்கிறான் கீதையில். காளி என்றால் கறுப்பி என்பது போல் கிருஷ்ணன் என்றால் கறுப்பன் என்பது பொருள்.

காளி 51 அக்ஷரங்களையே முண்ட மாலையாகத் தரித்திருக்கிறாள் என்று தந்திரங்கள் கூறும்.

6. ஸ்ரீபகளாமுகி

காளி முற்றுமாய் ஆகிறவள் பகளாமுகியே. செயல் முன்னிலும் திறம்பட மூச்சை நிறுத்திப் பின் வெளியிடுவது ஆன்ம சக்தியை வளர்க்கும் பிராணாயாமம் ஆகிறது அல்லவா? இப்படிப் பிடித்து வைப்பதை ஸ்தம்பனம் என்பர். பகளாமுகி வாக்ஸ்தம்பனக்காரி. உபாசகனின் பேச்சை நிறுத்தி மோனத்தை நல்குபவள். மோனம் என்பது ஞான வரம்பு. இவள் தனது இடக் கையால் ஒருவனது நாவைப் பிடித்திருப்பது போலவும், வலக் கையில் கதை தாங்கி அவனது சிந்தனையை அடித்து வீழ்த்தத் தயாராக இருப்பது போலவும் சித்திரிக்கப்படுகிறாள். வல்கா என்றால் லகான். எதிராளியின் வாயில் லகான் போட்டுத் திணற அடிக்கும் வல்காமுகியே வகலாமுகி ஆனதாகச் சொல்வார் உண்டு. வட மொழியில் 'வ' வும் 'ப 'வும் தம்முள் இடம் மாறும்.



ஸ்ரீ பகளா முகி

எந்தத் தொழிலையும் இவள் ஸ்தம்பிக்கச் செய்வாள். இராணி லலிதை போர் செய்யுங்கால் எதிரி சேனைகளைச் செயல் இழக்கச் செய்தவள் இவளே. லலிதையே காஞ்சி காமாட்சி. அவளது மந்திரிணியான மாதங்கியே மதுரை மீனாட்சி என்பது போல, சேனாநாயகி யான பகளாமுகியே திருஆனைக்கா அகிலாண்டேஸ்வரி.

இவளது நிறம், ஆடை, ஆபரணம் யாவும் மஞ்சள். ஒளியை வெளிக்காட்டாமல் தனக்குள் அமுக்கி வைப்பது மஞ்சளின் குணம். செம்மையான உள்ளறிவு பொங்கி வருவதைச் சிற்றறிவு தடுக்கிறது. சிற்றறிவின் நிறம் மஞ்சள். தடுப்பதன் மூலம் உள்ளொளியை அதிகம் பொங்கச் செய்கிறது என்பது உட்பொருள். இவளை உபாசிக்கிறவனின் ஆடை, மாலை,மஞ்சளாய் இருக்க வேண்டும். மழை பொழிவித்தல், தீ, நீர் ஆகியவற்றில் நிலை குலையாமல் இருத்தல் போன்ற சித்திகளை இவள் அருளால் உபாசகன் பெறுகிறான். தன் அங்கங்களைத் தனக்குள் இழுத்து அடக்கி ஸ்தம்பனம் செய்கிற பிராணி ஆமை அல்லவா? பகளாமுகியே கூர்மாவதாரத்தின் உட்சக்தி ஆவாள்.

7. புவனேசுவரி

காலமாக விரிந்தவள் காளி. அதில் இடமாக விரிந்தவள் புவனேசுவரி. கால வெள்ளத்தில் புவனங்களைப் படைக்கச் செய்தவள் இவள். இவளது அருளால் உலகில் ஜீவராசிகள் தோன்றின. இவளைப் பிரகிருதி அல்லது இயற்கை



ஸ்ரீ சின்ன மஸ்தா

எனலாம். இயற்கை பலவாறு விரிந்து கிடப்பதால்தானே அதன் மூலமான பிரம்மம் மறைவு பட்டுக் கிடக்கிறது? எனவே இவள் மாயை. இவளை வழிபட்டால் இவளே மாயையை நீக்கி மெய்ஞ்ஞானத்தை நல்குவாள். தேவீ பிரணவம் எனப்படும் 'ஹ்ரீம்' காரத்தை மந்திரமாகக் கொண்டவள் இந்த மகா சக்தி. இவள் சிதாகாசத்தின் ஞானவெளி. எனினும் அன்பர்களுக்காகச் செக்கச் சிவந்த அன்னையாக வந்தவள். புவனம் முழுவதையும் நாசி முனையிலே தூக்கி நிறுத்திய வராகஅவதாரத்தின் உட்சக்தி புவனேசுவரி ஆவாள்.

8. சின்னமஸ்தா

காளியிலும் கோரமானவள் சின்னமஸ்தா. காளி கால ஓட்டத்தில் ஒரு நியதிக்கு உட்பட்டே வெளி உருவை அழிக்கும் பிரம்மத்தின் பிராண சக்தி. சின்னமஸ்தாவோ எதற்கும் அடங்காமல் அந்தக்கணமே வெளிஉருவை அழித்து உள் அனுபவத்தைத் தரும் மின்சக்தி. இதை வித்யுத் சக்தி (Power of Electricity) என்று அழைப்பர் முனிவர்கள். ததீசி முனிவரின் முதுகெலும்பிலிருந்து செய்த வஜ்ராயுதத்தால் மேகங்களை இந்திரன் அடிக்க மின்னல் உண்டாவ தாகப் புராணக் கதை. மனிதனின் முதுகெலும்பில் மின்சக்தி இருக்கிறது. ததீசி போன்ற மகாயோகியரின் முதுகெலும்பில் அது அற்பசக்தியாக இல்லாமல் அபார சக்தியான பராசக்தியாக ஓடுகிறது. இடகலை, பிங்கலை, சுழுமுனை என்கிற மூன்று நாடிகளும் கூடுமிடத்தில் இந்த மின்சக்தியை யோகியர் உணர்ந்தனர். இந்த மின்னல் சிரசில் முட்டினால் அங்கிருக்கும் அமுதப் பிரவாகம் சகலநாடிகளிலும் சொரியும். இதைக் குண்டலினி யோக சித்தி என்பர். இந்திரிய அதிதேவதை இந்திரன். அவன் வஜ்ராயுதத்தால் மேகத்தை முட்ட அமுத நீர் பொழிகிறது. இந்திரிய நிக்கிரக வடிவம் சின்னமஸ்தா. அதனால்தான் ரதிமன்மதன் தம்பதியைக் காலில் மிதித்துக் கொண்டிருக்கிறாள். ஒரு கையில் வெட்டப்பட்ட தன்னுடைய தலை. (சின்ன - துண்டித்த, மஸ்தா - தலையினள்). இந்திரியங்கள் தொலைந்தால் போதா. அகங்கார மனம் தொலைய வேண்டும் என்பதைக் காட்டத் தன்னுடைய தலையையே துண்டித்து ஒரு கையில் அதைத் தாங்கிக் கொண்டிருக்கும் தியாக வடிவினள். வெட்டிய கழுத்திலிருந்து மூன்று நாடிகளின் குருதி பீச்சிடுகிறது. வாருணி, டாகினி என்கிற இவள் சேடியர், இடை, பிங்கலை நாடியிலிருந்து வருகிற குருதியை வெட்டுண்ட இவளது தலையே பருகுவது போன்றது இவளது தோற்றம். வாழ்க்கை முடிச்சை வெட்ட ஒரு கரத்தில் ஞானவாள் ஏந்துகிறாள். பரசுராமர் தம் அன்னை ரேணுகையின் தலையை வெட்ட, அப்படி வெட்டுப்பட்ட தலையே மாரியம்மனாக விளங்குகிறது. சின்னமஸ்தாவின் மஸ்தகமே ரேணுகை. பரசுராமரின் உட்சக்தியே சின்னமஸ்தா. பரசுராமர் ஆறாவது அவதாரம். இவள் பஞ்சேந்திரியங்கள், மனம் ஆக ஆறையும் அடக்கும் ஷஷ்டி தேவி என்று புகழப்படுகிறாள்.

9. தூமவதி

காளி, சின்னமஸ்தா ஆகியோரிடம் எத்தனைக்கு எத்தனை வேகம் பொங்குகிறதோ, அத்தனைக்கு அத்தனை சாம்பி, சோம்பிக் கிடப்பவள் தூமவதி. மரணத்திற்கும் ஜனனத்திற்கும் இடையே ஓர் இடைவெளி உண்டல்லவா? ஒன்று அழிவதற்கும் மற்றொன்று உண்டாவதற்கும் இடையே செயலற்ற ஒரு நிலை இருக்கும் அல்லவா? அதுவே இவள். இதைப் பாழ்வெளி அல்லது சூனியம் எனலாம். ஒன்றின் நிறைவும் மற்றதின் வித்தும் இதில் அடங்கும். எனவே இவளை இருட்சக்தி என்று கூறாமல் புகைச் சக்தி (தூமம் - புகை) என்றனர். புகை ஒளிமயமான அக்னி போல் இல்லை அல்லவா? மகா விஷ்ணுவின் யோக நித்திரை இவளே ஆவள். எனவே, எதையும் சிதைத்துத் தப்பர்த்தம் கற்பித்துக் காட்டுகிற ஏமாற்றுகிற வித்தைக்கு தூமவதி அதிதேவதையாகக் கூறப்படுகிறாள். இதனால் இவள் வெளிறிப் போனவளாகச் சித்திரிக்கப் படுகிறாள். அங்கங்கள் தளர்ந்து.

பற்களை இழந்து அழுக்கு ஆடையுடனும் காக்கைக் கொடியுடனும் காட்சி தருகிறாள்.

இவளது கையில் முறம் காணப்படுகிறது. சிந்தனைகளைப் புடைத்து ஆன்ம அரிசியைப் பிரிக்கும் ஞானத்தை இவள் நல்குவாள். தசமகா வித்யாக்களுள் இவள் ஒருத்தியே விதவை. ஆத்மன் என்கிற புருஷன் - பரம புருஷன் - பெரும் ஆள் - பெருமாள் யோக நித்திரையில் உறங்கிக் கிடக்கையில் இவள் புருஷன் அற்றவளாகத்தானே இருக்க முடியும்?

10. திரிபுர பைரவி

பைரவம் என்றால் அச்சம் ஊட்டுதல். பைரவீ ச பயாநகா - என்று தட்சிண காளிகாவின் மந்திர நாமாக் களில் வருகிறது. பொருள் - பைரவி என்று சொன்ன அக்கணமே உபாச கனின் அச்சத்தை நீக்கி, சத்ருக்களுக்கு அச்சத்தை விளைவிக்கிறாள் என்பதாம். முப்புரம் எரிக்க, சிவனுக்கு உள்முகமாய்த் தபோ சக்தியாக இருந்தவள் இந்தத் திரிபுர பைரவி.

திரிபுர பைரவி தவநிலையில் காட்சி அளிக்கிறாள்.


தவம் என்றால் எரிப்பது என்று பொருள். தவம் அனல் போன்றது. ''அக்னி வர்ணாம் தபஸா ஜீவலந்தீம்'' என்று வேதம் போற்றி மகிழும் துர்க்கை இவளின்பாற் பட்டவளே.

யோகியின் மூலாதாரத்தில் தபோக்கினியாக அனல் வீசினாலும், சிரசில் பிரம்மரந்திரத்தில் குண்டலினி யாக ஆரோகணித்து, சிவசக்தியாகும் போது குளிர்ந்து அமுதம் பொழிகிறாள். இவளது உபாசனையையும் ஸ்ரீ வித்யா என்று ஒரு தந்திரம் சொல்கிறது.

அபய வரத முத்திரைகளைக் காட்டும் இவள் - ஒரு கரத்தில் ஜபமாலையும், இன்னொரு கரத்தில் ஞான முத்திரையும் காட்டுகிறாள். ஞானமாதாவான இவளுக்கு நெற்றிக் கண்ணும் இருக்கிறது. குண்டலினியாகிய ஞானாமுதம் பொழிவேன் என்பதைக் காட்ட, அமுதத்தைப் பிறப்பிக்கும் சந்திரனைத் தலையில் சூடியிருக்கிறாள்.

இவளுடைய மந்திரத்தில் முதல் பீஜம் - வாக்பவ கூடம். இரண்டாவது பீஜம் - காமராஜ கூடம். மூன்றாவது பீஜம் - சக்தி கூடம்.

பரா வாக்கே பைரவி. மூலாதாரமே பரா வாக்கின் இருப்பிடம்.



ஸ்ரீ தூமவதி

இந்தக் கட்டுரையில் இதுவரை விளக்கிய பத்து வித்தைகளை சாதனைப்படுத்தல் எளிதன்று. வெறும் தியானம் மூலமந்திர ஜபம் பூசனைகளால், பிரம்ம ஸ்வரூ பிணியாகிய அம்பிகை அனுபவத் திற்குள் வருவதில்லை. காலம் என்கிற தத்துவத்தின் கூறுகளை மனித மனம் மெய்ஞ்ஞானத்தால் அறிந்து உணர்ந்து - அப்படி உணர்ந்த நிலையில் செய்யப்படும் வழிபாடுகளில் மட்டுமே சித்தி ஏற்படும். உடம்போடு உயிரிடை நட்பை அறிதல் வேண்டும். பின் உயிருக்கும் ஆகாச தத்துவத்திற்கும் உள்ள உறவுநிலை உணர்தல் வேண்டும். இதுவே யோக நெறி. ஞான வழி. மனித நேயம் மகத்தானது. ''எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி'' என்கிற வள்ளலார் பாடலைத் தீரச் சிந்தித்தல் வேண்டும். இந்த வித்தைகளைக் காமியமாகச் செய்பவர்கள் கலங்கிப் போவது திண்ணம்.


அத்வேஷ்டா ஸர்வபூதாணாம் மைத்ர:
கருண: ஏவ ச
நிர்மமோ நிர் அகங்கார:
ஸமதுக்கசுக ; க்ஷமீ
ஸந்துஷ்ட : ஸததம் யோகீ யதாத்மாத்
த்ருட நிச்சய :
மய்யோர்பிதோ மானோர் புத்திர்
யோ மத்பக்த : மே ப்ரிய :

- என்கிற கீதையின் வரிகளை மன ஓட்டங்களில் பதிய வைத்து நெறியில் நிற்பவனே யோகி.

இந்த மகாவித்யாவின் மந்திர சாதனை முறைகள் காஷ்மீரத்து பண்டிட் குடும்பங்களிடம் இருப்பதாகத் தெரியவருகிறது.

பகளா தந்திரம், கற்பராதி, சாக்தப்ரமோத், ஆகாச பைரவ கல்பம் முதலான கிரந்த நூல்களில் இந்த வித்தை பேசப்படுகிறது.

மனிதக் கட்சி



டாக்டர் வாசவன்

இந்தத் தேர்தலுக்குப் பிறகு. அந்த ஊர் சிதறு தேங்காயைப் போல் உடைந்து சிதறிப் போய்விட்டது.

ஆளுக்கு ஆள் ஒரு கட்சி. வீட்டுக்கு வீடு வேறுபட்ட கட்சிக் கொடிகள். ஊர்ப் பெரிய மனிதர்கள் ஓரம் கட்டப்பட்டனர். வாக்குச் சீட்டுகளுக்குப் புதிய அறிமுகங்களான இளைஞர்கள், தம் கொள்கையைப் பரப்ப அறிவை நம்பு வதைவிட ஆயுதங்களையே அதிகம் நம்பினார்கள். வெட்டுக் குத்துகள் வீதி வலம் வந்தன. தெரு மணல் ரத்தம் குடித்தது. அடிக்கடி தலைவர்கள் வருகை புரிந்து, ஊர்ப் பகைப் புகையை அணைந்து விடாமல் ஊதிவிட்டுக் கொண்டு இருந்தார்கள்.

தேர்தல் ஒரு வழியாக நடந்து முடிந்தது. ஆனால் ஊர்ப் பகை மட்டும் ஒரு முடிவுக்கு வரவில்லை. அது மேலும் மேலும் வளர்ந்தது.

அதனால் அதிகம் பாதிக்கப் பட்டவர்கள் ஊர்த் தெய்வங்கள் தாம்.

உச்சி காய ஊருணிக் கரையில் இருந்த பிள்ளையார்தான் பாவப்பட்ட பரிதாபத்துக்கு உரியவர். அவருக்குக் கோயில் இல்லை. அரச மரத்தடியில் அகதியைப் போல அமர்ந்து கொண்டு, காலம் காலமாக ஊராரின் ஒரு வேளைப் பூஜைக்காக ஏங்கிக் கொண்டு இருக்கிறார்.

பண்டாரம் காலை நேரத்தில் வருவார். பிள்ளையாருக்கு எண்ணெய் எல்லாம் தேய்க்கமாட்டார். இரண்டு குடம் தண்ணீர் எடுத்து வந்து அவர் தலையில் ஊற்றுவார். ஒரு சந்தனப் பொட்டு வைப்பார். நான்கு தங்க அரளிப்பூக்களைக் கிள்ளி, பிள்ளை யாரின் தலை, தோள் என்று வைப்பார். கணக்காக மூன்று தடவை மணி அடிப்பார். பக்தர்கள் யாரும் வர மாட்டார்கள். பக்தர்களைக் கவர்ந் திழுக்கக் கூடிய பிரசாதங்கள் எதையும் அவர் படைப்பதில்லை. பசை இல்லாத இடத்திற்கு யார் வருவார்கள்?

பண்டாரத்திற்குக் கோயில் மானிய மாக நிலம் விடப்பட்டிருந்தது. அதனால் அவர் மணி அடித்தால் தான் மானியத்தை அநுபவிக்கலாம். ஆதாயத்துக்காக அவர் மணி அடிக்கிறார். அவர் ஆதாயம் பெறுவதற்காக, பிள்ளையார் ஆண்டு முழுதும் பட்டினி கிடக்கிறார். விநாயகர் சதுர்த்தி அன்று அவருக்குக் கொழுக் கட்டை, சுண்டல் எல்லாம் உண்டு. அதற்காக மற்ற நாள்களில் பிள்ளையார் 'பசி' என்று கத்த முடியுமா? கோஷம் போட்டுக் கொடி பிடிக்க முடியுமா?

பிள்ளையாரை விடக் கொஞ்சம் மேலான நிலையில் உள்ளவர் அய்யனார். அவர் ஊர்க் காவலர் அல்லவா? அவருக்கு சின்னக் கறுப்பன், பெரிய கறுப்பன், சங்கிலிக் கறுப்பன் என்று படை வீரர்கள் உண்டு. அவர் சவாரி செய்வதற்காக இரண்டு ஆள் உயரக் குதிரையும் உண்டு. அவருக்கு நிலம் நீச்சும் அதிகம். அதனால் அவருக்கு இரண்டு வேளைப் பூஜை உண்டு. பொங்கலும் உண்டு.

என்ன இருந்தால் என்ன? அத்தனை கடவுள்களும் அண்மைக் காலமாகச் சிறைப்படுத்தப்பட்டுவிட்டன. "டேய், கோயிலைத் திறக்கப்படாது. பூவை வைக்கப்படாது" என்று ஆளாளுக்கு உத்தரவு போட்டு விட்டார்கள். அதை யாரால் தட்ட முடியும்?

ஊரில் உள்ள அத்தனை பேரும் கோயில் நிர்வாகத்தில் சம்பந்தப் பட்டவர்கள். எல்லாருமே கட்சி ரீதியாகப் பிரிந்து கிடந்ததால், சாமிகள் எல்லாமே சிறையில் கிடந்து பசியும் பட்டினியாக வாடின.

அந்த ஊரில் கட்சியும் இல்லாமல், குடும்பமும் இல்லாமல் ஊரையே குடும்பமாக நினைத்து வாழ்பவர் சாம்புத் தாத்தா. எண்பது வயசு நெற்றுக்கிழம். வாழ்க்கையில் பற்றில்லை. ஆனால் பிறந்த மண்ணிலும், அந்த மண்ணில் பிறந்த மக்களிடத்திலும் அவருக்குப் பற்று மிக அதிகம். அவர் ஆள் பார்ப்பதில்லை; ஆதாயம் பார்ப்பதில்லை. உதவி செய்வதற்குப் பறந்து போவார். ஒவ்வொருவருடைய சுக துக்கங்களிலும் கலந்து கரைந்து போவார்.

சாம்புத் தாத்தா மூச்சுவிடாமல், அந்த ஊரில் காற்றுக் கூட அசையாது. நல்லதற்கும் சாம்புத் தாத்தாதான்; கெட்டதற்கும் சாம்புத் தாத்தாதான். அவர் பேச்சை மீறுவதற்கு ஊரில் யாருக்கும் துணிச்சலில்லை.

அதெல்லாம் அந்தக் காலம். ஊரில் கட்சிக் கொடிகள் பறக்கத் தொடங்கிய பிறகு, எல்லாமே தலைகீழாக மாறிவிட்டன. பந்தம் பந்தாடப்பட்டது. உறவு உளுத்துச் சரிந்தது. மரியாதை மண்ணுக்குள் புதைந்தது. அண்ணன், தம்பிகள் குடுமியைப் பிடித்துக் கொண்டார்கள். பெரியவர்கள், ''ஏய் பெரிசு! சும்மாகிட!'' என்று புறம் தள்ளினார்கள்.

'புதிய தலைமுறையின் வேகத்தை இப்படி வெறியாக மாற்றுகிறார்களே! யாரோ பதவியில் போய் அமர, கிராமத்து மண்ணில் விளைந்த இந்த நெல்மணி களை எல்லாம் பதர்களாகப் பறக்க விடுகிறார்களே!' என்று சாம்புத் தாத்தா அதிகமாகவே கவலைப்பட்டார். அதற்காக அவர் உபதேசம் செய்வ தில்லை. உபதேசத்தைச் கேட்பதற்கு இவர்கள் என்ன அர்ஜுனன்களா?. புதிதாக மாறிப் போன துரியோதனக் கூட்டம் இது.

அவர் வாயை மூடிக்கொண்டு, எல்லாவற்றையும் வேதனையோடு பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் பையன்கள் கோயில்களை எல்லாம் அடைத்துப் போட்டு அட்டகாசம் செய்ததுதான் அவரால் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை.

ஒரு நாள் வீட்டுக்கு வீடு சென்று எல்லாப் பையன்களையும் ''கிராமச்

சாவடிக்குச் சாயங்காலமா வாங்கடா!'' என்று அதட்டலாக அழைத்தார்.

எல்லாப் பையன்களுமே அவர் கையைப் பிடித்து வளர்ந்தவர்கள்தாம். அதனால் தட்ட முடியவில்லை. மாலையில் எல்லாருமே சாவடிக்கு வந்து விட்டார்கள். ஆனால் கட்சி வாரியாக அவர்கள் கலைந்தும், குலைந்தும் கிடந்தார்கள்.


அவர்களுக்கு முன்னாலேயே வந்து விட்ட சாம்புத் தாத்தா, அவர்களை எல்லாம் ஒரு பார்வையால் சுட்டார். ''பசங்களா! உங்க கட்சிக்காக நீங்க எவனாவது பட்டினி கிடக்கிறேளா? ஆனா, எந்தக் கட்சியையும் சேராத தெய்வங்களை எல்லாம் ரெண்டு மாசமா பட்டினி போட்டு, கடுங்காவல் தண்டனை கொடுக்கிற மாதிரி கோயில்களை அடைச்சுப் போட்டுட் டேளே! நாளைக்கு நான் எல்லாக் கோயில்களையும் திறந்து பூஜை வைக்கப் போறேன். முடிஞ்சா, எவனாவது தடுத்துப் பாருங்கோ. கொலை விழும்'' என்று தொண்டை கிழிவதைப் போலக் கத்தினார்.

ஒருவனுக்காவது அவரை எதிர்த்துப் பேசத் துணிச்சல்இல்லை. பேசாமல் எழுந்து போய்விட்டார்கள். மறுநாள் சாம்புத் தாத்தா கோயில் கோயிலாகப் போனார். பிள்ளையாருக்கு உச்சி குளிர எண்ணெய் தேய்த்து அபிஷேகம் செய்தார். சுண்டல் நைவேத்யம் செய்தார். பிறகு அய்யனார் கோயில், மாரியம்மன் கோயில், தர்ம முனீஸ்வரர் கோயில் என்று வரிசையாகச் சென்று பூஜை செய்தார்.

இளங்கட்சித் தலைமுறை விலகி நின்று பல்லைக் கடித்தது. 'சாம்புத் தாத்தா' என்ற நெருப்பை யாராலும் நெருங்க முடியவில்லை.


''குமரப்பனுக்கா?'' என்று பதறினார் சாம்புத்தாத்தா.

''ஆமாங்க. அவனைப்பாம்பு கடிச் சிருச்சு. பதினெட்டு வயசுப் புள்ளே. மருந்து கொடுத்தா, விஷம் மூறிஞ்சு போயிடும். அவன் வேறே ஒரு கட்சியாம். அதனாலே அவன் வீட்டுக்குப் போகப் படாதுன்னு மற்ற கட்சிப் புள்ளைகள்ளாம் கட்டுப்பாடு போட்டு, வீட்டு ஆளு களையும் வெளியே போக விடாம காவல் காக்கிறாங்க. குமரப்பனுக்கு அப்பன், ஆயி, கூடப் பொறந்தவங்கன்னு யாருமே இல்லை. அநாதைப் பய. செத்துட்டா எடுத்துப் போட நாதி இல்லே. குமரப்பன் என் தம்பி மகன். என் தம்பி மகனைக் கடைசியாப் பாக்கக்கூட என்மகன் நாகசாமி என்னை வெளியிலே விடலை. நான் கொல்லை வழியாத் திருட்டுத் தனமா ஓடி வந்து உங்களிடத்திலே செய்தியைச் சொல்றேன். குமரப்பன் இதுக்குள்ளே செத்துப் போயிருப்பான். அவன் பொணம் வீட்டுக்குள்ளே கிடந்து நாறாமே, நீங்க தான் சாமி எடுத்துப் போக ஏற்பாடு செய்யணும். பயலுக இப்பவும் உங்க பேச்சைத்தான் கேட்கிறானுங்க. நீங்க வந்து அவனுகளுக்குச் சொல்



லுங்க சாமி! நான் போயிட்டு வாரேன்'' என்று அழுகையும், புலம்பலுமாகச் சொல்லி முடித்த நல்லுசாமிக் கிழவர், தலையில் துண்டைப் போட்டுக் கொண்டு வெளியேறினார்.

சாம்புத் தாத்தா கதவை மூடிவிட்டு குமரப்பனின் வீட்டுக்குச் சென்றார்.



அதற்குள் அவன் 'கதை முடிந்து' விட்டது. வாசலுக்கு வாசல் ஆட்கள் எட்டிப் பார்த்தார்களே தவிர, ஒருவராவது குமரப்பன் வீட்டுக்கு வரவில்லை.

சாம்புத்தாத்தா அவன் தலைமாட்டில் ஒரு விளக்கை ஏற்றி வைத்துவிட்டு வெளியே வந்தார். ''வேடிக்கை

படைப்புக் கவி

மின்னூர் சீனிவாசன்



காலந் தொடங்க, கரையற்றதான
நீலவான் குடை, குடைக்கீழ் மழைமுகில் !
சாலப் பெரிய வானந் தன்னுடன்
ஐம் பெரும் பூதம் அழியா நாதம்
எல்லாம் அமைந்த இப்புவி படைத்தபின்
பொல்லா இறைவன் புலம்பிப் பொருமினான்:
கவியொருவனை நான் கற்பனை செய்து
புவியிற் படைக்கப் போட்டிலேன் திட்டமே!
ஆயினும் கவிஞர் ஆங்காங்கு தோன்றினர்
பாடிக் களிக்கிறார் பற்பலமொழிகளில்,
எப்படி யிதென எண்ணினான் இறைவன்.
நித்தியப் பொருளாய் நின்ற என்றன்
சத்திய நிழலைச் சார்ந்து சார்ந்து
கற்பனை கலந்து மனிதன் கவியாய்
மலர்ந்தான் போலும் மலர் மணம் தந்தான்.
பலரறியாத படைப்புக்கவி நான்!
நானொரு கவியாய் நாதவுலகில்
தேனுறு மலரில், திரள் உப்பாழியில்
திகழ்வேன் என்போல் சீரிய கவிஞனை
மகிழ்ந்தே வாழ்த்துவேன் என்றே வாழ்த்தினான்!

பார்க்கிறேளா? குமரப்பன் உங்க சொந்தக்காரன். அவன் செத்துக் கிடக்கான். அவனை அடக்கம் பண்றதுக்கான வழியைப் பாருங்கோ!'' என்று தெருவே அதிரும்படி கத்தினார்.

''எங்களுக்குக் கட்சிதான் சொந்தம். எங்க கட்சிக்காரன் தான் எங்க சொந்தக்காரன். எங்க கட்சிக்கு எதிரா வேலை செஞ்சவன் எல்லாம் எங்க எதிரிதான். குமரப்பன் எங்க எதிரி. நாங்க அவன் வீட்டுக்குள்ளே கால் வைக்க மாட்டோம்'' என்றான் நாகசாமி.

''நீங்க கால் வைக்க வேண்டாம். உங்க வீட்டுப் பெரியவர்களையாவது வரச் சொல்லுங்கோ!''

''யாரும் வரமாட்டாங்க. வரவும் விடமாட்டோம்!''

''அப்போ, பொணம் வீட்டிலேகிடந்து அழுகி நாறட்டும்னு சொல்றேளா?''

''அடுத்த ஊரிலே இருக்கிற அவன் கட்சிக்காரங்களுக்குத் தகவல் சொல் லுங்க. மாலை மரியாதையோடு வந்து எடுத்துட்டுப் போவாங்க.''

''வாயை மூடுடா! இந்த ஊர்க்காரன் செத்தா, அடுத்த ஊர்க்காரன் ஏண்டா தூக்கிப் போடணும்? கிராமத்து மண்ணுக்குச் சொந்தமான நேசத்தையும், பாசத்தையும் எங்கிருந்தோ வந்து இறக்குமதியான கட்சிகள் தின்னு முழுங்கிடுது. நீங்க எவனும் தேவை இல்லை. நான் வேதம் ஓதற குலத்திலே பிறந்தவன். நான் குமரப்பனுக்குச் சொந்தக்காரன் இல்லை. உங்களப் போல நான் அரசியல் கட்சிக்காரன் இல்லே. ஆனா, எனக்கு ஒரு கட்சி இருக்கு. மனிதக் கட்சி என் கட்சி. எந்த மனிதனுக்கு உதவி இல்லையோ, அவனுகக்கு உதவுகிற கட்சி அது. நானே குமரப்பனை எடுத்துண்டு போய் அடக்கம் பண்ணிடுறேன். நீங்க எல்லாம் இரு நூறு மைலுக்கு அப்பாலே உங்க கட்சிக்காரன் ஒருவன் செத்தா, லாரியிலே போவேள். வேனிலே போவேள். ஆனா, நீங்க செத்தா இங்கே வந்து ஒரு பயல் எட்டிப் பார்க்க மாட்டான். போங்கடா ஏமாளிப் பசங்களா!'' என்று தொண்டை வெடிக்கக் கத்திவிட்டு, குமரப்பன் வீட்டுக்குள் நுழைந்தார் சாம்புத் தாத்தா.

''தாத்தா!'' என்று ஒரு குரல் வாசலில் இருந்து வந்தது.

நாகசாமி நின்று கொண்டிருந்தான்.

''என்னடா?''

''நீங்க உசந்த சாதி.''

''இல்லை. மனித சாதி.''

''மனித சாதியை, அரசியல் சாதி புழு மாதிரி அரிச்சு, பூசலையும், போரையும் உண்டாக்குதுங்கிறதை உங்க மூலம் புரிஞ்சுக்கிட்டேன். நீங்க இந்த வயசிலே உங்க பரம்பரை ஆசாரத்தை விட்டுட்டு குமரப்பனை அடக்கம் செய்ய ஆவேசமா நிற்கிறதைப் பார்த்ததும், எங்களுக்கும் பரம்பரை ஆவேசம் வந்திடுச்சு. எங்க குமரப்பனை நாங்களே சகல மரியாதை களோடும் அடக்கம் செய்வோம். அதுக்கு உங்க அனுமதி வேணும்'' என்றான் நாகசாமி.

''அனுமதியை அவ்வளவு சுலபமாக கொடுக்க முடியாது நாகசாமி! அரசியல் கட்சிகளாலே நம்ம ஊர் நாசமாப் போயிண்டிருக்கு. இங்கே ஒரு குடும்பத்திலே துக்கம் ஏற்பட்டா, ஊர் முழுக்க உலை வைக்கமாட்டா. அந்தப் பந்தம், பாசம் எல்லாம் அறுந்து போகக் காரணமாக இருந்த அரசியல் ஆவே சத்தை முதலிலே குழி தோண்டிப் புதையுங்க. வீட்டுக்கு வீடு பறக்கிற கட்சிக் கொடிகளைத் தூக்கி எறியுங்க. மனிதக் கட்சின்னு ஒரு கட்சி மட்டும் நம்ம ஊரிலே இருக்கட்டும். இதை எல்லாம் நீங்க செய்துட்டு, பிறகு குமரப்பனின் கடைசிக் காரியத்தைக் கவனிங்கோ. இல்லைன்னா, நானே குமரப்பனுக்குத் தந்தையா, மகனா இருந்து எல்லாக் காரியத்தையும் செஞ்சுடறேன்'' என்றார் சாம்புத் தாத்தா.

''இனிமே இந்த ஊரிலே கொடிகள் இருக்காது. நான் வெளியே போய் அதைச் செஞ்சிட்டு வாரேன்'' என்று கூறிவிட்டு, வேகமாக வெளியேறினான் நாகசாமி.

சேற்றுக்குள்ளிருந்து ஒரு கிராமம் மீண்டுவிட்டது. அது உதவியா? அல்லது பலனை எதிர்பார்க்காத பண்புக்குக் கிடைத்த பதவியா? சாம்புத் தாத்தா வுக்குப் புரியவில்லை.

இப்பொழுது தேவை ஊருக்கு ஊர் ஒரு சாம்புத்தாத்தா. ●

குட்டி...

அரசுமணிமேகலை

குட்டி தரையை அழுத்தித் துடைத்துக் கொண்டிருந்தாள். தரையின் ஓர் ஓரம் காபிக்கறை பிடிவாதமாக உட்கார்ந்திருந்தது.

குட்டி உதட்டைக் கடித்துக் கொண்டு, கையிலிருந்த ஈரத் துணியால் அழுத்தி அழுத்தித் துடைத்ததில் அந்தக் கறை காணாமல் போயிற்று.

குளியலறையைப் பிரஷ் போட்டுத் தேய்த்துக் கழுவி விட்டு வரும்போது, கொடியில் கிடந்த அந்தக் கறுப்புப் புடைவை கண்ணில் பட்டது.

கறுப்பு நிறத்தில் ஆங்காங்கு மேகத் தீற்றலாய் நீல நிறம்.... அதன் ஓரமாய்க் குட்டிக் குட்டியாய்ச் சிவப்புப்பூக்கள்...

புசு புசு பூனைக்குட்டியை வருடிக் கொடுக்கும்போது எத்தனை மிருதுவாக இருக்கும்? அப்படித்தான் அந்தப் புடைவையைத் தொடும்போதும்....

துவைக்கும்போதும், மிகக் கவனமாகப் பார்த்துப் பார்த்துத்தான் துவைப்பாள்.

ஒரு நாள் எஜமானியம்மாவின் கால செருப்பில் மாட்டிக் கொண்டதில், புடைவையின் கீழ்ப்பாகம் பர்ர்ரென்று கிழிந்து போனது. இதில் எஜமானி அம்மாவை விட, குட்டிக்குத்தான் அதிக வருத்தம்....

ரொம்பவும் பழைய புடைவைதான்.... முன்றானையில் வேறே ஒரு கிழிசல்! ம்கூம்... அம்மா இனிமே இதைக் கட்டமாட்டாங்க. அவங்களுக்கென்ன? ஆயிரம் சேலைங்க. இதைக் கேட்டா, எஜமானியம்மா கொடுப்பாங்களா? குடுத்தா நல்லாயிருக்கும்.... வீட்லே அம்மா புடைவை இரண்டுமே நைஞ்சு போயிடிச்சு. கொடுப்பாங்க. நல்ல மனசுதான்...

''என்னடி குட்டி? வேலையெல்லாம் ஆச்சா?''

''ஆச்சும்மா! துணிதுவைக்கிறது மட்டும்தான்...'' துணிகளை அள்ளி வாளியில் போட்டுக் கொண்டு, மாடிக்கு எடுத்துப் போனாள்.

''ஏண்டி குட்டி? இந்த இட்லியைச் சாப்பிட்டுட்டுப் போறதுதானே?''

''இல்லையம்மா. வீட்டுக்கு எடுத்துக்கினு போயிடறேன் நான். காலையிலே வர்றப்போ, நீராகாரம் குடிச்சுட்டுத்தான் வந்தேன்.''

குட்டி குடித்த நீராகாரம் காலை ஏழு மணிக்கே ஆவியாகி விட்டிருந்தது.

வக்கீல் வீடு, பாங்கிக்காரர் வீடு இரண்டையும் முடித்துவிட்டு இந்த வசந்தம்மா வீட்டுக்கு வருகிறபோதே, மணி பத்தரை ஆகியிருக்கும்.

பசிக்காதா என்ன? குடலை இழுத்து, நசுக்கி, முறுக்குவதைப் போலத்தான் வலிக்கும்.

அதற்காகச் சாப்பிட்டுவிடமுடியுமா? வீட்டில் அம்மா இருக்கிறாளே...

இரண்டு தங்கைகளும் வேறு இருக்கிறார்களே!

குட்டிக்குக் குடும்பக் கஷ்டம் தெரியும். குடித்துக் குடித்தே ஈரல் வெடிக்கிற அளவுக்குக் கெட்டுப் போய் இருந்தாலும், குடியை விட மறுக்கும் அப்பன்காரன்...

ஒரு காசு அவன் தந்து, அவர்கள் யாருமே பார்த்ததில்லை. அவன் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. அவள் தாய் கமலா இரண்டு வீடு களில் வேலைசெய்து சம்பாதித்து, வருவதையும் அடித்து உதைத்துப் பிடுங்கிக் கொண்டு போய்விடுவதுதான் கொடுமையிலும் கொடுமை...

அப்படி ஒரு முறை எட்டி இடுப்பில் உதைத்ததில் தான், கமலாவுக்கு இசகுபிசகாகிவிட்டது. ஆஸ்பத்திரியில் நான்கு நாள்கள் இருந்துவிட்டு வந்தவளுக்குக் கால் வேறு என்னவோ ஆகிவிட்டது. இழுத்து இழுத்துத்தான் நடக்க முடிந்தது. இதன் காரணமாக நான்கு வீடுகளில் வேலை செய்து கொண்டிருந்த கமலாவுக்கு, இரண்டு வீடுகளை விட்டு விட வேண்டிய கட்டாயம்...

குட்டி அப்போது நான்காம் வகுப்புப் படித்துக கொண்டிருந்தாள். நல்ல சுறுசுறுப்பு; படிப்பில் ஆர்வம்; இடைவிடாத உழைப்பு அவளிடம் இருந்தன.

தெரு விளக்கு வெளிச்சத்திலேயே இரவு எட்டு, எட்டரை மணிவரைக்கும் கூட சாப்பிட எழுந்து போகாமல், படித்துக் கொண்டிருக்கும் குட்டியை அந்தக் காலனி வாசிகளே சுட்டிக் காட்டிப் பெருமையுடன் பேசிக்கொள்வார்கள்.

குட்டி துணிகளைக் காயப்போட்டாள். பள்ளிக்கூடம் ஞாபகம் அவள் கண்களைக் கலங்கடித்தது.

'ம்ம்... படிப்பிலே மட்டுமா முதலாவதாயிருந்தேன்? பள்ளிக்கூட டிராமாவிலே மகாராணியா வந்தேனே! எத்தினி டீச்சருங்க திருஷ்டி கழிச்சு, நெத்தியிலே முத்தம் கொடுத்தாங்க?

பிரைஸ் கொடுக்க வந்திருந்த மினிஸ்டர் கூட 'இந்தப் பொண்ணு ஓஹோன்னு வரும்'னு புகழ்ந்துட்டு பிரைஸ் கொடுத்தாரே!'

குட்டி பள்ளிக்கூட யூனிபார்மில் தெருவில் நடந்து போய்க்கொண் டிருந்த அவள் வயதுப் பெண் ஒருத் தியை வெறித்துப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். அவள் கண்கள் கலங்கின.

'...ம்ம்... நான் மட்டும் படிச்சுக்கினே இருந்திருந்தேன்னா, எவ்வளவு நல்லாயிருந்திருக்கும்? இந்தப் புள்ளை மாதிரிதான் நானும் போயிக்கினு இருந்திருப்பேன். படுபாவி அப்பனாலே, யாருக்கு என்ன பிரயோசனம்?'

அம்மா, அவளிடம் கெஞ்சினது ஞாபகத்துக்கு வந்தது...

கமலா தயங்கித் தயங்கித்தான் பேசினாள். அவள் வறுமை பேசத் தூண்டியது; பெண்ணின் படிப்பார்வம் தயங்க வைத்தது. ஆனாலும் என்ன? வழக்கம் போல், வறுமை தான் வென்றது. அம்மா சொன்னாள்;

"கண்ணு! ஒண்ணு சொன்னா, நீ கோச்சுக்கமாட்டியே... கோடி வீட்டு இராசாத்தி சொன்னா. பாங்கி வீட்டம்மாவுக்கு வீட்டு வேலைக்கு ஆள் வேணுமாம். நான் நல்லா இருந்தேன்னு வெச்சுக்கோ, சத்தியமா உன்னைக் கேட்கமாட்டேன் கண்ணு... இப்ப இருக்கிற பசி, பட்டினிக்கு நீ மட்டும் ரெண்டு மூணு வீடுகள்லே வேலை பாத்தேன்னு வெச்சுக்கோ, ஒரு முந்நூறு ரூபாயாவது வரும் கண்ணு. அட! ஒரு வேளையாவது நாம சுடுசோறு சாப்பிடலாமே கண்ணு..."

ஆனா, இப்ப மட்டும் என் படிப்பை நிறுத்திடாதேமா. நான் சம்பாரிச்சுக்கிட்டு வந்து, அப்படியே ரூபாயையெல்லாம் உன் கையிலேயே தருவேம்மா..."

குட்டி கதறினாள்; அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, கமலாவும் கதறினாள்; இவர்களைப் பார்த்து, குழந்தைகளும் அழுதனர்.

அழுது அழுது, குட்டி அப்படியே வெறும் தரையிலேயே தூங்கி விட்டாள்.

அவளையே பார்த்தவாறு உட்கார்ந்திருந்த கமலாவின் கண்களில் இருந்து கண்ணீர் நதி நிதானமாகக் கிளம்பி வந்துகொண்டிருந்தது.

'இவளை இன்னும் படிக்கவெச்சா, வேலைக்குப்போவாதான். நாம்பவேலை பார்க்கிற வீட்டம்மா மாதிரி, பை ஒண்ணை மாட்டிக்கினு, செருப்புப் போட்டுக்கினு போவாதான்... இந்த மனுஷன் ஒழுங்கா இருந்தா ஆசைப்படலாம்தான். அந்தப் பாவிதான் இப்படி என் முதுகை முறிச்சுட்டுப் போயிட்டானே பாவி! நல்லாப் படிக்கிற உன்னை இப்படி நிறுத்தறனே பாவி! நான் என்ன செய்யட்டும்? எல்லார் தலையிலயும் எட்டெழுத்துன்னா, பாவி என் தலையிலே பத்து எழுத்துன்னு எழுதிட்டானே. அவனை யாரு கேக்கறது?"

கமலா புலம்பிக் கொண்டிருந்தாள். ஒரு வாரம் மௌனமாக நகர்ந்தது. குட்டியின் டீச்சர் கடைத்தெருவில் பார்த்தவள், கெஞ்சினாள்; அரற்றினாள்.

"இதோ பாருங்கம்மா! குட்டி மீனாட்சி படிப்பை நிறுத்திடாதீங்க. அவ நல்லாப் படிக்கிற பொண்ணு. வசதியுள்ளவங்க வீட்டுலே டியூஷன்லாம் வைக்கிறாங்க. அப்படியும் படிப்பு வரலை. ஆனா, நம்ம குட்டி எப்படிப் படிக்கிறா தெரியுமா?"



மலையுச்சியிலிருந்து உருட்டித் தள்ளியது போல் இருந்தது குட்டிக்கு...

கண்கள் செருகிக் கொண்டன; நெற்றிக்குள் ஏதோ ஒரு நரம்பு படீர் என்று வெடித்துத் தெறித்துச் சிதறியதில், உஷ்ண நதி பொங்கிப் பிரவகித்தது. குருதிப்புனல் ஜிவ்வென்று வெடித்து வெளிக்கிளம்பி காதுகள் வழி வருவது போல் ஓர் உணர்வைக் கொடுத்தது.

"அய்யோ! படிப்பை விட்டுட்டு நான் வேலைக்குப் போவணுமா? அம்மா! நான் வேலைக்குப் போவேன்மா. ஆனா, இப்ப இல்ல... படிச்சு முடிச்சு எங்க டீச்சருங்க மாதிரி, காட்டன் சேலையை இஸ்திரி போட்டுக் கட்டிக்கினு போவேன்மா.

ஜெயா டீச்சர் பேசப் பேச, குட்டியின் கண்கள் குளம் கட்டி நின்றன.

கமலா மட்டும் என்ன? அவள் குழந்தை படிப்பது அவளுக்குப் பெருமையில்லையா என்ன? வீட்டு நிலைமை சரியாக இல்லையே...

அடுத்து வந்த வாரத்தில் ஜெயா டீச்சர், வருகைப் பதிவேட்டின் படி வரிசையாக ஒவ்வொரு பெயராகக் கூப்பிட்டாள்.

"கலையரசி..."

"உள்ளேன் அம்மா!"

"கண்ணகி..."

''உள்ளேன் அம்மா!''

''குட்டி மீனாட்சி...''

மவுனம்... மவுனம்... துள்ளலும் துடிப்பும் நிறைந்த குட்டியின் குரல் அந்த வகுப்பறையில் ஒலிக்கவே இல்லை.

ஒரிரு நிமிடங்களுக்கு, ஜெயா டீச்சரால் மற்ற பெயர்களைப் படிக்கவே முடியவில்லை. உதட்டை அழுத்திக் கடித்தபடி இருந்தாள்.

அவள் மனத்துக்குள் புயல் அடித்தது.

-க்கும்... இதுதான் இவங்க கிட்ட ... எந்நேரம் பார்த்தாலும், அது ஏன் எந்த எஜமானியம்மாவா இருந்தாலும், இதுமாதிரியே நினைக்கறாங்க?... வேலைக்கு வரவ எல்லாருமே எதையாவது சுருட்டிக்கிட்டுப் போறவதானா? அது ஏன் இம்மாம் படிப்புப் படிச்சவங்க, இப்படி ஒரு சந்தேகப்படறாங்க?

குட்டி உம்மென்று கீழே இறங்கினாள்.

போயிடறானே... பாவம் அம்மா! எப்படித்தான் அவ்வளவு அடி உதையையும் தாங்கிக்கிதோ... சின்னதுங்களாவது இஸ்கூலுக்குப் போயிருக்குமா? இல்லையா?'

'அம்மாவுக்கு யார் கிட்டேயாவது கேட்டு ஒரு பழைய புடைவையாவது வாங்கித் தரணும். இருக்கிற ரெண்டும் சுத்தமாக் கந்தலாயிட்டுது ... வசந் தாம்மாகிட்டே நாளைக்கு கேட்டு டணும்...'

நடையை எட்டிப் போட்டாள் குட்டி...





இரண்டு வீட்டு வேலைகளையும் முடித்துவிட்டு, ஆயாசத்துடன் வசந்தம்மா வீட்டுக் கதவைத் தட்டினாள் குட்டி.

கதவு திறக்கப்பட்டது. உள்ளே பார்த்த குட்டி அதிர்ந்து போனாள்.

வசந்தம்மா சிரித்தாள்.

''என்னடி அப்படி நின்னுட்டே? கதவு ஸ்கிரீன், ஜன்னல் ஸ்கிரீன்லாம் நல்லா இருக்குதா?''

கறுப்புப் புடைவையில் சிறுசிறு மேகத்தீற்றலாய், ஆங்காங்கு நீலம்... குட்டி குட்டியாய்ச் சிவப்புப்பூக்கள்...

-'கேக்கறதும் நமக்குக் கிடைக்க மாட்டேங்குது; நாம கேக்கணும்னு நினைக்கறது கூட, அது எப்படியோ கிடைக்காம போயிடுதே...'

ஏமாற்றமாய்க் குட்டி ஸ்கிரீனையே பார்த்தபடி நின்றாள்...

ச்சே... இந்த நாட்டுக்கு என்ன நேர்ந்தது? சாராயத்தை எந்தப் பாவி கண்டுபிடித்தான்? இப்படி எத்தனை குட்டிகள் இந்த நாட்டில்...?

ஜெயா டீச்சர் அன்று முழுவதும் எதையோ இழந்தவள் போலத் தவித்துக் கொண்டிருந்தாள்.

''ஏ குட்டி! என்னடி பண்றே? எதைக் கிளப்பிக்கிட்டுப் போலாம்னு திட்டம் தீட்டிகிட்டு நிக்கிறியா?''

குட்டி முகம் சுளித்தாள்.

''மூஞ்சியை ஏண்டி உம்முன்னு வெச்சுக்கிட்டு இருக்கிறே? இந்தா...'' இட்லிகளையும் பழைய குழம்பையும் அவள் பக்கம் தள்ளி வைத்தாள்.

நசுங்கிப் போன தன்னுடைய அலுமினியக் கிண்ணங்களில் மாற்றிக் கொண்ட குட்டி நடக்கத் தொடங்கினாள்.

- 'பாவம் அம்மா ... ரெண்டு நாளா வேலைக்குப் போவலை! எங்கே இந்த அப்பன்தான் அப்பப்ப வந்து அடிச்சு நொறுக்கிட்டு, கையிலே இருக்கிற ஒண்ணு ரெண்டையும் பிடுங்கிக்கிட்டுப்

நினைப்பது முடியும்

டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தி

சில ஆதாரங்களை எடுத்துக்காட்டி நினைப்பது முடியும் என்று சொன்னால் நம்புவீர்களா?

சில பயிற்சிகளை எடுத்துச் சொல்லி இதைச் செய்து பாருங்கள் என்று சொன்னால் செய்துவர முடியுமா? நம்புங்கள், நினைப்பதை முடிக்கலாம்.

ஆன்மீகப் பாதையில் வழிகாண்போமா?

''ஒரு பொருளின் தன்மை பற்றி நாம் அறிந்து கொள்ளும்போது நாம் அதை வசப்படுத்துகிறோம் என்கிறார்கள் ஞானிகள். பஞ்ச பூதங்களாகிய நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் என்பவை பற்றி நாம் பூரணமாக அறிந்து கொள்ளும்போது நாம் அவற்றை, நம் வசப்படுத்துகிறோம்.

ஒரு பொருளைப் பற்றிய அறிவு, அதன் பல்வேறு பரிமாணங்கள் பல்வேறு கோணங்களிலிருந்து அதன் குணங்களைப் பற்றிய அறிவு, அதை உபயோகிக்கும் போது ஏற்படும் விளைவுகள் ஆகியவை பற்றி அறிந்திருக்க வேண்டும். சமீப காலமாக ஒரு பொருளைப் பற்றிய அறிவு என்பதற்குப் பதிலாக ஒரு பொருளைப் பற்றிய விழிப்புணர்வு (Awareness) என்று சொல் கிறோம். விழிப்புணர்வு என்பது துடிப்பு நிலை. அதைப் பற்றி ஆழமாக அறிதல்; அதன் உள்ளமைப்பு, வடிவம் அதன் தன்மை பற்றிய பூரண அறிவு. அதாவது நாம் எவ்வளவு தெரிந்து கொள்ள முடியுமோ அவ்வளவு. இதை எப்படித் தெரிந்து கொள்ள முடியும்?

எப்படி ஒரு பொருளின் தன்மை பற்றிய பூரண அறிவைப் பெற முடியும்?

இங்கே இரண்டு மூன்று விஷயங்கள் இருக்கின்றன.

எதைப் பற்றி நாம் சிந்திக்கிறோமோ அதுவாக நாம் மாறுகிறோம். இது மனவியல் உண்மை; அதாவது கிழக்கத்திய நாடுகள் கண்ட உண்மை; சொல்லப் போனால் உபநிடதம் கண்ட உண்மை.

அந்தக் காலத்தில் முனிவர்களும், யோகிகளும் பிரம்மத்தை அறிய விரும்பினார்கள். கடைசியில் அது வாகவே மாறினார்கள். எந்த குணங்களைப் பற்றிய தாகம் ஆழமாக அடிமனத்தில் ஓடுகிறதோ - ஓடிக்கொண்டிருக் கிறதோ, அதுவாகவே நாம் மாறுகிறோம். அதைப் பிடித்து இழுக்கிறோம்; நம் வசமாய் விடுகிறது. ''பணக்காரனாக வேண்டுமா, பணத்தைப் பற்றி சிந்தி; பணக்காரர்களுடன் உறவுகொள்; பணம் புழங்குகிற இடத்தில் வாழ்ந்து வா.''

''ஆன்மிகத்தில் சித்திகள் பெற வேண்டுமா? ஆன்மிக நூல்களைப் படி; சிந்தி. ஆன்மிக நிலையில் உள்ளவர் களுடன், யோகிகளுடன், சித்தர்களுடன் பழகிவா; அவர்களை நாடு. அவர்களிடம் போய் சாதகர்களாக - மாணவர்களாகச் சேர்.''

இங்கிலாந்தில் ஒரு பெரிய அரச குடும்பத்தில் பிறந்த ராஜகுமாரியை விரும்பியவன் அதுபற்றியே சிந்தித்து அந்த ஊருக்குச் சென்றான். அவள், தினமும் காலையில் நடந்து செல்கின்ற சாலையில் நடந்து சென்றான். அவளுக்குச் சமானமான நடை, உடை, பாவனைகளை மேற்கொண்டான். அவளுடன் பேசும், பழகும் சந்தர்ப் பங்களை உருவாக்கிக் கொண்டான்; பின்னால் அவளையே திருமணம் செய்து கொண்டான். இதுதான் நடந்தது!

எதை எண்ணுகிறோமோ அதுவாக மாறுகிறோம் என்பது ஒன்று.

அடுத்து ஒரு விஷயத்தைப் பற்றி அறிந்து கொள்ள நாம் பலரையும் - விவரம் தெரிந்தவர்கள் எல்லாரையும் - அதுபற்றிக் கேட்கிறோம். இத்தகைய அறிவைத்தான் நம் முன்னோர் நூல்கள், ஏடுகள் வாயிலாக விட்டுச் சென்றிருக்கிறார்கள். அவற்றைப் படிக்கிறோம்.


பரீட்சைக்குச் செல்லும் மாணவன் என்ன செய்கிறான்? அவன் தன்னைத் தயார் நிலையில் வைத்துக் கொள்கிறான். நன்றாகப் பரீட்சை எழுதவேண்டும் என்பது நமது எண்ணமாக மட்டும் இல்லை. நம் உடம்பின் ஒவ்வொரு 'செல்'லிலும் அது குரல் கொடுக்கிறது. நாமே அதுவாக மாறுகிறோம். இது நம் ஜீவனிலிருந்து புறப்படுகிறது. இது நம்மைத் தயார் நிலையில் வைக்கிறது. இது ஜீவதாகமாக - ஆதிமூலமே என்று அலறியதே யானை, முதலையால் கைப்பற்றப் பட்டபோது - அந்தக் குரலாய் எழுகிறது நம்முன். இது தயார் நிலை.

என்ன சொல்கிறார்கள் நம் பெரியவர்கள்?

''சீடன் தயார் நிலையில் இருக்கும்போது குரு தோன்றுவார்'' என்று சொல்கிறார்கள்.

''எனக்கு ஆன்மிக தாகம் இருக்கிறது. எல்லா நூல்களையும் பார்க்கிறேன், படிக்கிறேன். எல்லாத் தலங்களையும், எல்லாச் சித்தர்களின் சமாதிகளையும் சுற்றி வருகிறேன்;

→



உட்கார்ந்து தியானம் செய்கிறேன். தேடல் தணியாத தாகமாக இருக்கிறது. ஏன் தேவன் தோன்றவில்லை? ஏன் குரு என்னை ஆட்கொள்ளவில்லை? ஆசீர்வதிக்க என் முன் தோன்றவில்லை?'' கேள்விகள்; கேள்விகள்.

திரௌபதை துச்சாதனனால் துகிலுரியப்பட்டாள் அரச சபையில். அந்த அவலமான, பாபமான காட்சியை ஒரு கணம் கண்முன் கொண்டு வாருங்கள். அவள் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள மார்பைக் கையால் போர்த்திக் கொண்டாளாம்.

''கண்ணா!'' என்று குரல் கொடுத்து அலறினாள். எனினும் தன் கைகளால் மார்பைப் போர்த்திக் கொண்டாளாம். மேலும் துகிலுரிதல் நடந்த போது ''பரந்தாமா'' என்று இரு கைகளையும் உயரே கூப்பி அவனை நம்பி, கடைசி நிலைக்குப் போனாள். அவள் ஆடை, குறைவில்லாத ஆடையாக அவள் உடலை மறைத்த வண்ணம் நீண்டு கொண்டேயிருந்தது.

அது ஆன்மாவின் குரல்; ஆன்மாவின் அலறல். ஆதிமூலமே என்ற பிளிறல். அது கிளம்பும்போது எந்தக் குருவை நாம் சந்திக்க விரும்புகிறோமோ அவரே நம் வீட்டுக்கு வருகிறார். நாம் விரும்பும் எல்லாச் சம்பவங்களும் நம்மைச் சுற்றி நிகழ்கின்றன. பஞ்ச பூதங்களும் நம் சொல்லுக்குக் காத்திருக்கின்றன.

எதை அழைக்கிறோமோ அது வருகிறது; அது கிடைக்கிறது. எப்போது? சீடன் தயாராகும் போது...

மற்றொரு நோக்கில் நாம் பார்க்கலாம்.

இன்றைய நாளில் (இயற்பியல்) விஞ்ஞானிகள் அணுக்களைப்பற்றி ஆராய்கிறார்கள். அதாவது அணு அமைப்பின் ஒரு பாகத்தை - எலக்ட்ரானை - எடுத்துக் கொள்கிறார்கள். இந்த எலக்ட்ரான் ஒரு வட்டப் பாதையில் புரோட்டான் என்ற கருமையத்தைச் சுற்றி வருவதாக நாம் படித்திருக்கிறோம். சமீப காலத்தில் ''இந்த எலக்ட்ரான் ஒரு பொருளாக - சின்னஞ்சிறுதுகளாக - புரோட்டானைச் சுற்றி வருவதில்லை; மாறாக ஒரு மேகக் கூட்டம்போல - வால் நட்சத்திர ஒளிபோல - சுற்றி வருகிறது; அது பொருளில்லை!'' என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

விஞ்ஞானிகள் முன் இருக்கும் கேள்வி: எலக்ட்ரான் என்பது ஒரு பொருளா? அல்லது அலைபோலச் செல்லும் நிலையா? என்பதுதான்.

இந்த எலக்ட்ரான் வரும் பாதையில் துகளைக் கண்டு பிடிக்கும் கருவியை வைத்தார்கள். அந்தக் கருவி 'அது துகள் தான்' என்று காட்டியது. இப்போது அந்தக் கருவியை எடுத்துவிட்டு, அது அலையாக இருக்கு மானால், அந்தப் பதிவுகளைத் தெரிவிக்கும் கருவியை அதன் பாதையில் வைத்தார்கள். ''ஆம்! நான் ஓர் அலைதான்!'' என்று அது சொல்லியது.

விஞ்ஞானிகள் திகைத்துப் போனார்கள். ''பொருளா?'' என்று கேட்டால் 'ஆம்' என்கிறது; ''அலையா?'' என்று கேட்டால் ''ஆம், ஆம்!'' என்கிறது.

''இது என்ன?'' என்று வியந்தார்கள்! குழம்பினார்கள்! பின் ஒரு பேருண்மையைக் கண்டு பிடித்தார்கள்.

அதாவது நாம் பார்ப்பதற்கேற்ப எலக்ட்ரான் நடந்து கொள்கிறது. நம் எதிர்பார்ப்பிற்கேற்ப அது மாறுகிறது.

இங்கே பார்ப்பவன் இருக்கிறான்; பார்க்கப்படும் பொருள் (எலக்ட்ரான்) இருக்கிறது. பார்க்கும் விதம் இருக்கிறது.

பார்ப்பவன், எதை மனத்தில் எதிர்பார்த்து, எந்தக் கருவியை வைக்கிறானோ, அதற்கேற்ப அதுவாக அது காட்சி அளிக்கிறது.

நீங்கள் கேட்கலாம். நான் எலக்ட்ரானை யானையாகப் பாவிக்கிறேன். எறும்பாக எதிர்பார்க்கிறேன். அப்படி அது ஆகுமா? அப்படித் தன்னைக் காட்டிக் கொள்ளுமா?

காட்டிக் கொள்ளாது. எப்படி மனித வாழ்வில் நாம் கேட்கும் ஒலியில் நமக்குச் சில எல்லைகள் வரை காதில் விழுகின்றனவோ, (நாய்கள் நாம் கேட்க முடியாதவற்றைக் கூடக் கேட்கும் திறன் படைத்திருக்கின்றன.) அதுபோல எலக்ட்ரானுக்கு, சில எல்லைகள் இருக்கின்றன; குறுகிய எல்லை நம்முடைய கணிப்பில்.

நம் பார்வைக்கேற்ப அது மாறுகிறது என்பதுதான் மிகப்பெரிய அதிசயம். அதுவும் எலக்ட்ரான் ஒரு ஜடப் பொருள்!

''அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்'' என்பார் கம்பர். அண்ணல் நோக்கினான். அவனது பார்வையால் அவளும் - சீதையும், - பாதிக்கப்பட்டாள். அங்கே ஜீவன்! இங்கே ஜடப்பொருள்! இதைத்தான் ஆங்கிலத்தில் (Observer Participancy) பார்ப்பவர்களும் தங்கள் பார்வையால் பார்க்கப்படும் பொருளைப் பாதிக்கிறார்கள் என்று விளக்குகிறார்கள். தெளிவாகச் சொன்னால், நாம் ஒரு பொருளைப் பார்க்கிறோம். நம் பார்வையால் அந்தப் பொருளில் ஒரு தாக்கம் ஏற்படுகிறது. அதுவும் நம் விருப்பத்திற்கேற்ப அசைந்து கொடுக்கிறது; அதுவும் நம் செயலில் பங்கேற்கிறது.

பார்ப்பவன் மாத்திரம் பார்க்கவில்லை. பார்க்கப்படும் பொருளும் அந்தப் பார்வையில் பங்கு பெறுகிறது.

இந்த விஞ்ஞான உண்மையின் அடிப்படையில் நாம் ஒரு பொருளைப்பற்றி, ஒரு மனிதரைப் பற்றி, செல்வத்தைப் பற்றி அல்லது நம் குருவைப் பற்றிச் சிந்திக்கிறோம்; அல்லது எதிர்பார்க்கிறோம் என்றால் என்ன ஆகும்?

பணமும் சரி, நமது குருவும் சரி, நமது எதிர் பார்ப்பிற்கேற்ப நம்முடன் ஈடுபடுகிறார்கள். இதுதான் உண்மை.

தத்துவமஸி ''நாம் அதுவாக மாறுகிறோம்'' என்கிற தத்துவத்தின்படியும், ''சீடன் தயாராக இருக்கும் போது குரு தோன்றுவார்'' என்ற ஆதிமூலத் தத்துவத்தின் மூலமும், பார்வையாளருடன் பார்க்கும் பொருளும் உறவு கொள்கிறது என்ற விஞ்ஞானக் கோட்பாட்டின் மூலமும் நமக்கு விளங்குவது ஒரே ஒரு விஷயம்தான்.

நினைக்கிற முறையில் நினைத்தோமானால், நினைப்பது முடியும் என்பதுதான்.

காஞ்சிப் பெரியவர், சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்கள், ஆதிசங்கரர் பிரச்னோத்திரமாலிகா (பிரச்ன - கேள்வி; உத்தரம் = பதில்) என்ற நூலில் இதற்கான பதிலைக் கூறுகிறார். எதையாவது நினைத்து அப்படித் திரும்பித் திரும்பி அதையே கேள்வி கேட்டுக் கொண்டிருந்தால், - அதாவது அறிவால் ஒரு விஷயத்தை ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருந்தால் - சரியான பதில் கிடைக்கும்'' என்பதுதான் அது.

''கேள்விதான் - அந்தக் கேள்விதான் - பதில் தரும். அதாவது ஆத்ம சிந்தனை எப்போதும் கொஞ்சமாவது இருந்து கொண்டிருக்க வேண்டும்'' என்கிறார் பெரியவர்.

நினைவில் கொள்ளுங்கள்:

விசாரிக்கும்போது அவை வெளிப்படுத்தப்படு கின்றன.

பகவான் ரமணருடைய அணுகுமுறையும் அதுதானே! பதினாறு வயது இளைஞருக்கு - ரமணருக்கு செத்துப் போவது போன்ற ஓர் அனுபவம் ஏற்படுகிறது. கேட்கிறார். ''யார் செத்துப் போவது? இந்த உடலா? நானா?'' இந்தக் கேள்விகள் தான் அவருக்கு விடை தந்தன. ''நீ மெய்யுணர்வு. மூலத்தின் ஒரு பகுதி சாவதில்லை'' என்ற விடை.

ஒன்றை நினைவு கொள்ள வேண்டும். நாம் பொருளைப் பற்றி எண்ணினோமானால் பொருளுடன் ஒன்றிவிடுவோம். காமத்தைப் பற்றி எண்ணங்கள் விருத்தி யாகுமானால், நாம் காம உணர்வின் உந்துதலுக்கும், செயலுக்கும் ஆளாவோம்.

விரும்பியதை அடைய முயல்பவர்கள் எண்ண விருத்தியின் விளைவுகளைப் பூரணமாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஏனெனில் எண்ணங்களை நல்லவற்றிற்கும் உப யோகிக்கலாம். அற்ப சுகங்களுக்கு ஆசைப்பட்டு நம்மை அழித்துக் கொள்வதிலும் இறங்கலாம். இது எச்சரிக்கை.

நினைப்பதை முடிப்பதில் அதிகம் பேர் கேள்விப் பட்டிராத ஒரு சொல் இருக்கிறது. அதை ஆழ்நிலைத் தியானம் பற்றி எழுதும் ராஜா ராம்ஜி அவர்களும் ராஜயோகம் பற்றி எழுதும் சுவாமி சித்பவானந்தர் அவர்களும் இதைப்பற்றிக் குறிப்பிடுகிற விஷயம்.

நாம் பார்ப்பது - நாம் வாழ்வது - எல்லாம் இந்த உலகில்; நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் என்ற ஐந்து பொருள்களால் ஆன உலகம். இந்தப் பொருள்கள் அனைத்தும் இரட்டைத் தத்துவ நிலையில் இருக்கின்றன. அதாவது பொருள் - சக்தி, ஒளி - இருள், பிறப்பு - இறப்பு, ஆண்-பெண், இன்பம்-துன்பம், லாபம்-நஷ்டம், தர்க்கவாத அறிவு - உள்ளுணர்வு, நேர் மின்சாரம் - எதிர்மின்சாரம், பொருள் உலகம் - சூக்கும உலகம் என்று ஆக்கப்பட்டிருக்கின்றன. இந்த இரட்டை நிலையை யார் உருவாக்கியது?

அதாவது இவ்வுலகம் - பிரபஞ்சம் - தோன்றுவதற்கு முன்னால் ஒரு நிலை இருந்திருக்க வேண்டும். அந்த நிலையைத்தான் மூலம் என்றும், தோன்றா நிலை

பிரபாகர பாபு



மழலைகள் தீப ஒளிகள்!

எத்தனை விதங்கள் எத்தனை ரகங்கள் !
எல்லாம் எழில் ரதங்கள் – அவை
மொத்தமும் அருஞ் சித்திரம் நிகர்த்த
மானுட மென் மலர்கள் !

அன்புச் சேய்தனை அள்ளி நுகர்ந்தால்
ஆனமா சிலிர்த்துவிடும் – அட
சின்னஞ்சிறு கை தொடுகையில் போதும்
சிந்தை நெகிழ்ந்து விடும்.

சிறுநுதல் சுருக்கிச் செவ்விதழ் பிதுக்கும்
சிணுங்கலில் அழகிருக்கும் – அந்த
குறுகுறு விழிகளில் குறும்புகள் தெறிக்கும்
குறுநகை அலைக்கழிக்கும்.

துள்ளித் தவழும் அபிநயங்களிலே
துன்பம் பறந்து விடும் – அவை
சொல்லில் விளங்காச் சுகங்களைச் சுரக்கும்
சொர்க்கம் திறந்து விடும்.

உறவுச் சங்கிலி பெருக்கிடும் வாரிசு
வாழ்வினில் பெரும் பேறு – ஓர்
உரிமைக் கிண்கிணி ஒலித்திடத் தவழ்கையில்
உள்ளத்தில் கனிச்சாறு.



(Un Manifest) என்றும், தூய அறிவாற்றல் (Pure Consciousness) என்றும் கூறுகிறார்கள்.

கடவுள், ஆண்டவன் என்றெல்லாம் சொல்லி விட்டால் எல்லாருக்கும் புரிந்துவிடும் என்று அப்படிச் சொல்கிறார்களோ என்று ஒரு சந்தேகம். எனினும் இந்த விளக்கங்கள், வார்த்தைகளால் சொல்ல முடியாததை நமக்கு ஓரளவு தெளிவுபடுத்த உதவுகின்றன.

இன்றைய மேனாட்டு அறிஞர்களை எல்லாம் மிஞ்சிப்போய், நமது சித்தர்கள் இதை 'வெட்டவெளி' என்றார்கள்.

''வெட்ட வெளிதனையே
மெய்யென்று இருப்பார்க்கு
பட்டயம் ஏதுக்கடி - குதம்பாய்
பட்டயம் ஏதுக்கடி?''

என்று குதம்பைச் சித்தர் பாடுகிறார்.

''வெட்டவெளிதான் மெய் - உண்மை என்று அவன் கண்டு பிடித்துவிட்டான். அவனுக்கென்ன ஸ்ரீலஸ்ரீ அல்லது தவத்திரு என்றா பட்டங்கள் வேண்டும்?'' கேட்கிறார் சித்தர்!

வெட்டவெளி நிலை என்றால் தோன்றா நிலை. தோற்றத்திற்கு முந்தைய நிலை; சிருஷ்டிக்கு முந்திய நிலை.

இதை, தியானத்தின் மூலம் நாம் அடையலாம். இது எண்ணமற்ற நிலை. தொடக்க இருப்பு நிலை. ''எண்ணமற்ற நிலை என்றால் ஜடம் போன்று கிடப்பது என்று அர்த்தமில்லை. எண்ணமற்ற நிலை எய்த எண்ணம் முழுதும் வசப்பட்டாக வேண்டும்'' என்று எழுதுகிறார் சுவாமி சித்பவானந்தர்.

மேலே - மிக மேலே - எண்ணமற்ற நிலை இருக்கிறது. அதிலிருந்து கீழே சிருஷ்டி தொடங்குகிறது. பிறகு கீழே பஞ்ச பூதங்களால் ஆன இவ்வுலகம் இருக்கிறது. சிருஷ்டிக்கு முன்னால், சிருஷ்டிக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. இந்த இடத்தில் பல எண்ணங்கள் - சங்கல்பங்கள் - விதைகளாக எஞ்சி நிற்கின்றன.

இவ்வுலக எண்ணங்களிலிருந்து மேலே செல்லும் மனிதன் சிருஷ்டி நிலைக்குச் செல்கிறான். சிருஷ்டிக்கு முன் உள்ள ஒரு நிலைக்குச் செல்கிறான். அதையும் கடந்து மேலே செல்லும்போது தான் எண்ணமற்ற - எண்ணங்களை வென்ற - தூய அறிவாற்றல் நிலையை அடைகிறான்.

அட்டமா சித்திகளைப் பயில்பவர்கள் பிரகிருதி என்ற பொருள் உலகிலிருந்து மேலே சிருஷ்டியின் தொடக்க நிலைக்குச் செல்லும்போதும் - அல்லது தோன்றா நிலையிலிருந்து கீழே இறங்கி வரும்போதும், இருக்கின்ற இடைநிலையில் எண்ணங்கள் - சங்கல்பங்களை - விதையுங்கள் என்று சொல்கிறார்கள். இதற்குத்தான் சம்யமம் என்று பெயர்.

எந்த இடத்தில் எண்ணங்களை விதைக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள். பக்குவப்பட்ட மண்ணில்தான் விதை கிளம்புவதுபோல், ஒன்றிய சமாதி நிலையிலிருந்து இறங்கும்போது சங்கல்பம் செய்து கொள்வோமானால் அந்தச் சங்கல்பம் இந்தப் பொருளுலகிலும் - புலனாகாத உலகிலும் - சித்தியாக மலர்கிறது.

மனிதர்கள் அனைவரும் - இதைப் படிக்கும் அனைவரும் - நினைப்பது முடியும் என்று சித்திகளை அடைந்துவிட முடியுமா? மனத்தை வென்றவர்களால் தான் பஞ்ச பூதங்களை வெல்ல முடியும்; வசப்படுத்த முடியும்.

ஆழ்நிலைத் தியானத்திலிருந்து வெளிவரும் தொடக்க நிலையில் இரண்டு நிகழ்த்தலாம். ஒன்று, ''மேலிருந்து நம்மை வழி நடத்தும் ஆணைகள் என்ன?'' என்று எதிர்பார்த்தால் அது கிடைக்கும். அல்லது எண்ணமற்ற நிலையிலிருந்து இறங்கி சங்கல்பம் செய்து கொள்வோமானால் எண்ணம் (சம்யமம்) நிறைவேறும். நிபந்தனைகள் கடுமையானவைதான். இது ஏதோ போகிற போக்கில் செய்கிற விஷயமில்லை.

நம்மை யார் என்று அறிந்து கொள்ளாமலே வாழ்க்கை நடத்துகிறோமே, ''நம்முள் யார் இருக்கிறார்? எப்படிப்பட்ட மாபெரும் சக்தி இருக்கிறது?'' என்பதைப் புரிந்து கொள்ள வேண்டாமா? அதற்கான வழிமுறை இது.

''இது இப்படி'' என்ற அறிவு விழிப்புணர்வு - இருக்கிறதே அதுவே பாதி வெற்றி என்கிறார்கள் அறிஞர்கள். எனவே இன்னும் முழுமையை நோக்கி நடைபோடுவோம்!

திருபுவனம் ஸ்ரீகம்பகரேஸ்வரர்

நாகராஜகுமார்

பக்த பிரகலாதனின் கதையை அறியாதவர் யாரிருக்க முடியும்?

'உன் கடவுள் எங்கிருக்கிறான்?'' கேட்கிறான் இரணியன்.

''தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருக்கிறார்'' என்று சொல்கிறான் பிரகலாதன்.



யானையும் காளையும் - ஈருடல் ஓர் தலையாக!

''இல்லை. உன் கடவுள் எனக்கு அஞ்சிக் கொண்டு ஒளிந்து வாழ்கிறான். அவன் எங்கும் இருப்பது உண்மை யானால் இதோ எதிரில் இருக்கும் இந்தத் தூணில் வரட்டும் பார்க்கலாம்'' என்று சொல்லி வெறியோடு அந்தத் தூணை உதைக்கிறான் இரணிய அரக்கன்.

தூண் இரண்டாகப் பிளக்கிறது. திருமால் நரசிம்மராக அவதரிக்கிறார். இரணியனின் குடலை மாலையாக அணிந்து, அவன் குருதியைக் குடித்து முடித்தும் நரசிம்மரின் வெறி அடங்க வில்லை.

வெறி கொண்டவராக அலைகிறார் திருமால். அவதார வெறியைக் கண்ட தேவர்கள் பிரம்மனிடம் முறையிட, பிரம்மன் சிவபெருமானிடம் ஓடுகிறார்.

வரம் கொடுத்த சிவபெருமான் சரபப்பறவையாக உருவெடுக்கிறார். வெறி கொண்டு அலையும் நரசிம் மத்தை வில்வ வனத்தில் சாந்தப் படுத்துகிறார்.

இவ்வாறு நரசிம்மத்தின் வெறி யினை சிவபெருமான் அடக்கியதால் - திருமாலின் நடுக்கம் தீர்த்தவர் என்பதால் சிவபெருமானை 'கம்ப கரேஸ்வரர்' என அழைத்துப் போற்று கிறார்கள், இத்தலத்தில்!

சரி - இத்தலம் எங்கிருக்கிறது?

கும்பகோணத்திலிருந்து எட்டு கி.மீ. தூரத்தில் திருவிடை மருதூருக்கு மேற்கே ஒரு கி.மீ. தூரத்தில் இருக்கிறது.

'திருபுவனம்' என்ற இத்தலத்தின் பழைய பெயர் 'திரிபுவன வீரபுரம்' என்பதாம்' என்று கல்வெட்டுகள் கூறு கின்றன.

இத்தலத்தில் இன்னொரு சுவாரஸ்ய மான கதையும் உண்டு. முன்னொரு காலத்தில் அகவக்ரீவன், விருஷபக் ரீவன், வியாழக்ரீவன் எனும் மூன்று அரக்கர்கள் இருந்தனர். இளமை யிலேயே இம்மூவரும் தீயவர்கள். வரம் பெற்று உயர்ந்தால் இவர்கள் மேலும் கொடியவர்களாகி விடுவார்கள் எனக் கருதிய தேவர்கள், இவர்களை அப் பொழுதே அழிக்கக் கருதி, படை யெடுத்து வந்து போரிட்டனர். தேவர் களின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அரக்கர்கள் மூவரும் தேவலோகத்தை விட்டு மண் ணுலகத்திற்கு ஓடி வருகிறார்கள். இங்கே வில்வ வனம் எனப்படும் திருபுவனத்தில் காட்டில் ஒளிகிறார்கள்.



ஸ்ரீகம்பகரேஸ்வரர் ஆலய விமானம்



திருபுவன ஆலய வாயில்

அங்கே (நரசிம்மத்தின் வெறியை அடக்கிய ஸ்ரீ கம்பகரேஸ்வரரின்) சிவலிங்கத்தைக் கண்டு வழிபடுகிறார்கள். சர்வ வல்லமை வேண்டும் என்று தவமிருக்கிறார்கள். அரக்கர்களின் தவத்திற்கு (வழக்கமாக) மகிழ்ந்து விடும் சிவபெருமான், அவர்கள் வேண்டிய வரத்தைத் தாராளமாக வழங்கி விடுகிறார்.

பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றில் மூன்று கோட்டைகளை மிகவும் உறுதியாக ஏற்படுத்திக் கட்டிக்கொண்டு, அரக்கர்கள் மூவரும் சிவனின் அருளால் புதிய வலிமையுடன் தேவர்களுக்கும், மற்றவர்க்கும் தொல்லை தரத் தொடங்குகிறார்கள்.

தேவர்கள் சிவனிடம் முறையிட, சிவபெருமான் மேரு மலையை வில்லாகக் கொண்டு, திருமாலை அம்பாகக் கொண்டு, தேவர்களைத் தேர் முதலியனவாகக் கொண்டு அரக்கர்களை அழிக்கப் புறப்பட்டு வருகிறார். ஆனால் அரக்கர்களின் கோட்டைகளை சிவன் பார்த்த அளவிலேயே அவை எரிந்து - அரக்கர்கள் அழிகின்றனர்.

இவ்வாறு அழிந்த இந்த அரக்கர்கள் ஒரு காலத்தில் தங்கி வழிபட்ட வில்வ வனமாக இத்தலம் இருந்ததால் இத்தலத்திற்கு 'திருபுவனம்' என்ற பெயர் உண்டு என்பதாகத் தல வரலாற்றில் சொல்லப்படுகிறது.

இத்தலத்திற்கு வில்வ வனம், திரிபுவன வீரபுரம், தேவக்ஷேத்திரம். நிம்பாண்டிய க்ஷேத்திரம் என்ற பெயர்களும் உண்டு.


ஆக - இத்தலத்தில் கோயில் கொண்டுள்ள இறைவன் திருப்பெயர் அருள்மிகு கம்பகரேஸ்வரர் - நடுக்கம் தீர்த்த பெருமான் - என்பர். இறைவியின் பெயர் - 'அறம் வளர்த்த நாயகி' - வடமொழியில் 'ஸ்ரீ தரும சம்வர்த்தினி' என்பர். சரபப் பறவையாய் மாறி, திருமாலுக்கு அருளியதால் இத்தலத்து இறைவனுக்கு 'சரப மூர்த்தி' என்ற பெயரும் உண்டு.

இக்கோயிலைக் கட்டியவன் மூன்றாம் குலோத்துங்க சோழன்.

வரகுண பாண்டியன் இக்கோயிலுக்குப் பல திருப்பணிகளைச் செய்துள்ளான். பிரம்மஹத்தி தோஷத்தால் பீடிக்கப்பட்டு அவன் துன்புற்றபோது திருவிடைமருதூருக்கு வந்து தங்கியிருந்து, அருள்மிகு மகாலிங்கப் பெருமானை வழிபட்டு பிரம்மஹத்தி தோஷம் நீங்கப் பெற்றான். தோஷம் நீங்கினாலும் உள்ளத்தினுள் இருந்த நடுக்கம் நீங்கவில்லை. திருவிடை மருதூருக்கு மேற்கே உள்ள திருபுவனம் வழியாகப் பாண்டிய நாட்டுக்குப் புறப்பட்ட போது, திருபுவனம் எல்லை வந்ததும் பாண்டியன் நடுக்கம் தீர்ந்ததை உணர்ந்தார். அதனால் இத்தலத்து இறைவனை வழிபட்டு, பல திருப்பணிகள் செய்துள்ளான்.

சரப மூர்த்தி ஆலய விமானம்





சிற்பத் திறன் மிக்க கருவறை விமானம் - தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரம் கோயில் கருவறை விமானங்களைப் போல் வடிவம் கொண்டது.



தாய்பாலுக்கு நிகருண்டோ?



திருச்சுற்று முழுக்க சிற்ப வேலைபாடுகள்



மூர்த்தி, தலம் மட்டுமல்லாமல் இத் தலத் தீர்த்தலங்களும் சிறந்தவை. சரப தீர்த்தம், தேவ தீர்த்தம், ஞான தீர்த்தம், வியாச தீர்த்தம், பிருக தீர்த்தம், சித்த தீர்த்தம் ஆகியவற்றில் நீராடி, அசுவக் ரீவன், விருஷபக்ரீவன், வியாழக்ரீவன், பிரமாதி தேவர்கள், இலக்குமி, வருணன், இராஜராஜன் ஆகியோர் வழிபட்டுப் பற்பல பேறுகளைப் பெற்றுள்ளனர்.

ஊரின் நடுவே கிழக்கு நோக்கி இக்கோயில் அமைந்துள்ளது. இரண்டு கோபுரங்களும், மூன்று நுழை வாயில்களும் உள்ளன. கருவறைக்





கோபுரம் மிகப் பெரியது. முழுவதும் கருங்கல்லால் ஆனது. சிற்பத் திறன் மிக்கது. தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரம் கோயில் கருவறை விமானங்களைப் போல் இந்த விமானம் அமைந்துள்ளது.

இரண்டு பிராகாரங்கள். முதல் பிரா காரத்தைச் சுற்றி திருச்சுற்று மாளிகை. இப்பிராகாரத்தின் நடுவில் நடுக்கம் தீர்த்த நாயகரான கம்பகரேஸ்வரர் சந்நிதி அமைந்துள்ளது. மூலவர்க்கு வடபால் அம்மன் கோயிலும் வடகிழக்கில் சரபர் கோயிலும் உள்ளது. இரண்டாம் பிராகாரத்தில் வசந்த மண்டபம், யாக சாலை உள்ளன. கோயிலைச் சுற்றி விநாயகர், அய்யனார், பிடாரி போன்ற கோயில்களும் இருக்கின்றன.

சரபர் சந்நிதி சிற்பத்திறன் மிக்கது. குறிப்பாக சரபர் சந்நிதியில் உள்ள ஸ்ரீ தேவி, பூ தேவி சிலைகள் சிற்பக் கலைத் திறன் கொண்டவை.

யாளி முகம், எட்டு கால்கள், நான்கு கைகள், இறக்கைகள் கொண்டு விளங்குகின்ற சரபர் திருவுருவம் காட்சிக்கு விருந்து. பக்தர்கள் வேண்டு தல் செய்து கொண்டு அர்ச்சனை, சந்தனக்காப்பு ஆகியவற்றுடன் சரப வேள்வி செய்து வழிபடுகின்றனர்.

பகை நீக்கம், பிள்ளைப் பேறு பெறுதல், பில்லி, சூன்ய பயம் நீக்குதல், விவாகத் தடை நீக்குதல் முதலான பல பேறுகளுக்கு பக்தர்கள் இடையறாது வந்து சரபரை வழிபட்டுப் பயன் பெறுகின்றனர். குறிப்பாக ஞாயிற்றுக் கிழமை - இராகு காலத்திலும், வெள்ளிக்கிழமை - இராகு காலத்திலும், இக்கோயிலுக்கு வந்து சரப மூர்த்தியை வழிபாடு செய்வது மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

இக்கோயிலில் ஒவ்வொரு நாளும் காரண, காமீக, ஆகமப்படி ஐந்து கால பூஜைகள் நடக்கின்றன. பங்குனி உத்திரத்தில் பிரம்மோத்சவமும், நவ ராத்திரியும் நிறைபணியும் இங்கு நடைபெறும் சிறந்த விழாக்கள். நவராத்திரியில் அம்மனுக்கு லட்சார்ச் சனையும், பங்குனியில் சரபருக்கு லட்சார்ச்சனையும் நடைபெறுகிறது. இது தவிர விஜயதசமி, திருவாதிரை, சங்கராந்தி போன்ற காலங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

இக்கோயில் திருக்கயிலாய பரம் பரைத் தருமையாதீனத்தின் ஆட்சிக்கு உட்பட்டு சிறப்பாக நிர்வகிக்கப் படுகிறது.

ஆக, திருபுவனம் - ஒரு புறம் பட்டுச் சேலைகளின் களஞ்சியமாக விளங்கு வதுடன், மறுபுறம் அருள்மிகு கம்ப கரேஸ்வரரின் ஆலயத்தின் சிறப்பால் தமிழ்நாட்டிற்கு வளம் சேர்த்துக் கொண்டு இருக்கிறது.

சமீபத்தில் 'மகாநதி' திரைப் படத்தின் 'ஸ்ரீரங்கநாதனின்' பாடல் காட்சியில் இடம் பெற்றது என்றால் எல்லாருக்கும் எளிதில் புரிந்து விடக் கூடியதான இந்த வரலாற்றுப் பெருமை மிக்க ஆலயத்துக்கு நாமும் சென்று, இறையருள் பெறுவோம்.

போட்டோ : யோகா

இளைய அமுதம்

தீபாவளி ஸ்பெஷல்

தயாரிப்பு டாக்டர் பூவண்ணன்





அமுதக் குழந்தைகளே!

தீபாவளி சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரும் விரும்பும் திருவிழா. காஷ்மீரத்திலிருந்து கன்யாகுமரி வரை வாழும் பலரும் கொண்டாடும் ஒளி விழா.


தீபாவளி நாள் ஐப்பசி மாதம், அமாவாசை நாளில் அல்லது அந்த நாளை ஒட்டி வரும்.

அன்று அதிகாலையில் எழுந்து எண்ணெய் தேய்த்து, வெந்நீரில் குளித்து, தீபம் ஏற்றி வழிபடுவார்கள். எண்ணெயில் இலக்குமி இருக்கிறாள். நீரில், அது வெந்நீராக இருந்தாலும், அந்த நீரில் கங்கை இருக்கிறாள். அன்று நீராடுபவர்கள், கங்கையில் நீராடும் பலனைப் பெறுகிறார்கள். அதனால் ஒருவருக்கொருவர் 'கங்கா ஸ்நானம் ஆச்சா?' என்று கேட்டுக் கொள்வது மரபு. அன்று பலருக்கும் பட்சணம் தருவதும், பணியாட்களுக்கு இனாம் வழங்குவதும் தொன்று தொட்டு இருந்து வரும் வழக்கம். தொழில் நிறுவனங்கள் இத்திருநாளையொட்டி, சில நாள்களுக்கு முன்பே தொழிலாளர்களுக்கு 'போனஸ்' வழங்குவது புதிய வழக்கம்.

வடநாட்டில் குஜராத்தியரும், மராத்தியரும் அன்று மாலை சாரதா பூஜை நடத்தி, பழைய கணக்கை முடித்துப் புதிய கணக்கைத் தொடங்குவார்கள். கணக்குப் புத்தகங்களுக்குப் பூஜை செய்வார்கள். இவர்கள் தீபாவளி இரவை, 'சுகராத்திரி' என்பார்கள்.

மாவலிச் சக்ரவர்த்தி முடி சூட்டிக் கொண்ட நாள் இது என்றும், சமண சமயத்து மகாவீரர் பரிநிர்வாணம் பெற்ற நாள், அவர் இப்பூவுலகை விட்டுச் சென்ற நாள் என்றும் கூறுவார்கள்.

இராமன் இராவணனைக் கொன்று, வெற்றி பெற்று



அயோத்திக்குத் திரும்பினான். அயோத்தி மக்கள் அன்றிரவு முழுவதும் எல்லா இடங்களிலும் தீபங்கள் ஏற்றிக் கொண்டாடினார்கள். அந்த நாள்தான் தீபாவளி ஆயிற்று எனவும் கூறுவார்கள்.

"ஆவளி என்றால் வரிசை என்று பொருள். தீபம் + ஆவளி = தீபங்களின் வரிசையே தீபாவளி என்றாயிற்று" என்பர்.

நரகாசுரன் பல கொடுமைகள் செய்தான். அவன் திருமாலுக்கும் நிலமகளுக்கும் பிறந்தவன். அதாவது, கண்ணனுக்கு மகன் இவன். இவனது கொடுமையை ஒழிக்கக் கண்ணபிரான் போரிட்டார். அப்போது கண்ணனின் தேரைச் செலுத்தியவள், கண்ணன் மனைவி சத்யபாமா. இந்தப் பாமா நிலமகளின் அவதாரம்.

நரகாசுரனுடன் அவன் தந்தை கண்ணன் போரிட்டு மூர்ச்சையாக, அவன் தாய் சத்யபாமா போரைத் தொடர்ந்து நடத்தி அவனைக் கொன்றாள். தான் இறந்த நாளை மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும் என்று நரகன் வேண்டி வரம் பெற்றான். அதனால் பிறந்ததே தீபாவளி என்னும் கதையும் உண்டு.

தீபாவளி இந்துக்களின் திருநாள். என்றாலும் சமரச நோக்கம் கொண்ட அக்பர், அந்நாளில் அரண்மனை முழுதும் விளக்குகளால் அலங்கரிக்கச் செய்தாராம். வங்காள நவாப் சிராஜ்-உத்-தௌலா தீபாவளி கொண்டாடினாராம். சீக்கியர்களும் இத்திருநாளைக் கொண்டாடினர்.


ஆம், ஒளித்திருநாள் ஒற்றுமை நாளாகவும் திகழ்ந்தது; திகழ்கிறது.


அமுதக் குழந்தைகளே! இந்தத் தீபாவளியை நீங்களும் மகிழ்ச்சியாகக் கொண்டாடுங்கள். மகிழ்ச்சியை ஏழை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். அனைவர்க்கும் தீபாவளி வாழ்த்துகள்.

உங்கள்

அமுதன்,

டாக்டர் பூவண்ணன்





சின்ன மீன் பெரிய மீன்

ரம்யாவுக்கு அவள் தந்தை ஒரு சின்ன மீன் தொட்டி வாங்கிக் கொடுத்தார். அதில் அழகான தங்கமீனை, ஒரே ஒரு மீனை மட்டும் வளர்த்தாள் ரம்யா.

"ஒரு மீன் போதுமா? இன்னும் சில மீன்களை வாங்கித் தரட்டுமா?" என்று தந்தை கேட்டார்.

"வேண்டாம்பா. இந்த ஒரு மீனே போதும். இதுவே பெரிசா வளர்ந்து தொட்டி முழுசையும் அடைச்சு நிக்கணும்" என்று கூறிவிட்டாள் ரம்யா.

ரம்யா தினமும் மீனுக்குத் தேவையான உணவைக் கொடுத்து வந்தாள்.

ஒரு மாதம் சென்றது.

தங்க மீன் பெரிய மீனாக வளரவில்லை. முதலில் இருந்ததைப் போலவே இருந்தது.

அதனால் ரம்யாவுக்குக் கோபம் வந்தது.

தங்க மீனுக்கு வாங்கி வந்த உணவு முழுதையும் ஒரு நாள் அதில் கொட்டிவிட்டாள் ரம்யா.

"இவ்வளவையும் சாப்பிடு! காலையிலே எழுந்து பாக்கறப்போ பெரிசா இருக்கணும்" என்று தங்க மீனிடம் கட்டளையிட்டாள் ரம்யா.

அத்தோடு நிற்கவில்லை. பூஜை அறைக்குப் போனாள். அங்கே சிவபெருமான், முருகன், விநாயகர் முதலிய எல்லாரும் இருந்தார்கள். அவர்கள் முன் கைகூப்பினாள்.

"கடவுள்களே! நீங்க சக்தியுள்ள கடவுளான்னு சோதிக்கப் போறேன். நீங்க சக்தியுள்ள கடவுளாயிருந்தா என் தங்க மீன் பெரிசா வளரணும். வளர்ந்துகிட்டே இருக்கணும். உலகத்திலேயே பெரிய மீனாகணும்".

ரம்யா வேண்டிவிட்டு, படுக்கை அறைக்குப் போனாள். படுத்துக் கொண்டாள்.

காலைச் சத்தங்கள் ரம்யாவை எழுப்பின.

ரம்யா கண் விழித்தாள். போர்வையைத் தள்ளிவிட்டு எழுந்து உட்கார்ந்தாள். எதிரே இருந்த மேஜை மீது அவள் பார்வை படிந்தது. உடனே அவள் வியப்பும் மகிழ்ச்சியும் பொங்கத் துள்ளினாள்.

"ஹைய்யா! என் தங்க மீன் பெரிசா யிடுச்சு! பெரிசாயிடுச்சு!" என்று சத்தம் போட்டுக் கொண்டே எழுந்து மீன் தொட்டியருகே ஓடினாள்.

தொட்டியை நிறைத்துக் கொண்டு மிகப் பெரிதாகத் தங்க மீன் வளர்ந்திருந்தது. அதனால் தொட்டியில் நீந்த முடியவில்லை. மீன் வளர்ந்ததால் தொட்டி நீரில் பெரும் பகுதி வெளியே வந்து விட்டிருந்தது.

ரம்யா தங்க மீனைத் தூக்கிக் கொண்டு சமையலறைக்குள் ஓடினாள். தண்ணீர் பிடிக்கும் பக்கெட்டில் போட்டாள். பக்கெட்டில் பாதி இடத்தை அடைத்துக் கொண்டிருந்த மீன், சில நொடியில் முழு இடத்தையும் அடைக்கும் அளவு வளர்ந்து விட்டது.

பக்கத்தில் ஒரு பெரிய அண்டா இருந்தது. அதில்தான் தண்ணீர் பிடித்து வைப்பார்கள். அந்த அண்டாவிலே தன் மீனைப் போட்டாய் ரம்யா.

தங்க மீனுக்கு அண்டாவில் போதுமான இடம் இருந்தது. அதில் நீந்தியது.

ஆனால் சில விநாடிதான். அதனால் நீந்த முடிந்தது. பிறகு தங்க மீன் பெரிதாக வளர்ந்தது. அண்டாவில் ஒருபுறம் தலையும், மறுபுறம் வாலும் வெளியே நீட்டிக்கொண்டிருந்த நிலையைப் பெற்றது.

இப்போது ரம்யாவினால் அதைத் தூக்க முடியாது. தூக்கினாலும் எங்கே போடுவது, எங்கே வளர்ப்பது?

ரம்யா யோசித்துக் கொண்டிருக்கும் போதே தங்க மீன் இன்னும் பெரிதாக வளர, அண்டா இரண்டாக உடைந்தது. மீன் தரையில் விழுந்தது.




விழுந்த மீன் பெரிதாக... மிகப் பெரிதாக... மிக மிகப் பெரிதாக வளர்ந்தது. வளர்ந்தது. வளர்ந்து கொண்டேயிருந்தது.

சமையலறையே போதாது என்று கூறும்படி வளர்ந்தது. சமையலறையில் இருந்த அம்மாவும், வேலைக்காரியும் வெளியே ஓடினார்கள். ரம்யாவும் வெளியே வந்து நின்றாள்.

தங்க மீன் சில விநாடிகளில் சமையலறை அளவு வளர்ந்தது. வால் டைனிங் ஹாலில் நீட்டிக் கொண்டிருந்தது.

"இந்த மீன் இன்னும் வளர்ந்தால் அண்டா உடைந்ததைப்போல, இந்த




அறையும் உடைந்து போகும். வீடு இடிந்து போகும்" என்று புலம்பினாள் அம்மா.

ரம்யா பூஜை அறைக்கு ஓடினாள்.

"கடவுள்களே, எனக்குப் பெரிய மீன் வேண்டாம். என் தங்க மீன் எப்போதும் போல் சின்னதாக இருக்கட்டும். பிளீஸ்... உடனே மீனைச் சிறியதாக்குங்க... சிறியதாக்குங்க... சிறியதாக்குங்க...".

ரம்யா வேண்டிய போதே யாரோ அவள் உடம்பை லேசாகத் தட்டினார்கள். "என்னடி காலையிலே உளறல்? கனா, கினா கண்டியா?" என்ற குரலும் கேட்டது.

சட்டென்று விழித்த ரம்யா, எதிரே அம்மா நிற்பதைப் பார்த்தாள். பார்வை



அம்மாவைக் கடந்து மேஜைக்குச் சென்றது.

மேஜையில் மீன் தொட்டியில் தங்க மீன் சின்ன மீனாக நீந்திக் கொண்டிருந்தது.

'அப்பாடி. கண்டது கனவு. அது கனவாகவே இருந்து போகட்டும். கடவுளே! எனக்கு சின்ன மீன் போதும். பெரிய மீன் வேண்டாம். வேண்டவே வேண்டாம்'' என்று மனத்துக்குள் வேண்டிக் கொண்ட ரம்யா, எழுந்து உட்கார்ந்தாள்.

"அம்மா! ஒரு பயங்கரமான கனவு கண்டேன். அது என்ன தெரியுமா?" என்று தொடங்கி, அம்மாவிடம் தன் கனவைச் சொல்லத் தொடங்கினாள்.





ஒருவன்: தீபாவளியன்னைக்கும் கோபு கிரிக்கெட் ஆடக் கிளம்பிட்டானே, நல்ல ஸ்போர்ட்ஸ்மேன்.

மற்றவன்: மண்ணாங்கட்டி! அவன் காயம் படாம பட்டாசு வெடிக்கப் புறப்படறான்.

* * *


ஒரு சிறுமி: தீபாவலி! தீபாவலி!

அடுத்தவர்: தவறா சொல்றே... தீபாவளின்னு சரியா உச்சரி!

ஒரு சிறுமி: நான் ஒண்ணும் தவறாச் சொல்லலை... தீபா, அவ செஞ்சதா ஒரு மைதர் பாக்கு கொடுத்தா - அதை சாப்பிட்டதாலே வந்த வயத்து வலி - அது தீபா வலிதானே?

* * *





"புதுசா, பாதுகாப்பா ஒரு வெடி வாங்கியிருக்கேன்னு சொன்னாயே, அது இதுதானா?"

* * *

தீபாவளி பரிசுகள்

வத்சலன்

திருநாள் தீபா வளிநாளில்
சிறுவன் மணிக்கு அவனுடைய
உறவோர் அளித்தார் பலபரிசு
உவகை உற்றான் மணிப்பயலே

பளபளப் புள்ள ஒரு சட்டை
பகட்டுத் தெரியும் புதுப்பேண்ட்டு
விலைமதிப் புள்ள காலணிகள்
வேண்டி அளித்தார் அப்பாவே!

லட்டு ஜிலேபி ரசகுல்லா
ரகங்க ளோடு அதிரசமும்
தட்டுத் தட்டாய்த் தின்பதற்குத்
தந்தார், அம்மா தந்தாரே!


தங்க நிறத்தில் ஒருபேனா,
தரமாய் எழுதும் ஒருபேனா,
சிங்கப் பூரில் வாங்கியதாம்!
சிறப்பாய்த் தந்தார் தாத்தாவே!

சுறுசுறு வத்தி, பட்டாசு,
சுட்டதும் வெடிக்கும் அணுகுண்டு,
சரம்சர மாக வெடிவகைகள்,
தந்தார், மாமா, தந்தாரே!

பரிசுகள் பெற்ற மணிப்பயலும்
பண்பாய் நன்றி சொன்னானே!
"நரகா சுரனே, உனக்கே என்
நன்றி! நன்றி!" என்றானே!

நரகா சுரனே இல்லாமல்
நமக்குத் தீபா வளியில்லை!
சரியாய்ச் சொன்னான் மணிப்பயலே!
தகுந்த நன்றி! போற்றிடுவோம்.





அக்கா: அம்மா, தம்பி குறும்பு செய்யறான்.

தம்பி: ஏம்மா, அக்கா தலையிலே பூ வைச்சா தவறாம்மா?

அக்கா: அம்மா இவன் மத்தாப்பூ வைக்கிறான், அதுவும் கொளுத்தி.


முதல் வகுப்பில் சேர்ந்து, முதல் நாள் பள்ளிக்கூடம் சென்று திரும்பி வந்த சிறுமி அம்மாவிடம் கேட்டாள்: "அம்மா! எங்க டீச்சர் பூனையே பாத்திருக்க மாட்டாங்களா?"

அம்மா: ஏன் இப்படி கேக்கறே?

சிறுமி: பின்னே, ஏம்மா பூனைக்கு எத்தனை காலுன்னு என்ன கேட்டுத் தெரிஞ்சுக்கிறாங்க?



கம்முன்னிரு என்று குழந்தைகளைப் பார்த்து சேட்டை பண்ணும்போது பெரியவர்கள் சொல்வார்கள். கம்முன்னிரு என்பது சும்மாயிரு என்று பொருள் விளங்கும்படியாயிருந்தாலும், ''கம்'' என்பது மகா கணபதி பீஜாக்ஷரமாகும். ஓம் கம் கணபதயே நம: என்ற மந்திரத்திலும், ''ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்ரவலம் கம் கணபதயே வர வரத ஸர்வ ஜனம்மே வசமானய ஸ்வாஹா'' என்ற கணபதி மூலமந்திரத்திலும் ''கம்'' என்ற கணபதி பீஜாக்ஷரம் வருகிறது. ''கம்' என்ற மகாகணபதி பீஜாக்ஷரத்தை எப்போதும் சொல்லிக் கொண்டிரு என்பதற்குத்தான் ''கம்முன்னிரு'' என்று. சிவனே என்று இரு என்றபடி பெரியவர்கள் சொல்லியுள்ளார்கள். வாசனைப் புஷ்பம், வாசனை திரவியம் இல்லாமல் எளிதில் மிக மிகப்பெரிய ஆகிருதியாயுள்ள யானையின் திருமுகத்தை மகாகணபதிக்கு பிள்ளையார் சுழி போட்டும், எந்த ஒரு கட்டுரையோ, அல்லது புத்தகத்தில் எழுதினாலும் மேற்கண்ட பிள்ளையார் சுழி போட்டும் தொடங்கி எழுதுகிறோம். அகார உகார மகார தத்துவத்தை இந்த (உ) பிள்ளையார் சுழி குறித்தாலும், உண்மையில் நமது தலையெழுத்தான தலைச்சுழி மாறுவதற்குத்தான் பிள்ளையார் சுழி போடுகிறோம்.



எருக்கம்பூ, அறுகம்புல் ஆகியவை கொண்டு பூஜை செய்தாலே சீக்கிரம் நல்வரங்களை வாரி வாரி வழங்கும் வள்ளல் மகாகணபதி. ஆதியில் பூமியில் தோன்றிய புல் அறுகம்புல்லேயாகும். ஆதிபகவான் மகாகணபதி. அதனால் ஆதியில் தோன்றிய அறுகம்புல்லைக் கொண்டு, ஆதி கடவுளான மகா கணபதிக்கு பூஜை செய்கிறோம்.

ஐம்பத்தோரு கணபதி, முப்பத்திரண்டு கணபதி, பதினாறு கணபதி, நூற்றெட்டு கணபதி எனப் புராணங்களில் பல்வேறு கணபதியின் தெய்வ மூர்த்தங்கள் சொல்லப்பட்டுள்ளன. மந்திர சாஸ்திரத்தில் பெருமளவில் மந்திரங்கள் மகாகணபதியின் ஆராதனையில் இடம் பெற்றுள்ளன. பிரதானமாக சித்தலக்ஷ்மி வல்லபையோடு கூடின, பத்துகரங்களுடன், சந்திரனைச் சிரசில் தரித்த மகாகணபதியையும், உச்சிஷ்ட கணபதியையும், அதிகம் ஆராதனை செய்து வருகிறார்கள்.

காலம், நாளம், மூலம் - என்று மகாகணபதி உபாசனைக்கு மிக முக்கியமாக மேற்சொன்ன மூன்றைச் சொல்வர். காலம் என்பது - மகா கணபதிக்கு உகந்த நேரம் அதிகாலை 4.30 மணியிலிருந்து 6.30 மணி வரையான பிரம்ம முகூர்த்த காலம். இக்காலத்தில் செய்யப்படுகிற மகாகணபதி ஆராத்னையில் சந்தோஷம் கொள்வார். நாளம் - என்பது நாரிகேளம் என்பதான தேங்காயைக் குறிப்பது. மூன்றாம் பிறை போன்று தேங்காயைக் கீறி எடுத்து, அதனை ஹோமத்தில் போடுவதால் பிரியம் கொள்வார் மகாகணபதி. மூலம் என்பது மகா கணபதியின் மூலமந்திர பீஜாக்ஷரமேயாகும்.

முதலில் மகாகணபதிக்கு ஹோமம் செய்யாமல், எந்த ஒரு விசேஷத்தையும் நடத்த மாட்டார்கள். நெற்பொரி, கரும்புத்துண்டு, அவல், தேங்காய் கீற்று, நெய், வெல்லம், மோதகம் (கொழுக்கட்டை) ஆகிய திரவியங்களைக் கொண்ட ஹோமம் செய்வதால் எல்லாச் செல்வங்களையும் எளிதில் பெற்று விடலாம். மகாகணபதி உபாசனையில் தேர்ந்து அருளைப்பெற்ற எத்தனையோ மகான்கள் இப்புவியில் இருந்துள்ளார்கள்; இருந்து வருகிறார்கள். அந்த வரிசையில் இன்று நம்மிடையே மெய்த்தவ வேந்தராய் விளங்கும் பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகள் - சக்தி உபாசகர் என்பதை விட மகாகணபதி உபாசகர் என்றே சொல்லலாம்.

மகாகணபதிக்கு மிகவும் ப்ரீதியான 444 ஆவர்த்திகள் கொண்ட மகாகணபதி சதுராவ்ருத்தி தர்ப்பணம் செய்த பலன்தான் அவரிடம் நிரம்பியுள்ள பூரண அருள். காலையில் நித்யப்படி அவர் செய்யும் பூஜா விதிகளில் முதலில் இடம் பெறுவது இந்த தர்ப்பணமேயாகும். ஐம்பது வருடங்களுக்கும் மேலாக நித்தமும் இதனை விடாது வெளியூர் சென்றாலும் செய்யும் முதல் விசேஷ பூஜை இதுவே. அம்பிகை உபாசனையில் அடியெடுத்து வைக்க மகாகணபதியின் பேரருள் திறம் தேவை. அதற்கடுத்த படியாய் ''ஸ்ரீவாஞ்சா கல்ப கணபதி ஹோமம்'' என்ற சொல்லக்கூடிய, கல்ப

பத்தாயிரம் மோதகம் (கொழுக்கட்டை) அர்ச்சனை வேள்வி

ஹோமத்தினை இன்று ஆன்மிக உலகில் பிரகடனப்படுத்தி, கிட்டத்தட்ட பத்தாயிரம் முறை இந்த வேள்வியை நடத்தியுள்ளார்கள். பக்தர்களின் கோரிக்கைகள், பிரார்த்தனைகள், வேண்டுதல்கள் யாவும் இவர் நடத்திடும் இந்த ஸ்ரீவாஞ்சா கல்ப ஹோமத்தின் மூலமே நிறைவேறியுள்ளது என்றால் மிகையாகாது.

கடினமான மந்திர உச்சாடனம் மிகுந்த இந்த கல்ப ஹோமம் நான்கு அத்தியாயங்களையும், ஒவ்வோர் அத்தியாயத்திலேயும் பதினான்கு மந்திரங்களும் அடங்கிய இதை, குறைந்த பட்சம் ஒவ்வொன்றையும் மூன்று ஆவர்த்தியுடன் ஹோமம் செய்வது புவனேஸ்வரி ஸ்வாமிகளின் வழக்கம். ஸ்ரீவாஞ்சா கல்ப ஹோமம் - ஸ்ரீஸ்வாமிகளின் மூலமே வெளி வந்தது என்று கூடச் சொல்லலாம். அதனை நேர்த்தியாய், விதியோடு ஸ்ரீபரத்வாஜ ஸ்வாமிகளுக்குச் சொல்லியருளி அதன் ஹோம விதானங்கள் அனைத்தையும் ஸ்ரீ புவனேஸ்வரி ஸ்வாமிகள் முன்பு நடத்தி வருபவர் ஸ்ரீபரத்வாஜ்ஸ்வாமிகள் ஆவார்.

சமீபத்தில் சுக்லபக்ஷ சதுர்த்தி அன்று சென்னை அம்பத்தூர் கங்கை நகர் ஸ்ரீபரத்வாஜ ஆசிரமத்தில் ஸ்ரீவாஞ்சா கல்ப கணபதி பாராயணம் பத்து ஆவர்த்திகளுடன், ஹோமத்தையும், பூஜையையும் ஸ்ரீ ஸ்வாமிகள் நடத்தியருளினார்கள். இதில் என்ன விசேஷம் என்றால், ஒரே நாளில் பத்தாயிரம் மோதகங்கள் (கொழுக்கட்டைகள்) செய்து, மகாகணபதிக்கு அர்ச்சனை மற்றும் யாகத்தினை நடத்தினார்கள். பத்துமணிநேரம் நடந்த இந்த வைபவத்தில் ஓர் ஈ, ஓர் எறும்பு கூட மோதகத்தின் மீது உட்காரவில்லை, மொய்க்கவில்லை. இது மகாகணபதியின் அருளேயன்றி வேறில்லை. மோதகங்கள் செய்ய 25 பெண்கள் உதவினர். கடலைப்பருப்பு, வெல்லம், ஏலக்காய், அரிசிமாவு நிறைய அளவு தேவைப்பட்டன.தேவைக்கு அதிகமாகவே திரவியங்களை பக்தர்கள் ஆசிரமத்தில் குவித்தனர்.

அர்ச்சனை வேள்வி முடிந்தவுடன் மோதகமே பிரசாதமாக வினியோகித்தார் ஸ்ரீ புவனேஸ்வரி ஸ்வாமிகள். மோதகங்களை ஏற்றுக் கொண்ட பக்தர்கள் அதை உட்கொண்டு, விநாயகப் பெருமானின் மோதகத்தின் தித்திப்பால் பேரருளில் திளைத்து ஆனந்தம் கொண்டனர்.

மேற்கில் தோன்றும்!

ஓவியக் கவிஞர் வண்ணப்பூங்கா வாசன்



போட்டோ: யோகா

பொன்நகையை விரும்பாத பெண்க ளுண்டா?
பொதுவாழ்வில் சுரண்டாத மனித
ருண்டா?...
இன்னலினை ஏற்காத இன்பம் உண்டா;
இப்போது தோல்வியில்லா வெற்றி
உண்டா?...
நன்னடத்தை, நல்லொழுக்கம் நல்லறங்கள்
நாணயத்தை ஏற்கின்ற இதயம் உண்டா?
தன்திறனை நம்பாமல் தலைக விழ்ந்தே,
தனிமனிதன் தனைமறந்தால் மானம் மாளும்!

இக்கரைக்கு அக்கரையே பச்சை என்பார்!
இருப்பவர்க்குச் சேர்ப்பதிலே இச்சை என்பார்!

திக்கற்ற ஏழை வாழ்வைக் கொச்சை என்பார்!
திருந்தாத உள்ளங்கள் மேடை தோறும்,
வக்கற்றோர் வகையற்றோர் மாட்சிக் காக
வாய்வீச்சில் பொய்மைமிகு சாட்சி சொன்னால்;

மக்களிலே மாக்களென நம்பி வாழும்
மரபுகளை வளர்த்திட்டால் மாண்பும்ஏங்கும்!
எல்லாரும் புதுமைகளை விரும்பு கின்றார்!
இருந்தாலும் பழைமைதனில் உழலுகின்றார்!
நல்லாரும் நடப்புகளில் மிரளுகின்றார்!
நஞ்சனையோர் நயமாக அருளுகின்றார்!
பொல்லார்தாம் உரிமைகளில் வெல்லுகின்றார்;
பொதுநீதி ஏய்ப்பதுதான் சொல்லுகின்றார்!
கல்மனத்துள் கையிருப்பில் நீதி யென்றால்
கதிரவனும் ஒருநாளில் மேற்கில் தோன்றும்!



"யாதுமாகி நின்றாய் காளீ"

பராசக்தி - இராஜேஸ்வரி - புவனேஸ்வரி - இவர்களை சக்தியென்றும், தேவி என்றும், அம்பிகை என்றும் போற்றி வணங்குகிறோம். இவர்களே தானே எடுத்துக் கொண்ட உருவம் தான் காளீ. காளீ - கருநிறமுள்ளவள், பலரைப் பல திசைகளிலிருந்தும் திருப்பி ஒரு முகமாக்கி நடத்திச் செல்பவள். பெருமை மிக்க காளியாதலால் மகா காளீ எனப்படுகிறாள். நாராயணன் யோக நித்திரையில் ஆழ்ந்திருந்தபோது தொப்புள் கொடியில் விளைந்த தாமரையில் தோன்றிய பிரம்மா, மது, கைடபன் என்ற இரு அசுரர்களால் துன்புறுத்தப்படுகிறார். பிரம்மா தேவியைத் துதிக்க தேவி மகா காளியாகத் தோன்றுகிறாள். பத்து கைகளில் வாள், சக்கரம், கதை, பாணம், வில், இரும்புத்தடி, சூலம், குத்துவாள், தலை, சங்கம், ஆகியவை ஏந்தி நீல நிறமுள்ளவளாகப் பத்து முகங்களும், பத்து கால்களும், மூன்று கண்களும் உள்ளவளாகத் தோன்றி மதுகைடபரை மாய்த்தாள். மகாகாளர் என்று பன்னிரண்டு சிவலிங்கங்களுள் ஒன்றான பரமசிவன் உஜ்ஜயினியில் கோயில் கொண்டுள்ளார். அவரது சக்தியாக விளங்குபவள்.

மாட்டு மந்தையை மேய்க்கும் இடையன் எண்ணற்ற மாடுகளை, தன் விருப்பப்படி ஓட்டுவது போல், பெரும் மேகக் கூட்டத்தைக் காற்று தன்னிஷ்டப்படி கலைத்து உருக்குலைப்பது போல் உலகத்தைத் தன்னிஷ்டப்படி விரட்டுவதாலும், அழிப்பதாலும் மகாகாளீ. உலகை விரட்டுபவன் அழிப்பவன் காலனான யமன். அவனையும் விரட்டுவதால், அழிப்பதால் மகாகாளீ.

அழகானது என்பதாக எதையோ தேடி, அதிலேயே ஆனந்தம் கொள்ளும் போது, எத்தனையோ அவலங்களை கோரங்களை, கொடுமைகளை ஒதுக்கித்தள்ள வேண்டியிருக்கிறது. ஒதுக்க வேண்டிய விஷயங்கள் உள்ளவரையில் அவற்றிடம் நமக்குத் துவேஷமும் இருந்து கொண்டுதானிருக்கும். எங்கே அவை நம்மிடம் வந்து சேர்ந்து விடுமோ என்ற பயமும், இதனால் சோகமும், மறையாமலே இருக்கும். எனவே ஒரு நிலை வரையில் அழகானதை, இனியதையே தேடி அதில் தெய்விகத்தை நுகரப் பயின்றாலும் கூட அழகானதாக, இனியதாக ஏற்கத்தான் வேண்டும். இவற்றினுள்ளும் பராசக்தியின் சச்சிதானந்தம் தானே வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறது? அவளது வேஷம் தவிர வேறெதுவும் உலகத்தில் உண்டோ? ஒரு பெரிய நடிகர் நல்ல கதாநாயகனாக வந்தால் மட்டும்தான் ரசிக்கிறோமா? வில்லனாக வந்தாலும் ரசிக்கத்தானே செய்கிறோம்? அப்படியே அம்பாள் போடுகிற கொடிய வேஷங்களையும் ஆனந்தமாக ரசிக்க வேண்டும். இதில் மனிதனைப் பழக்கவே அவள் காளியாக வருகிறாள். சுந்தரமான தெய்வ வடிவங்களையே பார்த்துப் பழகிய தென்

தேசத்தவர்களான நமக்குக் காளி என்றவுடன் ஏதோ அச்சம் உண்டாகிறது. ஆனால் வங்காளத்தில் பார்த்தால் சின்னக் குழந்தைகள் கூடக் காளியைக் கட்டி முத்தமிட்டு அன்பு செய்கின்றன. நாமும் கால் நிமிஷம் மனத்தைச் சரிப் படுத்திக் கொண்டு காளியை உற்றுப் பார்த்துவிட்டால் போதும் - எல்லையற்ற பிரேமை பொங்கிக் கொண்டு வந்து விடும். அவளது நிறம், அங்க அமைப்பு, ஆயுதங்கள் ஆகியவற்றின் தத்து வார்த்தம் எதுவும் தெரியாமலே, மகா தத்துவமான அன்பில் ஈடுபடுவோம். அழகாக இருக்கின்றன என்ற ஒரே காரணத்துக்காகத்தானே பல வஸ்துக் களை நாடிப்போய்ப் பாழாகிறோம்? எனவேதானோ என்னவோ, அந்த அழகுகளுக்கு மாறான இந்தக் காளியின் அழகை மனம் ஆறுதலுக்காக நாடிப் பாய்ந்து செல்லும். இந்த மனோதத்துவக் காரணம் ஒருபுறமிருக்க, காளி யன்னையே இத்தகைய அன்புணர்ச் சியை உண்டாக்குகிறாள் என்பதுதான் முக்கியமான காரணம்.

துக்கம் நீங்கினால் மட்டும்போதாது. துக்கமின்மையே சுகமன்று. சுகம் பெற வேண்டுமென்ற எதிர்பார்ப்பு யாவர்க்கும் உண்டு. சுகமும் அதனை அனுபவிப் பவரது தரத்திற்கேற்ப பலவகைப்படும். இவ்வாழ்வில் பெறும் சுகத்தையே பெரிதாகக் கருதுபவனுக்கு அந்த சுகத் தைத் தேவி தருவாள். மறுமையிலும் சுகத்தைத் தரவல்லதை விரும்பினால் அதையும் தருவாள். இந்த இருவகை சுகங்களும் போகப் பொருளை நாடிப் பெறப்படுபவை. பிற பொருளை நாடாமல் தன்னில் சுகம் காண்பது நித்தியமான ஆனந்தத்தைத் தரும் ஆத்ம சுகம். அதனை விரும்புபவனுக்கு அந்த ஆத்ம சுகத்தையே தருகிறாள்.

எண்ணத்திற்கும் செயலுக்கும் நடு வில் பாலம் போல் அமைந்தது வாக்கு. மனத்தாலும் செயலாலும் கெடுக்கா விட்டாலும் வாயால் கெடுப்பதும் தோஷமே. பூதஹிதம் என்பதும் நம்மைச் சூழ்ந்திருப்பவர்களுக்கு நன்மை விளை விப்பது. அதற்கு பயன் படாததனைத்தும் அதற்கு எதிரிடையான விளைவுகளைத் தருவன அனைத்தும் தோஷங்களே. தோஷங்களுள்ளவர்கள் துஷ்டர்கள். மனத்தாலும், வாக்காலும் செயலாலும் பிறரைக் கெடுப்பவர்கள், அந்தச் சூழ்நிலையில் தெய்விகத்தை உணர முடியாது. கெட்டவர்களுக்கு வெகு தூரத்திலிருப்பதால் காளிதேவி எளிதில் அடைய முடியாதவளாகிறாள்.

இந்த மகாகாளீ அருளாட்சி புரியும் ஸ்தலம்தான் மத்திய பிரதேசத்திலுள்ள உஜ்ஜயினி. உஜ்ஜயினில் அமைந்துள்ள ஹர்சித்தி தேவி என்பவள்தான் மகாகாளீ. சிரித்தமுகம், செந்தூர வர்ண மேனி. புகழ்பெற்ற அரசன் விக்கிரமாதித்தனுக்கு அருள் வழங்கிய வரப்ரதாயினி. இத் தலத்தில் பரமஹம்ஸ ஸ்ரீமத் புவ னேஸ்வரி ஸ்வாமிகளும் ஸ்ரீபரத்வாஜ ஸ்வாமிகளும், தவம் நடத்த, விஜய யாத்திரை மேற் கொண்டனர். மகாகாளீ முன்பு யாவரும் நலம்பெற வேண்டும், அனைவரும் சுபிட்சமடைய வேண்டும் என்பதற்காக இவ்வருடம் ஜூன் மாதம் சென்றனர். மூன்று நாள்கள் அவர்கள் தவம் நடத்தினார்கள்.

பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகள், எதனைச் செய்தாலும் பக்தர்களின் நலன்பொருட்டே செய்ய வேண்டுமென்பதில் விடாப்பிடியான எண்ணம் கொண்டவர். முதல்நாள் காலை நித்யபூஜைகள், அனுஷ்டானம் முடித்துவிட்டு, பரமேச்வரனான மகா காளருக்கு அபிஷேகம் செய்துவிட்டு, ஹர்சித்தி தேவி(மகாகாளீ) சந்நிதி முன்பு காலை பத்து மணிக்கு அமர்ந்தார். பீடத்தின் மீது அமர்ந்து, தொழுது தேவிக்கு ப்ரீதியான சண்டி பாராயணம், பிரத்தியங்கிரா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம், சண்டிதேவி கவசம் யாவற்றையும் பாராயணம் செய்தார். ஐந்து மணி நேரம் பிடித்தது.

இரண்டாம் நாள் ஹர்சித்திதேவி முன்பு அமர்ந்து காளீ ஸஹஸ்ரநாமம் கொண்டு குங்குமார்ச்சனை நடத்தினார். குங்குமக் கலவையால் புதுப்பொலி வோடு காட்சி கொடுத்தார். குங்குமப்பூ மேனியராய்த் திகழ்ந்தார், புவனேஸ்வரி. சுவாமிகள். அம்பிகையின் தியானத்தால் புவனேஸ்வரி சுவாமிகள் கண்கள் அருள் கூட்டியிருந்தன. அப்போது ஒரு தேஜோமய பிரகாசம் நம்மை ஈர்த்தது. ஸ்ரீபரத்வாஜ் ஸ்வாமிகள் நவாக்ஷரீ ஜபத்தையும், தக்ஷிணகாளி ஜபத்தையும் உச்சரித்து தேவியின் கருவறை முன்பு ஒற்றைக் காலில் நின்று கொண்டு ருத்ராக்ஷமாலை கொண்டு தவம் நடத்தினார். மணிக் கணக்கில் நடந்த இந்தத் தவம் ஸ்ரீ ஸ்வாமிகள் திருவருள் பாலிப்பால் நடத்தினார். உலக நலன் கருதி செய்யப்படவேண்டும். அன்னையைப் பிரேமையாகக் கூப்பி டுங்கள். தேவியைப் பக்தியுடன் தொழுங்கள். அவள் நம்மிடம் வருவாள் என்று அடிக்கடி ஸ்ரீ புவனேஸ்வரி ஸ்வாமிகள் சொல்வார்கள். அன்றைய தினம் அன்னை அந்த சந்நிதியில் அந்த அற்புதத்தை நடத்தினாள். கொதிக்கும் வெயில், தகிக்கும் தணல், உடம்பு முழுவதும் அக்னி ஜ்வாலை கொண்டு வீசும் அனல் காற்று. இருந்தாலும் தவமும், பிரார்த்தனையும், மெய் வருத்தம் பாராது நடத்தினார்கள் ஸ்ரீ ஸ்வாமிகள். பகல் ஒரு மணிக்கு உள்ளம் குளிர்ந்தாள். அவள் மட்டுமே குளிராது, அந்தப் பிரதேசத்தையே குளிர வைத்தாள். சில்லெனத் தென்றல் சந்நிதியின் வாயில் வழி வந்து பக்தர் களின் மேனியைத் தழுவியது. அவள் நினைத்தாலன்றி இது நடவாது.

மூன்றாம் நாள் 'கட்காளி என்று அழைக்கப்படும் காளிதாசன் ஆராதனை பண்ணிய தேவி. இவளும் மகாகாளீ யாவாள். மாபெரும் சக்தி கொண்டவள். பக்தர்களை ரக்ஷிக்கும் கருணையே பார்வையாய்க் கொண்டவள். இங்கும் ஸ்ரீபுவனேஸ்வரி ஸ்வாமிகளும், ஸ்ரீபரத் வாஜ் ஸ்வாமிகளும் சூலினி துர்கா கவசம், மந்த்ரபாராயணம், நாமபாராயணம் ஆகியவற்றை மூன்று மணி நேரம், மனித குலத்திற்காக நடத்தினார்கள். இந்த உஜ்ஜயினியில் ஸ்ரீ ஸ்வாமிகள் மேற் கொண்ட விஜய யாத்திரையின் போது நடத்திய தவமும் பிரார்த்தனையும் இத் தீபாவளித் திருநாளில் வாசகர்களுக்கு எந்நாளும் க்ஷேமப்பாதையை உண்டு பண்ணட்டும்.

புவனேச்வரிதாசன்



"நான் எழுதின கதையைப் படிக்கவேயில்லையே.."
"பரவாயில்லை..நீ போஸ்ட் பண்ணிடு.. பத்திரிகையிலேருந்து திரும்பி வந்தப்புறம் படிச்சுக்கறேன்"



ஸ்ரீ யோக மாயா புவனேஸ்வரி

பார்த்தால் பசு, பாய்ந்தால் புலி; அவன் சூரப்புலி; இவ்வாறு ஒருவரை விவரிக்கும் பொழுது அச்சொற்களில் புலியின் வலிமையும், வீரமும், புத்திசாலித் தனமும் தொனிக்கின்றன.

பூனை இனப் பாரம்பரியத்தில் அழகான பெரிய காட்டு மிருகம் புலி. வேதங்களின் சாகைகளின் ஒரு பிரிவான பிராம்மணத்திலும், வேத ஸம்ஹிதையிலும் புலியைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. வடமாநிலங்களில் துர்க்கையின் வாகனமாக நின்று அருள்பெறுகிறது புலி. சிவபெருமானைப் பூஜிக்க, விடியுமுன் மரங்களில் ஏறி, வண்டுகள் தேனை உறிஞ்சாத மலர்களைப் பறிக்க, ஈசனை வேண்டி, தன் கால்கள், புலி நகங்களுடன் கூடிய புலிப்பாதங்களாக மாறியதையடுத்து, மாத்யந்தினர் என்ற மகரிஷிக்கு வியாக்ர பாதர் என்ற பெயர் வந்தது. வியாக்ரபாதர், பதஞ்சலி முனிவர்களுக்கு, தை மாதம் குருவாரமும் பூச நட்சத்திரமும் கூடிய நன்னாளில், சிதம்பரத்தில் நடராஜ பெருமான் ஆனந்த நடனக் காட்சியளித்தது புராணக் கதை. நான்காயிரத்துக்கு மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன் ஹரப்பா, மொகெஞ்ஜொதாரோ என்ற பழங்கால சிந்து சமவெளி நாகரிகத்தைத் தெரியப்படுத்தும், கல்லினுள் புதைந்த படிமங்களில் (Fossils) புலிச் சின்னம் பொறித்த முத்திரைகள் (Seal) கிடைத்தன. சோழ மன்னர்களின் கொடியில் புலிச்சின்னமே பொறிக்கப்பட்டிருந்தது. மைசூரை ஆண்ட திப்பு சுல்தான் தன் சிம்மாசனம், ஆடைகள், இராணுவ வீரர்களின் சீருடைகள், வாள், துப்பாக்கி முதலிய பல பொருள்களில் புலியின் படத்தையும் அதன் உடலிலுள்ள வரிகளையும் பொறித்திருந்தான். திப்பு என்ற சொல்லுக்குப் புலி என்று பொருள். இருநூறு நாள்கள் பயந்தாங்கொள்ளி ஆடாக வாழ்வதைவிட, இரண்டு நாள் வலிமையும் வீரமும் மிக்க புலியாக வாழ்வது மேல் என்பது அவனது கொள்கை. திப்பு தனது கொடியில் 'புலியே கடவுள்' என்றும் பொறித்திருந்தானாம். பதினாறாம் நூற்றாண்டில் அரசாண்ட முகலாய மன்னர்களது தர்பாரைச் சித்திரிக்கும் மிகச் சிறிய வண்ணச் சித்திரங்களில் (Miniature paintings) ஒரு புலி அமர்ந்த நிலையிலான உருவமும் இடம்பெற்றிருந்தது.

இவ்வாறு புலியின் சரித்திரம் மிகப் பழைமையானது. ஐம்பது கோடி ஆண்டுகளுக்கு முன் பூச்சிகளைத் தின்று வந்த, பட்டாக்கத்தி போன்ற கூர்மையான பற்களுடைய, குட்டி போட்டு இன விருத்தி செய்த Miacids என்ற பூனை போன்ற மிருகங்களின், கல்லினுள் புதைந்து கிடந்த படிமங்கள் (Fossil) யூரேஷியா, மற்றும் வட அமெரிக்கா நாடுகளில் கிடைத்ததாக ஒரு தகவல் கூறுகிறது. ஆதியில் வட ஸைபீரியா தீவுகளில் புலிகள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் அப்பிராந்தியத்தின் சிகார் (Chigar) குகைகளில் கிடைத்த கல்படிமங்களில் உள்ளன. எனினும் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் அவை அழிந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.



படம் பிடிக்கத் தயாராகும் அல்ஃபான்ஸோ ராய்

● ஜனார்த்தனன்



நீர் பருகுகிறது



உண்பதும், உண்டபின் மயக்கம்



தன் இரையின் வருகைக்காகக் காத்திருக்கும் புலி

இன்றைக்குப் பாரதத்தைத் தவிர பங்களா தேஷ், மலேசியா, சீனா, இந்தோ சீனா, ஜாவா, சுமத்ரா முதலிய பல நாடுகளில் புலிகள் காணப்படுகின்றன. அதிக மழை பெய்யும் — ஆனால் வெப்பமான மழைக் காடுகள் (Rain Forests) சதுப்பு நிலப்பரப்பு, அடர்ந்து வளர்ந்த உலர்ந்த முள் மற்றும் புல்புதர்கள், ஓங்கி வளர்ந்த ஓக் மரக்காடுகள், பனி உறையும் இமயமலைக் காடுகள் - இவ்வாறு பலதரப்பட்ட வெப்ப நிலை பிராந்தியங்களில் புலிகள் வாசம் செய்கின்றன.

வயது வந்த ஆண் புலி சுமார் பத்தடி நீளமும் 190 கிலோ கிராம் எடையும் உள்ள பெரிய வலுவான உடலமைப்பைக் கொண்டது. அதை விடச் சிறிய உடலமைப்புடன் கூடிய பெண்புலி 135 கிலோ கிராம் எடை இருக்கும்.

உடல் முழுவதும் செங்குத்தான நீண்ட கறுப்பு மற்றும் பழுப்பு நிற வரிகளுடன், பழுப்பு நிற மஞ்சள், அல்லது ஆரஞ்சு — சிவப்பு வண்ணத்தில் காணப்படும் அழகான மிருகம் புலி. அதன் கழுத்து, வயிறு, கால்களின் உட்புறத்தின் கீழும், மிருதுவான வெண்மை நிற உரோமம் அடர்த்தியாக வளர்ந்திருக்கும். சில புலிகளுக்குத் தலையில் பிடரி மயிர், சிங்கத்தைப்போல் நீண்டதாக இல்லாமல், அடர்த்தியாக வளர்ந்திருக்கும். பனி உறையும் மஞ்சூரியா நாட்டில் வாழும் புலிகள் தங்களைக் கடுங்குளிரினின்று பாதுகாத்துக் கொள்ள, அடர்த்தியான உரோமம் அவற்றின் உடல் முழுவதும் நிறைந்திருக்கும்.

புலிகள், மான், காட்டு எருமை, காட்டுப் பன்றி மற்றும் சிறிய யானைக் குட்டிகள் முதலிய மிருகங்களை வேட்டையாடிக் கொன்று தின்கின்றன. லங்கூர் என்ற கரியமுகக் குரங்கு, சில சமயம் மயில் போன்ற பறவைகளையும் நதிகளில் வெள்ளம் ஏற்படும் பொழுது முதலை, ஆமை, மீன்கள், தவளை ஆகியவற்றையும் தின்பதுண்டு. முள்ளம்பன்றி, புலிகளுக்குப் பிடித்த உணவாக இருந்தும் அப்பன்றியின் நீண்ட முட்கள் புலியின் உடலைக் குத்திக் காயப்படுத்தி விடுவது பிரச்னையாகி விடுகிறது. ஆசிய நாடுகளில் வாழும் புலிகள், அங்குக் காட்டு விலங்குகள் குறைவாக உள்ளதால் சில சமயம் கிராமத்து ஆடு, மாடுகளைக் கொன்று தின்பதும் உண்டு.

புலிகளுக்கு, இரவில் தன் இரையைப் பிடிக்க ஏதுவாக கூரிய கண்பார்வை உதவுகிறது. அயர்ந்து தூங்கும் பொழுதுகூட அவ்வழியே செல்லும் மான் போன்ற மிருகங்கள் ஏற்படுத்தும் மெல்லிய சலசலப்பு ஒலியையும் கேட்டு விழித்துக் கொள்ளக்கூடிய காது கேட்கும் சக்தி புலிகளுக்கு உண்டு. புலிகள் இருபது அடி தூரம் பாயும் சக்தி வாய்ந்தவை. புதர்களில் பதுங்கியிருந்து அவ்வழியே நீர் பருகச் செல்லும் காட்டெருமை போன்ற மிருகங்களின் மீது பாய்ந்து, சம்மட்டியால் அடிப்பது போன்று முன் கால்களால் ஓங்கி அடித்து அவற்றை அதிரடித்து, மண்டை ஓட்டு எலும்பை நொறுக்கிக் கொன்றுவிடும். மான் போன்ற சிறிய மிருகங்களின் மீது பாய்ந்து அவற்றின் கழுத்தைக் கவ்வி, கீழே தள்ளி, உருட்டி, புரட்டிக் கொன்று இழுத்துச் சென்றுவிடும். பின்னர் அமைதியாக தன் கூரிய பற்களால் அவற்றின் தோலைக் கிழித்து மாமிசத்தை உண்ணும். தான் பிடித்த 230 கிலோ கிராம் எடையுள்ள காட்டு எருமையை வெகுதூரம் இழுத்துச் செல்லும் வலிமை புலிகளுக்கு உண்டு. தன் இரையைத்



ஆண்புலி பிடரி மயிருடன்

தொடர்ந்து ஓடி, சீக்கிரமாகப் பிடிக்க இயலாவிடில், எளிதில் சோர்வடைவதன் காரணமாக, புலி தன் முயற்சியை சில சமயம் கைவிடுவதுண்டு. ஒரே இரவில் 23 கிலோ கிராம் எடை மாமிசத்தைப் புலி தின்று விடுகிறது. அதையடுத்து சில நாள்களுக்கு உணவு உண்ணாது. தனது இரையின் எலும்புகள், அதன் வயிற்றினுள் கிடக்கும் பதார்த்தங்கள் ஆகிய இரண்டை மட்டும் தவிர்த்து, மற்ற உறுப்புகளைப் புலி தின்றுவிடுகிறது. உண்ட மயக்கத்தில் கண் அயர்ந்து விடும் பழக்கம் புலிகளுக்கும் உண்டு. காயமடைந்த மற்றும் வேட்டையாட இயலாத வயோதிகப் புலிகள் தவிர மற்ற புலிகள், மனிதர்களைக் கொன்று தின்பதில்லை. ஆயிரத்தில் மூன்று புலிகளே மனிதர்களை அதுவும் பயத்தினால் தாக்கிக் கொன்று தின்கின்றன என்று கூறப்படுகிறது. இத்துணை வலிமையும் பலமும் நிறைந்த புலிகள், காட்டு நாய்களுக்கு மட்டும் இரையாகி விடுகின்றனவாம்.

புலிகள் தன் இரையைப் பின்தொடர்ந்து நீர் நிலைகளிலும் நீந்துகின்றன. ஆனால் அச்சமயம் அவை தன் முகத்தை நீரில் நனைய விடுவதில்லை. வெப்பமான நாள்களில் நீரில் அமிழ்ந்து கிடந்து, தன்னைக் குளிர்ப்படுத்திக் கொள்ளும் பழக்கம் புலிகளுக்கு உண்டு. புலிகளால் மரத்தில் ஏற முடிந்தும், அவை சாதாரணமாக மரம் ஏறுவதில்லை.

புலி மிகச்சுத்தமான ஒரு மிருகம். அதிகாலையிலும் மாலையிலும் தன் சுரசுரப்பான நாக்கினால் புலி தன் பாதங்கள், கழுத்து மற்றும் முதுகுப்புறம் உள்ள அடர்த்தியான ரோமத்தை நீண்ட நேரம் நக்கி அசுத்தங்களை நீக்கிக் கொள்ளும். பின்னர் அவை தம் கால்களை நீட்டி உடம்பை வளைத்து சோம்பல் முறித்துக் கொட்டாவி விடுவதுண்டு.

புலிகள் சாதாரணமாக, தனிமையாகவே வாழ விரும்புகின்றன. ஆண் புலிகள் தனக்குக் கிடைக்கக்கூடிய இரைக்குத் தக்கபடி பல நூறு சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பைத் தன் பிரதேசமாக சொந்தம் கொண்டாடுவதுண்டு. அந்தப் பிராந்தியத்தில் இரண்டு மூன்று பெண் புலிகள் வாழும் பிராந்தியமும் உள்ளடங்கும். இரவு நேரங்களில் ஒரு புலி மற்றொரு புலியை யதேச்சையாக வழியில் சந்திக்க நேர்ந்தால், ஒன்றுக்கொன்று முகத்தை உராய்ந்துவிட்டுச் செல்லும் நட்பு உள்ளம் புலிகளிடம் உள்ளது. தான் வாழும் பிராந்தியம் என்பதை மற்ற புலிகளுக்குத் தெரியப்படுத்த, புலிகள் தான் செல்லும் பாதையில் உள்ள மரங்களின்மீது சிறுநீர் கழித்தும் தன் வாலின் கீழுள்ள அபான சுரப்பிகளிலிருந்து சுரக்கும் ஒருவகை காரமான துர்நாற்றம் வீசும் திரவத்தைப் பீச்சித் தெளித்துவிட்டுச் செல்கின்றன. இந்த வாடை ஏறக்குறைய நாற்பது நாள்கள் வரை அப்பிராந்தியத்தில் வீசும். அதை மோப்பம் பிடிக்கும் மற்ற புலிகள் அப்பிராந்தியத்திற்குள் ஊடுருவுவதைத் தவிர்த்து விடுகின்றன. இது தவிர, தான் இருப்பதை மற்ற புலிகளுக்குத் தெரிவிக்க, மூன்று கிலோ மீட்டர் தூரம் வரை கேட்கக்கூடிய உரத்த குரலில் புலி உறுமுவதும் உண்டு.

ஆண் புலி, பெண் புலியுடன் ஒரே சமயத்தில் பல தடவை உடலுறவு கொள்வது வழக்கம். இச்சேர்க்கை முடிந்தவுடன் அவை ஒன்றை ஒன்று தாக்கிக் கொள்கின்றன. ஆசை அடங்கியதும் விருப்பம் வெறுப்பாக மாறுகிறது.

புலி, சிங்கம் ஆகியவற்றின் ஆண் பெண் இனங்கள் மிருகக் காட்சி சாலைகளில் புணர்ந்து குட்டிகளை ஈன்றதுண்டு. அக்குட்டிகளை ஆங்கிலத்தில் டைக்லான் (Tiglon), டைகான் (Tigon), லைகர் (Liger) என்று கூறுவர்.

பெண்புலிகள் நான்கு வயதாகும் பொழுது கருத்தரித்து, 98 முதல் 109 நாள்கள் வரை கருவைச் சுமந்து ஒன்றரை கிலோ எடையுள்ள இரண்டு மூன்று குட்டிகளை ஈன்று விடுகின்றன. அவ்வாறு பிறக்கும் குட்டிகளில் பாதிக்கு மேல் ஒரு வயதாவதற்குள் இறந்து விடுகின்றன.

பெண் புலி தன் குட்டிகளை அடக்கிச் சீராக வளர்க்கிறது. தான் வேட்டையாடச் செல்லும் பொழுது தாய்ப்புலி தன் முன்கால்களினால் பலமாக அடித்தும், பலவித கோபமான உறுமல்களினால் குட்டிகளை சப்தமிடாமல் அமைதியாக இருக்கச் செய்து அடக்கி, அவற்றிற்கு அபாயம் எதுவும் ஏற்படாமல் பாது காக்கிறது.

தன் குட்டிகள் சகிதம் புதரில் பதுங்கிக் காத்திருந்து மான் போன்ற சிறு மிருகங்கள் அவ்வழியே வர, புலி அவற்றின் மீது பாய்ந்து தன் முன் கால்களால் அடித்துக் குற்றுயிராக்குகிறது. அவ்வாறு குற்றுயிராகக் கிடக்கும் மிருகங்களின் மீது பாய்ந்து கொன்று தின்பதற்கு, பெண் புலி தன் குட்டிகளைப் பழக்குவதும் உண்டு. இவ்வாறு வளர்ந்த புலி இரண்டு வயதாகும் பொழுது தாமே தாயைப் பிரிந்து வாழத் தொடங்கு கிறது.

வயோதிகம் தவிர, வேறு எந்த நோய்களாலும் புலிகள் அவதிப்படுவதில்லை. புலிகள் இருபது ஆண்டுகள் ஜீவித்திருக்கின்றன. ஒன்றுக்கொன்று சண்டையிட்டு இறந்தாலன்றி, புலிகள் யாவும் பூரண ஆயுள் வரை வாழ்கின்றன.

நடை, உணவு, பாவனைகளில் புலிக்குப் புலி மாறுபடுகின்றன. ஒரு காட்டில் வாழும் புலி, மற்றொரு காட்டுப் புலியிலிருந்து குணத்தில் மாறுபட்டு இருக்கும்.

புலிகள் Panthera Tigris என்ற விலங்கினத்தைச் சேர்ந்தவை. அதிலும் எட்டு வகையான இனப் பிரிவுகள் உள்ளன. சைபீரியா புலி என்ற Panthera Tigris Altaica என்ற இனப் புலிகள் உறைபனிக் குளிரைத் தாங்கும் அடர்த்தியான உரோமம் வளர்ந்து ரஷிய நாட்டின் தூரக்கிழக்குப் பகுதியில் கோர் (Khor). பில்கின் (Bilkin). நதிகளின் அமுர் (Amur) கணவாய்ப் பகுதியில் வசிக்கின்றன. சீனப்புலி (Panthera Tigris Amoyensis, என்ற இனம், அகலமான வரிக்கோடுகள் நிறைந்த சிறிய உடலமைப்பு உடையவை. Panthera Tigris Corbetti. என்ற இனத்தைச் சேர்ந்த இந்தோசீனா புலி, சீனாவின் யூனான் (Yunan). க்வாங்ஸி (Kwangsi). க்வான்டங் (Kwantung) மாநிலங்களின் தென்பகுதியில் காணப்படுகின்றன.


Panthera Sumatre என்ற சுமத்ரா தீவில் வாழும் புலி இனங்களின் எண்ணிக்கை 500 முதல் 800 வரை இருக்கும். Panthera Tigris Sondaica என்ற ஜாவா நாட்டுப் புலி, உருவத்தில் சிறிதாகவும் சற்று கரிய மண் வண்ணத்தில் இருக்கும். இன்றைக்கு இந்த இனம் உயிருடன் இருப்பதாகத் தெரியவில்லை. Panthera Tigris Virgata என்ற காஸ்பியன் புலி இனம், வடக்கு ஈரான், ஆப்கானிஸ்தான் நாடுகளுக்கு கிழக்கே ஏரல் கடல் பிராந்தியத்தில் வசித்து வந்தன. அவையும் இன்றைக்கு அழிந்துவிட்டன. Panthera Tigris Balica என்ற பாலித்தீவில் வசித்த புலி இனம், 1937 ஆம் ஆண்டு வரை வாழ்ந்து இன்றைக்குப் பூண்டோடு அழிந்து விட்டது.

Panthera Tigris என்ற பாரதத்தில் வாழும் புலி இனம் பாரதம், பூடான், பங்களாதேஷ், மேற்கு பர்மா முதலிய பிராந்தியங்களில் வசித்து வருகின்றது.

பாரதத்தின் தேசிய மிருகமாகக் கருதப்படும் புலி, தமிழகத்தின் முதுமலை வனவிலங்கு சரணாலயம், அதையொட்டிய கேரளாவின் வைநாடு, கர்நாடக மாநிலத்தின் பாந்திபூர் காடுகள், மத்திய பிரதேசத்தில் ஜபல்பூருக்கு இருநூறு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பந்தர்கட் காடுகள், ராஜஸ்தான் மாநிலத்தின் புராதனமான, ஆனால் இன்றைக்குப் பாழடைந்து கிடக்கும் (Ranthambore) ரான்தம் போர் கோட்டைப் பிராந்தியம், உத்தர பிரதேச மாநிலத்தின் ஜிம் கோர்பெட் தேசிய வனவிலங்கு பூங்கா, மேற்கு வங்காளத்தின் சுந்தரவனம் சதுப்பு நிலக் காடுகள் ஆகிய பல பிராந்தியங்களில் வாழ்ந்து வருகின்றன.

கடந்த பத்தொன்பதாவது நூற்றாண்டில் வில்லையும் அம்பையும், ஈட்டியையும் நம்பியிருந்த முந்நாளைய சமஸ்தான மகாராஜாக்களும், முகலாய மன்னர்களும் ஆங்கிலேயருடன் இணைந்து துப்பாக்கி

“தான் பிடித்த 230 கிலோ கிராம் எடையுள்ள காட்டு எருமையை வெகுதூரம் இழுத்துச் செல்லும் வலிமை புலிகளுக்குண்டு. தன் இரையைத் தொடர்ந்து ஓடி, சீக்கிரமாகப் பிடிக்க இயலாவிடில் எளிதில் சோர்வடைவதன் காரணமாக, தன் முயற்சியைச் சில சமயம் கைவிடுவதுண்டு. ஒரே இரவில் 23 கிலோ கிராம் எடை மாமிசத்தைப் புலி தின்று விடுகிறது. அதையடுத்து சில நாள்களுக்கு உணவு உண்ணாது”.





பெண்புலி சீதாவும், குட்டி 'பத்மாஷு'ம்'

"நடப்பு நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரதத்தில் நாற்பதாயிரமாக இருந்த புலிகளின் எண்ணிக்கை இன்றைக்கு இரண்டாயிரமாகக் குறைந்திருக்கிறது. மண்மீது பதியும் பாதச் சுவடுகளை (மனிதனின் கைரேகை போல புலிக்குப் புலி மாறுபட்டிருக்கும்) பிளாஸ்டர் மாவினால் பதிவெடுத்து புலிகளின் எண்ணிக்கை கணக்கெடுக்கப்படுகிறது."

களையும் குண்டுகளையும் உபயோகித்து, புலி வேட்டையில் தீவிரமாக இறங்கினர். அன்றைக்குப் புலிவேட்டை என்பது பணக்காரர்களின் கௌரவச் சின்னமாக இருந்தது. அதுவே புலிகளின் அழிவுக்குத் தொடக்கமாகவும் இருந்தது. புலிகளின் எண்ணிக்கையும் அதிவேகமாகக் குறையத் தொடங்கியது.

தவிர, புலி நகங்களுக்காகவும், பற்களுக்காகவும், புலித்தோலுக்காகவும் புலிகள் வேட்டையாடப்படுகின்றன. புலியின் பல உடல்பாகங்கள் சீனா நாட்டில் பலவகை மருந்துகள் தயாரிக்க உபயோகிக்கப்படுகின்றன.

நடப்பு நூற்றாண்டின் தொடக்கத்தில், பாரதத்தில் நாற்பதாயிரமாக இருந்த புலிகளின் எண்ணிக்கை இன்றைக்கு இரண்டாயிரமாகக் குறைந்திருக்கிறது. புலிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் கணக்கிடப்படுகிறது. அது எப்படி?

மண்மீது பதியும் புலிகளின் பாதச் சுவடுகளை (அவை மனிதனின் கைரேகை போன்று புலிக்கு புலி மாறுபட்டிருக்கும்) பிளாஸ்டர் மாவினால் (Plaster of paris) பதிவெடுத்து, வனவிலங்கு ஆராய்ச்சியாளர்களால் கணக்கிடப்படுகிறது. தவிர புலிகளின் புகைப்படங்களின் உதவியாலும் எண்ணிக்கை கணக்கிடப்படுகிறது. புலிகளின் முகத்தில் கண்களைச் சுற்றியுள்ள உரோம 'வளர்ச்சி, கைரேகையைப் போன்று புலிக்குப் புலி மாறுபட்டிருந்தது. பல டிசைன்களில் இருக்கும் வனவிலங்கு ஃபோட்டோ கலைஞர்கள் எடுக்கும் ஃபோட்டோக்களின் வாயிலாக இந்த டிசைன்களை ஆராய்ந்தும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கென, காடுகள் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வனவிலங்கு ஆராய்ச்சியாளர்கள் உள்பட சுமார் 5000 நபர்களுக்கு மேல் இந்தக் கணக்கெடுப்பில் ஈடுபடுகின்றனர்.

புலி முதலிய காட்டு மிருகங்களை அருகிலிருந்து ஃபோட்டோ எடுக்கும் காமிரா நிபுணர்கள் பலர் பாரதத்தில் உள்ளனர். அவர்களில் திரு. அல்ஃபான்ஸோ ராய் என்ற தமிழரும் ஒருவர். சென்னை திரைப்படக் கல்லூரியில் புகைப்படக் கலையில் தேர்ச்சி பெற்ற அல்ஃபான்ஸோ, நூற்றுக்கணக்கான வனவிலங்குகளை ஃபோட்டோ எடுத்த அனுபவம் உள்ளவர். அவரும் அவரது நண்பர் திரு. அஷீஷ் சன்டோலா என்பவரும், பி.பி.ஸி. நிறுவனத்தின் இயற்கை வரலாற்று இயல் (Natural History) பிரிவிற்கென புலி, யானை முதலிய மிருக வாழ்க்கையைத் திரைப்படமாக்கி அளித்துள்ளனர். புலிகளைப் பற்றிய ஒரு மணி நேரத் திரைப்படம் தயாரிக்க நாலரை ஆண்டுகள் பிடிக்குமாம். கோடை வெயில், மழை, குளிர் என்று எல்லாப் பருவங்களிலும் அவர்கள் படம் எடுப்பதுண்டு. அவர்கள் திரைப்படம் எடுத்து உதவும் பிரிட்டனில் நிறுவப்பெற்ற Survival Anglia என்ற நிறுவனம் உலகத்திலேயே வனவிலங்குகளைப் பற்றிய திரைப்படங்களை வெளியிடும் ஒரே நிறுவனமாகும். திரு. அல்ஃபான்ஸோவும் அவரது நண்பரும் தாம் புகைப்படம் எடுத்த பெண் புலியையும் அதன் குட்டியையும் அடையாளம் கண்டுகொள்ள, முறையே ஸீதா, பத்மாஷ் (பொல்லாதவன்) என்று பெயரிட்டிருந்தனர்.

புலிகளைப் படம் பிடிப்பதற்கு யானை மீதும் ஜீப்களிலும் காட்டிற்குள் சென்று இயற்கை சூழ்நிலையில் படம் பிடிப்பது அவர்களது வழக்கம். நிற்கும் பொழுதும் யானை அசைவதன் காரணமாக திரு. அல்ஃபான்ஸோ உயரமான மூன்று மூங்கில் கழிகளை முக்காலியாகக் கட்டி, அதன் உயரே தன் காமிராவை வைத்துக் கொண்டு, தான் தனது காமிராவின் முக்காலி மீது ஒற்றைக்காலில் நின்று கொண்டு படம் பிடித்ததும் உண்டு. ஒரு சமயம் தாய்ப்புலி ஒன்றை அதன் குட்டிகளுடன் இருபதடிக்கும் குறைவான தூரத்தில் யானைமீதிருந்து படம் பிடித்த பொழுது கால் தவறி கீழே விழுந்து ஓடி, பாதுகாப்புக்காகப் பதறி நின்றதை திரு. அல்ஃபான்ஸோ நினைவு கூரும் பொழுது, அன்று 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்கிறார்.

வனவிலங்குகளின் எண்ணிக்கை குறைந்து வருவதைத் தடுத்து நிறுத்த, பாரத அரசாங்கம் கடந்த 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்பு சட்டத்தை (Wild life Act) நிறைவேற்றியது. புலிகளின் எண்ணிக்கை வேகமாகக் குறைந்து வருவதைத் தடுக்க கடந்த 1973 ஆம் ஆண்டு அந்நாளைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி புலிகள் பாதுகாப்பு திட்டம் (Project Tiger) ஒன்றைத் தொடங்கி வைத்தார். அச்சமயம், வருங்காலத் தலைமுறைகளுக்கு இயற்கை அளித்திருக்கும் பொக்கிஷமாகிய புலி இனங்களைப் பேணிப் பாதுகாப்பதில் தமது அரசு காட்டும் சிரத்தையின் சின்னமே இத்திட்டம் என விவரித்தார். அப்புலி இனங்களை நாமும் வாழ்க, வளர்க என்று போற்றுவோம்.

படங்கள்:
அல்ஃபான்ஸோ ராய்

* * *

'அஞ்சலி' யின்
காஷ்மீரி கேக்
ட்ரை புரூட் அல்வா


காஷ்மீரி கேக் - போட்டோ : யோகா

தீபாவளி என்றால் இனிப்பு இல்லாமலா?

இனிப்பு வகையில்தான் எத்தனை ரகங்கள்?

சிறப்பு ரகங்களாக ஸ்பெஷல் சோன்பப்டி, மைசூர் பாக், கோதுமை அல்வா, மும்பை அல்வா, ஸ்பெஷல் அல்வா, ட்ரை புரூட் அல்வா, மில்க் அல்வா, பாதாம் அல்வா, முந்திரி காஜுரோல், காஜு கட்லி, தேங்காய் பர்பி, பால் பர்பி, திரட்டுப்பால் என்று ஏகப்பட்ட ரகங்களை சென்னை, தி.நகரில் பிரபலமாக விளங்கும் 'அஞ்சலி ஸ்வீட்ஸ்' தயாரித்து வருகிறது.

அஞ்சலி ஸ்வீட்ஸின் 'காஷ்மீரி கேக்' என்கிற இனிப்புப் பலகாரம் மிகப் பிரபலம்.

'காஷ்மீரி கேக்' தயாரிக்கும் முறையைப் பற்றி 'அஞ்சலி ஸ்வீட்'ஸின் கேட்டரிங் மானேஜர் திரு. சங்கரிடம் கேட்டோம். வீட்டிலேயே தயாரிக்கிற ரகமான 'காஷ்மீரி கேக்' செய்முறையை விளக்கினார்.

தேவையான பொருள்கள்:

பால் 1 லிட்டர், சர்க்கரை 150 கிராம், நெய் 50 கிராம், முந்திரி 20 கிராம், திராட்சை 20 கிராம், சாரைப் பருப்பு 5 கிராம், செர்ரி பழம் 15, ஏலக்காய் — ஜாதிக்காய் பொடியாக சிறிதளவு. (ஆகா - இப்போதே நா இனிக்கிறது)

செய்முறை: பாலை நன்றாகக் காய்ச்சி, கொதிக்கிற நேரத்தில் சிறிதளவு படிகாரத்தைப் பொடி செய்து பாலில் தூவ வேண்டும். பால் திரிந்து கோவா பக்குவத்திற்கு வந்து விடும். பிறகு சர்க்கரையைச் சேர்க்க வேண்டும். அத்துடன் நெய், ஏலக்காய், ஜாதிக்காய் பொடிகளைக் கலந்து கெட்டியான பதத்தில் இருக்கும்போது (ஹூம்... மணம் ஜமாய்க்கிறது) சாரைப்பருப்பு, முந்திரி, திராட்சை போடவும். கிளறி இறக்கவும். டிரேயில் இந்தக் கலவையைக் கொட்டி அறுத்தால் காஷ்மீரி கேக் ரெடி! – என்றார்.

அடுத்த விசேஷ அயிட்டம் ட்ரை புரூட் அல்வா. இதற்குத் தேவையான பொருள்கள்:

கார்ன் ஃபிளவர் பவுடர் 300 கிராம், சர்க்கரை 1800 கிராம், முந்திரி முக்கால் கிலோ, பேரீச்சை கால்கிலோ, அக்ரூட் சிறிதளவு, அத்திப்பழம் கால் கிலோ. (எல்லாப் பழங்களையும் துண்டுகளாக்கிக் கொள்ள வேண்டும்.

செய்முறை:

ஒன்றரை லிட்டர் நீரில், கார்ன் ஃபிளவர் பவுடரைக் கலந்து முதலில் 1200 கிராம் சர்க்கரையை மட்டும் கலந்து கரைசலை அடுப்பில் வைக்கவும். மிதமான வெப்பத்தில் கரைசல் கொதிக்கும்போது மீதியுள்ள 600 கிராம் சர்க்கரையைக் கலக்கவும். நெய் கலந்து நன்றாகக் கிளறி விடவும். பிறகு பொடி செய்த பழத் துண்டுகளைச் சேர்க்கவும். கிளறி விடவும். சிறிது கோவா கலரைச் சேர்க்கவும். இறக்கும் முன் சிறிதளவு லெமன் சால்ட் சேர்க்கவும். டிரேயில் கலவையைக் கொட்டி வெட்டினால் 'டிரை புரூட் அல்வா' ரெடி.

'இப்படி பலவித இனிப்பு வகைகள் 'அஞ்சலி ஸ்வீட்ஸ்' தயாரிக்கத் தயாரிக்க அன்றைக்கு அன்றைக்கே விற்பனையாகி விடுகின்றன'' என்றார் திரு. சங்கர்.

தீபாவளி மட்டுமன்றி, நவராத்திரி, விநாயக சதுர்த்தி, ஜனவரி 1 ஆம் தேதிகளில் விற்பனை அமோகமாம் 'அஞ்சலி'யில். - மாலதி நாகராஜ்.


ட்ரை புரூட் அல்வா - போட்டோ : யோகா

‘ஹரிதாஸ்’ கொண்டாடிய மூன்று தீபாவளிகள்!

அறந்தை நாராயணன்

"ஹரிதாஸ், பிராமண குலத்தில் பிறந்த ஒரு தனவந்தரின் புதல்வன். தெய்வ பக்தியுள்ள தன் தாய் தந்தைக்கு அடங்காமல் ஸ்திரீ லோலனாய்த் திரிபவன். மனைவியின் சொல்லுக்கு இணங்கி நடப்பவன் போல நடித்து வந்தான்..... ஒரு சமயம் ஹரிதாஸ் குதிரை மீது செல்லும் போது வழியில் பல பெண்களைக் கவனித்த பின் மோகனாவை நெருங்குகிறான். அச்சமயம் அவனது சிநேகிதன் கண்ணன் அவனைச் சந்தித்து கோயிலில் நடனம் ஆடிக் கொண்டிருக்கிற ரம்பாவை வர்ணித்து அழைத்துச் செல்கிறான். நடனம் முடிந்துவிட்டப்படியால் ரம்பாவிடம் பேசமுடியவில்லை. ரம்பாவை வீட்டிற்கே அழைத்து வருவதாய்க் கண்ணன் சொல்கிறான்...... தாய் - தந்தை வீட்டில் இல்லாமலும், மனைவி லட்சுமி கூட்டத்தில் சேராமல் இருக்கவும் ஹரிதாஸ் தந்திரம் செய்கிறான். ரம்பாவின் நடனம் அதிவிமரிசையாய் கோஷ்டிகளுடன் ஹரிதாஸ் வீட்டில் நடைபெறுகிறது....... நடனமாடுகிற ரம்பா, ஒரு தாசி என்று லட்சுமிக்குத் தெரிந்து வாக்குவாதம் செய்து, ரம்பாவை வெளியில் துரத்துகிறாள்......தான் அடைந்த அவமானத்திற்குப் பழிவாங்க ரம்பா, துஷ்டர்களை அனுப்புகிறாள். லட்சுமியை ஒரு மரத்தில் கட்டி துஷ்டர்கள் அடிக்கப் போகும் சமயம் ஹரிதாஸின் தகப்பனார் தன் ஆட்களைக் கொண்டு லட்சுமியைக் காப்பாற்றுகிறார்... துஷ்டர்கள் ஹரிதாஸிடம் அவனுடைய தந்தை தான் லட்சுமியைக் காப்பாற்றினார் என்று சொல்ல, அவன் தனது தாய் தந்தையை வீட்டை விட்டு விரட்டுகிறான்... பெற்றோரின் கண்டிப்பு இல்லாததால், ரம்பாவின் காதல் நாளுக்கு நாள் அதிகமாகி, குடிப்பழக்கம் மற்றும் சூதாட்டம் காரணமாக பொன்னையும் பொருளையும் விரயம் செய்ததோடு,




‘ஹரிதாஸ்’- பாகவதர்

‘அம்பிகாபதி’ படத்தில்
பாகவதர்-சந்தான லட்சுமி



குடியிருந்த வீட்டையும் ரம்பாவுக்கு எழுதிக் கொடுக்கிறான் ஹரிதாஸ். அவனையும் அவன் மனைவி லட்சுமியையும் விரட்டியடிக்கிறாள் ரம்பா... தம்பதி காட்டில் தூங்குகையில், ஹரிதாசுக்கு நித்திரை தெளிந்த சமயம், ரூபலாவண்யமுள்ள மூன்று ஸ்திரீகளைக் கண்டு விசாரிக்கவே, அவர்கள் 'கங்கா','யமுனா', 'சரஸ்வதி' என்றும் பிரதிதினம், மஹாமுனிவர் தரிசனத்திற்கு வந்து ஆசீர்வாதத்தைப் பெற்று வருவதாகவும், அவருடைய மகிமையையும் அவர்கள் சொல்கிறார்கள்...... ஸ்திரீ லோலனான ஹரிதாஸ் மகா முனிவரைக் கண்டு ஏசுகிறான், தன்னை உதைக்க வந்த ஹரிதாஸின் கால்களை முனிவர் துண்டிக்கச் செய்கிறார்... உடனே ஹரிதாஸ் தன் தவறுதலை உணர்ந்து, முனிவர் உபதேசத்தால் தாய் - தந்தை தாம் தெய்வமென அறிந்து, தன் பெற்றோரைத் தேட ஊர்ந்து செல்கிறான்... தெய்வானுக்கிரகத்தால் தாய் - தந்தையைச் சந்தித்து முனிவர் ஆசீர்வாதத்தால் இழந்த கால்களை அடைகிறான்... புருஷனைப் பிரிந்த லட்சுமி தன் தகப்பனார் வீட்டுக்குப் போகிறாள். ஸ்திரீகளுக்குப் பதியே தெய்வமென்று உபதேசித்து, தனியாய் வந்த லட்சுமியை அவளது தகப்பனார் கோபித்து விரட்டுகிறார்... ஆசிரமத்தில் ஹரிதாஸ், பெற்றோருக்குப் பணிவிடை செய்து கொண்டிருக்கையில், லட்சுமியும் அங்கு





'சிந்தாமணி' படத்தில் பாகவதர் - அஸ்வத்தாமா

வந்து ஹரிதாசுக்குத் துணையாகப் பணிவிடை செய்வதையும், ஹரிதாஸின் பக்தியை, பகவான், பரீட்சித்துக் காட்சியளிப்பதையும் வெள்ளித் திரையில் கண்டு ஆனந்தியுங்கள்."

"வெள்ளித்திரையில் கண்டு ஆனந்தியுங்கள்" என்று கதைச் சுருக்கம் முடிவதால், திரைப்படக் கதை தான்.

அந்தத் திரைப்படம் : 'ஹரிதாஸ்'

தமிழ் சினிமா வரலாற்றில் இந்த 'ஹரிதாஸ்' படத்திற்குத் தனிச்சிறப்புண்டு.

தமிழ்ப் படங்களில், முதன் முதலில் தொடர்ந்து 110 வாரங்கள் ஓடியது - 'ஹரிதாஸ்'!

16-10-1944-இல் வெளியாகி 768 நாள்கள் ஓடியபடம் 'ஹரிதாஸ்'

இடையில் மூன்று தீபாவளிகளைக் கொண்டாடியது - 'ஹரிதாஸ்'

'பக்த விஜயம்' என்னும் புராண நூலிலிருந்து புனையப்பட்ட திரைக்கதை என்பதானா இந்த மாபெரும் வெற்றி?

ஆராய வேண்டும்...

'சூப்பர் ஸ்டார்' பாகவதர்

'ஹரிதாஸ்' படத்தின் கதாநாயகன் ஹரிதாஸாக நடித்தவர் எம். கே. தியாகராஜ பாகவதர்.

'டைரக்டர் கே.சுப்பிரமணியம் உருவாக்கிய 'பவளக்கொடி' (1934) மூலம் திரைப் பிரவேசம் செய்த தியாகராஜ பாகவதர் அந்தப் படத்திற்கு வாங்கிய நடிப்பு ஊதியம் - ரூபாய் ஓராயிரம்; கதாநாயகி எஸ்.டி. சுப்புலட்சுமிக்கு ரூபாய் - இரண்டாயிரம்; டைரக்டர் கே.சுப்ரமணியத்தின் ஊதியம் - வெறும் 750 ரூபாய் மட்டுமே! பாகவதரின் அடுத்த படங்கள் - 'நவீன சாரங்கதாரா', 'சத்தியசீலன்' (1936)

1936 ஆம ஆண்டில் - 'சிந்தாமணி'யும் 'அம்பிகாபதி'யும் பாகவதரின் சூப்பர் ஹிட் படங்கள்.

பாகவதர் சூப்பர் ஸ்டாராகிக் கொண்டிருந்தார்; படத்திற்குப்படம் புதுப்புது கதாநாயக நடிகைகள்.

'சிந்தாமணி'யில் அஸ்வத்தாமா 'அம்பிகாபதி'யில் எம்.ஆர். சந்தானலட்சுமி.

படத் தயாரிப்பாளர்களுக்கு நிபந்தனைகள் போடும் அளவுக்கு நிமிர்ந்தார் பாகவதர்: "நான் நடிக்க வேண்டுமானால் இரண்டு கதாநாயகிகள் வேண்டும். வசனத்தை இளங்கோவனும் பாடல்களை பாபநாசம் சிவனும் எழுத வேண்டும். காமெடிக்கு என்.எஸ். கிருஷ்ணன், டி.ஏ.மதுரம் வேண்டும். ஒரு படத்திற்கும் அடுத்த படத்திற்கும் ஓராண்டாவது இடைவெளி வேண்டும்!"

(பிற்காலத்தில் பாகவதர் 'ஃபார்முலா' வைத்தான் எம்.ஜி.ஆர் பின் பற்றினார்!)

'திருநீலகண்டர்' (1939) படத்தில் பாகவதருக்கு 2 கதாநாயகிகள்:-

1 பாப்பா லட்சுமி காந்தம், 2. எஸ்.எஸ். ராஜாம ணி

'அசோக் குமார்' (1941) படத்தில்-

1.டி.வி. குமுதினி, 2. பி.கண்ணாம்பா.

'சிவ கவி' (1943) படத்தில்

1.எஸ்.ஜெயலட்சுமி, 2.டி.ஆர்.ராஜகுமாரி.

'ஹரிதாஸ்' (1944) படத்தில்- 1. என்.சி.வஸந்த கோகிலம், 2. டி.ஆர். ராஜகுமாரி.

மன்மத லீலையை வென்றார் உண்டோ?

'ஹரிதாஸ்' படத்தில் தியாகராஜ பாகவதர் "வாழ்விலோர் திருநாள்", "மாமுனி நாதர் கருணையினாலே", "என் உடல் தனிலோர்", "அன்னையும் தந்தையும் தானே", "கிருஷ்ணா முகுந்தா", "நிஜமா இது நிஜமா" போன்ற பாடல்களைத் தனது கந்தர்வகான இனிய குரலில் பாடியிருக்கிறார்.

ஆனால் பெருமளவில் ஹிட் ஆன பாடல் எது தெரியுமா?

சாருகேசி ராகம் ஆதிதாளத்தில் பாடிய அந்தப் பாடல்...

அது வானொலியில் — தொலைக் காட்சியில்-ஒலிக்கும் போதெல்லாம் என் தாத்தா முதல் தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் வாழ்கின்ற தாத்தாக்கள் எல்லாரும் தங்கள் இளமைக்காலம் திரும்பிவிட்ட திருப்தியில் மெய்சிலிர்க்கும் அந்தப் பாடல்....

மன்மத லீலையை
வென்றாருண்டோ?
என் மேல் உனக்கேனோ
பாராமுகம்?

நின் மதி வதனமும்
நீள் வழியும் கண்டு
என் மதி மயங்கினேன்
மூன்று உலகிலும்
மன்மத லீலையை
வென்றாருண்டோ?
என்னுடனே நீ பேசினால்
வாய்
முத்துதிர்ந்து விடுமோ?
உனை எந்நேரமும் நினைந்துருகு
மென்னிடம் வந்தால்
மெனக் கெடுமோ?
உன்னை நயந்து நான்
வேண்டியுமோர் முத்தம்
தந்தால் குறைந்திடுமோ?
ஒரு பிழை யறியா
என் மனம் மலர்க்கணை
பாய்ந்து அல்லல் படுமா?
மணங்கவர்
மன்மத லீலையை
வென்றாருண்டோ?

பாடலின்நடுவே, பாகவதர், அதே இனிய குரலில் "ரம்பா" என்று அழைப்பார்.

காதலாகிக் கசிந்து ரம்பாவாக நடித்த டி.ஆர்.ராஜகுமாரி நடனமாடியவாறே "ஸ்வாமி!" என்று குழைவார்.

பாகவதர் காலத்து இளைஞர்கள் இப்போதும் குளிர்ந்து போகிறார்கள்.

டி.ஆர்.ராஜகுமாரி அந்தக் காலத்தின் 'கனவுக் கன்னி'! அவருக்கென்று லட்சக் கணக்கான ரசிகர்கள் இருந்தார்கள்.

இது 'ஹரிதாஸ்' படத்தின் இரண்டாவது பிளஸ் பாயிண்ட்

கலைவாணர் என். எஸ்.கிருஷ்ணன், டி.ஏ.மதுரம் வழங்கிய நகைச்சுவை மூன்றாவது பிளஸ் பாயிண்ட். இத்தனை சிறப்பு அம்சங்களால் தான் 'ஹரிதாஸ்' படம் தொடர்ந்து 110 வாரங்கள் அதாவது 768 நாள்கள் ஓடியதா? ஆராய வேண்டும்...



'ஹரிதாஸ்' படத்தில் பாகவதர் - டி.ஆர். ராஜகுமாரி.

மஞ்சள் பத்திரிகை ஆசிரியன் படுகொலை

சினிமா உலகின் பிரபலஸ்தர்களைப் பற்றி கிசு கிசுச் செய்திகளை அந்நாள்களில் குடும்பப் பத்திரிகைகளே எழுதத் தொடங்கியதன் விளைவாக நேரடியாக நடிகர் - நடிகைகளின் அந்தரங்க வாழ்க்கைகளை வெளியிட்டு மிரட்டி பணம் பறிக்கப் புறப்பட்டிருந்தான் ஒருவன்; அவன் பெயர் லட்சுமி காந்தன்; அவனது மஞ்சள் பத்திரிகையின் பெயர் 'இந்து நேசன்'

பாகவதர், என்.எஸ். கிருஷ்ணன், 'பட்சிராஜா' ஸ்டுடியோ அதிபர் ஸ்ரீராமுலு நாயுடு, டி.ஆர். ராஜகுமாரி போன்ற புகழ் பெற்றவர்களைப் பற்றி மட்டுமல்லாமல் 'ஹிந்து' நாளேட்டின் சாதாரணத் தொழிலாளர்களையும் மிரட்டி செய்திகளை வெளியிட்டு வந்தான் லட்சுமி காந்தன்.

'ஹரிதாஸ்' படம் 16-10-1944 தீபாவளியன்று திரையிடப்பட்டு வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருந்தது.

8-11-1944.

சென்னை வேப்பேரி ஜெனரல் காலின்ஸ் சாலையில் 'இந்து நேசன்' லட்சுமிகாந்தன் ரிக்ஷாவில் சென்று கொண்டிருந்த போது யாரோ சிலர் வழிமறித்தனர்

சரமாரியாகக் கத்திகளால் குத்தினர்..

மறுநாள், அதிகாலையில் ஜெனரல் ஆஸ்பத்திரியில் லட்சுமி காந்தன் இறந்து விட்டான்.

அன்று, 'ஹிந்து' நாளேட்டின் தொழிலாளி வடிவேலுவைப் போலீஸார் கைது செய்தனர். தொடர்ந்து குஸ்தி பயில்வான் ஆரியவீரசீனன், பால்காரர் நாகலிங்கம், கடைக்காரர் ராஜாபாதர், போலீஸ் கான்ஸ்டேபிள் ஆறுமுகம் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

டிசம்பர் 27-ஆம் தேதியன்று சென்னையில் தியாகராஜ பாகவதரும், கோவை நகரில் என்.எஸ்.கிருஷ்ணனும் கைது செய்யப்பட்டனர்.

1945 ஜனவரி 5-ஆம் தேதியன்று ஸ்ரீராமுலு நாயுடு கைதானார்

"வடிவேலு, நாகலிங்கம், ஆரியவீர சீனன், ராஜாபாதர், தியாகராஜ பாகவதர், என்.எஸ். கிருஷ்ணன் ஆகியோருக்கு ஆயுள் தண்டனை" என்று தீர்ப்பு கூறப்பட்டபோது, 'ஹரிதாஸ்' படம் 41ஆம் வாரமாக ஓடிக் கொண்டிருந்தது.

தங்கள் அபிமான நடிகர்களுக்கு "ஆயுள் தண்டனை" என்று கேள்விப்பட்டதும் லட்சக் கணக்கான ரசிகர்களின் அனுதாபம் அலையென எழுந்தது.

மேல் முறையீட்டினால், பாகவதரும் கிருஷ்ணனும் 1947 ஏப்ரல் 25-ஆம் தேதியன்று விடுதலையானார்கள்

இந்த இடைக்காலத்தில் தியேட்டரில் 'ஹரிதாஸ்' படம் மட்டுமே தியாகராஜ பாகவதருக்கு.

'ஹரிதாஸ்' படத்தின் மாபெரும் வெற்றிக்கு இந்த இடைவெளி தான் காரணம்.

விடுதலையான பிறகு பாகவதர் 'ராஜமுக்தி' (1948), 'அமரகவி', 'சியாமளா'(1952), 'புதுவாழ்வு'(1957), 'சிவகாமி'(1960) ஆகிய படங்களில் நடித்தாலும் அவரது மாபெரும் வெற்றிப் படமாக 'ஹரிதாஸ்' மட்டுமே அமைந்தது.

விடுதலையாகி வெளியே வந்த பாகவதர், மக்களின் ரசனையில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டிருந்ததைப் புரிந்து கொள்ளத் தவறியதே அவரது இறுதி நாள்களின் வறுமைக்குக் காரணமாக அமைந்து விட்டது. ●

பரமனே தருக இன்றே!

பிறப்பிலும் தனிய னாகப்
    பிறந்தவன் ஆத லாலே;

இறப்பிலும் தனிய னாக
    இறக்கவே விரும்பு கின்றேன்.

உறவிலும் நாட்ட மில்லை;
    உள்ளத்தில் அமைதி யில்லை.

பரமனே உந்தன் பங்கை
    பக்தனுக்குத் தருக இன்றே!


புதுவை நித்திலன்

இறைவனைக் காணும் இடங்கள்

காலைக் கதிர் ஒளியில்
    கவின் முகிலில், வீண்மீனில்
சோலைக் குயில் இசையில்
    தூய்வெண்பனித்துளியில்;
மாலை மதியொளியில்
    மலைகளில், தண்சுனையில்
ஆலைத் தொழில் வளத்தில்
    ஆண்டவனைக் காண்போம்!

தென்றல் வருகையினில்
    தென்னை தரும் சுகத்தில்,
சின்வஞ்சிறு குழந்தை
    சிரிக்கும் நளினமதில்;
மன்றில் ந மாடிடும்
    மலர்வாய்ச் சொற்களினில்
இன்பம் கொண்டுதினம்
    இறைவனை நாம் காண்போம்!

சி. இராமசாமி





ஒளிவிளக்கில் இருதாயே!

எங்கும் கதிர் தங்கம் இறை ஞாயிற்றிரு வுருவும்,
சங்கும் ஒளிர் மங்கும் பிறை திங்கள் நிறை நுதலும்,
பொங்கும் களி தங்கும் பொற் பவழச் செவ்வாயும்,
தங்கும் பொலி புதனினொளி தவழும் நளிர் முகமும்,
கொங்கும் கமழ் சங்கம் அமிழ் வியாழன் உறை
யறிவும்,
அங்கும் திகழ் வெள்ளித் துகில் மிளிரும் தளிர்
இடையும்
தொங்கும் வரி குழலின் சனி சுழலும் கரு நிறமும்,
வங்கும் புரி சங்கும் அணி ரங்கன் திரு நங்கை!

நுங்கும் நுரை தங்கும் திரை பாற்கடலுருவாகி,
தெங்கும் பனை நுங்கும் புரை மென்மைதரு மதரம்,
மங்கா அருள் மிளிரும் திருமாலின் பொன் னாகம் -
செங்கை மிரு செந்தாமரை மலரேந்தி நீ யுறைவாய்!

அங்கை வளர் முக்கோலணி சங்கரனும் முனிவன்
சிந்தை குளிர் கவிகேட்டுப் பொன்மழையும்
பொழிவாய்!
செங்கை தரும் பதியாம்நற் காஞ்சிபுரம் தூப்புல்
தங்கும் புகழ் எங்கும் திகழ் தேசிகனார் தோன்றி
விஞ்சும் மனக் கருணைதனை வேண்டித் துதிபாட
மிஞ்சும் படி தங்கக்குவை தருவாய் பெருந்தேவி!

துன்பம் இனி விலகும்படி செல்வம்தனை யீவாய்!
இன்பம்மலி பதினாறாம் பேறும் எமக்களிப்பாய்
எங்கள் சிறு இல்லம்தனில் ஏற்றும் ஒளி விளக்கில்
என்றும் இரு தாயே யென ஏத்திப் பணிகின்றோம்.

தமிழ்மாறன்

சலங்கை



சலங்கை என்றதுமே 'ஜல்ஜல்' என்ற
    சதிராடும் பாதங்கள் கண்முன் தோன்றும்!
நலங்கு இட்டிட்ட பொற் பாதங்கள்
    நளினமாய் ஆடும்போ திசையைக் கூட்டும்!

ஆடுகின்ற அரங்கத்தில் ஒலி சிறக்கும்!
    அழகான மயிலாட உளம் பறிக்கும்!
தேடுகின்ற விழிகளிலே பல் விதமாய்த்
    தோன்றுகின்ற பாவங்கள் காந்த மாகும்!
பாடுகின்ற குரலோடு ஒருங் கிணைந்து
    பரப்பும்இசைக் கருவிகள் நாதம் சேர்க்கும்!
கூடுகின்ற மக்கள்மனம் நாட்டி யத்தில்
    குவிந்திடுமே! பரவசத்தில் அமிழ்ந் திடுமே!

குடந்தை புகழேந்தி

பூமிப் பந்து

விந்தை விந்தை பூமியாம்
    விண்ணில் உருளும் கோளமாம்!
பந்தை உருட்டி விட்டதுபோல்
    அந்த ரத்தில் சுழலுதாம்!

கடலும் மலையும் ஆறும்
    காடும் சோலை நிலமும்
இடத்தை விட்டு நகராமல்
    இப்பூமிதான் சுழலுதாம்!

கோடி கோடிப் பந்துகள்
    கோள பூமி போலவே
கூடி நிறைந்து உள்ளதாம்
    காணும் அண்டம் முழுதுமே!

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

சேண்ட பள்ளி ஊருக்கு மேற்கில், உயரமான ஒரு பாறை உள்ளது. சேண்ட பள்ளிக்குப் போகவேண்டுமானால் உயரமான அந்தப் பாறையின் அடிவாரத்திலுள்ள இரண்டு பாதங்களை உம்மா சொன்னபடி தொட்டுக் கண்ணில் வைக்க வேண்டும். பாறை ஏறும் முன் புண்ணிய பாதங்களில் கால்களை மெதுவாகப் பதித்துவிட்டு ஏறினால் ஆபத்து ஏதும் நேராது என்று அடிக்கடி சொல்வதும் உம்மாதான்.

பாறை உச்சியில் பள்ளிவாசல் கட்டி நூற்றாண்டுகளாக அதற்குள் குடி வாழ்ந்து வரும் செய்கு, அவரிடமுள்ள அற்புதக் கயிற்றை வலை வீசுவதுபோல் வீசி, பாறையிலிருந்து கால் சறுக்கி, கிடங்குகளில் விழப் கிணறுகளில் தண்ணீர் வற்றாமல் இருப்பதும், ஊசிக்கிணறு பொங்கியும் கடல் கொந்தளித்தும் ஊர் அழியாமல் இருப்பதும், ஊரின் மேற்கெல்லையில் செய்கின் காவல் நீடித்து வருவதனால்தான் என்றும் உம்மா அடிக்கடி மகிமை பேசுவாள்.

''அப்போ கடற்கரையிலுள்ள குடிசைகளைக் கடல் இழுத் துட்டுப் போனதோ?''

உம்மாவிற்கு செய்க்கைப் பற்றிய குறுக்குக் கேள்விகள் கேட்பது விருப்பமில்லை.

''அதெல்லாம் நஸ்ராணி (கிறிஸ்தவர்கள்)க் குடிசைலே.''

உம்மா அப்படிச் சொன்ன போது வேறொரு கேள்வியைத் தொடுத்துவிட்டேன்.

போன அய்யாவைக் காண வில்லை என்று கோங்கண்ணன் மேஸ்திரியின் பிள்ளைகள் காடு கடலெல்லாம் திரிந்து தேடி அலைந்தனர். மறு நாள் காலையில் வீசிய மேகாற்றில் மேஸ்திரியின் பிள்ளைகளும் பிணவாடை முகர்ந்தனர். பிணம் எடுக்கும் முன் அடிவாரத்திலுள்ள புண்ணியப் பாதங்களைக் கண்ணில் தொட்டு வைத்துக் கொண்டு பாறை உச்சிக்குப் போய்க் காணிக்கை போட்டனர். மூக்களவு பனங்கள் குடித்திருந்த கோராமி, இடுப்பில் வடம் கட்டிக் கொண்டு புலி வங்கியில் இறங்கினான். பாதாளக் கிணறுகளில் இறங்கி தூர் வாரும் கோராமி. பிணத்தில் வடம் கட்டிவிட மேலிருந்தவர்கள் இழுத்து மேலே எடுத்தனர்.

கேள்வியின் விளிம்பில்

தோப்பில் முஹம்மது மீரான்

போகிறவர்களை விழாமல் தடுத்துப் பாதுகாப்பாக உச்சிக்கு அழைத்துச் செல்லவும், அதேபோல் கீழே இறக்கி விடவும் செய்வார். நூற்றுக் கணக்கான மக்களானாலும் ஒரே வீச்சில் எல்லாரையும் பாதுகாக்கக் கூடிய அற்புத நுட்பமான கயிறு, அவர் கையில் இருப்பது.

''சேண்ட பள்ளிப் பாறையின் உச்சாணியிலிருந்து ஊர்ச்சனம் யாரும் கால் சறுக்கி புலி வங்கிலும், புதர்கள் அடர்ந்த பாறை இடுக்குகளிலும் விழுந்து இறங்காததற்குக் காரணம், இந்தக் கயிறு வீச்சுதான்'' என்றாள் உம்மா.

பூத உடலை மேகக் கூட்டங்களில் மறைவாக வைத்துக் கொண்டு, பாறை முகட்டில் இடிந்து காடு பிடித்துக் கிடக்கும் பள்ளி வாசலுக்குள் அருபியாக நடமாடிக் கொண்டிருக்கும் செய்க்கின் அருள் பார்வையினால்தான், தென்னைகள் காய்ப்பதும், வயல்கள் விளைவதும்,

''அப்போ கோங்கண்ணன் மேஸ்திரி புலி வங்கில் விழுந்து செத்ததோ?''

பதிலுக்கு உம்மா தடுமாறி னாள் போலிருந்தது. குளித்துக் கொண்டிருந்த என்னை ஓர் அதட்டு அதட்டி விட்டு, சீக்காய்த் தூள் எடுக்க வீட்டிற்குள் போனாள்.

''மரியாதைக்கு அமுக்குத் தேய்ச்சிட்டுக் கரையேறுல.''

ஒரு வெள்ளி இரவு, பிறை 14ல், சூல் அப்பம் நேர்ச்சை கொடுக்கப் பாறை ஏறியவர்கள், நடு வழியில் பிண வாடை வீசியதை ஊருக்குள் வந்து சொன்னார்கள். வீடுகளில் ஆள் கணக்கெடுப்பு நடந்தன. எண்ணிக்கையில் குறைவு இருக்க வில்லை.

சேண்ட பள்ளி செய்கின் முனிதல் யார் மீது விழுந்ததென அறிய ஊர்ச்சனம் ஆவலுற்றனர். சினை மாட்டிற்குப் புல் அறுக்கப்

பாயில் சுருட்டிய பிணத்தைச் தூக்கிச் செல்வதை அடிவாரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தேன். பிணத்தின் வெளிறிய பாதங்கள் தெரிந்தன. மூக்கைப் பொத்தி விட்டேன். அப்படி வீச்சம்! ஒரு வாரமாச் சோறு உண்ணவில்லை. பிணம் பார்த்த அதிசயத்தை உம்மாவிடம் பெருமையுடன் சொன்னேன். கோபத்தை அடக்கிக் கொண் டிருந்த உம்மா சந்தையிலிருந்து திரும்பிய வாப்பாவிடம் சொன்னாள். அவ்வளவுதான்.

''காபிருக்க பிரேதம் பார்க்கப் போவியாலே?''

புளியமார் பளார் பளாரென்று உயர்ந்து தாழ்ந்தது. அட்டை போல் சுருண்டு போனேன்.

''கோங்கண்ணன் மேஸ்திரி காபிர் இல்லையா? காபிர்களுக்கு, சேய்க்குக் காவல் கிடைக் காதுலே.''

சியக்காயுடன் திரும்பி வந்து என் மொட்டைத் தலையைச் சுரண்டி, அழுக்குத் தேய்த்து விடும்போது தான் என் கேள்விக்கு உம்மா பதில் சொன்னாள்.

துர்மரணமடைந்த பிணத்தைப் பற்றிய பயம் விலகவும், மேஸ்திரி யுடைய ஆவி அண்டாமலிருக்கவும் ஓதிப் பார்க்க ஆனக்குட்டி லெப்பை யிடம் என்னை அழைத்துச் சென் றாள், உம்மா. ஓதிப்பார்க்கும்போது, என் முகம் முழுதும் குற்றாலம் சாரலில் நனைந்தது.

சேண்டபள்ளி செய்கு செங் கோல் சுழற்றி ஆட்சி நடத்துகிற பாறை ஏற அவருடைய பாதங் களைத் தொட்டுக் கண்ணில் வைத்து அனுமதி வாங்காமல் போனதும், பாறை இடுக்குகளில் செய்க்கின் அருளில் வளரும் காட்டுக் கோரைப் புற்களை மாட்டுக்கு அறுக்க காணிக்கை போட்டு அனுமதி பெறாத தும் தான் மேஸ்திரி மீதான குற்றச் சாட்டுகள். அதனால் கோபம் தாளா மல் செய்கு, தலையில் புல் கட்டுடன் பாறை இறங்கிக் கொண்டிருந்த மேஸ்திரியின் கால் இடுக்கில் அவருடைய மந்திரக் கோலை வீசி கால் தடுக்கி விழச் செய்ததாக ஒரு தரப்பு வாதம். இல்லை, தானாக கால் இடறி விழப்போன மேஸ்திரியை, காபிர் ஆனதால் செய்கு அவரிட முள்ள அற்புதக் கயிற்றை வீசிக் காப் பாற்றவில்லை என்று இன்னொரு தரப்பு வாதம். இரண்டு வாதங் களிலும் உம்மா சரி கண்டாள்.

வெள்ளி இரவுகளிலும், திங்கள் இரவுகளிலும் சேண்ட பள்ளிச் செய்க் கின் சந்நிதானத்துக்குப் பாறை ஏறும் உம்மாவுக்குப் பின்னால் எப்பவும் ஒரு வால் முளைத்திருக்கும். ஏறும் போதும் இறங்கும்போதும் புலி வங்கி கண்ணில் படாமலிருக்க உம்மாவின் வாலாக ஒட்டிக் கொள்ளும் நான், கண்ணைப் பொத்தி விலகி நடந்தாலும், தலையில் புல் கட்டுடன் மேஸ்திரி எதிரில் வந்து கொண்டிருப்பார்.

துர்மரணமடைந்த மேஸ்திரி பேயாக வந்து உடம்பில் கூடாம லிருக்கவும், கழுத்தை நெரித்துக் கொல்லாமல் இருக்கவும், ஆண் களுக்கும் பெண்களுக்கும் ஆனக் குட்டி லெப்பை உடல் கட்டு மந்திரம் ஓதி ஊதிவிட்டார். கறுப்புக் கயிற்றில் மந்திரம் ஓதி சிலருக்குக் கொடுத்தார். செம்புத் தகட்டில் மந்திரச் சொற்கள் எழுதி வெள்ளித் தாயத்துக்குள்ளே அடைத்து, கையிலும், கழுத்திலும் இடுப்பிலும் கட்ட வேறு சிலருக்குக் கொடுத்தார். ஆனக் குட்டி லெப்பைக்கு வீட்டில் தொல்லை தாங்கமுடியவில்லை. கூடிய பெரும் கூட்டத்தைக் கண்டு லெப்பையின் ஆஸ்துமா நோயாளியான மனைவி எரிச்சல் அடக்கமாட்டாமல் பேயாடி னாள். பயந்து போய் ஆனக்குட்டி லெப்பை இருப்பிடம் மாற்றிக் கொண்டார். மக்களுடைய வசதியை எண்ணி, பாறை அடி வாரத்திலுள்ள கொல்லமா மரத்தின் நிழலில் ஒரு பெஞ்சு போட்டு உட்கார்ந்து கொண்டார். பாறை ஏறுவோருக்கும், இறங்கு வோருக்கும் உடல் கட்டு மந்திரம் ஓதி ஊதிவிடுவதில் மும்முர மானார்.

வளையல் காரன் சவரிமுத்துவும் மா மரநிழலில் லெப்பையோடு ஒட்டிக் கொண்டான். கையால் அளந்து கறுப்புக் கயிறு விற்றான். பெண்கள் வளையல்களும் ஒட்டுக் கம்மல்களும் வாங்கி அணிந்தனர். வெள்ளி வேலை செய்கிற பலவேசம் ஆசாரி, தாயத்துகள் செய்து மாலை போல் தூக்கிக் கொண்டு 'தாயத்தோ' என்று கூவினான். அவனும் ஆனக் குட்டி லெப்பையைச் சுற்றிப் பற்றி நின்று கொண்டான். அவருக்கு 'டபார்' கோபம் வராமலிருக்க ஒரே ஓட்டத்தில் ஓடிப் போய் சூடாறா மல் ஒரு சிங்கிள் டீ அவ்வப்போது வாங்கிக் கொடுத்தான். ஒட்டு மீசைக் காரன் பலூனில் ஓசை எழுப்பியும் பீப்பி ஊதியும் குழந்தைகளின் ஆவலைத் தூண்டி விட்டான். எல்லா வியாபாரமும் லெப்பையை மையம் கொண்டிருந்தன. புதுசாக உருவான அந்த பஜாரிலிருந்துதான் உம்மா எனக்கு ஒரு மூங்கில் ஊத்து வாங்கித் தந்தாள். முத்தாரம்மன் கோயிலில் சாமி ஆடும்போது கொட்டு மேளத் திற்கு ஒப்பம் வாத்தியம் வாசிப்பவன் தலை ஆட்டுவதுபோல் தலையாட்டி ஊர் முழுவதும், ஊதி நடந்தேன்.

வாரம் இருமுறை செய்க்கின் சந்நிதானத்திற்குச் சென்று நேர்ச்சைக் கடன்களை வீட்டினாலும் உம்மா வின் கடன், நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போனது. அடுப்பில் தீ எரியாவிட்டால், தடுமன், மண்டை இடி, காய்ச்சல் எதுக்கெடுத்தாலும் தனித்தனி நேர்ச்சை.

''எப்பத்தான் இந்த கடன்களை நான் வீட்டுவேனோ, ஆண்ட வனே!''

உம்மாவிற்கு எப்போதும் நேர்ச்சைக் கடனைப்பற்றிய கவலை.

உம்மாவின் நினைவாற்றல் அபாரம். அந்த வாரம் வழங்கும் நேர்ச்சை சிலவேளை வழி இல்லாமல் என்னைப் பெற நேமிசம் செய்ததாக இருக்கக் கூடும். அல்லது உம்மாவின் திருமணத்திற்குமுன் தலைவலி வந்த தற்கான நேமிசமாயிருக்கக் கூடும். ஏதானாலும், உம்மாவின் அச்சேறாத நூலை வாசித்து உணர் வதற்கான பூதக்கண்ணாடி என்னிடம் இல்லாம லிருந்தது.

சாப்பாட்டிற்கு உலைபோடும் போது ஒரு பிடி அரிசி, வீட்டு வளாகத்தில் தேங்காய் பறிக்கும் போது ஒரு தேங்காய், வீட்டில் அரிசி மாவு இடிக்கும்போது ஒரு கை மாவு, இதெல்லாம் தனியாக ஒதுக்கிப் போடுவதற்கான அர்த்தம் நான், தேங் காய் திருடுவது வரை எதற்கென்று எனக்குப் புரியவில்லை. பானையி லிருந்து அள்ள அள்ளச் சோறு குறை யாமல் இருக்கவும், தென்னையில் நிறையத் தேங்காய் காய்ப்பதற்கா கவும், செய்கு அருள்புரிய ஒதுக்கீடு செய்தவை என்று என்னைக் கையும் களவுமாகப் பிடித்த பிறகுதான் புலப் பட்டது.

புதுக்கடை ஜெயஸ்ரீயில் சந்திர லேகா. நடந்துதான் போக முடியும். மாட்னி ஷோவிற்குப் போனால் உம்மாவிற்கும் வாப்பாவிற்கும் தெரிய வாய்ப்பில்லை. கை வெறுமை. தெக்கு அறை மூலையில் உம்மா சேர்த்துப் போட்டிருக்கும் தேங்காய்

எதற்கு என்று தெரியாது. இரண்டைத் திருடினேன். தோயக் (தோசை) காரி அக்கா அதற்குத் தந்த காசுக்கு தரை டிக்கட்தான் கிடைத்தது. தரையிலுள்ள செம்மண் தூசி உம்மாவுக்குத் துப்பு கொடுக்காம லிருக்க உட்காரும்போது வேட்டியை இடுப்பளவு தூக்கிக் கட்டியிருந்தேன்.

படம் விட்டு வரும்வழியில் ஒருவருடைய சைக்கிளின் பின்னால் தொத்திக் கொண்டேன். உருளைக் கற்களும் குழிகளும் நிறைந்த கல் ரோடு - எதிரில் உடல் குலுக்கியபடி வந்த பஸ்ஸுக்கு வழிவிட்டதில் சைக்கிள் ஓட்டி வந்தவரும் நானும் சைக்கிளும் எல்லாம் ரோட்டோரத்துப் பள்ளத்திற்குள் பொத்தடிக்க விழுந் தோம். கை, கால் முட்டுகளில் ரத்தக் காடு.

கருக்கல் இருட்டில் மண்டி மண்டி நின்ற என்னை உம்மா கண்டுவிட்டாள். வேட்டியில் புரண் டிருந்த ரத்தம் உம்மாவிற்குத் துப்புக் கொடுத்தது. செய்க்குதான் உம்மாவின் கண்ணிற்குக் காட்டித் தந்ததாக உம்மா பெருமைப்பட்டுக் கொண்டாள்.

''காய் எங்கேயிருந்து எடுத்த?'' கையில் மட்டையைத் தூக்கிக் கொண்டு துப்பு துலக்கினாள் உம்மா.

பொய் சொல்ல வழியில்லை. சினிமாவுக்குப் போனதை மறைக் கலாமென்றால் சைக்கிளோடு விழுந் தது முக்காடு இறக்கத்தில். முக்காடு புதுக்கடைக்குப் போற வழியில். அந்தப் பாதைக்குத் திரும்பினா லேயே சினிமாவுக்குப் போவதாகத் தான் அர்த்தம்.

''தேங்கா இரண்டு களவாண்டு விற்றேன்.''

''எங்கேயிருந்து களவாண்ட?''

உம்மாவின் பார்வையில் என் குலை நடுநடுங்கியது.


''தெக்கு அறையில் இருந்து.''

உம்மா அப்படியே அதிர்ந்து நின்றுவிட்டாள். உயர்ந்த மட்டை உம்மாவின் கையிலிருந்து உம்மாவை அறியாமல் விழுந்தது.

''அட மாபாவி என்ன வேலை செய்த? செய்குக்க தேங்காயை யாலே களவாண்ட?''

செய்க்குனுடைய தேங்காய், உம்மாவின் அதிர்ச்சி, நெடிய ஏங்கல், பயம், எல்லாம் என்னைத் தளர்த்தி விட்டன. ஒரு குற்ற உணர்வு என்னை வதைப்படுத்திக் கொண்டிருந்தது.

செய்க்குடைய முனிச்சல் குடும்பத்தைப் பாதிக்கப் போவ தாக உம்மா அச்சப்பட்டாள்.



''வேற யார் பொருளையும் கள வாண்டாலும் பரவாயில்லை. போயும் போயும் நம்மையெல்லாம் காப்பாற்றக் கூடிய செய்குக்காக தேங்காயாலே களவாண்ட!''

வாப்பா போட்டாரு போடு, பளார் பளார் என்று.

இரவு தூங்க முடியவில்லை. தொப்பியும் தாடியும் கோட்டும் போட்ட ஒருவர் எனக்கு நேராக கம்பு ஓங்கிவந்தார். தூக்கம் வர, பாளை விசிறியால் உம்மா விசித் தந்தாள்.

''நீ விழல்ல. செய்க்குதான் உன்னைத் தள்ளிப்போட்டது. ஒரு தேங்காய்க்கு ஏழு தேங்காயும் வெள்ளியிலே ஒரு கையும்,ஒரு காலும், அடிச்சு செய்க்குக்கை சந்நிதானத்தில் வச்சு மன்னிப்பு கேக்கனும்.''

விங்கிப்போன இடங்களைத் தடவத் தடவ உம்மா சொன்ன போது மன ஆறுதலாகவே இருந்தது.

ஆண்டு, மாத, தேதி தெரியாத ஏதோ ஒரு பிரளய காலத்தில் அங்கு வந்தவர் அவர். ஒரு செய்க் குனுடைய தோரணையில் அவர் அங்கு வரவில்லை. முஸாபராகவும் (பயணியாகவும்) இல்லை. மிஸ் கானாகவும் (யாசகன்) இல்லை. வந்தது பைத்தியக்காரனாக. கையில் ஒரு கம்பு இருந்தது. கந்தல் உடையில் திரிந்த அவரைக் கண்டு, மர மண்டைச் சனங்கள் பயந் தோடினர்.

ஊரைவிட்டு அவரை விரட்ட கல்லும் மண்ணும் அள்ளி விசி னார்கள், தலை தெறிச்ச பிள்ளைகள். கம்பை ஓங்கியது அல்லாமல் யாரையும் அவர் அடிக்கவில்லை. கையில் கம்புடன் அலையும் பைத் தியத்தைக் கண்டு மக்கள் வீட்டிற்குள் ஓடி ஒளிந்தனர். வாசல்களையெல் லாம் அடைத்துவிட்டு வீட்டிற்குள் பயந்து பதுங்கினர்.

காடு மலைகள் இறங்கி வந்த அவருக்கு என்றுமில்லாத தாகம்; பசி. கிணறுகளில் ஊற்றுகள் வற்றிப்போன அந்த வேனிற் காலத்தில் அவருக்கு ஒரு சொட்டுத் தண்ணீர் கொடுக்க யாருமில்லை. பாறை இடுக்குகளில் உள்ள சுனைகளிலிருந்து நீர் வடிகிறதா என்று தேடிப் பாறை ஏறினார். வழியில் கிடந்த சாணியில் தெரியாமல் மிதித்து விட்டார். காலில் அப்பிய சாணியைப் பாறை ஏறுமிடத்தில் அழுத்தி, தேய்த்துத் துடைத்தார்.

''அதுதான்பிலே அந்தப் புண்ணிய பாதம்''

சொல்லும்போது , பக்தியுடன் தலையை கவிணியால் மறைத்துக் கொண்டாள் உம்மா.

சுனைகளில் நீர் வடிய வில்லை. சுனை வாய்கள் வறண்டு போயிருந் தன. கோபாவேசப் பட்டார் செய்கு.

''எனக்கு ஒரு சொட்டுத் தண்ணீர் நீயும் தரமாட்டாயா?''

தாகம் தாளாமல் கோபத்தோடு கம்பை ஓங்கிப் பாறையில் இடித்தார். ஓங்கி விழுந்த கம்பு துளைத்து இறங்கிய துவாரம் வழியாகத் தண்ணீர் கொப்பளித்தது. காடு நாடெல்லாம் கருகிய வெறிக்காலத்தில் சுனை வழியாகத் தண்ணீர் பாய்ந்து, வாய்க்கால்கள் நிரம்பி ஊருக்குள் புகுந்தபோது, இந்த குதறத்தான (அற்புதம்) வெள்ளம் எங்கிருந்து வருகிறது என்று வியந்து பாறை யைப் பார்த்தனர்.

கம்பை உயர்த்திக் காட்டி பாறை உச்சியில் நின்று பைத்தியம் கத்தியது.

''குடியுங்கடா, மனம்போல் குடியுங்கடா''

பாறை உச்சியிலிருந்து வெள்ளம் பிய்ச்சி அடித்துப் பாய்வதை அப்போதுதான் மக்கள் கண்டு அதிர்ந்தனர். ஊரே தண்ணீருக்குள் மூழ்கி விடுமோ?

''செய்க்கே காப்பாத் துங்கோ!''

அப்போதுதான் அவர் யாரென்று உணர்ந்து சனம் ஒருமித்த குரலில் மன்றாடினார். சனங்களின் மன்றாட்டம் கண்டு கோபம் தணிந்ததும் பத்து யானைகள் சேர்ந்து தூக்கினாலும் தூக்க முடியாத ஒரு வட்டப் பாறையைச் சின்ன விரலால் தூக்கி ஊத்து வாயை மூடினார்.

''அதுதான அந்த ஊசிககிணறு. அன்று முதல் நம்ம ஊருலே தண்ணிப் பஞ்சமே இல்லை.''

''அப்போ நாம குளிக்கிற தண்ணி?''

''அன்று செய்கு மூடிப் போட்ட ஊசிக்கிணத்துல உள்ள தண்ணீ பாறையைச் சுரந்து பூமிக்கு அடி யோட ஊருலெ உள்ள கிணத்துக் கெல்லாம் போவுது. அந்தத் தண்ணீயைத் தான் குடிக்கிறோம், குளிக் கிறோம்பிலே.''

இப்படி மகத்துவமிக்க செய்க் குடைய பாதங்களைத் தொட்டுக் கண்ணில் வைக்காமலும், உண்டிய லில் காணிக்கை போடாமலும், மேஸ்திரி புல் அறுத்தது தவறுதான் என்று எனக்கும் தோன்றியது. செய்க்கை மதிக்காமல் தலையில் புல் கட்டுடன் வந்த மேஸ்திரியின் கால் இடுக்கில் மந்திரக் கோலை வீசி தடுக்கி விழ வைத்ததில் தவறேது மில்லை எனத் தோன்றியது.

''ஊசிக் கிணற்றை மூடியிருக் கிற வட்டப்பாறையை அனந்த ராமன்கிட்டச் சொல்லி வெடி வச்சு ஒடச்சாலோ?''

உம்மா ஓடிவந்து என் வாயை இறுகப் பொத்தினாள்.

''ஆ! அப்படிச் சொல்லப் படாது. பாவம். வட்டப் பாறையை ஒடச்சா ஊசிக்கிணறு பொங்கி உலக மெல்லாம் அழிஞ்சே போவும்.''

எனது சுட்டிக் கேள்விகள் உம்மாவை எரிச்சலூட்டின. இப்படி யெல்லாம் கேள்விகள் கேட்டால், வாப்பாவிடம் சொல்லி உதை வாங்கித் தருவதாக எச்சரித் தாள்.

சேண்டப்பள்ளி செய்கு விசயத் தில் ஏதாவது சொல்லி விட்டால், வாப்பா பொறுத்துக் கொள்ள மாட்டார். பொல்லாத கோபம் வரும்.

சனியும், ஞாயிறும் வாப்பா கருங்கல் சந்தைக்குப் போவது வழக்கம். பாறை ஏறி மறுபக்கம் கால் வைப்பது கருங்கல்லுக்குச் செல்லும் ரோட்டில். பாறை ஏறி இறங்கினால் மூன்று மைல் நடை மிச்சம். பாறை

ஏறி இறங்கும் நேரம், அதிகாலை இருட்டுக்கு வெளிச்சம் காட்டுவதும், திரும்பிச் சுமையுடன் களைத்து வரும் போது மத்தியான வெயிலுக்கு வீடுவரை குடை பிடித்துத் தருவதும் செய்கு அவர்கள். ஒவ்வொரு சந்தை தினமும் வாப்பா, பாதங்களைத் தொட்டுக் கண்ணில் வைப்பார். உண்டியலில் காணிக்கையும் போடுவார்.

மேஸ்திரியின் துர்மரணத்தை ஒட்டி அடிவாரத்தில் உருவாகிப் பெருகி வந்த கடைத் தெருவி லிருந்து சந்தைக்குப் போய் வருகின்ற போதெல்லாம் வாப்பா எனக்குத் தின்பண்டங்கள் வாங்கி வருவார்.

''வேனா வெயில்லெ கருங்கல் சந்தைக்கு நடந்துபோய் இந்த நாளெல்லாம் யாவாரம் செய்திளே ஓர் ஊடு வச்சீளா? அடிவாரத்திலே எம்மாத்திரம் சனம் வந்து கூடுது. ஒரு சோத்துக்கடை வச்சா நல்லலாவம் கிட்டுமே.''

உம்மா நல்ல மூளை உள்ளவள் என்று வாப்பாவுக்குத் தோன்றியது. உம்மா இப்படி ஒரு நல்ல யோசனை சொன்னது முதல், வாப்பாவிற்கு ஒரு தன்னம் பிக்கை.

செய்கு காப்பாற்ற மாட்டாரா?

''சேண்ட பள்ளி செய்க் குடைய துஆ பரக்கத் (வேண்டுதலால்) கொண்டு சோத்துக்கடை நல்லபடியா நடக்கட்டும்.''

கேள்விப்பட்டவர்களும், ஆனக்குட்டி லெப்பையும், வாப் பாவை ஆசீர்வாதம் செய்தனர்.

காலையில் புட்டு, பயறு பப்படம், மத்தியானம் மீன் சாப்பாடு, இரவு ஆப்பம், இடியாப்பம் வெள்ளி, திங்கள் .இரவுகளில் ஸ்பெஷல்.

உம்மாவும் லட்சுமி அக்காவும் ஊர்ப் பேச்சுப் பேசி, கை மாற்றி உலக்கை போட்டு, புட்டுக்கு அரிசி மாவு இடித்தனர்.

வெள்ளிக்கிழமை காலையில் தொடங்கவிருந்த சோத்துக் கடைக்கு வெள்ளரிக்காய் · வாங்க, புதன் கிழமைச் சந்தைக்குப் போனார் வாப்பா. வழக்கம்போல் பாறை ஏறுமிடத்தில் பாதங்களைத் தொட்டுக் கண்ணில் வைக்கத்தான் செய்தார். பாதங்களில் தம் கால்களைத் தடவவும் செய்தார். பாறை உச்சியில் உண்டியலில் காணிக்கையும் போட்டார். என்னவோ ஏதோ?

வெள்ளிக்கிழமை பகல் ஆகி விட்டபோதும், புதன்கிழமை சந்தைக்குப்போன வாப்பா திரும்ப வில்லை என்று உம்மா தலையில் அடித்து ஒப்பாரி வைத்தாள். செய்குக் குப் பல நேர்ச்சைகள் நேர்ந்தாள்.


உம்மா அழுததைக் கண்டதும், 'வாப்பா!' என்று கூப்பிட்டு, நானும் காடு கடலெல்லாம் நடந்தேன். அன்று இரவும் வாப்பா வீடு திரும்ப வில்லை.

காலை குளிர் காற்றுகொள்ள மணல் வெளியில் குத்தி உட்கார்ந் திருந்தவர்கள் மேகாற்றில் பிண வாடை முகர்ந்தனர். பாதங்களைத் தொட்டுக் கண்ணில் வைத்துக் கொண்டு, மாமாவும் குட்டிபாப் பாவும் கோராமியைக் கூட கூட்டிக் கொண்டு பாறை ஏறினார்கள்.

''சரக்கு கெடக்குது.'' புலிவங்கில் உற்றுப்பார்த்தவர்களில், கோராமி கண்ணுக்கு மட்டும்தான் அது தெரிந்தது.

''அடிச்சிட்டு வாரேன்.''

ஓடிப்போன கோராமி பனங் காட்டிலிருந்து பனங்கள் மூக்கு முட்டக் குடித்துக் கண்சிவக்க ஓடிவந்தான். ஓடிவந்ததும் இடுப் பில் வடம் கட்டிக்கொண்டு கோராமி புலிவங்கிற்குள் இறங்கினான். பெரிய வடத்தில் வாப்பாவின் சடலம் உயர்ந்து வந்ததை நானும் கண்டேன். ●



உலக எழுத்தாளர்களின் விநோதப் பழக்க வழக்கங்கள்

"ஒரு துளி மை கோடிக்கணக்கான மக்களைச் சிந்திக்கச் செய்து விடுகிறது" - என்று கவிஞர் பைரன் கூறியதும், "வெறும் சொற்கள், அச்சிடப் பட்டவுடனேயே உயிர் பெற்று விடுகின்றன" - என்று படைப்பாளர் காரல் பேர்னட் கூறியதும், எழுத்தாளர்களின் ஏற்றம், அவர்கள் படைப்புக்குள் உள்ள சொற்களின் வலிமை, - ஆகியவற்றைச் சுட்டிக் காட்டுகின்றன. சிந்தனையாற்றல் பெற்ற அம்மேதைகள் தனிப்பிறவிகள். அவர்களுடைய உலகம் தனி உலகம். சராசரி மனிதனிடமிருந்து வேறுபட்ட அவர்களில் பலருக்கு உலக நடப்புக்கு ஏற்றவாறு வாழத் தெரியாது; வாழமுடியாது. பித்துக்குளித்தனமும் பேரறிவாற்றலும் கலந்த கலவையே மேதைத் தன்மை என்றே கூறிவிடலாம் அத்தகைய எழுத்தாளர்களின் விநோதமான பழக்க வழக்கங்களில் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

அயோட்-செயின்ட் லாரன்ஸ் என்ற இடத்தில், சிறு மரக்குடிலில் வசித்து 94 ஆண்டு வாழ்ந்த ஜார்ஜ் பெர்னாட்ஷா, நண்பர்களுடன் சகஜமாகப் பழகக் கூச்சப்படும் தன்மை கொண்டவர். நண்பர்களின் வீட்டுக்குச் சென்றால் கதவைத் தட்டிக் கூப்பிடக் தயங்கி வெகு நேரம் வெளியிலேயே நிற்பார். எழுதத் தொடங்கியவுடன் சிந்தனை தடைப் பட்டால், வீட்டை விட்டுக் கிளம்பி வெளியே போய், பேருந்தில் பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பினால் சிந்தனை கொடிகட்டிப் பறக்கும் அவருக்கு. சிந்தனை வேகத்திற்கு ஈடு கொடுக்க சுருக்கெழுத்தில் தான் எழுதுவார்.

மார்க் ட்வெயின் - என்ற புனைபெயரைக் கொண்ட அமெரிக்க எழுத்தாளர் குப்புறப் படுத்துக்கொண்டு, மினுக்குத் தூளின் நடுவே வைக்கப்பட்ட முட்டையின் வாடையை நுகர்ந்து கொண்டு, பகலில் தூங்கி, இரவில்தான் எழுதுவார். தப்பித்தவறி நாற்காலியில் உட்கார்ந்தால் தூங்கிவிடுவார்.

அலக்சாண்டர் டூமாஸ் - என்ற பிரஞ்சு எழுத்தாளர் நாவலுக்கு நீலநிறம் கவிதைக்கு மஞ்சள் நிறம் கட்டுரைக்கு சிவப்பு நிறம் என்று எழுதப்படும் காகிதங்களை வகைப் படுத்திக் கொண்டு பச்சை மையினால் எழுதுவார். சோபாவில் சாய்ந்து கொண்டு எழுதும் பழக்கம் உடையவர் சுமார் 250க்கு மேல் நாவல்கள் எழுதிய அவருக்கு ஒரே நேரத்தில் 6 விதமான நாவல்களை எழுதும் ஆற்றல் உண்டு. நாவல் எழுதிய பேனாவால் நாடகம் எழுதமாட்டார். எழுதிக் கொண்டிருக்கும்போது நண்பர்கள் வந்தால் தனது இடக் கையால்தான் கை குலுக்குவார்.



அலக்சாண்டர் டூமாஸ்

எமிலி ஜோலா என்ற பிரஞ்சு எழுத்தாளர் "ஒருநாள் கூட ஒரு வரி கூட எழுதாமல் இருக்கக்கூடாது" என்ற கொள்கையைக் கடைப்பிடித்தவர். ஆனால் இடி இடித்தால் பயந்து நடுங்குவார். கூட்டம் இருக்குமிடங்களுக்குச் செல்ல மாட்டார். இருட்டறையில் சிறிது வெளிச் சத்தில்தான் எழுதுவார்.

பிரஞ்சு எழுத்தாளர் ஜே.ஜே. ரூஸோ -வுக்கு அவர் வீட்டுத் தோட்டத்தில் சூரிய வெளிச்சம் அவர் மேல் படும்படி அமர்ந்து கொண்டு எழுதினால்தான் எழுத வருமாம்.



ஜே.ஜே. ரூஸோ

ஆங்கில அகராதியை முதன்முதல் தொகுத்தவர், அச்சடிக்கப்பட்ட 40 பக்கங்களுக்கான விஷயங்களை ஒரே மூச்சில் எழுதக் கூடியவர், மாலைப்பொழுதுகளில் தன் தாயின் ஈமச்சடங்கு செலவுக்காக "ராசேலாஸ்" என்ற நாவலை எழுதிப்புகழ் பெற்றவர் சாமுவேல் ஜான்சன் என்ற எழுத்தாளர். அவரது செல்லப்பூனை அவர் எழுதும் மேஜையின் மேல் அமர்ந்து அவர் காது கேட்கும்படி கத்தினால் தான் அவருக்கு எழுதத் தோன்றுமாம். தெருவில் நடக்கும்போது ஒவ்வொரு விளக்குக் கம்பத்தையும் தொட்டுவிட்டுச் செல்லும் குழந்தைத்தனம் அவரிடம் உண்டு. ஏதாவது ஒரு கம்பத்தைத் தவற விட்டாலும், திரும்பி வந்து தொட்டுவிட்டு மீண்டும் எல்லாக் கம்பத்தையும் தொட்டு விட்டுச் செல்வாராம்.

ஆஸ்கார் ஒயில்டு என்ற எழுத்தாளர் - அருகில் அழகான சிறு பையன்கள் இருந்தால் எழுதுவார். எல்லா உடைகளைக் களைந்துவிட்டு ஏறத்தாழப் பிறந்த மேனியாகத் தன்னை ஆக்கிக் கொண்டு எழுதுவார். காதைத்துளைக்கும் சப்தம் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். ஆர்கெஸ்ட்ரா ஒலிக்க, ஒரு பாரிஸ் ஓட்டலில்தான் ஒரு பிரபல நாவலை எழுதினாரம். தேநீர் விருந்துக்குச் செல்ல இயலாவிட்டால் அந்த இடத்திற்கே சென்று "நான் இன்று கலந்து கொள்ள இயலாது" என்று நேரில் கூறிவிட்டு வருவாராம்.

சார்லஸ் டிக்கன்ஸ் -க்கு ரயில் பிரயாணம் செய்யப் பயம். வடக்கே தலைவைத்து படுக்க பயம். அதற்காகவே வெளியூர் செல்லும்போது திசைகாட்டிக் கருவியைத் தன்னுடன் எடுத்துச் செல்வார். அவர் எழுதும் அறையையும் தன்னையும் அலங்கரித்துக் கொண்டுதான் எழுதத் தொடங்குவார். பெற்ற தாயை வெறுத்து அவளைப் பேய் என்று ஒரு நாவலில் எழுதியவர்.

காதல் உணர்ச்சியை அழகுற வர்ணிக்கும் ஆற்றல் பெற்ற கவிஞர் லார்ட் பைரன் - பொருத்தமில்லாத உருவம் - குண்டு - நொண்டி - தாயால் வெறுக்கப்பட்டவர் - மனநோயாளி குடிப்பழக்கம் உண்டு. புதிதாகச் செய்த ரொட்டி மேல் பிரியம் உடையவர். அதைத் தெருவில் தின்று கொண்டே செல்லும் ஆசை உடையவர். பய உணர்வால் படுக்கையில் இரண்டு கைத் துப்பாக்கிகளை வைத்துக் கொண்டுதான் படுப்பார். தேநீர் விருந்தில் காய்ந்த பிஸ்கட் மட்டுமே சாப்பிடுவார்.

கவிஞர் ஷெல்லி - உடல்நலக் கோளாறுடன், மனவாட்ட நோயும் கொண்டவர். தனது உடல் நிலை பற்றி அடிக்கடி கவலைப்படுவார். ஒருமுறை ஒரு கோச் வண்டியில் ஒரு குண்டான

"சங்கரிபுத்திரன்"

பெண்மணியின் பின்னால் உட்கார்ந் திருந்ததால்தான் தனக்கு யானைக்கால் வியாதி வந்தது என எல்லாரிடம் கூறுவார். சாப்பிடும்பொழுது பலமுறை எழுந்திருந்து கைக்முழுவி எழுதுவார். கவிதை எழுதும் முன் பிசைந்த ரொட்டி மாவைச் சாப்பிடுவார். தீமைகளைச் சாடி எழுதிய கவிதையின் நகல்களை பாட்டிலில் வைத்து கடலில் எறிவார். சம்பந்தப்பட்ட நாட்டிற்கு அதுபோய்ச் சேரும் என்ற நம்பிக்கை கொண்டவர். ஆற்றின் கரையில் உட்கார்ந்து காகிதப் படகு விடுவார். ஆனால் அதிக நேரம் வெளி இடத்தில் உட்கார பயம். வெளியூர் செல்லமாட்டார்.

"கடலும் கிழவனும்" எழுதிய எமிங்ஸ்வே என்ற எழுத்தாளருக்கு இறால் மீன் சாப்பிடுவதில் பிரியம் அதிகம் பிராணிகளிடம் அன்பு பூண்டு 16 நாய், 52 பூனைகள், புறா, பசு - வளர்த்தவர். வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள வெள்ளைக் கோபுரம் மீது ஏறி அமர்ந்துதான் எழுதுவார். வீட்டில் நின்று கொண்டேதான் எழுதுவார். உள்ளாடை அணியமாட்டார். புதுத்துணிகளின் மீது மோகம் இராது. தூங்கும் முன் இருபது பென்சில்களைச் சீவித் தள்ளினால்தான் 'மூட்' வருமாம். ஓர் அறையில் தன்னைச் சிறைப்படுத்திக் கொண்டு ஆறுமணிநேரம் கழித்துத்தான் வெளியே வருவார். ஞாயிற்றுக் கிழமை எழுதமாட்டார். சிறுகதையாகத் தொடங்கி நாவலாக நீட்டிவிடுவார். ஜெர்மன் சோல்ஜர் பெல்ட்டுடன் (பழையது) தான் காணப்படுவார். விடியற்காலையில் எழுதுவார்.

ஒரே ஒரு பக்கத்தில் மட்டும் 250 வார்த்தைகள் என எண்ணி எழுதும் பழக்கம் கொண்டவர் விக்டர் ஹ்யூகோ என்ற பிரஞ்சு நாவலாசிரியர். 1852 இல் இவர் எழுதிய லே மிஸரபில். (ஏழைபடும்பாடு) இவர் நாடு கடத்தப் பட்டு ஒரு தீவில் வாழ்ந்தபோது எழுதியது. காலை 5 மணி முதல் உயரமான சாய்வு மேஜை முன்னால் நின்று கொண்டே 14 மணி நேரம் தொடர்ந்து எழுதுவார். தன் உடைகளைக் கழற்றுமாறு வேலையாளிடம் கூறி, எழுதி முடிக்கும் வரை அவற்றைத் திருப்பிக் கொடுக்கவேண்டாம் என்று கூறுவார். கையில் எப்பொழுதும் பணம் இருக்கவேண்டும் இவருக்கு. வெளியூர் சென்றால் பேங்க் நோட்டுகள் (பணம்) கொண்ட பெட்டியைத் தவறாமல் எடுத்துச் செல்வார்.

அதிகமாகக் காபி குடிக்கும் பழக்கம் கொண்டவர் எழுத்தாளர் பால்சாக். ஒரு நாளைக்கு 20 மணி நேரம் கூட எழுதுவார். குறைவாகச் சாப்பிடுவார். இரவில் பாதிரியார் மாதிரி உடை அணிந்துதான் எழுதுவார். இரவு 12 மணிக்கு படுக்கை யிலிருந்து எழுந்து மின்வெளிச்சம் இருந்தாலும் ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி அருகில் வைத்துக் கொண்டு எழுதுவார். பகலில் ஆடம்பர உடை அணிவார். எழுதும் அறையில் உள்ள ஜன்னல் வழியாக கடலை நோக்கிச் சிந்தித்தவாறே எழுதுவார்.

முதன் முதல் தட்டெழுத்து மூலம் எழுதி, தமது படைப்புகளை அச்சில் ஏற்றியவர் ரஷ்ய எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய். 500 வேறுபட்ட கதாபாத்திரங் களைக் கொண்டதும் ஏழு தடவை திருத்தி எழுதப்பட்டதும், ஆன நாவல் 'போரும் சமாதானமும்' அதை நகல் எடுத்த அவரது மனைவி சலிப்புற்றார். 82 வயது வரை வாழ்ந்த அவரும், மனைவியும் நாட்குறிப்பு எழுதும் பழக்கம் கொண்டவர்கள். ஒருவர் எழுதியதை மற்றவர் படித்து காரசாரமாக விமர்சித்துக் கொள்வார்கள். தினமும் குறிப்புகள் எழுதி குப்பைக் கூடையை நிறைத்துவிடுவார். லண்டனில் உள்ள 'விசெஸ்டர் ஸ்கொயர்' என்ற பகுதியில் உள்ள ஒரு தெருவுக்கு மட்டும் யார் அழைத்தாலும் செல்லமாட்டார். "அங்கு போனால் இறந்துவிடுவாய்" - என்று ஒரு சோதிடன் சொன்னதை நம்பி ஒருமுறை பயத்தினால் அப்படி செய்தார். பறவைமாதிரி தன்னால் பறக்க இயலும் என நம்பி ஒருமுறை இரண்டாவது மாடியிலிருந்து ஜன்னல் மூலம் கீழே குதித்து பூச்செடி களின் மேல் விழுந்து உயிர் தப்பினார்.

கவிஞர் வில்லியம் வேர்ட்ஸ் ஓர்த்துக்கு சாப்பாட்டில் பிரியம் இல்லை. சேர்ந்தாற்போல் 2 நாள்கள் சாப்பிடாமல்

கவிஞர் வில்லியம் வேர்ட்ஸ் ஓர்த்



இருப்பார். தோட்டம், வயல்கள் சென்று உலாவி அமர்ந்து கவிதை எழுதுவார். படிப்பும் அங்கேதான். வீட்டில் புத்தகம் மட்டும்தான் இருக்கும். காய்ச்சிய பாலை ஒரு டம்ளரில் ஊற்றி வைத்துக் கொண்டு அதைப் பார்த்தபடியே எழுதுவார். எழுதி முடித்த வுடன் அதைக் குடித்துவிடுவார்.

"நம்பினால் நம்புங்கள்" எழுதிய ராபர்ட் ரிப்ளே ஞாபக மறதி மிக்கவர். அவரது தொலைபேசி எண்ணைக்கூட சொல்லத் தெரியாது.

வால்டேர் என்ற பிரஞ்சு எழுத்தாள ருக்கு இருட்டைக் கண்டால் பயம். படுக்கை அறையில் விளக்கு எரிந்தாக வேண்டும்.

மாப்பஸான் பலருடன் அமர்ந்திருக்கும் போது, தனியாக இருப்பதுபோல் கற்பனை செய்து கொண்டு மயக்கம் அடைவாராம். பாலுணர்வு மிக்கவராக இருந்த அவர் 43 வயதில் அதனாலேயே இறந்தாராம்.

ஜார்ஜ் சிம்மன்ஸ் என்ற பிரஞ்சு நாவலாசிரியர் மாதத்தில் மூன்று வாரம்தான் எழுதுவார். கடைசிவாரம் ஓய்வு. காலையில் எழுதி, பகலில் திருத்தி, மாலையில் முடிப்பார். கறுப்புக்காபிதான் உணவு. ஒரு நாவலுக்கு 11 நாள்கள்தான் எடுத்துக் கொள்வார்.

எட்கர் வாலஸ் என்ற எழுத்தாளர் சைனாபானையில் டீ போட்டு வைத்துக் கொண்டு, அரைமணி நேரத்திற்கு ஒரு தடவை குடித்துக் கொண்டு, கவுன் அணிந்து, சிகரெட்டைப் புகைத்தபடி எழுதிக் கொண்டே போவார்.

ஜான் கீட்ஸ் என்ற கவிஞர் தனது வீட்டுத் தோட்டத்தில் மர நிழலில் அமர்ந்துதான் எழுதுவார்.

ஜேம்ஸ் ஜாய்ஸ் மல்லாக்கப்படுத்துக் கொண்டுதான் எழுதுவார்.

ஜோசப் ஹெல்லர் - என்ற அமெரிக்க எழுத்தாளர் கையெழுத்துப் பிரதியைப் பிரசுரத்திற்கு எடுத்துச்செல்லும் போது, மகளையும் அழைத்துப் போவார். நடு வழியில் விபத்து அல்லது மாரடைப்பு காரணமாக இறந்தால் கையெழுத்துப் பிரதியாவது தப்பட்டுமே என்ற எண்ணத்தில் தான் என்று கூறுவார்.

ஜார்ஜ் செமினான் - என்ற எழுத்தாளர் ஓர் அறையில் புகுந்து பூட்டிக் கொண்டு யாரையும் பார்க்காமல் பல மணிநேரம் எழுதுவார். ஒவ்வோர் உறைமீதும் நாவலின் கதாபாத்திரம் பெயர், வயது, குடும்பம் இவற்றை எழுதி அடுக்கி வைத்திருப்பார்.

பிரான்சிஸ் பேகன் என்ற எழுத்தாளருக்கு மழையின் போதும், பனிப்புயலின் போதும் திறந்த கோச்

வால்டேர்



வண்டியில் நனைத்து கொண்டே போவதில் விருப்பம் அதிகம்.

ஜொனாத்தன் ஸ்விப்ட் என்ற ஐரிஷ் நகைச்சுவை எழுத்தாளருக்கு தனிமையில்



ஜொனாத்தன் ஸ்விப்ட்

விருப்பம் அதிகம். இரண்டு மனைவிகள் இருந்தும், அவர் ஓராண்டுகாலம் யாரையும் பார்க்காமல் பேசாமல் காலம் கழித்தார்.

அனான்ஜியோ என்ற இத்தாலியக் கவிஞருக்கு ஒரு நாளைக்கு குறைந்தது 25 தடவையாவது உடை மாற்றினால்தான் கவிதை எழுத வரும்.

ஹன்ஸ் ஆண்டர்ஸன் என்ற கவிஞர் மேஜை மீது சாப்பிட உட்கார்ந்த பின் உணவு பரிமாறத் தாமதமானால், விசித்து விசித்து அழுவார்.

டி.எச்.லாரன்ஸ் - என்ற பிரபல எழுத்தாளருக்கு துறவிகளின் மடத்திற்குச் சென்று அங்குள்ள மலைமேல் ஏறி அமர்ந்து அங்குள்ள தேவதாரு மரங்களின் அடியில் அமர்ந்து எழுதப் பிடிக்கும்.

ஆண்டன் செகாவ் - பியானோ வாசித்துக் கொண்டு கொட்டமடிக்கும் குழந்தைகளின் நடுவே அமர்ந்து எழுதுவார்.

ஜேம்ஸ் ஆஸ்டின் - எழுதிக் கொண்டு இருக்கும்போது நண்பர்கள் வந்துவிட்டால் எழுதியதை அவசர அவசரமாக ஒளித்து வைத்துவிடுவார்; அல்லது கிழித்துப் போட்டுவிடுவார்.

குஸ்தாவ் பிளாபர்ட் 'மேடம் பவாரி' - நவீனம் எழுதியவர். அடிக்கடி திருத்தி எழுதி மேல்மாடிக்குச் சென்று உரத்த குரலில் சப்தம் போட்டு, தனக்குத்தானே படித்துக் கொள்வார்.

ஸ்டேன்தால் - என்ற பிரஞ்சு நாவலாசிரியர் தன் நண்பர்களுக்கு, பொய் யான பெயர்களில் கடிதம் எழுதி அவர்கள் அபிப்ராயத்தைக் கேட்பார்.

ராபர்ட் பிராஸ்ட் என்ற அமெரிக்க எழுத்தாளர் தானே வடிவமைத்து உற்பத்தி செய்த, மெத்தை வைத்துத் தைத்த, சுழலும் நீலநிற நாற்காலியில் அமர்ந்து மேஜை இல்லாமல் எழுதுவார்.

அலெக்ஸாண்டர் போப் என்ற கவிஞருக்கு தன் மேஜைமேல் வழிய வழிய நறுமணம் மிகுந்த காபி இருந்தால்தான், எழுத வருமாம் அதன் மணத்தை நுகர்ந்த படியே எழுதித் தள்ளிவிடுவாராம்.

பங்கிம் சந்திர சட்டர்ஜி என்ற வங்காள எழுத்தாளர், தான் எழுதும் அறையை ஓவியங்களால் அலங்கரித்த பின்னர்தான் எழுதத் தொடங்குவார்.

பஞ்சாபி எழுத்தாளர் அம்ரிதா ப்ரீதம் படுக்கையில் ஆடாமல் அசையாமல் கிடந்து திடீரென எழுந்து எழுதத் தொடங்குவார்.

ஆர்தர் மில்லர் என்ற எழுத்தாளர் சூரியன் மறைந்த உடன் இருட்டில் மங்கிய வெளிச்சத்தில்தான் எழுதுவார்.

ரிச்சர்ட் வாக்னர் என்ற எழுத்தாளர் வாத்தியச் சப்தம் கேட்டால் எழுதத் தொடங்கிவிடுவார்.

ஆர்.எல். ஸ்டீவன்சன் என்ற எழுத்தாளருக்கு வயலின் சப்தம், கேட்டால் எழுத 'மூடு' வந்துவிடுமாம்.



'கல்கி' கிருஷ்ணமூர்த்தி

'கல்கி' கிருஷ்ணமூர்த்தி - காரில் மாம்பலம் ஸ்டேஷன் போய் மின்சார ரயில் பிடித்து, தாம்பரம் சென்று கிறித்துவக் கல்லூரி பக்கம் சென்றுநடந்துபோய் திரும்பி வந்து, மாம்பலம் ஸ்டேஷனுக்கு திரும்பி ரயிலில் வந்து, காரில் இருப்பிடம் சேர்ந்தவுடன், எழுதத் தொடங்குவார்.

பஞ்சாபி எழுத்தாளர் குஷ்வந்த் சிங் ஒவ்வொரு புதிய விஷயம் எழுதும்போது புதுப்பேனா வாங்குவாராம். நீளமான சாய்வு நாற்காலி, ஸ்டூல், பான்மசாலா கட்டாயம் தேவை.


சின்னக் குயிலழகி

ஏற்றிய மணிவிளக்காம் - அவள்
எழுதா ஓவியமாம்
போற்றிடும் பொற்சிலையாம் - அவள்
புலவனின் கற்பனையாம்.

வண்ணப் பெருநிலவாம் - அவள்
வானகத் தின் னமுதாம்,
எண்ணப் பெருவியப்பாம் - அவள்
எதிர்வரின்ஓர் இனிப்பாம்.

புன்னகைப் பேரழகி - அவள்
புவியினில் ஒரழகி
கன்னல் மொழி உடையாள் - அவள்
காவிய எழில்உடையாள்!

என்னைக் கவர்ந்தவளாம் - அவள்
எழுந்தால் சிலம்போசை
சின்னக் குயிலழகி - அவள்
சிரித்தால் மணியோசை!.



இளங்கம்பன்

பிரச்சனைகள்



அறிவழகன்

களைத்துப் போய் வீடு திரும்பினார் முருகைய்யன்.

அவர் அந்த ஊருக்கு மாற்றலில் வந்த நேரமோ என்னவோ? எப்போதும் ஏதாவது கலவரம்தான். வந்ததிலிருந்து ஒரே ஒரு வாரம்... ஆபீசில் நிம்மதியாக இருந்தோமா என்று இல்லை.

இதற்கெல்லாம் கோலப்பன் தான் காரணம். ஏதோ நாலு எழுத்து படித்துவிட்டோமென்கிற இறுமாப்பு. வேறென்ன?

"அய்... அப்பா வந்தாச்சு ... அம்மா ... அப்பா வந்தாச்சு..."

வீட்டில் நுழையக் கூட விடாமல் ஓடிவந்து கால்களைக் கட்டிக் கொண்டான் இரண்டாவது மகன் வேலவன்.

வயது எட்டு ஆகிறது. அவனுக்கும் இரண்டு வயது பெரியவன், சுப்பரமணி என்கிற சுப்பு. எங்காவது விளையாடிக் கொண்டிருப்பான்.

குழந்தையின் முகத்தைப் பார்க்க முருகையனுக்கு மிகவும் சந்தோஷ மாயிருந்தது. தூக்கிப் பிடித்துக் கொஞ்சியவாறே வீட்டினுள் நுழைந்து சோபாவில் உட்கார்ந்தார்.

"கெணத்தடியில் தண்ணி மொண்டு வச்சிருக்கேன். கைய்ய கால கழுவிக்கினு வந்து உட்காருங்க... காபி போட்டுக் கொண்டாறேன்..".

அடுப்படியிலிருந்து அவளுடைய மனைவி ராஜம் குரல் கொடுத்தாள். முருகையன் உடைகளை மாற்றிக் கொண்டு கிணற்றடிக்குப் போனார்.

சுப்பிரமணி தோட்டத்தில் மேய்ந்து கொண்டிருந்த கோழியைத் துரத்திப் பிடிப்பதில் மும்முரமாயிருந்தான். செழித்து வளர்ந்திருந்த கத்திரிச் செடிக்கும் வெண்டைச் செடிக்கும் பின்னால் சத்தமில்லாமல் பதுங்கிப் பதுங்கி மெல்ல நகர்ந்து கொண்டிருந்தான். அது அவனுக்குப் பொழுது போக்கு.

முருகையனுக்கு பையனை அதட்ட வேண்டும் போலத் தோன்றியது. சில நாள்களாகவே படிப்பில் அக்கறை இல்லாதவனாய் அவன் போக்கில் வித்தியாசம் தெரிந்தது.

ஆனால் ஏனோ திட்ட வாய் வராமல் பையனின் செய்கையையே பார்த்துக் கொண்டிருந்தார்.

சுப்பு கோழியையே குறி வைத்தபடி நகர்ந்தான். அதுவும் இங்கும் அங்குமாய் கம்பீர நடை போட்டது.

முருகையனுக்கு ஏனோ அந்த விளையாட்டு ரசிக்கத் தக்கதாய் இருந்தது.

இன்னும் ஓரிரு அடிதான் நிச்சயமாக. வால் மட்டுமாவது கையில் அகப்படும்.

பொறுமை இழந்தவராய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மெல்ல அருகில் நெருங்கிய போது, வரும் ஆபத்தை உணராததுபோல அசட்டையாய் நின்றது அந்தக் கோழி.

பையன் ஒரே பாய்ச்சலாய் வலை போட்டு அமுக்கியது போலக் கைகளை நீள விரித்தபடி கோழி மீது விழுந்தான்.

கோழி கை நழுவிப் பறந்து சென்று கொக்.... கொக்.... கொக்... என்று கத்தியபடி 'சமர்த்திருந்தால் பிடியேன் பார்க்கலாம்' என்பது போல நின்று திரும்பிப் வார்த்தது. பிறகு அதே நடை.

முருகையன் கைகால் அலம்பிய சத்தம் கேட்டு கிணற்றடிப் பக்கம் பார்த்தான் சுப்பு. அவனுக்கு பிரச்னை தீர்ந்தது போல ஒரு சந்தோஷம். கோழியை விட்டுவிட்டு அப்பாவிடம் ஓடிவந்தான்.

"அப்பா...அப்பா....!"

முருகையனுக்கு சுப்பு மேலிருந்த கோபமெல்லாம் பறந்து போயிற்று. அவனுடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கலாம் போல அவ்வளவு அழகு. கள்ளங்கபடமில்லாத முகம்.

இந்த வயசுலயும் இவனுக்குக் கோழியோட விளையாட்டு. இப்படியிருந்தா எப்படித்தான் பொழைக்கப் போறானோ?'

"ஏன்டா... ஸ்கூல்லர்ந்து வந்ததுலேர்ந்தே இதான் உனக்கு வெளையாட்டா?"

"அப்பா... அப்பா... இந்த சின்னம்மா கோழி குப்ப மேட்டுல போயி மேஞ்சுக்கினு இருந்துச்சுப்பா... நான் ஸ்கூல்லர்ந்து வர்றப்ப என்னைப் பாத்துதோ இல்லையோ.... ஒரே ஓட்டந்தான் ... நேரா நம்ம தோட்டத்துல வந்து புகுந்துகிச்சு".

"ஏந்தான் அது புத்தி இப்படி போவுதோ? நெல்லு, கம்புனு இங்க போடாத தீனியா? தின்னுட்டு இங்கேயே கெடக்கறதுக்கென்ன கேடு...?"

சுப்பு முருகையனின் கையைப் பிடித்தபடி உள்ளே நுழைந்தான்.

வராந்தாவில் செல்லம்மா கோழி இரை பொறுக்கிக் கொண்டிருந்தது. அதைச் சுற்றி ஏழெட்டுக் குஞ்சுகள்.

காலால் சீய்த்துச் சீய்த்து இரையெடுக்கக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தது. பின் சுப்புவுடன் நுழைந்த முருகைய்யனை நன்றிப் பெருக்குடன் பார்த்தது.

"இம்புட்டு நேரம் என்ன பண்றீங்க? காப்பி ஆறுதில்ல?"

ராஜத்தின் குரல் அவரை உள்ளுக்கு இழுத்தது.

சுப்பு, செல்லம்மா கோழியையே பார்த்தான். உட்கார்ந்து களைத்து சிந்தியிருந்த தானியங்களைக் கூட்டி முன் தள்ளினான்.

அது மரியாதை தருவது போல மெல்ல, பின்னால் நகர்ந்தபடி அவனையே பார்த்தது. சுப்பு அதை ஏக்கமாய்ப் பார்த்தான்.

செல்லம்மா கோழி பயந்த சுபாவம். அதை யாரும் விரட்டிப் பிடிக்க வேண்டு மென்பதில்லை. குழந்தையைத் தூக்கிக் கொள்வது போலத் தூக்கிக் கொள்ள லாம். அநாவசியமாக சத்தம்போடாது. யாருடனும் வலியப் போய் ஒட்டிக் கொள்ளும்.

"செல்லம்...க்கொ...க்கொ...க்கொ..." கூப்பிட்டால் போதும். எங்கிருந்தாலும் ஓடிவந்துவிடும். பதற்றம் இல்லை. அடக்கம் அதிகம். அதை நம்பி, பாத்திர பண்டங்களையும் கூடத் திறந்தே வைத்துவிட்டுப் போகலாம். அந்த வீட்டு எல்லையை மறந்தும் தாண்டிப் போனதில்லை.

ஊர்க்கோழிகள் குப்பை மேட்டுப் பக்கம் கூட்டம் கூட்டமாகப் போய் மேய்வதை இங்கிருந்தபடியே பார்த்துக் கொண்டிருக்குமே தவிர, தானும் ஓடிப்போய் புழு, பூச்சிகளைத் தின்ன வேண்டுமென்கிற ஆசை சிறிது மில்லை. முட்டை இடுவதிலே கூட அதற்கென்று ஒதுக்கப்பட்ட இடத் தில்தான் இடும். கண்ட இடத் திலெல்லாம் கழிந்து வைத்து வீட்டை அசிங்கப்படுத்தாது.

சின்னம்மா கோழி அப்படியில்லை. நேர்மாறு. அந்த வீட்டுச் சேவலுக்கு இரண்டாந்தாரமாய் வாழ்க்கைப்பட்டது. அதனால்தான் அதற்கு சின்னம்மா கோழி என்று பெயர்.

சேவலுக்கு என்னமோ சின்னம்மா கோழி மேலேதான் பிரியம். அதனால்தான் விடிந்ததும் அதைத் துரத்திக் கொண்டு ஓடும். ஒட்டத்தில் சின்னம்மா கோழியை ஜெயிக்க இந்த ஊரில் ஒரு கோழியும் இல்லை. எப்போதும் அதைத் துரத்திச் சென்று மடக்கிப் பிடிப்பதில் தான் சேவலுக்குத் தனிப் பிரியம்.

சின்னம்மா கோழியோடு மற்ற கோழிகள் சுலபமாகப் பழகிவிடும். குப்பை மேட்டில் மேய்ச்சலின் போது மற்ற கோழிகளுக்கு சின்னம்மா கோழிதான் காவல். ஆகாயத்தில் பருந்தோ வேறு பறவைகளோ இனங்கண்டு உஷார் படுத்திவிடும்.

அதே போல, காலால் சீய்த்துப் பார்க்கும் போது அதற்குப் பிடித்தமான புழுவோ, தீனியோ தென்பட்டால் கொத்திப் போக எந்தக் கோழிக்கும் துணிவில்லை. தப்பித்தவறி ஏதேனும் போட்டிக்கு வந்து விட்டாலோ... சண்டைதான். கோழிச்சண்டையைப் பார்க்க, போவோர் வருவோரெல்லாம் கூடி விடுவார்கள். அவ்வளவு சுவாரசியமாய்ச் சண்டை போடும்.

" டேய் சுப்பு... அங்க என்ன பண்ற? விடிஞ்சா போதும்... அந்தக் கோழிங்க கிட்ட அப்படி என்னதான் இருக்கிறதோ?"

அம்மா கத்தினாள்.

"இதோ வந்துட்டேன்..."

கத்தியபடி தோட்டத்துப் பக்கம் பார்த்தான். சின்னம்மா கோழியைக் காணோம். புதர் போல மண்டியிருக்கும் காய்கறிச் செடிக்கடியில் எங்காவது மறைந்து நிற்கும்.

உள்ளறைக்கு வந்தபோது அப்பா காப்பி குடித்துக் கொண்டிருந்தார். அவனுக்கென்று அம்மா ஒரு குவளையை நீட்டினார்.

. வேலவன் முருகைய்யனின் முதுகின் மீது சாய்ந்தபடி இருந்தான்.

"நீ என்ன சொல்ற?"

அப்பா எதிரே நின்றிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரிடம். எதையோ விசாரித்துக் கொண்டிருந்தார்.

"ஆமாங்க... எல்லாமே அந்தக் கோலப்பனால் வர்றதுதான். நாங்க அவனைப்பத்திச் சொல்லும் போதெல்லாம் 'விடு... பாக்கலாம்'ன்னு நீங்க சொன்னதாலத்தான் இன்னைக்கு இப்படி வளர்ந்துட்டான். அவன் போக்கே... ரொம்பவும் மர்மமா இருக்குது..."

"ஒகோ... ஏரியா இன்ஸ்பெக்டர் என்ன சொல்றாரு?"

"அவரோட ரிப்போர்ட் இன்னும் மோசமா இருக்குது. அவன இனிமேலும் விட்டு வைக்கக் கூடாதுன்னு துடிக்கிறாரு... இருந்தாலும்... உங்களுக்காகத்தான்..."

"நோ...நோ... அவசரப்படவேணாம்... இன்னும் நல்லா வாட்சு பண்ணச் சொல்லுங்க..."

"சரிங்க சார்..."

வந்தவர் கையைக் கட்டிப் போட்டதுபோல முகம் இறுகியவராக வெளியே போனார்.

சுப்புவுக்கு இருப்பு கொள்ளவில்லை.

சின்னம்மா கோழியை இன்னும் காணோம். இருட்டும் நேரம். சுப்புவுக்குக் கலக்கமாயிருந்தது. தோட்டத்தில் சில நாள்களாக கீரிப் பிள்ளையின் நட மாட்டம் அதிகம்.

அது மட்டும் வராமல் போனால் தூக்கமே வராது.

அவசர அவசரமாகக் காபியைக் குடித்தான்.

"அப்பா... அப்பா...! இன்னிக்கு நம்ம சின்னம்மா கோழியில்ல... அது செல்லம்மா கோழி போட்டிருந்த குஞ்சையெல்லாம் குப்ப மேட்டுப் பக்கம் கூட்டிக்கினு போச்சப்பா...."

வேலவன் ஏதோ முக்கியமான விஷயத்தை நினைவு படுத்திச் சொல்வது போலச் சொன்னான்.

சுப்புவுக்கு வேலவன் சொன்ன விஷயம் வசதியாகப் போனது.

"ஆமாம்பா ... ஒரு கோழி குஞ்சைக் கூடப் பறிகொடுத்துடுச்சு... அதான்... கழுத்துல மஞ்சளா இருக்குமே..."

சுப்பு பரிதாபமாகக் கூறினான்.

"நேத்தும் அப்படித்தான்... என்னமா அழகா இருந்துச்சு.... இதுக்கு ஏன்தான் இத்தனை கெட்ட புத்தியோ?"

கரித்துக்கொட்டியபடி சமையலறைப் பக்கம் போனாள் ராஜம்.

"ஏண்டா... நாந்தான் அத ஒரு கயித்துல கட்டி வையின்னு நேத்தே சொன்னேன் இல்லையா?"

''அப்பா...! நான் அப்படித்தான் செஞ்சேன். ஆனா, அதையும் கொத்திக் கொத்தி அறுத்துடுச்சு...''

''இப்ப எத்தன குஞ்சு இருக்குது/''

''ஆறு...'' வேலவன் முந்திக்கொண்டு பதில் சொன்னான்.

''நாளையிலர்ந்து வெளியே விடாதே... கூடையிலே கவுத்து வச்சுத் தீனி போடு... அது திமிரை நான் கவனிச்சுக்கறேன்...''

முருகையன் சொல்லி முடிக்கவில்லை. ராஜம் பேச்சை மாற்றினாள்.

''என்னங்க... போற போக்கைப் பாத்தா ஏதாச்சும் பெரிசா நடக்காம போவாது போல தோணுதே...''

சுப்பிரமணிக்கு மனசு சங்கடமாக இருந்தது. அவனுடைய கவனமெல்லாம் சின்னம்மா கோழியைப் பற்றியதாகவே இருந்தது.

'துரு துரு வென்று ஓடிக் கொண்டிருக்கும் அதை அப்பா மூடி வைக்கச் சொல்கிறாரே! அய்யோ பாவம்'.

''அப்பவும் அது எவ்வளவு உயரத்துக்குப் பறந்து போயி அந்தப் பருந்தைக் கொத்திச்சு? காலையில அப்பா ஆபீசுக்குப் போன பிறகு நைசா திறந்து விட்டுடனும்... அது கம்பீரமா ஓடித்திரியறதப் பாக்கனும்''.

முருகையனும் ராஜமும் பேச்சைத் தொடங்கினார்கள்.

ஆமாம்... எல்லாம் அடக்கற விதமா அடக்கினா சரியாயிடும்... இன்னிக்கு மார்க்கெட்டுல ஒங்களப்பத்தி என்ன பேசிக்கறாங்க தெரியுமா?''

''என்ன?''

''போலீஸ்காரங்களா இருப்பாங்க போல. ஆர்.டி.ஓ. தான் பர்மிஷன் தர மாட்டேங்கறாரு. போன மாதம் நடந்த சாதிக் கலவரத்துலயே ஒரு புடி புடிச்சிருந்தா இன்னிக்கு இம்மாங் கஷ்டமில்லை. கையில லகான வச்சுகினு குதிரை துள்ளுது, துள்ளுதுன்னு சொன்னா... அவன என்ன சொல்றது? அதுமாதிரி நம்ம ஆர்.டி.ஒண்ணு சொல்றாங்க. எதுக்கெடுத்தாலும் பொறு பேசி தீத்துக்கலாம்னு வாயக்கட்டி அனுப்பிடறீங்களாம். எதுக்கு விட்டு வச்சுக்கினு இருக்கீங்களோ? பொம் பளைங்க வெளிலே நடக்கவே பயமா இருக்குது. பேசாம போலீஸ்காரங்க சொல்றாப்பல... கொஞ்சம் விட்டுக் கொடுத்துத்தான் போங்களேன் ?''

''ராஜம்! சில விஷயங்கள எப்படி முடிவெடுக்கிறதுன்னு அவங்களைவிட எனக்கு நல்லாவே தெரியும். புரட்சிக்காரங்க தான் ஆத்திரப் படறாங்கன்னா... நாமும் ஆத்திரப்பட்டா எப்படி? யாராச்சும் விட்டுக் கொடுத்தாதானே பிரச்னை தீரும்?..''

''நீங்க இப்படி மெத்தனமா இருக்கறதாலத்தான் அவனுங்க தட்டிக்கேக்க ஆளில்லங்கற மமதையில துள்ளறாங்க.''

''மமதையில்லடி... அவனுங்களுக்கு அது நியாயமாத் தோணுது. போராடறானுங்க..''

சின்னம்மா கோழி வேகவேகமாக வீட்டினுள் நுழைந்தது. அதன் கால்கள் பட்ட இடமெல்லாம் அதன் அடிச்சுவடு தெரிந்தது.

''எந்தக் குப்பையைக் கிளறிட்டு வந்துச்சோ தெரியலை...''



ராஜம் எழுந்து சின்னம்மா கோழியை விரட்டினாள். ராஜத்தைப் பார்த்தாலே சின்னம்மா கோழிக்கு உண்மையான பயம் வந்துவிடும்.

படபடப்பில் தப்பிச் செல்ல அப்படியும் இப்படியும் அலைந்து பின் தலைக்கு மேல் பறந்தபடி வெளி யேறியது. சுப்புவை, தண்ணீர் கொண்டு வரச்சொல்லி கால் பட்ட இடங்களை முணுமுணுப்புடன் கழுவிவிட்டாள்.

''வர வர இந்தக் கோழியோட அட்டகாசம் பொறுக்க முடியல. இன்னொரு முறை வரட்டும்... வச்சுக்கறேன்....''

இரவு படுக்கையில் கூட சின்னம்மா கோழியின் நினைவாகவே இருந்தது சுப்புவிற்கு.

அம்மாவுக்கு மட்டும் ஏன்தான் அந்தக் கோழியைக் கண்டாலே பிடிக்க மாட்டேங்கறதோ? அது ஏதாச்சும் முட்டையிட்டால் கூட எல்லா வற்றையும் பொரிப்பதிலேயே கவன மாய் இருக்கிறாள். இத்தனைக்கும் அதுவும் புத்திசாலித்தனமாய் எங்கெல்லாமோ இடம் மாறி மாறி முட்டையிட்டுப் பார்த்துவிட்டது. அம்மாவுக்குத்தான் யானைக் கண்ணாச்சே!

சின்னம்மா கோழியை மட்டும் குஞ்சு பொரிக்க விட்டிருந்தால் இந்நேரத்திற்கு அம்பது அறுபது கோழிகளாகி இருக்கும். அம்மாதான்... 'அது, ஒழுங்கா அடை காக்காது. கொஞ்ச நேரம் இருக்கும். அப்புறம் தெருவுக்குப் போயிடும். இப்படியே எல்லா முட்டையையும் அழுகலாக்கி விடும்...' என்று சொல்லிச் சொல்லியே பொரிப்பதில் அக்கறை யாய் இருந்தாள்.

''எனக்கென்னவோ... அது நிறையக் குஞ்சு பொரிச்சிருக்கும்ன்னுதான் தோணுது.''

ஒரு விதத்துல அம்மா சொல்றது கூட நியாயந்தானோ! இல்லன்னா இப்படியா அநியாயத்துக்கும் தெனம் ஒன்னப் பறிகொடுத்துட்டு... கொஞ்சமும் கவலப்படாம சுத்திகிட்டுத்திரியும்?

சின்னம்மா கோழிக்கு இருக்கற புததிசாலித்தனத்துக்கு அவயம் குடு தணியறதுக்கு அழகழகான கூழாங்கல்லா எங்கேயிருந்துதான் கொண்டு வருமோ? அவயம் காக்கறப்ப அதுங்கிட்ட மனுசனே போனாக்கூட எகிறி எகிறிக் கொத்தும். இதுவே ஒரு சேவலா இருந்திருந்தா... அக்கம் பக்கத்து ஏழேழு ஊர்லேயும் போட்டிச்சேவலே இல்லங்கறாப்பல... செய்திருக்கும் அவ்வளவு தைரியம்.

அப்பிடி சுதந்தரமா திரியறத போயி முருகையன் அடைச்சி வைக்கச் சொல்றாரே! நினைத்துப் பார்க்கவே சுப்புவுக்கு மனசு வலித்தது. தூக்கமில்லாமல் புரண்டு புரண்டு படுத்தான்.

''என்னடா தூக்கம் வரலையா? நானும் பாக்கறேன்....ஒரு மாதிரியா இருக்கற... உடம்புகிடம்பு சரியில்லயா?''

ராஜம் இருளில் கூட பரிவுடன் தொட்டுப் பார்த்தாள்.

சுப்பு மௌனமாய்க் கிடந்தான்.

அழைப்பு மணி அடித்தது.

விளக்கு பளிச் சென்று எரிந்தபோது தூக்கம் கலைந்தது போல... அரைத் தூக்கம்.

அப்பா வெளியில் யாருடனோ பேசிக் கொண்டிருப்பது போல கேட்டது.

''ஹலோ... டி.எஸ்.பியா? வாங்க... வாங்க... என்ன இந்த நேரத்துல...?''

''ஒண்ணுமில்லை... கோலப்பனப் பத்திதான்... ஒட்டு சாவடியில கலவரம் பண்றதுக்கு வழிபண்ணிட்டு இருக்கான். அவன இப்படியே விட்டுக்கினு இருந்தா அது நமக்குத்தான் கெட்ட பேரு.. ஊரையே திசை திருப்பி, போலிங்கே நடக்காம பண்ணிடுவான் போல இருக்குது. ஒட்டுப் போடற சமயத்துல என்ன வேணும்னாலும் பண்ணுவான்... நீங்க மட்டும்.... எங்க கைய்ய கட்டாம இருந்தீங்கன்னா... காதும் காதும் வச்சாப்பல காரியத்த கச்சிதமா முடிச்சுடுவோம். எங்க நெலமயயுங் கொஞ்சங் யோசிச்சுப் பாருங்க சார்!''

முருகையன் சற்று மௌனத்திற்குப் பிறகு மறுநாள் ஆபீசில் வந்து சந்திக்கும் படி கூறி வழி அனுப்பி வைத்தார்.

குதிரை நடப்பது போல டி.எஸ்.பி நடந்துபோனார்.

சுப்பு காலையில் வெகுநேரம் கழித்து தூக்கம் கலைந்து எழுந்தபோது முருகையன் வீட்டிலில்லை. திருப்தியுடன் கோழிக் கூண்டு பக்கம் போனான். செல்லம்மா கோழியின் வாசலில் வழக்கம் போல குஞ்சுகளுடன் மண்ணைக் கிளறி இரை எடுத்துக் கொண்டிருந்தது. பார்க்க ரம்மியமாக இருந்தது.

சின்னம்மா கோழியைத் தேடினான்.


இன்று ஞாயிற்றுக் கிழமை என்பதால் நாள் முழுதும் அதனுடன் துரத்திப் பிடித்து விளையாடலாம். கல்லெடுத்து வீசலாம். ஒங்கிக்குறி வைத்து அடித்தாலும் லகுவாய்த் தப்பிவிடும்.

ஒருவேளை அப்பா சொன்னது போல அம்மா கூடையில் எங்கேனும் கவிழ்த்து மூடி வைத்திருப்பார்களோ?

அம்மாவிடம் கேட்டுவிடலாமென சமையலறையை நோக்கி ஓடினான்.


அங்கே கோழிக்கறி கொதித்தபடி மணந்து கொண்டிருந்தது.

அவனுக்கு எல்லாமே புரிந்து போனது. தன்னுடன் இனி விளை யாட யாருமே இல்லாதது போல... ஒரு வெறுமையாய் கிணற்றடியில் உட் கார்ந்து தேம்பித் தேம்பி அழுதான். ●



நெஞ்சினால் பிழைப்பு இலாள்

த. இராமலிங்கம்



சித்திரவிளக்கம் – 1

'கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி' என்று தயரதனைக் கேட்டுக் கொண்டு வந்தான், விசுவாமித்திர முனிவன்.

கானகத்தில் தான் செய்யும் வேள்விக்கு அரக்கர்கள் பெரும் இடையூறாய் இருப்பதனால், இராமனின் உதவி தனக்கு வேண்டும் என்று கேட்ட விசுவாமித்திரனின் வேண்டுகோள், தயரதனுக்குச் சொல்ல முடியாத துயரத்தைத் தந்தது.

'இராமனைப் பிரிவதா.....?'

இளமையிலேயே பெரும் சாதனை புரிய வேண்டியவன், வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தால் பயனில்லை என்பது வசிட்டனுக்குப் புரிந்தது.

'பெறுதற்கரிய வாய்ப்பு இராமனுக்கு வந்துள்ளது. மறுக்காமல் விசுவாமித்திரனுடன் அவனை அனுப்பு....' என்று தயரதனுக்கு அறிவுரை சொன்னான் வசிட்டன்.

குலகுருவின் சொற்களை மதித்து, உடலிலிருந்து உயிரைப் பிரித்து அனுப்புவது போல, இராமனை விசுவாமித்திரனுடன் அனுப்பினான் தயரதன்.

முனிவன் முன்னே போக, நிஜத்தைத் தொடரும் நிழல் போல, இராமனைத் தொடர்ந்து இலக்குவனும் சென்றான்.

மூவரும் செல்லும் வழியில் பெரும்பாலைவனம் குறுக்கிட்டது. 'கொடுமையான வெப்பம் இந்த இடத்தில் தகிக்க என்ன காரணம்?' என்று கேட்டான் இராமன்.

'எத்தனை நல்ல குணங்கள் இருந்தாலும், ஒரு தீயகுணம் அனைத்தையும் இல்லாமல் செய்து விடுவதுபோல, தாடகை என்னும் ஓர் அரக்கியால் அருமையான இந்த இடம் அழிந்து இவ்வாறாயிற்று' என்று விசுவாமித்திரன் விளக்கம் சொன்னான்.

'தாடகை எங்கே இருப்பாள்?' என்று இராமன் கேட்டு முடிக்கும் முன், பெரும் ஆரவாரத்துடன் அங்கு தோன்றினாள் அவள்.

"எனது பெரும் பசிக்கு உணவாகவே வந்தீர்களா...? இதோ, எனது வேற்படையை எறிகிறேன்....." என்று ஆரவாரித்துக் கொண்டு வந்தாள்.

ஆனால், இராமன் அவளை எதிர்க்கத் துணியவில்லை. காரணத்தைக் கம்பன் தெரிவித்தான்.

'பெண் என மனத்திடைப் பெருந்தகை நினைந்தான்!'

'பெண் என இவளை நினைக்கலாமா.....? பேணும் குணம் ஏதும் இல்லாதவளாயிற்றே இவள்.... கோபத்தில் இவளைக் கொல்லச் சொல்லவில்லை இராமா..... அறிவின்பாற் பட்டும் அறத்தின் பாற்பட்டும் இதனைக் கூறுகிறேன்....'

ஆசிரியரின் ஆணையைச் சிரமேற்கொண்டு, வில்லில் நாண் ஏற்றினான் இராமன்.

அவன் ஆற்றலை, முதன்முறையாக உலகம் கண்டது. தாடகை மார்பில் அம்பு நுழைந்ததும் தெரியாமல், வெளியேறியதும் தெரியாமல் அவள் வாழ்க்கை முடிந்தது.

இராமனின் கைவண்ணத்தை இங்கே கண்டு வியந்த முனிவன், அவளது கால் வண்ணத்தைக் காணும் வாய்ப்பும் தொடர்ந்து வந்தது.

இராமனை அழைத்து வந்த நோக்கம் நிறைவேறியதும், மிதிலை மன்னன் சனகன் செய்யும் வேள்வியைக் காண, அவர்களை அழைத்துக் கொண்டு சென்றான் முனிவன்.

மிதிலை நகரின் மதிற்புறத்தை மூவரும் அடைந்தனர். அந்த மதிலுக்கு அருகே, ஒரு வெற்றிடத்தில் கருங்கல் சிலை ஒன்று வீழ்ந்து கிடக்கக் கண்டனர்.

நடந்து சென்ற இராமனின் பாதங்களில் இருந்து சிதறிய துகள், அந்தக் கருங்கல் சிலையில் பட்டது. சிலைக்கு உயிர் வந்தது! எழில் தோற்றத்துடன் எழுந்து நின்றாள் அகலிகை!

உள்ளத்தில் அஞ்ஞானம் அகன்று தத்துவ ஞானம் பெறு பவன், புதுப் பொலிவு பெறுதல் போல, அகலிகை பழைய நிலைக்குப் புதுவடிவு கொண்டாள் என்று எழுதுகிறான் கம்பன்.

முகத்தில் மகிழ்ச்சி பொங்க ஒதுங்கி நின்ற அவளைக் காட்டி, 'இவள் அகலிகை' என்றான் முனிவன்.

இராமனுக்கு, நிகழ்ந்தவை வியப்பைக் கூட்டுவதாக அமைந்தன.

'இது ஏன் நிகழ்ந்தது....? எப்படி இங்ஙனம் நிகழக்கூடுமம்....? தொழத்தக்க தாயாகத் தோன்றும் இவளுக்கு இப்படி நேர்ந்ததன் காரணம் என்ன...?' என்று வினவினான் விசுவாமித்திரனிடம்.

நம்பிக்கை மோசம் நிகழ்ந்த சூழலை இராமனுக்கு விளக்கினான் முனிவன்.

தேவர்களின் தலைவனான இந்திரனுக்கு, வரக்கூடாத ஆசை வந்தது.

தனது தவத்தினால் தீயகுணங்களை அவித்து, ஞானப் பழமாகத் துறவு வாழ்க்கை நடத்தியவன் கௌதம முனிவன். அவனது துறவு வாழ்க்கைக்குத் தொண்டு செய்வதையே தனது பிறவிப் பணியாகக் கொண்டு, தன்னையே துறந்து அவனுடன் வாழ்ந்தவள் அகலிகை. அவளது தூய வாழ்க்கையைப் பெரிதாக எண்ணித் தொழாமல், மேனி எழிலின் மீது மோகம் கொண்ட இந்திரன், ஏதேனும் சூழ்ச்சியால் கௌதமனைத் தனியே அனுப்பிவிட்டு, அகலிகையைச் சேர நினைத்தான்.

வஞ்சக மனம் கொண்டவர்க்கு வழி கிடைக்காமலா போகும்...?

விடிவதற்கு முன்னரே சேவல் போலக் கூவி, கௌதமனைக் காலைக் கடன்களுக்கு அனுப்பிவிட்டு, உள்ளே நுழைந்தான் இந்திரன் என்று அகலிகை கதை சொல்கிறது.

என்ன காரணத்தாலோ கம்பன் அதை விவரிக்க இல்லை. 'தவசீலனாய் வாழும் முனிவனுக்கு, கத்தியது பொய்ச் சேவல் என்பதை உணர முடியவில்லையா...? வெளியே வந்த பின்னரும், பொழுது இன்னும் விடியவில்லை என்பதைத் தெரிந்து கொள்ள

முடியவில்லையா...?' என்பன போன்ற வினாக்கள் வீசப்படும் என்று நினைத்தானோ என்னவோ...!

'மையலில் அறிவு நீங்கி, மாமுனிக்கு அற்றம் செய்து

பொய் இலா உள்ளத்தான் தன் உருவமே கொண்டு புக்கான்.'

'பொய்யில்லா உள்ளம் கொண்ட முனிவனுக்குத் துரோகம் செய்துபிரிந்துவிட்டு, அவன் வடிவு கொண்டு உள்ளே நுழைந்தான் இந்திரன்' என்று பொதுவாக எழுதிக் கொண்டு போகிறான் கம்பன்.

வெளியே சென்று உள்ளே நுழைந்த முனிவனின் செய்கை அகலிகைக்குப் புதிராக இருந்தது; புதிதாகவும் இருந்தது. இறுதியில் இளமை உணர்வு வென்றது.

அவசரத்தில் வெளியே சென்ற கௌதம முனிவன், குடிலுக்குத் திரும்பினான்.

பெரும் பழிக்கு ஆளாகிவிட்ட அகலிகை, நடுங்கி நின்றாள். நினைத்ததை முடித்த இந்திரன், நடுக்கம் உற்றவனாய், ஒரு பூனையின் வடிவு கொண்டு வெளியேறினான்.

சினம் தலைக்கேறியது முனிவனுக்கு. 'தேவர்க்குத் தலைவனான இந்திரன் இப்படிச் செய்வானா?' எவராக இருந்தால் என்ன...? தவறுக்குத் தண்டனை பெற்றுத்தானே தீரவேண்டும்....?

'எதன் மீது நாட்டம் கொண்டு நீ இப்பெரிய பாவத்தைச் செய்தாயோ, ஆயிரமாக அது உன் மேனியில் தோன்றட்டும்' என்று இந்திரனுக்குச் சாபமிட்டான் கௌதமன்.

மறைக்கப்பட வேண்டியதை, மறைக்க முடியாத வண்ணம் உடல் எங்கும் பெற்ற இந்திரன் பார்த்தவர் நகைக்க நாணமுற்று வெளி நடந்தான்.

"விலை மகள் போன்றவள் நீ! உணர்ச்சி வயப்பட்டுத் தவறிழைத்த நீ. உணர்ச்சியே அற்ற கருங்கல்லாகக் கடவாய்" என்று அகலிகையை நோக்கிக் கூவினான் முனிவன்.

"தவறுக்குத் தண்டனை தந்த நீங்களே, இதற்கு முடிவும் சொல்லிவிடுங்கள்" என்று வேண்டி நின்றாள் அகலிகை.

"தயரதன் மகனாகிய இராமன் இப்பக்கம் நடந்து வருவான். அவனது பாதத் துகள்கள் உன் மீது படியும்போது, நீ பழைய வடிவு பெறுவாய்..." என்று சாபத்திற்கு முடிவும் சொன்னான் கௌதமன்.

தேவர்கள் ஒன்றுகூடி, இந்திரன் பெற்ற சாபத்திற்கு முடிவு வேண்டினார்கள். "அவன் உடம்பில் தோன்றிய ஆயிரம் குறிகள், உலகத்தார் பார்வைக்கு ஆயிரம் கண்களாய்த் தெரியட்டும்" என்றான்.

அகலிகையின் வரலாற்றைச் சொல்லி முடித்த விசுவாமித்திரன், இராமன் கையால் தாடகை உயிர் இழந்ததையும், அவன் காலால் அகலிகை உயிர் பெற்றதையும் வியந்து பேசினான்.

'இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனி இந்த உலகுக்கெல்லாம்

உய்வண்ணம் அன்றி மற்று ஓர் துயர் வண்ணம் உறுதல் உண்டோ...?

மைவண்ணத்து அரக்கி போரில், மழைவண்ணத்து அண்ணலே உன்

கைவண்ணம் அங்கு கண்டேன்! கால் வண்ணம் இங்கு கண்டேன்!'

அகலிகைக்கு உயிர் அளித்தால் மட்டும் போதுமா...? வாழ்விக்க வேண்டாமா...?

கௌதமனைச் சந்தித்தனர், இராமனும் விசுவாமித்திரனும்.

'நெஞ்சினால் பிழைப்பிலாளை நீ அழைத்திடுக!' என்று கௌதம முனிவனிடம் அவளைச் சேர்ப்பித்தான் விசுவாமித்திரன்.

வான்மீகத்தில் இருந்து மிகவும் மாறுபட்டு அகலிகைப் பாத்திரத்தைப் படைத்தான் கம்பன்.

வான்மீகக் காப்பியத்தில், நடந்த தவறுக்கு அகலிகை உடன்பட்டது மட்டுமன்று; ஒருமைப்பட்டு நின்றதாகவுமே சித்திரிக்கப் படுகிறாள்

கௌதம முனிவன் வேடத்தில் உள்ளே நுழைந்த இந்திரன், 'அழகிய இடை உடையவளே! உன்னுடன் மகிழ்ந்திருக்க விரும்புகிறேன்....' என்று நேரிடையாகக் கேட்கவே செய்கிறான்.

வந்திருப்பவன் இந்திரன் என்று தெரிந்தும், மயங்கி மனம் இசைந்த அகலிகை, இறுதியில், "தேவர்க்கு அரசனே! உடனே சென்று விடு! நமது மானம் உன் கையில் இருக்கிறது. இங்கு நடந்ததைப் பிறர் அறியாமல் காக்க வேண்டியது உன் கடமை" என்று பேசுகிறாள்.

"மகிழ்ச்சி: நான் கிளம்புகிறேன்...." என்று அவளிடம் இந்திரன் சொல்லிவிட்டுக் கிளம்பும்போது, கௌதமன் உள்ளே நுழைந்ததாக, வான்மீகக் கதை அமைப்பு செல்கிறது.

அகலிகையின் இந்தப் பேச்சு, அவள் மீது எவ்வித மதிப்பையும் பெற்றுத் தரவில்லை. தவறுக்கு உடன்பட்டவள் என்ற சிந்தனையே தோன்றுகிறது.

தமிழ் மக்களுக்கு கம்பன் அகலிகையை இப்படியே அறிமுகப்படுத்தி விடவில்லை.

கம்பன் மாற்றுகிறான்.

"புக்கு அவளோடும், காமப்புதுமண மதுவின் தேறல்

ஒக்க உண்டு இருத்தலோடும், உணர்ந்தனள்: உணர்ந்த பின்னும்,

தக்கது அன்று என்று ஓராள்: தாழ்ந்தனள் இருப்ப, தாழா,

முக்கணான் அனைய ஆற்றல் முனிவனும் முடுகிவந்தான்."

இடைவழியில்தான், உடன் இருப்பவன் முனிவன் அல்லன் என்று உணர்கிறாள், கம்பனின் அகலிகை. உணர்ந்த பின்னும் ஒதுங்கவில்லை என்பதுதான் அவள் தவறு... என்று கம்பன் கதையைப் பின்னிக் கொண்டு போகிறான்.

"அவள் செய்தது பிழைதான்: ஆனால் அது எண்ணிச் செய்த பிழை இல்லை..." என்று மீண்டும் உணர்த்த விரும்புவான்போல், 'நெஞ்சினால் பிழைப்பு இலாள்' என்றும் பேசுகிறான்.

கம்பனின் கைவண்ணத்தில், அகலிகை இரக்கத்துக்கு உரியவளாக வடித்துக் காட்டப்படுகிறாள்.

எண்ணிச் செய்யாத பிழை இரக்கத்திற்கு உரியதுதானே....!


கைவண்ணம் - கால் வண்ணம்

"சொற்களைப் பயன்படுத்துவதிலும் கூட, கம்பனுக்கு நிகர் கம்பன்தான்.
இராமன் தன் ஆற்றலால் தாடகையைக் கொன்றான். பின்னர் மிதிலை நகர் நோக்கி இராம இலக்குவர்களை அழைத்துச் சென்றான் விசுவாமித்திரன். மிதிலை நகரின் மதிற்புறத்தே ஒரு பெண் சிலை கிடந்தது. கல்லாகக் கிடந்தவள் அகலிகை. இராமனின் பாதத் துகள்பட்டு மீண்டும் அழகான பெண்வடிவம் பெற்றாள்.
இராமன் தாடகையைக் கையால் அழித்தான்; அவன் கால்துகள் பட்டு அகலிகை மீண்டும் வாழ்வு பெற்றாள்."

இலக்கியச்சுடர் இராமலிங்கம் எழுதிய கம்பன் கவிச்சோலையில்... நூலிலிருந்து வெளியீடு : காமதேனு பப்ளிகேஷன்ஸ்

ஈரடியால் அளந்தாய் மூவுலகும்

பாரதி சுராஜ்



இராமாயணக் கதை நாம் அறிந்த ஒன்று. கோசல நாட்டு மன்னர் மன்னன் தயரதன் பிள்ளைப் பேறின்றி வருந்தி, பெரும் வேள்வி செய்து, இராமன், பரதன், இலக்குவன், சத்துருக்னன் என்ற நால்வரைப் பெற்று மகிழ்ந்தான்.

தயரதன், ஓவிய எழிலுடை ஒருவனான இராமனைத் தவிர வேறு 'ஆவியும் உடலும் இலது' என, அவனிடம் பேரன்பு கொண்டிருந்தான். இராமன் வளர்ந்து வரும் நாளில், விசுவாமித்திர முனிவன், தயரதன் அவைக்கு வந்து, தன் தவ வேள்விக்கு இடையூறு செய்யும் அரக்கர்களிடமிருந்து பாதுகாக்க 'நின்கரிய செம்மல் ஒருவனைத் தருதி' என்று கேட்டான்.

முதலில் மறுத்த தயரதன், வசிட்டரின் அறிவுரையை ஏற்று முனிவருடன் இராம, இலக்குவர்களை அனுப்பினான்.

வனத்தை நோக்கிப் புறப்பட்ட சிறுவர்களுக்கு முனிவன், பயணத்தின் கடுமை குறைய, பல கதைகளைச் சொல்லி வருகிறான். கதை கேட்பதில் சிறுவர்களுக்கு உள்ள ஆர்வம் இராமாயண காலத்திலேயே தொடங்கிவிட்டது.

இப்படி அவர் கூறிய கதைகளில் ஒன்றுதான் 'வாமனாவதாரம்'. இருபது பாடல்களால் இவ்வரலாற்றைப் பாடி மகிழ்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். பால காண்டம், வேள்விப் படலத்தில் இப்பாடல்கள் இடம் பெறுகின்றன.

*

வலிமையில் வராக மூர்த்திக்கு இணையான மாவலி (மகாபலி சக்கரவர்த்தி), இந்திர பதவியைப் பெற்று வானமும் வையமும் தன் ஒரு குடைக்கீழ் வரவேண்டுமென்ற எண்ணத்துடன், ஒரு பெரு வேள்வி செய்கிறான். அதன் அங்கமாக தானம் நடைபெறுகிறது. கேட்போருக்கு 'வையமும் யாவும், வழங்க வலித்தான்' அவன்.

பதவிக்கு ஆபத்து என்பதால் தேவேந்திரன் உள்ளிட்ட தேவர்கள் திருமாலிடம் முறையிட்டனர். இதன் விளைவாக, முக்காலமும் உணர்ந்த காச்யப முனிவருக்கும், அதிதி தேவிக்கும் மகனாக இறைவன் அவதாரம் எடுத்ததைக் கம்பர் பாடும் விதமே தனியானது.

"நீலநிறத்து நெடுந்தகை வந்து - ஓர்
ஆலமர் வித்தின் அருங்குறள் ஆனான்"

திருமாலுக்கு நெடியோன் என்று பெயர். அவன் சின்னஞ்சிறியவனாக - குள்ளனாக - வாமனனாக - குறளனாக வந்தான். தானம் வாங்கச் செல்வதென்றால் - ஏன், நன்கொடை பெறச் செல்லும் போதும்தான் - எத்தனை பெரியவனும் கூனிக் குறுகித்தான் ஆகவேண்டும் என்று காட்டுவது இது.

இறைவனை 'முதல் தனி வித்தேயோ' என்பார் நம்மாழ்வார். சிறுவயதில் நாம் படித்த 'வெற்றி வேற்கை' நறுந்தொகைப்பாடல் நினைவில் எழுகிறது. ஆலம்பழம் சிறியது. அதைவிடச் சிறியது அதன் விதை. மீன் முட்டையை விட நுண்ணியது. ஆனால் வளர்ந்து ஆலமரமாகும்போது அது விரிந்து பரந்து கிளை பரப்பி, பெரிய அரசன் தன் படையோடு வந்து இளைப்பாற இடம் தருகிறது.

'தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை

தெண்ணீர்க்கயத்துச் சிறுமீன் சினையினும்

நுண்ணிதே ஆயினும், அண்ணல் யானை

அணிதேர், புரவி, ஆட் பெரும் படையொடு

மன்னர்க்கிருக்க நிழலாகும்மே'

இந்தச் சிறிய வித்தில் பெரிய மரமாவதற்கான ஆற்றல் (Potentiality) அடங்கி இருப்பதுபோலத்தான், அந்தச் சிறு வாமன வடிவில், பின்னால் பேருருவாக, திரிவிக்கிரமனாக வளர்வதற்குரிய ஆற்றல் மறைந்து கிடந்தது என்று கூறாமல் கூறுகிறார், கம்பர்.

வாமன வடிவத்தை அப்படியே படம் பிடிக்கிறது கம்பன் கவிதை.

முப்புரி நூல் மார்பில். மான்தோல் மறைத்த மார்பு. வாயில் வேதம் ஓதி வருகிறான். அவன் வடிவமே அற்புதமானது! அற்புதன் என்றே அழைக்கிறார் கம்பர்... அவன் பெருமையை அறிபவர்களும் அற்புதமானவர்கள்தாம்...

'முப்புரி நூலினன், முஞ்சியன், விஞ்சை
கற்பது ஓர்நாவன், அனல்படு கையன்
அற்புதன் அற்புதரே அறியும்தன்
சிற்பதம் ஒப்பது ஒரு மெய்க்கொடு சென்றான்'.

நாடகம் தொடர்கிறது. வேள்விச்சாலைக்கு இந்தச் சின்னஞ்சிறு அந்தணச் சிறுவன் வந்தபோது மாவலி முறைப்படி வரவேற்றான்.

வாமனனும் மாவலியின் கொடையைப் பாராட்டினான். 'தங்களுக்கு என்ன வேண்டும்?'

'மூவடிமண் அருள் உண்டேல்' வாமனன் கேட்டது. 'உண்டேல்' உன்னிடம் இருக்கப் போவதில்லை என்ற குறிப்பு தொனிக்கிறது.

வாமனன் கேட்டான். மாவலி தர முனைந்தான். அவனது குருநாதர் தடுத்தார். இந்த விரைவைக் கவிதை காட்டுகிறது.

'சிந்தை உவந்து எதிர் என் செய என்றான்
அந்தணன் 'மூவடி மண் அருள் உண்டேல்'

வெந்திறலாய் இது வேண்டும் எனாமுன்...
"தந்தனென்"என்றனன்; வெள்ளி தடுத்தான்'

"மாவலி! நீ காண்பது 'கைதவம்'. ஏமாற்று வேலை. இவனது குள்ள வடிவம் உண்மையானதன்று. இவன் தான் அண்டங்களையெல்லாம் உண்டு தன் வயிற்றில் அடக்கிய திருமால். கொடுக்காதே..."என்றான் வெள்ளி — சுக்கிராச்சாரியார்.

"அவன் திருமாலாக இருக்கட்டுமே. ஒன்றை நினைத்துப் பாருங்கள். தானம் வழங்கும் என் கை உயர்ந்து மேலே இருக்க... தாழ்வே அறியாத உயர்ந்தவனான திருமாலின் கரம் தானம் கேட்டுக் கீழே தாழ்ந்து இருக்கும். இதற்கு மேல் எனக்கு என்ன பெருமை இருக்கிறது?"மாவலி பேசினான்.

"நினைக்கிலை என் கை நிமிர்ந்திட வந்து
தனக்கு இயலாவகை தாழ்வது, தாழ்வுஇல்
கனக் கரியானது கை ;தவம் என்னின்
'எனக்கு இதன் மேல் நலம் யாதுகொல்'

என்றான்.

இந்த உலகில் எத்தனையோ பேர் பிறந்து மறைகிறார்கள். ஆனால் என்றும் இருப்பவர் கொடுப்பவர்களே.

"ஈந்தவர் அல்லது இருந்தவர் யாரே"

என்று கூறி,

'அடி ஒரு மூன்றும் நீ அளந்து கொள்க' என "நெடியவன் குறியகை நீரில் நீட்டினான்".

தானம் வழங்கப்பட்டது. கையில் தாரை நீர் விழுந்த அந்தக் கணமே (Instantaneous) வாமனன் வடிவம் பெரிதாகத் தொடங்கியது. அவையினர் பார்த்துக் கொண்டிருக்க வாமனன் வளருகிறான்; வளருகிறான்; வளர்ந்து உயர்ந்து கொண்டே போகிறான்! முதலில் தோன்றியது வியப்பு... பின் அவனது வடிவம் அண்டத்தை முட்டி உயரும்போது பயமே தோன்றி விடுகிறது.

'வியந்தவர் வெருக் கொள விசும்பின் ஓங்கினான்' வளர்ந்தவன் யார்? 'நமக்கு இப்படி ஒரு குழந்தையா? இத்தனை குள்ளமாக?' என்று பெற்ற தாய் தந்தையரே மனத்துள் பொருமும் வடிவம் பெற்று வந்தவன் 'பயந்தவர்களும் இகழ் குறளன்' இறைவனின் பெரு வடிவுக்கு மாவலியின் உதவியை - தானத்தையே உவமையாக்குகிறார் கவிச் சக்கரவர்த்தி.

'கயந்தரு நறும்புனல் கையில் தீண்டலும்
பயந்தவர் களும்இகழ் குறளன், பார்த்துஎதிர்
வியந்தவர் வெருக் கொள விசும்பின் ஓங்கினான்
உயர்ந்தவர்க்கு உதவிய உதவி ஒப்பவே".

இந்த வாமன அவதாரத்தை - திரிவிக்கிரமனாக அவன் வளர்ந்ததை - அருமையாகப் படம் பிடிக்கிறார் கலியன் திருமங்கை ஆழ்வார், தமது திருநெடுந் தாண்டகத்தில்.

ஒண்மிதியிற் புனல் உருவி ஒருகால் நிற்ப
ஒருகாலும் காமருசீர் அவுணன் உள்ளத்து
எண்மதியும் கடந்து அண்டமீது போகி
இருவிசும்பின் ஊடுபோய் எழுந்து - மேலைத்
தண்மதியும் கதிரவனும் தவிர ஓடித்
தாரகையின் புறம் தடவி அப்பால்மிக்கு
மண்முழுதும் அகப்படுத்து நின்ற எந்தை
மலர் புறையும் திருவடியே வணங்கினேனே!

இந்த வாமன அவதாரம் ஆழ்வார்களைக் கவர்ந்த ஒன்று.

இரப்பது இழிவானது. 'இல்லெலாம் இரத்தல் அன்றோ இழிவு இழிவு எந்த ஞான்றும்' என்பார் குசேலோபாக்கியான ஆசிரியர்.

உலகமனைத்தும் இறைவனுடையது என்பதை மறந்து, அதைத் தன்னுடையதாகக் கருதி கர்வ மடைந்தான் மாவலி. அவன் அகந்தையை நீக்கத்தான் இந்த அவதாரம்.

செல்வங்களுக்கெல்லாம் தலைவியை மனைவியாகப் பெற்ற செங்கண்மால் பிறர் காரியம் செய்ய இழிந்த 'இரத்தல்' பணியை மேற்கொண்டான்.

அவனை இதற்காகவே 'உத்தமன்' என்று அழைத்தாள் ஆண்டாள், திருப்பாவையில்.

மூன்றடி மண் வேண்டிய அவனுக்குத் தனது முப்பது பாடல்களைக் கொண்ட திருப்பாவையில் மூன்று அடிகளைத் தந்தாள், மூன்று வெவ்வேறு பாடல்களில்.

'ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி'

'அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த உம்பர் கோமானே'

'அன்றிவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி'

என்பன, ஆண்டாளின் திருப்பாவை வரிகள். இளங்கோ அடிகள், தம் சிலப்பதிகாரத்தில்,

"மூவுலகும் ஈரடியால் முறை நிரம்பா வகை முடியத்
தாவிய சேவடி"

என்று பாடி மகிழ்ந்தார்.

இந்த வாமன நாடகத்தை முத்தாய்ப்பு வைத்து முடிக்கிறான், கம்பன் ஒரு நாலு வரிப்பாடலில்... கதைக்குத் தொடர்புடையதன்றெனினும் ஒரு நிறைவை அளிக்கிறது பாடல். கவிச் சிறப்புமிக்க ஆயிரத்தில் ஒரு பாடல்.

நிலத்தைத் தானம் பெற்று இந்திரன் உலகை அவனுக்கு உறுதியாக்கிப் பணி முடிந்த நிறைவில், திருப்பாற்கடலில் தனது மென்மையான பாம்புப் படுக்கையில் சாய்கிறான் திருமால்.

அப்போது திருமகள் - அங்கமெல்லாம் தாமரை மலர்போல் மென்மையானவள். தனது தளிர்க்கரத்தால் "பூத்தொடுக்குமாப் போலே" அவன் திருவடியைக் கூசிப் பிடிக்கிறாள். அது கூடத் தாங்கவில்லை. மென்மையிலும் மென்மையான அவனது திருவடிகள் சிவந்து விட்டன.

படித்துப் படித்து மகிழவேண்டிய முத்தாய்ப்புக் கவிதை இது:

'உரியது இந்திரற்கு இது' என உலகம் ஈந்து போய்
விரிதிரைப் பாற்கடல் பள்ளி மேவினான்
கரியவன் உலகுஎலாம் கடந்த தாளிணை
திருமகள் கரம்தொடச் சிவந்து காட்டிற்றே'

சிரித்தது செங்கட்சீயம்

சுகி சிவம்



பிரபலமான பேச்சாளர்களுக்கு ஒரு பழக்கம் உண்டு. அவர்கட்குப் பிடித்த செய்தியை, நகைச்சுவையை, பேச்சின் நடுவில் எப்படியாவது நுழைத்து விடுவார்கள். சில சமயத்தில் அந்த இடைச் செருகல் பேச்சின் மையக் கருத்தைவிட முக்யத்துவம் பெற்றதாகி விடும். அப்படி நடந்த கதைதான் இரணியன் வதைப்படலம் என்பது என் கருத்து.

கம்பத்தில் பிறந்த நரசிம்மர் மீது கம்பனுக்குப் பிரியம் இருந்திருக்கலாம். அவரது அவதார அழகை எப்படியாவது பாட நினைத்த கவிச்சக்கரவர்த்தி சந்தர்ப்பம் எதிர்பார்த்தார். ஆண்டவன் அவதார அருமையை ஆழ்வான் ஒருவனே உணர்ந்து சொல்ல முடியும் என்பதால் வீடண ஆழ்வான் பேசுவதாக நரசிம்ம அவதாரத்தைக் கம்பர் பாடியிருக்கிறார்.

அனுமன் அறிவுரையை மதிக்காத இராவணனுக்கு அறிவுரை கூற முனைகிறான் வீடணன். அப்போது இராவணனை விடவும் பலத்துடன் வாழ்ந்து, பரம் பொருளுடன் மோதித் தோற்ற இரணியன் கதையைக் கூறி அவனைத் திருத்த முயல்வதாகக் கம்பர் கதையைக் கொண்டு போகிறார்.

சொல்லாட்சியும், பொருளாழமும் மிக்க கவிச்சக்கரவர்த்தி கம்பரை விடவும் தத்துவ ஞானமும் பக்தி உணர்வும் மிக்க மகரிஷி கம்பரைத் தரிசிக்க வைப்பது இரணியன் வதைப் படலம். "ஒற்றை அண்டத்து அளவும் கடந்து மற்றை அண்டத்தும் தன் பெயர் சொல" வாழ்ந்த இரணியனைப் பற்றிய அறிமுகமே கம்பீரமானது.

எட்டுத்திசை யானைகளையும் தன் இருகரம் கொண்டு வலுச்சண்டைக் கிழுப்பவன். ஆழம் காண முடியாத ஏழுகடல்களையும் கணுக்கால் அளவு என்று கண்டு நடக்கும் பெரு வடிவினன். கடல் நீர் உப்பு எனக் கருதி நீக்கி, புதுப் புது அண்டங்களைப் பொதுத்து நீராடும் பெரியவன்,நாளும் ஒரு நாட்டுக்கு விமானத்தில் பறக்கும் நாட்டுத் தலைவர் போல, பொழுதுக்கு ஓர் உலகில் புகுந்து புறப்படும் பயண வாழ்வினன். கதிரவன் உதய, அஸ்தமன மலைகள் இரண்டும் இரு செவிக் குண்டலங்களாகக் கொண்ட வடிவினன். பாற்கடல் கடைந்த மேருமலையை, தான் கைவைக்க உதவும் தண்டெனக் கொண்டு, அது குழைவது கண்டு விட்டெறிந்த பலசாலி...

எல்லா உலகினரும் வேத முதலாகக் கருதி எந்த நாராயணனைத் துதித்தனரோ – அந்த நாரணனை, வேதத்தின் சிரசிலிருந்து நாடு கடத்தி தனது நாற்காலியை அங்கு நகர்த்தி வைத்து, 'ஓம் நமோ இரணியனே நம' என்று எல்லாரையும் சொல்லவைத்த எதேச்சாதிகாரம் மிக்க தனித்தலைவன் இரணியன்.

இந்த மண்ணில் எழுந்து மடிந்த எத்தனையோ தலைக் கனம் மிக்க தலைவர்கள் பலரும் தங்கள் பெயரைக் கல்வெட்டுகளாகப் பதித்ததுண்டு. புலவரைப் பிழிந்து பாட்டெழுத வைத்து, பாட்டு வரிகளில் தம்மைப் பதித்து (புதைத்து!) பாராட்டிக் கொண்டதும் உண்டு. ஆனால் வேதத்தின் தலைமீது ஏறியமர்ந்து விதி எழுதிக் கொண்டவன் இரணியன் மட்டுமே!

ஆனால் கடைசிவரை இது முடிந்ததா? – அது அவனை விட்டு வைத்ததா? உயிர்க் குலத்தின் நிரந்தர எதிரி மரணம் மட்டுமே. மனித குலம் அன்றும் இன்றும் மரணத்தின் மீதான தனது யுத்தத்தை நிறுத்தியதே இல்லை. மருத்துவமனைகளும் மாத்திரைப் புட்டிகளும், மரணத்தை எதிர்த்து மனித குலம் எறியும் புதுப்புது பாணங்கள். ஆனால் மரணமோ, மவுனமாக பிரபல மருத்துவர் களையும் விழுங்கிச் சிரிக்கிறது. சாவைப் பற்றிக் கவலைப் படாத சர்வாதிகாரி இருக்கவே முடியாது. இரணியனும் அப்படித்தான்.

'பெண்ணில், பேர் எழில் ஆணினில், அலியினில், உயிர் உள்ளதில், இல்லதில், மண்ணில், வானில்' மரணம் கூடாது என்று தவம் செய்து வரம் பெற்றான். 'யாவரும் கொல்ல ஆவி தீர்கிலன்; ஆற்றலும் தீர்கிலன்' என்றார் கம்பர். காலன் அவனுக்குக் காலத்தில் வாராது என்பதை 'நள்ளில் சாகிலன்; பகலிடைச் சாகிலன், நமனார் கொள்ளச் சாகிலன்; ஆர் இனி அவன் உயிர் கொள்வார்?' என்று நம்மையே கேட்கிறார் கம்பர். மரணம் வரக்கூடிய வழித் தடங்களை அழித்தெடுத்த இரணியன் மரணத்தின் மீதான தனது வெற்றியாக அதனைக் கருதிவிட்டான். என்ன அறியாமை இது? மரணம் வரும் வழிகளைச் சாத்தி விட்டு மரணத்தை வென்றதாகக் கொக்கரித்தான்.

பிறப்பில் சிக்கிக் கொண்டவன், இறப்பில் சிக்கக் கூடாது என்று எச்சரிக்கையாக இத்தனை வரம் பெற்றான். ஆனால் தான் பிறப்பிக்கும் மகனே, தனக்கு இறப்பைப் பிறப்பிப்பான் என்பதை உணரவில்லை. இறப்பை வெல்ல நினைத்த மூடன் எதற்காக ஒரு மகனைப் பிறப்பிக்க வேண்டும்? மாயை அவன் மனத்தில் புகுந்தது. அவன் மரணத்தை மகனாக்கி அவன் மடியிலேயே தவழ விட்டது.

பிரகலாதன் பிறப்பைப் பாடிய கம்பர் 'ஆயவன் தனக்கு அருமகன், அறிஞரின் அறிஞன் தூயவர் என்பவர் யாரினும் மறையினும் தூயான்' என்றார். அறிவாளி என்றார். அடுத்து தூயவன் என்றார். பெருவாரியான அறிவாளிகள் தூய்மை யுள்ள வராக இருப்பதில்லை என்பது கம்பர் கருத்து போலும்! பிரகலாதன் தூய்மையை வியக்க 'தூயவர் எவரையும் விட தூய்மையாளன்' என்றாலும் கம்பருக்கு நிறைவில்லை. ஏன்? ஏன்? 'மறையினும் தூயான்' என்கிறார். மறைதான் மேலான தூயது. அது கூட இரணியன் பெயரைச் சிரசில் சூடி இழுக்காகிப் போனது. இவனோ இரணியன் பெயரைக் கூற மறுத்த தூயோன் என்பதால் மறையினும் தூயன் என்றார் கம்பர்.

அவனுக்கு ஓர் ஆசிரியர். பாடம் படிப்பிக்க வந்த வயிற்று ஜீவி! இரணியன் பெயர் கூறி வேதம் தொடங்க நாரணன் பெயர் கூறி நாடி நரம்பெல்லாம் தேன் பாய நின்றான் பிரகலாதன்.

"ஓம் நமோ நாராயணாய" என்று
உரைத்து உளம் உருகி
தான் அமைந்து இரு தடக்கையும்
தலைமிசைத் தாங்கி

பூநிறக் கண்கள் புனல் உக, மயிர்ப்புறம்
பொடிப்ப
ஞான நாயகன் இருந்தனன்...............''

என்கிறார் கம்பன். பிரகலாதனுக்கு 'நமோ நாராயணா' என்று யார் சொல்லிக் கொடுத்தது..? நாரதர் என்று கதை சொல்பவர் சொல்லுவர்.. நான் அப்படி நினைக்கவில்லை, தாயார் மார்பில் பால் இருக்கிறது என்று பிறந்த குழந்தைக்கு யார் சொல்லிக் கொடுக்கிறார்கள்? பூவில் தேன் இருக்கிறது என்று,வண்டுக்கு எது சொல்லித் தந்தது? பிறந்த கன்றுக் குட்டிக்கு எழுந்து நிற்க யார் பயிற்சி கொடுத்தார்கள்?

இவையாவும் உயிரின் இயற்கை... அதுபோல் பக்குவமான உயிர்க்கும் பரம்பொருள் தேட்டத்தைப் பாடம் நடத்த வேண்டிய அவசியம் இல்லை... அது கருதியே இத்தகைய பிரகலாதன் நிலையை 'ஞான நாயகன் இருந்தனன்' என்றார் கம்பர். அதாவது இயல்பாக அந்நிலையில் அவன் இருந்தான். அவன் முயன்று அந்நிலை அடைந்தான் என்று எழுதவில்லை... கவனிக்க...

இரணியன் பெயரைச் சொல்லும் படி குரு வேண்ட, நாரணன் பெயரைச் சொல்கிறான் பிரகலாதன். 'கெடுத்து ஒழிந்தனை என்னையும் உன்னையும் கெடுவாய்' என்று பயத்தில் பதறுகிறான் ஆசிரியன். 'என்னை உய்வித்தேன்; எந்தையை உய்வித்தேன். உன்னை உய்வித்தேன். உலகையும் உய்விப்பேன்' என்கிறது பிரகலாத வீரம்.

''ஏனடா 'நாராயணா' என்று சொன்னாய்?'' என்று கேட்கும் தைரியம் குருவுக்கு இல்லையாம். அப்படி கூட நாராயணா என்று சொல்ல அவர் விரும்பவில்லையாம். பாட்டைப் பாருங்கள் ''எந்தை! இப்பெயர் உரைத்து; எனைக் கெடுத்திடல்'' என்றான்.

''காடு பற்றியும், கன வரை பற்றியும், கலைத்தோல் மூடி (மான் தோல்) பற்றியும், முண்டித்தும் நீட்டித்தும் (தலையை மழித்தும் சடை வளர்த்தும்) முறையால் வீடு பெற்றவர்'' இலட்சியமே 'நமோ நாராயணா' என்பது தான். அப்படி இருக்க அதைத் தடுத்து, படிப்பதற்கு வேதத்தில் என்ன இருக்கிறது என்று மறுக்கிறான் பிரகலாதன்.

வழக்கு தந்தைக்குப் போனது. தந்தை முன்னர் பிஞ்சு மகன் வரவழைக்கப் பட்டான். நெஞ்சில் நிறைந்திருந்த வண்ணமும், கண்ணமும் தந்தையிடமிருந்து மகனுக்குச் சேர, இறுகத் தழுவினானாம் இரணியன். தந்தையின் மார்பில் இருந்த சுண்ணமும் வண்ணமும் பிரகலாதன் மார்பில் படிந்தன. ஆனால் பிரகலாதன் இதயத்திலிருந்த எண்ணமும் திண்ணமும் சிறிதும் குறையவில்லை.

பாசம் மிக்க தந்தை ஆசையோடு மகனை நோக்கி ''மகனே... குருவிடம் சொல்லக் கூடாத எதையோ சொன்னாயாமே... எங்கே அது என்ன என்று என்னிடம் சொல்'' என்று வேண்டுகிறான். இதை எழுதும்போது கம்பர் ஓர் அழகு செய்கிறார்.

'சொல்' என்று ஒரு முறை கூறவில்லையாம். ''இயம்புதி.. இயம்புதி'' என்று இருமுறை கூறினானாம் இரணியன். நாம் குழந்தைகளிடம் பேசும் போதும் ''எங்க... சொல்லு... சொல்லு...'' என்று தானே சொல்லுவோம். இரண்டுமுறை சொல்லுதல் பாசம் மிக்க எதிர்பார்ப்பைப் புரிய வைக்கும். பிரகலாதன் 'நமோ நாராயணா' என்றான். இரணியனைப் பார்த்து முதன் முதலாக மரணம் கண்ணைச் சிமிட்டியது! அடி வயிற்றில் பற்றிய ஆங்கார அக்கினி, இரணியன் விழி வழி கசிந்தது. ''மின் உயிர்க்கும் வேல் இரணியன் தழல் எழ விழித்தான்'' என்கிறார் கம்பர்.

என்றாலும் தந்தைக்குரிய பாசம் அவனுள் சுழன்றது. தவறு செய்யும் எந்தப் பிள்ளையின் தந்தையும் தன் பிள்ளை தவறு செய்தான் என்று உலகில் ஒப்புக் கொள்வதில்லை.... இவன் நல்லவனாகத்தான் இருந்தான்.. யாரோ இவனுக்கு இதைக் கற்றுக் கொடுத்து விட்டார்கள் என்றுதான் நினைப்பது வழக்கம். சர்வாதிகாரத் தகப்பனும் சராசரி அப்பனாக ''கற்றது யாரொடு? சொல்லுதி விரைந்து'' எனக் கனன்றான். மேலும் ''மைந்த நீ யாரிடை அறிந்தாய்'' என்று கேட்கிறான். அதன் பிறகு இரணியன் பேசுவது நாத்திகம் அன்று. வேதத்தின் ஒரு சார்பு விளக்கம். காட்டில் ரிஷிகள் பலகாலம் நிகழ்த்திய தர்க்கத்தின் பிழிவு.

அடிப்படையில் இராவணனும் இரணியனும் ஒரு தன்மையர் போல் தோன்றினாலும் அடிப்படையில் ஒன்றல்லர்.. அகங்காரம்... ஆணவம்... சர்வாதிகாரம் என்றெல்லாம் ஒரு முத்திரையின் கீழே வர்ணிக்கப்பட்டாலும் இருவருக்குமிடையே வேறு பாடும் உண்டு.

இராவணன் சிவபூசை செய்பவன். வேதம் சுட்டும் முழுமுதற் காரணனாக ஒரு பரம்பொருள் உண்டு என்பதை ஒப்புக் கொண்டவன். ''இவனோ அவ் வேத முதல் காரணன்?'' என்று இராமனைப் பார்த்து அவனுக்கு ஐயம் பிறந்ததுண்டு. அவனுக்கு வேத முதல் காரணன் (கடவுள்) உண்டா? இல்லையா என்கிற சந்தேகம் ஒருபோதும் ஏற்பட்டதில்லை... அப்படி ஒரு காரணன் உண்டு என்று ஒப்புக்கொண்ட ஆத்திகன் இராவணன். ஆனால் அவனது ஐயம் எல்லாம் அந்த வேத முதல் காரணன் இராமனாக வந்திருப்பானா? இல்லையா? என்பது தான்.

இராமன் கடவுளா என்று தான் இராவணன் ஐயம் கொண்டானேயன்றி – கடவுள் உண்டா இல்லையா என்கிற ஐயம் இராவணனுக்கு ஒரு போதும் தோன்றியதில்லை. ஆனால் இரணியன் கதையே வேறு... அவன் வேத முதல் காரணன் என்றே ஒருவன் உண்டா? இல்லையா? என்ற விவாதத்தை முன்வைத்தவன். இறைவன்–முழுமுதற் பொருள் – படைத்து, காத்து, அழிக்கும் திறன் உடைய மூலப் பரம்பொருள் என்று எதுவும் இல்லை என்பதே இரணியன் கருத்தாம்... சிவன், அரி என்பவை எல்லாம் பதவிகள்... அவரவர் புண்ணியத்தால் எய்தியவை. இரணியன் தலையெடுத்தான், உலகம் அவனைத் துதிக்கத் தொடங்கிய பின், வேதம் தலையில் அவன் நாமம் சுமந்தபின், வேள்வியின் அவிசுகள் அவனுக்கு அளிக்கப்பட்டபின், அயன், அரி, அரன் யாவரும் தங்கள் பதவி இழந்து விட்டனர் என்பது இரணியன் கருத்து. இதனை நிர்வாகம் செய்ய ஒரு முழுமுதற் கடவுள் உண்டு. அதற்குக் கட்டுப் பட்டவரே நாம் என்கிற அடிப்படையையே தகர்க்கிறான் இரணியன்.

''செய்த மாதவம் உடைமையின் அரி
அயன் சிவன் என்று
எய்தினார் பதம் இழந்தனர்; யான் தவம்
இயற்றி
பொய் இல் நாயகம் பூண்டபின் இனி
அது புரிதல்
நொய்யது ஆகும் என்று ஆரும் என்
காவலின் நுழைந்தார்'

என்கிறார் கம்பர்.

அவரவர் தவமே பலம். தவத்தின் பலன் நல்கும் தனிப் பரம்பொருள் என்று எதுவும் இல்லை என்கிற நாத்திக வாதத்தை முன் வைக்கிறான் இரணியன். மகன் பதில் பேசுகிறான். மகனா பேசுகிறான்? கோடி கோடி காலமாக ரிஷிகளும் முனிவர்களும்

தேடித் தெளிந்த ஞானம் பேசியது! ``விதையின்றி எதுவும் முளைப்பதில்லை. அந்த வித்தே இறைவன்''— என்கிறான் மகன்.

"வித்து இன்றி விளைவது ஒன்று இல்லை; வேந்த நின் பித்து இன்றி உணர்தியேல் அளவைப் பெய்குவேன்"

பரம்பொருள் உண்மையை விவாதம் செய்து தர்க்க மூலம் நிரூபிக்க மகனுக்கு விருப்பம் இல்லை. அது அநுபவப் பொருள். அளவைப் பொருள் அல்லவாம்.

"அளவையான் அளப்ப அரிது; அறிவின் அப்புறத்து உள ஐயா" என்கிறான் மகன். தவமே பலம் என்கிற தந்தையின் வாதத்தை மகன் மறுக்கிறான்.

"கருமமும் கருமத்தின் பயனும் கண்ணிய
தருமுதல் தலைவனும் தானும் ஆனவன்"

என்று பரத்வத்தின் மேன்மையைப் பறை சாற்றினான் பிரகலாதன்.

வேடிக்கை பாருங்கள். மரணத்தைக் கண்டு அஞ்சி எப்படி எப்படி எல்லாம் சாகக் கூடாது என்று வரம் பெற்றானோ, அந்தத் தந்தை, எப்படி எப்படி எல்லாம் மகனைக் கொல்லலாம் என்று ஆணையிடுகிறான். மரணத்திலிருந்து தான் தப்ப விரும்பிய ஆணவம் மரணத்தை மகன் மீது திணித்தது! ஆனால் மரணம் மகனைத் தீண்டவே இல்லை... இது என்ன விந்தை! இங்கே தான் பேருண்மை விளக்கப்பட்டது. பிறப்பும் இறப்பும் பரம்பொருளின் தீர்மானம். நாம் வெறும் கைப்பாவை அவ்வளவே...! பிரகலாதன் பேசுகிறான்.

"நான் சாக வேண்டுமென நீ எவ்வளவு விரும்பினாலும் ஹரி தீர்மானிக்காதவரை எனக்கு மரணமில்லை. நான் வாழ வேண்டியதில்லை என்று ஹரி தீர்மானித்து விட்டால் அதன் பிறகு நீ எவ்வளவு விரும்பினாலும் எனக்கு வாழ்வு இல்லை" என்கிற பொருளில் "என்மன் உயிர்தான் எந்தாய்! கொள எண்ணினையேல் இதுதான் உம்தாரியது அன்று" என்றும் — "என் உயிர் நின்னால் கோறற்கு எளியது ஒன்று அன்று" என்றும் பிரகலாதன் பேசுகிறான்.

"நீ சொன்ன ஹரி என்பவன் எங்கும் இல்லை" என்றது நாத்திக அசுரம். "ஹரி என்பவன் எங்கும் 'இல்லை என்றாயே அந்தச் சொல்லிலும் உளன்" என்றது ஆத்திக அன்பு. "அவன் எங்குளன்?" என்றது நாத்திகம் "அவன் எங்கும் உளன்" என்றது ஆத்திகம். "இந்தத் தூணில் உளனோ?" என்று தூணை உதைத்தது நாத்திகம். தூணில் இருந்து புறப்பட்டது நரசிம்மமா? கடவுளா? இரணியனின் மரணமா? தோற்றப் பொருட்கெல்லாம் ஓர் அழிவு உண்டு என்கிற இயற்கையின் தீர்மானமா? அது இயற்கையின் கூட்டணி அரசா? பிரகலாதனின் நம்பிக்கையா? எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம்.

மரணத்தின் சகல கதவுகளையும் அடைத்து விட்டதாக நினைத்தான் இரணியன். மரணமோ அவன் வீட்டுக் குள்ளேயே குடியிருந்தது. பிறப்பிலே தொடங்கி அவன் உடன் வாழ்ந்த மரணம், இப்போது அவனுள் இருந்தே சிலிர்த்து நிற்கிறது! கம்பர் பாடுகிறார்

'இசை திறந்து உயர்ந்த கையால் எற்றினன்; எற்றலோடும்
திசை திறந்து அண்டம் கீறச் சிரித்தது செங்கட் சீயம்"

சிங்கம் — செங்கட் சிங்கம் — சிரித்தது... அடாடா என்ன அழகான வார்த்தை வைரங்கள்... பாருங்கள். உலகின் அறியாமையை நோக்கி அறிவு சிரிக்கிறது. எல்லை உள்ள மனிதனின் சிறுமையை நோக்கி எல்லையற்ற தெய்வம் சிரிக்கிறது!

நிலைத்த வஸ்து நிலையாமையை நோக்கி எள்ளி நகையாடுகிறது!

ஆழ்வார்களும் பக்தர்களும் ஆராதித்த நரசிங்கப் பெருமாளைக் கவிதைகளால் அலங்கரித்தார் கம்பர்.

"பிளந்தது தூணும்; ஆங்கே பிறந்தது சீயம்; பின்னை
வளர்ந்தது திசைகள் எட்டும்; பகிரண்டம் முதல மற்றும்
அளந்தது; அப்புறத்துச் செய்கை யார் அறிந்து அறைய கிற்பார்?
கிளர்ந்தது ககன முட்டை கிழிந்தது கீழும் மேலும்"

என்றார்.


தந்தை, தாய் இல்லாத முதல் நரசிங்கக் குட்டி, தானே தோன்றி வித்தின்றி முளைத்த முழுமுதல் தான் என்று நிரூபித்து, சிற்றெல்லைக்குட்பட்ட இரணிய ஆணவத்தை நகத்தால் கீறி எறிந்து நாட்டியம் ஆடியது! கம்பரின் கவிதையும் இங்கு நாட்டியம் நடத்துகிறது!

சிற்றறிவு, சில்வாழ்நாள், கொண்ட சிறு மனுசர் யாவரையும் நோக்கி — அழிவற்ற — தானே முளைத்த — செங்கட்சீயம் அன்றும் சரி இன்றும் சரி.. என்றும் சரி — சிரிக்கிறது — கம்பன் தயவால் அமர கவிதையால் கடவுளாக — சிரித்தது செங்கட் சீயம்.

❖❖❖

பால் போல் ஒளிபரவுக!

கன்னித் தமிழிலே கற்பனை மிகுதி
எண்ணில் அடங்கா இலக்கிய வளங்கள்
இலக்கணச் செறிவுகள் எத்துணை அறிவுகள்!
பலாக்கனிச் சுளையெனப் பற்பல கதைகள்
படித்துச் சுவைக்கப் பலபிறவி வேண்டும்
வடித்துக் கொடுப்போர் வாழ்ந்திட வேண்டும்
பால் வாங்கிப் பிள்ளையை வளர்ப்பது போலவே
நூல்வாங்கி மக்களின் நுண்ணறிவு வளர்ப்போம்!
வெட்டிச் செலவுகள் வீண்ஆடம் பரங்களை
எட்டித் துரத்துவோம்! ஏடுகள் வாங்குவோம்!
சொத்துச் சேர்ப்பது சோறுதுணிக் காகவே!
புத்தியைச் சேர்ப்பது புதுவாழ்வு வாழவே!
புத்தகம் வாங்கினால் புத்தியை வாங்கலாம்!
குத்து வெட்டுகள் கொள்ளைகள் போன்றவை
அறிவில் லாமையின் அறிகுறி, ஆதலின்
அறிவில் ஆமையாய் ஆகாம லிருக்கவே
நூல்பல வாங்குவோம்! நூல்பல கற்போம்!
பால்போல் ஒளியும் பரவுக வாழ்விலே!



வைஜெயந்திராஜன்

பகீரதனும் பாகீரதியும்

சி.வீ. சேஷாத்ரி



சித்திரவிளக்கம் – 4

கங்கையை என்னும் போதெல்லாம் 'பகீரதனை' எண்ணாதிருக்க முடியாது. ஆகாய கங்கையைப் பூமிக் கங்கையாகக் கொணர்ந்த அந்த அரசகுலத் தோன்றலின் பெருமுயற்சியே இன்று நம் பாவத்தைப் போக்கும் வடிகாலாக ஓடிக் கொண்டிருக்கிறதென்றால் மிகையன்று. இன்றும் ஒருவன் பெருமுயற்சி செய்து ஒரு செயலைச் சாதித்தால் அதைப் 'பகீரத முயற்சி' என்றே கூறுகிறோம். அப்படிப்பட்ட பெருமுயற்சியால் பூமிக்குக் கங்கையைக் கொண்டு வந்த பகீரதன் பற்றி இராமாயணம் விரிவாகப் பேசும்.

ஸ்ரீ இராமபிரானின் சிறப்பையும் அவனது குலச்சிறப்பையும் ஜனகருக்கு எடுத்துக் கூறும் விசுவாமித்திர முனிவரின் வாக்கில், பகீரதனும் சிறப்பிக்கப்படுகிறான். கங்கையைப் பூமிக்குக் கொணர அவன் மேற்கொண்ட தவமே 'பகீரதன் தவம்'. பலபேர் தவம் புரிந்திருந்தாலும் இதிகாசத்தில் இருவர் தவமே சிறப்புடையதாகக் கூறப்படுகிறது. ஒன்று பகீரதன் தவம்; மற்றொன்று அர்ச்சுனன் தவம்.

சூரிய குலத்தில் தசரதனின் முன்னோராக விளங்கிய பலருள் 'சகரன்' ஒருவன்.

சகரன் அஸ்வமேதயாகம் செய்ய முற்படுகிறான். யாகத்தால் தன் பதவி போகுமே என்றஞ்சிய தேவேந்திரன் யாகக் குதிரையை மறைத்து வைத்து விடுகிறான்.

சகரபுத்திரர் ஆயிரக்கணக்கானோர் தேடிச் சென்றனர். பாதாளத்தில் கபிலமுனிவர் என்பவரின் ஆச்ரமத்தருகே குதிரையைக் கண்டு, அவரைப் பலவாறு பழித்து, தாக்க முயன்றார். கபிலமுனி கோபித்து நோக்க, சிவபிரான் நெற்றிக் கண்களிலிருந்து வரும் நெருப்புப் போன்ற வெப்பத்தால் அனைவரும் சாம்பலாய்ப் போயினர்.

அவர்கள் வாராமையால் சகரன் தன் பேரன் அம்சுமானை அனுப்பினான். அவன் தேடித்தேடிப் பாதாளத்தில் குதிரையையும் அரசகுமாரர்களின் சாம்பற் குவியலையும் கண்டான். செய்வதறியாது குதிரையைக் கொண்டு வந்தான். கபிலமுனிவன் அம்சுமானின் பண்பு கண்டு குதிரையைத் திருப்பியது. அம்சுமானுக்கு வெகுமதியாயிற்று.

புத்திரர் மடிந்தது கேட்டு வருந்தினாலும், யாகத்தை முடிக்க வேண்டிய கடமையால் சகரன் யாகத்தைச் செய்து முடித்தான்.

பின் வந்த பலரும் 'தன் முன்னோர், நற்கதி பெறவில்லையே' என்ற வருத்தத்துடனே முடிந்தனர். திலீபன் மகன் பரதன் எப்படியும் தம் முன்னோர் நற்கதி பெற வழி தேடினான்.

தனக்குப் புத்திரப் பேறு வேண்டியும், தம்முன்னோர் நற்கதி பெற விரும்பியும் பிரமனைக் குறித்து நெடுந்தவம் புரிந்தான். (இதையே நாம் 'பகீரதப் பிரயத்தனம்' என்கிறோம்.)

பிரமன் தோன்றி மகப்பேறுக்கு அருள் புரிந்தான். 'உன் முன்னோர் கதி பெறக் கங்கையை வானிலிருந்து கொணரத் தவம் செய். அவள் பூமி நோக்கிவர, பூமி தாங்காது. அதை ஏற்கச் சிவபிராளைக் குறித்துத் தவம் செய்' எனக் கூறினார். தொடர்ந்து பல ஆண்டுகள் தவம் செய்து சிவதரிசனம் பெற்றான் பகீரதன்.

வானிலிருந்து பெருவேகத்துடன் வந்த கங்கையைத் தன் சடாமகுடத்தில் தாங்கிக் கொள்ள, கங்கை அவரையும் சேர்த்து அடித்துக் கொண்டு பாதாளத்தில் புக முனைந்தாள். சிவபிரான் அவள் எண்ணமறிந்து சடையிலேயே அவ்வளவு நீரையும் மறைத்தார்.

அதன் பின்னரும் பகீரதன் தவம் தொடர்ந்தது. சிவபெருமான் அருள் கொண்டு சடையிலிருந்து பிந்துசரஸில் தன் கையை விட்டார். அது ஏழு பிரிவாகி, கிழக்கு நோக்கி மூன்றும், மேற்கே மூன்றுமாகச் சென்றது. பகீரதன் வேண்ட ஒரு கிளை அவன் பின் சென்றது.

வழியில் யாகம் செய்து கொண்டிருந்த ஜன்னு முனிவரின் யாக குண்டத்தை அழிக்க, அவர் சினந்து அந்நீரைச் சுருக்கி ஆசமனமாகப் பருகிவிட்டார். பகீரதனுக்கு மீண்டும் இடையூறு. ஆயினும், 'நல்லவர்களுக்கு உயர்ந்தோர் உதவுவார்' என்ற தருமப்படி, பகீரதனுடன் வந்த முனிவரும், தேவரும் வேண்ட, ஜன்னு முனிவர் தம் காது வழியே நீரைப் பெருக விட்டார். ஆதலால் 'ஜன்னுவின் புதல்வி' என்ற பெயரில் கங்கை 'ஜானவி' ஆயிற்று.


பகீரதன் கங்கையுடன் சென்று அந்நீரைத் தம் முன்னோரின் சாம்பல் மீது பரவவிட்டு அவர்களைப் புதியதொரு கதி பெறச் செய்தான்.

சகரபுத்திரர் பாதாளம் வரை வெட்டியும், தோண்டியும் உண்டாக்கிய பெரும் பள்ளத்தில் சேர்ந்த நீரே பெருங்கடல். ஆதலால் பெருங்கடல் 'சாகரம்' எனப்படுகிறது.

இந்தப் பகீரதனின் பெருமுயற்சியைக் கம்பர்,


தூங்ன்ற சுடர் வேலாய்! அனந்தனுக்கும் சொலற்கு அரிதேல்,
யான் இன்று புகழ்ந்துரைத்தற்கு எளிதோ? ஏடு அவிழ் கொன்றைப்
பூ நின்ற மவுலியையும் புக்கு அளைந்த புனற்கங்கை
வான் நின்று கொணர்ந்தானும் இவர் குலத்து ஓர் மன்னவன் காண்!
சகரர் தம் பொருட்டு அருந்தவம் பெரும் பகல் தள்ளி,
பகிரதன் கொணர்ந்திடுதலால் 'பகிரதி' ஆகி
மகிதலத்திடைச் சன்னுவின் செவி வழிவரவால் நிகர் இல்
சானவி எனப் பெயர் படைத்தது இந்நீத்தம்

என்ற பாடல்களின் மூலம் விளக்குகிறார்.




நெஞ்சினால் பிழைப்பு இலாள்...

அமுதசுரபி தீபாவளி மலர் '96



‘ஈரடியால் அளந்தாய்’ மூவுலகும்


'சிரித்தது செங்கட் சீயம்'
அமுதசுரபி தீபாவளி மலர் '96



‘பகீரதன் கொணர்ந்த பாகீரதி’

பாசம்



மன்னார்குடி விசுவநாதன்

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு கோபி எங்கள் வீட்டுக்குள் வந்து நுழைந்தபோது —

வழக்கம்போல் ஈஸிசேரில் சாய்ந்தவாறு மோட்டு வளையைப் பார்த்துக் கொண்டே, கண்களில் துளிர்த்து நின்ற கண்ணீரைத் துடைக்கவும் பிரக்ஞையின்றிக் கிடந்தேன் நான்.

"என்னங்க... இத பாருங்களேன்... யார் வந்திருக்காங்கன்னு பாருங்களேன்..." என்றவாறே என் தோள்களைத் தட்டி எழுப்பினாள் என் மனைவி நாயகி.

'சட்'டென்று மேல் துண்டால் கண்களைத் துடைத்துவிட்டுக் கொண்டே போலியாகச் சிரிக்க முயன்றவனாக நிமிர்ந்து பார்த்தேன்.

கோபி...

தொடக்க நாளில் தொடக்கப் பள்ளியில் ஒன்றாகப் படிக்கத் தொடங்கி... இருவரும் உயர்நிலைப் பள்ளி வகுப்பு படித்துத் தேறிய பிறகு...

ஒருநாள்...

மாலை வேளையில் வழக்கம் போல ஆற்று மணலில் உட்கார்ந்து பொழுதுபோக்காய்ப் பேசிக்கொண்டிருந்தபோது கோபி சொன்ன வார்த்தைகள் இன்றும் என் நெஞ்சில் பசுமையாக நிழலாடுகின்றனவே!

"வாசு! நான்... நான்... நாளைக்கு 'பாய்ஸ் நேவி'யில் சேருவதற்காகப் புறப்படுகிறேன்..." என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டவாறு விடைபெற்றுச் சென்றவன்... அதன்பின், ஊருக்கு வரும் போதெல்லாம் தவறாமல் என்னை வந்து பார்த்துச் சென்று கொண்டு தான் இருக்கிறான்.

சென்றமுறை வந்து என்னைப் பார்த்துச் சென்றவன்,

இப்போது —

ஐந்து ஆண்டுகள் கழித்து வந்திருக்கிறான்.

ஆனால்,

இந்த ஐந்தாண்டுகால இடைவெளிக்குள் என் வாழ்க்கையில் தான் எத்தகைய இடி விழுந்து என்னை எப்படியெல்லாம் சீர் குலைத்து விட்டிருந்தது!

எப்படி... எப்படிச் சொல்வேன் அந்தப் பேரிழப்பை?

வாழ்க்கைப் படகில் நிதானமாகப் பயணம் செய்து கொண்டிருந்த என் குடும்பத்தில் திடீரென்று தோன்றி வீசிய சூறாவளிக் காற்று, எப்படியெல்லாம் எங்களை நிலை குலைய வைத்து விட்டது!

எப்படிச் சொல்வேன்?

என்னைக் கிட்டத் தட்ட சித்தப் பிரமை பிடித்தவனாக்கி மூன்றாண்டுக் காலமாக ஈஸி சேரே கதியென்று கிடத்தியிருக்கிற அந்தக் கொடுமையான சம்பவத்தை எப்படிச் சொல்வது...?

"வாசு..."

"......................"

"வாசு..."

உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு எழுந்து நிமிர்ந்து எதிரில் நின்றிருந்த கோபியைப் பார்த்தேன்.

ஒரு கணம்... ஒரே கணம்தான்... "ஐயோ... ஐயையோ..."

ஓலமிட்டு அழுதேன். இல்லை.. கதறினேன்.

அவசரமாக என்னை நெருங்கித் தன் நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொண்டான் கோபி.

அவன் உடம்பும் நடுங்கியது. அவனுக்கு வயது நாற்பத்தைந்து. எனக்கும் அதே வயதுதான்...

"வாசு... நடந்தது முழுவதையும் இப்பத்தான் ஊருக்குள்ளே வந்து நுழைஞ்ச பிறகுதான் கேள்விப் பட்டேன். எனக்கு எழுதின தபாலில்கூட... அந்தக் கொடுமையைப் பத்தி நீ எழுதலையே.. பரவாயில்லை. உன்னால எழுத முடியாது. இப்ப... நான் உனக்கு எந்த விதத்திலேயும் ஆறுதல் சொல்ல வரலை. சொல்லவும் மாட்டேன். நீ அழு. நீ கிழிச்ச கோட்டைத் தாண்டாத, உன் அருந்தவப் புதல்வன் குணாவை நீ இழந்துட்டே. அவன் உன் பேர்ல வச்சிருந்த அளவு கடந்த பாசம்... நீ அவன் பேர்ல வச்சிருந்த அளவு கடந்த பாசம்... ஓ... அதையெல்லாம் வர்ணிக்க என்னால முடியாது... முடியவே முடியாது. அழு. நல்லா அழு. அழுது "அழுதுதான் உன் துயரத்தை நீ குறைச்சுக்கணும்... வேற வழியே இல்லை...'

கோபியின் பேச்சு ஏனோ எனக்குச் சற்று ஆறுதலாகவே இருந்தது.

எத்தனையோ நண்பர்கள்... உறவினர்கள்.. தெரிந்தவர்கள்.. தெரியாதவர்கள் என்று பலரும் வந்து பல வகையிலும் பல நாளும் ஆறுதல் கூறிச் சென்றார்கள். அப்பொழுதெல்லாம் ஏற்படாத ஆறுதல் எனக்கு இப்பொழுது ஏற்பட்டது என்றால்... அதுதான் எனக்கும் கோபிக்கும் இடையிலுள்ள ஆத்மார்த்தமான, ஆழமான நட்பு.

என் மனைவி நாயகி மௌனமாகக் கொண்டு வந்து கொடுத்த காப்பியை இருவருமாக வாங்கிக் குடித்துவிட்டு, தொடர்ந்து என்ன பேசுவது என்று புரியாமல் எழுந்து வெளியே வந்து கால் போன போக்கில் நடந்தோம்.

தெருவில் இருவரும் ஒன்றும் பேசிக்கொள்ளாமல் நடந்து சென்றதை வீட்டினுள் இருந்த பெண்கள் பார்த்துத் தங்களுக்குள் பூடகமாகச் சிரித்துக் கொண்டார்கள்.

ஆற்று மணலில் உட்கார்ந்து அந்த அந்திப் பொழுதில் பேசுவது, அதுவும் ஆத்மார்த்தமான தொடக்க நாளைய நண்பன் கோபியுடன் பேசுவது எத்தனை சுகமான ஆறுதலான அனுபவம்!

"கோபி... நானும் அன்றைக்கே உன் கூடப் புறப்பட்டு வந்து பாய்ஸ் நேவியிலே சேர்ந்திருக்கணும்" என்றேன் நான்.

என்னைக் கூர்ந்து நோக்கினான் கோபி. நான் என் முகத்தைத் தாழ்த்திக் குனிந்து கொண்டேன். பிறகு ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தான், கோபி.

வெண்மை நிற மடையான் பறவைகள் வானவில் போல வடிவம் கொண்டு சாம் கோத்தாற் போல அழகாகப் பறந்து சென்று கொண்டிருந்தன.

"வாசு... ஏன் அப்படிச் சொல்றே?"

"கோபி... அப்படி... அப்படி... உன் கூடவே வந்திருந்தா... உன்னை மாதிரி... கல்யாணமே செஞ்சுக்காம இருந்திருப்பேன். அப்படி இருந்திருந்தால்... இப்ப... இப்ப... உயிரையே வச்சு வளர்த்த புள்ளையைப் பறி கொடுத்துட்டுப் புத்திர சோகத்துக்கு ஆளாகித் துடியாய்த் துடிச்சுகிட்டு உட்கார்ந்திருக்க மாட்டேனே"

கண்ணீர் வடித்தேன் நான்.

என் கைகளைப் பற்றிக் கொண்டான் கோபி. என் கைகள் நடுங்கின. உதடுகள் துடித்தன.

"வாசு! அமைதியாக இரு. உனக்கு இன்னொரு மகன் இருக்கிறான். அவனைப் பார்த்து உன்னோட சோகத்தை மாத்திக்க. அதுதான் நல்லது. வேதனை தாங்க முடியாத நேரத்திலே அழு. உன்னை அழவேண்டாம்னு சொல்லலை. ஆனா... உன்னைக் கடைசி வரைக்கும் அழுதுகிட்டே இருன்னு நான் சொல்ல மாட்டேன்".

இருவரும் மெல்ல எழுந்து நடந்தோம்.

வேட்டியில் ஒட்டியிருந்த மணலைத் தட்டி விட முடிந்தது. அதைப்போல மனத்துள் மண்டிக் கிடக்கும் எண்ணங்களையும் தட்டி விட முடிந்தால்... எவ்வளவு நன்றாக இருக்கும்!

காலை மணி பத்து.

கல்லூரிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான் ரவி.

டிபன் பாக்ஸில் சாப்பாடு எடுத்துக் கொண்டு வந்து மகனின் கையில் கொடுத்தாள் நாயகி.

"என்னம்மா இது... தயிர் சாதம் டிபன் பாக்ஸ்க்கு வெளியே சிந்தியிருக்கு... நல்லா அமுக்கி மூடக் கூடாதோ... ஒரே அசிங்கமால இருக்கே..." என்று சத்தம் போட்டான் ரவி.

ஈஸிசேரில் கண்களை மூடிய வாறு கிடந்த எனக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

இதே மாதிரி நாயகி செய்திருந்தால் இறந்து போய்விட்ட மகன் குணா என்ன செய்திருப்பான்?

சிரித்துக் கொண்டே டிபன் பாக்ஸைக் கீழே வைத்துப் பழைய துணியால் அழுத்தித் துடைத்து விட்டு, அம்மாவைப் பார்த்து, 'நான் வரட்டுமாம்மா?' என்றும், என்னைப் பார்த்து, 'நான் வரட்டு மாப்பா...' என்றல்லவோ சொல்லி விட்டுப் போயிருப்பான்?

இவன்...?

"டேய்... ரவி... ஏன்டா இப்படி அநாகரிகமா நடந்துக்குறே? உன் அண்ணன் இருந்தால், இந்நேரம் இப்படியா நடந்துகிட்டிருப்பான்? கொஞ்சம் கூடப் பொறுமையே இல்லாமே கத்துறியே? ஆண்டவன் உனக்கு நல்ல குணத்தைக் கொடுக்க மறந்துட்டானா?"

என் பேச்சு அவனுக்குக் கோபத்தை உண்டாக்கியிருக்க வேண்டும்.

யாரிடமும் . எதுவும் பேசாமல் விருட்டென்று டிபன் பாக்ஸை எடுத்து சைக்கிள் கேரியரில் வைத்துக் கொண்டு புறப்பட்டுப் போய் விட்டான்.

மனைவி நாயகி, "ஏங்க... இப்படி சதா சர்வகாலமும் அவன்கிட்ட எரிஞ்சு எரிஞ்சு விழுறீங்க?" என்று கேட்டாள்.

அவளை நிமிர்ந்து பார்த்தேன்

இருபத்திரண்டு வருஷத் தாம்பத்தியத்துக்குப் பிறகும் அவளை என்னால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லையே.

மௌனமாகி விட்டேன்.

அரசமரத்துப் பிள்ளையார் கோயில் பக்கமாக இருந்த கனமான வேர்ப்பகுதியில் போய் உட்கார்ந்து கொண்டோம், நானும் கோபியும்.

"வாசு... எனக்கு இன்றோடு லீவு முடியுது நாளைக் காலையில் ரயிலில் புறப்பட்டு மெட்ராஸ் போய், அங்கேயிருந்து 'ப்ளைட்'டில் சிங்கப்பூர் போகணும்" என்றான் கோபி.

பாய்ஸ் நேவியில் பத்தாண்டுக் காலம் பணி முடித்த பிறகு, சிங்கப் பூர் ஷிப்பிங் கார்ப்பரேஷனில் போய் வேலையில் சேர்ந்து விட்டான் கோபி.

எலக்ட்ரீஷியன் வேலை.

உலகம் முழுவதும் கப்பலிலேயே சுற்றும் அருமையான வாய்ப்பு அவனுக்கு.

என்ன காரணமோ, திருமணத்தைப் பற்றி நினைத்துப் பார்க்கவே இல்லை அவன்.

சொல்லிச் சொல்லி அலுத்துப் போன நிலையில், சில ஆண்டுகளுக்கு முன்பு அவனுடைய ஒரே பற்றுக்கோடாக இருந்த அவன் தாய் பொன்னம்மாவும் இறந்து போய் விட்டாள்.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊருக்கு வரும் வழக்கத்தை மட்டும் அவன் நிறுத்தவில்லை. சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் பல்வேறு அநாதை நிறுவனங்களுக்குக் கொடுத்து விடுகிறான்.

அவனுடைய லட்சியம்தான் என்ன என்பதையெல்லாம் என் னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

"நான் ஒன்னு சொல்றேன். நீ உன் பையன் ரவியைக் கோவிச்சுக் காதே இரண்டு மூணு தடவை பார்த்துட்டேன். நீ அவன்கிட்டே நடந்துக்கற முறை சரியில்லை. அவனும் உன்கிட்டே ஒரு மாதிரியாகத்தான் நடந்துக்குறான். அதையும் கவனிச்சேன். ஆனா... ஒரு விஷயத்தை நீ மறந்துடக் கூடாது. உன் காலத்துக்குப் பிறகு உன் மகன் ரவிக்கு உற்ற துணையாக, ஆதரவாக இருக்கக் கூடியவன் குணா. உன் மூத்த மகன். அவன் இறந்து போனது உண்மையிலேயே உன்னை விட உன் இளைய மகனுக்குத்தான்

பேரிழப்பு. அதையும் நீ கொஞ்சம் நெனச்சுப் பார்க்கணும்"


கோபி சொன்னதைக் கேட்டதும் பொறி தட்டினாற்போல இருந்தது எனக்கு.

தொடர்ந்து கோபியே பேசினான்.

"வாசு... இனிமேலாவது அவன் கிட்டே நீ அன்பாக நடந்துக்கணும்... அடிக்கடி உன் பெரிய மகனைப் புகழ்ந்து பேசி, இவனை... ரவியை மட்டம் தட்டிப் பேசுறதை விட்டுடு. மறந்துடு... இனிமே இவன்தான்... இவன் மட்டும்தான் உன் மகன். உனக்குக் கொள்ளி வைக்கப் போகிறவனும் இவன்தான். மறந்துடாதே..."

மனத்தின் உள்ளே ஆழமாகப் பாய்ந்தன கோபியின் வார்த்தைகள்.

என்னால் மறுத்துப் பேசவே முடியவில்லை.



மறுநாள்.

பொழுது விடிந்ததும், நாயகியை அழைத்து, "நம்ம ரவியை எங்கே காணோம்?" என்று கேட்டேன்.

என்னை அதிசயமாகப் பார்த்தாள் நாயகி.

"ஏன்... ஏன் அப்படிப் பார்க்குறே?" என்று தவிப்போடு கேட்டேன்.

"அவனுக்கு காலேஜ் முடிஞ்சிட்டுது. நீங்களும் எப்ப பார்த்தாலும் அவனைக் கரிச்சுக் கொட்டிக்கிட்டே இருக்கீங்க. அதனாலே மெட்ராசிலே இருக்கிற எங்க அண்ணன் வீட்டுக்கு நான்தான் அவனை அனுப்பி வச்சேன். நேத்து ராத்திரியே அவன் புறப்பட்டுப் போயிட்டான்".

'சுருக்'கென்றது.

நெஞ்சுக் குழிக்குள் ஏதோ ஒன்று வந்து அடைத்துக் கொண்டதைப் போன்ற துடிப்பு.

'என்கிட்டே ஒரு வார்த்தை கூட சொல்லாமே போய்ட்டானே...' நினைக்கும்போதே என் உடம்பு நடுங்கியது.

"மெட்ராசுக்குப் போயி... அங்கேயே ஏதாச்சும் வேலை தேடிக்கிறேன்னு சொன்னான். உங்களுக்குக் கூட ஏதோ கடிதம் எழுதிக் கொடுத்துட்டுப் போனான்..." என்று சொல்லிக் கொண்டே, ஒட்டப்பட்ட கடித உறை ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தாள் நாயகி.

இருபது வயதுப் பையன்தானே...

நேராகப் பேச விரும்பாமல் கடிதம் மூலமாகப் பேசுகிறானா?

கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்.

'அன்புள்ள அப்பா அவர்களுக்குத் தங்கள் இளைய மகன் ரவி அன்பு வணக்கம்.

நீங்கள் பெரிய இலக்கியவாதி. பேச்சாளர். சிந்தனையாளர். உங்களுக்குத் தெரியாத விஷயம் ஒன்றுமில்லை.

இருந்தாலும்...

என் மனத்தில் தோன்றியதை எழுதுகிறேன். சரி என்றால் எடுத்துக் கொள்ளுங்கள். தவறு என்றால் என்னை மன்னித்து விடுங்கள்.

பொதுவாக எதுவுமே எல்லை மீறாமல் இருப்பதுதான் நல்லது என்று பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். நீங்கள் அண்ணன் குணா மீது அளவு கடந்த பாசம் வைத்திருந்தீர்கள். அவனும் உங்கள் மேல் அளவு கடந்த பாசம் வைத்திருந்தான். அதுவே கடவுளுக்குப் பொறுக்கவில்லை போலும்! தன்னிடமே அண்ணனை அழைத்துக் கொண்டு விட்டார். அந்தப் பிரிவு தாங்காமல் தாங்க முடியாமல் நீங்கள் துடியாய்த் துடிக்கிறீர்கள்.

நீங்கள் துடிப்பதை... அழுவதைப் பார்த்து என் மனம் எப்படியெல்லாம் புழுங்கித் துடிக்கிறது என்பது எனக்கு மட்டும்தான் தெரியும். நான் வேண்டுமென்றே தான் உங்கள் மேல் பாசம் இல்லாதவன்போல் நடந்து கொள்கிறேன். வேண்டுமென்றேதான் நீங்கள் என்னை வெறுக்கும் விதமாக நடந்து கொள்கிறேன்.

ஆனால்... ஆனால்... உங்களைதான் என் நெஞ்சில் வைத்துப் பூசிக்கிறேன். ஆனாலும் அதிகமான பாசம் ஆபத்தாகி விடுமோ என்று பயப்படுகிறேன். எனவே... தற்காலிகமாகத் தங்களை விட்டுப் பிரிந்து செல்கிறேன். சீக்கிரமே ஒரு நல்ல வேலையைத் தேடிக்கொண்டு திரும்பி வருவேன்.

உங்கள் மகன்
ரவி

கடிதத்தைப் படித்துவிட்டு நிமிர்ந்தேன்.

என்னையுமறியாமல் என் கண்களிலிருந்து பெருகி வழிந்த கண்ணீர் என் கையிலிருந்த மகன் ரவியின் கடிதத்தை நனைத்தது.

மத்தாப்புத் தீபாவளி

முல்லை மலர்கின்ற முன்னந்தி மாலையில்
முகிழ்ந்திடும் தென்றலென - மனம்
எல்லை இல்லாதொரு இன்பத் திளைப்பென
எழுந்திடும் மன்றினிலே!

கல்லை உடைத்தவன் கழனி உழுதவன்
கண்களில் நம்பிக்கைகள் - புது
நெல்லின் மணியென நெஞ்சில் இனித்திடும்
நிகழ்வின் சிந்தனைகள்.

உள்ள அரங்கினில் ஒளி நடம் செய்திடும்
உவகையின் தீபாவளி - மழை
வெள்ள நிலமென வெற்றிக் களமென
வெடித்திடும் தீபாவளி!

கசந்த மனங்களை, கனிந்த மொழிகளால்
காத்திடும் தீபாவளி - புது
வசந்த மலரென வாழ்வின் நலங்களை
வளர்த்திடும் தீபாவளி!

பொன்னின் ஒளியென பூத்திடும் மத்தாப்பு
பொறிகளின் தீபாவளி - மனம்
இன்னும் இன்னுமென இன்னிசை பாடிடும்
இனிய நல் தீபாவளி!

செ.சு. மலரடியான்

சொகுசாக வாழ்ந்திடலாம்!

பெண் : வீட்டை வெளிப்புறத்தை ஒ.. மச்சான்!
வீதிமை தானத்தையும் கூடத்தான்
காட்டை, கழனியொடு குளமுந்தான்
கலகலன்னு ஓடுகிற ஆத்தைத் தான்
துப்புரவாச் சுத்தமாக்கி வைக்கணும்
துடிப்புள்ள இளவட்டங்க சேரணும்
எப்பவுமே ஊரைஅழகு படுத்தணும்
எல்லாருக்கும் இதை விளக்கிச் சொல்லணும்

ஆண் : கருப்பட்டிச் சொல்லுக்காரி ஏ.. புள்ளே!
கலகலப்பா என்னபேச்சு பேசிட்டே?
உருப்படியா நல்லதை நீ சொல்லிட்டே
ஒன்னு சேர்ந்து இப்பவே நாம் செய்யணும்
சுத்துப்புறம் சுத்தமாக்கிக் காத்திட்டா
தொல்லையின்றி நோயுமின்றி வாழலாம்
சுத்தக்காத்து நல்லதண்ணி கெடச்சிடும்
சொகுசாக வழ்ந்திடலாம் வாபுள்ளே!

கொ.மா. கோதண்டம்



வெளிச்சம் வேண்டும்

நிலா வெளிச்சம்...
அது
எனக்குப் போதுமானதன்று!
என் வாழ்க்கையிலும்
சிறிதளவாவது வெளிச்சம் வேண்டும்!
மானசீகமாய், கற்பனையாய் அல்லாமல்,
எதார்த்தமாக!

பூமிப்பரப்பில்
என் காலடி பட்ட இடமெல்லாம்
வேண்டாத விபரீதங்கள்...
"ஓலைக்குடிசைகளில்..."
"சாக்கடை ஓரங்களில்..."
நோய்பரப்பும் கொசுத் தொல்லைகளின்
இடையிலும் சிலர் வாழ்வதா
வாழ்க்கை?
"மனிதநேய மென்றால் என்ன?"
வினாத் தொடுக்கும் மனிதமனங்கள்
"ஓ..!"
இங்கேயும் மனிதர்கள் வாழ்கிறார்கள்.
இவர்களுக்கும் வெளிச்சம் வேண்டும்!

ச. மாதவன்

சிக்கனம்

அற்பமென நாம் எண்ணும் சிற்றெறும்பும்
அன்றாடம் கிடைக்கின்ற உணவு தன்னை
புற்றுக்குள் சேர்த்து வைத்து; மழைக்காலத்தில்
பொறுமையுடன் உண்டுமனம் மகிழ்ந்திருக்கும்!
பெற்றிருக்கும் ஆறறிவால் உலகை வெல்லும்
பெருமைமிகு மனித இனம், வருமானத்தில்
பிற்கால நலன்கருதிச் சேர்த்து வைக்கும்
பொறுப்புவந்தால் வாழ்வெல்லாம் இனிக்கும் தேனாய்!

சன்னமான மணற்பரப்பில் விழுந்தீ ராய்
சம்பாதனைப் பொருளெல்லாம் செலவழித்தால்
என்றேனும் எதிர்பாராச் செலவு வந்தால்
எவரிடத்தில் கையேந்தி நிற்பதன்றோ?
தன்வாழ்வில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்போர்
தரித்திரத்தின் எல்லையினை மிதிப்பதில்லை.
சின்னஞ்சிறு எறும்பெனவே நாமும் வாழ்வில்
சேமித்து சிக்கனத்தால் உயர்வடைவோம்!

வீ. கோவிந்தராசன்

ஊமைக்குயில்

நாதன்

ஆ! எவ்வளவு மாற்றங்கள்! ரொம்பவும்தான் மாறிப்போய் விட்டது திருச்சி.

முன்பெல்லாம், அதிகாலை யில் ஜங்ஷனில் இறங்கிச் சிறிது தூரம் நடந்தால், பிளாசா டாக்கீஸ் எதிரே இராணுவத்தினரின் மிடுக்கான அணி வகுப்பைக் காணலாம்.

இப்போது அங்கே மத்திய பேருந்து நிலையம் காட்சியளிக்கிறது.

முன்பு அங்கொன்றும், இங் கொன்றுமாக சிறு ஓட்டல்கள் இருந்த இடத்தில் உயரமான லாட்ஜுகளும், நவீன ஓட்டல்களும் தலைநிமிர்ந்து நிற்கின்றன.

கோர்ட்டுக்குப் பக்கத்தில் உய்யக் கொண்டான் ஆற்றில் முன்பு சிறிதள வாவது தண்ணீர் ஓடிக்கொண்டிருக் கும். இப்போது வெறும் சேறும், சகதியும் மண்டிக் கிடக்கின்றன.

சிறிது தூரம் தாண்டினால் ஒரு காலத்தில் சர்க்கஸ், பொருட்காட்சி, பாம்பே ஷோ, கால்பந்து போட்டி முதலியவற்றுக்கு இடமளித்துக் கொண்டிருந்த வண்ணாரப் பேட்டை மைதானத்தில் இப்போது பெரிய ஆஸ்பத்திரி.

அதற்குப் பக்கத்தில், நீண்ட நெடுங்காலம் நகரசபை அலுவலகம் இயங்கி வந்த இடத்தில் இப்போது சூப்பர் மார்க்கெட்.

அந்த இடத்தை விட்டு நகர மனம் வரவில்லை. சுற்றும் முற்றும் நோக்கினேன். அதோ, எதிரே அந்த பஸ் ஸ்டாப் இன்னும் இருக்கிறது. அந்தக் காலத்தில் அலுவலகம் செல் வதற்காக நான் தினமும் தவம் கிடக்கும் பஸ் நிறுத்தம் அதுதான்.

அந்த இடத்தில் சிறிது நேரம் நிற்க வேண்டும் போலிருந்தது. ரோட்டைக் கடந்து சென்றேன்.

பஸ் ஸ்டாப்பில் யாரோ அமைத் திருந்த நிழற்குடை, எனக்கு போதிமரம் ஆயிற்று.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் னால் ஒரு நாள்.....

காலை ஒன்பது மணிக்கு இதே இடத்தில் பேருந்துக்காகக்காத்திருந் தேன்.

ஜங்ஷன் அருகே என் அலு வலகம் இருந்தது. கோர்ட், கலெக்டர் அலுவலகம், மத்திய தபால் நிலையம் முதலியவை அந்தப் பகுதியில் இருந்ததால், நான் போகும் பஸ்ஸில் எப்போதும் கூட்டம் இருக்கும்.

அன்றும் வழக்கம் போல் பஸ் களில் கூட்டம் அதிகமாக இருந்தது. இரண்டு மூன்று பஸ்கள், அந்த ஸ்டாப்பில் நிறுத்தப்படாமலேயே சென்று விட்டன.

அந்தச் சமயத்தில், எதிரேயிருந்த தெருவிலிருந்து ஒரு பெண் நடந்து வருவதைக் கண்டேன்.

தினம் தினம் எத்தனையோ பெண்களைப் பார்க்கிறோம். ஏதோ சிலருடைய உருவங்கள் மட்டும் நம் மனத்திரையில் பதிந்து விடுகின்றன அல்லவா? அப்படி அவள் உருவ மும் என் கண்ணிலும், மனக் கண்ணிலும்பட்டு நெஞ்சத்தில் அச்சாகியது.

இத்தனைக்கும் அவள் ஆடம் பரமான உடையோ, நகைகளோ அணிந்திருக்கவில்லை. வெண்மை யும், நீலமும் கலந்த காட்டன் சேலை... கழுத்தில் ஒரு மெல்லிய சங்கிலி... ஒரு கையில் வளையல், மற்றொரு கையில் கடிகாரம்... இவைதான் அவள் அணிந்திருந் தவை.

ஆனால் நெற்றியில் மின்னிய திருநீறும், அதில் பளிச்சிட்ட சிறு குங்குமப் பொட்டும் நகைகளுக்கு இல்லாத அழகை அவளுக்குக் கொடுத்தன.

சங்குக் கழுத்தில் பளிச்சென்று மின்னிய மச்சம், தனி எழிலைத் தந்தது.

சிறிது நேரத்தில் பஸ் ஒன்று வந்தது. ஆச்சரியமாக அதில் நிறைய இடம் இருந்தது. அவள் பெண்கள் வரிசையில் சென்றமர்ந்தாள். அவளுக்கு வலப்புறத்தில் ஆண் களுக்கான பகுதியில் நானும் அமர்ந்தேன்.

அவள் இரண்டணா டிக்கெட் வாங்கினாள். நானும் இரண்டணா டிக்கெட்தான். அவள் எங்கே இறங்கப் போகிறாள்?

காலை நேர பஸ்கள், தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போல், கலெக்டர் ஆபீசைச் சுற்றிக்கொண்டு ஜங்ஷ னுக்குச் செல்வது வழக்கம். கலெக்டர் ஆபீஸ் முன்னால் இருந்த மைதானத்தில் பஸ் நின்றது. அவள் கீழே இறங்கி அலுவலகம் நோக்கிச் சென்றாள்.

இதற்கு முன் அவளை நான் பார்த்ததில்லை. சமீபத்தில் தான் அவள் வேலையில் சேர்ந்திருக்க வேண்டும்.

''ரைட்'' என்றார் கண்டக்டர். பஸ் வட்டம் போட்டுத் திரும்பியது. என் கண்களோ, அவள் செல்லும் திசையை நோக்கியபடி இருந்தன. அவள் நடையில்தான் எவ்வளவு வசீகரம்!

அதன் பின் தினமும் நானும், அவளும் இதே பஸ் நிறுத்தத்தில்தான் பஸ் ஏறினோம்.

சில சமயங்களில், அவள் வருவதற்குள் பஸ் வந்து விடுவதுண்டு. இடம் இருந்தாலும், நான் அந்த பஸ்ஸில் செல்வதில்லை. அவள் வருகிறவரை காத்திருப்பேன்.

ஒரு நாள், நானும், அவளும் பஸ்ஸை எதிர்பார்த்துநின்றபோது வேகமாக வந்த பஸ் எதிரே நின்றது. புட்போர்டில் நான் கால் வைத்த போது, ''ஒரு சீட்தான்'' என்று கண்டக்டர் கத்தினார்.

சட்டென்று நான் இறங்கிக் கொண்டு, அவளுக்கு வழி விட்டேன். அவள் 'தேங்க்ஸ்' என்று கூறி விட்டு பஸ்ஸில் ஏறிக் கொண்டாள்.

பஸ் வேகமாகப் பறந்தது. என் மனத்தில் மகிழ்ச்சி பொங்கி வழிந்தது. அவளுக்காக ஏதோ மகத்தான தியாகம் செய்துவிட்டது போன்ற பெருமிதம்!

அடுத்த நாள் அவள் வந்தபோது, அவள் முகத்தில் அலாதியான மகிழ்ச்சி காணப்பட்டது. அவள் என்னைப் பார்த்து மென்முறுவல் பூப்பது போலவும் தோன்றியது. நானும் புன்னகை புரிந்தேன்.

அவளுடன் பேச வேண்டும் போல் இருந்தது. ஆனால் பேச நா எழவில்லை. ஒருவேளை நான் பேசுவதை அவள் விரும்பாவிட்டால்?... உள்ளத்தின் மூலையில் எழுந்த அச்ச உணர்வு என் வாயைக் கட்டிப் போட்டது.


அந்த நேரத்தில் பஸ் வந்தது. இருவருக்கும் இடம் இருந்தது.

அன்று அலுவலகத்தில் எனக்கு வேலையில் கவனம் செல்லவில்லை. அவளுடன் ஏதாவது பேசியிருக்க வேண்டும். நல்ல சந்தர்ப்பத்தை நழுவவிட்ட அசட்டுத்தனத்தை மனம் சுட்டிக் காட்டியபடி இருந்தது.

'பரவாயில்லை. நாளை பேசி விட்டால் போயிற்று.' என்று என்னை நானே சமாதானம் செய்து கொண்டேன்.

மறுநாள்.

அவள் வழக்கம்போலவே வந்தாள். அவளுடன் பேசுவதற்கு



நான் தயாரான நேரத்தில், எதிர்த் திசையிலிருந்து சிரித்தபடி இன்னொரு பெண் வந்தாள்.

''என்ன மைதிலி! நீ இங்கேயா இருக்கிறாய்!'' என்று கேட்டபடி அவள் கையைப் பிடித்துக் கொண்டாள். இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

'அவள் பெயர் மைதிலியா!'

பெயரைத் தெரிந்து கொண்ட சந்தோஷத்தில், அவளுடன் பேச முடியாமற்போன ஏமாற்றம் மறைந்து போய்விட்டது.

அவள் இதற்கு முன் தில்லை நகரில் குடியிருந்தாள் என்பதும், வீடு மாற்றி அங்கு குடிவந்திருக்கிறாள் என்பதும், அவர்களின் உரையாடல் களிலிருந்து தெரிந்து கொண்ட புதிய தகவல்கள்.

பஸ் வந்தது. நான் ஏறினேன். அவர்கள் பேசிக்கொண்டே நின்று விட்டார்கள்.

என்னை மட்டும் சுமந்து கொண்டு பஸ் புறப்பட்டது.



என்னுடன் வேலை பார்க்கும் நண்பன் சுந்தரத்துக்கு ஓர் அபூர்வ ஆற்றல் உண்டு. முகத்தைப் பார்த்தே மனத்திலிருப்பதைக் கண்டுபிடித்து விடுவான்.

என் மனத்தில் யாரோ ஒருத்தி இடம் பெற்று விட்டாள் என்பதை எப்படியோ கண்டுபிடித்து, கேள்வி மேல் கேள்வி கேட்டு, உண்மையை என்னிடமிருந்து வர வழைத்து விட்டான்.

''காதலிக்கிறவனுக்குக் கோழைத் தனம் கூடாது. தைரியமாக அவளுடன்பேசு'' என்று 'உபதேசம்' செய்தான்.

''அவள் யாரோ... என்ன சாதியோ... என்னை விரும்பு வாளோ, மாட்டாளோ?'' என்றெல் லாம் சந்தேகங்களை அடுக் கினேன்.

''இரண்டு நாள் பொறு. அவள் ஜாதகத்தையே கொண்டு வந்து விடுகிறேன்'' என்றான் சுந்தரம்.

சொன்னபடியே, இரண்டு நாள்களில் அவளைப் பற்றிய எல்லா விவரங்களையும் சேகரித்துக் கொண்டு வந்தான்.

மைதிலியின் தந்தை ஆசிரியராக இருந்து, சில ஆண்டுகளுக்கு முன் இறந்து விட்டார். தாயாரும், ஒரு தம்பியும் மட்டும் இருக் கிறார்கள். மைதிலி எஸ்.எஸ். எல்.சி. படித்து விட்டு, டைப்ரைட்டிங் பரீட்சையில் தேறியிருக்கிறாள். கலெக்டர் ஆபீசில் வேலைக்குச் சேர்ந்து ஒரு வருடம் தான் ஆகிறது.

''டேய் சங்கர்! அவள் உன் சாதி இல்லை என்றாலும், நீ தயங்காமல் அவளிடம் பேசி, அவள் மனத் திலிருப்பதைத் தெரிந்துகொள். மற்றதை நான் ..ார்த்துக் கொள் கிறேன். அவள் தாயாரைச் சந்தித்துப் பேசி, சம்மதம் வாங்குவது என் பொறுப்பு'' என்றான் சுந்தரம்.

அவள் வேறு சாதி என்று அறிந்ததும், என் உற்சாகம் கணிச மாகக் குறையத்தான் செய்தது. சாதிகளில் எல்லாம் எனக்கு நம்பிக்கை யில்லையென்றாலும், என் தந்தை, அதில் அளவுக்கு அதிகமான நம்பிக்கை கொண்டவர். அவரைச் சம்மதிக்க வைக்க முடியுமா? என்ற அச்சம் எனக்குள் எழுந்தது.

மனத்தில் சிறிது பயமும், தயக்கமும் தலைகாட்டின. ஆனால் மைதிலியின் முகத்தை நினைத்துக் கொண்டபோது, அசாத்திய தைரியம் உண்டாயிற்று.

அடுத்த நாள். அவளுடன் பேசி விட வேண்டுமென்ற மன உறுதி யுடன் நின்று கொண்டிருந்தேன்.

அவள் வந்தாள். வழக்கம் போல் கையில் சில புத்தகங்களை வைத் திருந்தாள். அவற்றில் ஒன்றை எடுத்துப் படிக்கத் தொடங்கினாள்.

நான் ஓரக்கண்ணால் அவளைப் பார்த்தேன். அவள் முகத்தில் புன்னகை தெரிந்தது. அவள் என்னைப் பார்த்துச் சிரிக்கிறாளா?

இல்லை, இல்லை. அவள் கையிலிருந்த பத்திரிகையில் வெளி வந்திருந்த ஏதோ ஒரு விகடத்துணுக்கு தான் அவளது இதழில் புன்னகையை வரவழைத் திருக்கிறது.

அருகில் சென்று பேசலாமா?

பேசலாம்தான். ஆனால் என்ன பேசுவது? ''ஹலோ'' என்று சொல்லலாமா? ''என்ன, இன்றைக்கு ஒரு நிமிடம் லேட்'' என்று கேட்டு விடலாமா? கேட்கலாமா?

திடீரென்று ஒரு சந்தேகம். இன்று என்ன கிழமை? திங்கள் அல்லவா? ஏழரை - ஒன்பது இராகுகாலம் ஆயிற்றே. போயும் போயும் இராகு காலத்திலா காதல் பேச்சைத் தொடங்குவது? வேண்டாம்.

நாளை கூட... செவ்வாய்க் கிழமை ஆயிற்றே. ''செவ் வாயோ, வெறுவாயோ'' என்பார்களே, அடுத்த நாள் பார்த்துக் கொள்ளலாம், ''பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது.''

இதற்குள் பஸ் வந்து விட்டது.

''என்ன அவளுடன் பேசி னாயா? என்ன சொன்னாள்?'' என்று கேட்டான், சுந்தரம். நான் அவளுடன் பேசாமல் போனதன் காரணத்தைச் சொன்னதும், விழுந்து விழுந்து சிரித்தான்.

''டேய்! நீ அவளை உண்மை யாகக் காதலிக்கவில்லை. காதலித் திருந்தால், இராகுகாலம் - எம கண்டம் எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கமாட்டாய். தைரியம் இருந்தால் அவளுடன் பேசு. இல்லாவிட்டால், அவளை மறந்து விட்டு, வேலையைக் கவனி. கோழை களுக்கெல்லாம் காதல் வரக்கூடாது'' என்றான், சற்று கேலியாக.

அவன் பேச்சு எனக்கு ரோஷத்தை உண்டாக்கியது. ''புதன் கிழமையன்று அவளுடன் நிச்சயம் பேசி விட வேண்டியது தான். என்ன வந்தாலும் வரட்டும்'' என்று தீர்மானித்துக் கொண்டேன்.

புதன்கிழமை!

வழக்கத்தைவிட ஐந்து நிமிடம் முன்னதாகவே வந்து நின்று கொண்டேன். அவள் வருகிற நேரம் நெருங்க நெருங்க, மனம் படபட வென்று அடித்துக் கொண்டது. அவளுடன் என்ன பேச வேண்டும், எப்படிப்பேச வேண்டும், எப்படி பேச்சைத் தொடங்க வேண்டும் என்றெல்லாம் மனத்துக்குள் ஒத் திகை பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஆனால்... ஆனால்...

அவள் ஏன் இன்னும் வர வில்லை?

பதினைந்து நிமிடங்கள் ஓடி விட்டன. நாலைந்து பஸ்கள் வந்து போய்விட்டன.

அவள் வரவில்லை.

என்ன காரணம்?

உடம்பு சரியில்லையா?

விடுமுறை எடுத்திருக்கிறாளா?

மனத்தில் பெரும்பாரத்துடன் அரைமணி நேரம் தாமதமாக, அலு வலகத்துக்குச் சென்றேன்.

மறுநாளும் ஏமாற்றம்தான். அடுத்த நாளும், அதற்கு அடுத்த நாளும் கூட அவளைக் காணோம். தொடர்ந்து ஒரு வாரமாக அவள் ஏன்

வரவில்லை? ஒருவேளை மீண்டும் வீடு மாறி விட்டாளா?

பதினைந்து நாள்கள் கடந்திருக்கும். பஸ் நிறுத்தத்தில் தனிமரம் போல் நின்று கொண்டிருந்தேன். எதிரேயிருந்து வந்து ஸ்கூட்டர், வலப் பக்கம் திரும்பியது.

பின்னால் உட்கார்ந்திருந்தவள்... மைதிலிதான்!

கணநேரம் எங்கள் கண்கள் சந்தித்துக் கொண்டன.

அப்போது, அவள் கழுத்தில் புத்தம் புதிய மஞ்சள்கயிறு மின்னியதை நான் கவனிக்கத் தவறவில்லை.

மறுநாளும் அவர்கள் ஸ்கூட்டரில் சென்றார்கள். அவன் சுமாராகத்தான் இருந்தான். கறுப்பு நிறம்.

அவனைப் பற்றிய விவரங்களை சுந்தரம் சேகரித்துக் கொண்டு வந்தான்.

அவனும் கலெக்டர் ஆபீசில் தான் வேலை பார்க்கிறான். சாதி கூட வேறுதான். தைரியமாக மைதிலியின் தாயாரைச் சந்தித்துப் பெண் கேட்டிருக்கிறான். அவளும் தலை யசைத்திருக்கிறாள். உடனே வயலூர் கோயிலில் கல்யாணம் நடந்தேறி விட்டது.

''உன்னை நினைத்தால் எனக்குப் பாவமாக இருக்கிறது, சங்கர்! உனக்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பத்தை நீ அநியாயமாகக் கோட்டை விட்டு விட்டாய். நீ மட்டும் துணிச்சலாக அவளிடம் பேசியிருந்தால், அவள் உனக்கு மனைவியாகி யிருப்பாள். உன் கோழைத்தனம், அவளை வேறொருவன் தட்டிப் பறித்துக் கொண்டு போய் விட்டான்'' என்றான் சுந்தரம்.

நான் மவுனமாக அழுதேன். அதன்பிறகு திருச்சியில் இருக்கவே பிடிக்கவில்லை. எங்கள் அலுவலகத்தில் பம்பாய்க் கிளைக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு, அங்கேயே குடியேறினேன்.

மைதிலியை மறக்க முயன்றேன்.



முடியாததால், திருமணத்தை மறந்தேன். நாற்பது ஆண்டுக்ள் எப்படியோ ஓடி விட்டன.

மீண்டும் இப்போதுதான் திருச்சி மண்ணில் அடியெடுத்து வைக்கிறேன்.

எவ்வளவு நேரம் அங்கு நின்று கொண்டிருந்தேனோ...

மைதிலி நடந்து வரும் பாதையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த என் கண்கள், வியப்பினால் விரிந்தன.

அதோ, அதோ... மைதிலி வருகிறாளே!

முன்பு அணிந்திருந்தது போன்ற அதே உடை, அதே நகைகள்... அதே இளமைத் தோற்றம்!

கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தேன். என் கண்கள் என்னை ஏமாற்றவில்லை. உண்மையாகவே மைதிலிதான் வருகிறாள்!

நான் திகைத்துப் போன போது, அவளுக்குப் பின்னால் ஒரு மூதாட்டி வருவதைப் பார்த்தேன். அவள் இடுப்பில் ஒரு சிறுமி. கையைப் பிடித்துக் கொண்டு ஒரு சிறுவன்...

இதற்குள் அவர்கள் பஸ் நிறுத்தத்துக்கு வந்து விட்டார்கள்.

நான் மீண்டும் அவர்களை உற்று நோக்கினேன்.

எனக்கு எல்லாம் புரிந்து விட்டது. வயோதிகப் பெண்மணி தான் மைதிலி. அவள் கழுத்தில். அதோ அழகிய மச்சம் மின்னுகிறதே!

அவளுக்கு முன்னால் நடந்து வந்தவள், அவளுடைய மகள்; அருகில் விளையாடிக் கொண்டிருப்பது பேரக் குழந்தைகள்.

மைதிலியை மீண்டும் உற்று நோக்கினேன். கடைசி முறையாகப் பார்த்தபோது, அவள் கழுத்தில் மின்னிய தாலியை இப்போது காணோம். என் மனத்தை என்னவோ செய்தது.

ஓடிவிளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள், இப்போது சண்டை போட்டுக் கொண்டனர். சிறுமி அழுதாள்.

மைதிலி அவளைத் தூக்கிக் கொண்டாள். ''இதற்கெல்லாம் அழலாமா?'' என்று கூறியவள், ''எதிலும் தைரியம் வேண்டும். கோழையாக இருக்கக்கூடாது'' என்று கூறியபடி, என்னை நோக்கினாள்.

அவளும் என்னை அடையாளம் தெரிந்து கொண்டுதான், எனக்கு உறைக்க வேண்டும் என்பதற்காக அப்படிக் கூறுகிறாளா? அல்லது என்னை யறியாமல் என் கண்களுக்கு வெளியே எட்டிப்பார்த்த நீர்த் துளிகளைப் பார்த்து விட்டாளா?

இதற்குள் பஸ் வந்தது. அவர்கள் இருவரும் குழந்தைகளுடன் ஏறிக் கொண்டனர்.

நானும் ஏதோ ஞாபகத்தில் பஸ்ஸில் ஏறப் போனேன்.

''இடமில்லை சார்'' என்று கூறிய கண்டக்டர், ''ரைட்'' என்றார்.

புழுதியைக் கிளப்பிக் கொண்டு பஸ் பறந்தது.

கவிதை

நெரிவு செய்த வார்த்தை மலரின்
செறிவு மிகுந்த வண்ணமாலை.
கற்பனை விண்மீன்
களிநடம் புரியும்
அற்புத வானம்.

கருத்துக் குழவியை
வளர்க்கும் செவிலி.

உணர்ச்சிச் சிப்பியில்
விளைந்த முத்து.

உவமை உருவகம்
எதுகை மோனை
சந்த அணிகள்
எழிலாய்த் துலங்கும்
வனப்புடை வனிதை.

எப்போதும் ஒளிசிந்தும்
இனிய முழுநிலா.
கட்டுப் பாட்டு
வேலியை மீறி
வெளியே எட்டி
நோக்கும் நறும்பூ.

நினைக்க நினைக்க
திகட்டாப் பான்மையில்
கிறங்கச் சுவைதரும்
அமுதத் தாரை.

செ. ஞானன்



பிறந்த காலம்

என் முதல் நடை
உலகே ஆடும்!
நெல் மணிகளில் 'அ'கரம்
எழுத்தே சோறு
புத்தகப்பையுள் 'பலப்பம்'
தொலைந்ததே காலம்
வேலைக்கு அழைத்த கடிதம்
கடித உறையே கடவுள்!
மாத இறுதியில் மனைவி
அஞ்சறைப் பெட்டிப் புதையல்
மகளின் கழுத்தில் தாலி
உலகே மகிழ்வில்
தேடிய கண்ணாடி கையில்
பேரனே கண்கள்!!
பிறவிப் பெருங்கடல் தன்னை
நீந்தவே வேண்டாம்!!

எஸ். விஜயகிருஷ்ணன்

மேகம்

எட்டாத தூரத்தில்
வெள்ளை மேகம் - அது
கதைகள் பல சொல்லிப் போகும்!

எதிரெதிர் தேசத்து ராஜாக்கள்
வேகமாய்ப் போரிட வருவார்கள்!

ஒரு பக்கம் கரடி, நரி
தெரியும்.
மறுபக்கம் யானை, புலி
இருக்கும்.

காடு மலைகளும் நிறைந்திருக்கும்.
கண்கொண்டு பார்க்கையிலே
கவர்ந்திழுக்கும்.

இத்தனை இத்தனை அதிசயமும்
இருந்த இடத்திலேயே நடக்காமல்

வேகமாய் நகர்ந்து
போயிருக்கும்!


வேறென்னவென்றென்றும் முன்
மறைந்திருக்கும்.

தாமரைச் செல்வி சுந்தர்

எழுது, எழுது, எழுது!

இதயம் திறந்து எழுது - எழுத்தில்
இனிமை சேர்த்து எழுது!
அன்பைக் குழைத்து எழுது - இறைவன்
அருளை இசைத்து எழுது!
ஆனாலும் சில நேரம் - ஆம்
பேனா உந்தன் போர்வாள்!
அக்கினிக் குழம்பு மையில் - அதை
முக்கியெடுத்து எழுது!
முகத்திரை கிழித்து எழுது -போலி
முகங்கள் கருகிட எழுது!
பொய்மைச் சூதுகளெல்லாம் - நீறாய்ப்
பொசுக்கிடவே நீ எழுது!
சாதிக் கொடுமைகள் யாவும் - மண்ணில்
சாய்த்திடவே நீ எழுது!
அன்னை பாரத பூமி - ஆகா
பொன்னாய் ஒளிர நீ எழுது!
எழுது, எழுது எழுது!

ஆர்.பி.சாரதி



கவிஞரும் கடவுளும்

கைகாட்ட அவருக்குப் பலருண்டு
கைதட்டி அவர் வளர என் பங்குமுண்டு.
கை காட்ட எந்தனுக்கு யாருமில்லை
கைதட்டி ஊக்குவிக்க எவருமில்லை.

கைகொட்டிச் சிரிக்கும் ஒலி
காதால் கேட்டேன்
கடவுள் என்முன் வந்து
கருத்தைச் சொன்னார்

கைகட்டி வாய் பொத்தி
மௌனமானேன்-

"கவிஞ, கவலைவிடு, கயிலை வந்து விடு
கவிதைக்கும் மேலோன் நீ.- கடவுள் பக்தன்
காலம் வந்தால் உன் பெயர் நிலைத்து நிற்கும்
புவி புகழும் புனிதப்பிறவியே நீ
பூரண மனிதனானாய் - இனி கடவுளே·ஆவாய்
கவிஞ, கவலை விடு, கயிலைக்கு வந்துவிடு

கலாபாரதி

இரை

ராஜேஷ்குமார்

காலைநேர ஜி.ஹெச். அவஸ்தை களோடு காத்திருக்கும் மக்களோடு நிரம்பித் தெரிய, விநோத் தோளில் தொங்கும் ஜோல்னாப் பையோடு இன்-பேஷன்ட் வார்டை நோக்கி மெல்ல நடை போட்டான். ஜி.ஹெச் அவ்வளவு சுத்தமாக இல்லை.

காற்றில் இருமல் சத்தம். பினாயில் நாற்றம். அலட்சியமாய்த் தள்ளப்படும் ஸ்ட்ரெச்சர்கள். இரவில் பார்த்த கேபிள் சினிமாவின் விமர்சனத்தோடு வார்டைக் கடக்கும் நர்ஸ்கள்.

மெட்டர்னிடி வார்டைத் தாண்டிய விநோத் எதிர்ப்பட்ட ஆர்டர்லியை நிறுத்தினான்.

''நேற்று ம த்தியானம் விஷம் சாப்பிட்டு தற்கொலை பண்ணிக்க முயற்சி செஞ்ச கிருஷ்ணமூர்த்தி எந்த வார்டுல அட்மிட் ஆயிருக்கார்...?''

அந்த ஆர்டர்லி தன் இடக் கையின் ஆட்காட்டி விரலால், சவரம் செய்யப் படாத தன் மோவாயைச் சொறிந்து கொண்டே கேட்டான்.

''பேர் என்ன சொன்னீங்க...?''

''கிருஷ்ணமூர்த்தி...''

''எந்த ஏரியா...?''

''மூகாம்பிகை நகர்...''

''ஓ...! அந்தக் கேஸா...? நேத்தே மண்டையைப் போட்டு மார்ச்சுவரியில் படுத்துக் கிடக்க வேண்டியவன். எப்படியோ உயிர் பிடிச்சுகிட்டான். ஆயுசு கெட்டிதான்...!''

''எந்த வார்டு...''

''அதோ...! அந்தக் கட்டடத்துல... இரண்டாவது மாடி. ஆறாவது பெட்.''

விநோத் நடந்தான்.

ஐந்து நிமிஷ நடையில் கட்டடமும் இரண்டாவது மாடியும் வந்தது. ஆறாவது என் கட்டிலில் அந்த இளைஞன் ஒருக்களித்துப் படுத்திருந்தான். மெலிந்த தேகம். எண்ணெய் காணாமல் வறண்டிருந்த தலை. மோவாய்ப் பகுதியில் கணிசமான ரோமம். வயது முப்பதுக் குள் இருக்கலாம்.

கட்டிலுக்குப் பக்கத்தில் யாருமில்லை.

விநோத் மெதுவாய் அந்த இளைஞனுக்குப் பக்கத்தில் போய் நின்று மெல்லிய குரலில் கூப்பிட்டான்.

''கிருஷ்ணமூர்த்தி...''

கிருஷ்ணமூர்த்தியின் கண்கள் ஸ்லோமோஷனில் சோர்வாய்த் திறந்தன. வறண்ட உதடுகள் மெல்லப் பிரிந்தது.

''யா... யாரு...?''

விநோத் அவனுக்குப் பக்கத்தில் குனிந்தான். ''என் பெயர் விநோத். ஒரு பத்திரிகையில ரிப்போர்ட்டரா வொர்க் பண்றேன். உங்க தற்கொலை முயற்சியை இன்னிக்குக் காலையில பேப்பர்ல பார்த்தேன். பேப்பரோட எட்டாவது பக்கத்துல, எட்டாவது பத்தியில், எட்டு வரியா வந்திருந்த உங்க தற்கொலை நியூஸ் என்னோட மனசுக்கு நெருடலாப் பட்டது. தற்கொலைக்கான காரணம் எதுவும் தெரியலைன்னு பேப்பர்ல போட்டிருந்தாங்க...''

கிருஷ்ணமூர்த்தி தளர்வாய் எழுந்து உட்கார்ந்தான். ''காரணத்தைத் தெரிஞ் சுக்கிட்டுப் போக வந்தீங்களா...?''

''ஆமாம்...''

''தெரிஞ்சுக்கிட்டுப் போய் உங்க பேப்பர்ல எழுதிட்டா என்னோட பிரச்னை தீர்ந்திடுமா...?''

விநோத் கொஞ்சம் உரிமை எடுத்துக் கொண்டு கட்டிலின் நுனியில் உட்கார்ந் தான்.

''இந்த உலகத்துல தீர்க்க முடியாத பிரச்னைன்னு எதுவுமே கிடையாது... எந்த ஒரு பிரச்னைக்கும் தீர் வுண்டு...''

கிருஷ்ணமூர்த்தி சோர்வாய் கட்டிலின் பின்புறத்திற்குச் சாய்ந்து கொண்டான். ''இந்தப் பேச்செல்லாம் கேட்கிறதுக்கு நல்லாயிருக்கும். ஆமா... நீங்க எந்த பத்திரிகை...?''

''காலைச் சுடர்...''

''நாட்ல எவ்வளவோ பத்திரிகை இருக்கு. அந்தப் பத்திரிகைகள் எதுவுமே என்னைக் கண்டுக்காத போது உங்க பத்திரிகையாவது என்னோட பிரச்னையைப் பத்தித் தெரிஞ்சுக்கிறதுக்காக வந்ததைப் பத்தி ரொம்ப சந்தோஷம்...''

விநோத் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுக் கேட்டான்.

''ஆமா... ஹாஸ்பிட்டல்ல நீங்க மட்டும் தனியா இருக்கீங்க... உங்களைப் பார்த்துக்க யாரும் வரலையா?''

''அம்மா வந்திருக்காங்க... பெரிய டாக்டர் கூப்பிடறதா தகவல் வந்தது. பார்த்துட்டு வரப் போயிருக்காங்க...''

''சரி தற்கொலை பண்ணிக்கக் கூடியளவுக்கு உங்களுக்கு வாழ்க்கையில அப்படி என்ன வெறுப்பு...?''

''உங்க பேர் என்ன...?''

''விநோத்...''

''மிஸ்டர் விநோத்...! என்னோட தற்கொலைக்கான காரணத்தைச் சொல்றதுக்கு முந்தி என்னோட ஃபேமிலியைப் பத்தி நீங்க தெரிஞ்சுக்கணும்... எனக்கு அப்பா கிடையாது. விவரம் புரியாத வயசிலேயே காலமாயிட்டார். அம்மாதான் கஷ்டப்பட்டு என்னையும் என்னோட தம்பியையும் படிக்க வெச்சாங்க... நான் ஒரு டிப்ளமா ஹோல்டர். ஒரு ஃபவுண்டரியில் லேத் ஆபரேட்டரா வொர்க் பண்றேன்... தம்பி பி.ஈ. படிச்சுட்டு வீட்ல வேலையில்லாமே உட்கார்ந்துட்டிருக்கான்.''

''ஃபேமிலியில் அம்மாவைச் சேர்த்து நீங்க மூணு பேர் மட்டும் தானா...?''

''ஆமா... ஸிஸ்டர்ஸ் யாரும் இல்லை.''

''மேலே சொல்லுங்க...''

"என்னோட வருமானத்தை வெச்சுத்தான் குடும்பம் நடந்துட்டு வந்தது. இந்த நிலைமையில எனக்கு அழையா விருந்தாளியா ஒரு நோய். பணக்காரர்களுக்கு மட்டுமே சொந்தமான அந்த நோய் என்னைச் சுவீகாரம் எடுத்துக்கிட்டு கொஞ்ச ஆரம்பிச்சது..."

"அப்படியென்ன நோய்...?"


கிருஷ்ணமூர்த்தி சிரித்தான். "டாக்டர் அதுக்கு ஏதோ ஒரு பேரைச் சொன்னார். அந்தப் பேர் எனக்கு ஞாபகமில்லை... இதயத்திலிருந்து மூளைக்குப் போகிற ஒரு ரத்தக் குழாயில் திடீர் திடீர்னு ரத்தம் உறைந்து போய்த் தாங்க முடியாத தலைவலி. மயக்கம். டாக்டர்கள் பார்த்துட்டு இந்த நோயைக் குணப்படுத்த அமெரிக்காவுக்கோ, ஜெர்மனிக்கோ தான் போகனும்னு சொல்லிட்டாங்க. இது முடிகிற காரியமா...? வீட்டை வித்தாவது உன்னைக் காப்பாத்தறேன்னு அம்மா சொல்றாங்க... தம்பிக்கு அதுல இஷ்டமில்லை. எல்லார்க்கும் என்னால தொந்தரவு... அதனால இந்த உலகத்துல இருக்க வேண்டாம்ன்னு முடிவு பண்ணினேன்."

விநோத் சிரித்தான்.

"வாழ்க்கைங்கிறதே ஒரு பெரிய போராட்டம்தான். இந்தப் போராட்டத்தை எல்லாரும் ஃபேஸ் பண்ணித்தான் ஆகனும்..."

"எனக்கு வந்திருக்கிற நோய் லட்சத்துல ஒருத்தர்க்கு வரக்கூடிய நோயாம். அந்த நோயைக் குணப்படுத்த இரண்டு லட்சத்திலிருந்து மூனு லட்சம் வரைக்கும் செலவானாலும் நிரந்தர குணம் கிடைக்காதாம்..."

விநோத், கிருஷ்ணமூர்த்தியை நெருங்கி அவனுடைய தோளின் மேல் சிநேகமாய்க் கைவைத்தான்.



"மனசுக்குள்ளே தைரியமிருந்தா எந்த வியாதியையும் ஜெயிக்கலாம்... மருந்து மாத்திரையெல்லாம் அதுக்கப்புறம் தான்."

கிருஷ்ணமூர்த்தி 'உச்' கொட்டினான்.

"அதெல்லாம் சும்மா ஸார்...."

"மனசைத் தளரவிடாதீங்க கிருஷ்ண மூர்த்தி. நான் வெறும் பத்திரிகை ரிப்போர்ட்டர் மட்டும் இல்லை... ஏதோ உங்களைப் பேட்டி எடுத்து பத்திரிகை யில போடறதுக்காக மட்டும் வரலை..."

"பின்னே...?"

"உதவி பண்ண வந்திருக்கேன்..."

"உதவியா...?"

"ம்..."

"என்ன உதவி...?"

"அதைப்பத்தி இந்த இடத்துல பேசமுடியாது. நீங்க இங்கிருந்து டிஸ்சார்ஜ் ஆகி வெளியே வந்ததும் இந்த அட்ரஸுக்கு வந்து பாருங்க... உங்க பிரச்னைகள் தீர அங்கே வழி பிறக்கும்..."

விநோத் தன் சட்டைப் பைக்குள் வைத்திருந்த ஒரு விசிட்டிங் கார்டை எடுத்து கிருஷ்ணமூர்த்தியிடம் நீட்ட, அவன் வாங்கிப் பார்த்தான். பால்நிற விசிட்டிங் கார்டில் பொன்வண்ண எழுத்துகள் மின்னின.

விநோத், (பிரஸ் ரிப்போர்ட்டர்) ப்ளாட் நெம்பர் 16, விஜய் தீப் அபார்ட் மெண்ட்ஸ், மகாராணி அவென்யூ, திருவொற்றியூர், சென்னை.

கிருஷ்ணமூர்த்தி அந்தக் கார்டைப் படித்துவிட்டு ஒரு விரக்தியான சிரிப் போடு விநோத்தை ஏறிட்டான்.

"என்னிக்கு இருந்தாலும் ஒரு நாள் தற்கொலை பண்ணிக்கிட்டு சாகப்போற எனமேல உங்களுக்கு எதுக்கு இந்த வேண்டாத பாசம்? பேசாமே உங்க தொழிலைப் போய் கவனிங்க ஸார்..."

"இந்தத் தாழ்வு மனப்பான்மை உங்களுக்குக் கூடாது...! உடம்புக்கு ஒரு வியாதி வந்துட்டா வாழ்க்கையில எல்லாமே முடிஞ்சுட்டதா அர்த்தம் இல்லை... உங்க வாழ்க்கையில சந்தோஷம் திரும்ப நானாச்சு... நீங்க என்னிக்கு இங்கிருந்து டிஸ்சார்ஜ் ஆகிப் போறீங்க...?"

"நாளைக்கு சாயந்தரம்..."

"அப்படின்னா... நாளைக் கழிச்சு மறுநாள் காலை பத்து மணிக்கு கார்டில்

இருக்கிற என்னோட அட்ரஸுக்கு வந்துடுங்க.''

''வரணுமா...?''

''ப்ளீஸ்...''

''உங்க... சந்தோஷத்துக்காக வர்றேன்...'' சொன்ன கிருஷ்ணமூர்த்தி அந்தக் கார்டை சட்டைப் பையில் பத்திரப்படுத்திக்கொண்டான்.

☆ ☆ ☆

மூன்றாவது நாள் காலை.

சரியாகப் பத்து மணிக்கெல்லாம் திருவொற்றியூர் மகாராணி அவென்யூவில் இருந்த விஜய் தீப் அபார்ட்மெண்ட்ஸ் போய்ச் சேர்ந்தான் கிருஷ்ணமூர்த்தி.

விநோத் வாசலிலேயே ஸ்கூட்டரோடு காத்திருந்தான். தோளில் அதே ஜோல்னா பை. கண்களில் இப்போது குளிர் கண்ணாடி தொற்றியிருந்தது. கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்ததும் புன்னகை பூத்தான்.

''எங்கே மனசு மாறி வராமே இருந்துடுவீங்களோன்னு நினைச்சேன்...''

''நீங்க அவ்வளவு தூரம் சொன்ன பின்னால நான் வராமே புறக்கணிக்கிறது அவ்வளவு நல்லாயில்லையே...?''

விநோத் ஸ்கூட்டரை உதைத்து ஸ்டார்ட் செய்து கொண்டு பில்லியனைத் தட்டிய படி சொன்னான்.

''உட்காருங்க கிருஷ்ணமூர்த்தி...''

''வீட்டுக்கு வரச் சொன்னீங்க...?''

''வீட்ல கெஸ்ட் இருக்காங்க. எதுவும் பேசமுடியாது. எனக்குத் தெரிஞ்ச வேற ஓர் இடத்துக்குப் போயிடலாம் வாங்க...''

கிருஷ்ணமூர்த்தி தயங்கினான். தயக்கமாய் சுற்றும் முற்றும் பார்க்க விநோத் புன்னகை பூத்தான்.

''என்ன இப்படி அலைக்கழிக்கறானே அப்படின்னு சந்தேகப்படறீங்களா? வீட்ல இரண்டே இரண்டு ரூம். கெஸ்ட் நாலஞ்சு பேர் இருக்காங்க... பிரைவஸி கிடையாது... உங்களுக்கு அதுல ஆட்சேபனை இல்லேன்னா... வீட்டுக்கே போய்ப் பேசலாம் வாங்க...''

''நோ... நோ... வேண்டாம்...! நீங்க சொன்ன மாதிரியே வேற இடத்துக்குப் போயிடுவோம்...'' சொல்லிக்கொண்டே கிருஷ்ணமூர்த்தி பில்லியனில் ஏறி உட்கார்ந்தான்.

ஸ்கூட்டர் புறப்பட்டது.

பதினைந்து நிமிஷப் பயணத்தில் மரங்கள் அடர்ந்த ஒரு பங்களாவுக்குள் நுழைந்து போர்டிகோவில் போய் ஸ்கூட்டர் தன் இரைச்சலை நிறுத்திக் கொண்டது. பக்கவாட்டிலிருந்து வெளிப்பட்டு, குரைக்க முயன்ற அல்சேஷன் நாய் ஒன்றை விநோத் ''சார்லி! கீப் கொய்ட்... டோண்ட் பார்க்'' என்று சொல்ல, நாய் அதை இராணுவக் கட்டளையாய் ஏற்றுக் கொண்டு வாலை ஆட்டியபடி படுத்துக் கொண்டது.

கிருஷ்ணமூர்த்தி பிரமிப்போடு கேட்டான்.

''இது யாரோட பங்களா...?''

விநோத் நகைத்தான். ''பயப்படாமே வாங்க கிருஷ்ணமூர்த்தி!... இது நமக்கு வேண்டியவங்க பங்களாதான்...''

உள்ளே போனார்கள்.

பரந்த ஹாலில் நடந்து, பிறகு வளைந்து போன மாடிப்படிகளில் ஏறி வராண்டாவில் எதிர்ப்பட்ட அறைக்கு முன்பாய்ப் போய் நின்றார்கள்.

விநோத் கதவைத் தட்டினான்.



புதிய கீதை



மதிவண்ணன்

- சூரியன் வந்த பின்பும்
  தினசரி
  சோம்பல் முறிக்கும்பூமி
  இன்று மட்டும்
  உதயத்திற்கு முன்பே
  எப்படி உற்சாகம் கொண்டது?

- ஓ! இன்று
  வானமே கீழிறங்கி
  வையத்திற்கு வந்துள்ளது!

- இடிகளாய் வெடிகள்!
  மின்னலாய் வாணங்கள்!
  கம்பிச் சக்கரத்தில் எல்லாம்
  கதிரவன்!

- இருளிலேயே இன்று
  பொழுது புலர்ந்துவிட்டது!
  ஆமாம்!
  இருளை அழித்து
  ஒளியை நிலைநாட்டிய
  கண்ணன்
  மனக் கண்ணில் தெரிகிறான்!

- வேடிக்கையாக
  புல்லாங்குழல் ஊதிய
  அவன் உதடுகளே
  வேத கீதையையும்
  விவரித்திருக்கிறது!

- எளிதினும் எளிதும்
  பெரிதினும் பெரிதும்...
  எல்லாம் அவனே!

- கோபியர் சேலைகளைக்
  கவர்ந்த கைகளால்
  கோடிச் சேலைகள்
  கொடுத்ததும் அவனே!

- ஆய்ச்சியர் மத்தால்
  அடி பட்டவன்
  அரவின் தலைமேல்
  ஆடினானே, எப்படி?

- மாயக் கண்ணனை'
  இன்று
  மனதார எண்ணுவோம்!

- 'அறத்தை நிலைநிறுத்த
  அவதரிப்பேன் யுகந்தோறும்'
  என்றதன்
  அர்த்தம்தான் என்ன?

- அவனின்றி
  அணுவும் இல்லை!
  ஆம். நாமும்தான்!

- தீய அரக்கர்களைத்
  தீர்த்துக் கட்டிய
  கண்ணனின் செயலை
  நாமே செய்தால்
  நாள் எல்லாம் தீபாவளி!

- புதிய கீதை
  புரிந்ததா?

* * *

"டொக்... டொக்..."

"எஸ்.கம்மின்." உள்ளேயிருந்து ஒரு பெண்ணின் குரல் வெளிப்பட்டது.

விநோத் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போக கிருஷ்ணமூர்த்தி பின் தொடர்ந்தான்.

அறையின் மையத்தில் தெரிந்த சோபாவில் அந்த நடுத்தர வயதுப் பெண் தெரிந்தாள். பட்டுப்புடைவையில் இர்ட்டை நாடி சரீரம். சற்று அதிகப் படியான மேக்கப் முகத்தில். மூக்கிலும், காதுகளிலும் வைரத்துணுக்குகள் டாலடித்தன.

கிருஷ்ணமூர்த்தி அந்த அம்மாளை மிரட்சியாய்ப் பார்க்க அவள் புன்னகை புரிந்தாள்.

"உட்கார்... கிருஷ்ணமூர்த்தி..."

அவன் உட்காராமல் விநோத்தைப் பார்க்க, விநோத் கிருஷ்ணமூர்த்தியின் தோளில் மெதுவாய்க் கை வைத்து அழுத்தினான்.

கிருஷ்ணமூர்த்தி ஸ்லோமோஷனில் தயங்கிக்கொண்டு உட்கார்ந்தான். அந்த அம்மாள் கேட்டாள்.

"ஏதாவது சாப்பிடறியா?"

"வே...வேண்டாம்..."

"இதோ பார் கிருஷ்ணமூர்த்தி... நீ செத்துப்போக முயற்சி செய்து மரணத்தோட விளிம்பு வரைக்கும் போய்ட்டு வந்தவன். உன்கிட்ட தைரியமா எந்த விஷயத்தைப் பத்தியும் பேசலாம்ன்னு முடிவு பண்ணித்தான் உன்னை இங்கே கூட்டிக்கிட்டு வரச்சொன்னேன். நீ நினைக்கிற மாதிரி விநோத் பத்திரிகை ரிப்போர்ட்டர் இல்லை...."

"பி...பின்னே...?"

"என்னோட பி.ஏ."

"நீங்க யாருன்னு தெரியலையே..."

விநோத் குறுக்கிட்டுச் சொன்னான். "அம்மா பேரு விஜயகுமாரி. இன்னிக்கு சிட்டியில் இருக்கிற 'விஜி குருப்ஸ்' கம்பெனிகளின் சேர்மன்..."

கிருஷ்ணமூர்த்தியின் மனசுக்குள் மலைப்புத் தட்டியது.

"அ...அது... இவங்கதானா...?" கிருஷ்ணமூர்த்தியின் உடல் தன்னிச்சையாய் பவ்யமாய் எழுந்து நின்றது. கைகளைக் கட்டிக் கொண்டது.

விஜயகுமாரி சிரித்தாள். ''அடேடே...! உட்கார்... தம்பி... மரியாதையெல்லாம் மனசுக்குள்ளே இருந்தால் போதும்...?''

மறுபடியும் கிருஷ்ணமூர்த்தி உட்கார்ந்தான். முகம் சிறிது வியர்த்து இருந்தது.

விஜயகுமாரி தொடர்ந்தாள்.

''கிருஷ்ணமூர்த்தி... தற்கொலை பண்ணிக்கிறதுதான் உன்னுடைய முடிவான எண்ணமில்லையா...?''

''ஆமாம் மேடம்... எனக்கு வந்திருக்கிறது குணப்படுத்த முடியாத வியாதி... நான் உயிரோடு இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் செலவுதான்... எனக்குக் கிடைக்கும் ஆயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளத்தில் பாதிச் சம்பளம் மருந்து மாத்திரைகளுக்குச் செல வாயிடுது....''

''உன்னுடைய தம்பி வேலைக்கு போறதில்லையா?''

''வேலை கிடைக்கலை...''

''என்ன படிச்சிருக்கான்...?''

''பி.ஈ....''

''உன்னுடைய தம்பிக்கு, எனக்கு சொந்தமான 'விஜி ஸ்டீல்ஸ்' கம்பெனியில் மாதம் பனிரெண்டாயிரம் ரூபாய் சம்பளத்தில் வேலை போட்டுக் கொடுத்தால் உனக்குச் சந்தோஷம் தானே?''

''மே...மேடம்... எ... என்ன... சொல்றீங்க...?'' கிருஷ்ணமூர்த்தி மகிழ்ச்சியில் தத்தளித்தான்.

''நிஜத்தைச் சொல்றேன்.... இன்றைக்கே வேணும்ன்னாலும் வேலைக்கான உத்தரவைத் தர தயாராக இருக்கேன். அதுமட்டுமில்லை. உன்னை வெளிநாட்டிற்குச் சிகிச்சைக்காக அனுப்பப் போறேன்...''

''மே... மேடம்... உங்க தாராள மனசுக்கு ரொம்பவும் நன்றி... இந்த உதவியை என்னுடைய குடும்பம் எந்த ஜென்மத்திலும் மறக்காது.''

விஜயகுமாரி புன்னகைத்தாள்.

''வெறும் நன்றி மட்டும் போதுமா... கிருஷ்ணமூர்த்தி?''

கிருஷ்ணமூர்த்தி குழப்பமாய் அவளை ஏறிட்டான். மெல்லிய குரலில் கேட்டான். ''என்னிடம் இருந்து வேறு என்ன எதிர்பார்க்கிறீங்க மேடம்?''

விநோத் குறுக்கிட்டான்.

''கிருஷ்ணமூர்த்தி! அம்மாவுக்கு நீங்க ஓர் உதவி பண்ணனும்...''

''என்ன உதவி...?''

''எதைக் கேட்டாலும் பண்ணுவீங்களா?''

''ம்... பண்ணுவேன்...''

''நிஜமா...?''

''சத்தியமா...''

''சரி... ஒரு கொலை பண்ணனும்...''

☆ ☆ ☆

கிருஷ்ணமூர்த்தி திடுக்கிட்டான்.

''எ... எ... என்னது கொலையா...?''

விஜயகுமாரியின் முகம் இப்போது இறுகிப்போயிருக்க சொன்னாள். ''ம்... கொலையே தான்... என்னோட குரூப் கம்பெனிகளுக்குப் போட்டியா புதுசா ஒரு குரூப் கம்பெனி கிளம்பியிருக்கு. அந்தக் கம்பெனி வளர்ந்து வர்ற வேகத்தைப் பார்த்தா... என்னோட கம்பெனிகளின் நிலைமை மோசமாயிடுமோன்னு ஒரு பயம் என் மனசை அரிச்சுட்டு இருக்கு... போட்டிக் கம்பெனியோட வெற்றியின் காரணம் அங்கே இருக்கிற ஒரு மாஸ்டர் பிரெய்ன். அவன் பேர் திலக். நீ தீர்த்துக்கட்ட வேண்டியது அந்தத் திலக்கைத்தான்.''

கிருஷ்ணமூர்த்தி மிரண்டான்.

''மே... மேடம்... அது... அது...''

''ஏன் கிருஷ்ணமூர்த்தி பயப்படறே...? இந்த உலகத்துல உயிர் வாழப் பிடிக்காத உனக்கு போலீசைப் பத்தின பயமோ சட்டத்தைப் பத்தின பயமோ வேண்டிய தில்லை. கொலையைத் தைரியமாப் பண்ணு... மாட்டிக்கிறமாதிரி இருந்தா தற்கொலை பண்ணிக்க. மாட்டிக்காத பட்சத்துல உனக்கு வெளிநாட்ல மெடிக்கல் ட்ரீட்மெண்ட். உன் தம்பிக்கு வேலை... எல்லாத்துக்கும் மேலா கொலையை சக்ஸஸ்ஃபுல்லா பண்ணி முடிச்சா... ஹாட் கேஷ் அஞ்சு லட்சம்...''

கிருஷ்ணமூர்த்தி திணறினான்.

''நி...நிஜமாத்தான் சொல்றீங்களா...?''

''நிஜமோ நிஜம்...''

''அப்படின்னா... உங்க இரண்டு பேரையும் கைது பண்ண வேண்டியது தான்...''

''ஏ...ஏ... ஏய்... என்ன சொல்றே...?'' விஜயகுமாரியும் விநோத்தும் அலறிப் பதறிக்கொண்டு இருக்கும்போதே - கிருஷ்ணமூர்த்தி தன் மார்புப் பகுதிக்குள் கையை நுழைத்து - ரிவால்வரை எடுத்து நீட்டினான்.

''இரண்டு பேரும் அசையக் கூடாது... யார் அசைஞ்சாலும் சரி. தோட்டாவை வாங்கிக்க வேண்டியதுதான்.''

விஜயகுமாரி, விநோத் வியர்த்து வழிய -

கிருஷ்ணமூர்த்தி தொடர்ந்தான்.

''நீங்க இரண்டு பேரும் நினைக்கிற மாதிரி நான் தற்கொலைக் கேஸ் கிருஷ்ணமூர்த்தி இல்லை. நான் போலீஸ் டிபார்ட்மெண்ட். க்யூ ப்ராஞ்ச் விங். பேர் தியாகராஜன். கடந்த பத்து பதினைஞ்சு நாளா சிட்டியில் இருக்கிற சில முக்கியமான தொழில் அதிபர்களின் டெலிபோன் பேச்சுகளை எக்சேஞ்ச் உதவியோடு மானிட்டர் பண்ணிட்டு வரோம். அப்படி மானிட்டர் பண்ணும் போது உங்க வீட்டு டெலிபோன் பேச்சும் மானிட்டரில் பதிவாச்சு. அந்தப் பேச்சில் ஒரு வாக்கியம் எங்க டிபார்ட்மெண்ட்டுக்கு நெருடலா பட்டது. அந்த வாக்கியம் இதுதான். 'விநோத்! நீ என்ன பண்ணுவியோ ஏது பண்ணுவியோ எனக்குத் தெரியாது. தினசரி ஜி.ஹெச்க்கு போ... எவனாவது தற்கொலை பண்ணிக்க முயற்சி பண்ணி தோத்துப்போய் ஹாஸ்பிடல்ல அட்மிட் ஆகியிருப்பான்... அப்பேர்ப்பட்ட ஒருத்தனை நம்ம திட்டத்துக்குப் பயன்படுத்தினாதான் எதிரிகளைத் தீர்த்துக் கட்ட முடியும்...' - இப்படிப் பேசின இந்த வாக்கியத்துல ஏதோ விபரீதம் இருக்கிற மாதிரி டிபார்ட்மெண்டுக்குப் பட்டது. உடனே என்னோட மேலதிகாரியும் நானும் யோசிச்சு, இந்தக் கிருஷ்ணமூர்த்தி தற்கொலை நாடகத்தை நடத்தினோம். பத்திரிகைக்காரர்களும், ஜி.ஹெச். டாக்டர்களும் இந்தத் திட்டத்துக்கு பரிபூரண ஒத்துழைப்பைக் கொடுத்தாங்க...''

விஜயகுமாரியும் விநோத்தும் தங்கள் முகங்களில் இருந்த ரத்தத்தைத் தொலைத்துவிட்டு வெளிறிக் கொண்டிருக்க கிருஷ்ணமூர்த்தி... ஸாரி... போலீஸ் க்யூ ப்ராஞ்ச் தியாகராஜன் அங்கிருந்த டெலிபோனை நெருங்கி ரிசீவரை எடுத்த படியே அவசரப்போலீஸுக்கான எண்களைத் தட்டத் தொடங்கினான்.

●

பார்த்துக் கொண்டிருந்தாலும் போதும்

பார்த்துக்கொண் டிருந்தாலும் போதுமே அந்தப்
பாவையைப் பேரின்பக் கோவையைக் கண்ணால் (பார்த்து)
சேர்த்துத் தொடுத்தஎழில் சிரிக்கும்பூ மாலையைச்
சேர்த்தே அணைக்கநலம் செழிக்கும்பெண் மாலையைப் (பார்த்து)

ஏலக்காய் நறுமணத்தை எல்லோரா ஓவியத்தைக்
கோலப்பூங் கொடியழகைக் கொள்ளிடத்துச் தேன்பொழிலைப்
பாலொத்த மனத்தெளிவைப் பதமுள்ள பருவத்தைக்
காலத்தின் முதல் அழைப்பைக் கடல்மல்லைக் கலைப்படைப்பைப் (பார்த்து)

நாற்றுக்கால் மண்டபத்தின் நறுக்கமிகும் எழில்நயத்தை
நாற்றங்கால் பயிர்வளர்த்து நகைக்கின்ற ஒளிச் சிரிப்பைப்
போற்றுதிருக் குளத்தில்சேர் நீராழி மண்டபத்தை
ஆற்றழகைத் தோற்கடிக்கும் அளந்தமைந்த சிலைப்பெண்ணைப் (பார்த்து)

தித்திப்புச் சொல்தொடுத்த தேன்பாட்டு நகையரும்பு
மத்தாப்புப் புன்னகையால் மனப்புரட்சி மூட்டியொளிக்
கொத்தாகிக் கொல்விழியால் குறும்பமைத்துக் கூத்தாடும்
புத்திளமைப் பூங்கன்னி பொங்குந்தேன் இலக்கியத்தைப் (பார்த்து)

திநா. அறிவு ஒளி



ஞானக் கிறுக்கன்

மூங்கில் துளைக்குள்ளே
போகும் முன்னே-
அது-
வெற்றுக் காற்று.
துளைத்து
வெளிவரும்
போதோ
தூய இசைவெள்ளம்!
காற்று
நினைத்ததா
இசையாவேன் என்று!
இல்லை.
மூங்கில்தான்
உணர்ந்து
அதை ஊதிற்றா?
அபூர்வ சந்திப்பில்
இரண்டுமே
இசைந்து போயின.
'நானும் ஞானியும்'
அப்படித்தான்.

மீ. விஸ்வநாதன்

இப்படி ஓர் இனிய நாடு

இப்படிஓர் இனியநாடு எங்கிருக்குது? - அதை
இப்பொழுதே பார்க்கஎன்றன் மனம்துடிக்குது
வளர்ந்துவரும் குழந்தைகளைத்
தனியாய்ப்பிரித்து - வேண்டும்
வசதிஎல்லாம் அவர்களுக்குச் செய்துகொடுத்து
உலகநலம் பேணுவோராய் அவர்கள் வளர -
நாளும்
உரியதெல்லாம் செய்துதரும் நல்ல நாடதாம்...
உழவினோடும் பிறதொழில்கள்
சேர்த்துவளர்த்து - மக்கள்
உழைப்பினுக்குப் போதுமான மதிப்பும்
கொடுத்து
அறிவுலக மேதைகட்கும் சிறப்புக்கொடுக்கும் -
ஓர்
அருமையான பெருமைமிக்க சிறந்தநாடதாம்...
இன, மொழி, மதங்களின் எல்லைகடந்து - மக்கள்
எல்லாருக்கும் ஒரேகுல எண்ணம் வளர்த்து
மனம், மொழி மெய்களாலே அன்பை
வளர்க்கும் -
பெரும்
மகத்தான சக்திபெற்ற நல்ல நாடதாம்

இப்படி ஓர் இனியநாடு எங்கிருக்குது? அதை
இப்பொழுதே பார்க்கஎன்றன் மனம்துடிக்குது.

ஏ. பொன்ராசன்



சிறகுகள் விரியும் சிகரங்கள் தெரியும்


கனவுகளும் ஆசைகளும்
கற்பனையும் தானே
புதிய யுகத்திற்குப்
பூபாளக் குரல் கொடுக்கும்!
எண்ணத்தை உயர்வாக்கு
வண்ணக் கனவுகள்,
உன் வசப்படும் நாள்வரும்!

நீ திசைகளின் நாயகன்.
இந்திய தேசத்தின்
இளைய பூங்குயில்!
எழுந்து நில், தோழனே!
எண்ணமும் செயலும்
உன் இரு சிறகுகள்!
நீ சிறகு விரித்தால்
சிகரத்தின் உச்சி,
உன் நெற்றிப் பொட்டில் வந்து
வெற்றித் திலகமிடும்!

வேடந்தாங்கல் சுகுணன்




டாக்டர் எஸ்.எஸ். பத்ரிநாத்


டாக்டர் குமார மாணிக்கவேல்

ஞான ஒளி விளக்கு சங்கர நேத்ராலயா

சங்கர நேத்ராலயா. 18 வருடங்களுக்கு முன்பு தொடங்கப்பட்ட கண் மருத்துவமனை. தொடங்கியவர் டாக்டர் எஸ்.எஸ். பத்ரிநாத். இந்த மருத்துவ மனையை, தன்னுடைய சொந்த சிகிச்சை மையமாகத் தொடங்காமல் மக்கள் சேவைக்காக ஒரு 'டிரஸ்ட்'டாகத் தொடங்கினார். "பார்வையற்றவர், குறைபாடுகளுடன் கூடிய கண் ஒளி கொண்டவர்கள் பயன் அடைய வேண்டும்; இலாப நோக்கு சிறிதும் இல்லாமல் சங்கர நேத்ராலயா வளர வேண்டும்" என்ற ஒரே நோக்குடன் தொடங்கினார். இதற்கு வித்திட்டவர், காஞ்சி மாமுனிவர் ஜகத்குரு சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்.

கண் சிகிச்சையில் இன்று உலகிலேயே மிகச் சிறந்த மருத்துவராக விளங்கும் டாக்டர் எஸ்.எஸ். பத்ரிநாத் அவர்களின் மருத்துவ உலக விஜயம் இங்கே அவசியமாகிறது.


டாக்டர் எஸ்.எஸ். பத்ரிநாத் எம்.பி.பி.எஸ், பட்டத்தை இந்தியாவில் பெற்றதும் அமெரிக்கா சென்று விட்டார். அமெரிக்காவில் தான் கண் சிகிச்சை மேற்படிப்பைப் படித்தார். அமெரிக்காவில் உலகின் 'நெம்பர் ஒன்' கண் மருத்துவராகத் திகழ்ந்த டாக்டர் ஸ்டீபன் அவர்களிடம் பயில்கிற மிகப் பெரிய வாய்ப்பு டாக்டர் பத்ரிநாத் அவர்களுக்குக் கிடைத்தது.

பயிற்சிக் காலத்தின் போது டாக்டர் ஸ்டீபன், "இந்தியாவிற்கு நீங்கள் திரும்பிச் செல்வதாக இருந்தால் மட்டுமே என்னிடம் நீங்கள் பயிலலாம். இல்லையென்றால் வேண்டாம். மருத்துவ மாணவர்கள் அனைவருமே என்னிடம் இந்தப் பயிற்சியை முடித்து விட்டு ஒட்டு மொத்தமாக இங்கேயே இருந்தால் அர்த்தமில்லை" என்று டாக்டர் பத்ரிநாத்திடம் சொன்னாராம்.

டாக்டர் பத்ரிநாத்தின் மனத்திலும், "நம் நாட்டிற்கு வந்து ஏதாவது செய்ய வேண்டும்" என்ற ஏக்கமே எற்கெனவே மேலோங்கி இருந்திருக்கிறது. இதுதான் அடிப்படை.

அமெரிக்காவில் படிப்பு முடிந்ததும் இந்தியாவுக்கு வந்தார் பத்ரிநாத். அடையாறு வி.எச்.எஸ். மருத்துவமனையில் சிறிது காலம் பணியாற்றிய பிறகு விஜயா மருத்துவமனையில் தனியாக டாக்டர் பத்ரிநாத் அவர்களுக்கு ஒரு பிரிவை ஏற்படுத்தித் தந்தார்கள். அங்கும் பணியாற்றினார்.

அப்போது தான் காஞ்சிப் பரமாச்சார்யாருக்கு கண் சிகிச்சை செய்கிற வாய்ப்பு டாக்டர் பத்ரிநாத் அவர்களுக்குக் கிடைத்தது. அதில் விசேஷம் என்னவென்றால், பரமாச்சார்யாருக்குச் சிகிச்சை செய்ய மருத்துவர்கள் பலர் தயாராக இருந்தனர். ஆனால் சுவாமிகளின் தீர்க்க தரிசனம் 20 வருடங்களுக்கு முன்பு - டாக்டர் பத்ரிநாத்தின் 36 ஆவது வயதில் - டாக்டர்



தனி உலகமாய் இயங்கும் ஆராய்ச்சிக்கூடம்

பத்ரிநாத்தை அழைத்து "நீங்கள் எனக்கு கண் அறுவைச் சிகிச்சை செய்யலாம்" என்றார்.

அன்று பரமாச்சார்யரால் கண்டுணரப்பட்ட ஒளி, இன்று பிரகாசமாகச் சுடர்விடுகிறது. இன்று ஆயிரக்கணக்கான டாக்டர்கள் பத்ரிநாத்திடம் பயின்று, உலகம் முழுதும் பரவி இருக்கின்றனர். லட்சக்கணக்கான மக்கள் பயன் அடைந்துள்ளனர்.

அன்று பரமாச்சார்யாருக்கு அறுவைச்சிகிச்சை முடிந்ததும் கிரகணம் வந்தது. கிரகணத்தின் போது சந்நியாசிகள் தலைக்கு ஸ்நானம் செய்வது அவசியம். கண் அறுவைச் சிகிச்சை முடிந்ததும் நோயாளிகள் குறைந்தது 45 நாள்களுக்குத் தலையில் நீர் ஊற்றக் கூடாது. இப்படி ஒரு நிலைமை. டாக்டர் பத்ரிநாத் அவர்களுக்குக் கவலை வந்து விட்டது. நேரே காஞ்சிபுரம் சென்றார் பத்ரிநாத். டாக்டர் பத்ரிநாத்தைப் பார்த்ததும் பரமாச்சார்யார் கேட்டாராம்: "என்ன நான் ஸ்நானம் செய்து விடுவேன் என்று பயந்து விட்டாயா?"

"ஆமாம்!"

"கவலைப்படாதே சாஸ்திரத்தில் எல்லாவற்றுக்கும் ஒரு பரிகாரம் இருக்கு. அதை உபயோகப்படுத்தி நான் மந்திர ஸ்நானம் செய்து கொள்கிறேன். எனக்குக் கண் போய் விடுமே என்பதற்காக இல்லை. வளர்ந்து வரக்கூடிய மருத்துவர் நீ. 'சங்கராச்சார்யாருக்குக் கண் ஆபரேஷன் செய்தும் பயனில்லை' என்ற பேச்சு வந்தால் உன்னுடைய வாழ்க்கையே போய்விடும். அதற்காக நான் ஸ்நானம் செய்யவில்லை" என்று சொன்னாராம்.

அதுபோல் சுவாமிகள் ஆபரேஷன் செய்வதற்கு முன் ஒரு வார்த்தை சொன்னாராம்: "நீ, சங்கராச்சார்யருக்கு ஆபரேஷன் செய்கிறோம் என்கிற எண்ணத்தில் செய்ய வேண்டாம். உன்னிடம் ஒரு பிச்சைக்காரன் வந்து ஆபரேஷன் செய்யும் போது என்ன எண்ணத்தில் செய்வாயோ, அதே எண்ணத்தில் நீ எனக்கு ஆபரேஷன் செய்தால் போதும். எல்லாம் நல்ல படியாக நடக்கும்" என்றாராம்.

ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்தது. சுவாமிகளுக்கு கண் பழுது சீர் செய்யப்பட்டது. முன்னேற்றம் தெரிந்தது. அதற்கடுத்த ஆண்டில்தான் சென்னை கல்லூரி சாலையில் 'சங்கர நேத்ராலயா' தொடங்கப் பட்டது.

1978ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட போது ஒரே ஒரு கட்டடம். சுற்றிலும் புதர்கள். டாக்டர் பத்ரிநாத்துடன் இரண்டு கண் மருத்துவர்கள். இரண்டு செவிலியர்கள். இந்த ஒரே ஒரு வீட்டை வாங்க நிறையப் பேர் உதவியிருக்கிறார்கள்.

அச் சமயத்தில் ஒரு பெரும் தொழிலதிபர் கண் சிகிச்சைக்காக டாக்டர் பத்ரிநாத்திடம் வந்திருக்கிறார். அந்த நேரத்தில் டாக்டர் பத்ரிநாத்திற்குப் பல பிரச்னைகள். அவர் எதிர்பார்த்த

'ஒளி உலக'மாய் விளங்கும் மருத்துவக் கூடம்



அளவிற்கு எதுவுமே சரியாக நடக்கவில்லை. மனமொடிந்த நிலையில் மீண்டும் அமெரிக்காவிற்குச் சென்று விடலாம் என்ற யோசனை வந்த போது கண் சிகிச்சைக்கு வந்த தொழிலதிபருக்குக் கண் பார்வை குறைந்து விட்டது. இந்த விஷயமும் டாக்டர் பத்ரிநாத்திற்குத் தெரிய வந்தது. இந்த விஷயமும் டாக்டரின் மனத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. மீண்டும் டாக்டர் பத்ரிநாத்திடம் அந்தத் தொழிலதிபர் சிகிச்சைக்கு வந்தார். இவரது முழுத் திறமையால் கண்ணொளி பெற்றார் அந்தத் தொழிலதிபர். அவருடைய முயற்சியால் இந்த இடம் டாக்டருக்குச் சொந்தமாக்கப் பட்டது.

அதற்குப் பிறகு 'சங்கர நேத்ராலயா' வளர்ந்த வேகம் மின்னலையும் தோற்கச் செய்து விடும்.

மாதம் ஒன்றுக்கு 'சங்கர நேத்ராலயா'வில் பயிற்சியை முடித்துப் புறப்படும் 15 டாக்டர்கள் உலகம் முழுதும் கண்ணொளியை மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். சங்கரநேத்ராலயாவின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் அனைத்தும், மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் கருதப்பட்டு இண்டர்நேஷனல் மெடிக்கல் ஜர்னலில் இடம் பெறுகின்றன.

நாள் ஒன்றுக்கு சங்கர நேத்ராலயாவிற்கு வரும் கடிதங்களின் எண்ணிக்கை 300. இவை தவிர ஃபேக்ஸ், தொலைத் தொடர்புச் செய்திகள், நோயாளிகளின் மருத்துவ ரிகார்டுகள் ஆகிய அனைத்தையும் ஒரு தனிப் பிரிவு மிகக் கவனமாகக் கண்காணிக்கிறது. அனைத்தும் கம்ப்யூட்டர் மயம்!

சங்கர நேத்ராலயாவின் தனிச் சிறப்பிற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது.

நோயாளிகளிடமிருந்து கண் சிகிச்சைக்காகப் பெறப்படும் தொகை, நோயாளிகளின் சிகிச்சைச் செலவுகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. கட்டடம் கட்டுதல், ஆராய்ச்சிச் செலவுகள், மற்ற முன்னேற்றங்களுக்கான செலவுகள் ஆகிய அனைத்தும் நன்கொடைகளின் மூலம் பெறப்படுகிறது. அதனால்தான் மற்ற கண் மருத்துவ மனைகளை விட நேத்ராலயாவின் சிகிச்சைச் செலவு குறைவாக இருக்கிறது.


முக்கியமாக இங்கு சிகிச்சைக்காக வரும் நோயாளிகளில் 40 சதவிகிதத்தினருக்கு இலவசச் சிகிச்சையளிக்கப்படுகிறது. ஒரு குடும்பத்தின் மாத வருமானம் ரூ.1750க்குக் குறைவாக



உலக மருத்துவ நூல்கள் ஒருங்கே இடம் பெற்றுள்ள நூலகம்

நவீன வசதிகளுடன் கூடிய படுக்கைகள்





காத்திருக்கும் நோயாளிகளில் ஒரு பகுதியினர்

இருந்தால் அந்த நோயாளிக்கு இலவசமாகவே சிகிச்சை யளிக்கப்படுகிறது. அந்த நோயாளிக்கு உணவு, இருப்பிடம் அனைத்துமே இலவசம்!

இப்போது சங்கர நேத்ராலயாவில் 180 படுக்கை வசதிகள் உள்ளன. நாள் ஒன்றுக்கு முக்கிய அறுவைச் சிகிச்சைகள் 60 இல் இருந்து 70 வரை நடக்கின்றன. 800 நோயாளிகள் பரிசோதிக்கப் படுகின்றனர். நோயாளிகளின் சிரமத்தைக் குறைக்க முன்பதிவு முறை மிக நேர்த்தியாகக் கையாளப்படுகிறது. ஆறு மாதங்களுக்கு முன்னரே முன்பதிவு பூர்த்தியாகி விடுகிறது.

சங்கர நேத்ராலயாவில் முதன் முதலில் வாங்கப்பட்ட கட்டடத்தைத் தவிர, இரண்டு கட்டடங்கள் மிகப் பிரம்மாண்ட மாகக் காட்சியளிக்கின்றன.

ஏழு அடுக்குகள் கொண்ட ஒரு கட்டடம் முழுக்கமுழுக்க நோயாளிகளின் சிகிச்சைக்காகப் பயன்படுகிறது. ஐந்து அடுக்குகள் கொண்ட மற்றொரு கட்டடம் ஆராய்ச்சி மையமாகச் செயல்படுகிறது.

அரசு அங்கீகாரம் பெற்ற மருத்துவமனையாக சங்கரநேத்ராலயா விளங்குவதால், பிஎச்.டி. பட்டமளிக்கும் நிறுவனமாகவும் விளங்குகிறது. கண் மருத்துவம், பயோ கெமிஸ்ட்ரி, மைக்ரோபயாலஜியில் பட்டமளிக்கலாம் என்பதால் ஆராய்ச்சிக்கென்று தனிப் பிரிவு. இப்பிரிவில் இயங்கும் நூலகத்தில் உலகில் உள்ள கண் மருத்துவம் சம்பந்தப்பட்ட அனைத்து நூல்களும், வீடியோ-ஆடியோவில் அனைத்து விவரங்களும் சேகரிக்கப் பட்டுள்ளன.

சங்கர நேத்ராலயாவின் தரத்திற்கு அங்கு பணிபுரியும் மருத்துவர்களும் மிக முக்கியமான வர்கள். டாக்டர் பத்ரிநாத்துடன் 25 மருத்துவர்களும், 500 பணியாளர் களும் தங்கள் பணியைச் சேவையாகக் கருதிச் செயல்பட்டு வருகின்றனர்.

வருகிற நோயாளிகள் அனைவரும் டாக்டர் பத்ரிநாத்திடம் சிகிச்சை பெற வேண்டும் என்று விரும்பினால் நடக்கிற காரியமா? "எனக்கு அவர் சிகிச்சையளிக் காவிட்டாலும் பரவாயில்லை. நான் சாவதற்கு முன் டாக்டர் பத்ரிநாத்தைப் பார்த்துவிட வேண்டும்" என்று வருகிற நோயாளிகளும் இங்குண்டு. ஆனால் அதையும் அனுமதிப் பதில்லை டாக்டர் பத்ரிநாத். "எனக்கு இந்த விளம்பரமே வேண்டாம்" என்கிறார்.

அப்படி வருகிற நோயாளிகள் அனைவருக்கும் அவர் மட்டுமே சிகிச்சையளித்தால் மற்ற மருத்துவர்களுக்கும் மரியாதை கிடைக்குமா? 'இந்த மையம் தான் முக்கியம். நான் முக்கியமில்லை' என்று நினைக்கிறார் டாக்டர் பத்ரிநாத். தனக்குத் தெரிந்த அத்தனை விஷயங்களையும் மற்ற மருத்துவர்களுக்குச் சொல்லித் தருவதில் அலாதி விருப்பம் டாக்டர் பத்ரிநாத் அவர்களுக்கு.

"என்னிடம் வரும் நோயாளி பூரண குணம் அடைந்து சந்தோஷ மாகத் திரும்ப வேண்டும். அதுதான் என்னுடைய திருப்தி" என்கிறார் பத்ரிநாத்.

சங்கர நேத்ராலயாவிற்கு வரும் நோயாளிகளின் பூரண சிகிச்சைக்காகப் பல பிரிவுகள். செம்மையான பணியாட்கள். இது ஒரு புறம் இருக்க - சங்கர நேத்ராலயாவின் ஆராய்ச்சி மையம் ஆற்றிவரும் பணி அளவிடற் கரியது.

ஜெனடிக் அண்ட் மாலிக்யூலர் பயாலஜியின் மூலம் பரம்பரையில் ஏற்படும் கண் வியாதியை ஆராய்ச்சி செய்து உலகில் முதன்முறையாக மூன்று ஜீன்களைக் கண்டுபிடித்துள்ளார் சங்கர நேத்ராலயா ஆராய்ச்சி மையத்தின் டாக்டர் குமார மாணிக்கவேல்.

மனிதனின் குரோமோஸோம் களின் எண்ணிக்கை 46. ஆணிட மிருந்து வரும் குரோமோஸோம் களும், பெண்ணிடமிருந்து தோன்றும் குரோமோஸோம்களும் இணைந்து உருவாவது தான் குழந்தை. இந்த குரோமோஸோம் களை ஆராய்ச்சி செய்து மூன்று முக்கிய நோய்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

⟹

தீவிரமான மாலைக்கண் நோய் எப்படி ஒருவருக்கு வருகிறது? அதிதீவிரமில்லாத மாலைக்கண் நோய் எப்படி உருவாகிறது?

இரப்பையின் மூலம் ஏற்படும் கண் நோய் எதனால் தோன்றுகிறது? என்பதன் மூலாதாரம் இந்த ஆராய்ச்சியின் மூலம் நிரூபணமாகியுள்ளது.

இந்த ஆராய்ச்சியின் வடிவம் உலக மருத்துவ இதழில் இடம் பெறவுள்ளது.

சங்கர நேத்ராலயாவில் பணியாற்றும் பணியாளர்களின் குழந்தைகளுக்கு குழந்தைகள் காப்பகமும், நோயாளிகளுக்கு சிறந்த சிற்றுண்டிச் சாலையும் மிக நேர்த்தியாக இயங்குகிறது. மேலும் நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகளை உடனுக்குடன் வாங்குவதற்கேற்ப, மெடிக்கல் ஷாப் ஒன்றும் இதனுள்ளேயே உள்ளது.

ஒவ்வொரு நோயாளியிடமும் தனி அக்கறை செலுத்தும் டாக்டர் பத்ரிநாத், தன்னுடன் பணியாற்றுபவர்களின் நலத்திலும் மிக விழிப்புடன் இருக்கிறார். பணியாளர்களின் வீட்டு விசேஷங்களில் அவசியம் கலந்து கொள்கிறார். அதே நேரத்தில் பணியில் ஓர் இம்மியளவு கூட தவறு நிகழ்ந்து விடக் கூடாது என்கிற கண்டிப்பும் அதிகம். அதேபோல மருத்துவமனை முழுவதையும் தூய்மைப் பகுதியாகப் பராமரிப்பதில் இவர் காட்டும் ஆர்வத்தின் விளைவாக, எங்கு பார்த்தாலும் முழு அளவிலான சுத்தம் கண்ணையும் கருத்தையும் கவரும்.

வருடத்தில் 365 நாள்கள், 24 மணி நேரமும் இயங்கும் சங்கர நேத்ராலயத்தின் வளர்ச்சி பற்றி அவரிடம் கேட்டபொழுது "இந்த மாபெரும் வளர்ச்சிக்குக் காரணம் நானில்லை. இதோ என் பணியாளர்கள், உடன்பணியாற்றும் மருத்துவர்கள் ஆகியோர்தாம்" என்கிற "செங்கமேடு ஸ்ரீனிவாச பத்ரிநாத்" (எஸ்.எஸ். பத்ரிநாத்) அவர்களுக்கு உலக அளவில் கிடைத்துள்ள விருதுகளும், பட்டங்களும் ஏராளம்.

டாக்டர் பத்ரிநாத்தின் அன்புத் துணைவியார் திருமதி வசந்தி பத்ரிநாத் தம் கணவருக்குத் துணையாக ஆராய்ச்சிக் கூடத்தில் நிர்வாகியாக அங்கம் வகிக்கிறார். தனக்குப் பிறகு இந்த சங்கர நேத்ராலயா இன்னும் சிறப்பாக வளர வேண்டும் என்று விரும்பும் டாக்டர் பத்ரிநாத், நேத்ராலயாவின் சம்பளம் பெறுகிற ஒரு தொழிலாளி மட்டுமே! பதிவேட்டில் ஆறுமுகம் என்கிற வாகன ஓட்டுநருக்குப் பிறகுதான் டாக்டர் பத்ரிநாத் அவர்களின் பெயரே பதிவாகி இருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

'ஒளிமயமான உலகைப் படைத்திட வேண்டும்' என்கிற ஒரே அடிப்படையில் வேகமாகச் சுழல்கிற சங்கரநேத்ராலயாவின் பணிகள், உலகம் சுழல்கிற வரை வளர்ந்து கொண்டே இருக்கும்!

நரேந்திரகுமார்

போட்டோ : யேரகா.

பாறைக்குள் ஒரு பார்வை

பத்மினி பட்டாபிராமன்

"கல்லிலே கலை வண்ணம் கண்டான்;
இரு கண்பார்வை மறைந்தாலும் காணும் வகை
தந்தான்..."

ஒரு சிற்பியின் கலைநயத்தை வியக்கும் அற்புதமான பாடல் இது....

கல்லில் அந்தச் சிற்பி அற்புதத்தைச் செதுக்கியிருக்கலாம்... ஆனால் அந்தக் கல்லில் எத்தனை வகை, வண்ணம் படைத்திருக்கிறான் இறைவன் என்ற சிற்பி... மிக மிக ஜாக்கிரதையாக நாம் கையாளும் கண்ணாடி, காலில் மிதிபடும் இளகிய பாறையிலிருந்து தான் உருவாகிறது. வடிவம், பௌதிக குணம் வேறுபட்டாலும் இரண்டுக்கும் அடிப்படையான ரசாயன மூலக்கூறு – சிலிகான் (Silicon) ஒன்றேதானே...?

கண்ணாடி மட்டுமன்றி, காலம் கடந்து நிற்கும் கோயில்களிலிருந்து, இன்றைய வழவழ கிரானைட் வரை கற்பாறைகள் (Rocks) மனித வாழ்வோடு இணைந்து விட்டன. நம் பார்வைக்கு ஒரே மாதிரி தோன்றினாலும் பாறைகளில்தான் எத்தனை வகை?

இந்தியப் புவியியல் ஆய்வு நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த உலகளாவிய கருத்தரங்கு ஒன்றில், Geological Survey of India வின் இயக்குநர்கள் திரு ஆர். ஸ்ரீநிவாசன் மற்றும், திரு ஜி.என். வரதன் ஆகியோரைச் சந்தித்த போது இந்த அமைப்பு பற்றியும், பாறைகளைப் பற்றியும் மிகச் சுவையான தகவல்களை அளித்தார்கள்.

தெருவில் இறங்கினால் காலில் மிதிபடும் மண், கற்களைப் பற்றி நம்மில் பலருக்குத் தெரியாதல்லவா...?

ஆண்டாண்டு காலமாக, பாறாங்கற்கள் நொறுங்கி உருவானவைதான் அவை.. இந்தப் பாறைகள் எப்படி உருவாகின்றன...? பூமியின் மேற்பரப்பு சியால் எனப்படும் (Sial). அதற்கடுத்த கீழ்ப்பரப்பு சிமா... (Sima) பூமியின் மையத்தில் கொதித்துக் கொண்டு திரவ நிலையிலிருக்கும் நெருப்புக் குழம்பு மேக்மா... (Magma) நிக்கல், இரும்பு மூலகங்களால் ஆனது.

பூமிக்கு வெளியே எரிமலையாக வெடித்துச் சிதறி வரும் குழம்பு "லாவா" என்றால், அதே குழம்பு பூமிக்கடியில் மேக்மா... இந்த மேக்மா, பூமியின் "ஸிமா ஸியால்" பரப்புகளுக்கு வெளியே சிதறிவரும் போது வேறுபட்ட வெப்பநிலைகள், வேறுபட்ட அழுத்தம் காரணமாக, (Different temperatures and pressure) விதவிதமான பாறைகளாகப் படிகிறது...

இது ஏதோ விரைந்து சில ஆண்டுகளில் நடக்கும் விஷயமில்லை...

மில்லியன் வருடங்களாக நடந்து கொண்டிருக்கும் இயற்கை விளைவு

விதவிதமான தாது உப்புகள் மூலப்பொருள்களோடு (Minerals and elements) குளிர்ந்து, இறுகி... கெட்டியாகின்றன பாறைகள்.

இக்னியஸ் பாறைகள் (Igneous rocks) எனப்படும் இவை தட்பவெப்ப நிலை காரணமாக சிறிது சிறிதாக மாறி (Metamorphic rocks) வித விதமாகப் படிகின்றன...

எரிமலை வெடித்து லாவா மூலம் உருவாகிய பாறைகளில் துளைகள் (Perforation) இருக்கும்... ஏனெனில் வெளியே வெடித்துச் சிதறுவதால் உள்ளிருக்கும் வாயுப் பொருள்கள் (gaseous) குமிழியிட்டு வெளியேறுவதுதான். ஆனால் பூமிக்கடியிலேயே வெடித்து, பின் வெளிவரும் இப்பாறைகள் இடைவெளியின்றி இறுகி இருக்கின்றன.

உலகெங்கும் பாறைகள் ஒரே மாதிரியாய்த் தான் இருக்குமா? "வேறுபட்ட வெப்பநிலை, அழுத்தத்தின் காரணமாக இவை இறுகும் போது பாறைகளின் தன்மை வேறுபடுகிறது..." என்று கூறும் திரு. ஸ்ரீநிவாசன் அவர்கள் தமிழ்நாட்டுப் பாறையைப் பற்றி மிக வியப்பான செய்திகளைக் கூறினார்.

"சார்னோகைட் (Charnokite) எனப்படும் பாறை வகை தமிழ்நாட்டில் தான் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது... சென்னை அருகே பரங்கி மலையில் 1893 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது



குவாரியில் வேலை நடக்கிறது.

என்றாலும் அதற்கு முன்பாக, கல்கத்தாவை ஸ்தாபித்த "ஜாப் சார்னோக்" (Job Charnok) என்பவரின் கல்லறைக்காக இங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டது. அப்போது இந்த வகைப் பாறையைப் பற்றி யாருக்கும் அதிகம் தெரியாது. ஆனால் 1893இல் இதன் சிறப்புகளை ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்த விஞ்ஞானிகள், சார்னோக் பெயராலேயே "சார்னோ கைட்" என்று அழைத்தனர்."

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இந்த வகைக் கல்லின் சிறப்பை நம் முன்னோர் உணர்ந்திருக்கிறார்கள். தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம், ஒரிஸாவின் சூரியக் கோயில், இராமேஸ்வரம் கோயில், மகாபலிபுரம் கடற்கரைக் கோயில் போன்ற பல கோயில்களும் சார்னோகைட் பாறையால் கட்டப்பட்டவையே!

அரசர்களின் கல்லறைகள், நினைவுச் சின்னங்களும் எழும்ப இப்பாறைதான் பயன்பட்டுள்ளது... ஏன் "சார்னோகைட்" பாறைக்கு இவ்வளவு மவுசு....?

திரு. ஜி.என். வரதன் விளக்குகிறார்... "இதன் வற்றாத வளம்... தமிழ்நாடு, கேரளா,



இதுவும் ஒருவிதப் பாறை

ஆந்திரம் ஆகிய இடங்களில் ஏராளமாகக் கிடைக்கிறது. அற்புதமான நீலம் கலந்த கிரே நிறம், ஹைபர்ஸ்தீன் (Hypersthene) மற்றும் தாது உப்புகள் கலந்த கலவை, செதுக்க வசதியாகக் காணப்படும் தன்மை, எந்த இடத்துக்கும் அருகிலேயே கிடைக்கும் வசதி... இப்படி பல காரணங்கள்...

இப்படிப்பட்ட பாறைப் பிரதேசங்களில் நிலத்தடி நீர் கிடைப்பது அரிது. ஆனால் இவற்றை ஆராய்ச்சி செய்யும் வேளையில் சில நேரம் தற்செயலாக அருமையான குடிநீர் இருக்குமிடம் தெரிய வாய்ப்புண்டு. இந்தியப் புவியியல் ஆய்வு நிறுவனம் (G.S.I) திருவான்மியூர் – கோவளம் அருகே நல்ல குடிநீர் இருப்பதைக் கண்டறிந்தது இப்படித்தான்.

இதன் வயது...?

சுமார் 2000 மில்லியன் வருடங்களுக்கு முற்பட்டவை என்பதிலிருந்து சுமார் 600 மில்லியன் வருடங்கள் வரை...

"லேட் ஆர்க்கேய"விலிருந்து, "முன் ப்ரொட்ரோஸோயிக்" (Late archaen to Early Proterozoic) வரை என்று டெக்னிகல் மொழியில் கணிப்பு.

ரேடியோ மெட்ரிக் ஏஜ் டேடா (Radiometric age data) மூலம் சில சார்னோகைட் பாறைகளின் வயது 3200 மில்லியன் வருடங்கள் என்று தெரிகிறதாம்... இதன் மூலம் பூமியின் பரப்பில் காலம் காலமாக ஏற்பட்ட மாறுதல்களின் வரலாற்றை அறிய முடிகிறதாம்...

சாலை அமைக்க, வீடுகட்ட என்று உபயோகமாகும் சார்னோகைட், நம் முன்னோரின் கற்பனைத் திறத்தில், கலை நயத்தில் கோயில்களாக, அரண்மனைகளாக உருவெடுத்தது...

இன்று டைமென்ஷனல் ஸ்டோன் (Dimensional Stone) என்ற பெயரில் கிரானைட் மார்க்கெட்டில் உயர்ந்த இடத்தைப் பிடித்துள்ளது.

கிளாஸிக் க்ரீன், ஒஷியானிக் ப்ளூ என்றெல்லாம் கிரானைட்டின் அமர்க்களமான பெயர்கள்... உலக அளவில் மிக முக்கியத்துவம் பெறும் சார்னோகைட் வகையை முதன் முதலில் சென்னை பரங்கிமலையில் கண்டு பிடித்து பெயரிட்டவர் சர். தாமஸ் ஹாலண்ட் (Sir. Thomas Holland).

இந்தியாவின் பல பகுதிகளிலும் பின்னர் இவற்றின் 'இருப்பு' கண்டுபிடிக்கப்பட்டது. கூட்டுப் பொருள்கள் (Composition) வேறுபாடு, மற்றும் விற்பனை வசதியை முன்னிட்டும், இப்பாறைகள் பல பெயர்களில் வலம் வருகின்றன.

நாமக்கல் நீலம், ஸ்ரீகாகுளம் நீலம், மேலூர் வெள்ளை என்று பெயர்கள்... எப்படியெல்லாம் வகைப்படுத்துகிறார்கள்...? பாறை இருக்கும் இடம் தெரிந்த பின், வரைபடம் தயாரிக்கும் வேலை... (Geological mapping the rocks) பின்னர் ரசாயன சோதனைச் சாலையில், அதனுள் உறைந்திருக்கும் தாதுப் பொருள்கள் என்னென்ன என்று சோதனை.

இந்த சார்னோகைட் உலகின் வேறு இடங்களில் இருக்கிறதா?

திரு வி.என்.வரதன், திரு. ஸ்ரீநிவாசன் இருவரும் ஒரே குரலில்,

"உகாண்டா, கென்யா, நைஜீரியா உட்பட பல ஆப்பிரிக்க நாடுகளிலும், ஆர்க்டிக், அண்டார்டிக்கா பிரதேசங்களிலும், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, சைனா, கனடா, ரஷ்யா போன்ற எல்லா இடங்களிலும் இருந்தாலும், முதலில் "கிடைத்த" பெருமை தமிழ்நாட்டுக்குத்தான்..." என்கிறார்கள்...

சிலசமயம் வெவ்வேறு நாடுகளில் கிடைக்கும் பாறைகளுக்குள் காணப்படும் சில நுட்பமான ஒற்றுமைகளைப் பார்க்கும் போது, எத்தனையோ மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, உலகின் தரைப் பகுதி எல்லாம் ஒன்றாக இருந்ததுஎன்ற உண்மையை நிரூபிப்பது போல இருக்கிறதாம்!

ஓர் இடத்தின் தாதுவளத்தை நிர்ணயிப்பது அங்கிருக்கும் பாறைகளின் அமைப்புதானாம்... எளிதில் பிரித்தெடுக்கவும், உற்பத்தி செய்யவும் வசதியான சிமெண்ட், பீங்கான், ரசாயன உரங்கள், அலுமினியம், இப்படி எத்தனையோ பொருள்களைப் பாறைகள் உள்ளடக்கியுள்ளன... இவை மட்டுமா...?

வைரம், தங்கம், வெள்ளி, பிளாட்டினம் போன்ற உயர் உலோகங்கள்...

நீலம், ஸஃபையர், டோபாஸ், அமிதிஸ்ட் ரூபி எனப்படும் செமி பிரிஷியஸ் கற்கள் (Semi precious stones) இவை எல்லாமே பாறைகளின் மடியில் பிறப்பவைதான்.

வெள்ளம் வழிந்தோடும் அணைக் கட்டுகளைக் கட்டும்போது சார்னோகைட் தான் பயன்படுகிறது.


தண்ணீர் அரிப்பினால் பாதிக்கப்படாததால், தண்ணீருக்கடியில் செய்ய வேண்டிய கட்டுமானப் பணிகளுக்கும் சார்னோகைட் கை கொடுக்கிறது.

எந்தக் கட்டுமானப் பணிக்கும் முன்பு, சார்னோகைட்டின் தன்மை, ரசாயன மாறுதலுக்கு உட்படும் தன்மை, உறிஞ்சும் தன்மை, உராய்வுத் தன்மை ஆகியவை நன்கு பரிசோதிக்கப் படுகின்றன.


இயற்கை வளம் என்றால் நாம் நினைப்பது பசுமை மட்டும்... ஆனால் எங்கெங்கு காணினும் மௌனமாக அமர்ந்து, வெயிலிலும் மழையிலும் தவம் செய்யும் ஞானியைப் போன்ற இந்தப் பாறைகள் நாட்டின் பொருளாதாரத்தையே உயர்த்தும் அளவு வளம் கொண்டவை.

யாராவது இனிமேல்... "உன் மனசு பாறாங்கல்" என்று திட்டினால்... பாறாங்கல்லில் இருக்கும் வளங்களை எண்ணித் திருப்தி பட்டுக் கொள்ளலாமே!

பாறை கிடைக்கும் குவாரி



'தேவா'விடம் தேவையா? கேள்விகள்...



'காதல்கோட்டை' படத்திற்கு இசையமைத்து சூப்பர் ஹிட் பாடல்களை வழங்கி 'சினிமா கோட்டை'யின் புகழ் ஏணியின் உச்சிக்குச் சென்றுவிட்ட 'தேனிசைத் தென்றல்' தேவா இன்று அதிகமான தமிழ் திரைப் படங்களுக்கு இசையமைத்து வரும் பிரபல திரைப்பட இசை அமைப்பாளராகத் திகழ்பவர்.

தேவாவை சென்னை சாலிகிராமம் பிரசாத் ஸ்டுடியோ பாடல் ஒலிப்பதிவுக் கூடத்தில் சந்தித்தோம். சத்யராஜ் நடிக்கும் 'வள்ளல்' படத்தின் பாடல் ஒலிப்பதிவில் பிஸியாக இருந்த தேவா, நமக்கு நேரம் ஒதுக்கி நாம் கேட்ட 'தேவையா?' கேள்விகளுக்கு தெளிவாக, நிதானமாக, சுவையாக பதில்கள் கூறியதை இங்கே தொகுத்து வழங்கி உள்ளோம்...

இன்றைய சினிமா பாடல்களில் இசையின் ஆதிக்கம் தேவையா?

"என்னைப் பொறுத்தவரை இசை, பாடல் வரிகளுக்காக இருக்க வேண்டும். ஒரு பாடலுக்கு முக்கியமே பல்லவி, வரிகள்தான். அதுதான் நிஜம். இசை நிழல். கவிஞர்கள் பாடலில் எழுதும் வார்த்தைகள் மக்களுக்குப் போய்ச் சேரணும்னா, இசை ஆதிக்கத்தை விட வார்த்தைகள் ஆதிக்கம்தான் இருக்க வேண்டும். அதுதான் என்றைக்குமே நல்லது. ஒரு ஹார்மோனியம், தபேலாவை மட்டும் வைச்சு பெரிய பெரிய தத்துவப் பாட்டெல்லாம் உருவாக்கியிருக்காங்க. கம்ப்யூட்டர் இசை தந்தாலும், நல்ல வரிகள் வரும்போது சாஃப்ட் செய்வது நல்லது."

தற்போது பாடல்களில் நல்ல நெறிகளைக் கூறாமலிருப்பது தேவையா?

"அந்தக் காலத்தில் எம்.ஜி.ஆர் பாடல்களில் ஒழுக்கத்தை, உயர்பண்பை, கட்டுப்பாட்டை, நல்ல உபதேசங்களைக் கூறியதை ஆர்வத்தோடு கேட்டாங்க. இப்ப அந்த மாதிரி அட்வைஸ் பண்ற பாடல்களைக் கேட்கற மனோபாவம் ரசிகர்களிடம் குறைஞ்சிடிச்சு. அப்படியும் என் இசையில் பல பாடல்களில் நல்ல நெறிகளைச் சொல்லிட்டுத்தான் இருக்கேன். செந்தூரபாண்டி, ரசிகன் படத்தில் சொன்னேன். ரஜினிசாரோட 'பாட்ஷா' படத்தில் 'எட்டு எட்டா மனுஷன் வாழ்வை பிரிச்சுக்கோ' பாடலில் நல்ல தத்துவம் இருந்ததே! ரஜினிசார் மக்களுக்கு நல்ல விஷயங்கள் சொல்வதில் ஆர்வமா இருக்கிறவர். 'அண்ணாமலை' படத்தில் 'வந்தேன்டா பால்காரன்' பாட்டிலே வாழ்க்கை நெறியைச் சொன்னாரே. இது மாதிரி பல படங்களில் நல்ல நெறிகளைப் பாடல்களில் தந்து கொண்டுதான் வருகிறேன். ஆனா அது எடுபடுவது ரசிகர்கள் கையிலேதான் இருக்கு."

இன்றைய பாடல்களில் இத்தனை வேகம் தேவையா?



"என்ன செய்யறது? இப்பவாழ்க்கையே படு டென்ஷனா வேகமா அமைஞ்சு இருக்கே..? எல்லா சாங்ஸ் கேட்கற பொறுமை இப்ப யாருக்கும் இல்லையே. முன்பெல்லாம் தியேட்டர் அருகிலேயே வீடு இருந்தது. இப்போது தியேட்டர் டவுனில் இருக்க, வீடு அவுட்டரில் இருக்கிறது. கடைசி பஸ் இரவு பத்து மணிக்கு. படம் முடிந்து பஸ்ஸைப் பிடித்து வீடு போக வேண்டிய அவசரம். படத்தில் பாடல் மெதுவாக இருந்தால் படம் முடிய 'லேட்' ஆகுமோ என்ற பயம் வந்து விடுகிறது. வேகமாக இருந்தால்தான் ரசிகரால் படத்தை டென்ஷன் இல்லாமல் பார்க்க முடிகிறது. உதாரணத்திற்கு இதைச் சொன்னேன். இன்றைய இளைய தலைமுறைக்கு வேகமான பாடல்கள்தான் பிடிக்குது. அவைதான் ஹிட் ஆகுது. ஆனால் என்னைப் பொறுத்தவரை காலத்தால் அழிக்க முடியாதது மெலோடிதான். முல்லை மலர் மேலே... அத்தான் என் அத்தான்..., பாடல்கள் மாதிரி வருமா? ஆனால் இடைவேளை முன்னாலோ, கிளைமாக்ஸ் முன்னாலோ ஸ்லோ சாங்ஸ் வந்தால் இன்றைய ரசிகர்கள் பொறுமை இழந்து எழுந்து சென்று விடுகிறார்கள்."

இசை அமைப்பாளரே பாடுவதும் தேவையா?

"நான் 'பாட்ஷா' படத்திலே 'ஆட்டோகாரன்' பாடலைக் கம்போஸ் செய்யும்போது ரஜினிசார் அந்தப்பாடலை என்னைத்தான் பாடச் சொன்னார். என் குரல் ரஜினிசாருக்குப் பொருந்தாது என்று கூறி மறுத்து, எஸ்.பி.பியைப் பாட வைத்தேன். பாடல் ஹிட் ஆனது. இப்போது 'காதல் கோட்டை'யில் 'கவலைப்படாதே சகோதரா' பாடலை நானே மனம் சம்மதித்துப் பாடினேன். ஹிட் ஆகி இருக்கிறது. எனவே கேரக்டர் குரலுக்குப் பொருத்தமாக இருந்தால், இசை அமைப்பாளர் பாடுவது தேவைதானே? 'அம்மா' பாடல்களைப் பாடுவதில் இளையராஜா பொருத்தமானவராக இருக்கிறார் இல்லையா? எல்லா இசை அமைப்பாளர்களும் பாடி இருக்கிறார்கள். பாடியும் வருகிறார்கள். அதில் தவறில்லை!"

நடிகர், நடிகைகள் சொந்தக் குரலில் பாடுவது தேவையா?

"நல்ல குரல் வளமும், இசை ஞானமும் உள்ள நடிகர், நடிகைகள் பாடுவது தேவைதான். கமல் மிக அருமையாகப் பாடுவார். இப்போது என் இசையில் 'அவ்வை சண்முகி' படத்தில் பெண் குரலில் 'ருக்கு... ருக்கு' என்ற பாடலை கமல் பிரமாதமாகப் பாடியிருக்கிறார். அந்தப் பாட்டு நல்ல ஹிட் ஆகும் . 'பட்டுமாமி' குரலில் பாடி இருக்கார். என் இசையில் நெப்போலியன், சரத்குமார் எல்லாரும் பாடியிருக்காங்க. நடிகர்கள் பாடுவது ஓர் ஆசைக்குத்தான். நடிகை ஸ்ரீவித்யா நல்லாப் பாடுவார். அவர் பிரபல பாடகியின் மகள் ஆயிற்றே.. மனோரமா நல்லாப் பாடுவாரே.. நிறையப் பாடியிருக்கார். அதனாலே நடிக்கும் கலைஞர்கள் மட்டும் இல்லை.. குரல் வளம் உள்ள யார் பாடுவதும் தேவைதான்!"

இசை அமைப்பாளர்களிடையே போட்டி தேவையா?

"போட்டி அவசியம் தேவை. அவர் இந்தப் படத்திலே எல்லாப் பாடல்களையும் ஹிட் பண்ணிட்டார். நாமும் அதைவிட சூப்பரா ஹிட் செஞ்சு காட்டணும்னு போட்டி இருக்கணும். ஆனா நம்மை விட அதிகமா சம்பாதிச்சு கார் வாங்கிட்டானே.. பங்களா வாங்கிட்டானேன்னு பொறாமைப் படக்கூடாது. போட்டி இருந்தால்தான் மக்களுக்கு நல்ல பாடல்கள் நிறையக் கிடைச்சுகிட்டே இருக்கும்."

பழைய பாடகர்கள், பாடகிகளுக்கும் வாய்ப்பு தருவது தேவையா?


"இப்ப எத்தனையோ புதிய பாடகர்கள், பாடகிகள் வந்தாலும் டி.எம்.எஸ்., பி.சுசீலா, ஜானகி, ஜிக்கி குரல் இனிமையை நம்மாலே மறக்க முடியவில்லையே. இருந்தாலும் அவங்க நிறையப் பாடி சாதனை செய்து காட்டிவிட்டார்கள். புதியவர்கள் சாதனை செய்ய வாய்ப்பு தருவதுதானே சரி.? இருப்பினும் இந்தப் பாட்டை டி.எம்.எஸ்தான் பாட முடியும்னு இசை அமைப்பாளர் நினைச்சா, அவருக்கு வாய்ப்பு தருவதும் தேவைதான்."

ஆபாச வரிகள் உள்ள பாடல்களுக்கு இசை அமைப்பது தேவையா?

"தேவையில்லைதான். டைரக்டர் சொல்லும்போது கேட்க வேண்டிய நிலை சில சமயம் வருகிறது. இப்போது பெரும்பாலும் ஆபாச வரிகள் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். நாங்கள் ஆபாச ட்யூன்களை உருவாக்குவதில்லை. பாடலாசிரியர்கள் ஆபாச வரிகளை எழுதினால் நாங்கள் எப்படி பொறுப்பேற்க முடியும்? அப்படியும் ஆபாசப்பாடல் வேண்டாம், இலைமறைவு காய் மறைவாக சொல்லிவிடலாம் என்று டைரக்டரிடம் யோசனை கூறிவிடுவேன். இப்போது ஆபாசவரிப் பாடல்கள் குறைந்து வருகின்றன."

இசை அமைப்பாளர்கள் சொந்தப் படம் எடுப்பது தேவையா?

"தேவை இல்லாத வேலை அது. படம் எடுப்பது சாதாரண விஷயமில்லை. பல பிரச்னைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். படத்தையும் தயாரிச்சுகிட்டு இசையும் அமைக்க முடியாது. என்னைப் பொறுத்தவரை கமர்ஷியல் வேறு. கலை வேறு. பாடல் பதிவு கூடம் வந்ததும் நான்




வீட்டை மறந்து, எல்லாவற்றையும் மறந்து இசையில் மூழ்கிடுவேன். தயாரிப்பாளரா இருந்தா, 'அதுக்கு இவ்வளவு பணம் தரணும், இதுக்கு இவ்வளவு தரணும்'னு சிந்தனைகள் வந்தால், பாட்டு வராது. பரிதாபம்தான் வரும். தெரிஞ்ச தொழிலைச் செய்வதுதான் நல்லது. எனக்குத் தெரிஞ்சது இசை மட்டும்தான். வேறு தொழில் தெரியாது. தெரியாத தொழிலில் இறங்கினா கஷ்டப்படணும், நஷ்டப்படணும். அவங்கவங்க தொழிலைச் செஞ்சால்தான் நிம்மதியா இருக்கமுடியும்.''

ஹீரோ சம்பளம் உயர்த்துவது போல் இசை அமைப்பாளரும் சம்பளம் உயர்த்துவது தேவையா?

''படம் நல்லா ஓடினா உயர்த்துவாங்க.. ஓடலைன்னா குறைப்பாங்க. என்னைப் பொறுத்தவரை நாமாக சம்பளத்தை ஏற்றுவதை விட தயாரிப்பாளர் பார்த்து அவராகவே மனம் உவந்து உயர்த்துவதுதான் பெருமை. எவ்வளவு கொடுத்தாலும் அவருக்குத் தகும்னு பெயர் வாங்கணும்.''

புராணப் படங்களுக்கும் இசை அமைக்கும் திறமை இன்றைய இசை அமைப்பாளருக்குத் தேவையா?

''கண்டிப்பாகத் தேவை. எல்லா வகைப் படங்களுக்கும் இசை அமைக்கத் தெரிந்திருக்க வேண்டும். நான் பல ஆயிரக்கணக்கான பக்திப் பாடல்களுக்கு இசை அமைத்து கேசட் வெளியிட்ட அனுபவம் இருப்பதால் என்னால் புராணப் படங்களுக்கு மிகச் சிறப்பாக இசை அமைக்க முடியும். புராண நாடகங்களுக்கு இசை அமைத்திருக்கிறேன். அந்த வாய்ப்பை எதிர்பார்க்கிறேன்.''



பாடல்களே இல்லாமல் படங்கள் எடுப்பது தேவையா?

''சப்ஜெக்ட் அப்படி இருந்தால் தேவைதான். ஆனால் நிச்சயம் ரீரிக்கார்டிங் இல்லாமல், இசை அமைப்பாளர் இல்லாமல் படம் எடுக்கமுடியாது. பாடலில் மட்டும்தான் ஹிட் ஆக்கிப் பெயர் பெறமுடியும் என்று இல்லையே. ரீரிக்கார்டிங்கிலும் ரசிகர்களை அசத்திப் பெயர் வாங்கலாமே?''

பேட்டி – படங்கள்:

விஜயா கண்ணன்.

சோழர்கள் கட்டிய ஒலக்கூர் கோயில்

தாமரைக் கண்ணன்

அமைவிடம்

தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனத்திற்கு வடக்கே பதினைந்து கிலோ மீட்டர் தூரத்தில் ஒலக்கூர் எனும் இயற்கை எழில் நிரம்பிய ஊர் உள்ளது. சென்னை—திருச்சி தேசிய நெடுஞ்சாலையிலிருந்து மேற்கே இரண்டரை கிலோ மீட்டர் தூரம். திண்டிவனத்திலிருந்து நகரப் பேருந்துகள் இவ்வூருக்குச் செல்கின்றன.

பழைமைச் சிறப்பு

ஒலக்கூர், இரண்டாயிரம் ஆண்டுகளாகவே பெயரும் புகழும் பெற்றுள்ள, ஊர். பல அரசர்களின் போர்களைக் கண்ட, ஊர். 1400 ஆண்டுகளுக்கு முற்பட்ட கடைச் சங்ககால அரசர்களின் வழி வந்த அதியமானைப் பற்றிய குறிப்பு ஒலக்கூரில் உள்ளது. 9 ஆம் நூற்றாண்டின் கம்பவர்மனைப் பற்றிய செய்தியும் உள்ளது. அதன் பின், தமிழகத்தையும் பிற பகுதிகளையும் ஆண்ட சோழப் பேரரசர்கள் இவ்வூருடன் பெரிதும் தொடர்பு கொண்டிருந்தனர்.

ரெயில்வே பாதையைக் கடந்த உடன் மேல்நிலைப் பள்ளிக்குக் கிழக்கே உள்ள மாபெரும் குடிதண்ணீர்க் குளம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இது, முதலாம் இராசராசன் காலத்திய குளம் ஆகும்.



காமாட்சி அம்மன்

ஊரின் பெயர் உலக்கையூர்

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், இது 'உலக்கையூர்' என்ற பெயரிலேயே வழங்கியது. பிற்காலத்தில் 'ஒலக்கூர்' என்றனர்.

திண்டிவனம், கிடங்கில், மாவிலங்கைப் பகுதிகளைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த நல்லியக்கோடன் நாடு, ஒய்மா நாடு. இவ்வூர் 'ஒய்மா நாடான விஜைய ராஜேந்திர வளநாட்டு உலக்கையூரான இராஜமகேந்திர நல்லூர்' எனப் பெற்றது.

முதலாம் இராசாதிராசன், முதலாம் இராசேந்திரனின் மூத்த மகன். இவனுடைய மற்றொரு பெயர், விஜைய ராஜேந்திரன். இவன், மேலைச் சாளுக்கியர் தலைநகரமாகிய கொல்லாபுரத்தையும் கல்யாணபுரத்தையும் வெற்றி கொண்டு போர்க்களத்திலேயே யானை மீதிருந்து உயிர் துறந்தான். இப்பெருவீரனின் பெயரிலேயே, இவன் காலத்திலும் (1018–1054) அதற்குப் பின்னரும், விஜைய ராஜேந்திர வளநாடு என்று உலக்கையூர்ப் பகுதிகளும் ஏனைய இடங்களும் பெயர் பெற்றன.

குலோத்துங்கன் 1137-38 இல் கற்களால் கட்டிய கோயில்



உலக்கையூருக்கு, இராசமகேந்திர நல்லூர் என்ற மற்றொரு பெயரும் வழங்கியது. இப்பெயர் இரண்டாம் இராசேந்திரனின் பட்டப் பெயர்களுள் ஒன்று. முதலாம் இராசேந்திரன் ஆட்சியின்போது, செங்கற்பட்டு மாவட்டம் திருவாலங்காடு கோயிலுக்கு கொடை அளித்ததைத் தெரிவிக்கும் செப்பேடு ஒன்று அங்கே உள்ளது. அதில், உலக்கையூருடையான் என்பவன் சாட்சிக் கையொப்பம் இட்டுள்ளான். அந்த அளவுக்குச் சோழர்களோடு தொடர்புடைய ஊர், இது.

இவற்றால், சோழர்களின் கவனத்தை இவ்வூர் பெரிதும் கவர்ந்திருந்தது என்பதை உணரலாம்.

அரசன் அதியமானைப் பற்றிய குறிப்பு

ஒலக்கூர் அகத்தீசுவரர் கோயிலுக்கு அருகில் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்குரிய

தமிழ் வட்டெழுத்தில் எழுதப் பெற்ற அரிய கல் ஒன்று நடப்பட்டுள்ளது. இது ஒரு நினைவுக் கல்லாகும்.

'பிரிதிவி விடங்கற்கு அதிஅரைசந் செய்வித்தது' என்று அதில் எழுதப் பட்டுள்ளது.

கங்க அரசர்கள் 'பிரிதிவி' என்ற பெயரையுடையர்கள். சங்ககாலம், பல்லவர் காலத்திலிருந்து பிற்காலச் சோழர்கள் காலம் வரை போர் மூலமாகவும் நட்புமூலமாகவும் இவர்களுக்குத் தமிழகத் துடன் தொடர்பிருந்தது, அவர்களுள் பிரிதிவி விடங்கன் என்பவன் இவ்வூரில் நடந்த போரில் இறந்திருக்கலாம்.

தகடூரை (தற்போதுள்ள தருமபுரியை) ஆண்ட அதியமான் மரபில் வந்த அரசனுக்கு அவன் நண்பனாக இருந்திருக்கலாம். அதனால் இவனுடைய நினைவாக இங்கே நினைவுக்கல்லை அமைத்திருக்கலாம்.

இந்நினைவுக் கல்லின் தலைப்பில், பண்டைக்காலத்தின் 'தாய்த் தெய்வத்தின்' வளர்ச்சி பெற்ற கஜஇலட்சுமி வடிவம் அழகாகப் பொறிக்கப்பட்டுள்ளது. தாமரை மலர் மீது இலட்சுமி வீற்றிருக்க, இரு பக்கமும் தண்டுகளோடு கூடிய விளக்குகளும், தலைக்குமேல் குடையும் காணப்படுகின்றன,

வரலாற்று ஆர்வமுடைய அனைவரும் பார்த்து மகிழ வேண்டிய அழகிய நினைவுக் கல் இது.

கம்பவர்மன் யானையால் ஊர் அழிந்தது.

காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மூன்றாம் நந்திவர் மனின் மகன் கம்பவர்மன் காலத்தில் (கி.பி. 846–878) இவன், ஒலக்கூரில் யாருடன் போரிட்டான் என்பது புலப்படவில்லை.

ஆனால் இவனுடைய யானை ஒன்று இவ்வூரையே அழிவுக்குள்ளாக்கியது. அப்போது இவ்வூரைச் சார்ந்த தொடுப்பட்டி மாத்திரகன் என்னும் யானைப் பாகன் போரிட்டு வீர மரணம் அடைந்தான். அவனுக்காக ஒரு நடுகல் எடுக்கப்பட்டு அவன் உருவமும் இச்செய்தியும் பொறிக்கப்பட்டன. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நடுகல், ஊர்ச்சாவடி அருகே, எல்லாரும் அறிந்து மகிழும் இடத்தில் நடப்பட்டது.

1909 வரை அங்கே இருந்த அந்த நடுகல், இப்போது காணப்படவில்லை.



தென்முகக் கடவுள் (தட்சிணாமூர்த்தி)



சோழப் பேரரசர்களுக்குத் தொடர்புள்ள கோயில்

ஒலக்கூரில், அகத்திசுவரர் என்ற கோயில் உள்ளது. கிழக்குப் பார்த்துள்ள இக்கோயிலின் நுழைவாயில் தெற்கே அமைந்துள்ளது.

இராஜகோபுரமோ, மதிற் சுவர்களோ இல. கருவறையில் உள்ள சோழர்கால இலிங்கம், தாமரைப் பீடத்தின் மேல் இருக்கிறது. மண்டபச் சுவரில் அழிந்த நிலையில் சோழர் கால ஓவியங்கள்,

அம்மையின் பெயர், காமாட்சியம்மன். தனிக் கோயில், கிழக்கு நோக்கி...! மேற் கைகளில் அங்குசமும் பாசமும் துலங்க, கீழ்க் கைகள் அபய, வரத நிலையில் உள்ளன.

வியப்புக்குரிய பராந்தகன் காலச் சிலைகள்

இக்கோயிலில் உள்ள நந்தி, தென்முகக் கடவுள் (தட்சணாமூர்த்தி) எழு கன்னியர் (சப்த மாதர்) ஆகிய உருவத் திருமேனிகளை (கற்சிலைகளை) ஆராய்ந்த வரலாற்று அறிஞர்கள், இவை பராந்தகன் (கி.பி. 907–953) காலத்தவை எனக் கணிக்கின்றனர்.

இதனால், பராந்தகன் காலத்திலேயே இங்கு கோயில் அமைந்திருக்கலாம் என்று எண்ணலாம்.


கோயிலுக்கு வெளியில் உள்ள பைரவர் சிலை 13–ஆம் நூற்றாண்டிலும், காமாட்சி அம்மன் சிலை 16–ஆம் நூற்றாண்டிலும் அமைக்கப் பெற்றவை.

முதலாம் குலோத்துங்கன் காலத்திய திருப்பணி

முதலாம் குலோத்துங்கனின் 41ஆம் ஆட்சியாண்டில் (1110–1111), கருவறைத் தலம் செய்வித்து, ஸ்ரீ பாத பீடமும், நெய்தாங்கியும் (தீப ஸ்தம்பம்) அமைத்து, விக்னேஸ்வரதேவரை (விநாயகரை)யும் செய்து வைத்தனர்.

கண்ணிபாக்கிழான் பன்பன் உலகநாதன் என்பவன், கோயிலில் திருநுந்தாவிளக்கு ஒன்று வைக்க, உண்ணாழிகை (கருவறை) சபையாரிடம் ஐந்து பொற்காசுகளை ஒப்படைத்தான். இச்செய்தி தெற்குச்சுவரில் உள்ளது. இதே செய்தி வாயிற்கதவுக் கல் தூண்களிலும் செதுக்கப்பட்டுள்ளது.

← பைரவர்



இரண்டாம் குலோத்துங்கன் கட்டிய கற்கோயில்

விக்கிரம சோழன் மகன் இரண்டாம் குலோத்துங்கனின் 5ஆம் ஆட்சி ஆண்டில் (1137–38) அவன் தன் பட்டத்து அரசியான புவனமுழுதுடையாளோடு வீற்றிருந்த போது, இத் திருக்கோயிலைக் கற்றளி (தளி – கோயில்)யாகக் கட்ட இராசேந்திர தேவர் என்பவன் நூறு கழஞ்சு பொன் கொடுக்க முனைந்தான்.

பஞ்ச அங்கத்தையும் (பஞ்சாங்கம்) பார்த்து, அதற்கேற்ப, கற்றளியை நிறுவினர்.

தற்போதுள்ள கோயில் அவன் காலத்தில் கட்டப் பெற்றதே. கீழ்ப்பாகம், கருங் கற்களால் கட்டப்பட்டு, மேலேயுள்ள பகுதிகள் செங்கற்களால் கட்டப்பட்டுள்ளன.

எக்காரணத்தாலோ, ஐம்பது கழஞ்சு பொன் காலம் தாழ்த்தி வந்தது. இதன் இடையில் அரைகுறையாக, நின்றுபோன கோயில் திருப்பணியை முடிக்கக் கோயிலில் தேவாரம் பாடுவோரையும் மற்றை யோரையும் அணுகினர். அவர்களால் இயலாமற்போனதால், பின்னர் வந்த ஐம்பது கழஞ்சு பொன்னில், இருபத்து ஐந்து கழஞ்சு பொன்னுக்குக் கோயிலுக்கு சோமாஸ் கந்தத் திருமேனியைச் (சிவன், உமை இடையில் முருகன் உள்ளது) செய்துவிட்டு, மற்ற இருபத்தைஞ்சு பொன்னுக்கு நிலம் வாங்கி அதன் வழி வந்த வருவாய், வட்டி ஆகியவற்றைக் கொண்டு கோயில் கட்டி முடிக்கப் பெற்றது.



குடையின் கீழ் பெண் தெய்வம் அமர்ந்த நிலை

இரண்டாம் இராசாதிராசன் காலத்தில் ஒரத்தி பற்றி நடந்த வழக்கு

இரண்டாம் இராசாதிராசனின் 4ஆவது ஆட்சி ஆண்டில் (1166–67) நடந்தது, இது.

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து, ஒய்மாநாடான விசைய இராசேந்திர வளநாட்டு எயில் நெடுங்கல் நாட்டு நெடியத்தில் இருந்த குடிப்பள்ளி அப்பன் சாத்தன் என்பவனும், வெண்குன்றக் கோட்டத்து (வந்தவாசி) உரத்தி நாட்டு உரத்தி (தற்போதுள்ள ஒரத்தி எனும் ஊர்) ஒரளி உதையன் பெருமாள் என்பவனும் சேர்ந்து வேட்டை ஆடச் சென்றனர்.

அப்போது, ஒரளி உதையன் பெருமாள், கலைமானையோ அல்லது ஒரு பறவையையோ குறி பார்த்து எய்த அம்பு, தவறுதலாக அப்பன் சாத்தன் மீது பட்டு அவன் இறந்துபோனான்.

இது பற்றிப் பட்டப் பெருமக்களும் பெரிய நாட்டார்களும் வேறு பல நாட்டைச் சேர்ந்தவர்களும் ஒருங்குகூடிப் பேசினர்.

அப்பன் சாத்தனைத் தவறுதலாய்க் கொன்றுவிட்ட பாவம் நீங்க, அகத்தீசுவரர் கோயிலில் ஒரளி உதையன் விளக்கு வைக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கினர்.

அதன்படி, அவன் தன் பாவம் நீங்கக் கோயிலில் ஒரு நுந்தா விளக்கை வைத்து அதனை எரிப்பதற்கு (நெய்க்காக) 32 பசுக்களையும் ஓர் எருமையையும் திருவுண்ணாழிகை (கருவறை) சபையாரிடம் கொடுத்தான். சூரிய, சந்திரர் உள்ள வரை அந்த விளக்கை எரிப்பதாகக் கூறி அவர்களும் ஒப்புதல் அளித்தனர்.

அரியண உடையார் காலத்தில் கைக்கோளர் நிலையும் கோயிலும்

இரண்டாம் அரிகரர் என்று அழைக்கப் பெற்ற அரியண உடையார் ஆட்சியில் (விபவ ஆண்டு, பங்குனித் திங்கள் 10–ஆம் நாள் கி.பி. 1388–89) இக் கோயிலிலும் ஊரிலும் முக்கியமான வரலாற்றுச் செய்தி நடந்துள்ளது.

உலக்கையூர் ஊரவரும் கோயில் சபையாரும் திருவகத்தீசுவரர் கோயிலைச்

சுற்றியுள்ள திருமடைவளாகத்தில் கைக்கோளர்கள் தங்கித் தொழில் செய்ய அநுமதியளித்தனர். ஆனால், அவர்கள் தறிவரியும் கோயிலுக்குரிய நிலவரியும் கட்டாமல் ஊரைவிட்டுப் போய்விட்டனர்.

இதனால், கோயிலைச் சுற்றி இருந்த இடம் (திருமடைவளாகம்) பாழாயிற்று. சுவாமிக்கும் பூசை செய்ய முடியாமல் கோயிலையும் அடைத்து விட்டனர்.

மீண்டும் கைக்கோளர்களைத் திருமடைவளாகத்தில் குடியமர்த்தி, அவர்கள் தறியிட்டு நெய்வதற்கு வாய்ப்பும் அளிக்கப்பட்டது. .

அடுத்த கக்கில ஆண்டு முதல் சந்திரன். சூரியன் உள்ளவரை, ஆண்டுதோறும் தறி வரி, வாசல் பணம், சொடி, சுல்வரி, வால்வரி, தலை ஆரிக்கம், நத்த வரி, பழவரி, புது வரி முதலான பல வரிகளையும் விதித்து, அனைத்து வரிகளுக்கும் குத்தகையாக நான்கு பணமும், நூல் வரியாக ஒரு பணமும் ஆக ஐந்து பணமும் ஏற்றுக் கோயில் வழிபாடுகளைச் சிறப்புறச் செய்தனர்.

கோயில் மேற்குச் சுவரில் உள்ள இச் செய்தியால், அக்காலத்தில் விதிக்கப்பெற்ற வரிகளைப் பற்றி நாம் அறியமுடிகிறது.

நிறைவுரை

ஒலக்கூரில் உள்ள திரு அகத்தீசுவரர் கோயில் மூலமாக, சோழப் பேரரசர்கள் தங்கள் ஆட்சியின் கீழிருந்த ஒவ்வோர் ஊரிலும் கவனம் செலுத்தியமை – சமய வழிபாட்டின் மூலம் சமுதாயத்தை மேன்மைப்படுத்தியது – ஊரின் கோயிலில் தேவாரம் பாடிய ஓதுவார்கள் நிலை – ஆளுமையுடைய நாட்டார், கோயில் சபையார் அதிகாரம் – தவறுக்குத் தண்டனையும் தீர்ப்பும் – சமுதாய அமைப்பு முறையும் வரி விதிப்பும் போன்ற ஆயிரம் ஆண்டுகளின் வரலாற்றுச் செய்திகளை நாம் உணர்கிறோம்.

தொன்மைப் புகழ் வாய்ந்த இவ்வூருக்கு அனைவரும் ஒருமுறை சென்று மகிழலாம்!

விவரம் தெரியவில்லை

முகவை முத்து





நீ
நடந்து போகிறபோது
தெருப் புழுதியில்
உன் காலும் கூடச்
சித்திரம் போடுகிறதே... ...!

அவை என்ன
சித்தன்ன வாசலிலே
வாங்கியவையா?

●

உன் நிழல் கூட
சிற்பக் கலைக்கு
இலக்கணம் சொல்கிறதே... ...!

நீ என்ன
மாமல்ல புரத்திலே
பிறந்தவளா?

●

உன்கை வளையல்கூட
கச்சேரி பாடுகிறதே... ...!

●

எனக்கு மட்டும்
விரைவாய்க் கடத்தும்
விவரம் தெரிந்திருந்தால்,

ஏ...!
சந்தனச் சோலையே!
உன்னை
என்றோ திருடியிருப்பேன்!

காலத்தை வென்று...

நா.சீ. வரதராஜன்





புத்தன் வாழ்ந்த தேசமிது!
புனிதன் காந்தியின் தேசமிது!
சித்திரை யினிலே வன்முறை களுக்கே
இடமென்றால்மிக மோசமது!

அறப்போ ராலே வென்றவர்நாம்
அகிம்சை நெறியில் நின்றவர்நாம்
இறப்போ மெனினும் கவலைகளில்லை
இதுவே யெம்வழி என்றவர் நாம்!

வெடிகுண்டும் கொலை கொள்ளைகளும்
வேண்டாதவரெனில் தொல்லைகளும்
குடிகொண்டனநம் பாரதத்தில் நிலை
குலைந்தவர் நாமும் பிள்ளைகளும்!

பதவிகளில் போய் அமர்ந்தவர்கள்
பணபலம் பெருக்கி நிமிர்ந்தார்கள்.
உதவுவ தென்றால் வஞ்சமில் லாமல்
ஒழியா தெனும் நிலைக் கிழிந்தார்கள்!

அன்பும் பண்பும் பறந்துவிட
ஆன்றோர் சொல்லை மறந்துவிட
துன்பத் துழல்வோர் தோள்களிலேறித்
துட்டர்கள் வாழ்க்கை சிறந்துவிட...

இப்படி யொருநிலை வளருவதா?
என்றே வீணே அலறுவதா?
எப்படியேனும் இந்நிலை மாற்றம்
எண்ணமில் லாமல் தளருவதா?

ஒற்றுமை யாகக் கிளர்ந்தெழுவோம்!
ஓங்கிடும் இருளைக் களைந்தெறிவோம்!
கற்றவர் அறிஞர் ஒன்றுபட்டால் நாம்
காலத்தை வென்றே வளர்ந்திடுவோம்!



கூடல் அழகர் - உற்சவர்

அறங்காவலர்
டி. ஆர். தினகரன்



கூடல் அழகர்! மாட மதுரைக் கோவலர்!

குன்றக்குடி பெரிய பெருமாள்

திருநாகைத் திருப்பதிக்குத் திருமங்கை ஆழ்வார் வருகைபுரிந்தார். அங்கே எழுந்தருளித் திருவருள் பாலிக்கும் எம்பெருமானின் எழிலார்ந்த திருக்கோலத்தைக் கண் பனிக்கக் கண்டு மகிழ்ந்த திருமங்கைப்பிரான். "ஒப்பற்ற பெருமானின் திருவழகை என்னென்று சொல்வேன்?" "ஆகா! இவர் எழிலின் திருக்கூடம்!" "இவர் அழகின் உயிரோவியம்!" என்றெல்லாம் நெகிழ்ந்துருகிப் பாடியருளினார்


"அச்சோ! ஒருவர் அழகியவா!" என்பது திருமங்கைப்பிரானின் திருநாகைப் பாசுரத் திருவாக்கு

பேராயிரம் கொண்ட திருநாகைப் பெருமானின் பேரழகை வியந்தும். நயந்தும் ஏற்றிப் போற்றி நின்ற ஆழ்வாரின் நெஞ்சகத்தே, ஏற்கெனவே தாம் சேவித்து வந்த உறையூர் அண்ணலும், மதுரை அழகரும் தோற்றம் தர, திருநாகையில் சேவை சாதிக்கும் பெருமான்– "கோழியும் கூடலும் கோயில் கொண்ட கோவலரே ஒப்பர்!" எனப் பாடிப் பரவசம் கொண்டார். 'கோழி' என்பது உறையூர் 'கூடல்' என்பது மதுரை.

வந்திருப்பதோ திருநாகைத் திருப்பதி; சேவித்துச் சிந்தை மகிழ

கூடலழகர் திருக்கோயில் இராஜகோபுரம்





இராஜ கோபுரம் - அஷ்டாங்க விமானம்

நிற்பதோ பேரழகு கொண்ட திருநாகைப் பெருமானின் சந்நிதி. ஆனால் பெருமானின் பேரெழிலைப் பெரிதுவந்து அனுபவிக்கும் ஆழ்வாரின் எண்ணமும், இதயமும் எங்கோ தொலைவிலுள்ள உறையூருக்கும் மதுரைக்கும் சென்று, வடிவழகின் வனப்பை ஒப்பிட்டுப் பார்த்து, உவகை கொள்கின்றன.

மதுரையம்பதியில் கோயில் கொண்டுள்ள எம்பெருமானின் திருநாமமே 'கூடல் அழகர்' ஆயிற்றே! அதனாலதான் அழகிய பெருமானின் அழகினை அகம் குளிர அனுபவித்த திருமங்கை ஆழ்வார், திருநாகையில் நின்றும், திருக்கூடல் அழகரை நினைந்து மகிழ்ந்துள்ளார்.

எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கை ஆழ்வார், கூடல் அழகரின் பேரெழிலைக் கண்டு மகிழ்ந்தது போலவே, ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீவில்லிபுத்தூர் பெரியாழ்வார், கோவலர், கோவிந்தர், கூடல் அழகரின் பேரழகுத் திருக் கோலத்தைக் கண்டு மகிழும் பெரும் பேறு பெற்று, பெருமானின் திருவழகு கண்ணேறு பட்டுவிடுமோ எனக் கருதி, 'திருப்பல்லாண்டு' பாடியருளியுள்ளார்.

"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு, பல் கோடி நூறாயிரம், மல்லாண்டதிண்தோள் மணிவண்ணா!" எனத் தொடங்கி, பெரியாழ்வார் 'திருப்பல்லாண்டு' திருவாய் மலர்ந்தருளியது ஒரு தெய்வ சங்கல்பம்! ஆம்; அது ஒரு தெய்விகச் சம்பவம்!

மதுரையைத் தலைப்பதியாகக் கொண்டிருந்த பாண்டிய மாமன்னன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன், (கிபி.835-862) 'பரம்பொருள் யாதென ஐயமின்றி அறிந்து கொள்ள மனம் கொண்டான். எனவே கற்றறிந்த சான்றோரின் அவையைக் கூட்டித் தனக்கு மனம் கொள்ளுமாறு, பரம்பொருள் பற்றிய மெய்ப்பொருளை எவர் சரியாய் உணர்த்துவாரோ, அவர் அவையில் கட்டியுள்ள பொற்கிழியை எடுத்துச் செல்லலாமென மன்னன் அறிவித்தான். பெரியாழ்வாரைச் சிறப்பித்து மகிழ விருப்பம் கொண்ட பெருமாள், மதுரை சென்று, மன்னன் அவையில் பங்கேற்குமாறு, கனவில் பெரியாழ்வாருக்கு ஆணையிட்டார். பெருமாளின் பெருங்கருணையினாலே, ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து மதுரையம்பதிக்கு வருகை தந்த பெரியாழ்வார், அவையில் பங்கேற்று, 'நாராயணனே பரம்பொருள்' என நிலைநாட்டிப் பொற்கிழி பெற்றார். பாண்டிய மன்னன், பெரியாழ்வாரின் அறிவார்ந்த குறிப்பையும், அருளார்ந்த விளக்கத்தையும் செவிமடுத்துச் சிந்தை மகிழ்ந்தான்.

ஆழ்வாரைச் சிறப்பித்துப் போற்ற ஆர்வம் கொண்ட பாண்டிய மன்னன், பட்டத்து யானையின் மீது அவரை அமரச் செய்து நகர் வலம் வரச் செய்தான். குழல் அழகர், வாய் அழகர், கண் அழகர், கொப்பூழில் எழு கமலப் பூவழகர், கூடல் அழகர் பெருமான், தமது அடியவர் பெறும் சிறப்பினைக் கண்டு மகிழ விருப்பம் கொண்டார். பிராட்டிமார்களுடன் வான வீதியில் கருடாழ்வார் மீது எழுந்தருளி, பெரியாழ்வார் பெற்ற பெருஞ்சிறப்பைக்



குடமுழுக்குப் பெருவிழாவில் திருப்பணிக் குழுத் தலைவர் பி. ஆர். இராமசுப்பிரமணிய ராஜா

கண்டு களித்தார் எம்பெருமான். பட்டத்து யானைமீதமர்ந்து பவனி வந்த பட்டர்பிரான் பெரியாழ்வார், எட்டுத் திசையும் ஒளிர, இரு பெருந் தேவியருடன், கட்டெழில் விளங்கும் கமலநாதனை, கூடல் அழகனைக் கண் இமைக்காது கண்டு சேவித்துக் களிப்படைந்தார். பெருமானின் பேரழகுத் திருமேனி கண்ணேறு பட்டு விடுமோ என அச்சம் கொண்ட, பெரியாழ்வார் காப்பாகத் திருப்பல்லாண்டு பாடியருளினார்.

இன்றும் இத் தெய்விக சம்பவத்தை நினைவில் கொள்ள, கூடல் அழகர் திருக்கோயிலில், மார்கழி மாதத்துப் பகல் பத்துத் திருவிழாவின் முந்நாளில் 'பரத்துவ நிர்ணயம்' என்ற பெயரில் இது கொண்டாடப் பெறுகின்றது. இவ் விழா மதுரை மேங்காட்டுப் பொட்டல் (மெய் காட்டிய பொட்டல்) என அழைக்கப் பெறும் ஓர் இடத்தில் நடத்தப்பட்டு வருகின்றது. பெரியாழ்வார் இன்றும் பவனி வருகிறார். பெரியபெருமாள் இன்றும் காட்சி தருகிறார். மங்களா சாசனம் பெற்றுள்ள நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான மதுரை கூடலழகர் திருக்கோயில், பல்லாண்டு பாடிய திருத்தலம் என்னும் தனித்தன்மையும், தனிக் கீர்த்தியும் பெற்றுத் திகழ்கிறது.

எம் பெருமானாகிய இராமானுஜர் மதுரையம்பதிக்கு எழுந்தருளி, கூடலழகரை மங்களாசாசனம் செய்து, 'திருப்பல்லாண்டு விளைந்த திவ்ய தேசம்' எனக் கொண்டாடி மகிழ்ந்தாரென 'ஸ்ரீராமானுஜா சார்யதிவ்யஸூரி சரிதை' என்னும் நூலில் பிள்ளை லோகாசாரிய ஜீயர் குறிப்பிட்டுள்ளார்.

மணவாள மாமுனிகள் இரு முறை மதுரைக்கு வருகை புரிந்து, கூடல் அழகரை, மாட மதுரைக் கோவலரை மங்களா சாசனம் செய்துள்ளதாக அறிகிறோம்.

சங்க காலத்திலேயே கூடல் அழகர் பேணப் பெற்றும், போற்றப் பெற்றும் வந்துள்ளதைப் பல்வேறு தமிழ் இலக்கியங்கள் குறிப்புணர்த்துகின்றன. தலையானங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் கூடலழகருக்குப் பல திருவிழாக்களை எடுத்து மகிழ்ந்துள்ளான். ஆவணித்



திருவோணத் திருநாளில் சிறப்பிற்குரிய வழிபாடுகள் செய்துள்ளான். இதனை, புலவர் மாங்குடி மருதனார் 'மதுரைக் காஞ்சி'யில் "மாயோன் மேய ஓண நன்னாள்" எனப் பாராட்டிக் குறிப்பிட்டுள்ளார்.

கொச்சகம் அராகம் என்ற சூத்திர உரையில் பேராசிரியர் ஒரு பரிபாடல் செய்யுளைச் சான்றாகக் காட்டுகிறார். "வானார் எழிலி" எனத் தொடங்கும் அப்பாடலில் "இருந்தையூர் அமர்ந்த செல்வ" என்ற அடியில், கூடலழகர் 'இருந்தையூர் அமர்ந்த செல்வன்' எனக் குறிப்பிடப் படுகிறார்.

நிர்வாக அதிகாரி - சி. கதிரேசன்



அபூர்வ அஷ்டாங்க விமானம்

கூடலழகருக்குச் சங்க காலத்தில் "இருந்த வளமுடையார்" என்ற பெயர் இருந்துள்ளதாக அறிகின்றோம். சிலப்பதிகாரத்தில், "நீடு நீர் வையை நெடுமால் அடியேத்த" எனப் பாடியுள்ள இளங்கோ அடிகளின் "நீடு நீர் வையை நெடுமால்" என்பதற்கு, அரும்பதவுரைகாரர், 'இருந்த வளமுடையார்' என விளக்கம் கூறுகிறார் அடியார்க்கு நல்லார். 'அந்தர வானத்து எம்பெருமான்' என விளக்கம் தருகிறார். அஷ்டாங்க விமானத்தின் அந்தர வானத்தில் கூடலழகர் சயனத் திருக்கோலத்தில் திருவருள் பாலிப்பதையே இந்த விளக்கம் சுட்டிக் காட்டுவதாக ஆய்வாளர் கருதுகின்றனர்.

மண்ணும் மலையும், மறி கடல்களும், மற்றும் யாவுமெல்லாம் திண்ணம் விழுங்கி உமிழ்ந்த தேவன், வண்ண எழில் நாயகன், கண்ணபெருமான், பண்டைக் காலம் முதலாக மாட மதுரையில் 'மாயோன்' என்றும், 'இருந்தையூர் அமர்ந்த செல்வன்' என்றும் 'இருந்த வளமுடையான்' என்றும், 'அந்தர வானத்து எம்பெருமான்' என்றும் 'கூடல் அழகன்' 'கூடல் கோயில் கொண்ட கோவலன்' என்றெல்லாம் மக்கள் கொண்டாடிப் போற்றிச் சேவித்து வரினும், பெருமானின் பெருங்கோயில் திருப்பணிகள் பற்றிய வரலாற்றுச் செய்திகள் அறுதியிட்டுக் கூற இயலாத நிலையில் உள்ளன.

எண்ணெழுத்து மந்திரத்தின் தூல வடிவம் எனக் கருதப் பெறுவதும், எட்டு அங்கங்களையும், மூன்று தளங்களையும் உடையதாய் விளங்குவதும், தமிழகக் கட்டடக் கலைத் தனித்தன்மையை நிலை நாட்டுவதும், அபூர்வ அமைப்பும், அற்புதச் சிறப்பும் கொண்டதுமான 'அஷ்டாங்க விமானம்' இத் திருக்கோயிலில் நிறுவப் பெற்றுள்ளது. இது போன்ற அதி அற்புத அஷ்டாங்க விமானம் தமிழ் நாட்டில் திருக்கோஷ்டியூரிலும், உத்தர மேரூரிலும் மட்டுமே அமைக்கப் பெற்றுள்ளன. இத்தகைய சீரிய சிறப்பிற்குரிய விமான அமைப்பு - எந்தக் காலத்தில் எவரால் நிறுவப் பெற்றுள்ளதென்ற செய்தியைக் கூட அறிய முடியவில்லை.

"மல்லாண்ட திண்தோள் மணிவண்ணன்" எனப் பட்டர்பிரான் பெரியாழ்வாரும், "கூடல் கோயில் கொண்ட கோவலர்" எனப் பாராண்ட அருளாளர் திருமங்கை ஆழ்வாரும் மங்களாசாசனம் செய்தருளிய கூடல் அழகர் பெருமான், அஷ்டாங்க விமானத்தின் அடித்தளத்தில் - அதாவது கருவறையில் - இருந்த திருக்கோலம் கொண்டும், இரண்டாவது தளமாகிய முதல் மாடத்தில் வண்ணக் கலாப் மூர்த்தியாக நின்ற திருக்கோலம் கொண்டும், மூன்றாவது தளமாகிய இரண்டாவது மாடத்தில் பள்ளி கொண்ட திருக்கோலம் கொண்டும் சேவை சாதிக்கிறார். "நீடியமால் நின்றான், இருந்தான், கிடந்தான்" என்றபடி அர்ச்சை நிலையில் அருள் பாலிக்கும் கூடல் அழகரின் திருக்கோயிலுக்கு இருபதாம் நூற்றாண்டின் உதயகாலம் முதலாக திருப்பணிகளாற்றிய பெருமக்களை ஒருவாறு அறிகிறோம். என்றாலும் முற்கால, பிற்காலப் பாண்டிய மன்னர்களும், நாயக்க மன்னர்களும் திருக்கோயில் திருப்பணிகள் மேற்கொண்டிருப்பதை, கோயிலில் அமைந்துள்ள மண்டப அமைப்புகளும், தூண்களின் வடிவங்களும், சிற்பங்களின் பாணிகளும் அறிவுறுத்துகின்றன.

கோயில் தளங்களுக்குக் கல் தள வரிசை, கொடிமரத் தகடுகளுக்குத் தங்கமுலாம் பூச்சு, ஆகிய அறப்பணிகள் 1913 ஆம் ஆண்டு மதுரை துருவாச முனி நாகேந்திர அய்யரால் நிகழ்ந்துள்ளன. கோயில் திருப்பணிகளைக் குல தர்மமாகப் பேணும் நகரத்தார் சமூகத்தைச் சார்ந்த முத்து. கரு. வெங்கடாசலம் செட்டியார், அப்பெருமகனாரது புதல்வர் அழகப்ப செட்டியார் ஆகிய அறச் செல்வர்கள் 1923 இல் தாயார் சந்நிதிக் கருவறை ஆலயத்தைக் கருங்கல் திருப்பணியாகக் கவினுறு வனப்புடன் கட்டி முடித்துள்ளனர். 1940 ஆம் ஆண்டுவாக்கில் கே.பி. வெங்கடகிரி சர்மா, இமா. கோபால கிருஷ்ணக் கோனார், புளியடி குப்புசாமி அய்யர் ஆகிய பெருமக்கள் பலவேறு கல் தள வரிசைகளை அமைத்துள்ளனர்.

மதுரை ஒபுளா குப்பய்யர் புதல்வர்கள் முனிசாமி அய்யர் மற்றும் அவரின் உடன் பிறந்தார்கள் இணைந்து, ஐந்து நிலைகள் கொண்ட திருக் கோயிலின் அழகிய இராஜகோபுரத்தை 1945 ஆம் ஆண்டு உருவாக்கி அளித்துப் பெருமானின் திருவருளைப் பெற்றுள்ளனர்.

வெகு காலமாகக் கூடல் அழகர் கோயிலுக்குத் திருக்குட முழுக்குப் பெருவிழா நிகழாததை எண்ணிப் பார்த்த திருமால் அடியவரும், ஆன்மிக அன்பர்களும் எழுபதுகளில் திருப்பணிக் குழு ஒன்றை அமைத்தனர்.

புகழார்ந்த 'ராம்கோ' நிறுவனங்களின் சேர்மனும், ஆன்மிகச் செல்வரும், அறச் செம்மலுமான 'குருபக்தமணி' இராஜபாளையம் பி.ஆர். ராமசுப்பிர மணிய ராஜா, திருப்பணிக் குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்க இசைந்தபோதே ஓங்கி உலகளந்த உத்தமன், கூடல் அழகன் திருக்கோயில் திருப்பணிகள் தேங்காது திறமுடன் விரைவாக நிறைவெய்தி, திருக்குடமுழுக்கு வேகமாக நிகழ்ந்துவிடுமென அன்பர்கள் மகிழ்ந்து கூறினர்.

அன்பர்களின் நம்பிக்கை 1976 ஆம் ஆண்டு மிகச் சிறப்பாக நிறைவெய்தியது. ஆம், திருப்பணிக்குழுத்தலைவர் பி.ஆர். ராமசுப்பிரமணிய ராஜாவின் அணுகு முறையாலும், ஆற்றல் மிக்க செயல் திறத்தாலும், பல்வேறு அறச் செல்வர்களிடம் நல்லுதவி பெற்றுக் திருப்பணிகள் பல ஆற்றி, திருக்குட முழுக்கு நடத்தி வைக்கப் பெற்றது. மதுரை டி.வி.எஸ். அறக்கட்டளை, கும்பாபிஷேகம் நடந்த வேளையில், திருக்கோயிலில் ஆழ்துளைக் கிணறும், அதில் மோட்டார் பம்பு செட்டும் அமைத்து வழங்கிய நற்பணி குறிப்பிடத் தக்கது.

மீண்டும் 1993 ஆம் ஆண்டில் 'குருபக்தமணி' பி.ஆர்.ராம சுப்பிர மணியராஜாவே தலைமை ஏற்க, திருக்கோயில் திருப்பணிக்குழு அமைந்தது. உபயதாரர்கள் பலர், தனித்தனிப் பணிகளுக்கு உவந்து பொறுப்பேற்றனர். கூடலழகர் திருக் கோயில் அறங்காவலரும், அரிய செயல்களுக்கும், ஆன்மிக முயற்சி களுக்கும் ஆர்வத்துடன் உதவுபவரும்,

அருப்புக்கோட்டை ஸ்ரீராமலிங்கா மில்ஸ் அதிபருமான அறப்பணிச் செல்வர் டி.ஆர்.தினகரன், திருக்கோயில் இராஜகோபுரத் திருப்பணியைப் பெரு மகிழ்ச்சியுடன் ஏற்று, ஏறத்தாழ ரூபாய் ஒரு லட்சம் செலவிட்டு, இராஜகோபுரத்தைப் பழுது பார்த்து, வண்ணங்கள் ஒளிர, வான் நோக்கும் இராஜகோபுர அமைப்பைக் கவினுறு காட்சியாய்த் திகழ்ந்திடச் செய்தார். அபூர்வ அஷ்டாங்க விமானத் திருப் பணிப் பொறுப்பை, திருப்பணிக்குழுத் தலைவர் ராஜாவே ஏற்று, ஏறத்தாழ ரூபாய் இரண்டு லட்சம் செலவிட்டு, உளங்கனிந்து உருகும் அடியவர் தங்கள் உள்ளத்துள் ஊறிடும் தேனாய்த் திகழும் பெருமானை, அமர்ந்த, நின்ற சயனித்த நிலைகளில் பெற்றுப் பெருமை கொண்ட அற்புத விமானத்தைச் சீர் செய்து, வண்ணங்கள் பூசி, அஷ்டாங்க விமானத்தை, விண்ணை எட்டும் வித்தகக் காட்சியாய் விளங்கிடச் செய்தார். இத்தகைய வகையாலும், வழிகாட்டிய பணிகளாலும், அன்பர்கள் பலரின் அரிய கொடைகளாலும், உரிய பொறுப்புகளாலும் மகத்தான தீர்ணோத்தாரணத் திருப்பணிகள் செய்யப்பட்டு, திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சென்ற ஆண்டில் (1995) நிகழ்ந்துள்ளது. இத் திருக்கோயில் தமிழ்நாடு அரசு, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகைக்கும், மேலாண்மைக்கும் உட்பட்டுள்ளது. ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட அறங்காவலர் குழுவாலும், நிர்வாக அதிகாரியாலும் நிர்வாகம் நடைபெற்று வருகின்றது.

இம்மைக்கும், ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான் நம்மை உடையவன் நாராயணன், செம்மை உடைய திருக் கரத்தால் 'வா' வென்றழைத்துச் சேவை சாதிக்கும் மாடமதுரைக் கூடலழகர் திருக்கோயில் இராஜகோபுரத்தினுள் நுழைந்ததுமே, நிர்வாக அதிகாரி சி.கதிரேசன் நம்மை முகமலர்ந்து கரம் கூப்பி வரவேற்கிறார்.

கொடிமரமும், பலிபீடமும் உள்ள துவஜஸ்தம்ப மண்டபம் பிரம்மாண்டமாய் அமைந்துள்ளது. நாயக்கர் கலைப்பாணி, கொண்டிருக்கும் கற்றூண்களின் மேலே உள்ள விதானப் பகுதியை அண்ணாந்து பார்த்து ஆச்சரியமடைகிறோம். கிழக்குமுகமாக உள்ள திருக்கோயிலின் துவஜஸ்தம்ப மண்டபத்தில் வடக்கே பள்ளியறை உள்ளது. தெற்கே நிர்வாக அலுவலகங்கள் உள்ளன. தெற்கே சென்று, உயரமாக அமைக்கப் பெற்றுள்ள கருடாழ்வார் மண்டபத்திற்குப் படிகளில் ஏறிச் செல்கிறோம். பெருமாளை நாளும் பொழுதும் சேவித்து நிற்கும் கருடாழ்வார் சந்நிதி, மேற்குமுகமாக அமைந்துள்ளது. கருடாழ்வாரைக் கரம் கூப்பி வணங்கி, மகா மண்டபத்தினுள் செல்கிறோம்.

இராக்கதர் இலங்கை பாழ்பட்டுப் போகப் படை கொண்டு சென்ற பரம் பொருளுக்கு, உறு துணையாக நின்று பெரும் புகழ் ஈட்டிய ஆஞ்சநேயப் பெருமான், மகா மண்டபத்தில் வடக்கு முகமாக அமைந்து காட்சி தருகிறார். சேனை முதலியார், இராமர், கண்ணன் சந்நிதிகள் தெற்கு முகமாக மகா மண்டபத்துள் அமைந்துள்ளன.

மகா மண்டபத்தைக் கடந்து, அர்த்த மண்டபத்துள் சென்றதுமே – மூலவர், முந்நீர் ஞாலம் படைத்த முகில் வண்ணர், மாட மதுரைக் கோவலர், கூடல் அழகர், திருமகள், பூமகள் ஆகிய உபய நாச்சியார்களுடன், இருந்த திருக்கோலத்தில். இருந்த வளமுடையாராக நம் எதிர் தோன்றி, உடலெங்கும் சிலிர்க்கச் செய்து விடுகிறார். திருமங்கை ஆழ்வாரையே திகைக்கச் செய்த பேரெழிலுடன், பேருருவுடன் திகழும் பெருமானைக் கற்பூர ஆரத்தியில் காணும் போது, இடத் திருக்கரத்தால் 'வா' என்றழைத்து, வலத் திருக்கரத்தால் 'அஞ்சேல்' என அபயம் அளிக்கும் பெருமானின் பெருங் கருணையைக் கண்ணுற்று, "மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! பல்லாண்டு, பல்லாண்டு" எனப்பாடி, கரம்கூப்பிச் சேவிக்கிறோம். அமர்ந்த திருக்கோலத்தில் கம்பீரமாக, கவின் மிகு தோற்றப் பொலிவுடன் காட்சியளிக்கும் பெருமாளின் கருவறையைச் சுற்றிவர இரண்டு திருச்சுற்றுகள் அமைக்கப் பெற்றுள்ளதை வியந்து போற்றிய நம்மிடம், நிர்வாக அதிகாரி கதிரேசன் "இங்கு மட்டுமன்றி, அஷ்டாங்க விமானத்தின் இரண்டு தளங்களிலும் இத்தகைய இரு திருச்சுற்றுகள் அற்புதமாக அமைக்கப் பெற்றுள்ளன!" எனக் கூறி நமது வியப்பை மேலும் அதிகப்படுத்துகிறார்.

அமர்ந்து சேவை சாதிக்கும் பெருமானை இரு முறையும், நின்று திருவருள் பாலிக்கும் பெருமானை இரு முறையும், கிடந்து காட்சியருளும் திருமாலை இரு முறையும் வலம் வந்தால், நினைத்தது நடக்கும்; நெருங்கியது கைகூடும் என உறுதியளிக்கிறார் நிர்வாக அதிகாரி.

மூலவருக்குத் தெற்குப் பகுதியில் உள்ள தாயார் சந்நிதிக்கு செல் கின்ற போது, சக்கரத்தாழ்வாரைத் தரிசிக்கிறோம். சக்கரத்தாழ்வார் திருச் சந்நிதி 1990 ஆம் ஆண்டில் அமைக்கப் பெற்றதாம்.

தாயார் மதுரவல்லி, 'வகுளவல்லி' 'மரகதவல்லி' 'வரகுணவல்லி' என்றெல்லாம் திருப் பெயர்கள் கொண்டு, எழிலோவியப் பொலிவுடன், இள நகை தவழும் திருமுக அழகுடன் திகழ்கிறார். மதுரவல்லித் தாயாரை மனமுருகத் தரிசித்து மகிழ்ந்த பின்னர், திருக்கோயிலின் மூன்றாம் பிராகாரத்தின் வழியே வடக்கேயுள்ள ஆண்டாள் சந்நிதியை அடைகிறோம்.

"கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ? திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ?" என்றெல்லாம் ஏக்கப் பெருமூச்சுடன் ஆழி வெண்சங்கை ஆண்டாள் நாச்சியார் கேட்ட வினாக்கள் நம் நெஞ்சுள் நீந்துகின்றன. ஆன்மாவின் பரிபக்குவ நிலையுணர்ந்த அரங்கநாதன், தம்முடன் ஆண்டாளை ஐக்கியப்படுத்திக் கொண்ட நிகழ்ச்சியெல்லாம் நினைவில் நிழலாடுகின்றன. 'மானுடம் வென்றதம்மா!' என அந்த மாதரசியை மனம் குழைந்து வழிபட்டு, எதிரே தனிச் சந்நிதி கொண்டு திகழும் மணவாள மாமுனிகளையும் வணங்கிவிட்டு, மீண்டும் துவஜஸ்தம்ப மண்டபத்திற்கு வந்து சேர்கின்றோம்.

சங்க காலம் முதலாக எத்தனை கோடி மானுடர், பெருமானைச் சேவித்துத் திருவருள் நலம் பெற்றிருப்பர்? 'அந்தக் கோடியில் நாமும் சேர்ந்தோம்' என நெகிழ்ந்து துருகி நிற்கும்போது, மகிழ்ந்து விடையளிக்கிறார் நிர்வாக அதிகாரி.

முதல் மூன்று தமிழ் நாடகங்கள்

பெ.சு. மணி

சமூக சீர்திருத்த, சமயவிவாத, அரசியல் பிரசார உள்ளடக்கங்களைக் கொண்ட தமிழ் நாடகங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே படைக்கப் பெற்றுவிட்டன. இருபதாம் நூற்றாண்டில் இத்தகைய நாடகப் படைப்புகளுக்கு ''உரிமை'' கொண்டாடுவோரை நினைவில் கொண்டு முதல் மூன்று தமிழ் நாடகங்களைப் பற்றிய சுருக்கமான ஆய்வை அறிதல் வேண்டும்.

பிரம்ஹ சமாஜ நாடகம் (1870), பிரதாப சந்திர விலாசம் (1887), ஆர்ய ஸபா (1894) என்பன முதல் மூன்று தமிழ் நாடகங்களாகும். இவ்வாறு கூறப்படுவது புதுமைக் கருத்து விளக்க முதன்மையைக் கொண்டதாகும்.

பிரம்ஹ சமாஜ நாடகம் (1870)

இந்த நாடகம், பத்தொன்பதாம் நூற்றாண்டில் ராஜா ராம்மோகன்ராய் 1828-இல் கல்கத்தாவில் நிறுவிய பிரம்ம சமாஜக் கொள்கைகளைத் தமிழில் விளக்கவந்த முதல் நாடகம். இதை இயற்றியவர் காசி விசுவநாத முதலியார் (1806-1871). சென்னை சைதாப்பேட்டையில் பிறந்த இவர், சைதாபுரம் காசிவிசுவநாத முதலியார் என்றழைக்கப் பட்டு வந்தார். தந்தை தியாகராஜ முதலியார் வழியே தமிழ் இலக்கண இலக்கியப் பயிற்சியைப் பெற்றவர். ஆங்கிலம், தெலுங்கு மொழிகளில் வல்லுநர். சித்தூர் நீதிமன்றத்தில் அரசாங்க மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றத் தொடங்கினார்.

பிறகு உடுமலைப் பேட்டையில் மாவட்ட முன்சீப்பாகவும் பணிபுரிந்தார். இங்கிருந்த காலத்தில் பிரம்ம சமாஜத்தில் ஈடுபாடு கொண்டார். 1866 இல் பணி ஒய்வுபெற்று சென்னைத் தங்கசாலைத் தெருவில் தன்னுடைய வீட்டில் பிரம்ம சமாஜக் கிளையை நிறுவினார். 'பிரம்ம தீபிகை' எனும் பெயரில் பிரம்ம சமாஜப் பிரசார இதழை 1870-இல் தொடங்கினார்.

பிரம்ஹ சமாஜ நாடகம் முழுவதிலும் வரலாற்றுணர்வில் சமூக - சமய சீர்திருத்தப் பிரசாரக் கருத்துகள், மக்களின் சமூக சிந்தனைக்குரியனவாக முன் வைக்கப்பட்டன. இந்த நாடகம், பெரும்பாலும் இசை நாடகமாக அமையப்பெற்றுள்ளது. நாடகாசிரியர் தமது நூன்முகத்தில், நாடகம் படைக்கப்பட்டதன் நோக்கத்தைப் பின் வருமாறு விளக்கியுள்ளார்:

''யான் எனது சத்தி புத்திக்குத் தோன்றியபடி இந்த நாடகஞ் செய்தற்கெனக்குண்டாகிய நோக்கம் இதற் கடியில் கூறப்படுகிற ஏதுவே. சருவ வியாபகம் சருவஞ்ஞத்துவம் சருவ வல்லமையுடைய கடவுள் ஒருவரேயென்றும், அந்தப் பரம்பிரம்ம வஸ்துவாகிய கடவுளையே நேராகத் தொழ வேண்டுமென்றும், அவரை விட்டு மற்றொரு நாம ரூபங்கள் கற்பித்திருப்பதைத் தொழுவது வீணென்றும், கற்பனையான சாதிபேதம் பாராட்டுவது இடைஞ்சலுக்கு ஏதுவாயிருப்பதால் வீணென்றும், கைம்மைகளுக்கு மறுமணஞ் செய்விக்க வேண்டியது அவசியமென்றும், தருமமென்றும், பிரஸ்தாபப் படுத்தி நம்முடைய தேசத்தில் அவற்றைக் குறித்து உண்டாக வேண்டிய சீர்திருத்தமும், நன்மையின் விர்த்தியும் சத்தியமாய் நல்ல எண்ணத்தோடு கோரியே யன்றி மற்றொன்றுக்கல்ல; ... இந்நாடகத்தால் உண்மை ஞான மார்க்கமாகிய பிரம்மோபாசனை கோட்பாட்டினர் பிரம்ஹ சமாஜ சபை நடத்த வேண்டிய விதங்களுக்கும் விசதப்படும்.''

'இசை நாடகஞ் சொலவே' எனும் குறிப்பினைத் தந்துள்ள காசி விசுவநாத முதலியார், பாடல்களில் சிலவற்றை யாப்பு வகைகளிலும் மற்றும் கீர்த்தனை வடிவங்களிலும், கும்மிப் பாட்டு போன்ற வடிவங்களிலும் அமைத்துள்ளார். ஆங்காங்கு வசனங்கள் ஏற்ற இணைப்புரைகளாக விளங்குகின்றன. நாடக மாந்தருக்கேற்ற வகையில் மொழி நடை ஆளப்பட வில்லை. சில இடங்களில் வசனங்களில் வரும் விளக்கங்கள் கிரந்த எழுத்துகளிலும் அமைந்துள்ளன. நாடகப் பாத்திரங்களின் பண்பு நலன்களை விளக்கும் வகையில் பெயர்களை வைத்துள்ளார். இவற்றுள் சில, விவேகசிகாமணி, விண் பக்தி விசுவாசி, ஏகாட்சி, நாகரிகன் என்பனவாகும்.

நாடகத்தின் தொடக்கத்தில் கடவுள் வணக்கமாக அமைந்துள்ள பின்வரும் பாடலிலும், பிரம்ம சமாஜக் கொள்கைகளைப் பரப்புவதற்காக நாடகம் எழுதப் பெற்றது என்பதைக் குறிப்பிடுகின்றார்.

''பெருமையே பெறும் பிரம்ஹ சமாஜத்தின்
பரவு நீதிசொ னாடகம் பாடவே,
வரமெனக்கு வழங்கவே மாசிலாப்
பரமன்பாதத் துணையெனக் கானதே''

கட்டியக்காரன் வருகிற தரு எனும் நாடகத் தொடக்கத்திற்கு முன்பும்,

''குரு ராம்மோகன் ராயருக்கும்
குறிக்குமவர் கோட் பாட்டிற்கும்,
பெருகும்பெங்கால் பாபுகட்கும்
பிரம்ஹ சமாஜத்தினுக்கும் மங்களம்.''

நாடகத்தின் கதாநாயகன் விவேக சிகாமணி, பிரம்ம சமாஜக் கொள்கைகளை நிறுவிட, சைவ, வைணவ, கிறித்துவ சமய போதகர்களுடன் சமயவாதம் நிகழ்த்தி வெற்றியடைவதாக நாடகாசிரியர் விரிவாக எழுதியுள்ளார். இந்தத் தத்துவ விவாதங்களில் வேத, வேதாந்த, இதிகாச - பௌராணிக நூல்களிலிருந்து அடுக்கடுக்காய் மேற்கோள்களைத் தமிழில் வழங்கியும், இவற்றுடன் தமிழில் ஞானவாசிட்டம், ஒழிவிலொடுக்கம், ஆனந்தத் திரட்டு, திருவம்மானை, சிவானந்தமாலை, குறுந்திரட்டு,

திருவாசகம், தத்துவராயர், சிவபோகசாரம், சிவானுபூதி விளக்கம், பட்டினத்தார் பாடல், பத்திரகிரியார் புலம்பல், சங்கராச்சார்ய சுவாமிகள் அருளிச் செய்த உடலறி விளக்கம், நாதாந்த விளக்கம் ஆகியனவற்றிலிருந்தும் சான்றுகள் குவிக்கப்பட்டுள்ளன.

ராஜா ராம்மோகன்ராயின் சில நூல்களின் மொழி பெயர்ப்புகளும் விவேகசிகாமணியின் சொற்போரில் சித்திரிக்கப்பட்டுள்ளன. தத்துவ விளக்கங்களுடன், குடும்ப வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், நாடகப் பாங்குடன் அமைத்துள்ளார், காசிவிசுவநாத முதலியார்.

சமூக சீர்திருத்தப் பிரசாரத்தையும் நாடகத்தில் திறமையாக ஆண்டுள்ளார். இந்து கைம்மை மறு மணம் எனக்குறிப்பிட்டு, மரகதவல்லி எனும் பாத்திரத்திற்கு விதவை மறுமணம் செய்து வைக்கப்படும் நிகழ்ச்சி யையும், நாடகத்தில் சேர்த்துள்ளார்.விதவைமறுமண த்திற்கு ஆதரவான கருத்துகளைப் பேசும், பராசரிய ஸ்மிருதி, வாசிஷ்ட ஸ்மிருதி, மார்த்தாண்டஸ்மிருதி, நாரத ஸ்மிருதி முதலான பண்டைய சாத்திரங்களிலிருந்து எடுத்து விளக்கியதுடன், 1859ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து திருமண சட்டத்திலிருந்தும் சான்று காட்டியுள்ளார், நாடகாசிரியர்.

சோதிட, சகுன மூடப் பழக்கவழக்கங்களையும் சாடியுள்ளார். சாதி எதிர்ப்பில் கபிலரகவல் பாணியில் சில பாடல்களையும் இயற்றியுள்ளார். பின் வருவன, சில வரிகள்.

பதம் பெறா நாலுசாதி படைப்பினிலு தித்தாயில்
இது பெறாப் பல தேயத்தி லெய்திய மாந்தர் யாவர்
சதுர் மறையித் தேயத்துச் சாதிசடமாக்கே யென்று
சதுர்முகன் படைத்த துண்டோ சாற்றுவிர் சாதியாரே

பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமய கலாசார சமூக சீர்திருத்த இயக்கமான பிரம்ம சமாஜம் தமிழகத்தில் 1864-இல் அமைக்கப்பெற்று, அதனுடனே அதன் பிரசார இதழான 'தத்துவ போதினி' (1864 - ஜூன் 7) வெளி வந்தது. காசி விசுவநாத முதலியார் இந்த இயக்கத்தின் பிரசாரத்திற்காக, ஒரு நாடகத்தைப் படைத்து, தமிழ் நாடக இலக்கிய வரலாற்றில் பிரசாரக் கலையில் முதன்மை யிடத்தைப் பெற்றது. இந்திய மொழிகள் பிறவற்றில் இத்தகைய பிரம்ம சமாஜ நாடகம் வெளிவந்திருக்குமோ என்பது ஐயத்திற்குரியது.

பிரதாப சந்திர விலாசம் (1887)

புதுமைமிக்க உள்ளடக்கத்தைக் கொண்ட இந்த நாடகம் ''முதல் மூன்று நாடகங்''களில் இரண்டாவது இடத்தையும் பெறுகின்றது. இதை இயற்றியவர் அக்காலத்தில் புகழ்பூத்த பாரிஸ்டர், ப.வ.இராமசாமி ராஜு (1852-1897). தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டு தமிழ் நாடக இலக்கியத்தை வளர்த்தவர்களுள் இவர், முன்னோடி. இவர் பிரம்ம சமாஜ ஆதரவாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இனிய தமிழ் நடை எழுதக் கைவரப் பெற்ற இவர், சம்ஸ்கிருத மொழியில் மாபெரும் காப்பியத்தையும் படைத்துள்ளார். 1894-இல் ''ஸ்ரீமத் ராமநாத ராஜாங்கன மகோதியானம்'' எனும் பெருங்காப்பியத்தை 25,000 வரிகளில் படைத்துள்ளார். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் எழுச்சியும், வளர்ச்சியும் இந்தக் காப்பியத்தில் வியந்தோதப்பட்டுள்ளது. இவர் சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர். ''ராயல் ஏஸியாடிக் சொஸைடி''யின் உறுப்பினர். ஆக்ஸ்போர்டு, லண்டன் பல்கலைக் கழகங்களில் தமிழ், தெலுங்கு இரண்டிற்கும் போதகாசிரியராகப் பணியாற்றியவர்.

பிரதாப சந்திரன் எனும் பெயர்கொண்ட கதாநாயகன், விசுவாசகாதகன் எனும் தீயவனின் தொடர்பால் குடிப்பழக்கமும், வேசியர் உறவும் கொண்டு வீழ்ச்சி யுறுகிறான். குணாலயர், சுதேசமித்திரர் போன்ற நல்ல நண்பர்களின் உதவியால் கதாநாயகன் நல்வழிக்குத் திரும்புவதை 12 அங்கங்களைக் கொண்ட பிரதாப சந்திர விலாசம் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது.

பிரிட்டிஷ் ஆட்சியும், அதன் வழிப்பட்ட கலாச்சார, அறிவுத் துறைத் தாக்கத்தின் நல்லியல்புகளை நாட காசிரியர் எடுத்துரைத்துள்ளார். ஆங்கில மொழிக் கல்வியின் வாயிலாக அறிவியல், தத்துவ நூற்பயிற்சிக்கான வாய்ப்புகள் பெருகியதை விளக்கும் ஒரு பாடலும் நாடகத்தில் உண்டு.

சமூக முன்னேற்றத்தை வலியுறுத்தி, 'நிபுணர்' எனும் நாடகப் பாத்திரம் பாடிய விருத்தப்பா பின்வருவது:

''அர்த்தமாய் நமது முன்னோர் அன்றுசெய் வழக்கந் தன்னில்
வியர்த்தமா யின்று தோன்றும் வீண் வழக்கங்கள் நீக்கிக்
கர்த்தனார் கொடுத்த புத்தி கருத்துறக் கால தேச
வர்த்தமா னங்க ளேற்க மாற்றுத லன்றோ வ்ருத்தி''

இந்த நாடகத்தின் முதல் அங்கத்தில் அக்காலத்து சமூக பிரச்னைகள் சில விவாதிக்கப்பட்டுள்ளன.

வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறிப்பிடும் விருத்தம், வருமாறு:

''பேர்பெறுங் கல்வி கற்றும் பிரபலமாய் பி.ஏ. என்னும்
சீர்பெறும் பட்டம் பெற்றுஞ் சீவன மொன்று மின்னும்
நேர்படும் வழியைக் காணேன் நித்திய மலைந்தே யோடிச்
சோர்வின்றி யிங்கி லீஷு துரைமாரைக் கண்டு வாறேன்.''

சுதேசமித்திரர் எனும் நாடகப் பாத்திரத்தின் வாயிலாக தேச பக்தி மேன்மையின் பொதுத்தன்மைகளை விளக்கி யுள்ளார், நாடகாசிரியர்.

மனோன்மணீயத்தில், (1891) பேராசிரியர் சுந்தரம் பிள்ளை இசைத்துள்ள தேச பக்தியுணர்வுகளுக்கு முந்தி யவை பிரதாப சந்திர விலாசத்தில் (1887) வெளிப் பட்டுள்ள தேச பக்தியுணர்வுகள்.

இந்தியாவை, தமது காதலியாக வருணித்து சுதேச மித்திரரால் பாடப் பெற்றுள்ள ஒரு விருத்தப்பா, வருமாறு:

''நானொரு பெண்ணை நாடி நயமுட னவள்மேற் காதல்
மானவ ரெண்ணொணாத மட்டுமே வைத்து விட்டேன்
ஊனமா முலகில் நேர்ந்த வுடல்பொரு ளாவி மூன்றும்
ஆனதோ ரவள்ப ணிக்கே யர்ப்பிதஞ் செய்து வாறேன்.''

சுதேசமித்திரர், காம்போதி ராகத்தில், சாபு தாளத்தில் பாடிய பாடலின் பின்வரும் கண்ணிகள், ''இங்கிலீஷ்

துரைததனத்''தில் கண்ட சில சில குறைகளையும் இசைத்துள்ளன.

''என்ன குறையுண்டென் றிப்படி நீர்கேட்டா

லென் சொல்லுவ னானண்ணே

சென்னைப் பதியில் நீர் செல்வமனுபவித்தால்

தேசமெங்குஞ் சுகமாமோ அண்ணே.

மகராஜரிங்கிலிஷ் மகிபர் துரைத்தனத்தில்

மனக்குறையின்றியே யண்ணே

சகல சுகங்களுஞ் சரியாயனுப வித்துஞ்

சாற்றுங் குறைகளுண்டே யண்ணே

ஒருமைப் பாடென்னுமோ ருசிதவழக்கந் தன்னை

ஒருகாலு மறியாரே யண்ணே

பெருமை குலைந்த் தனாற் புறத்தார்க்குக் கீழ்ப்பட்ட

பேதைமை யறியீரோ யண்ணே

சாண்கிணற்றாமை போற் தம்முடைய தேசத்தை

சகலலோக மென்பா ரண்ணே

ஆண்மைக்குரிய தேசாபிமானத்தை

அறியாரே கனவிலு மண்ணே.

''நாடகங்களில் அவரவர் ஜாதி, ஸ்திதி, கல்வி முதலான வற்றிற்குத் தகுதியாய்ப் பேசுவது வழக்கமாகையால்'' எனும் குறிப்பைத் தந்துள்ள நாடகாசிரியர் உரை யாடல்களை தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் ஆகியவற்றில் அமைத்துள்ளார்.

பிரிட்டிஷ் கலாசாரம் - பாரதப் பண்பாடு இரண்டின் சந்திப்பு, அதன் தாக்கம் முதலானவற்றையும் உள்ளடக்க மாகக் கொண்ட ''பிரதாப சந்திர விலாசம்'' முந்தைய நாடகம் போன்று புதுமை நாட்டம் கொண்டது.

ஆர்ய ஸபா (1894)

இந்திய தேசியக் காங்கிரஸ்தான் 'ஆர்ய ஸபா' என்று குறிப்பிடப்பட்டது. 'பெருமைக்குரிய' எனும் பொருளைக் கொண்ட 'ஆர்ய' எனும் சொல், ஆளப்பட்டுள்ளது. 1888-இல் காங்கிரஸ் மகாசபையைப் பற்றி வெளிவந்த நூலுக்கு ''ஆர்ய ஜன ஐக்கியம்'' அல்லது ''காங்கிரஸ் மகாசபை'' என்று பெயரிடப் பட்டது. பாரதியாரும் 'ஆர்ய' எனும் சொல்லை 'பெருமைக்குரிய' எனும் பொருளில் ஆண்டுள்ளார் என்பதும் நினைவிற்குரியது.

இந்த நாடக நூல் 1894-இல் வெளிவந்தது. இதை எழுதியவர் சென்னை திருவல்லிக்கேணியில் வாழ்ந்த க.கோபாலாச்சார் என்பவர். இவர் தமிழ்ப் பண்டிதர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் தமிழுடன் ஆங்கிலம், சம்ஸ்கிருத மொழிகளிலும் புலமை பெற்றவர்.

காங்கிரஸ் 1885-இல் பம்பாயில் முதன் முறையாகத் தோன்றியதை மகாகவி பாரதியார், பாரத ஜாதி பேசத் தொடங்கிவிட்டது என்று சிறப்புச் செய்து குறிப்பிட்டார். 'ஆர்ய ஸபா,' காங்கிரஸ் இயக்கத்தைப் பற்றி முதன் முறையாக, தொடக்கம் முதல் இறுதிவரை விரிவாகப் பேசுகின்றது. அரசியல் குறித்த நாடகப் படைப்புகளில் காலத்தாலும், கருத்தாலும் முதன்மை பெற்றது, 'ஆர்ய ஸபா.'

'ஆர்ய ஸபா' படைப்பின் நோக்கத்தை நாடகத்தின் 'விதூஷகன்' பாடல் வாயிலாகவும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார், நாடகாசிரியர்.

''பாரினில் ஐக்கியம் உண்டாய்ப் பலருந் தம்மத

பேதத்தால்

போரிடாது அனைவர்கட்கும் பொதுநலம் இன்னதென்று

சீருடன் நோக்கித் தங்கள் தீமைகள் கெட்டு நாளும்

ஏருற வாழக் காங்க்ரெஸ் எனுஞ்சபை வளர்வதற்கே.''

நாடகப் பாத்திரங்கள், பல்வேறு சாதி, மதங்கள், மொழியினரைக் கொண்டுள்ளது சிறப்பாகச் சுட்டிக் காட்டப் படுவதற்குரியது. பாத்திரங்கள் அவரவர் இயல்பிற்கேற்றவாறு உரையாடுகின்றன. இரு ஆங்கிலேயப் பாத்திரங்கள் ஆங்கிலத்திலேயே உரை யாடியுள்ளன.

1887-இல் சென்னையில் கூடிய காங்கிரஸ் மகாசபையில் நிதியுதவிக்காக வெளியிடப் பெற்ற 'காங்கிரஸ் வினா-விடை' (ஆசிரியர், முடும்பை வீர ராகவாச்சாரியார்) எனும் நூலின் வழியாலும், பிற ''சமாசாரப் பத்திரிகை''களாலும், காங்கிரஸ் மகாசபையின் கூட்டங்களாலும், காங்கிரசைப் பற்றிய செய்திகளை அறிந்ததாக நாடகத்தின் ஒரு பாத்திரத்தின் வாய் மொழியாகக் கூறியுள்ளார் - நாடகாசிரியர்.

காங்கிரஸ் இயக்கத்தில் பெண்களும் சேரவேண்டும் எனும் கருத்து விளக்கத்தை பன்னிரண்டு பக்கங்களில் கணவன் - மனைவியிடையே நிகழ்ந்த விவாதத்தில் அளித்துள்ளார், நாடகாசிரியர். இஃது அக்காலத்தில் புதுமையானது. பெண் கல்வியின் பண்டைப் பெருமை யும், பின்பு அதன் வீழ்ச்சியும், அதையடுத்த வளர்ச்சியின் தேவையையும் நாடகாசிரியர் வலியுறுத்தியது, பெண்ணியச் சிந்தனைகளுக்கு ஊட்டமளிப்பதாகும்.

சம்ஸ்கிருத நாடக மரபையொட்டி, விதூஷகனும், சூத்திரதாரியும் நாடகத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர். இந்திய தேசியக் காங்கிரசின் தொடக்க கால 'மிதவாதத்தை' 'ஆர்ய ஸபா' பிரசாரம் செய்துள்ளது. 'பிரதாப சந்திர விலாசம்' நாடகத்தில் ஆங்கிலேயர் ஆட்சி வரவேற்பும், ஆங்கிலமொழிப் பெருமை பேசுதலும் இருப்பதுபோல், 'ஆர்ய ஸபா'விலும் அவை இருக்கின்றன. விக்டோரியா மகாராணிக்கு வாழ்த்துக் கூறி ''காங்கிரஸ் நாளும் நன்றாக வாழ்க'' என்னும் இசைப் பாடலுடன் நாடகம் முடிவுறுகின்றது.

இவ்வகையில் பிரசாரப் படைப்புகளுள் முதன்மை யானவையும், தனிமுத்தவையுமான இந்த முதல் மூன்று நாடகங்களும், தமிழ் நாடக இலக்கிய வரலாற்றில் சமூக, அரசியல் பார்வையில் சிறந்த முன்னோடிப் படைப்பு களாகும்.

ஆன்ம பலம் வேண்டும்

வெள்ளியொடு வியாழனில்நான் விளையாட வேண்டும்
வெண் திங்கள் விரிகதிரோன் உடனாட வேண்டும்;
கொள்ளையெழில் செஞ்சுடராம் செவ்வாயும் பிறவும்
குருவாக எனையேற்கும் குழுவாக வேண்டும்;

மஞ்சினிலே நானமர்ந்து மிதந்தாட வேண்டும்
மலையருவி கடல்மீது பறந்தாட வேண்டும்;
அஞ்சிதினம் வாழ்பவர்க்கு அரணாக வேண்டும்
அறிவுரைகள் அத்தனையின் உரமாக வேண்டும்.

கற்பனையின் உற்பவங்கள் எனக்காட வேண்டும்
கலைமகளின் அருளென்றும் மனத்தாட வேண்டும்;
அற்புதங்கள் எத்தனையோ அத்தனையும் வேண்டும்
அதற்கெல்லாம் வல்லமையாய் ஆன்மபலம் வேண்டும்.

கலைப் பொழிலன்

எது வாழ்க்கை?


பொதுவாழ்க்கை நடத்துகின்ற பூக்கள் தென்றல்
புயலானால் வீழ்ந்துவிடும்! ஓடு கின்ற
நதிவாழ்க்கை வான்மேகம் மறந்து விட்டால்
நடக்காமல் நின்றுவிடும்! என்றும் இன்பப்
புதுவாழ்க்கை காணஎண்ணும் புறாக்கள், வேடன்
புறப்பட்டு வரும்போதே கலங்கும்! இங்கே
எதுவாழ்க்கை எனத்தெரியா மல்தங் கத்தின்
இருப்பிடத்தில் குடியிருக்க அலைகின் றாரே.

ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

கற்பனைச் சோலை

கடுகினேன் 'கவிதைச் சோலை',
கணக்கிலாக் 'கருத்துப் பூக்கள்'
தொடு 'இசை மணத்தைப் பாய்ச்சிச்'
சுரந்தது 'பாட்டுத் தேனை''
நடுநிலை 'மக்கள் வண்டு'
நாடியே 'பார்த்தேன்' உண்டு
நெடும்புவி மறந்து சொக்கி
நிற்றிடல் கண்டு வந்தேன்.

தமிழ்முடி



ஒரு காதல்

வாழ்க்கையில் பாடி நிற்கும்
தியாகம் அது பாவம்! – அவள்
விழியில் செய்து மீட்டும்
வீணை ஒரு ராகம்!

பேச்சில் கயல் பிறந்து
சிரிப்பில் என்ன மர்மம்! – அவள்
துறையில் விற்காது கிட்டும்
தூய்மை வைத்த மனம்!

தொட்டாலோ தோகை விரிக்கும்
தேகம் அந்தத் தேகம்!– அவள்
பருவம் கனிந்த தென்று
காட்டும் நீண்ட குழலும்!

கனவுக் கதை பேசும்
காதல் ஒரு மாயம்! – இன்று
கரையிலே வந்து கிடக்கும்
கதையும் ஒரு சோகம்!

கோபால் தாசன்

சமுதாயத்திற்காக

விரதம் என்பது
பட்டினி கிடப்பதன்று.
காம, குரோதத்தின் ஒடுக்கம்
பிற உயிர்களுக்குத் தீங்கிழைக்காமல்
இருக்கச் செய்யும்
பரந்த நோக்கம்,
ஆகியவற்றை
உன் வாழ்க்கையின் படிக்கட்டுகளாய்
அமைக்கும் எண்ணம்
உனக்கு என்று வருகிறதோ,
அன்று முதல் நீ
சமுதாயத்திற்காக வாழ்கிறாய் என்று
உறுதிப் படுத்திக் கொள் !

அருப்புக்கோட்டை செல்வம்

பிசிராந்தை யார்?

பிசிராந்தையாரைச் சந்தித்தேன்.
'மை'தடவாத கரு கரு முடியோடு சிரித்தார்!
சிரிப்பில் சற்றே ஆணவம்.

''குறிப்பறிந்து நடக்கும் மனைவி, மக்கள், சேவகன்
கவலையில்லை.. நரையில்லை'' என்றார்.

நான் கேட்டேன்–
'அட மனிதா'
உன் மனைவிக்கும், மகனுக்கும் சேவகனுக்கும்
நரைத்துக் கிடக்கிறதே! இதுதானா நீ!'
அதிர்ந்தார் ஆந்தையார்.
உடனே அவருக்கு நரைத்தது.

புதுவை சந்திரஹரி

பிள்ளைநிலா

லட்சுமி ராஜரத்னம்

அழைப்பிதழைத் திருப்பித் திருப்பிப் பார்க்கிறாள் மதுராம்பாள். பிரிக்கவில்லை. புன்முறுவல் தவழ அழைப்பிதழைக் கொடுத்த ரமா எதிரில் நிற்கிறாள். அழைப்பிதழின் நேர்த்தியே விலை அதிகம் என்று பறை சாற்றுகிறது.

''பிரிச்சுப் படிங்க அத்தை.''

மாவடு போல சுருங்கிய கண்கள் இன்னும் சுருங்குகின்றன.

''விஷயத்தைச் சொல்றது.. பிரிச்சுப் படித்தாதானா? இதுவே காஸ்ட்லியா இருக்கும் போல இருக்குதே? என்ன விசேஷம் இப்ப? நாத்திக்கு பூச்சூட்டு வைபவம் வச்சிருக்கியா? கல்யாணமாகி பதினைஞ்சு வருடம் ஓடிப் போச்சு.. நீ இன்னும் பூக்கலை. நீ கட்டிக் கொடுத்த நாத்தி வரப் போறா வளைகாப்பு வைபவத்துக்கு.. ம்''

மதுராம்பாளுக்குத் தொடராகப் பேசப் பிடிக்கும். ஆள் கிடைத்தால் விடமாட்டாள்.

''அத்தை! இது வேற விஷயம்.. நாங்க ஒரு குழந்தையை அநாதை ஆஸ்ரமத்துலே இருந்து எங்க குழந்தையா தத்து எடுத்துக்கப் போறோம். தீபாவளி அன்னிக்குத் தான் குழந்தை வரப் போறா.. நீங்க அவசியம் வந்துடணும்.''

'இது என்னடி அதிசயம்!' என்பது போல் அத்தையம்மா பார்க்கிறாள். மலடி என்ற பட்டத்தைச் சுமக்க விரும்பாமல் தாய்மையை இரவல் வாங்கிச் சூட்டிக் கொள்கிறாளே.. இது எந்த வகையில் நியாயம்!

''ம்.. கலிகாலம். எல்லாம் விலைக்குக் கிடைக்கற மாதிரி குழந்தையும் கிடைக்குது. ரொம்ப சந்தோஷம். அப்ப தீபாவளி விருந்து உங்க வீட்லனு சொல்லு. வந்துடறேன்'' என்றபடி மதுராம்பாள் அழைப்பிதழை பக்கத்தில் வைத்துக் கொள்கிறாள்.

தீபாவளி அன்று ஊரெல்லாம் விழித்துக்கொண்டு எண்ணெய் ஸ்நானம், பட்டாசு என்று அமர்க்களப் படுத்திய பொழுது, ரமாவும், பூபதியும் எட்டு மாதச் சிசுவை அநாதை விடுதியிலிருந்து காரில் எடுத்துக் கொண்டு வந்தார்கள்.

பூவால் செய்தது போல பிஞ்சு பிஞ்சான விரல்கள்.. சிறு கண்கள் மூடித் தூங்குவது ஏதோ தவம் செய்வது போல ரமாவுக்குத் தோன்றியது. மார்போடு அணைத்துக் கொண்டபொழுது ஏதோ ஒரு சுகம் தோன்றியது.

இதுதான் தாய்மையோ!

ஜன்னல் வழியாகச் சிலுசிலுத்த காற்றுக்கு அஞ்சி குழந்தையை மூடிக் கொண்டாள். மனைவியின் தவிப்பை யும், போராட்டத்தையும் பூபதி ரசித்துக் கொண்டே வந்தான். இவளுக்குக் குழந்தை என்றால் எத்தனை ஆசை?

அப்படி ஒன்றும் இருவருக்கும் வயதாகி விடவில்லை. ரமாவுக்கு கல்யாணத்தின் பொழுது பதினைந்தே வயசு. திருமணம் ஆகி, பதினைந்து வருடங்கள் கழித்தாலும், முப்பது வயது ஒரு பொருட்டில்லை. இன்றைய காலத்தில் ஒருத்தொருத்தி முப்பது வயதாகியும் கல்யாணமே ஆகாமல் நிற்கவில்லையா ?

ஆனால் வாழ்ந்த காலத்தின் சுவடு வயிற்றில் தங்கவில்லையே என்பது தானே உலகத்தாரின் கேள்வி?

''எங்க வீட்ல இன்னிக்கு புண்ணியா வசனம். வந்து கொஞ்சம் அம்மிக் குழவி அலம்பறியா? எங்க வீட்டுக்கு வர்ற யோகமாவது உனக்கு வயிறு திறக்கட்டும்.''

அவள் வயிறு திறக்கவில்லை.

''என் பெண் லதாவுக்கு வளைகாப்பு. மணைக்காப்பு அடிச்சுக்க. குழந்தை பிறக்கும்.''

குழந்தை பிறக்கவில்லை.

''பதினைஞ்சு வருஷமாச்சு. இனிமே எங்கே பிறக்கப் போகுது?'' என்று ஒரு சாரார் முடிவு கட்டினார்கள்.

'இரண்டு தினங்கள் தள்ளினாலே' கனவு கண்டு.. கனா கலைந்து.. பஞ்சு பஞ்சாக நினைவுகள் பறக்க உருக் குலைந்து..

''எனக்கு குழந்தை வேணும் பூபதி'' என்று அவன் நெஞ்சில் முகம் புதைத்து அழுது..

ஒரு குழந்தையை தத்து எடுத்துக் கொள்ளும் வரையில் இந்த சம்பவங்கள் நடந்து கொண்டே இருந்தன.

குழந்தைக்கு அனிதா என்று பெயரிட்டு, ஊரார் உறவினர் குழத் தொட்டிலிலிட்டு..

''என்னை இவ அம்மானு கூப்பிடுவா இல்லையா?'' என்று ஓடி ஓடி வந்து கணவனிடம் கேட்டுக் கொண்டே விருந்தாளிகளை கவனித்து..

''ஏன் ரமா, எடுத்தது தான் எடுத்தே பெண்ணா எடு,,திருக்கியே.. இவ மண்ணைத் தட்டிக் கொண்டு இன்னெ. ருத்தர் வீட்டுக்கு இல்லே போயிடுவா?'' என்று வந்தவர்களில் சில முதியவர்கள் கேட்டார்கள்.

''அதென்னவோ.. அங்கே எங்களுக்கு இவளைத்தான் புடிச்சுது''

வந்தவர்கள் வாயடைத்துப் போனா லும், பாயசம், வடையுடன் வம்பையும் மென்றார்கள்.

''என்ன குலமோ? என்ன கோத்திரமோ? யார் கண்டாங்க? குழந்தை வேணும்னா உறவு முறையில எடுத்து வளர்க்கக்கூடாதா? எங்கிட்ட ஒரு வார்த்தை சொல்லி இருக்கலாமே? என் அண்ணன் பேரனை எடுத்தாந்து கொடுத்திருப்பேனே?''

''அதானே.''

''அதது புத்தி.. அப்படித்தானே போகும்! எங்கிட்டிருந்தோ வந்த அநாதைக்கு சொத்து அம்புட்டும் போகப் போகுது.''

இவர்களை ஏன் அழைத்து விருந்து வைத்தோம் என்று அலுத்துப் போனார்கள், பூபதியும், ரமாவும்.

குழந்தை அனிதா செல்லக் குழந்தையாக வளர்ந்தாள். ''அம்மா'', ''அம்மா'' என்று ரமாவைச் சுற்றி வந்தாள்.

ரமாவும் வேளைக்கு ஒரு டிரஸ்ஸாகப் போட்டு அலங்காரம் செய்து அழகு பார்த்தாள். குழந்தையை எடுத்துக் கொண்டு ஊர் ஊராகப் போய் வந்தார்கள்.

அனிதா இவர்களிடம் வந்து மூன்று தீபாவளி ஓடிவிட்டது.

அன்று பூபதி அலுவலகத்தி லிருந்து வந்தபொழுது ரமா படுத்துக் கொண்டிருந்தாள்.

''ரமி, குழந்தைக்கு ஏதோ வாங்கணும்னு சொன்னியே.. கடைக்குப் போகலாமா!''

''எனக்கு என்னமோ எழவே முடியல்ல பூபதி! இன்னொரு நாளைக்குப் போய்க்கலாம்ப்பா. குழந்தையை நீங்களே பார்த்துக்குங்க.''

அடுத்த நாள் காலையில் ரமா வாந்தி தலைசுற்றல் என்று அமர்க்களப்படுத்த..

''பாட்டி, என் ரமாவைப் பாருங்க. எனக்கு பயமா இருக்குது. ஒரு நாள் கூடத் தலைவலி, காய்ச்சல்னு படுக்காதவ.. இப்படி படுத்துக் கெடக்கா.''

பாட்டி அனுபவசாலி. வந்த உடனே டக்கென்று வில்லிலிருந்து புறப்பட்ட அம்பாகப் பதிலைச் சொன்னாள்.

''பூபதி, நீ அப்பாவா ஆகப் போறே?''

''நிஜமாகவா பாட்டி?''

''ஆங்.. பொய்யா சொல்றேன்? இப்பத்தான் டாக்டர் டாக்டர்னு ஒடறீங்க. எங்க காலத்துல எந்த டாக்டர்கிட்ட போனோம்? இந்த செல்லம்மா சொன்னா கரெக்ட்டா இருக்கும். போயி, டாக்டர் கிட்ட கேட்டுக்க''.

பாட்டி சொன்னதைத்தான் டாக் டரும் சொன்னார்.

ஒன்று, இரண்டு, மூன்று என்று மாதங்கள் ஒட..

''ரமா, எப்படி இருக்கேம்மா. என்ன வேணுமோ கேளு'' என்று பூபதி மனைவியைத் தாங்கினான்.

''இது தனி அனுபவம் தானுங்க. சொல்லித் தெரியாது. உங்க புள்ள வயத்துல துள்ளுது.''

''டேய், பயலே, அம்மாவைத் தொல்லை படுத்தாதே'' என்று பூபதி செல்லமாகக் கடிந்து கொள்வான்.

''அம்மா, என்னைத் தூக்கும்மா'' என்று அனி ஓடிவருவாள்.

''இவளை எங்கங்க என்னால தூக்க முடியும்! வர வர இவளை கவனிக்கக் கூட முடியலைங்க.''

அனிதா பூபதியிடம் ஒட்டிக் கொண்டாள்.

உதவிக்கு என்று ரமாவின் அம்மா, அத்தை, அக்கா என்று ஒரு பட்டாளமே வீட்டில் முகாமிட்டது.

''அம்மா'' என்று ரமாவின் மடி சாய்ந்த அனியை முகம் சுளிக்கப் பார்த்தார்கள்.

''ரமா, இது இனிமே தேவைதானா?'' என்று மெல்ல அம்மா நூல்கண்டின் நுனியைப் பிரித்தாள்.

''என்னம்மா சொல்றே?''

''அம்மா சொல்றது சரிதான் ரமா. உன் சொந்தக் குழந்தைக்குச் சொத்து தர மாதிரின்னா இதுக்கும் தரணும்'' என்று அக்கா பாலில் துளி விஷச் சொட்டை விட்டாள்.

கூனி..கூனிகள்..சகுனி..சகுனிகள்.. இராமாயண, மகாபாரதத்தில் மட்டுமா உண்டு? எங்கும் நிறைந்திருக்கிறார் களே.. இந்தக் கூனிகள் இந்தக் குழந்தையின் தலையில் கையை வைத்தார்கள்.

''எங்கே இருந்து கொணாந்தீங்களோ, அங்கேயே விட்டுட்டாப் போச்சு.. வேணும்னா அந்த அநாதை இல்லத்துக்கு டொனேஷன் ஏதாச்சும் கொடுத்துட்டாப் போச்சு'' என்றாள் அத்தை.

மாதங்கள் ஆக ஆக குழந்தையை ரமாவின் அருகில் சேர்க்காமலேயே தடுத்தார்கள்.

''ஏய்.. எங்க போறே?''

''அம்மாட்ட போறேன் பாட்டி''.

''அம்மா.. பெத்தவளா உன்னை.. நான் உனக்கு பாட்டியா!''

மலர்விழிகள் மயங்கிக் கிறங்க குழந்தை பயத்தில் உறைந்து ''அம்மா'' என்று அழத் தொடங்குவாள்.

''என்ன செய்திட்டோம் இப்ப உன்னை? பேர்ட்டதைத் தின்னுட்டு ஒரு பக்கம் கெட.''

நான்கு வயது அனிதா புரிந்தும் புரியாமல் தவித்தாள்.

''ஏம்மா, குழந்தையை, நீ கவனிக்கறதே இல்லையா! கண்ணுக்குக் கீழே குழி விழுந்து கன்னம் ஒட்டி எப்படி ஆய்ட்டா பார்த்தியா!'' என்று பூபதி மனைவியிடம் கேட்டான்.

''எங்கங்க? மாசம் ஆகுது என்னால முடியலை''

''முடியாட்டி கூட கொஞ்சம் கவனிக்கணும் ரமா. குழந்தை எப்படி ஏங்கிப் போறா தெரியுமா!''

''அநாதை ஆஸ்ரமத்துலே இருந்து எடுத்து வந்த குழந்தை. பெரிசா என்னங்க இருக்குது நினைக்க?''

''நாலு வயசு பிஞ்சும்மா. அதுக்கு தான் அநாதைனு தெரியாதும்மா. உன்னையும் என்னையும் தாம்மா பெரிசா நினைச்சுகிட்டு இருக்கா. உன் மனசுல வெறுப்பு வத்திடுச்சுன்னு நினைக்கிறேன்.''

''எனக்குன்னு சொந்தக் குழந்தை வரப்போகுது. இவளை ஏன் நான் கொஞ்சி சீராட்டணும்? நீங்க இவகிட்ட அன்பு செலுத்தறதும் எனக்கும் பிடிக்கலை. ஒன்னை நினைச்சுப் பார்த்தீங்களா!''

''என்ன!''

''நம்ம குழந்தைக்கு முழுசாப் போற சொத்தை இவளுக்கும் இல்ல பங்கு வைக்கணும்? அந்தத் தலையெழுத்து ஏங்க? பேசாம, திரும்ப ஆஸ்ரமத்து லேயே விட்டுடலாம்.''

பெரிய தீக்கங்கு ஒன்று குப்பென்று வாய் வழியே வயிற்றினுள் இறங்கியது போல் துடித்துப் போனான் பூபதி.

''நிஜமாத்தான் சொல்றியா ரமா?''

''சத்தியமாத்தான் சொல்றேன் பூபதி.''

தாய்மை என்ற அமுத கலசம் இப்படிக் கூட வற்றுமா?

தன்னை எங்கே அழைத்துப் போகிறான் என்பது கூடத் தெரியாமல் பூபதியுடன் போனாள் அனிதா. கைப் பையில் துணிகளை வைத்த பொழுது சந்தேகம் எழுந்தது.

''எங்கப்பா போறோம்?''

''அம்மாவுக்கு ஒரு பாப்பா பிறக்கப் போகுதுல்ல?''

''எனக்குத் தம்பிப் பாப்பாதான் வேணும்ப்பா.''

''சரி.. தம்பிப் பாப்பா தான் பிறக்கும். அம்மா ஆஸ்பத்திரியிலே இருக்கறப்ப வீட்டில யாருமே இருக்க மாட்டாங்களே!''

''பாட்டி, அத்தை பாட்டி, பெரியம்மா எல்லாம் இருப்பாங்களே''

''அவங்களும் ஆஸ்பத்திரி போய் கிட்டு வந்துகிட்டு இருப்பாங்க. கொஞ்ச நாளைக்கு உன்னை என் தெரிஞ்சவங்க

வீட்ல விட்டு வைப்பேன். சமர்த்தா இருப்பியா!''

சின்ன மண்டையை ரிப்பன் குலுங்க ஆட்டினாள் அனிதா.

''பள்ளிக்கூடம் போகணுமே?''

''அங்கே இருந்தே போகலாம்மா''


குழந்தையைத் தன் தங்கையிடம் ஒப்படைத்த பொழுது பூபதி கலங்கிப்போனான்.

''சுபா! நான் வந்து பார்த்துக்குவேன். நீ நல்லா கவனிச்சுக்க. இந்த வருஷம் படிப்பு முடிஞ்சதும் இவளை என்ன பண்ணறதுன்னு யோசிக்கணும்''. என்றபடியே கண்களைத் துடைத்துக் கொண்டு கிளம்பினான்.


''ஐய்ய.. அழாதேப்பா. நான் சுபா அத்தை கிட்டதானே இருக்கேன்?'' என்று டாட்டா காண்பித்தாள் அனிதா.

பூபதிக்கு அனிதா ஒரு கேள்விக் குறியாகவே நின்றாள்.

ரமாவுக்கு அனிதாவைப் பிடிக்க வில்லை. அவளைத் திரும்பக் கொண்டு







போய் அநாதை விடுதியில் விட முடியாது. ஹாஸ்டலில் விட்டு நீண்ட காலம் படிக்க வைக்கவும் முடியாது. ரமா நினைப்பது போல் சொத்து விஷயம் விவகாரமாக ஆகுமோ?

நினைக்க நினைக்கக் குழப்பமாக இருந்தது.

முழுசாக மூன்று மாதங்கள்.. ஓடியதே தெரியாத அசுர ஓட்டம்.

எத்தனை எத்தனை விஷயம் நடந்துவிட்டன.

ரமாவுக்கு இடுப்பு வலியே எடுக்காமல் கெடு காலம் தாண்டி - கடைசியில் குழந்தை இறந்தே பிறந்தது. அதுவும் ஆயுதக் கேஸ்.. குழந்தை போன துயரம்.. உடம்பில் வலு இல்லாத பலவீனம்.. கட்டிலோடு கட்டிலாகக் கிடந்தாள்.

அம்மாவும் அக்காவும் எத்தனை மாதங்கள் தங்க முடியும்?

''ரமா, வருத்தப்படாதே. இன்னொரு குழந்தை பிறக்காமலா போகப் போகுது? குழிப்புள்ள உடனே வயத்துலனு சொல்லுவாங்க. கொஞ்சம் கொஞ்சமா சமாளிச்சுக்க. நாங்க வரோம்.''

கிளம்பிப் போனார்கள்.

ரமா வீட்டினுள் நடமாடத் தொடங்கிவிட்டாள். பூபதி அலுவலகம் போன பின்பு, தனிமை கொடுமை யாகியது. பீரோவை ஒழித்து வைக்கும் பொழுது கைபட்டு அனியின் கவுன்கள் பொலபொலவென்று கொட்டின.

'ஐயோ.. ஐயோ.. சொந்தம் என்று ஒன்று வரும் என கையில் உள்ள தைத் தூக்கி எறிந்தேனே. இத்தனை மாதங்களில் அவளைப் பற்றித் துளியாவது நினைத்திருப்பேனா! பூபதி அவளை மீண்டும் அநாதை விடுதியில் விட்டிருப்பாரோ! திரும்பக் கொடுக்க மாட்டார்களே..'

மாலை. விளக்குக் கூட ஏற்றாமல் கட்டிலில் படுத்துக் கிடந்தாள். பூபதி வந்துதான் விளக்கை ஏற்றினான்.

''ரமா, என்னம்மா.. விளக்குக் கூட ஏற்றாமல்?''

''பூபதி! குழந்தை அனியை எங்கே விட்டீங்க?''

''ஏம்மா? அதைப் பற்றி என்ன கவலை?''

''எனக்கு அவ வேணுங்க.. எனக்கு வேணும்.. என் தங்கம் எனக்கு வேணும்.''

கட்டிலில் கிடந்த குழந்தை அனிதாவின் கவுன்களை முகத்தில் போட்டுக் கொண்டு கதறினாள். பூபதி அவளையே பார்த்தான். இனியும் அவளைக் கதற விடக் கூடாது.

''எழுந்திரு.. தீபாவளிக்கு டிரஸ் வாங்கப் போகலாம்.''

''எனக்கு அனிதா தான் வேண்டும்''

''கிளம்பு.. போகலாம்.''

இருவரையும் சேர்ந்தாற் போல கண்டதும் சற்று தயங்கி நின்றாள் அனிதா, ஒரு கணம்..

முன்னேறு

புலவர் வீ.செ. கந்தசாமி


மலை போலத் துயர்வந்த போதும் - அந்த
வானந் தலைமீது வீழ்வதென்றாலும்
குலையாத மனங்கொள்ள வேண்டும் - நாம்
குன்றாக நின்றுநல் நடைபோட வேண்டும்

மண்ணுள்பு தைக்கப்பட் டாலும் - விதை
வந்திடும் முளையாக மண்ணுக்கு மேலே
கண்ணுக்கு நேரெதிராக - அக்
காலனே வந்தாலு மஞ்சாமை வேண்டும்

வெல்படை வேண்டுமென் போரே - இங்கு
வேறெதுவும் உண்டோது ணிவுக்கு நேரே
புல்லுமோர் ஆயுதம் ஆகும் - வாழ்க்கைப்
போருக்கு அணியமாய் நின்றிடும் போது.

பச்சைப் பசுமர வேரு - அது
பாறையைக் கூடத்த கர்த்திடும் பாரு
இச்சகம் யாவையும் வெல்வேன் - என்ற
எண்ணமே வெற்றிக்கு வித்தாகும்
சொல்வேன்.





குற்றம் காண்க!

வேலூர் ம.நாராயணன்

குற்றம் காண்க! குற்றம் காண்க!
நற்றமிழ் நாட்டின் பொற்புடைச் செல்வ!
குற்றம் காண்க! குற்றம் காண்க!

அறிவிலி குற்றம் அகிலம் அறியும்
அறிவிலி அதனை அணுவும் அறியான்

அறிஞன் குற்றம் அவனே அறிவான்
அகிலம் அதனை அணுவும் அறியா!

அறிவிலியாக அலைவதை விடவும்
அறிஞன் எனும்பேர் பெறநீ முயல்க!

குற்றம் காண்க! குற்றம் காண்க!
உன்றன் குற்றம் ஒவ்வொன்றாக
நன்றாய்க் காண்க! நாளும் களைகவே!

"அம்மா" என்று பாய்ந்து ரமாவைக் கட்டிக் கொண்டு.. கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டு "அம்மா.. அம்மா.. பாப்பா எங்கேம்மா? இனிமே என்னை விட்டுப் போகமாட்டியே.. அம்மா நான்தான் க்ளாஸ்ல பஸ்ட்.. எங்க மிஸ் குட் போட்டிருக்காங்கம்மா.. பார்க்கிறியா?" என்று பேசிய அனிதா பையைத்திறந்து நோட்டைத் தேடினாள்.

வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்ட ரமா "கண்ணு! நம்ம வீட்ல போய் பார்த்துக்கலாம். கிளம்பு தீபாவளி டிரஸ் வேற வாங்கணும்" என்று முடிப்பதற்குள் பள்ளிக்கூடப் பை யுடன் வந்து நின்றாள் அனிதா.

அழைப்பிதழுடன் வந்த ரமாவைப் பார்த்தாள் மதுராம்பாள்.

"என்னென்னமோ நடந்து போச்சுனு கேள்விப்பட்டேன். போகுது.. நீயாச்சும் பொளைச்சு வந்தியே.. வா.. உட்கார்.. என்ன விஷயம்!"

அழைப்பிதழைக் காட்டினாள் ரமா.

"என்னது அது!"

"அனிதாவுக்குத் துணையா இன்னொரு புள்ளையத் தத்து எடுக்கப் போறோம். அவ தனியா நின்னுடக் கூடாது பாருங்க. அவளுக்கு ஒரு தம்பி வேணுமாம். தீபாவளி அன்னிக்கு வந்துடுங்க" என்ற ரமா கிளம்பினாள்.

ஓ.. அவள் மனம் விரிவடைந்து விட்டது. இரண்டு குழந்தைகள் அங்கே சரணாலயமாகச் சரணடைந்திருக்கின்றனர். அது போதுமே!

இந்தக் காக்கை தனக்கே குஞ்சுகள் பிறந்தாலும் தன்னை அண்டின குயில் குஞ்சுகளை இனி விரட்டாது.

●

நிழல் யுத்தம்

ராஜ்

அந்தக் கம்பெனியில் அப்படி ஒரு வழக்கம். தீபாவளிக்கான போனஸை, தீபாவளிக்குப் பத்து நாள்களுக்கு முன்பாக ஊழியர்களுக்குக் கொடுப்பார்கள். அன்றிரவு நிர்வாகத்தினர் ஊழியர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் ஒரு விருந்து கொடுப்பார்கள். அந்த மாலைப் பொழுதினிலே ஊழியர்களின் குழந்தைகள் பங்கு கொள்ளும் போட்டிகளை வைத்து அதற்கான பரிசுகளும் கொடுப்பார்கள். அன்றைய விருந்திற்கு கம்பெனியுடன் நெருக்கமான வியாபாரத் தொடர்பு வைத்திருக்கும் மற்ற சில கம்பெனிகளிலிருந்தும் சிலரை அழைப்பார்கள்.

இந்த தீபாவளிக்கு முன்பாகவும் அப்படித்தான் செய்தார்கள்.

இது அந்தக் கம்பெனியில் மானேஜராக சமீபத்தில் சேர்ந்திருந்த சேகருக்கும் அவனுடைய புது மனைவி விஜிக்கும் ஒரு புது அனுபவம். இருவரும் 'சிக்'கென டிரஸ் செய்து கொண்டு விருந்துக்குக் கிளம்பிவிட்டார்கள்.

விருந்து நடக்கும் ஒட்டலுக்கு, கம்பெனியில் டைரக்டர் முத்துசாமி ஏற்கெனவே வந்திருந்தார். சேகரைப் பார்த்ததும் அவர் முகம் மலர்ந்தது. ''வா சேகர்! வாம்மா விஜி! சேகர் ஏஷியா ரீஃபைனரீஸ் மானேஜர் ராம்மோகன் வந்திருக்கான். அவனை நல்லா கவனிச்சுக்க. அறுபது லட்ச ரூபா ஆர்டர் ஒண்ணு அவுங்ககிட்டே இருந்து வரணும். நீ ஒண்ணு செய், விஜியை என் மனைவி சாவித்திரி கிட்டே கொண்டு போய் விட்டுடு. நீ அவனைத் திருப்திப் படுத்து'' என்றார்.

அவ்வாறே செய்துவிட்டு அந்த ரீஃபைனரீஸ் மானேஜரைத் தேடிப் போனான் சேகர்.

தன்னை அவன் அறிமுகப்படுத்திக் கொண்டவுடனே, அந்த ராம்மோகன், ''ஏன் சார், ஏதோ விருந்துன்னு கூப்பிட்டீங்க, அதுக்கு முன்னாடி தாகசாந்திக்கு ஒண்ணும் ஏற்பாடு செய்யலையா?'' என்று கேட்டான்.

சேகர் ''அதெல்லாம் இங்கே இருக்காது. இது பேமிலி ஃபங்ஷன் மாதிரி'' என்று சொல்லலாம் என நினைத்தான். அப்போது தன்னுடைய டைரக்டர் தன்னிடம் சொன்னது நினைவு வரவே, அவனுக்காக அதைத் தனியாக ஏற்பாடு செய்தான்.

ராம் மோகனுக்கு கம்பெனி கொடுப்பது பெரும் பாடாக இருந்தது சேகருக்கு. அவனுக்கு ஈடு கொடுப்பதற்காக ஒரு ஜூஸ் கிளாஸை வைத்துக் கொண்டு எவ்வளவு நேரம்தான் உட்கார்ந்திருக்க முடியும்? அந்த ராம் மோகனுக்கோ துளிக்கூட அவசரம் இல்லை போலிருந்தது. சரியான மொடாக் குடியன்!

அவன் முதல் பெக் விஸ்கியை உள்ளே தள்ளியபோது, கம்பெனியில் தன் வீர தீரப் பிரதாபங்களைப் பற்றி அளந்தான்.

இரண்டாவது பெக்கில், தன் கம்பெனி டைரக்டர்களை, தான் ஆட்டி வைத்த விதத்தைப் பற்றியெல்லாம் கதை விட்டான்.

''சார்! எல்லாருமே நமக்காகக் காத்திருப்பார்கள்'' என்று சேகர் நடுவில் சொல்லிப் பார்த்தான். ஆனால் ராம் மோகன் அதைக் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை.

மணி ஒன்பதாயிற்று. மூன்றாவது பெக், சாவதானமாக, உள்ளே போனது. ''சார்! நாம் போகலாமா?'' சேகர் எழுந்து கொண்டான்.

அந்தச் சமயம் பார்த்து அவன் மனைவி விஜி அங்கே வந்தாள். பார்த்தாள். ''நீங்கள் இங்கேயா இருக்கிறீர்கள்''

''விஜி! நீ போ. நான் சாரை அழைச்சிட்டு வரேன்'' என்று அவளுக்கு பதில் சொல்லி அனுப்பி வைத்தான்.

அடுத்த நிமிடம் தன் இருக்கையை விட்டு எழுந்திருந்த ராம் மோகன், மறுபடியும் உட்கார்ந்து கொண்டான். முகத்தை இரு கைகளாலும் மூடிக் கொண்டு, ''ஓ காட், ஓ காட்' என்றான். அதைப் பார்த்த சேகர் பதறிப்போனான். ''சார், என்ன சார், ஆச்சு?'' , என்றான்.

ராம் மோகன், முகத்திலிருந்து தன் கைகளை எடுத்தான். அவன் முகம் சிவந்திருந்தது. மெல்லிய குரலில், தயங்கித் தயங்கிப் பேசினான். ''சார்! இவுங்களா... விஜி... இவுங்களா உங்க மனைவி?''

அவன் பேசிய விதத்தைக் கேட்டு திடுக்கிட்டான்.

''ஏன் சார்...? என்ன சார்...?'' என்ன கேட்பதென்று தெரியாமல் கேட்டான்.

''வேண்டாம் சார்!...என்னை ஒன்றும் கேட்காதீர்கள்...'' ராம் மோகன் தன் தலையை மறுபடியும் கவிழ்த்துக் கொண்டான்.

சேகருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஆனால் இந்த முறை அவன் ராம் மோகனை அவசரப் படுத்தவில்லை.

சேகருக்கு மணிக்கணக்காய்த் தோன்றிய சில நிமிடங்களுக்குப் பிறகு, ராம்மோகன் தலையை நிமிர்த்தினான்.

அவன் கண்கள் பனித்திருப்பது போல் தோன்றின.


சேகரை அவன் கெஞ்சுவது போல் பார்த்துக் கேட்டான். ''சார்! எனக்கு உங்களால் பெரிய 'ஹெல்ப்' ஆகணும் சார்! செய்வீங்களா? ப்ளீஸ்... ப்ளீஸ்.... அதுவும் நீங்க தப்பா நினைச்சுக் கலைன்னா...''

சேகர் இதயத்தை, பயம் என்ற இருள் கவ்வத் தொடங்கியது.

''சொல்லுங்க...'' முனகினான்.

''சார்! இப்ப வந்து போனாங்களே, விஜி.. அவுங்க என்னோட படிச்சாங்க சார்!... அது மாத்திரம் இல்லை... நீங்க

தப்பா நினைக்கலைன்னா சொல்றேன். நாங்க ஒருத்தரை ஒருத்தர் காதலிச்சோம் சார்... காதல்னா சும்மா கண்ணோட கண்ண காதல், பேசிக்கொள்ளாமலேயே காதல் அப்படியெல்லாம் இல்லை சார்! ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சிண்ட காதல்..



"ஆனா திடீர்னு ஒரு நாள் அவ - ஐ ஆம் சாரி, உங்க மனைவி - அவுங்க - என்னை வெறுத்து ஒதுக்கிட்டாங்க சார்... நான் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தேன்... ஆனா அவுங்க என் பக்கம் திரும்பவே இல்லை.... அப்படி என் என்னை திடீர்னு தூக்கி எறிஞ்சாங்க, எங்கள் காதலைத் தன் காலுக்குக் கீழே போட்டு மிதிச்சாங்கன்னு மூணு வருஷமாத் தெரியாமத் தவிக்கிறேன். அந்த வேதனையிலே வெந்து சாகறேன்.

"எனக்கு இப்போ வேறே ஒண்ணும் வேணாம் சார்!.. அவங்க எனக்கு ஏன் துரோகம் பண்ணாங்கன்னு தெரிஞ்சாப் போதும். இன்னைக்கு வேணாம்... என்னைக்காவது ஒரு நாள் கேட்டுச் சொல்லுங்க சார்... அப்படியாவது தனிமையிலே துடிக்கிற நான் என் காதல் தோல்விக்குக் காரணமாவது தெரிஞ்சி அமைதி பெறுவேன். சார்... ப்ளீஸ்..." பேசிக்கொண்டே வந்த ராம்மோகன் சேகரின் கையைப் பிடித்துக்கொண்டு அழத் தொடங்கினான்.

தன் மனைவியைப் பற்றி அவன் சொல்லக் கேட்ட சேகர் பெரும் அதிர்ச்சி அடைந்தான். செய்வதறியாது தவித்தான். அவன் உடல் முழுவதும் மின்சாரம் பாய்ந்தது போல் துடித்தான். அடுத்ததாக ராம்மோகன் அழத் தொடங்கியபோது அவனுக்காகப் பரிதாபப்பட்டான். இப்படிப்பட்டவளா விஜி? சே, நம்பவே முடியவில்லையே! அப்படியானால் இத்தனை நாள் என்னிடம் அவள் அன்பு காட்டியது போல் நடந்து கொண்டது அத்தனையும் நாடகமா? அவ்வளவு வஞ்சகியா அவள்? சிந்திக்கச் சிந்திக்க அவன் தலை வெடித்து விடும் போல் இருந்தது.

அதற்குள் ராம்மோகன் தானாகவே ஆசுவாசப் படுத்திக் கொண்டான். "ஐ ஆம் சாரி, சேகர்... நான் ஏதேதோ சொல்லி உங்களை 'அப்செட்' பண்ணிட்டேன். நான் சொன்னதை எல்லாத்தையும் மறந்துடுங்க. ரொம்ப நாளைக்கு மனசிலே அடக்கி வெச்சிருந்ததெல்லாம் அவுங்களைப் பார்த்ததும் அப்படியே வெடிச்சிண்டு வந்துட்டுது...வாங்க போகலாம்... மீதிப் பேரெல்லாம் காத்திட்டிருப்பாங்க... " சேகரின் கையைப் பிடித்து அழைத்துப் போனான்.


அவர்கள் இருவரும் சாப்பிட வருவதைப் பார்த்தார் டைரக்டர். சேகரின் சிவந்த கண்களைத் தவறாகப் புரிந்து கொண்டு "யு டூ சேகர்!" என்பதைப் போல் பார்த்தார்.

சேகர் நடைப்பிணம் போல் ஆனான். டைரக்டர் மனைவியுடன் பேசிக் கொண்டு அவ்வப்போது கலகலவெனச் சிரிக்கும் தன் மனைவியைப் பார்த்து 'எவ்வளவு பாசாங்குக்காரி, இவள்' என்று பல்லைக் கடித்தான். அவள் தன் பக்கம் பார்வையைத் திருப்பும் போதெல்லாம், அவளைப் பார்க்கப் பிடிக்காமல் வேறுபுறம் திரும்பிக்கொண்டான். அவனால் சாப்பிடவே முடியவில்லை.

வீடு திரும்பும் போது, காரில் விஜி ஒய்யாரமாக ரகசியமாக டிரைவருக்கு கேட்காதவாறு "என்ன என். ராஜாவிற்கு இன்றைக்கு மூட் அவுட்?" என்றாள் . அதற்கு அவன் உஷ்ணமாக 'உம்' என்றான்.

வீட்டில் நுழைந்ததும் விஜி டிரஸ் மாற்றிக்கொள்ள அவள் அறைக்குப் போய் விட்டாள். சேகர் அப்படியே ஹாலில் சோபாவில் உட்கார்ந்து விட்டான்.

அவள் நைட்டிக்கு 'ஜிப்' போட்டுக் கொண்டே வந்து "ஏங்க நீங்க டிரஸ் மாற்றலையா?" என்றாள்.



அவன் அவளைப் பார்த்தான். அவன் கண்கள் திகு திகு வென எரிந்தன. அவன் முக்கண்ணனாக இருந்திருந்தால் அவள் அங்கேயே எரிந்து போயிருப்பாள்.

''விஜி! உண்மையைச் சொல்லு. நீ காலேஜிலே படிக்கறச்சே யாரையாவது காதலிச்சியா?'' உறுமினான்.

அவள், அவன் குரலின் தீவிரத்தைக் கண்டு கலகலவெனச் சிரித்தாள்.

''சிரிக்காதே'' அவன் காட்டுத் தனமாகக் கத்தினான்.

''நீ அந்த ஆளைக் காதலிச்சிட்டு அப்புறம் அம்போன்னு விட்டுட்டியா?''

அவன் மறுபடியும் கத்தினான். அவள் இந்த முறை சிரிக்கவில்லை. அவள் முகம் தீவிரமாகியது. ஆனால் பதில் சொல்லவில்லை.

'' அவனை ஏன் அப்போ காரணம் சொல்லாம கை விட்டே?'' அவன் கத்தல் தொடர்ந்தது. இப்போது கோபம் அவள் முகத்தைக் குங்குமமாக்கியது. உதடுகள் துடித்தன.

''அப்பவே, நான் சொல்லலைன்னு சொல்றீங்களே, இப்ப சொல்லி என்ன ஆகணும்?''

அவளுடைய அலட்சியமான பதில் அவன் ரத்தத்தைக் கொதிக்க வைத்தது. இருந்தாலும் அவனுக்கு அதற்குமேல் என்ன பேசுவதென்று தெரியவில்லை. ஏற்கெனவே ஒருவனைக் காதலித் தவளை, தான் ஏமாந்து மணந்து விட்டோமென நினைத்த போது அவனுக்குத் துக்கம் தாளவில்லை. அப்படியே சோபாவிலேயே இரவைக் கழித்தான்.

இரவு போட்ட விளக்குகள் அப்படியே எரிந்தபடி இருந்தன.

காலை விடிந்ததுமே அவனுக்கு வீட்டிலிருக்கப் பிடிக்கவில்லை. வீட்டை விட்டுக் கிளம்புமுன் அவள் அறையில் எட்டிப்பார்த்தான். அவள் படுக்கையில் படுத்தபடியே இருந்தாள்.

''கிராதகி, வஞ்சகி, எப்படி நிம்மதியாகத் தூங்குகிறாள்?'' அவன் பற்களை நறநறத்தான்.

வீட்டை விட்டு வெளியே வந்தவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. 'இவளைப் பற்றி யாரையாவது விசாரிக்கலாமா? இது நாள்வரை நம்மிடம் பழகியவளிடம் ஒரு களங்கமும் காணவில்லையே? ஒரு தடவை கூட அவள் ஆசையில் ஒரு செயற்கைத் தனமும் தெரிய வில்லையே? ஒரு சமயம் இவள் சரியான ஏமாற்றுக்காரியாக இருப்பாளோ? ராம் மோகன் பாவம் அவ்வளவு அமுதானே. ஒரு வேளை அவன் பொய் சொல்கிறானோ? ஆனால் அவன் ஏன் பொய் சொல்லவேண்டும்? அப்படி யென்றால் அவன் விஜியைப் பற்றிப் பேசியது நிச்சயம் உண்மையாகத் தான் இருக்குமோ? அப்படியானால் என் இல்லற வாழ்க்கை அவ்வளவு தானா?' அவன் கலங்கினான்.

அவனுக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை. இவள் படித்ததோ மைசூரில். அங்கு போய் இவன் யாரை விசாரிக்க முடியும்?

கடைசியில் அவனுக்கு ராம் மோகனையே பார்த்து எல்லாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொண்டால் என்ன வென்று தோன்றியது.

காலை பதினோரு மணிக்கு ராம்மோகனின் ஆபீசிற்குப் போன் செய்தான். ராம்மோகன் லீவு எடுத் திருப்பதாகவும், தீபாவளிக்கு ஊருக்குப் போய்விட்டதாகவும் சொன்னார்கள்.

சேகரின் குழப்பம் அதிகமாகியது. 'அடப்பாவி! எதையோ சொல்லிவிட்டுப் போய்விட்டானே? மறுபடியும் தீபாவளிக்குப் பிறகு தான் திரும்பி வருவானாமே? அப்போது என் தீபாவளி? அதுவும் தலை தீபாவளி? குழப்பத்திலும், சந்தேகத்திலும், அது வீணாக வேண்டி யது தானா?''

இந்த சிந்தனைக்குப் பிறகு அவன் தனக்குத்தானே விரக்தியாகச் சிரித்துக் கொண்டான். 'மணவாழ்க்கையே உடைந்து சிதறும் போலிருக்கிறது. இப்போது தீபாவளியைப் பற்றி


திருநாள் சபதம்

சிறுவயல் ஜெயமணி

புதிய சபதம் கொண்டு தம்பி
உழைக்கப் புறப்படு.
புவியோர் போற்றும் செயல்கள் செய்து
நீயும் உருப்படு.

என்ன இல்லை என்று இந்த
வயதில் ஏங்குகிறாய்
இரண்டு கையில் 'விசை' இருக்க
ஏனோ தூங்குகிறாய்

ஆமை போலத் தூங்கி வாழ்தல்
அழகு இல்லையே - நீ
ஆர்ப்பரித்து எழுந்து விட்டால்
வானம் எல்லையே!



நதிக்குக் கூட இலக்கு உண்டு
கடலில் சேர்வது.
நாவில் உறுதியோடு நீ சொல்
நீ எங்கே செல்வது?

இலக்கு ஒன்றை மனத்தில் கொண்டு
எழுந்து செயற்படு.
இடையில் தடைகள் வந்தால் அதை
எட்டி உதைத்திடு.

இந்தத் திருநாள் எடுக்கும் சபதம்
வெற்றி ஆகணும்.
எதிர்காலத்தில் உன் சாதனையை
உலகம் பேசணும்!

கவலைப்படுகிறேனே' என்று தன்னைத் தானே கடிந்து கொண்டான்.

குழப்பத்தின் நடுவிலும், அவனுக்கு ஒரு யோசனை பளிச்சிட்டது. இந்த ராம்மோகன் நேற்றிரவு பத்து மணிவரை பார்ட்டியில் இருந்திருக்கிறான். அவன் இன்று லீவு எடுத்து ஊருக்குப் போவதென்றால் இரவுக்கு மேல் போனாலும் போகலாம். அவனை வீடு தேடிப் போய்ப் பிடித்தால் என்ன? இந்த யோசனை அவனுக்குச் சரியாகப் பட்டது. ராம்மோகனின் வீட்டு விலாசத்தை அவன் ஆபீஸிற்குப் போய் வாங்குவதெனத் தீர்மானித்தான்.

அவன் ராம் மோகனின் ஆபீஸை நெருங்கிய சமயம் உள்ளிருந்து சிப்பந்தி ஒருவன் கையில் பிளாஸ்குடன் வெளியே வந்தான்.

அவனைப் பின் தொடர்ந்து சென்று விடாப்பிடியாக அவன் கையிலே பத்து ரூபாய்த் தாளைத் திணித்து மானேஜர் ராம் மோகனின் விலாசம் கேட்டான்.

''ஏன் எதுக்குக் கேக்கறீங்க?... நீங்க ஏதாவது பாங்கிலிருந்து வரீங்களா?... அவருக்கு கிரெடிட் கார்டு ஏதாவது கொடுக்கப் போறீங்களா?... அதைப் பத்தி விசாரிக்கத்தான் அவரோட அட்ரஸ் கேக்கறீங்களா?'' என்று அவன் உளறியதை அப்படியே பிடித்துக் கொண்டான் சேகர்.

''அட எப்படி சார் கண்டுபிடிச்சீங்க? நீங்க ரொம்ப இன்டெலிஜெண்ட் சார்'' ஐஸ் வைத்தான்.

அந்த ஆள் கரைந்தே போனான்.

''சார், அவன் அட்ரஸ் தானே வேணும்? இந்தாங்க அவனுடைய விசிட்டிங் கார்டே தரேன்.''

சேகர் அதை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டு இரண்டு அடி எடுத்து வைக்கவில்லை, அதற்குள் அந்த ப்யூனின் குரல் அவனைத் தடுத்து நிறுத்தியது.

''சார், நீ கேட்டியேன்னு உனக்கு அட்ரஸ் கொடுத்தேன். அவனை நம்பி பாங்கிலே கடன் கிடன் குடுத்தே, நீ அம்போ தான்.''

சேகர் மறுபடியும் அந்த பியூனை நெருங்கினான்.

ஐம்பது ரூபாய் நோட்டை, பல்லெல்லாம் தெரிய தன் பாக்கெட்டில் வாங்கித் திணித்துக்கொண்டு, அந்த ஆள் சொன்னான்.

''சரியான பேமானி சார், அவன் மொடாக் குடியன். கல்யாணம் ஆன உடனே அவன் பெண்டாட்டி அவனை விட்டுட்டுப் போயிட்டா. அந்தக் காய்ப்பு. இவனுக்கு நல்லெண்ணம் கிடையாது, சார், புருஷன் பெண்சாதியா ரெண்டு பேரைப் பார்த்தான்னா பொறுக்காது சார். அவங்களுக்குள்ளே சிண்டு முடிச்சு ஏதாவது கலகம் பண்ணிடுவான். ஒரு சமயம் என் பெண்சாதியைப் பத்திக் கூட...''

அவன் முடிக்கவில்லை. அதற்குள் சேகர் அங்கிருந்து பறந்துவிட்டான்.


''என்னை மன்னித்து விடு விஜி! அந்த ஆள் பேச்சைக் கேட்டு சந்தேகப்பட்டது தவறாகி விட்டது'' கண்ணீருடன் தன் முன் நின்ற கணவனைப் பார்த்து விஜி மனம் இளகவில்லை. மாறாக காளியாத்தாள் ஆனாள்.

''உங்கள் ஆண் வர்க்கமே இப்படித்தான். பெண் என்றால் உங்களுக்குக் கேவலம். எடுத்ததற்கெல்லாம் அவளைச் சந்தேகித்து சித்திரவதை செய்வீர்கள். அந்தக் குடிகாரன் சொன்னான் என்று என்னவெல்லாம் கேட்டீர்கள்? உங்களையா? மன்னிப்பதா? ஒருக்காலும் முடியாது.'' அவள் சீறினாள்.

சேகர் அதற்கு அமைதியாகப் பதில் சொன்னான். ''இதோ பார் விஜி! கொஞ்சம் நிதானமாக யோசித்துப்பார். கொஞ்சமும் முன் பின் தெரியாதவன் இப்படியெல்லாம் பொய் சொல்லுவான் என்று நினைத்துப் பார்த்திருக்க முடியுமா? இப்போது நான் ஒன்று சொல்கிறேன். இந்த ஆண் வர்க்கம்,அது இது எல்லாவற்றையும் மறந்துவிட்டு நினைத்துப் பார்த்து நிதானமாகச் சொல். உதாரணத்திற்கு எனக்கு வீட்டிற்கு ஒரு ஃபோன் வருகிறது. நீ ஃபோனை எடுக்கிறாய். பேசுவது ஒரு பெண். என்னைப் பெயர் சொல்லிக் கேட்கிறாள். நீ, நான் வீட்டில் இல்லை என்று சொல்லி அவள் யார் என்று விசாரிக்கும் முன் அவள் ஃபோனை வைத்து விடுகிறாள். இது மாதிரி தொடர்ந்தாற்போல் இரண்டு மூன்று முறை அவள் செய்கிறாள். உண்மையைச் சொல் விஜி. அந்த மாதிரி சூழ்நிலையில் என்னை நீ சந்தேகிப்பாயா மாட்டாயா? அப்படித்தான் இதுவும் என்று எண்ணிப்பார்த்தால் உனக்கு உண்மை விளங்கும். அவசரப்படாமல் யோசித்துப் பார்.''

விஜி புத்திசாலிப் பெண். சிந்திக்கும் திறன் கொண்டவள். சிந்தித்தாள். முடிவில் அவள் அவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவில்லை.

மாறாக மத்தாப்பாய்ப் புன்னகை சிந்தினாள். ●


-:பி. எம்ரோஸ்:-

அவர் வாரிசு

ரா. வேங்கடசாமி

"நீங்கள்தேடி வந்த வீடு இதுவாக இருக்காது. தயவு செய்து போய் வாருங்கள்" என்று சொல்ல நினைத்தவள் சுதாரித்துக் கொண்டு "வாருங்கள்..! வாருங்கள்! வணக்கம்" என்றாள்..

வந்தவர் சாரங்கபாணி... வயதில் பெரியவர். அவளுக்கு மாமனார் முறையாக வேண்டும்.

தயங்கியபடியே உள்ளே வந்த அவரை வரவேற்று உட்கார வைத்து விட்டு உள்ளே போனவள், திரும்பி வந்த போது அவள் கையில் காப்பி இருந்தது. "சாப்பிடுங்கள்" என்றாள், அமைதியாக.

"என் வீட்டில் உனக்கு இடமில்லை... வெளியே போடி நாயே..!" என்று துரத்தியவர், இன்று தைரியமாக அவள் வீடு தேடி வந்திருக்கிறார். தயங்கியபடியே காப்பியைக் குடித்தார்.

"என்னை எதற்காகத் தேடிக் கொண்டு வந்தீர்கள்?" என்று முகத்தில் அடித்தாற் போல் கேட்க அவள் விரும்பவில்லை. எப்படி பேச்சைத் தொடங்குவதென்று அவள் தடுமாறிக் கொண்டிருந்த போது அவள் மனத்தின் ஆழத்தில் புதைந்திருந்த பழைய நினைவுகள் மெதுவாக மேலே வந்து. நெஞ்சில் மோதின.

அவள் பெயர் பாமினி. தன் தாயாருடன் வசித்து வந்த நாள்கள் அவை. இளம் வயதில் தந்தையை இழந்த அவள் தாயின் தயவினால் நன்றாகப் படித்துப் பட்டம் பெற்று. பின் ஒரு தனியார் நிறுவனத்திலும் நல்ல உத்தியோகத்தில் இருந்தாள். உலகத்தை ஓரளவுக்குப் புரிந்தும் வைத்திருந்தாள். கை நிறையச் சம்பாதிக்கும் மகளை நல்ல இடத்தில் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று அவள் தாய் நினைத்தாள். அதற்கான நடவடிக்கைகளை எடுத்த சமயத்தில், மகள் காதல் வயப்பட்டிருந்தாள். என்றாலும் யோசித்துப் பார்த்த தாய் 'இவன் மகளை நிச்சயம் கைவிடமாட்டான்' என்று தெரிந்து கொண்ட பிறகு, அவள் காதலை ஏற்றுக் கொண்டாள். காதலனும் நல்ல பதவியில் இருந்தான். பாமினியின் அழகுக்கு ஏற்றவன்தான். பெயர் குமார்... நல்ல வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன். எனவே பாமினியின் தாயார் இந்தத் திருமணத்திற்குதன் முழுச்சம்மதத்தைக் கொடுத்துவிட்டாள். மாப்பிள்ளை குமாரை அவளுக்கு மிகவும் பிடித்துவிட்டது.

குமார்-பாமினியின் திருமணத்திற்குத் தடுப்புச் சுவர் எழுப்பிக் குறுக்கே நின்றார் குமாரின் தந்தை. அவர்களின் திருமணத்திற்குச் சம்மதம் தரவே மறுத்துவிட்டார். குமாரின் பிடிவாதமும் பலிக்கவே இல்லை. மகனை எங்கே தட்ட வேண்டுமோ, அங்கே தட்டியதும் அவனும் தந்தையின் பக்கமே சாய்ந்து விட்டான். பாமினி அவனது வீடு தேடி ஒரு நாள் சென்ற போது தகாத சொற்களைக் கூறி வெளியே விரட்டியடிக்கப்பட்டாள். விரட்டியவர் குமாரின் தந்தைதான்.

பாமினி... படித்தவள்... நிச்சயம் திருமணம் நடக்கும் என்று நம்பியவள் - ஏமாந்துவிட்டாள்... ஆம், குமாரின் ஆசைவார்த்தைகளைப் பெரிதாகவும், உறுதியாகவும் நம்பி, ஏற்கெனவே தன்னை அவனிடம் ஒப்படைத்து விட்டாள். விளைவு? அவள் அப்போது மூன்றுமாத கர்ப்பிணி.

பலர் அவளுக்கு யோசனை சொன்னார்கள்.

குமாரே கூட "கர்ப்பத்தைக் கலைத்துவிடு..! புதிய வாழ்க்கையைத் தொடங்கு" என்றான்.

பாமினி எதற்குமே மசியவில்லை.

வாழ்ந்து காட்டவேண்டும் என்ற வைராக்கியத்துடன் வேறு ஊருக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு போய் விட்டாள்.

இப்போது அவளுக்கு இருக்கும் ஒரே துணை, அவளது மகன் அசோக்!

இப்போது அவனுக்கு வயது மூன்று.

எவ்வளவு நேரத்திற்குத் தான் பேசாமல் அமர்ந்திருக்க முடியும் ? "வீட்டில் எல்லாரும் சௌக்கியமா?" பாமினி அவரிடம் கேட்டாள்.

"உம்" என்றார் அவர் -பேச்சு வரவில்லை.

நா வறண்டு போயிற்று... தண்ணீர் வாங்கிக் குடித்தார்.

எதையோ பேச வந்தவர், சொல்ல முடியாமல் தடுமாறுகிறார் என்பது இதற்குள் அவளுக்குப் புரிந்து போயிற்று.

மேலே பார்த்து.. கீழே பார்த்து... உடம்பை... முகத்தை ஒரு முறைக்கு இரு முறை நன்றாகத் துடைத்துவிட்டுக் கொண்ட பிறகு, தொண்டையைச் சரிப்படுத்திக் கொண்ட பிறகு, மெதுவாகக் கேட்டார்...

"இந்த ஊருக்கு நீ வந்து நான்கு வருடங்கள் இருக்குமா?"

"இருக்கும்!"

"நீ இங்கே தனியாகவா இருக்கிறாய்?"

"இல்லை... துணைக்கு என் மகன் அசோக் இருக்கிறானே!"

துணைக்கு ஒரு மகன்! கேட்க இனித்தது அவருக்கு. சாரங்கபாணி யோசித்தார்.

"நீ திருமணம் செய்து கொண்டிருக்கலாம்.."

"உங்கள் மகனே... என்னை மணந்து கொள்ள முன் வந்திருந்தால்... அதற்கு நீங்கள் அனுமதித்திருந்தால்... செய்து கொண்டிருக்கலாம்.."

அவர் கண்களில் நீர் துளிர்த்தது..

துடைத்துவிட்டுக் கொண்டார். அதைப் பார்த்த அவளுக்கு லேசாக இளகினாலும், பாமினி மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாள். அன்றொரு நாள் அவள் வடித்த கண்ணீரை யாரும் பொருட்படுத்தவில்லையே!

"நீ ஊரைவிட்டு வந்த பிறகு என்ன நடந்தது என்றே உனக்குத் தெரியாது என்று நினைக்கிறேன்."

"தெரிந்து கொள்ள வேண்டுமா என்ன? யூகித்துக் கொள்ள வேண்டியது தானே...? நான் உங்கள் மகனுக்கு ஏற்றவளில்லை என்று விரட்டி அடித்தீர்கள்..! நான் ஒதுங்கியவுடன்



உங்கள் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள எந்தவிதமான தடையும் இல்லை. மகனுக்கு நீங்கள் விரும்பிய இடத்திலேயே திருமணம் செய்து வைத்திருப்பீர்கள். மகனும் மருமகளும் சந்தோஷமாக இருக்கும்போது, இந்தக் கேடு கெட்டவள் எப்படி இருக்கிறாள் என்று பார்த்துவிட்டுப் போக வந்திருக் கிறீர்கள்.. இல்லையா? வேறு புதிதாக என்ன நடந்திருக்கப் போகிறது...?'' கடுமையாகவே வார்த்தைகளை அள்ளித் தெளித்தாள் அவள்.

கண்களில் வழிந்து நின்ற நீரைத் துடைத்து விட்டுக் கொண்ட அவர் குறுக்கிட்டார்.

''அம்மா பாமினி! நீ சொன்னது போல் என் மகனுக்கு நான் திருமணம் செய்து வைத்ததென்னவோ உண்மை தான். மருமகளாக வந்தவள் நிறையப் படித்தவள். - பணக்காரி... எல்லா விதத்திலும் என் குடும்பத்திற்கு ஏற்றவள் தான் என்று நம்பினேன்..'' என்றவர் சற்றே நிறுத்தினார்.

அவர் தொடர்ந்து மௌனம் சாதிக் கவே, அவள் கேட்டாள்:

''ஏன் உங்கள் மருமகளிடம் ஏதாவது கோளாறா?''

''அவளுக்கென்ன? நன்றாகத் தான் இருக்கிறாள்... அவர்கள் வாழ்க்கையும் நன்றாகவே இருந்தது. ஆனால் சில மாதங்களுக்குத்தான் நீடித்தது அது.பிறகு ''என் மகன் குமார்... ஒரு விபத்தில் இறந்துவிட்டான் அம்மா...'' என்று கூறிய அவர் தன் முகத்தை இரண்டு கை களாலும் மூடிக் கொண்டு அழத் தொடங்கினார். எப்போது அவனைப் பிரிந்து வந்தாளோ அப்போதே அவள் வரைக்கும் குமார் இறந்தவன் தான்.! ஆனாலும் உண்மையில் அவன் இறந்துவிட்டான் என்ற செய்தி அவளுக்கு அதிர்ச்சி தந்தது.

அமைதியாக அழுதாள். சிறிது நேர அமைதிக்குப் பின்னர் சாரங்கபாணி தொடர்ந்தார்:

''அவன் விபத்தில் இறந்துவிட்ட பிறகு. மருமகள் வீட்டை விட்டுப் போனதுமல்லாமல், வேறு ஒருவனைத் திருமணம் செய்து கொண்டு ஆனந்த மாகக் குடும்பம் நடத்துகிறாள்...''

பாமினிக்கு இது இரண்டாவது அதிர்ச்சி.

சாரங்கபாணி தொடர்ந்தார்: ''அவன் இறந்த பிறகு இவளாவது ஆறுதலுக்காக எங்களுடன் தங்கியிருக்கலாம்.. தன் எதிர்காலத்தை மட்டும் நினைத்துக் கொண்டாள் அவள். இப்போது நானும் என் மனைவியுந்தான் அநாதைகளாகப் போய்விட்டோம்'' மீண்டும் பேச்சை நிறுத்தினார்.

தன்னிடம் அவர் வந்திருப்பதன் நோக்கம் பளிச்செனப் புரிந்தது அவளுக்கு..

''உனது திருமணத்திற்கு, உன் குழந்தை இடைஞ்சலாக இருக்கும் என்பதை நான் அறிவேன். உனக்கு உதவியது போலவும் இருக்கும்..

எங்களுக்கும் ஆறுதலாக இருக்கும் வகையில், ஒரு வாரிசு கிடைத்தது போலவும் இருக்கும் என்று நினைத்துத் தான் நாங்கள் ஒரு முடிவுக்கு வந்தோம். அதன்படி தான் நான் இங்கே வந்திருக்கிறேன் உன் அனுமதியோடு, உன் மகனை, உன்னிடமிருந்து அழைத்துக் கொண்டு போகலாம் என்கிற நம்பிக்கை எனக்கு!''

பேச்சை நிறுத்திவிட்டு, அவளை நேராகப் பார்க்கப் பயந்து, வேறு பக்கம் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டார்..

அவளது யூகம் சரி தான்..!

இப்போது தான் அவளுக்குக் கோபமே வந்தது.

''என் மகனை நீங்கள் ஏன் அழைத்துக் கொண்டு போக வேண்டும்?''

''உன் மகன் மட்டுமில்லையே அவன் என் மகனுக்குப் பிறந்தவன் என்கிற உரிமையால் தானம்மா கேட்கிறேன்..''

''அதற்கென்ன ஆதாரம்?''

''நீ என் வீட்டிற்கு வந்தபோது, அப்படிச் சொல்லித் தானே அழுதாய்?''

''சொன்னேன்.. உண்மை... அதற்கு நீங்கள் என்ன சொன்னீர்கள்?... தயவு செய்து அதையும் நினைவுக்குக் கொண்டு வாருங்கள்..''

அவர் மௌனமாக இருந்தார்..

''நீங்கள் சொல்லமாட்டீர்கள்... நானே சொல்கிறேன்.. 'உனக்கு என் வீட்டில் இடமில்லை. இங்கிருந்து ஓடிப்போய் விடு நாயே' என்று சொன்னீர்கள்?... இப்போது நான் சொல்லுகிறேன்.. கேட்டுக் கொள்ளுங்கள்.. அந்தக் குழந்தைக்கு உங்கள் மகன் தந்தையே இல்லை'' கத்தினாள் பாமினி.

சாரங்கபாணிக்குக் கோபம் வரவில்லை.

''அம்மா பாமினி! வீணாக எனக்காக உன் மீது களங்கம் சுமத்திக் கொள்ளாதே... அப்போது நீ சொன்னதெல்லாம சத்தியம்..! ஒப்புக் கொள்கிறேன்.. தயவு செய்து நீ எனக்கு உதவி செய்தே ஆக வேண்டும்'' சாரங்கபாணி எழுந்து வந்து அவளது கைகளைப் பற்றிக் கொண்டார். பாமினி அந்தக் கைகளை விலக்கினாள்... அவரது கால்களைப் பிடித்தபோது, கண்டு கொள்ளாதவர் தானே அவர்? இன்றைக்கு மட்டுமென்ன?

பாமினி அசைந்து கொடுக்கவில்லை..

''நான் என் மகனைப் பிரிய முடியாது'' என்று அவள் அழுத்தந்திருத்தமாகச் சொன்னபோது, ''அம்மா'' என்று அழைத்தபடியே அசோக் - அவள் மகன்- உள்ளே வந்தான்.

தாத்தா இழுத்தணைக்க - திமிறிக் கொண்டு அம்மாவிடம் போனான். அசோக்குடன் வந்திருந்த நபரை, அவருக்கு அறிமுகம் செய்து வைத்தாள்..

''இவர் பரசுராமன்.. என்னுடன் வேலை செய்கிறார்... இன்று வரை என் மனத்தில் ஏற்பட்ட சலனங்களுக்கு இடம் கொடுக்காமல் தான் வாழ்ந்தேன்.. இனிமேல் அப்படி இருக்க முடியாது போலத் தோன்றுகிறது......

"இதோ இவர் என்னை மணந்து கொண்டு என் மகனுக்குத் தந்தையாக வாழ விரும்புவதாக இரண்டாண்டு காலமாகச் சொல்லி வருகிறார். நான் இன்றுவரை மறுத்துவந்தேன். குமார் என்றாவது ஒரு நாள் நிச்சயம் என்னைத் தேடி வருவார் என்று நினைத்திருந்தேன். நீங்கள், அவர் முடிவைப் பற்றிச் சொன்ன பிறகு, இனி நானும் என் எதிர்காலத்தைப் பற்றி முடிவு செய்ய வேண்டுமல்லவா? எனவே, ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்" என்றாள்

மீண்டும் தொடர்ந்தாள்: ''அசோக் அவர் வாரிசுங்கறது உண்மைதான் என்றாலும், கோர்ட்டுக்குப் போனாலும் கூட, நான் வேண்டாம்னு மறுக்கற வரைக்கும் தாய்கிட்டே இருக்கணும்னு தான் சொல்வாங்க: நீங்க போகலாம்'' என்றவள், தன் மகன் அசோகனை வாஞ்சையுடன் வாரி அணைத்துக் கொண்டாள்.

●

இன்சொல் அமுதம்



இனிய உளவாக இன்னாத கூறுதல்
கனியிருப்பக் காய்கவர்தல் ஒப்பாகும் என்பதுவே
தெள்ளுதமிழ்க் குறள்தந்த வள்ளுவனின் வாய்மொழியாம்.
அள்ளக் குறையா அருஞ்செல்வம் அதுவெனினும்
இன்சொல் பேசுவோரை ஏமாளி என்றெண்ணி
வன்சொல்லே தன்சொல்லாய் வழங்குகிற சிலபேரோ
நாவால் சுடுவார் நலங்கெடுவார் நாடாளும்
கோவேந்தர் என்றாலும் கூனிக் குறுகிடுவார்
யார்தான் நன்மைகளை அடைந்தார்கள் வன்முறையால்?
பேர்சொல்லிக் குறிப்பிடுங்கள்; பிறகுநான் ஒப்புகிறேன்
வாழ்வதும் வளர்வதுவும் வாஞ்சையுடன் பிறர்நம்மைச்
சூழ்வதுவும் நாம்சொல்லும் சுவையான சொல்லால்தான்
இன்சொல்லை நம்புங்கள்; எந்நாளும் மதியுங்கள்.
வன்சொல் வாழ்ந்ததெனும் வரலாறு எங்குமில்லை.
எதற்கும் பயன்படா இன்னாத சொற்களை
உதறி எறியுங்கள்; உள்ளன்பின் ஊறுங்கள்.
கோபத்தின் முதுகொடித்து கொலைவெறிக் குரல்நீக்கி
ஆபத்தென்றே அலறும் அச்சக் குரலகற்றி
இனியவையே பேசுங்கள்; இன்பமழை ஆகுங்கள்.
தினந்தோறும் அதைப்பேசத் தீர்மானம் செய்திடுங்கள்.

கு.சண்முகசுந்தரம்

பொன்மணி வைரமுத்து



ஆடிப்பெருக்கு

கண்ணாடியில்லாமல் யாரும்
வாழமுடியாது போலிருக்கிறது

அன்றாடத்தின்
பிள்ளையார் சுழியிலிருந்து எத்தனை முறை
மனிதன் அதன் முன்னாடி...!

வீட்டில் என்ன இருந்துமென்ன?
கண்ணாடி வைத்தால்தான் உயிர் வருகிறது.

வட்டமாய்... சதுரமாய்... வெவ்வேறு கோலமாய்
கைக்குள், பைக்குள், உடையில்
வாகனமுகப்பில் கண்ணாடி ஜொலிக்கும்,
அங்கிங்கெனாதபடி.

இன்னும்
அவரவர் உள்ளங்கையிலோ
அடுத்தவர் முதுகிலோ பதிக்கப்பட்டால்
கண்ணாடி பார்த்தபடி
களிப்பாய் நடக்கலாம்.



உண்ண
எழுத
படிக்க
விருந்தோம்பப்
பரபரக்கும் மனிதன்
நிலைக்கண்ணாடியின் முன்
நிதானங்கொள்கிறான்.

பலகோணங்களில் நின்று
பார்க்கப் பார்க்க
அழகின் சதவிகிதம் அதிகமாவதாய்
நம்பிக்கை.

உருவம்பார்த்தே உறைந்துவிடும்
நார்சிசம்...

மெய்ஞ்ஞானி, விஞ்ஞானி தவிர
பார்வை கொண்டோர்க்கு
கண்ணாடி தன்னம்பிக்கை.

ஆடிமுன் நின்று
புன்னகைபூத்து... நாணி
புருவஞ்சுருக்கி
மீசைமுறுக்கி அல்லது
கூந்தல் விரித்துப்போட்டு
நேசப்பார்வை வீசி
அதுவே தானாய்
தானே அதுவாய்
பிரதிபலிப்பதில்
எதுதான் அது?
எது... தான்?
அத்வைதம்!
எந்திரவாழ்வின்
மந்திரப்பிடிமானம்

முடி கொட்டும் வரை
கூந்தல்வாரி
அழித்தழித்துப் பொட்டு வைத்து
மைதீட்டி
இழுத்திழுத்துப் பூ வைத்து
நடனச் சுற்றாய்ச் சுற்றி
அழகு பார்க்கும் கன்னிமை!

காணும்போது
அழகு குறைந்தால்
அது,
ரசங்குறைந்து வஞ்சிப்பதாய்க்
கசந்துபோகிறது மனம்.

ஆடி பார்த்தபடி நிற்கும்
பெண்சிலையை
அருங்காட்சியகத்தில் கண்டதுண்டு.
அவள் கண்ணாடி பார்த்தே
சிலையாகியிருக்கிறாள்.

பூமிக்கு வானும் வானுக்கு பூமியும்
கண்ணாடியாகும்.
நீரின் தெளிவில்
பாத்திரப் பளபளப்பில்
அடுத்தவர் கண்மணியில்
வழுக்கைத் தலையில்
கண்ணாடி அவதரிக்கிறது!

எத்தனைமுகம்! எத்தனைமுறை ஒரேமுகம்!
ஆடி —
பிம்பங்கள் சுமக்கும் சுமைதாங்கி.

அது
குழந்தைக்குக் காட்சி;
இளமைக்குக் கனவு;
நடுத்தர வயதிற்குச் சமாதானம்;

ஆடி
அழகைப் பெருக்குமா? சுருக்குமா?
அழகை...
ஆறுதலை...
உற்சாகத்தை...
பெருக்கிக்காட்டும்
பெருந்தன்மை
ஆடிக்கு உண்டு.

ஆன்மக் கண்ணாடியில்
தன்னைத்தான் பார்க்கும்
காலம் வரும் வரை
ஒரு கண்ணாடி வாழ்க்கை!

*

திருப்புள்ளிருக்கு வேளூர்

(வைத்தீஸ்வரன் கோயில்)

தேவகி முத்தையா

தென்னாட்டில் தலைசிறந்த பிரார்த்தனைத் தலங்களுள் ஒன்றாகத் திகழ்வது, "புள்ளிருக்கு வேளூர்" எனப்படும் பாடல் பெற்ற தலமாகும். பலராலும் பொதுவாக, "வைத்தீஸ்வரன் கோயில்" என்றே அழைக்கப் பெறுகின்றது.

சோழ வளநாட்டில் தஞ்சை மாவட்டத்தில் காவிரியின் வடகரைத் தலங்களில் 16 ஆவது தலமான இத்திருத்தலம், இந்திய இருப்புப் பாதையில் 'வைத்தீஸ்வரன் கோயில்' எனும் பெயருடன் புகைவண்டி நிலையமாகவும் அமைந்துள்ளது. தருமையாதீனத்திற்குச் சொந்தமான 27 கோயில்களுள் மிகவும் புராதனமான, பிரபலமான ஒன்றாகும் இங்குள்ள கோயில்.

பெயர்க் காரணம்:

புள் (ஜடாயு), இருக்கு (ரிக்வேதம்), வேள் (முருகன்), ஊர் (சூரியன்) ஆகிய இந்நால்வரும் பூஜித்ததால் 'புள்ளிருக்கு வேளூர்' எனும் பெயர் கொண்டது. மற்றும் சடாயுபுரி, கந்தபுரி, வேதபுரி என்றும் அங்காரகன் வழிபட்டமையால், 'அங்காரகபுரம்' என்றும் சூரியன் வழிபட்டமையால், 'பரிதிபுரி' எனவும் அம்பிகை பூஜித்தமையால், 'அம்பிகாபுரம்' எனவும் அழைக்கப் பெறும். 'வினை தீர்த்தான் கோயில்', 'தையல்நாயகி கோயில்' மற்றும் வழக்கில் உள்ள 'வைத்தீஸ்வரன் கோயில்' எனப் பல பெயர்களும் உண்டு.

கோயில் அமைப்பு :

நான்கு கோபுரங்களுடனும் உயர்ந்த மதில்களோடும் கூடிய கோயில் மேற்கு நோக்கிய இறைவனின் சந்நிதி கொண்டது; அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கி உள்ளது.

**"தெற்கில் கணேசன் திகழ்மேற்கில் பைரவரும்
தொக்க வடக்கில் தொடர்காளி-மிக்க கிழக்கு
உள்ளிருக்கும் வீரனையும் உற்றுப் பணிந்துய்ந்தேன்
புள்ளிருக்கு வேளூரிற் போய்."**

எனும் பாடலின் மூலம், வைத்தியநாத சுவாமி ஆலயத்தைத் தெற்கில் கணபதியும், மேற்கில் பைரவரும், வடக்கில் காளியும், கிழக்கில் வீரபத்திரரும் காவல் புரிகின்றனர் என்று அறியலாம்.

தீர்த்தம் :

கோயிலுக்குள் விளங்கும் சித்தாமிர்த தீர்த்தம் சிறப்பானது. நான்கு புறங்களிலும் மண்டபத்தோடும் படிக்கட்டுகளோடும் நடுவில் நீராழி மண்டபம் விளங்குகின்றது. இங்கே கிருத யுகத்தில் காமதேனு இறைவனைத் தன் முலைப்பால் கொண்டு திருமஞ்சனம் ஆட்டிய சம்பவம் நிகழ்ந்தது. அதுவே புனிதத் தீர்த்தமாகப் பெருகி இங்கு அமைந்ததென்பர். இதன் காரணமாக, 'கோ க்ஷீர' தீர்த்தம் என்று பெயர் பெறலாயிற்று.


சதானந்த முனிவர் இங்கு தவம் செய்து கொண்டிருந்த போது, பாம்பால் துரத்தப் பெற்ற தவளை ஒன்று தண்ணீரில் குதித்து அவர் தவத்தைக் கலைத்தது. முனிவர், 'குளத்தில் பாம்பும் தவளையும் வாசஞ் செய்யக்கூடா'தென்று சபித்ததால், இக்குளத்தில் தவளைகள் வசிப்பதில்லை என்பர். இத்திருக்குளத்தில் குளித்தெழுந்தால் சகல நோய்களும் தீரும் என்பது திண்ணம். நோய்தீரக் குளத்தில் வெல்லம் கரைத்து விடுவதும் பிராகாரத்தில் உள்ள மரப் பெட்டியில் உப்பு, மிளகு இரண்டையும் கலந்து கொட்டுவதும் இன்றும் உள்ள ஒரு பிரார்த்தனை வழக்கம். சித்தாமிர்த தீர்த்தம் தவிர, கோதண்ட தீர்த்தம், கௌதம தீர்த்தம், வில்வ தீர்த்தம், அங்க சந்தன தீர்த்தம், முனிவர் தீர்த்தம் என்ற வேறு தீர்த்தங்களும் இங்கு உள.

மூர்த்திகள் :

சுவாமி பெயர் : ஸ்ரீவைத்தியநாதன் - வைத்தீஸ்வரன்; அம்பாள் பெயர் : ஸ்ரீதையல்நாயகி; முருகன் : செல்வமுத்துக்குமரன் எனும் பெயரோடு விளங்குகின்றார். 'கோளிலித்தலம்' என்று அழைக்கப் படும் வைத்தீஸ்வரன் கோயிலில் நவக்கிரகங்கள் வக்கிரமில்லாமல் வரிசையாக ஈசுவரன் சந்நிதிக்குப் பின்புறம் நோய்கள் தீர வேண்டிப் பிரார்த்தித்திருக்கும் காட்சியைக் காணலாம். அங்காரகனின் செங்குஷ்ட நோயைத் தீர்த்தபடியால் அங்காரகத் தலமாக விளங்குகிறது. அங்காரகனுக்குத் தனிச் சந்நிதி உண்டு. மூல விக்ரகத்தோடு உற்சவ விக்ரகமான அங்காரகனும் உண்டு. இரண்டும் தனித்தனிச் சந்நிதிகளாக உள்ளன. அங்காரக தோஷம் உள்ளவர்கள் இங்கு வந்து வழிபடுவதால் தோஷம் நீங்கப் பெறுவர். நவக்கிரகங்களுக்கு அடுத்தாற் போல் 63 நாயன்மார்கள், ஸப்த கன்னியர் ஆகியோரையும் மற்றும் ஆயுர்வேதத்தின் தலைவனான தன்வந்திரி சித்தர், விஷ்ணுவின் உருவத்தில் அமர்ந்திருக்கும் வடிவத்தையும் காணலாம். துர்க்கை மற்றும் சஹஸ்ரலிங்கமும் விசேடமானவை.

தலப்பெருமை :

முருகன் சூரபத்மனை வெல்ல வேல் வாங்கிய தலம்இது. இறைவன் 4448 நோய்களையும் அதோடு ஊழ் வினைகளையும் தீர்க்க வல்ல வைத்தியநாதராய் எழுந்தருளியுள்ளார். அவருக்கு உதவியாய் அம்பாள் கையில் தைல பாத்திரமும், அமிர்த சஞ்சீவினியும், வில்வ மரத்தடி மண்ணும் ஏந்தி வர, இருவரும் தீராத நோய்களையும் வினைகளையும் தீர்த்து வைக்கும் வேதியத் தம்பதியாகின்றனர். இத்தலத்தில் அடி



வைத்தீஸ்வரன் கோயில்

ஸ்ரீ வைத்தீஸ்வர ஸ்வாமி ஸ்ரீ தையல் நாயகி சந்நிதிகளின் தோற்றம்.

வைப்பதால் பில்லி, சூனியம் முதலானவையும் கூட அகலும் என்பர்.

சடாயு குண்டம்:

சீதையை இராவணன் சிறையெடுத்துச் சென்ற போது, அதனைத் தடுத்த ஜடாயுவின் சிறகுகளை இராவணன் வெட்டி வீழ்த்தினான். பின்னர் இராமன் அவ்வழியில் சீதையைத் தேடி வந்த நேரத்தில், நடந்தவற்றைச் சொல்லி ஜடாயு, இராமனது காலடியில் உயிர் துறந்தான். இராமபிரான் ஜடாயுவின் வேண்டுகோளின்படி சிதையடுக்கி அவனது உடலைத் தகனம் செய்த இடம். 'ஜடாயு குண்டம்' என்று அழைக்கப் பெறுகின்றது.

இன்றும் இக்குண்டத்தில் உள்ள திருநீற்றினை அணிந்தால் தீராத நோய்களும் தீரும் எனும் நம்பிக்கை உள்ளது. ஜடாயு குண்டத்திற்கு அருகில் ஜடாயு மோட்சத்தைச் சிலை வடிவில் காணலாம். ஜடாயு உற்சவ மூர்த்தியாகவும் இருக்கிறார்.

திருச்சாந்துருண்டை:

இது வைத்தியநாதப் பெருமானின் பிரசாதமாக நோய் நீங்கும் பொருட்டு அளிக்கப் பெறுவது. ஆலயத்தில் விபூதி குண்டத்தில் (ஜடாயு குண்டத்தில்) உள்ள விபூதியையும் சித்தாமிர்த தீர்த்த நீரையும் சேர்த்துக் குழைத்து, ஐந்தெழுத்து மந்திரமாகிய 'நமசிவாய' என்பதனை ஓதிக்கொண்டே, முத்துக்குமார சுவாமி சந்நிதியில் உள்ள குழியம்மியில் அரைத்து உளுந்தளவில் உருட்டி, அம்பாள் திருவடியில் வைத்து அர்ச்சித்து எடுத்துச் சேகரித்து வைத்துக் கொண்டு, வேண்டியவர்களுக்கு அந்த உருண்டை வழங்கப் பெறுகின்றது. இதனை உண்டோர் நோய் (தீவினை) நீங்கி வாழ்வாங்கு வாழ்ந்து, பின் முக்தி எய்துவர்.

இங்கு அர்த்த சாமப் பூஜை செல்வ முத்துக் குமார சுவாமிக்குச் செய்த பின்புதான் சுவாமிக்குச் செய்யப் பெறுகின்றது. அர்த்தசாமப் பூஜையின் போது முத்துக்குமார சுவாமிக்கு அணிவிக்கப் பெறும் சந்தனமான நேத்திரப்பிடி சந்தனமும் வேண்டிய வரம் தரவல்ல மகிமையுடையது என்பர்.

தலவிருட்சம் :

கிழக்குக் கோபுர வாயிலில் உள்ள வேம்பு தல விருட்சமாகும். இதனை, 'வேப்படிமால்' என்கின்றனர். ஆதிவைத்தியநாதபுரம் இதுதான் என்பர்.

திருவிழாக்கள் :

நாள்தோறும் ஆறு கால பூஜைகள் உண்டு. பங்குனியில் பிரம்மோற்சவம் நடைபெறும். அதில் ஐந்தாவது நாளன்று செல்வமுத்துக்குமரன், வைத்திய நாதரைப் பூஜித்துச் செண்டு பெறும் காட்சி மிக அற்புதமான ஒன்று. உற்சவ காலத்தில் கயிலையில் சோமாஸ்கந்தர் எழுந்தருளியிருப்பது போல் சுவாமி ஒரு புறமும், அம்பாள் ஒரு புறமுமாக எழுந்தருள, செல்வ முத்துக்குமாரசுவாமி நடுவில் எழுந்தருள்வார்.

மாதந்தோறும் வரும் கார்த்திகை விழா இங்கு சிறப்பானது. இந்நாளில் செல்வமுத்துக் குமார சுவாமிக்கு நடைபெறும் அபிஷேக ஆராதனைகளைத் தரிசிக்க மக்கள் பல்லாயிரக்கணக்கில் கூடுவர்.

அபிஷேகங்களில் சந்தன அபிஷேகம் மிகவும் சிறப்புடையது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் மாதந்தோறும் கார்த்திகையன்று எழுந்தருள, அவர்கள் திருமுன்னிலையில் இந்த அபிஷேகம் நடைபெறுவது கண்கொள்ளாக் காட்சி. அங்காரக க்ஷேத்திரமாதலின் செவ்வாய்க்கிழமைகளில் அங்காரகர், பிராகாரத்தில் வலம் வருவார். கார்த்திகை மாதச் சோம வாரங்களில் ஈசுவரனுக்கு சங்காபிஷேகம் உண்டு.

ஆண்டுதோறும் நகரத்தார்கள் சித்திரை மாதத்தில் வண்டிப் பயணமாக வேளூருக்கு வரும் வழக்கம் உண்டு. ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக இப்பயணம், ஆண்டுதோறும் தமிழ்ப் புத்தாண்டுக்குப் பிறகு சித்திரைத் திங்களில் நடைபெற்று வருகின்றது. இப்பயணம் கீரணிப் பட்டி முத்து மாரியம்மன் திருவிழா முடிந்து, தொடர்ந்து வரும் புதன்கிழமை இரவு 12 மணிக்கு மேல் அதாவது வியாழக்கிழமை காலை தொடங்குகிறது. இப்பயணம் கீரணிப்பட்டித் திருவிழா முடிந்தபின் நடைபெறுவதற்குக் காரணம் நகரத்தார்கள் காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து பாண்டிய நாடு வரும்போது கீரணி அம்மனையும் தங்களோடு கொண்டு வந்தார்கள் என்பது வரலாறு. இதனைக் கீழ்க் காணும் கும்மிப்பாடல் வழி அறியலாம்.

"காவிரிப்பூம் பட்டிணத்தில் இருந்தொரு
காவலன் மாறனழைத்து வர
பூவிரிப் புலன்மிகும் பாண்டிய நாட்டினிற்
+பொங்கத்துடன் வந்தமர்ந்தாளே."

வண்டிப் பயணமாகத் தொடங்கி நடைப் பயணத்தையும் இன்று ஈர்த்துப் பல்லாயிரக் கணக்கானோர் பங்குபெறும் சிறப்புறு பயணமாகியுள்ளது, இது.

கீழச்சீவப்பட்டி, அழகாபுரி நகரத்தார்களோடு பள்ளத்தூர், குருவிக்கொண்டான்பட்டி, ஆத்தங்குடி, கோட்டையூர், சிறுகூடற்பட்டி ஆகிய ஊர்களிலிருந்தும் வண்டிகளும் பக்தர்களும் இந்தப் பயணத்தில் கலந்து கொள்கின்றனர்.

திருஞானசம்பந்தர் இத்தலத்தைப் பற்றிப் பதிகம் ஒன்று பாடியுள்ளார். திருநாவுக்கரசர் இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார். தருமையாதீனம் 10 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமி அருளிய செல்வ முத்துக்குமாரசாமி திருவருட்பாவும், குமரகுருபரர் அருளிய முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழும் இத்தலம் பற்றிய அழகு தமிழ்ப் பாடல்கள்.

"தையல்நாயகியைத் தொழுது எழுவார் தொங்கத் தொங்கத் தாலி அணிவார்" வைத்தியநாதனைப் போற்றி எழுவாருக்கு அவனே மந்திரமும் மருந்துமாகித் தீராத நோய் தீர்த்து வைப்பான்; பிறவிப் பெரும் பயனையும் தேடித் தருவான்.

+ பொங்கம் – பொலிவு, மகிழ்ச்சி

எப்படிச் சொல்வேனடி?

சுபா

வாசலில் பூட்டு. சாரதா அதை எதிர்பார்த்திருக்கவேயில்லை. மழை பெய்து நிரம்பிய அணைக்கட்டு போல் அவள் மனத்தில் இவ்வளவு நேரமும் ஆசையும், ஏக்கமும் பின்னிப் பிணைந்து ததும்பிக் கொண்டிருந்தன. இப்போது?

மிகப்பெரிய ஏமாற்றமாய் இருந்தது.

'எங்கே போய்த் தொலைந்து விட்டாள் இந்த அம்மா?'

பாலிதீன் பைகளை மற்ற கைக்கு மாற்றிக்கொண்டு பக்கத்து வீட்டு மணியை அடித்தாள்.

கதவு உடனே திறந்தது.

“வா... வா... வா... வா.. சாரதாவா...” என்று, மாமி மார்பில் புடைவையை இழுத்து விட்டுக் கொண்டாள்.

“அம்மா இல்லையா?” என்றாள் சாரதா. அவள் கண்கள் பக்கத்து வீட்டின் உட்புறம் எதிர்பார்ப்போடு துழாவின. ஒருவேளை அம்மா அங்கே இருந்தால்?

“மதுராந்தகம் போயிருக்கா. வரும் நேரம்தான். உள்ள வாயேன். ஆபீஸ் லீவா? உடம்பெல்லாம் வியர்த்திருக்கு? பஸ்ல நின்னுண்டே வந்தியா? ராத்தங்குவியா? அல்லது உடனே உதறிண்டு புறப்படணுமா? மாமியார் சௌக்கியம்தானே?” இத்தனை கேள்விகளும் இயந்திரத் துப்பாக்கி போல கொட்டின. ஆனால் பதில்களுக்காகக் காத்திராமல் அடுத்த கேள்வி: “எத்தனை மாசம்டி? டாக்டர் கிட்ட காட்டிண்டிருக்கியா? ஸ்கேன் பண்ணிப் பாத்தாளா? ஆணா, பொண்ணா. எதுவா இருந்தா என்ன? இன்னிக்கு எல்லாம் ஒண்ணுதான். அம்மாவுக்கு என்ன ஆரஞ்சு வாங்கிண்டு வந்தியா, ஆபீஸ் பக்கத்துல ரொம்ப மலிவு தானே?”

அந்த மாமி எப்போதும் இப்படித்தான். ஆயிரம் கேள்விகள் கேட்பாள். பதிலே வேண்டாம். அவளுக்கு எப்போதும் கேள்விகளை அடுத்தவர் மேல் வீசி எறிந்து கொண்டேயிருக்க வேண்டும்.

சாரதா எல்லாவற்றுக்கும் சேர்த்து ஒரு புன்னகையைப் பதிலாக்கினாள்.

“சாவி கொடுத்திருக்காங்களா?” என்றாள்.

மாமி எம்பி, ஆணியிலிருந்து சாவி வளையத்தை எடுத்து நீட்டினாள்.

ஆரஞ்சுப் பழங்கள் ததும்பிய பாலிதீன் பையை மாமியிடம் நீட்டினாள். “இது உங்களுக்காகத்தான் வாங்கிட்டு வந்தேன்”.

“சூடா காப்பி தரட்டுமா?”

“வேண்டாம் மாமி”.

பூட்டு திறந்து வீட்டின் உள்ளே நுழைந்தாள். மின்விசிறியைச் சுழல விட்டாள். வீட்டினுள் அம்மாவின் வாசனை இருந்தது. சாம்பிராணிப் புகையின் மிச்ச வாசனை. அம்மா தலைக்குத் தேய்த்துக் கொள்ளும் கறிவேப்பிலை, மருதோன்றி, வேம்பாளம் பட்டை ஆகியவை கலந்து காய்ச்சி எடுத்த தேங்காய் எண்ணெயின் வாசனை. கயிற்றில் தொங்கிய புடைவையில் இருந்த சாம்பார்ப் பொடியின் வாசனை. எல்லா வாசனைகளும் அம்மாவை நினைவு படுத்தின. சின்ன வயதில் அம்மா அவளது உதடுகளில் முத்தமிடும்போது அவள் வாயில் கரைந்த வெற்றிலைச் சாற்றின் மணம் தனது நாசியில் ஏறி அப்படியே இதயத்தில் தங்கிவிட்டது இப்போதும் நினைவில் மணந்தது.

கையிலிருந்த பைகளை நாற்காலியில் சாய்த்தாள். அண்ணாந்து காற்றை ரவிக்கைக்குள் வாங்கினாள். பானையிலிருந்து நீரைச் சரித்துக் குடித்தாள்.

'அம்மா சாப்பிட ஏதாவது வைத்திருக்கிறாளா?'

சமையலறையில் அடுப்புக்குப் பக்கத்தில் கிண்ணத்தில் வெண்சோறு இருந்தது. எறும்புகளை விரட்டி விட்டுத் தட்டில் கவிழ்த்துக் கொண்டாள். குழம்பில் மறுபடி அம்மா தெரிந்தாள். கண்களில் ஏனோ கண்ணீர் திரண்டது. சாப்பிட்டாள்.

இது என்ன?

சமையல் மேடையின் ஓரத்தில் மாத்திரைப் பட்டை கிழிந்து கிடந்தது.

மறுபடியும் ஆஸ்த்மா அவஸ்தைப் படுத்தியிருக்கிறதா . அம்மாவை? இரவில் தூங்கியிருக்க மாட்டாளோ? பிறகு ஓய்வெடுக்காமல் எங்கே கிளம்பிப் போய்விட்டாள்?

தொட்டியில் கிடந்த பாத்திரங்களைக் கழுவிக் கவிழ்த்தாள். அம்மா இருந்திருந்தால் தேய்க்க விட்டிருக்க மாட்டாள். 'ஆபீஸ் வேற போய்ட்டு வந்து உனக்கெதுக்கு இந்த வேலையெல்லாம்?' என்று பிடுங்கியிருப்பாள்.

அம்மாவும், அவளும் மட்டும் வாழ்ந்த ராஜ்யத்தில், அம்மா அவளை அதிகம் வேலை செய்ய விட்டதில்லை.

உயரம் போதாமல் பலகையில் ஏறி நின்று ஈரத்தலையைத் துவட்டி விடுவாள். சாம்பிராணி போட்டுப் புகை பிடிப்பாள். எண்ணெய் தேய்க்கும்போது வலிக்காமல் மூக்குத்தி கழற்றி மாட்டுவாள்.

பாதி காய்ந்த கூந்தலுடன் அம்மாவின் மடியை ஈரமாக்கிக் கொண்டு சாரதா படுத்திருப்பாள். கள்ளக்குரலில் அம்மா, 'ராமா, கோதண்டராமா' என்று பாட்டிசைத்துக் கொண்டே நெற்றி, கன்னம், கழுத்து என்று வருடுவாள். கிறக்கத்தில் மூச்சை இழுத்துப் பிடிக்கும்.

அப்பா உதிர்ந்த பிறகு அம்மாவும், அவளும் மட்டும் என்று வட்டம் குறுகி விட்டது. ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் கறிகாய் நறுக்கிக் கொடுத்து, பாத்திரம் தேய்த்து, கோலம் போட்டு, அம்மாவின் புடைவையை உலர்த்தி...

மற்ற நாள்களில் டிபன் பாக்ஸைப் பிடுங்கிக் கொண்டு ஓடத்தான் நேரம் இருக்கும். தூங்கி எழுந்த பின்னும் விடியாமல் இரவு நீண்டு கொண்டே போனால் பூச்சிகளின் மந்தமான இரைச்சலின் பின்னணியில் அம்மாவோடு பேச எவ்வளவு விஷயங்கள் இருக்கின்றன என்று வார நாள்களில் அவள் தவித்திருக்கிறாள்.

'உன் மடியில் முகம் புதைப்பதற்காக ஒன்றரை மணி நேரம் வெயிலில் பஸ்ஸில் நின்று வந்திருக்கிறேனே, எங்கே போய்த் தொலைந்தாய் அம்மா?'

நாற்காலியில் வந்து உட்கார்ந்தாள்.

ஐயோ, மணி மூன்றாகிவிட்டது.

உட்கார முடியவில்லை. ஜன்னல் வழியே தெருவை வெறித்தாள். தெரு முனையில் அம்மா திரும்பக்கூடாதா?

கதவு திறந்து வெளியே வந்தாள். தர்பூசணி வண்டி வந்தது. 'பிளாஸ்டிக் பக்கெட் வாங்கறதோய்' வந்தது. பாதி கறுப்படித்த வாழைச் சீப்புகள் வந்தன. அவளை வேடிக்கை பார்த்து இரண்டு ஸ்கூட்டர்கள் கடந்து போயின. அம்மா வரவில்லை.

தாழ்ப்பாள் நீங்கும் சத்தம்.

"இன்னும் வரல்லையா உங்கம்மா?"

"எங்க போயிருக்காங்க மாமி?"

"மதுராந்தகத்துல வேணுகோபால் வீட்டுல ஏதோ விசேஷம்னு கூப்பிட்டாா"

"ரங்கோலி போடவா போயிருக்காங்க?"

"பின்ன! உங்கம்மாவை வச்சுப் பாடவா கூப்பிடுவா?"

சாரதா வீட்டிற்குள் வந்து கதவை அறைந்து சாத்தினாள். 'இன்றைக்கு அம்மா வரட்டும். கன்னத்தில் அறைந்து கேட்கப் போகிறேன். உனக்கு மூளை இருக்கிறதா, இல்லையா? ஆஸ்த்மா வந்து கர், புர் என்று இழுத்துக் கொண்டு கிடக்கிறாயே, டாக்டர் என்ன சொல்லியிருக்கிறார்? 'ரங்கோலிப் பக்கமே போகாதே. கோலம் போடுகிறேன் பேர்வழி என்று அந்தக் கோலப்பொடியை எல்லாம் நுரையீரலுக்குள் இழுத்துக் கொண்டு அவதிப் படாதே!'ன்று சொல்லியிருக்கிறாரா இல்லையா? வேணுகோபால் வீட்டில் விசேஷமென்றால், அவர் வீட்டுப் பெண்கள் கோலம் போடட்டுமே. உன் மூச்சை ஏன் கனக்கச் செய்கிறாா?

'இரண்டு மாதமாயிற்று உன்னோடு ஒழுங்காகப் பேசி.

'அம்மா, எனக்கு உன் மடியில் படுத்துக் கொள்ள வேண்டும். என் காதுக்குள் உன் நடுங்கும் குரல் 'ராமா, கோதண்டராமா' என்று இறங்க வேண்டும். சீக்கிரம் வாம்மா'.

சாரதாவிற்கு உட்காரப் பிடிக்கவில்லை. அலமாரிக்கு நடந்தாள். அம்மாவின் புடைவைகள் குறைந்திருந்தன. நீலப்புடைவை கரையில் கிழிந்திருந்தது. ரவிக்கை ஒன்றிலும் பூர்விக நிறம் இல்லை.

அம்மாவிற்கு இரண்டு புடைவைகள் வாங்க வேண்டும்.

'எதுக்கு சாரதா எனக்கு இப்பப் புடைவை? போன தீபாவளிக்கு வாங்கினதே இன்னும் கிழியாம இருக்கு. ஆபீஸ் போறவ. உனக்கு ஏத்த புடைவையா வாங்கியிருக்கலாமே?'

'கட்டிட்டு வாம்மான்னா...'

"பணம் சம்பாதிக்கறோம்கறதுக்காக தாம்தூம்னு செலவு செய்யக் கூடாது. உன் கல்யாணத்துக்குக்கூட நீயேதான் செலவு செய்யணும். அதுக்குச் சேத்து வை. இன்னொரு முறை என்னைக் கேக்காம எனக்குப் புடைவை வாங்காதே".

'அம்மாஹ்ஹ்' என்று சாரதா மூச்செறிந்தாள்.

அம்மா அப்படி திமிறத் திமிறத்தான் சாரதாவிற்கு வாங்கித்தர வேண்டும் போல் இருக்கும். அப்படி வந்ததுதான் இந்த நீலம். இந்தப் பச்சை சுங்குடி. இந்த ஆரஞ்சு காட்டன். இந்த சிவப்பு தேவேந்திரா.

* * *

"சாரதா!"

"ம்".

"ஏண்டி, மூஞ்சி ஒரு மாதிரி வாட்டமா இருக்கு?"

"ப்ச்".

"சொல்லேன். என்ன ஆச்சு?"

"பஸ்ல எம்மேல ஆம்பளைங்க வந்து இடிக்கிறாங்கம்மா. எந்த ஆம்பளையும் என்னைப் பாத்து நேராப் பேசறதில்ல. என் உடம்பைப் பாத்துத்தான் பேசறாங்க. அவங்க கண்ணு முழுக்க எம் மார்லதான் மேயுது. இன்னிக்குக்கூட பஸ்ல ஒருத்தன் நான் தள்ளிப் போகப் போக பின்னால நெருக்கமா வந்து நின்னு மேல படறான்".

"அடி பைத்தியம். இதுக்கா மூஞ்சை இப்படித் தூக்கி வெச்சிட்டிருக்கே?"

"எனக்கு மட்டும் ஏம்மா இப்படி?"

"இதை நெனச்சி ஏன் கஷ்டப் படறே? ஏன் பதற்றப்படறே? உன் அழகுக்கு ஓர் அங்கீகாரம்னு நெனச்சுக்கயேன்".

"அம்மா".

"ஆமா. நானும் உன் வயசுல இருந்து வந்திருக்கிறவதானே. எனக்கு மட்டும் இப்படியெல்லாம் நடக்கலையா என்ன? குளத்தில தண்ணிக்கடியிலயே வந்துக் கட்டிப் பிடிச்சிட்டுப் போவானுங்க. கொழுக்கட்டை பிடிக்கற மாதிரி பின்னால பிடிச்சிட்டுப் போவானுங்க".

"நீ கூட ஹீரோயினா இருந்திருக்கிறியாம்மா?"

"ம்ம்".

"அப்பல்லாம் நீ என்ன செய்தே?"

"உன்னை மாதிரி பைத்தியமாட்டம் மூஞ்சைத் தூக்கி வச்சுக்கலை. எனக்கும் புடிச்சிருந்தா ரகசியமா சந்தோஷப் பட்டுக்கிட்டேன். பிடிக்கலைன்னா ஒதுங்கிக்கிட்டேன். பல்லு போனவன் கையெல்லாம் பட்டா ரசிச்சிக்கிட்டா இருக்க முடியும்?"

சாரதாவிற்கு ஒருமுறை உடலை நெட்டி முறிக்க வேண்டும் போலிருந்தது. எழுந்து பெண் சிறுத்தை மாதிரி,

ஒரு நாட்டிய முத்திரையுடன் நெட்டி முறித்தாள்.

அம்மாவை நினைத்தாலே கிளு கிளுப்பாய் இருக்கிறது. அம்மாவிற்கும் அவளுக்கும் நடுவேதான் எவ்வளவு ஆனந்த ரகசியங்கள்! அவர்களுக்கு மட்டுமே தெரிந்த, மற்றவர்கள் யாருமே நுழைய முடியாத ஒரு ரகசிய ராஜ்யம். அவள் வேறு யாருடன் இத்தனையும் பகிர்ந்து கொள்வாள்?

* * *

"சாரதா!"

....

"என் கண்ணே? ஏண்டி இப்படி உடம்பு கொதிக்கிறது? ராஜாத்தி உனக்கு என்ன பண்ணுது? சொல்லும்மா. நான் வேற யாரோவா? அம்மாதானே?"

"நான் ஏமாந்துட்டேம்மா".

"என்னது? அழாதே. அழக்கூடாது. கண்ணில்ல. என் செல்லம் இல்ல. ஐயோ நான் என்ன செய்வேன்? ஆம்பிளைத் துணை இல்லாத வீடாப் போச்சே. பொட்டச்சியால கையாலாகுமா? என்ன ஆச்சும்மா?"

"ஆம்பிளைங்களே வேண்டாம்மா. ஏமாத்துக்காரங்க. துரோகிங்க".

"ஏண்டி? அந்தத் தேவா ஏதாவது சொல்லிட்டானா?"

"சொல்லலை. செஞ்சுட்டான்".

"என்ன செஞ்சுட்டான்?"


"லவ், லவ்வுன்னு உருகினான். எனக்கும் புடிச்சிருந்தது. பழகினேன். ஆனா இப்ப அவன் இன்னொருத்தி கழுத்துல தாலியைக் கட்டிட்டான்".

"அவ்வளவுதானே. இதுக்கா அல்லாடறே? ஊர்ல இவன் ஒருத்தன் தானா ஆம்பிளை? ராஜாவாட்டம் ஒரு பையனைப் பாத்து உனக்கு நான் கட்டி வைக்கறேன்".

"அந்தத் தேவாவோட நான்... நான்..."

"சாரதா!"

"ஆமாம்மா. போன மாசம் ஆடிட்டிங்னு பெங்களூர் போனேனே. ஞாபகமிருக்கா?"



"அவன்கூடத்தான் போயிருந்தியா?"

"ம்",

"ஆடிட்டிங்கெல்லாம் பொய் அப்படித்தானே?"

"ம்",

"எங்கிட்டே சொல்லியிருக்கறதுக்கென்ன?"

"நீ பர்மிஷன் குடுப்பியோ, மாட்டியோன்னு... இன்னிக்குத் தோத்துட்டேன்".

"அப்படி நெனைக்காதே. ஏன் தோத்துட்டதா நெனைக்கறே? நீயும் சந்தோஷமாத்தானே இருந்தே. பட்டாம்பூச்சின்னா தேன் குடிக்கும். அடுத்த பூவைத் தேடிப் போகும். விடு. போறது. அதை ஓர் அனுபவமா எடுத்துக்கோ. உனக்கு ஒரு மாப்பிள்ளை பாக்கறேன்".

"வேண்டாம்மா".

"ஷ்ஷ். உன்னையே' ஏண்டி நீ கேவலப்படுத்திக்கறே? ஏன் குறைவா நெனைக்கக்கறே? கேவலம்னா இரண்டு பேருக்கும்தான். கற்புன்னாலும் இரண்டு பேருக்கும்தான். இந்தக் கற்பு, கத்தரிக்காயெல்லாம் ஆம்பளைங்களோட சவுகரியத்துக்காக அவங்களாக் கொண்டு வந்தது. தெருவுக்குத் தெரு தாசி வீட்டை வெச்சுக்கிட்டு இவன் மட்டும் முக்காடு போட்டுக்கிட்டுப்போய் வந்தா அது புருஷ லட்சணமா? இது வெறும் ஆம்பிளைங்க நியாயம்டி. பொம்பளைக்கு மனசு இல்லையா? உடம்பு இல்லையா? சந்தோஷம் இல்லையா? ஆம்பளை அதெல்லாம் இல்லேன்னு சொன்னா சரியாப் போச்சா?"

"அம்மா".

"கம்மா இருடி முட்டாள் பெண்ணே".

சாரதா காப்பி போட்டுக் குடித்தாள். அம்மா வீட்டுக் காப்பி. அவள் கை பாகமாகவே வந்தது. சர்க்கரை குறைவாக, டிகாக்ஷன் கசப்பு தூக்கலாக, பால் வாசமாக.

'இப்போதெல்லாம் யாரோடு அம்மா உட்கார்ந்து டி.வி. பார்க்கிறாய்? வினாடி வினா நிகழ்ச்சியில் நானும் நீயும் ஒரு டீமாக, டி.வி. பெட்டிக்கு வெளியே உட்கார்ந்து மணியடிப்பதற்கு முன்னால் பதில் சொல்லிக் குதிப்போமே. இப்போது தனியாக என்னம்மா செய்கிறாய்?'

'ஒளியும், ஒலியும்ல அடுத்தது சிவாஜியா, எம்.ஜி.ஆரா, கமலா, ரஜினியா, சரத்தா என்று பெட் வைத்து, பாட்டு ஒலித்ததும் துள்ளுவோமே, இப்போது தனியாக என்னம்மா செய்கிறாய்?'

'தெருவில் போகும் ஆண்களைப் பார்த்து ஒவ்வொருத்தராக மார்க் போட்டு உன் ரசனையையும், என் ரசனையையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வோமே. இப்போது நீ தனியாக எப்படியம்மா காலம் தள்ளுகிறாய்? எதற்குமே ஒரு துணை இருந்தால்தான் ரசிக்கும் என்பாயே. எனக்கு மட்டும் துணை தேடித் தந்துவிட்டு நீ தனிமரம் ஆகிவிட்டாயே. எப்படி சமாளிக்கிறாய்?'

'என் காட்டன் புடைவைகளுக்காக என்று சாதம் வடித்த கஞ்சியைப் பத்திரப்படுத்துவாயே, இப்போதெல்லாம் அதை என்னம்மா செய்கிறாய்? இராத்திரி நேரத்தில் மூச்சுத் திணறி நீ எழுந்து உட்கார்ந்து விடும் போது, உனக்கு வெந்நீர் போட்டுக் கொடுத்து, உன் நெஞ்சை யாரம்மா நீவி விடுகிறார்கள்?'

கண்ணை அசத்தியது. அம்மாவின் புடைவை ஒன்றைத் தலையணையாய்ப் போட்டு, தலை வைத்துப் படுத்தாள். புடைவையில் அம்மா மடியின் வாசம் இருந்தது. அவளை மீறி முகம் புரண்டது. புடைவைக்கு முத்தமிட்டது.

"ச்சீ. காலை எடுடி. சின்னக் குழந்தை மாதிரி என்ன இது?"

"எதுக்கு எடுக்கணும்? எத்தனை வயசானா என்ன? நீ என் செல்ல அம்மா, என் முத்து அம்மா, என் பட்டு அம்மா. அப்படித்தான் காலைப் போடுவேன். கையைப் போடுவேன்".

"அப்படி இறுக்காதே. மூச்சு திணறுது".

சாரதா மெல்ல எழுந்து உட்கார்ந்தாள். கடிகாரம் பயமுறுத்தியது.

பக்கத்து வீட்டுக்குப் போனாள். "மாமி! வேணுகோபால் நம்பர் தெரியுமா உங்களுக்கு?"

"அம்மாவோட போன்ல பேசணுமா உனக்கு?" — முதுகு நைந்துபோன ஒரு டைரியைப் புரட்டி மாமி நம்பர் சொன்னாள். டயல் செய்து ரங்கோலி போடும் அம்மாவைக் கூப்பிடச் சொன்னாள்.

"ஹலோ", — காதில் அறைகிற மாதிரி அம்மாவின் குரல். 'ராமா, கோதண்டராமா' கள்ளக்குரல் இல்லை. நோய்க்கப்பட்ட, நைந்து போன குரல்.

"சாரதா பேசறேம்மா... எப்பம்மா வருவே?"

"எப்ப வந்தே சாரதா? போயிடாதே இரு. கோலம் போட்டு முடிச்சாச்சு. சந்தோஷமாயிருக்கியா? மாமியார் என்னை மாதிரியா அல்லது வேற மாதிரியா?" அம்மாவின் நுரையீரல்கள் திணறுவதை இங்கேயே கேட்க முடிந்தது. "அஞ்சு நிமிஷத்துல இங்கேர்ந்து செங்கல்பட்டுக்கு கார் ஒண்ணு புறப்படுதாம். என்னை வீட்ல விடச் சொல்லியிருக்காங்க. வந்துடறேன், இரு... ஏதாவது சாப்ட்டியா?"

"ம்ம்... சீக்கிரம் வாம்மா".

அம்மாவின் ஆஸ்த்மா தோய்ந்த மூச்சிரைப்பு அவளை மிகவும் சங்கடப்படுத்தியது. மாமி பேசப் பிடித்துக் கொண்டாள். கேள்விகள். மேலும் கேள்விகள். விடுவித்துக் கொண்டு வந்தாள்.

முகம் கழுவினாள். புடைவையைத் திருத்தினாள். பவுடர் தீட்டிக் கொண்டாள். கைகளைக் கோத்துக் கொண்டு கடிகாரம் பார்த்து உட்கார்ந்தாள்.

4:15; 4:20; 4:25

அம்மா வந்து சேரவேயில்லை. கார் புறப்படவேயில்லையா? அல்லது வழியில் மக்கரா? சாரதாவின் இதயத் துடிப்பு வேகமாயிருப்பதை அவளாலேயே கேட்க முடிந்தது.

பேப்பர் எடுத்தாள். பேனா உருவினாள்.

"அம்மா,

அம்மா. அம்மா. அம்மா.

உன்னைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. அரைநாள் லீவு போட்டு விட்டு ஓடி வந்தேன். ஆனால் நீ...

(காகிதத்தில் ஒரு சொட்டு கண்ணீர் சிந்தியது).

குக்கரில் சூடாய் சாதம் வைத்திருக்கிறேன். கொஞ்சம் காய்கறியும், பழமும் வாங்கி வந்தேன். மாத்திரைப் பட்டை இரண்டு வாங்கி இருக்கிறேன்.

ஏழு மணிக்கு என் மாமியாருக்கு கண் டாக்டரிடம் அப்பாயின்ட்மென்ட். நான்தான் அழைத்துப் போகவேண்டும். இப்போது கிளம்பினாலே நேரத்திற்குப் போய்ச் சேர்வேனா என்று பயமாயிருக்கிறது.

எவ்வளவு பேசவேண்டும் என்று வந்தேன் தெரியுமா?

என்னென்ன பேசவேண்டும் என்று வந்தேன் தெரியுமா?

அத்தனையும்... அத்தனையும்...

அப்புறம் பக்கத்து வீட்டுக்கு போன் செய்து 'சௌக்கியமா?' என்று விசாரிக்கிறேன்.


உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். - சாரதா

கண்ணீரை ஒற்றினாள். கடிதத்தைப் படித்தாள். அம்மாவிடம் என்னவெல்லாம் சொல்ல நினைத்தாளோ, எதுவுமே இல்லை. அடுத்த செக்ஷனில் இருக்கும் ஆபீசருக்கு எழுதுவது போல அமைந்திருந்தது.

அம்மாவின் கண்ணில் படும் இடத்தில் வைத்துவிட்டு கதவு பூட்டினாள். பக்கத்து வீட்டில் சாவியை ஒப்படைத்தாள்.

வழியில் அம்மா எதிர்ப்பட்டு விட்டால், கூச்சமில்லாமல், நடுரோட்டிலும் ஒரு முத்தம் தருவது என்று தீர்மானித்தாள்.

சென்னைக்குப் புறப்படும் பஸ்ஸைப் பார்த்ததும், வயிற்றைத் தூக்கிக் கொண்டு ஓடிப்போய் ஏறினாள். ●



தத்தாசிரம மகான்
ஸ்ரீ கணபதி சச்சிதானந்த சுவாமிகள்

சி. நடேசன்



மூல முழுமுதற் கடவுள் யார்?

கணபதி!

வேதங்கள் அனைத்தின் சாரம்?

சத் - சித் - ஆனந்தம்! சச்சிதானந்தம்.

இப்படி மூலக் கடவுளின் பெருமையுடன், வேதங்கள் அனைத்தின் சாரமும் ஒருங்கிணையப் பெற்றவராய் இன்று நம்மிடையே தோன்றி நமக்கெல்லாம் அருள்புரிந்திடும் மகான்தான் - பூஜ்ய குருஜி ஸ்ரீ கணபதி சச்சித்தானந்த சுவாமிகள்!

இன்றைக்கு பாரதத்தில் மட்டுமின்றி உலகின் பல பகுதிகளிலும் தத்தபீடமும், தத்தாசிரமும் நிறுவி, ஆன்மிகப் பணியுடன் அறப் பணிகளிலும் தம்மையும், தமது பக்தர்களையும் ஈடுபடுத்திவரும் சுவாமிகளின் திவ்விய சரிதமானது நமது வினைப் பயன் களைந்து, இன்னருள் புரியும் தன்மையாகத் திகழ்கிறது!

அந்த திவ்விய சரிதம்..

தென்றலெனும் தேரேறி புவிமகளை அரவணைக்க வரும் வசந்த தேவனின் வசந்த காலம்.

கதிரவனின் பெயரில் அமைந்த சித்தரபானு வருடம்.

வைகாசி மாதம் - ஹஸ்த நட்சத்திரத்தில் ஆந்திரத்தைச் சேர்ந்த நரசிம்ம சாஸ்திரிகளுக்கும்; கர்நாடக ஹொய்சள பிராமண குடும்பத்தைச் சேர்ந்த ஜெயலட்சுமி மாதாவுக்கும் திருமகனாய் அவதரித்தார்-

ஸ்ரீ கணபதி சச்சிதானந்த சுவாமிகள்!

சுவாமிகள் கருவிலேயே திருவுடைய வராகத் திகழ்ந்தார்.

மேகதாடுவில் ஜெயலட்சுமி மாதா கருவுற்றிருந்த வேளையில், நூறு வயதைக் கடந்தவரும், யோக புருஷருமான கரபத்ர சாமி என்கிற மகான் ஒருநாள் ஜெயலட்சுமி மாதாவைப் பணிந்து வணங்கினார். அதைக் கண்ட ஜெயலட்சுமி மாதா மனம் பதைத்தவராய், "சுவாமி! இதென்ன அபசாரம்? நானல்லவா தங்களைப் பணிந்து ஆசி பெற வேண்டும்?" என்றார்.

அதற்கு அந்த மகான்-

'தாயே! நான் உன்னை வணங்கவில்லை. மாறாக தத்தமூர்த்தியின் அம்சமாக உன் கருவில் திருவுடையவராகத் தோன்றி, உலகைக் காத்தருளப் போகும் மகானைத்தான் வணங்குகிறேன்!" என்றார்.



தான் தவமிருந்து பெற்ற பிள்ளைக்கு மாதா ஜெயலட்சுமி சத்திய நாராயணன் என்று திருப்பெயரிட்டு, தானே குருவாக அமைந்து ஸ்ரீவித்யா யோகத்தையும், யோக சித்திகளையும் வழங்கினார். அத்துடன் தன் கடமை முடிந்ததென்று, மகனின் 11 ஆவது வயதில் இறைநிலை எய்திவிட்டார்.

அநித்தியமான லௌகிகக் கல்வியில் நித்தியமான சத்தியநாராயணாவுக்கு நாட்டம் செல்ல)லை. அதே நேரத்தில் தன்னைச சார்ந்திருக்கும் குடும்பத்தைக் காப்பாற்ற மிகக் கடுமையாக உழைத்தார்.

குடும்பத்திற்காகக் கடுமையாக உழைத்த அதே வேளையில், ஆன்மிகத் தாக்கத்தினால் பக்தி மிகக் கொண்டவராக பூஜைகள், ஹோமங்கள் செய்வதிலும், ஏழைகளின் துயர் தீர்ப்பதிலும், பக்திப்பயிரைச் செழித்து வளர்த்திடவும் கூட மிக ஆர்வமுடன் பாடுபட்டார்.

அத்துடன் பெரிய குடும்பத்தைக் கடைத்தேற்ற அவதரித்தவர் அல்லவா அவர்!

அதற்கான காலம் கனிந்தது!

1964 ஆம் ஆண்டில் மைசூரிலிருந்து உதகமண்டலம் செல்லும் சாலையில் சுவாமிகளின் 22 ஆவது வயதில் ஒரே ஓர் அறையில் தொடங்கப்பட்டதுதான், ஸ்ரீ கணபதி சச்சிதானந்த சுவாமிகளின் ஸ்ரீ தத்தாசிரமம்.

இன்று அந்த ஆசிரமம் பெரிய அளவில் தழைத்து வளர்ந்திருக்கிறது. தலைமையிடமாக மைசூர் விளங்கினாலும், நாட்டின் பல பகுதிளிலும், வெளிநாடுகளிலும் கூட தத்தாசிரம கேந்திரங்கள் அமைந்திருக்கின்றன.

மைசூரில் உள்ள ஆசிரமத்திலும், மற்றும் பல பகுதிகளிலும் உள்ள ஆசிரமங்களிலும், நாள் தவறாமல் பூஜைகளும், ஹோமங்களும் நடைபெறுகின்றன.

ஆசிரமத்தின் முக்கிய விழாக்களாக நவராத்திரி, சிவராத்திரி, சுவாமிகளின் ஜெயந்தி விழா, தத்த ஜெயந்தி போன்றவை விமரிசையாக நடைபெறுகின்றன.

நவராத்திரி ஒன்பது நாள்களும் சுவாமிகள் விசேஷ பூஜைகள் செய்வதுடன், தாமே தமது இனிய குரலால் பக்தி கீதங்களை இசைக்கிறார். நவராத்திரியின் எட்டாவது, ஒன்பதாவது நாள்களில் தேவியைப் பல வடிவங்களில் அலங்கரித்து வழிபடுகிறார்.

சிவராத்திரியில் சுவாமிகள் விசேஷ பூஜைகளும், ஹோமங்களும் செய்கிறார். அதிலும் சுவாமிகள் யாக குண்டத்திற்குள்ளேயே அமர்ந்தபடி ஹோமம் செய்வதைக் காணக் கண் கோடி வேண்டும். அவதார புருஷரான சுவாமிகளை அக்னி தேவன் வாயு தேவனாகிக் குளிர்விக்கிறான் போலும்!

சுவாமிகளின் ஜெயந்தி விழா மைசூரில் உள்ள ஆசிரமத்திலும் மற்ற பகுதிகளிலுள்ள ஆசிரமங்களிலும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

சுவாமிகளின் ஜெயந்தி விழாவில பல துறைகளில் சிறந்து விளங்கும் விற்பன்னர்களுக்கு விருதுகளும், பட்டங்களும் வழங்குகிறார்கள்.

தத்த ஜெயந்தியின் போது மிகத் தொன்மையான, தங்கத்தினாலான தத்தாத்ரேயர் விக்கிரகத்தை பக்தர்களால் தரிசிக்க முடிகிறது.

சுவாமிகளின் தனிச் சிறப்பான ஒரு திருவருள் என்னவென்றால், அவர் தமது தெய்விக இசையின் மூலமாக அன்பர்களின் உடற்பிணிகளையும், மனப்பிணிகளையும் தீர்த்து அருள்புரிவது தான்!

இவ்வகையில் சுவாமிகள் நாட்டின் பல பகுதிகளில் பிணி தீர்க்கும் இசை நிகழ்ச்சிகள் நடத்தி அருள் புரிகிறார்கள்.

இவ்விதம் சுவாமிகள் நடத்தும் பிணி தீர்க்கும் இசை நிகழ்ச்சிகள், ஒலி நாடாவில் பதிவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

சுவாமிகளின் நாத இமாலயா என்ற கேசட்டின் மூலம், தூக்கமின்மை, உடல் அசதி, மூட்டுவலி போன்றவை குணமாகின்றன. செலஸ்டியல் மெசேஜ் என்ற கேசட், ரத்த அழுத்தம், இதயநோய்கள், மன உளைச்சல் போன்றவற்றைத் தீர்க்கின்றன. நாதநிதி என்ற கேசட் சிறுநீரகம் மற்றும் வாய்வுக் கோளாறுகளையும், நாத மஞ்சரி என்ற கேசட், நீரிழிவு நோய், நரம்புத் தளர்ச்சி ஆகியவற்றையும் குணமாக்குகின்றன.

சென்னை வேளச்சேரியிலும், அச்சிறுபாக்கம் கடமலைப்புத்தூரிலும் மற்றும் பல இடங்களிலும் சுவாமிகள் ஆசிரமம் அமைத்து அருட்பணியும், அறப்பணியும் ஆற்றி வருகிறார்கள். ஆசிரமம் அமைக்கப் போதிய வசதி வாய்ப்புகள் இல்லாத இடங்களில், சுவாமிகள் 'ஞானபோத சபா' என்னும் அமைப்பை ஏற்படுத்தி, அதன்மூலம் தமது பக்தர்களை, தத்த சேவையில் ஈடுபடுத்தி அருள்பெறச் செய்கிறார்கள்.

மூர்த்தியர் மூவரின் ஒருமித்த வடிவாக அவதரித்த தத்தாத்ரேயரின் அம்சமாகத் தோன்றி, நம்மிடையே இன்று தமது இன்னருளை அமிர்தமாகப் பொழிந்துவரும் பூஜ்ய குருஜி ஸ்ரீ கணபதி சச்சிதானந்த சுவாமிகளைத் தரிசிப்பவர்க்கு குருவருளும், மும்மூர்த்தியரின் திருவருளும் சேர்ந்தே கிடைக்கும் என்பது சத்தியம்.


ஸ்ரீ குருதத்தா! ஜெயகுரு தத்தா!



தீபாவளி ஸ்பெஷல் அயிட்டம் என்ன போட்டிருக்கீங்க...?
பட்டினத்தார் சூட்... அது வாங்கறவங்களுக்கு ஒரு கரும்பு இனாம்...



சர்வீஸ் கமிஷன் பாஸ் பண்ணி உத்தியோகத்துக்கு வந்தது தப்பாப் போச்சி...
ஏன்...?
கமிஷன் வாங்காம சர்வீஸ் செய்ய முடியலே...



ஆந்திராவில் இருந்து தமிழக எல்லை நோக்கி வரும் கிருஷ்ணா கால்வாய்.

வருக தெலுங்குக் கங்கையே வருக!

கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன்

வருக தெலுங்குக் கங்கையே வருக!
வண்டமிழ் நாட்டின் தலைநகர் நோக்கி
வருக தெலுங்குக் கங்கையே வருக!
வறண்ட நாவின் வேட்கை போக்க
வருக வருக! வளரும் மாநகர்
வாழும் மக்களின் வளமும் நலமும்
பெருக நீயும் வந்தே பாய்க!
பெருமை உனக்கும் வந்து சேர்க!


ஆந்திரர் தமிழர் அண்ணன் தம்பிகள்
ஆற்று நீரோ இயற்கையின் கொடையாம்!
மாந்த நேயம் அரும்பிடச் செய்யும்
மாபெரும் செயலாம் விட்டுக் கொடுத்தல்.
எந்தல் அண்ணா பிறந்த திங்களில்
இங்கு வந்திடும் தெலுங்குக் கங்கையை
ஏந்தி இருகை கூப்பி வணங்கி
எதிர்கொண் டேவர வேற்போம் நாமும்.

இருப தாண்டாய் இழுபறி நிலையில்
இருந்து வந்த இந்தத் திட்டம்
ஒருநூறு நாளில் கலைஞர் ஆட்சியால்
உவந்து போற்ற நிறைவு பெற்றது!

வருநூற் றாண்டுகள் தலைமுறை யெல்லாம்
வாழ்த்திடும் கலைஞரின் ஆட்சியை, மாட்சியை
திருவிட மாம்தமிழ் மண்ணில் தவழ்ந்திடத்
தெலுங்குக் கங்கையே வருக! வருக!

தெலுங்கர் கன்னடர் கேரளர் மூவரும்
செந்தமிழ் அன்னை ஈன்ற மக்களே!
குலுங்கும் ஒருகுலைக் கனிகளைப் போன்றோர்!
கூறும் திராவிட இனத்தைச் சேர்ந்தோர்!
கலங்கும் காவிரி நீரைத் தடுத்திடக்
கன்னடர் முனைந்ததும் என்னே! என்னே!
விளங்கும் 'பாரதம்' ஒருநா டென்றால்
வீணே பிணக்கும் செய்தது முறையா?

காவிரி நீரின் பிணக்குத் தீரவும்
கண்டார் கலைஞர் புதிய முடிவு!
தேவ கவுடா அரசு வந்ததால்
தீர்ந்தது கன்னடர் பிடிவா தங்கள்!
பாவால் அன்னவர் நல்லுள் ளத்தைப்
பாராட் டிடுவோம் வாழ்த்தி மகிழ்வோம்!
காவல ராம்நம் கலைஞர் ஆட்சி
கால மெல்லாம் தொடர்க! வாழ்க!



போட்டோ : யோகா



போட்டோ : யோகா



போட்டோ : யோகா



அமுதசுரபி – தீபாவளி மலர் 1996

போட்டோ : யோகா

சுழன்றும் வணிகம் பின்னியது உலகம்

இந்த உலகம் இயங்கிவருவது எதனால் என்ற கேள்விக்குப் பலர் பலவிதமாகப் பதில் சொல்லலாம். என்னைக் கேட்டால் இந்த உலகத்தை இன்றுள்ளபடி இயக்கி வருவது வர்த்தகமே என்று தயங்காமல் சொல்வேன். நான் ஒரு வர்த்தகனாக இல்லாமல் வேறெந்த நிலையில் இருந்திருந்தாலும் என் பதிலில் மாற்றம் இருந்திருக்காது. ஏனெனில், அந்த அளவுக்கு வர்த்தகம் இந்தச் சமுதாயத்துடன் பின்னிப் பிணைந்திருக்கிறது.

நமது அரசியல் சாசனம் உறுதி செய்துள்ள சமூக சமத்துவத்தை எல்லா நிலைகளிலும் வர்த்தகம் காக்கிறது. கொள்முதல் - விற்பனை - லாபம் என்ற மூன்று நிலைகளுக்கும் நிலைக்களனாக அமைபவர்கள் வாடிக்கையாளர்கள். அவர்களை ஆண், பெண், இளையவர், முதியவர், இந்து, முஸ்லிம், கிறிஸ்துவர் என்று வியாபாரிகள் பேதப் படுத்திப் பார்ப்பதில்லை.

யாராக இருந்தாலும் வாடிக்கையாளர் கவனத்திற்கு உரியவர். அவரது தேவையைக் கேட்டறிந்து நிறைவு செய்பவரே வியாபாரி. வீதி ஓரத்துப் பெட்டிக்கடை முதல், சர்வதேச ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் வரை வாடிக்கையாளர்களைத் திருப்திப் படுத்தி லாபம் காண்பதே வர்த்தகத்தின் இயல்பும் இலக்கும். சர்வதேச அரசியல் உறவுகளையும் கூட இருதரப்பு வர்த்தகம் உறுதி செய்கிறது. அதனால்தான், இந்த உலகை இயக்கி வருவது வர்த்தகம் என்று சொல்கிறேன். அந்த அளவுக்கு வர்த்தக உறவு உலகெலாம் பின்னிப் பிணைந்திருக்கிறது.

சமயங்களில் வல்லரசுகள் சில சிறிய நாடுகளின் மீது "பொருளாதாரத் தடை" விதிக்கின்றன. அதாவது சர்வதேச வர்த்தக மண்டலத்திலிருந்து அவை விலக்கி வைக்கப்படுகின்றன. அந்த நாடுகளில் போதிய அடிப்படைத் தேவைகள் இந்த வர்த்தகக் கட்டுப்பாட்டினால் நிறைவு செய்யப் படாமல் போகின்றன. தாக்குப் பிடிக்க முடியாத நாடுகள் வல்லரசுகளுக்கோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் கட்டளைக்கோ பணிந்து விடுகின்றன.

'வெள்ளைக்காரர்கள்' என்று பொதுவாக அழைக்கப்படும் ஆங்கிலேயர்கள் இந்தியாவில், முதலில் வியாபாரிகளாகத்தான் நுழைந்தார்கள். நாளடைவில் அவர்கள் நம்மை ஆட்சி செய்யக் கூடியவர்களாக வளர்ந்தார்கள். அதன் மூலம் அவர்கள் தங்கள் வியாபாரத்தை மேலும் வளர்த்தார்கள். இந்தப் பொருளாதாரப் போக்கினை நினைத்துத் தான் மகாகவி பாரதியார் "பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு போகவோ?" என்று பாடினார்.

வ.உ. சிதம்பரனார் சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தொடங்கியதும் வணிக நோக்கத்தில்தான். 'கப்பலோட்டிய தமிழன்' படத்தின் ஒரு வசனத்தை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன் - "வியாபாரம் படுத்தால் வெள்ளையனும் படுத்து விடுவான்."

நூறு அல்லது இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அந்த நிலை இன்னும் தொடர்கிறது. எனினும் வியாபாரத் திறமையினால் மட்டும் இங்கே ஆங்கிலேயர்கள் ஆட்சியைப் பிடித்தார்கள் என்று சொல்வது முழுமையான உண்மையாகாது. ஐம்பத்தியாறு தேசங்களாகப் பிரிந்திருந்த அன்றைய இந்தியாவின் மன்னர்கள், தான தருமங்கள், வாண வேடிக்கைகள், போர்களில் காட்டிய அக்கறையை வியாபாரத்தில் காட்டவில்லை என்பது நாம் ஒப்புக் கொள்ள வேண்டிய முக்கிய காரணம்.

அதாவது பழைய இந்தியா ஒரே வர்த்தக மண்டலமாக இருந்திருக்கவில்லை. அது ஆங்கிலேயர்களுக்கு மிகவும் வசதியாகப் போயிற்று. வர்த்தகப் பொருட்களின் எண்ணிக்கையும் தயாரிப்பு அளவும் அன்றைய நிலையில் வெகுகுறைவானவையே.

ஆனால் வர்த்தகத்தின் மீது மன்னர்களின் நேரடி கவனம் விழாததற்கு அவை மட்டும் காரணமல்ல. வர்த்தக வழிகளில் அவர்களிடையே கொடுக்கல், வாங்கல் இருந்த அளவுக்கு வணிக வழியிலான ஒற்றுமை உருவாகவில்லை. அதாவது அந்தச் சின்னஞ் சிறிய நாடுகள் இணக்கமான பொருளாதார மண்டலங்களாக அப்போது உருவாகவில்லை.

ஆனால் இன்று பாருங்கள். உலகளாவிய அளவில் ஐரோப்பியப் பொருளாதாரக் கட்டமைப்பு, ஆசியப் பொருளாதார மண்டலம் என்று பல அமைப்புகள் தோன்றியுள்ளன. இவற்றில் புதியது உலக வர்த்தக அமைப்பு. வர்த்தகம் உலகத்தை ஒரே மண்டலமாகக் கட்டிப் போட்டு விடுகிறது என்பதற்குச் சான்றுகளாக, இப்படிப்பட்ட புதிய அமைப்புகள் உருவாகின்றன. பெரிய நாடுகள் அவற்றில் இடம் பெறுகின்றன. எல்லா நாடுகளிலும் ஆட்சியாளர்களின் கவனம் அந்த அமைப்புகள்மீது திரும்புகிறது.

இந்த உலகம் இயங்கி வருவது வர்த்தகத்தினால் தான் என்பதை இப்பொழுது ஒப்புக் கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்.

ஆக, இவ்வளவு விரிந்து பரந்துள்ள வர்த்தக சாம்ராஜ்யம் இரவு பகல் பாராமல், ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் இயங்கி வருகிறது. 'ஞாயிற்றுக்கிழமை' விடுமுறை என்பதெல்லாம் ஊழியர்களுக்கு மட்டுமே முதலாளிகளுக்கன்று. "எங்கள் சாம்ராஜ்யத்தில் சூரியன் அஸ்தமிப்பதில்லை" என்று ஒரு காலத்தில் ஆங்கிலேயர் இறுமாப்புடன் சொன்னார்கள். அந்த அளவுக்கு உலகில் கிழக்கிலும் மேற்கிலும் ஆங்கிலேயருக்குக் காலனிகள் இருந்தன. இன்றோ நிலைமை மாறிவிட்டது. எல்லாக் காலனிகளும் ஆங்கிலேயர் வசம் இல்லை. இங்கிலாந்து அரசியே ஆஸ்திரேலியாவிற்கும் கௌரவ

> "கொள்முதல், விற்பனை, லாபம் என்ற மூன்று நிலைகளுக்கும் நிலைக்களனாக அமைபவர்களான வாடிக்கையாளர்களை வசப்படுத்துங்கள்.
>
> வியாபாரத்தின் வெற்றி அதில்தானிருக்கிறது."

டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார்

ஆட்சித் தலைவி என்ற பரம்பரைப் பெருமையும்கூட அடுத்த சில வருடங்களில் அவர்களுக்கு இருக்காது போலிருக்கிறது.

ஆடம் ஸ்மித் என்ற பொருளாதார அறிஞர் "பிரிட்டன் வியாபாரிகளின் நாடு" என்று வர்ணித்தார். இன்று எல்லா நாடுகளும் வியாபார நாடுகளே.

இன்றுவரை 'ஹாங்காங்' என்ற தனிநகர நாடு ஆங்கிலேயர் தம் பொறுப்பில் இருக்கிறது. அடுத்த வருடம் அது சீனாவுடன் சேர்ந்து விடும். 'ஹாங்காங்' சர்வதேச வர்த்தகத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. ஆட்சி கைமாறினாலும் அந்தக் குட்டிநாடு தன் வர்த்தக முக்கியத்துவத்தை இழக்கப் போவதில்லை. கம்யூனிச சீனா ஹாங்காங்கின் வர்த்தகப் பெருமையைக் குறைத்து விடப் போவதில்லை.

ஆகவே, "எங்கள் சாம்ராஜ்யத்தில் சூரியன் அஸ்தமிப்பதில்லை" என்று அன்று ஆங்கிலேயர் சொன்னது இன்று பொய்யாகிப் போய் விட்டது. ஆனால் "எங்கள் சாம்ராஜ்யத்தில் சூரியன் அஸ்தமிப்பதில்லை" என்ற அதே வாக்கியத்தை இன்று வர்த்தகர்கள் சொன்னால், அது இன்றும் என்றும் உண்மை. அதுதான் வர்த்தகத்தின் மகத்துவம்.

ஆனால், அன்றும் இன்றும், அங்கும் இங்கும் அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த வியாபாரம் செழிக்க வியாபாரிகளின் முழு கவனத்திற்கு உரிய முக்கிய விஷயம் வாடிக்கையாளர்களை வசப்படுத்துவதே. வியாபாரத்தின் வெற்றி அதில்தான் இருக்கிறது. எல்லா வியாபாரத்திற்கும் இது சாலவும் பொருந்தும். இது என் அனுபவம்.

இளம் பருவத்தில் பள்ளிப்படிப்பை முடித்த கையுடன், பாட்டனார் நிறுவிய துணிக்கடையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டது முதல், இன்று நடுத்தர வயதில் பலகோடி ரூபாய் அளவுக்கு அதே கடையில் வியாபாரம் செய்யும் நிலையிலும் நான் கண்டறிந்த உண்மை இது - "வாடிக்கையாளர்களை வசப்படுத்துங்கள்".

சக வியாபாரிகள், தொழிலதிபர்களுடன் பழகி வரும் வேளைகளிலும் இதையே நான் தாரக மந்திரமாக உணர்த்திருக்கிறேன். ஏட்டுப்படிப்பும் உபதேசங்களும் மட்டும் எவரையும் வெற்றிகரமான வியாபாரியாக மாற்றிவிட முடியாது. படிப்பதை, கேட்பதை, உணர்வதை அவரவர்கள் தம் வியாபாரத் துறைகளில் பயன்படுத்த வேண்டும். ●

பொது வாழ்க்கைப் புனிதன்



பொருளியல் தேடி
பொழுதெலாம் உழைக்கின்ற
அரசியல் உலகில்
அதிசய மனிதன்!

பொறுமையின் சிகரமாய்
பொறுத்து இருந்து
எரிமலையாய் வெடித்த
எளிமையின் இலக்கணம்!

எதுவாழ்க்கை என்போர்க்கு
என்றைக்கும் உதாரணமாய்
பொதுவாழ்க்கைப் பயணத்தின்
புதுவாழ்க்கைப் புனிதன்!

திசை தெரியாத
தேசியத் தோழர்கட்கு
விசையாய்க் கிடைத்த
வெற்றித் திருமகன்!

காவிரியில் பிறந்து
கங்கையாய்த் தவழ்பவன்
மேவிய புகழொடு
மேதினியில் வாழ்க!

இரவிபாரதி

பாஞ்சாலி காட்டும் பக்திநெறி

டாக்டர். தி. முத்து கண்ணப்பர்

மகாபாரதம், பாரதப் பெரு நாட்டின் பழம் பெருங்காவியம். அது போர்க்காவியம், 'மகா பாரதம்' என்ற சொல்லையே 'போர்' என்னும் பொருளைக் குறிப்பதாகக் கருதுவதும் உண்டு.

மகாபாரதப் போருக்கு மூல காரணம் பாஞ்சாலி சபதமே என்று கூறின் மிகையாகாது.

'வீர பராக்கிரமம் மிக்க பாண்டவர்களைப் போரில் வெல்வது அரிது. பஞ்சவரைச் சூதாட்டத்தால் வெல்வது தான் ஒரே வழி; எளிய வழி' என்று கருதுகிறான், நஞ்சு மனம்கொண்ட வஞ்சகன் சகுனி. சகுனி துரியோதனாதியரின் அன்பு மாமன். நீதியும் நேர்மையும் தவறாத பாண்டவர்க்கு, பொல்லாரையழித்து நல்லோரை வாழ வைக்கவே அவதரித்த கண்ணபரமாத்மா, என்றும் பொன்றாத் துணையாய் நின்றது போல், பொறாமையின் முழுவடிவங்களாய்த் தோன்றிய துரியோதனாதியர்க்கு உறுதுணையாய் இருந்து அவர்கள் பூண்டோடு அழிவதற்கே துணை நின்றவன் சகுனி.

'சகுனி' என்னும் சொல்லே, பொல்லாதவரை, ஈரநெஞ்சமில்லாத வஞ்சகச் சூழ்ச்சியாளரைக் குறிக்கப் பயன்படும் சொல்லாக உலக வழக்கில் நிலவுகிறது.

சகுனி சூழ்ச்சி :

அபூர்வ வேலைப்பாடுகள் அமைந்த அற்புதமான மணிமண்டபம் ஒன்றைக் கட்டுவித்துப் பாண்டவர்களைப் பார்க்கவருமாறு அழைக்கத் துரியோதனாதியர்க்குக் கூறினான், சகுனி மாமன். அவ்வாறே மண்டபம் கட்டப்பட்டது. பாண்டவர்களும் வந்து கண்டு மகிழ்ந்தனர். தம்முடன் வந்த பாஞ்சாலியைத் திருதராட்டினரின் மனைவியும், துரியோதனாதியரின் அன்னையுமான காந்தாரியின் மனையில் தங்குமாறு பணித்து, பாண்டவர் மணிமண்டபத்தில் துரியோதனாதியர் இருந்த போது சகுனி, பொழுதுபோக்காகச் சூதாட வருமாறு அழைக்கிறார். சூதின் கேடுகளை நன்குணர்ந்திருந்த தருமன் சூதாட அறவே மறுக்கிறான். பின்னர், சகுனியின் ஏளனமான பேச்சுக்கும் ஏச்சுக்கும் தான் அஞ்சாதவன் என்பதையும் புலப்படுத்தும் வகையில் சூதாட இணங்கினான். விதியும் தருமனுக்கு மீளாத சதி செய்து விடுகிறது.

தருமன், தன் உடைமைப் பொருள்கள் அனைத்தையும் பணயமாக வைத்து இழந்துவிடுகிறான். மேலும் பணயமாக வைக்க அவனிடம் ஏதுமில்லை. சற்றுத் தயங்குகிறான்; தவிக்கிறான். அதனையுணர்ந்த வஞ்சகச் சகுனி, தன்னையும், தன் சகோதரர்களையும் பணயமாக வைத்து ஆடலாமே என்று கூறிச் சூதினைத் தொடருமாறு சூழ்ச்சி செய்கிறான்.

பகடைக்காய் சகுனிக்கே சாதகமாய் உருண்டு அவனுக்கே வெற்றிமேல் வெற்றியைக் குவிக்கிறது. தம்பிகளையும் தன்னையும் தோற்று மேலும் செய்வதறியாது சற்றுத் தயங்கிய தருமனை நோக்கி, சகுனி ''நீங்கள் ஐவரும் எம்மிடம் தோல்வியுற்று எமக்கு அடிமையாய் விட்டீர்கள். இனி உங்கள் மனைவி திரௌபதியைப் பந்தயமாக வைத்து, திறமையைக் காட்டி ஆடலாமே என்று தருமனின் அவாவைத் தூண்டும் வகையில் கூறுகிறார்.

இந்நிலையை யறிந்து அவையிலிருந்த அனைவரும் ஏதோ பெருங்கேடு விளைய இருக்கின்றதேயென்று மிகவும் கவலையடைகின்றனர். ''அது அடாத செயல், பேராபத்துக்கு வழி வகுக்கும் நிகழ்ச்சியாகும்'' என விதுரன் அறிவுறுத்து கிறான்.

பின்னர் விதியின் வலியால் சகுனியின் விருப்பப்படியே திரௌபதியையும் பணயமாக வைத்து ஆடித் தோல்வியடைந்தான், தருமன்.

பாஞ்சாலியைச் சபைக்கழைத்தல்

அதன் பின்னர், சகுனியின் கருத்திற் கிணங்கத் துரியோதனன் தேர்ச்சாரதியை ஏவித் திரௌபதியைக் கொணருமாறு கட்டளையிட்டான். ஆனால் பட்டத்தரசியாகிய பாஞ்சாலியை (திரௌபதியை)ச் சாரதியாகிய தான் போய் எப்படி அழைத்து வர முடியும் என்று எண்ணி அஞ்சினான், பிரதிகாமி.

துரியோதனின் ஆணையை மறுக்கவும் முடியாது. ஆதலால் திரௌபதியை அழைத்ததாகவும் அவள் வர மறுத்து, 'என்னைத் தோற்றுப் பாண்டவர் பின்னர் தம்மைத் தோற்றாரா, அல்லது தம்மை முதலில் தோற்றுப்பின்னர் என்னைத் தோற்றாரா? அவர்களைத் தோற்ற பின்னர் என்னைத் தோற்றிருந்தால், அது அவர்களுக்கு உரிமையான செயல் அன்று' என்று கூறியனுப்பி விட்டதாகவும் பொய்யாய்ப் புனைந்துரை கூறி ஒருவாறு தப்பி விட்டான்.

அதனைக் கேட்ட துரியோதனன் கடுஞ்சினம் கொண்டு, தன் தம்பியருள் ஒருவனான துச்சாதனனை அழைத்து, ''ஐந்து கணவர்களுக்கு ஒரு மனைவியாய் உள்ள அத் திரௌபதியை அரசர்கள் பலரும் நிறைந்துள்ள இச்சபைக்குள் உடனே அழைத்து வருக!'' என ஆணையிட்டான்.

திரௌபதி அப்பொழுது காந்தாரியின் மனையில் தங்கியிருந்தாள். துச்சாதனன் நேரே அங்குச் சென்று திரௌபதியை வெறுப்பும் சினமும் கலந்த தொனியில் "உன் கணவராகிய தருமன், தானாகவே எங்களுடன் சூதாடி அனைத்துப் பொருள்களையும் இழந்து, தன்னையும் தன்

தம்பியரையும் இழந்ததோடு முடிவில் உன்னையும் பணயமாக வைத்து இழந்துவிட்டாள். இம்முறையில் அடிமைப் பட்டிருக்கும் நீ என்னுடன் அரச சபைக்கு உடனே வா" என்று கூறிப்பின்னரும், "அன்று இந்திரப் பிரத்தத்தில் என் அண்ணன் துரியோதனன் இடறியது கண்டு ஏளனம் செய்து சிரித்தாய் அல்லவா? இன்று அச்சபையில் பலவேந்தர்கள் முன்னிலையில் உன் கணவன் தருமனை நாங்கள் இகழ்ந்து சிரிப்போம். அதனைக் கண்டு நீ பொறுக்கமாட்டாமல் கதறி அழுவதைக் காணப் போகிறோம்!" என்று கூறி, இழி சொற்களால் ஏசி, தாமரை மலர் போன்ற அவள் கையைப் பற்றி இழுத்தான்.

கணவரைத்தவிரப் பிறரைத் தீண்டாத கற்புடைய திரௌபதி, கொடிய வேட்டுவர் வலையில் சிக்கித் துடிக்கும் மான் போல நடுங்கித் தன் மாமியார் காந்தாரியிடம் தஞ்சம் புகுவதுபோல் ஓடினாள். ஆனால், கண்ணிலான் மனைவியாகிய காந்தாரி, அவளை அரவணைத்து ஆறுதல் கூறாமல், ''உன்னை அழைப்பவர் அந்நியர் அல்லர்; சுற்றத்தாரே; ஆதலால் நீ அஞ்சாமல் இவன் பின் செல்" எனக் கூறிவிட்டாள்.

உடனே, துச்சாதனன் அவளது கூந்தலைத் தன்கைச் செண்டால் பற்றிச் சபையை நோக்கி மூர்க்கமாக இழுத்துச் சென்றான். திரௌபதி, தன் கணவர்கள் அச்சபையில் இருப்பர், தனக்கு உய்வுகிடைக்கும் என்னும் நம்பிக்கையோடு அவன் பின் சென்றாள்.

அவ்வுத்தமியின் பரிதாபமான நிலையைக் கண்டு அந்நகரத்து மக்கள் எல்லாம் வேதனையடைந்தனர். திரௌபதி கூந்தல் அலைய, குணம் அலைய, மானமழிய, மதிகுலையச் சபைக்குள் இழுத்துச் சென்று நிறுத்தப்பட்டாள்.

இந்த அவலக் காட்சியைக் கண்டு அச்சபையில் அமர்ந்திருந்த வீமன் வெகுண்டான். அவன் கை கதாயுதத்தின் மேல் சென்றது. அர்ச்சுனன் கண்கள் அவனது காண்டீபத்தை உற்று நோக்கின. நகுல, சகதேவர்கள் நெஞ்சில் சினம் நெருப்பென மூண்டது. அந்நிலையைக் கண்ட தருமன் அவர்களைக் கையடக்கினான். ''இது நமக்கு உற்ற காலமன்று. எத்தனையோ, கொடுமைகளைப் பொறுத்தீர்கள். அவ்வாறே இதனையும் பொறுத்து அமைதி கொள்ளுங்கள்" என மெல்ல அறிவுரை கூறினான்.

அதே சமயத்தில் பாஞ்சாலி சபையில் நின்று சொல்லொணாத் துயருடன் 'கோ'வெனக் கதறிப் பதறி அழுதரற்றினாள். அதனைக் கண்ட துட்டன் துச்சாதனன் பாஞ்சாலியை நோக்கி ''பன்னாட்டு வேந்தரும் கூடியுள்ள இச்சபையில், இதோ உன் மாமன் திருதராட்டிரன் உள்ளார்; அன்றியும், உன் கணவர்கள் ஐவரும் எதிரே உள்ளனர். இவ்வாறாக, ஏன் நீ கண்ணீர் கலங்க அழுது அரற்றுகிறாய்?" என இகழ்ந்து கூறினான்.

பாஞ்சாலி நீதி கேட்டல்:

அதனைக் கேட்ட பாஞ்சாலி, அவையோரைக் கரங்கூப்பித் தொழுது, ''தோள் வலிமிக்க மாமனே! கங்கை மைந்தராகிய பீஷ்மரே! அறிவு சான்ற பெரியோர்களே! நீங்கள் இந்தக் கொடுமையைக் கண்டு வாளா விருத்தல் முறையோ?" என்று கேட்டாள்.

மேலும், அவையோரை நோக்கி, "தருமன், சூதாட்டத்தில் தம்மைத் தோற்ற பின்னர், என்னைப் பணயமாக வைத்துத் தோற்றாரா? அல்லது முன்பே என்னைத் தோற்ற பிறகு அவர் தம்மைத் தோற்றாரா? என்னை முதலில் தோற்றிருந்தால் இவன் செயல்முறை சரியே; ஆனால் நடந்தது என்ன? நீங்களே சாட்சி. உண்மையைக் கூறுங்கள்!" என்று மாளாத்துயரிலும் தலை நிமிர்ந்து அவ்வீராங்கனை நீதி கேட்டாள். ஆனால் எவரும் வாய்திறவாமல் அச்சத்தோடு சிலை போல் மௌனமாய் இருந்தனர்.

அப்பரிதாப நிலையைக் கண்ட, துரியோதனனின் தம்பி யருள் நீதிமானான விகர்ணன், சபையோரை நோக்கி, "இது முறையோ? என்ன அநியாயம்! தருமன் தன்னைத் தோற்ற பின்னரல்லவா இவளைத் தோற்றார்? எனவே இப்பாஞ்சாலிக்கு இழைப்பது அநீதி. நற்குலத்திற் பிறந்தவர்களல்லீரோ, இங்கு வீற்றிருக்கும் மன்னர்களாகிய நீங்கள்?" என்று கேட்டான்.

அவ்வாறு கேட்ட விகர்ணனைக் கர்ணனும், துரியோதனாதியரும் கடிந்து பேசி வாயடக்கினர்.

பின்னர் துரியோதனன் துச்சாதனனை நோக்கி ''இன்னே இப்பாண்டவர்களின் ஆடைகளையும், திரௌபதியின் ஆடையையும் களைந்து விடுக!" எனக் கூறினான்.

அதனைக் கேட்ட பாண்டவர்கள் அத்துட்டன் தம்மைத் தொடு முன்னர் தாங்களே மேல் உத்தரியங்களைக் களைந்து கீழே எறிந்தனர். பின்னர் அத்துரோகி துச்சாதனன், திரௌபதியை இழுத்துத் துகிலுரிய நெருங்கினான். அக்கொடு மையைக் கண்ட அவையோர் நெஞ்சங்குமுறி நடுங்கி ஏதும் செய்ய இயலாமல் இருந்தனர்.

இதுதான் உச்சக்கட்ட நிலை. பன்னாட்டு மன்னர்கள் அச்சபையில் உள்ளனர். அறநெறியுணர்ந்த ஆசாரியர்களான துரோணர், கிருபர், பீஷ்மர் போன்ற ஆன்றோர் இருந்தனர். ஏன், அப்பாஞ்சாலியை மணந்தவர் ஒருவரா! இருவரா? ஐவரும் எதிரில் அமர்ந்திருந்தனர். ஆனால், அக்கொடுமையைக் கண்டு எவரும் தடை செய்ய வில்லையே! இது சிந்தனைக்குரியது.

பாஞ்சாலி உருகி வேண்டல்:

எவரும் துணைக்கு வாரா நிர்க்கதியான நிலைகண்ட பாஞ்சாலி, பரம்பொருளான எங்கும் நிறைந்த எம்பெருமான் கண்ணனை நெஞ்சில் நிறுத்தி, "கோவிந்தா! கோவிந்தா!" என இருகரங்கூப்பித் தொழுது உருகி அழுதாள். இக்காட்சியை வில்லிபுத்தூரார் பின்வருமாறு தம் சொல் நயமிக்க பாடலால் சுவையொழுகப் பாடுகிறார்;

→

இயற்கையின் கூத்து


புலவர் வரத கோவிந்தராசன்

வானம் குமுறுது வையம் நடுங்குது
வாரணம் ஓடுது விண்ணில் - மழைத்
தோரணம் ஆடுது மண்ணில்!
மோனக் கருக்கலில் மோதி இடிக்குது
யாரெனக் கேட்குது விண்ணில் - மழை
பாரெனத் தூவுது மண்ணில்!

மேகம் வளைக்குது மோகம் விளைக்குது
மேதினி மீதென்ன காதல் - தடை
யேதினி ஈதென்ன மோதல்
தாகம் தணிக்குது தாபம் துணிக்குது
தேகம் நடுங்குது அஞ்சி - மழை
வேகம் எடுக்குது மிஞ்சி!

மின்னித் தெறிக்குது கண்ணைப் பறிக்குது
விண்ணின் மேல் என்னென்ன கூத்து - இந்த
மண்ணிலும் சொல்லொணா வேத்து
வன்னி பிறக்குது பின்னிக் கறக்குது
மன்னி எரியுது ஆங்கே - பாரின்
சென்னி இரியுது ஈங்கே!

வாழ்ந்திட வையகம் வாரிவ ழங்கிடும்
வான்தரும் நல்லமிழ்தம் - உலகம்
வாழ்த்தி மனம் மகிழும்
சூழ்ந்திடும் மழைவளம் குன்றிடில் மிஞ்சிடில்
சுந்தர உல கழியும் - இறைவன்
செய்களி நடம் புரியும்



மத்தாப்பூ

பால. நடராஜன்

பூபூ....பூபூ....மத்தாப்பூ
புவியில் மலரும் மத்தாப்பூ
பூபூ....பூபூ.... மத்தாப்பூ
பூமியில் பூக்கும் மத்தாப்பூ
பூபூ....பூபூ....மத்தாப்பூ
பூவாய்ச் சொரியும் மத்தாப்பூ
பூபூ....பூபூ....மத்தாப்பூ
பூத்துக் கொட்டும் மத்தாப்பூ
சின்னக் கம்பி மத்தாப்பூ
சிவப்பு பச்சை மத்தாப்பூ
வண்ண வண்ண மத்தாப்பூ
வகை வகையாம் மத்தாப்பூ
கண்ணுக் கழகு மத்தாப்பூ
காண இனிக்கும் மத்தாப்பூ
மின்னி மறையும் மத்தாப்பூ
மிகவும் ஒளியாம் மத்தாப்பூ.

''ஆறாகி இரு தடங்கண் அஞ்சனவெம் புனல் சோர அளகம் சோர
வேறான துகில் தகைந்த கைசோர, மெய்சோர, வேறோர் சொல்லும்
கூறாமல், 'கோவிந்தா! கோவிந்தா! என்று அரற்றிக் குளிர்ந்த நாவில்
ஊறாத அமிழ்துஊற உடல்புளகித்து உள்ளமெலாம் உருகினாளே"

(அஞ்சனம் - மை; அளகம் - கூந்தல்; துகில் - ஆடை)

அவ்வபயக்குரலைக் கேட்ட கண்ணபெருமான் பிறர் கண்களுக்குப் புலனாகாமல் - தோன்றாமல் - தோன்றி அப்பாஞ்சாலிக்கு அருள்புரிந்தார்.

பாஞ்சாலியின் ஆடையைப் பற்றி, அத்துட்டத் துச்சாதனன் இழுக்க இழுக்க, ஆயிரமாயிரங்கோடி ஆடைகள் பலவண்ண வண்ணப் பட்டாடைகள் மாளாமல், பெருகிக் கொண்டே இருந்தன. அப்பாதகனும் கை சோர்ந்து, மெய் சோர்ந்து நிலத்தில் வீழ்ந்தான்.

அச்சபையிலிருந்தோர் அனைவரும் மெய்சிலிர்க்க அக்காட்சியைக் கண்டு, பாஞ்சாலியின் கற்பு நெறியையும், பக்திப் பெருக்கையும் வியந்து போற்றினர். இவ்வற்புதக் காட்சியை வில்லிபுத்தூரார் தம் பொற்புறு கவிநயந் தோன்றப் பின்வருமாறு பாடியுள்ளார் :

''உடுத்ததுகில் உணர்வில்லான் உரிந்திடவும் மாளாமல் ஒன்றுக்கு ஒன்று ஆங்கு
அடுத்தநிறம் பற்பல பெற்று ஆயிரம் ஆயிரம் கோடி ஆடையாகக்
கொடுத்தருள, உலந்தன பட்டு இருந்த தனிக்கூடம் கொள்ளாது ஒடி
எடுத்தனர் பற்பல வீரர் உரிந்தோனும் சலித்து இருகை இளைத்து வீழ்ந்தான்"

எனவே, இவ்வுலகில் உற்றார், உறவினர், உடன்பிறந்தார், தொட்டு மணந்த துணைவர் எவரும் நமக்கு இறுதியில் துணையாக மாட்டார். நம்மைப் படைத்துக் காக்கும் அப்பரம்பொருள் ஒன்று தான் நமக்கு முற்ற முடிந்த துணை; புகலிடம். அவனைச் சரணடைந்து அவனுடன் ஒன்றி விடுவதே - அந்தச் சரணாகதிதான் - நமக்கு நிலையான கதி. அதுதான், பாஞ்சாலி காட்டும் பக்தி நெறி!

எழுத்துலகில் மூத்த மூவர்

ராஜலட்சுமி ராதாகிருஷ்ணன்

திருமதி வசுமதி ராமசாமி

பழைமையை மறக்காத புடைவைக்கட்டு; கனிரென்ற குரல்... எல்லாருக்கும் உதவத்தயாராக இருக்கும் உள்ளம்.. இவற்றின் ஓர் உருவம் தான், திருமதி வசுமதி ராமசாமி. இவரது உற்சாகமான பேட்டி:

ஐம்பது ஆண்டுகளாக எழுத்துத் துறையில் ஈடுபட்டுள்ள அந்த ஆர்வம் அவருக்குச் சிறிதும் குறையவில்லை. "எழுத்தின்மீது.. எப்படி ஆசை வந்தது" என்ற நம் கேள்வியைக் கேட்டு முடிக்கவில்லை... அதற்குள் பதில் வந்தது.

"திரு கல்கி அவர்கள் தான் காரணம்.. எங்கள் ஊருக்கு அருகில்தான் அவரது ஊர். என் அண்ணாவின் நண்பர் அவர். அதனால் அவரது எழுத்துகளைப் படிக்கும் வாய்ப்பு மட்டுமின்றி அவரைப் பார்க்கவும் எனக்கு வாய்ப்பிருந்தது. அவருடைய அத்தனை எழுத்துகளையும் படிப்பேன். அவர் தயாரிக்கும் தீபாவளி மலருக்கு மதிப்பெண்கள் போட்டு அனுப்புவேன்..."

"உங்கள் முதல் கதை..?"

"புதுக்கோட்டையிலிருந்து வந்து கொண்டிருந்த ஒரு பத்திரிகையில்தான் என் முதல் கதை பிரசுரமாயிற்று. அதன் தலைப்பு என்ன தெரியுமா? "பிள்ளையார் சுழி.."


"இதே கதையை... சில மாதங்களுக்குப் பிறகு.. யாரோ சிறிது மாற்றி மீண்டும் பிரசுரித்திருந்தார்கள். நான் அதை எடுத்துக்கொண்டு திரு கல்கியிடம் போனேன். அழுகைக் குரலில் "யாரோ என் கதையைக் காப்பி அடித்திருக்கிறார்கள்" என்றேன். அவர் சிரித்தார்..

"பேஷாப் போச்சு... உன் கதை நன்றாக இருந்ததால் தானே காபி அடித்திருக்கிறார்கள்? அப்படியானால் நிறைய எழுது... நிறைய காபி அடிப்பார்கள்!" என்றார் சிரித்துக் கொண்டே. இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால். எந்த இறுக்கமான துன்பமான சூழ்நிலையானாலும் சரி. அதை ஆரோக்கியமான நகைச்சுவையால் நிமிர்த்தி விடும் கலை அவரிடம் பூரணத்வம் பெற்றிருந்தது. அவரது எழுத்துகளைத் தான் நான் என்னுடைய வேதமாகக் கருதுகிறேன்."

அவர் குரலிலும் கண்களிலும் குருவுக்கு அஞ்சலி செய்யும் சிஷ்யையின் பாவம் தெரிகிறது. அவருடைய வாழ்க்கை அநுபவம் பற்றிக் கேட்ட போது அவர் மிக உற்சாக மாகவும் விஸ்தாரமாகவும் சொன்னார்.

"எனக்குப் பன்னிரண்டு வயதில் திருமணம்... அதுவரை படித்தது பள்ளிப்படிப்பு. ஆனால் வீட்டில் அப்பா, அண்ணா எல்லாரும் நன்றாகப் படித்தவர்கள்.. அதனால் புத்தகம் படிக்கும் பழக்கம் த ன் இயல்பாகவே எனக்கு உண்டு. அதுவும் தவிர.. எல்லாப் பத்திரிகைகளையும் படிப்பேன். அதிலும், அரசியல் கட்டுரைகள் ஏராளமாகப் படிப்பேன்... அதனால் தேச சுதந்தரத்தில் மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது. அதனால் திருமதி அம்புஜம்மாள் அவர்களுடன் பழக்கம் ஏற்பட்டது. எழுத்துத்துறையில் நான் மதித்தவர்கள் திருமதி வை.மு. கோதை நாயகி அம்மாள், குகப்ரியை அம்மாள், லட்சுமி முதலானோர். அவர்கள் எல்லாரும் என்னுடைய மனத்தில் நான் எப்போதும் உட்கார வைத்திருக்கும் மிகச் சிறந்த பெண்மணிகள்.

"சமூக, தேசத் தொண்டோடு எழுத்துப் பணியும் தொடர்ந்தது. திரு கல்கி அவர்களைப் ஆனந்தவிகடன் திரு எஸ்.எஸ். வாசன் அவர்களும் என்னை மிகவும் ஊக்குவித்தார். ஒரு முறை.. ஒரு சக எழுத்தாளர் (ஆண்) என்னிடம் மிகுந்த கேலி கலந்த தொனியில் 'ஆமாம் நீங்கள் (அதாவது பெண்கள்) எல்லாம் என்ன எழுதுவீர்கள்? மாமியார் மாட்டுப்பெண் சண்டையைப் பற்றித்தான் உங்களால எழுத முடியும்? வேறு என்ன எழுதத் தெரியும் ? என்று கேட்டார். எனக்கும் சற்று வேகம் வந்தது. 'சரி.. மாமியார் - நாட்டுப் பெண் சண்டை இல்லாமலேயே ஒரு கதை எழுதுகிறேன். நீங்கள் படிக்கிறீர்களா?' என்றேன். 'நான் படிக்கமாட்டேன். என் மனைவி படிப்பாள். எழுதிப் பாருங்கள்' என்றார்.மீண்டும் கேலியாக. என்னுள் எழுந்த கோபத்தை ஒரு புதினமாக வடித்தேன். என் உறவினர் ஒருவர் போர் முனையில் அதிகாரியாக இருந்தார். அவர் 'காஷ்மீர்' போர் குறித்து சில செய்திகளை எனக்குச் சொல்லியிருந்தார். அதை மையமாக வைத்து "காப்டன் கல்யாணம்" என்ற தலைப்பில் நான் எழுதிய புதினம் ஆனந்த விகடனில் தொடர்கதையாக வெளிவந்தது. அதே நேரம் திரு கொத்தமங்கலம் சுப்பு அவர்கள், 'தில்லானா மோகனாம்பாள்" எழுதிக் கொண்டிருந்தார். அதற்கு மகத்தான வரவேற்பு. அவர்கூட என்னைக் கேலி செய்வார். "என்னம்மா நான் வயசானவன், காதல் கதை எழுதுகிறேன். நீ சின்னவள், போர்க்கதை எழுதுகிறாயே" என்பார்.



சிறந்த குடும்பத் தலைவியாக - சமூக சேவகிகளாக - மிகச் சிறந்த எழுத்தாளர்களாக சமூகத்தில் பவனி வரும் மூத்த எழுத்தரசிகள் இவர்கள்.

"கடித மூலம் வாசகர்களைச் சந்தித்த முதல் பெண்மணி நீங்கள்தானே?"

தலையசைக்கிறார். "அது சற்று சோகம் கலந்த செய்தி.. திரு கல்கி அவர்கள் அமரராகியிருந்த நேரம்.. காரியங்கள் முடிந்த கடைசிநாள். என்னால் தாங்க முடியாமல் நான் வெளியே கண்ணீரோடு நின்றேன் - மூதறிஞர் ராஜாஜி வெளியே வந்தார். "என்ன அழுதாயா?" என்றார். நான் தலையசைத்தேன்..

"அழுவது சரியில்லை. உன் பக்தி உண்மையானதாக இருந்தால் இனிமேல்தான் நீ நிறைய எழுத வேண்டும்.. பெண்களுக்கு நல்ல அறிவுரையாக கல்கியில் 'ஒருபக்கம்' வருவதுபோல் எழுது.." என்று என்னைப் பணித்தார். அப்படித் தொடங்கியது தான் என் எழுத்துப்பணி. அதற்கு வாசகர்களிட மிருந்து பிரமாதமான வரவேற்பு. அவற்றை "தேவியின் கடிதங்கள்'' என்ற நூலாய்ப் பதிப்பித்து 'அமுதசுரபி' வெளியீட்டாளர்கள் சமீபத்தில் வெளியிட்டார்கள். பத்திரிகைகள் எல்லாம் பாராட்டியிருக்கின்றன.


"டாக்டர் மு.வ., அறிஞர் அண்ணா" ஆகியோரின் கடிதக் கட்டுரைகளுக்கு இணையாக உள்ளது இந்தத் தொகுதி" என்று விமரிசித்திருந்தார்கள். எனவே, இப்படி குடும்பத்தையும் கவனித்துக் கொண்டு, நல்ல எழுத்துகளையும் படைக்க முடியும்'' என்று அழுத்தமாகக் கூறினார் திருமதி வசுமதி ராமசாமி.

திருமதி அநுத்தமா

திருமதி அநுத்தமா அவர்களைச் சந்தித்தோம். அடக்கமான, அறிவின் பெட்டகமாகத் திகழும் அவர் சிரித்த முகத்துடன் வரவேற்றார். மென்மைக் குரல். அதிர்ந்து பேசாத தன்மை.. மொத்தத்தில் குளிர்ந்த பார்வை, இனிய சொல்.. சிரித்தமுகம்.. இவற்றுக்கெல்லாம் சொந்தக்காரர் திருமதி அநுத்தமா. நாவல்களை விட அதிகமாக சிறுகதைகள் எழுதியவர்.. அவருடைய எழுத்துத்துறை அனுபவம் பற்றிக் கேட்டோம்.

தாம் எழுதிய முதல கதையைப் பற்றிக் கூறும்போது.. "நான் எழுதியது ஒரு கதை என்பதே எனக்குத் தெரியாது" என்று அடக்கத்தோடு கூறும் இவரும். பதினான்கு வயதிலேயே திருமணமானவர்.

"அப்படியென்றால் பள்ளிப்படிப்பு?" என்று நாம் கேட்டதற்கு அவர் சொல்லும் பதிலில் சுத்தமான உயர்ந்த ஆங்கிலம் கலந்திருந்தது. மெல்லக்கூறத் தொடங்கினார்.



"என் தாய்மொழி தமிழ்.. ஆனாலும் நான் என் அப்பாவோடு இருந்தது ஆந்திராவில். அப்பா வனத்துறை அதிகாரி. 'காடாறுமாதம் நாடாறுமாதம்' என்பது போல மாதத்தில் மூன்று நான்கு நாள்கள்தான் எங்களோடு இருப்பார். அப்போது மகாபாரதம், சாவித்திரி சத்யவான் கதை, ஷேக்ஸ்பியரின் நாடகம் என்று சொல்லிக் கொடுப்பார். பிறகு 27 நாள்கள் காட்டுக்குள் போய்விடுவார். அவர் சொன்னதையெல்லாம் அந்த 27 நாள்களுக்கு அசை போட்டுக் கொண்டிருப்போம். வீட்டெதிரில் ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. அங்கே சேர்ந்து படித்தேன். வீட்டில் புக் ஆப் நாலட்ஜ்" "சில்ட்ரன் என்ஸைக் ளோபீடியா" போன்ற புத்தகங்கள் இருந்தன. அவற்றை யெல்லாம் படித்துக் கொண்டேயிருப்பேன்.. அதனால் ஆங்கில மொழியில் நல்ல தேர்ச்சி பெற முடிந்தது.."

"தமிழ் எப்போது கற்றுக் கொண்டீர்கள்?"

"கலியாணமான பிறகு என் மாமியாருக்குக் கடிதம் எழுதுவதற்காகக் கற்றுக் கொண்டேன். என் அப்பா வீட்டில் சற்று பழைமையான கலாசாரம். அப்பா, அண்ணா எல்லாம் வரும்போது 'அப்பா வருகிறார், அண்ணா வருகிறார்' என்று கட்டியம் கூறிக் கொண்டே வருவார்கள். என் கணவர் வீட்டில் ஆண்கள், பெண்கள் எல்லாருமே சமமாக அமர்ந்து உரையாடுவோம். என் மாமனார் கமலாம்பாள் சரித்திரத்தை உரக்கப் படிப்பார். நாங்கள் எல்லரும் சுற்றி உட்கார்ந்து கேட்போம்."

"நீங்கள் எழுதத் தொடங்கியது எப்போது?"...

"அது தானாக அமைந்தது. என் தங்கைக்கு ஒருமுறை அம்மை வார்த்திருந்தது. பிறந்த வீட்டிற்கு வந்த என்னை என் அப்பா "தங்கைக்குத் தலைக்குத் தண்ணீர் விடும்வரை வெளியே போகக்கூடாது' என்று அங்கேயே நிறுத்திக் கொண்டார். அவர் அறிவியல், சாஸ்திரம் இரண்டுக்கும் கட்டுப்பட்டவர். தங்கை மாடியில் இருந்தாள். நான் கீழே இருந்தேன். மேலே போக எனக்குத் தடை. அதனால் கீழே பொழுதுபோகாமல் ஒருநாள் மாலை. தண்ணீர் குடிக்க சமையலறைக்குச் சென்றேன்..

மாலை நேரம்.. எங்கிருந்தோ வயலின் இசை காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது. தோட்டத்தில் மலரத் தொடங்கியிருந்த மல்லிகை மலர்களின் மணம் காற்றில் கலந்து வந்து என்னை மயக்க வைத்தது. இப்படியாக கண்ணுக்கு அழகு, காதுக்கு அழகு மூக்குக்கு அழகு என்று இயற்கையின் பல வித அழகுகளை ரசித்துக் கொண்டிருந்தேன். இதை எழுத்தில் எழுத வேண்டும் என்று ஏதோ ஓர் உத்வேகம்.. பீரோவின் மேலிருந்த தாள்களை எடுத்து எழுதினேன் அப்பா வந்த போது நான் எழுதிய கருத்துகளைச் சொன்னேன். அவர் ரசித்தார். பின்னர் எழுதியதை அங்கேயே போட்டுவிட்டு புக்ககத்திற்கு கிளம்பிய போது அப்பா அந்தத் தாள்களை என் கணவரிடம் கொடுத்து, 'மாப்பிள்ளை, ராஜம் ஏதோ எழுதியிருக்கா. படித்துப்பாருங்க' என்று கொடுத்தார் (அப்பாவுக்குத் தமிழ் தெரியாது)

என் கணவரும் படித்து புக்ககத்தில் எல்லாரிடமும் படித்துக் காண்பித்தார். எல்லாரும் பாராட்டினார்கள். அப்போது தூரத்து உறவினர் ஒருவர் "கல்கியில் சிறுகதைப் போட்டி அறிவித்திருக்கிறார்கள்... அனுப்பி வையேன்" என்றார். அங்கயற்கண்ணி என்ற அந்தக்கதை இரண்டாம் பரிசு பெற்றது"

"உங்கள் முதல் கதையே (இரண்டாம்) பரிசு பெற்று விட்டது ஒரு மிகப்பெரிய வெற்றி அல்லவா?" என்ற நம்மை நோக்கி மெல்லச் சிரிக்கிறார்.

"வெற்றி என்பதை விட... ஊக்குவித்தது என்றால் பொருத்தமாயிருக்கும். நான் மேலே எழுதினேன். கலைமகளில் "நாராயணசாமி ஐயர்" நினைவு நாவல் போட்டி இரண்டாம் ஆண்டு அறிவித்தார்கள். நான் ஒரு நாவலை

அனுப்பிவைத்தேன். பரிசு பெறவில்லை. ஆனால் திரு கி.வா.ஜ அவர்கள் அதைத் தனியே புத்தகமாகக் கொண்டு வந்தார். என் படைப்புகளைப் பாராட்டுவார். அது எனக்கு ஒரு தெம்பைக் கொடுத்தது.

ஒருமுறை.. ரயிலில் திரு கி.வா.ஜ அவர்களுடன் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது ஒரு பெண்மணி அவரை அடையாளம் கண்டு கொண்டு அருகில் வந்து பேசிக் கொண்டிருந்தார். திரு கிவா ஜ அவர்கள் என்னைச் சுட்டிக் காண்பித்து "இவர்தான் அநுத்தமா. கதைகளெல்லாம் எழுதுபவர்" என்று அறிமுகப்படுத்தினார்.

திரு கி.வா.ஜ அவர்கள் என்னை அறிமுகம் செய்தவுடனே பாய்ந்து வந்து என் கைகளைப் பிடித்துக் கொண்ட அந்தம்மா "நீங்கள் தான் அநுத்தமாவா? என் பெண்ணைக் கலியாணம் செய்து கொடுத்த இடத்தில் அவளுக்குச் சில துன்பங்கள். விட்டுக்குத் திரும்பிவிட்டாள். இவளை எப்படித்திருத்துவது என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம். உங்கள் நாவலைப் படித்து அதன் படியே நடந்தோம். இன்று அவள் சந்தோஷமாக இருக்கிறாள்" என்றார்கள். பூமா என்ற அந்த நாவலை எழுதியதன் பயனை நினைத்து நான் மகிழ்ச்சியடைந்தேன். எழுத்தைச் சவாலாக என்னை எடுத்துக் கொள்ளும்படி ஒருமுறை சொன்ன உறவினருக்கு மானசீகமாக நன்றி சொன்னேன்.

எத்தனையோ பரிசுகள் பெற்ற போதும் கூட. இந்தப் பாராட்டு மிகப் பெரிய பரிசு.. என் நாவல்களில் அதிகப் பாராட்டைப் பெற்றது "கேட்டவரம்".. என் புக்ககத்து ஊரின் பெயரைவைத்து எழுதியது "நைந்த உள்ளம்" அமுதசுரபியில் வந்ததொடர்.. அதுவும் ரசிகர்களின் பாராட்டைப் பெற்றது.

சகோதரி சுப்புலக்ஷ்மியோடு எனக்கு அதிகத் தொடர்புண்டு. அவரோடு சேர்ந்து சமூகசேவை செய்வேன். அவர்கள் வாழ்க்கைச் சரித்திரத்தை 'மோனிகா ஃபெலடன்' என்ற வெளிநாட்டுப் பெண்மணி எழுதியதை திரு ராஜாஜி அவர்கள் 'அநுத்தமாவை தமிழில் மொழிபெயர்த்து கல்கியில் எழுதச் சொல்" என்று கூறியதை என் பாக்கியமாகக் கருதுகிறேன்.

முதல்கதை எழுதியபோது.. அது கதை என்றே உணராமல் எழுதினேன். அதன் பிறகு எழுதும்போது "அற்பவிஷயங்களை எழுதக்கூடாது பொழுது போக்குவதற்காக எழுதக்கூடாது. சமூகத்திற்குப் பயன்படக்கூடியதாக எழுத வேண்டும்" என்று உறுதி செய்து கொண்டு எழுதினேன். என்னைச் சுற்றி நடப்பதை எழுதினேன். எனக்குத் தெரியாததை எழுதமாட்டேன். வெளியே போகும் வாய்ப்பு எனக்கு அதிகம் இருந்ததில்லை. ஆனால் வீட்டினுள் நான் படித்தது எனக்கு உரம்.. நான் வசிக்கும் சமூகம் எனக்குக் களம்.. எழுதினேன். ஒரு பெண்ணுக்கு அவள் குடும்பம் துணை செய்தால் அவளுக்குத் தொடுவானம் மிக அருகில்" என்று முடித்தார்.

திருமதி ராஜம் கிருஷ்ணன்

எளிமை நிறைந்த உருவம்... பகட்டில்லாத உடை. அதிக நகைகளற்ற தோற்றம். பல மேடைகளில் பக்கத்திலும், எதிரிலுமாக நான் பார்த்துப் பழகி அறிந்த திருமதி ராஜம் கிருஷ்ணன். பார்ப்பதற்கு எளிமை. பழகுவதற்கு எளிமை.. ஆனால்.. அவரது உள்ளம் - இந்த உலகில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எண்ணி எண்ணி... காயப்பட்டுப் போய் காய்ந்துப் போயிருக்கிறது. அவரிடம் வழக்கமான நம் கேள்வியை எழுப்பினோம்.

"எப்படி எழுதத் தொடங்கினீர்கள்?"

"எழுதுவதற்காக - யார் பெண்ணைப் பெறுகிறார்கள்.." என் கேள்விக்குப்பதில் கேள்வி வருகிறது.. பலமாகச் சிரிக்கிறார்..

"பூப்படையும் முன்னே திருமணம்.. படிப்பை முடிக்கு முன்னே திருமணம்.. ஆனால் மிகவும் புத்திசாலியான பள்ளி



ஆசிரியரின் மகள் நான். அதனால் வீட்டிலேயே நிறையப் படிப்போம். அப்பாவும் சொல்லிக் கொடுப்பார். திருமணமான வீட்டில் நிறையக் குழந்தைகள். நான், இளைய மருமகள். நிறைய வீட்டு வேலை இருக்கும். அரிசி குத்தித்தான் சமைக்க வேண்டும். ரேஷனில் போய் சாமான் வாங்க வேண்டும்... வீட்டில் எழுத பேப்பர் இருக்காது. ரேஷன் பில்லின் பின்புறம் என் சிந்தனைகளை எல்லாம் எழுதி வைப்பேன்.

ஒரு பெண் சில தடைகளை விலக்கிக் கொண்டுதான் சமூகத்தில் நுழைய வேண்டும். நானும் முழுமையான எழுத்துக்கு வருவதற்கு கண்ணுக்குத் தெரியாத சில தடைகளை உடைத்துக் கொண்டுதான் வரவேண்டியிருந்தது. தடையை உடைத்துக் கொண்டு வரும் நீருக்கு அதிகவேகம் உண்டல்லவா? அதைப்போல தடையை உடைத்துக்கொண்டு எழுதும்போது வீச்சு அதிகமாகிறது.. சிந்தனைகளும் கூர்மையாகின்றன."

"ஒரு பெண் இந்தச் சமூகத்தில் இன்னும் சரியான இடத்தைப் பெறவில்லை" என்பது இவரது அசைக்க முடியாத கருத்து. "அதை எப்படி பெறுவது" என்ற தேடல்தான் தன் வெற்றிக்குக் காரணம் என்று கருதுகிறார். 'வட்டார இலக்கியம்' என்ற பகுதியில் திருமதி ராஜம் கிருஷ்ணனுக்கு. ஓர் உயர்ந்த இடம் இருக்கிறது. தான் செல்லும் இடங்களி லெல்லாம் மக்களைக் கண்ணால மட்டும் பார்த்துப் பழகாமல், தன மனத்தாலும் உணர்வுகளினாலும் அறிவினாலும் பார்க்கப் பழகிக் கொண்டிருக்கிறார். அதுபற்றி இவர் கூறுவது:

"ஒரு புது இடத்துக்குப் போன உடனே அந்த மொழியை முதலில் நான் கற்றுக் கொள்ள முயற்சி செய்வேன். "மொழி தெரிந்தால் தான் அவர்கள் வாழ்க்கைக்குள் நம்மால ஊடுருவ முடியும். ஊடுருவினால் தான் அவலங்களைக் காண முடியும். அவலங்களைக் கண்டால் தான் எழுத முடியும். எழுதினால் தான் அவர்களுக்கு விடியும்" என்று தன் தேடலின் காரணத்தைக் கூறுகிறார்.

"ஊட்டிக்குச் சென்றேன் 'மலர்கள்' என்ற நாவலை எழுதினேன். என் கணவருக்கு கோவாவுக்கு மாற்றலாகியது.. அங்கே போனவுடன். ஊரயெல்லாம் சுற்றிப் பார்த்தேன். போர்ச்சுகீசிய சரித்திரத்தைத் தெரிந்து கொண்டேன். தினம் மீன் விற்கும் பெண் ஒருத்தி வருவாள். அவளிடம் பேசிய போது அவர்கள் வாழ்க்கையின் சலனங்கள் புரிந்தன. உடனே எழுதினேன். அதுதான் 'வளைக்கரம்'

"பின்னர் மீண்டும் மீனவர்களைப் பற்றி எழுத சென்னையை அடுத்த மீனவக் குப்பத்திற்குச் சென்று பலமணி நேரம் தங்குவேன். அவர்கள் நடுவில் அமர்ந்து பேசும்போது. அந்தப் பெண்கள்.. "அம்மா இங்கபாருங்க எங்கவூட்டுக்காரரு அடிச்சதை..", "அம்மா இதோ சூடு வெச்சிருக்கிறார் பாருங்க' என்று கண்ணீரோடு காண்பிக்கும் போது.. அந்தக் காயங்களைப் பார்த்து என் மனம் காயப்பட்டுப் போனது.. பெண்... எவ்வளவு துன்பப்படுகிறாள் என்று கலங்குவேன். அப்போது எழுதியதுதான் "அலைவாய்க்கரையில்"

"இதை எழுத மீனவர்கள் மத்தியில் தங்கியிருந்து திரும்பும்போது. உப்பளங்களைக் காண நேரிட்டது. அப்போது தோன்றியது தான் "கரிசல்மணிகள்" இது தொலைக் காட்சி நாடகமாக நடிக்கப்பட்டது."

மக்களின் துயரங்களை வைத்து எழுதுவதில் இவரை சமீபத்தில் அதிகமாக பாதித்தது "பெண் சிசுக் கொலை" இது அதிகம் நடக்கும் இடங்களுக்குச் சென்று தங்கி செய்திகளைத் திரட்டி இவர் எழுதி 'தினமணி கதிரில்' தொடராக வந்தது "மண்ணகத்துப் பூந்துளிகள்."

ஜெயப்பிரகாஷ் நாராயணனின் உபதேசத்தால் மனம் திருந்திய சம்பல் கொள்ளைக் காரர்களைப் பற்றி எழுதுவதற்கு இவர் அங்கேயே சென்று தங்கி... அந்தப் பெண்களை யெல்லாம் சந்தித்து, முரட்டு மனங்கள் மென்மையடைந்ததையும், சில மனங்கள் கரைந்ததையும் வன்முறை உள்ளங்களில் வசந்தம் வீசியதையும் கண்டு மகிழ்ந்து எழுதிய புதினம் 'முள்ளும் மலர்ந்தது'. அவர்கள் சரணடைந்த போது பரவலாகப் பேசப்பட்ட பெண்ணின் பெயர் 'புத்லிபாய்'... இவரது கதைகள் பல வானொலி நாடகமாக்கப்பட்டுப் பாராட்டைப் பெற்றிருக்கின்றன.

சாகித்ய அகடமி பரிசு பெற்ற இவரது நாவல்களின் தலைப்புகள் இவர் சமூகப் பிரக்ஞையுள்ளவர் என்பதைப் பறைசாற்றுகின்றன. ("சேற்றிலே மனிதர்கள்.. அமுதமாகி வருக, விலங்குகள் காடுகள்... பெண் குரல்.. சலனங்கள்... வேருக்கு நீர்.... உயிர்ப் பறவை")

ரஷிய நாட்டுக்கு இருமுறை சென்றுவந்துள்ள இவரது சிந்தனை முழுதும் சமூக அவலங்களின் மீதும் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளின் மீதும்தான் ஓடிக் கொண்டிருக்கிறது.

"பெண்கள் எழுதுவது என்பது, பெரிதன்று, ஆனால் யார் எழுதினாலும் சரி.. எழுத்துகள் கொடுமைகளை விரட்டும் சாட்டையாக வேண்டும். அவலங்களை அகற்றும் காற்றாக வேண்டும். கண்ணீரைத் துடைக்கும் கையாக வேண்டும். புண்ணுக்கு மருந்தாக வேண்டும். பெண்களை மதிக்கும் படி செய்ய வேண்டும்.." என்று கூறும் இவர் ஒன்றைக் கூறி முடிக்கிறார். "சிந்தனையுள்ள பெண்ணை - அவளை சுவீகரித்துக் கொண்ட உலகம்.. சுதந்தரமாகச் சிந்திக்க விடவேண்டும்."

மூத்த பெண் எழுத்தாளர்கள் மூவரைச் சந்தித்த மன நிறைவுடன் இல்லம் திரும்பினேன். எழுத்துலகில் அவர்கள் எதிர் நீச்சலிட்டதையும், பல துறைகளில் இன்று அடிமைப்பட்டுக் கிடக்கும் பெண் சமுதாயத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கும் வகையில் தங்கள் எழுதுகோலை வேகமாக ஓட்டியதையும் கண்டு வியப்புற்றே. சமூக உணர்வும், மனிதநேயமும் மிளிரச் செய்யும் வகையில் தங்கள் படைப்புகளை உருவாக்கி எழுத்துகளில் சாதனை புரியப் பெண் எழுத்தாளர்கள் பலர் முன்வர வேண்டும் என்பதே இக்கட்டுரையின் மூலம் நான் வெளியிட விரும்பும் என் பேரவா. ●



- பக்திக்கும் பய பக்திக்கும் என்ன வித்தியாசம்...?
எங்கப்பாவுக்குப்பாட்டி கிட்ட இருக்கிறது பக்தி. எங்கம்மா கிட்ட இருக்கிறது பயபக்தி.

தாமரியோ


ஹி......! ஹி......! ஹி......!



- இந்தப் பகுதியிலே முகமூடிக் கொள்ளை அதிகம் நடக்குதாமே...!
- நாங்க முகமூடி இல்லாமலேயே கொள்ளை அடிப்போமே....



- எங்க ஸ்வீட் வாங்கறவங்க, எறும்பு கரப்பான் பூச்சி தின்னுடுமேன்னு கவலைப்பட வேண்டாம்...
- என்ன அப்படி விசேஷம்...?
- முன் ஜாக்கிரதையா, எறும்பு மருந்து கலந்திருக்கிறோம்...



திருவருள் கூட்டும் திருமந்திரம்

ஞானத் தவயோகியாகிய பாரத நாட்டுக்கே ஞானத்தத்துவத்தை வழங்கிய மாபெரும் சித்தர் என்றும் யோகி என்றும் தத்துவதரிசி என்றும் முனிபுங்கவர் என்றும் இறைஅருள்ஞானி என்றும் மனித குலத்தின் நல்வாழ்வுக்கு மாபெரும் வழிகாட்டி என்றும் இவ்வகையில் மேலும் மேலும் சிறப்பித்துப் போற்றி வழிபடத்தக்க மகான் 'திருமந்திரம்' வழங்கிய திருமூலர் ஆவார்.

வாழ்வின் தத்துவங்களையெல்லாம் சைவ சித்தாந்த அடிப்படையில் மந்திரமாக வடித்துச் செந்தமிழிலே வழங்கிய அருளாளர் இவர்.

மூவாயிரம் செய்யுட்களை வழங்கி யிருக்கின்றார். ஒவ்வொரு பாசுரமும் **'அறிவுச் சுரங்கம்'** என்று சொல்லப் படவேண்டும்.

செந்தமிழிலே நெஞ்சத்தை ஊடுருவிப் பாய்கின்றதொரு இனிய நடையில் அமைந்துள்ள ஒவ்வொரு பாசுரமும் **'ஜீவாதாரத்திற்கு மூலாதாரமானது'** என்று சொன்னால் அது முற்றிலும் பொருந்தும்.

அன்பே சிவம்' என்பது பிரபஞ் சத்தின் மூல மந்திரம். அதைப் பிரதி பலிப்பதே திருமூலரின் திருமந்திரம்.

மக்கள் கோடிக்கணக்கானவர்கள். ஆனால் ஒருவனே தேவன். திருமந்திரத் தின் அடிப்படைக் கருப்பொருள் என்று சொல்லலாம்.

ரிக் வேதத்தின் எதிரொலி என்றும் சொல்லலாம்.

சத்தியம் என்பதே ஒன்று. ஒன்றான அந்தச் சத்தியமே இறைச்சக்தி. இந்த இறைச் சக்தியே பிரபஞ்சத்தை இயக்குகின்ற மூல சக்தி. உலகம் முழுவதும் ஏற்கப்படுகின்ற இந்த அடிப்படைத் தத்துவத்திற்குத் திருமந்திரச் செய்யுள் ஒவ்வொன்றும் முத்துப் போல் ஒளிவீசுகின்ற பெட்டகமாகும்.

மனித இனம் பிறப்பின் அருமையைப் புரிந்து கொண்டு கிடைத்த வாய்ப்பைப் பயனுள்ளதாக்கிக் கொள்ளவேண்டு மென்றும் அதற்கு இறைஞானம் தான் ஏற்ற வழிகாட்டியாக முடியும் என்றும் நம்முடைய முன்னோர்கள் தெளிவாக உணர்ந்தார்கள்.



வித்வான். வே. லட்சுமணன்

வாழ்வாங்கு வாழ்வதற்கு வளமூட்டு கின்ற தகுதியைத் தரக்கூடிய சக்தி பெற்ற இறைஞானத்தின் மூலமே எல்லா நற்பண்புகளையும் அடைவதுடன் குறைவற்ற நிறைவில் நம்மை ஆழ்த்திக் கொள்ள முடியும் என்பதை அனுபவபூர்வ மாகக் கண்டவர்கள் நம் முன்னோர்கள்.

நம்முடைய தமிழ்நாட்டில் பன்னூறு ஆண்டுகளாக அரும்பெரும் நூல்களை நமக்கு வழங்கி, நம்மை ஞானிகளாக்க வழிகாட்டியுள்ள மதங்கள் இரண்டு. ஒன்று சைவம், மற்றது வைணவம். இரண்டு மதங்களுக்கும் இருவேறு மூர்த்திகளை வழிபடுகின்ற முறை இருந்தாலும் ஊன்றி நோக்குங்கால் இறை என்கின்ற பரம் பொருள் ஒன்றே எனும் அடிப்படையில் இவ்விரு மதங்களுக்கும் இடையில் ஆழ்ந்த ஒருமைப்பாடு மூலத் தத்துவமாக அமைந்துள்ளதை அறிய முடிகிறது.

சைவ சமயத் திருமறைகள் பன்னிரண்டு என்பதை நாம் அறிவோம். திருமந்திரம் 10-ஆவது திருமறையாக அமைக்கப்பட்டு, தனித்தன்மையோடு போற்றப்பட்டு வருகின்ற புனிதத் திருநூல் என்பதை நாம் அறிவோம்.

இந்த நூல் அறிவைப் போதிப்பதுடன், அதன் அடிப்படையில் நல்லொழுக்கத்தை உபதேசிக்கிறது. ஆன்மிக நெறியின் எல்லைக் கோட்டை எட்டிப்பிடிப்பதற்குரிய வழிமுறையைக் காட்டுகிறது. திருமூலர் தம்முடைய அனுபவத்தின் வாயிலாகத் தெளிவுபடுத்துகின்ற கருத்தின் வெளிப் பாடாக ஒவ்வொரு செய்யுளும் அமைந் திருப்பதனால் இந்த நூலை 'அனுபவ ஞானத் திருநூல்' என்று சொல்வார்கள்.

இங்கே சில செய்யுட்களைச் சொல்லி, நம்முடைய உள்ளத்தில் அறிவொளிச் சுடரை ஏற்றுகின்ற ஒரு பெரும்பணியில் ஓர் அங்கமாக ஒரு சிறுபணியை மேற்கொள்ள விரும்புகிறேன்.

கடவுள் வாழ்த்திலே எப்பேர்ப்பட்ட புதுமை உள்ளது என்பதைக் கவனியுங்கள். சித்தர் வாக்கே எப்போதும் சித்தத்தை அள்ளும் வாக்காக இருக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக உள்ளது அது.

ஒன்று, இரண்டு, மூன்று என்கின்ற என் வரிசையில் இந்தச் செய்யுளை வழங்கியிருக்கின்றார் திருமூலர்.

"ஒன்றவன் தானே;
இரண்டவன் இன்னருள்;
நின்றனன் மூன்றினுள்;
நான்கு உணர்ந்தான்; ஐந்து
வென்றனன்; ஆறு
விரிந்தனன்; ஏழும்பர்ச்
சென்றனன்; தானிருந்
தான் உணர்ந்து எட்டே"

இந்தச் செய்யுளில் எண்களின் வரிசை அமைந்திருக்கிறது. அதன் அடிப்படையில் எண்ணம் எந்த அளவுக்குத் தூண்டப்படுகிறது என்பதை நாம் காணவேண்டும்.

'ஒருவனே தேவன்' என்கிறார் முதலில். ஒருவனாக இருந்தும் சிவம், சக்தி என்ற இரண்டாக இரண்டறக் கலந்து இன்னருள் புரிகின்றார் என்கின்றார் இரண்டாவது வரியில். அன்னை என்பவள் அருள் புரிபவள் அல்லவா? அதனால் இரண்டு என்பது அவனது இன்னருள் என்று கூறுகின்றார்.

மூன்றில் நிற்கின்றான் என்றது படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலினையும் செய்கின்றவர் என்பதை எடுத்துரைக்கின்றது.

நான்கு உணர்ந்தான். இதற்குப் பல வகைகளில் பொருள் கொள்ளலாம். அறிஞர்கள் அவரவர்களுடைய அறிவாற்றலுக்கேற்ப விளக்கம் கூறுவார்கள். நான்கு வேதங்களில் நிறைந்திருப்பவர் என்று கூறலாம். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற நான்கு மார்க்கங்களால் அடையப் பெறுகின்றவர் என்று பொருள் கொள்ளலாம். பரந்த உலகமாக விளங்குகிறவர், உலகத்தைத் தன்னுள்ளே நிறைத்துக் கொண்டவர், உலகுக்கே உயிரூட்டும் உயிராக உள்ளவர், உலகத்தின் உருவமாகத் திகழ்பவர். இவ்வாறு நான்கு உணர்வுகளைக் கொண்டவர் என்றும் சொல்லலாம். அறம், பொருள், இன்பம், வீடு என்பார்கள். தர்ம, அர்த்த, காம, மோட்சம் என்பது இவற்றின் வடமொழிச் சொற்கள். இவற்றை எப்படி உணரவேண்டும். புருஷார்த்தங்கள் என்று இவை ஏன் சொல்லப்பட்டன என்கிற உட்பொருளை விளக்குகின்ற வகையில் நான்கு உணர்ந்தான் என்ற பதம் உபயோகப்படுத்தப்பட்டும் இருக்கலாம்.

ஐந்து வென்றனன் என்கிற வரியை எடுத்துக் கொள்வோம். ஐம்புலன்கள், ஐம்பொறிகள், ஐந்து பூதங்கள் இவற்றை எல்லாம் கடந்த மெய்ப்பொருள் என்று பொருள் கொள்வது மிகவும் பொருந்தும். இதற்கு மனிதன் ஆழ்ந்த நியமத்திலும் தவத்திலும் ஆழ்ந்திருத்தல் வேண்டும். இறைச்சக்தியோ இயல்பாகவே இவ்வைந் தினையும் வென்று ஒளிவீசுகிறது என்பது உட்பொருள்.

ஆறு விரிந்தனன் என்ற அடியை எடுத்துக் கொள்வோம். யோக நூல்களிலே மனித உடலில் ஆறு ஆதார நிலைகள் உள்ளன என்று சொல்லப்பட்டுள்ளன. இந்த ஆறு ஆதார நிலைகளையும் ஆறு மூர்த்திகள் இயக்குகிறார்கள் என்றும் சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் முறையே விநாயகர், பிரமன், திருமால், ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் ஆகியோர் ஆவார்கள். இந்த ஆறு ஆதார நிலைகளையும் கடந்து ஞான ஆகாச நிலை உள்ளது. அதுவே சிதம்பரம். சித்-அம்பரம் = சிதம்பரம்.

இந்தச் சிதாகாசத்தை **ஏழாகச்** சொல்லுகிறார். இந்த ஏழையும் கடந்து சென்றவன் இறைவன் என்கின்றார். இன்னும் வேறு ஒரு பொருளையும் சொல்லமுடியும். ஏழு உலகங்கள் உண்டல்லவா? **பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மகர்லோகம், தபோலோகம், சத்தியலோகம், சிவலோகம்** இந்த ஏழு உலகங்களையும் கடந்து மேலே சென்ற இறைவன் என்பதும் ஒரு பொருளாகும்.

அடுத்தாற்போல் என் எட்டைக் கையாள்கிறார் **எட்டுணர்ந்தான் என்று!** எண்குணத்தான் என்பார்கள் இறைவனை. திருக்குறளில் இந்தச் சொற்றொடர் இடம் பெறுகிறது. மேலும் இங்கே நாம் எட்டுக்குப் பொருள் சொல்லும் போது அஷ்ட மூர்த்தத்தில் கலந்துள்ளவன் ஆண்டவன் என்கிற பஞ்சாக்ஷர தீப உரையை அறிவது நன்று. நிலம், ஜலம், தீ, காற்று, ஆகாயம், செங்கதிரோன், தண்மதி, ஜீவன், எனப்படுபவை அந்த எட்டு. இந்த எட்டு நிலைகளாகவும் தோற்றம் தருபவன் இறைவன். இந்த எட்டிலும் நிறைந்திருப் பவன் இறைவன். இந்த எட்டினாலும் போற்றப்படுபவன் இறைவன். இப்படி எல்லாம் பொருள் கொள்ளும் வகையில் இவ்வரி அமைந்துள்ளது.

மற்றொரு செய்யுளில் இறைவனுடைய அருட்பண்புகளை விளக்குகின்றார். இந்தச் செய்யுளில் எளிமையாக எவ்வளவு உயர்ந்த கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்த்தால் உயர்ந்த லயத்தில் நமது உள்ளம் ஆழ்ந்துவிடும் என்பதில் ஐயமில்லை. திருமூலர் இறைவனுடைய குணங்களைச் சொல்லும்போது இயற்கைச் சூழ்நிலையை,

அதாவது பிரபஞ்சத்தின் இயக்கத்தைத் தம் நெஞ்சத்தில் நிறைத்துக் கொண்டு சொல்லுகின்றார்.

"தீயினும் வெய்யன்
புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன்
அருளறிவார் இல்லை;
சேயினும் நல்லன்
அணியன்; நல் லன்பர்க்குத்
தாயினும் நல்லன்;
தாழ்சடையோனே!"

''தீயினும் வெய்யன்'' என்ற சொல்லின் உட்பொருளைக் கவனிக்க வேண்டும். தீவினையாகிய பாபங்களைச் சுட்டெரிக்கும் சுடர்க்கடவுள் அவன் என்ற பொருள் தொனிப்பதைக் கவனியுங்கள்.

குளிர்ந்த தன்மை உடையது தண்ணீர். இறைவனுடைய அருளோ தண்ணீரின் குளுமையை விடப் பன்மடங்கு உயர்ந்தது.

தண்மைக்கும் அருளுக்கும் உள்ள இணைப்பையும் பிணைப்பையும் ஒளிக்கச் செய்கின்றன "புனலினும் தண்ணியன்'' என்ற சொற்கள்.

''சேயினும் நல்லன்'' ஆகா! உலகத்தில் குழந்தையைக் காட்டிலும் அன்பு நிறைந்த ஜீவன் இருக்க முடியுமா? இறைவன் அந்த அன்பில் குழந்தையையும் வென்று விடுகிறான் என்கிறார் திருமூலர். இதில் ஒரு உட்கருத்து தொனிக்கிறது. குழந்தை குழந்தையாகவே எப்போதும் இருப்பதில்லை. காலவேகத்தில் குழந்தை வளருகிறது. அந்த வளர்ச்சியிலே குழந்தைப் பருவத்தில் நிலைபெற்றிருந்த அன்பினுடைய வளர்ச்சி பாதிக்கப் படுகிறது. ஆனால் இறைவனோ எப்பொழுதும் அன்பு மயமாக விளங்குகிறான். வளர்ச்சிக்கோ, தேய்வுக்கோ இரண்டிற்கும் அப்பாற்பட்டு ஒரே நிலையில் இருக்கின்றான் இறைவன். அதை இரண்டே வார்த்தைகளில் சொல்லுகின்றார் திருமூலர். "சேயினும் நல்லன்" என்று.

"அணியன்" என்கின்றார். அணியன் என்று ஒரு பதத்தைப் பயன்படுத்துகிறார். கூப்பிட்டவுடன் குரல் கொடுக்கின்ற வகையில் அருகாமையிலேயே இருப் பவன். நம்மோடு தன்னைப் பிணைத்துக் கொண்டிருப்பவன். நம்முடைய ஆத்மா வில் பரமாத்மாவாகக் குடியிருப்பவன் என்றெல்லாம் பொருள் கொள்ளும் வகையில் இந்த ஒரு சொல் அமைந் திருக்கிறது.

"நல்லன்பர்க்குத் தாயினும் நல்லன்" என்கின்றார். இங்கே அன்பர்கள் என்ற சொல்லுக்குப் பொருள் பக்தர்கள் என்று கொள்ளலாம். இறைத் தொண்டர்கள் என்றும் கொள்ளலாம். இறைவனுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் என்றும் கொள்ளலாம். இறைவனின் திருவடிகளைப் பற்றிக் கொண்டவர்கள் என்றும் கொள்ளலாம். அப்பேர்ப்பட்டவர் களுக்குத் தாயை விட நல்லவன் என்று சொல்லுகின்றார் இறைவனை.

''அவன் யார்?'' என்று ஒரு கேள்வியையும் எழுப்பி அதற்கு விடையையும் சொல்லுகின்றார்.

"தாழ் சடையோனே" என்கின்றார். நீண்ட சடா முடியுடன் தோற்றப்பொலி வுடைய சிவபெருமான் என்று நமக்குக் காட்டுகின்றரர்.

வேதத்தின் சிறப்பு இந்தச் செய்யுளில் கூறப்படுகிறது. மதிஞர் என்ற ஒரு பதம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. மதிஞர் என்றால் அறிஞர் என்று பொருள். மிகவும் எளிமையாக உள்ள, ஆனால் ஆழமான கருத்துள்ள செய்யுளிது.

மேலும் வேதாந்தத்தைப் பற்றி ஒரு செய்யுளில் சொல்லுகிறார். இதுவும் எளிமையாக உள்ள ஒரு செய்யுள்தான்.

"திருநெறியாவது சித்தசித் தன்றிப்
பெருநெறியாய பிரானை நினைந்து
குருநெறி யாஞ்சிவமாநெறி கூடும்
ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே"

வேதாந்தத்தினுடைய சாரம் என்ன என்பதுதான் இந்தச் செய்யுள். குரு நெறியாகிய சிவநெறியைப் பூட்டுகின்ற அந்த ஒரு நெறிதான் வேதாந்தம் என்கின்றார்.

அதுதான் வாழ்வின் வளத்திற்குப் பிறவிப் பயனைப் பெறுவதற்கு வழிகாட்டுகின்ற உயர்நெறி என்கின்றார்.

இன்னொரு செய்யுளைப் பார்ப்போம். ஆகா! எத்தகைய மனித நேயம். எப்பேர்ப்பட்ட பரந்த மனப்பான்மையை எடுத்து உபதேசிக்கின்றார்.

"யான் பெற்ற இன்பம் பெறுக
இவ்வையகம்
வான் பற்றி நின்ற மறைப்பொருள்
சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப் பற்றத் தலைப்படும் தானே.

திருமூலரின் இந்தச் செய்யுள் சமுதாய வளர்சிக்கு மனிதன் கொள்ள வேண்டிய அடிப்படைக் கோட்பாட்டை எடுத்து முன் வைக்கிறது.

ஆழ்ந்த தவநிலையில் இருந்து அவர் நாவிலிருந்து பிறந்த சொற்கள் அமைந்த செய்யுளிது.

"வான் பற்றி நின்ற மறைப்பொருள்" என்று இறைவனைக் குறிப்பிடுகின்றார். அந்தப் பரம்பொருள்தான் இந்த உடலில் உணர்வாக வியாபித்திருக்கின்ற பரம் பொருள் என்பதைக் குறிப்பிடுகின்றார். அதை எடுத்துக் காட்டும் மந்திரம் என்றும் சொல்கிறார். அந்த உணர்வை, அந்த மந்திரத்தை விடாமல் பற்றிக் கொண்டோ மானால் இறை அருள் அனைவருக்கும் கிட்டுவது எளிது என்று செய்யுளை முடிக்கின்றார்.

மேலும் இந்தத் தீபாவளித் திருநாளில் அறியாமை இருளைப் போக்கும் இறைச்சக்தியின் நினைவும் அந்த இறைச் சக்தியில் நம்முடைய ஈடுபாடும் வளரட்டும் என்பதற்காகத் திருமந்திரத்திலிருந்து இறைவனைப் பற்றியும் வேதத்தைப் பற்றியும் அதனால் பெறுகின்ற இன்பத்தை எல்லோரும் பெற வேண்டும் என்கின்ற தத்துவத்தைப் பற்றியும் உள்ள சில செய்யுட்களைச் சிறு குறிப்புக்களுடன் எடுத்துரைத்தேன்.

மூவாயிரம் செய்யுட்களில் உள்ள, ஏராளமான தத்துவங்கள் எத்தகையவை. என்பதை நாம் முற்றிலும் அறிவதற்கு முன்னோட்டமாக உள்ள ஒரு சிறு எடுத்துக்காட்டே இந்த முயற்சி.

இந்த முயற்சியின் பயன் வளரவேண்டும் என்றும் எல்லோரையும் வளர்க்க வேண்டும் என்றும் மூவாயிரம் திருமந்திரச் செய்யுட்களையும் அன்பர்கள் ஓதி உணரவேண்டும் என்றும் அதற்கு இறை அருள் அமையவேண்டும் என்றும் விரும்புவதுடன் மூலப்பொருளாம் விநாயகரைக் குறித்து காப்புச் செய்யுளாகத் திருமூலர் அவர்கள் பாடிய முதல் பாசுரத்தைச் சொல்லி இக் கட்டுரையை முடிக்கிறேன்.

"ஐந்து கரத்தனை
ஆனை முகத்தனை
இந்து இளம்பிறை
போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை
ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து. அடி
போற்றுகின்றேனே! ●